ஸ்ரீ

பகவத்விஷயம்

முதற்பத்து

திருவாய்மொழி மூலமும்

ஆறாயிரப்படி, ஒன்பதினாயிரப்படி, பன்னீராயிரப்படி,
இருபத்தினாலாயிரப்படி, ஈடு முப்பத்தாறாயிரப்படி வ்யாக்யாநங்களும்,
சீயர் அரும்பதவுரை, ப்ரமாணத்திரட்டு, த்ரவிடோபநிஷத்ஸங்கதி,
த்ரவிடோபநிஷத்தாத்பர்ய ரத்நாவளி, திருவாய்மொழிநூற்றந்தாதி இவைகளுடன்

சே. கிருஷ்ணமாசாரியர் பதிப்பு.

வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியராலும்,
அ. வீ. நரஸிம்மாசாரியராலும்
பரிசோதிக்கப்பெற்றது.

திருவல்லிக்கேணி
நோபில் அச்சுக்கூடம்.

ரக்தாக்ஷி௵] [1925.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

வ்யாக்யாந ஸஹிதங்களான

பொதுத் தனியன்கள்.

****

அழகியமணவாளன் அருளிச்செய்தது.

ஸ்ரீஶைலேஶ தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம் ।
யதீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் ॥

[ஸ்ரீஶைலேஶ இத்யாதி] - "நந்த: ஶ்ரீஶைலேஶ நாமா பகவாந் நாராயணோ ந | ப்ரஸாதமப்ர ஸாதஞ்ச ப்ருதக்ஸோபிதே" என்றும், "ஸர்வப்ரத்யக்ஷ தேஜோவிஷய விஷயகேஷாந்தகாரணத்வாத் ப்ரத்யக்ஷத்வ ஶ்ரீஶைலநாதஸ்யதேஶிகாய" என்றும், "அநந்தன் திருமலையாழ்வானென வந்தவதரித்து" என்றும் அவதாரவிஶேஷமாகச் சொல்லப்படுமவராய், சரமபர்வமான ஆழ்வார்திருவடிகளில் கைங்கர்யத்தை அவரருளாலே லபித்து வாழுமவராய், அதிலும் அவர்திருவடிகளான எதிராசர் செம்பொற்பாதம் இரவுபகல் மறவாமல் இறைஞ்சியேத்தும் எழிலையுடைய திருவாய்மொழிப் பிள்ளை சீருளுக்கு எற்ற கலமா யுள்ளவரை; "ஸத்ய ஶ்ரீஶைலநாதார்யவர்ய ப்ரணதவாஜ" என்னக்கடவதிறே. ஸ்ரீஶைலபூர்ணர்க்ருபையாலும் ஸ்ரீஶைலதேஶிகர்தயையாலும் இராமாயணமென்னும் பத்திவெள்ளமும், தீர்த்தங்களாயிரமான திருவாய்மொழியும், யதீந்த்ரதத்ப்ரவணரிடங்களிலே குடிகொண்டு தேங்கிற்று. இவரும் தன்பத்தியென்னும் வீட்டின்கண் வைத்தபின்பிறே பெருகி வெள்ளமிட்டு விளைந்தது; "ஸ்ரீராமாயணமுக்யவிஷ்ட:", "பாலோடமுதன்னவாயிரம்"; இராமாநுசனிறே இவரும். [தீபக்த்யாதிகுணார்ணவம்] - மதிநலங்கள் இவருக்குப் பிள்ளையருளால் உண்டாயிற்று. "ஜ்ஞாநவிஜ்ஞாநவைராக்யாதி" என்றும், "குணஸம்பத்ஸமாநக:", "நஶேஷகோஶகர்ணம்" என்றுதொடங்கி, "த்யாவிநாநகாரேய" என்றுமிறே எதத்பூர்வாவதாரங்களிலும் ஜ்ஞாநபக்த்யாதிகள் பூர்ணமாயிருப்பது; ஆராவன்பிளையவனிறே. அச்யுதபதாம்புஜயுக்மருக்மவ்யாமோஹாதிகள் உண்டிறே இங்கே; அவ்வவதாரத்திற் குறைகளும் தீர்க்க அவதரித்தவிடத்திலும், பெரியபெருமாள் விஷயத்துக்கு அநுரூபமாகப் பெரியசியருடைய அந்தப்ரேமாதிகள் இரட்டித்திறே இருப்பது. "ஶ்ரீஶைல முநிமணவாளமுநயே", "யஶோதராஜதேஜஸே:", "முநிநாதநாதாய:" என்னக்கடவதிறே. "ஸௌம்யஜாமாத்ருயோகீ" என்றும், "யதிவர ப்ரவணதாய:" என்றும் சொல்லக்கடவதிறே. இனி, நம்பெருமாளிடத்தில் ப்ராவண்யம் எல்லை

யான எம்பெருமானாரளவும் வர்த்தித்தபடி சொல்லுகிறது; ஸாத்யவிவ்ருத்தியாய்க்கொண்டு சரமபர்வம் வரக்கடவதாயிருக்கும். [யதீந்த்ரப்ரவணம்] - அந்தப்ராவண்யந்தான், "[illegible]" என்று விஶேஷஜ்ஞரான வேதாந்தாசார்யரும் விக்ருதராய்ப் பேசி அநுபவிக்கும்படியாயிருக்கும். இவர்தாம் நிஜதேஶிகஸந்தர்ஶிதஸம்யமிதுரந்தரநிஹித ஸகலநிஜபாரவாரமுனிவரிறே. அவர் பராங்குஶபாதபக்தர்; இவர் யதீந்த்ரப்ரவணர்; அந்தப்ராவண்யமிறே இவரை அனைவரும் கால்கட்டுகிறது. [வந்தேரம்யஜாமாதரம்முநிம்] - "[illegible]" என்கிறதெல்லாம் இவருக்கு இவ்விஷயத்திலேயாயிற்று. "[illegible]" என்னுமாபோலே திருநாமத்தை அநுஸந்தித்துத் திருவடிகளிலே விழுகிறார். இவருடைய அநுஸந்தாந விஷயமான மந்த்ரமும் ஸ்துதிப் ஞமமும் இருக்கும்படி இதுவாயிற்று. "[illegible]" என்கிறபடியே [illegible] ளுடைய ஸததாஸம்ருத்திகள் இவர் ஸங்கல்பாதீனகளாயிருக்கும்படியைப் பற்ற 'முநி' என்கிறது.

இப்படிகளால் ஏற்றங்களையுடைய இவர் ஸ்துதிரூபமான இவர் தனியன்தான் "[illegible]" என்று வேதத்துக்கு 'ஓம்' என்னுமாபோலே த்ராவிடவேதத்தங்கோபாங்கங்களென்ன, ஏதத்வ்யாக்யாநவிஶேஷங்களென்ன, ஏதத்ஸாரபூதமான ரஹஸ்யங்களென்ன இவற்றினுடைய ஆத்யந்தங்களிலே அகிலதிவ்யதேஶவிலக்ஷணராலும் அநுஸந்திக்கப்படுமதாயிருக்கும். இவருடைய ஸகலதிவ்யப்ரபந்தப்ரவர்த்தகத்வம் பண்டு பலவிடங்களிலே கண்டுகொள்வது. அதுக்குமேலே உபயப்ரதாநப்ரணவமான உறைகோயிலிலேயிறே இவர் உதித்தருளிற்று; இவருக்கு இவ் வைபவம் ஜந்மஸித்தம்; இது, ப்ரணவார்த்தமாகிற பிதாபுத்ர ரக்ஷ்யரக்ஷக ஶேஷஶேஷி ஸம்பந்தத்ரயமும் இவரிடத்திலே தர்ஶிக்கையாயிருக்கையாலே; "[illegible] । [illegible] । [illegible]" என்கையாலே - அகாரம் பகவத்வாசகமாயும், மகாரம் சேதந வாசகமாயும், உகாரம் உபயஸம்பந்த ப்ரகாஶிகையையும் சொல்லும்; "அவ்வானவர்க்குமவ்வானவரெல்லாமுவ்வானவரடிமையென்றுரைத்தார்" என்னக்கடவதிறே; விளக்குப்பொன்போலே நமிலத்திவமிறே; "[illegible]", "[illegible]", "ஶ்ரீயாவபதிகயா" என்றே தத்ஸாபேக்ஷமாயிறே இருப்பது; "[illegible] ।", "[illegible]", "[illegible]", "[illegible]", "[illegible]" என்னக்கடவதிறே; இப்படி முப்புரியூட்டியிறே இவரவதாரவைபவம் இருப்பது.

இன்னமும் இஶ்ஶ்லோகத்திலே பதங்கள்தோறும் இவ்வர்த்தம் காணலாயிறே இருப்பது. எங்ஙனேயென்னில்,—'ஶ்ரீஶைலேஶ' என்கையாலே-அகாரவாச்யனை ஸர்வேஶ்வரனைச் சொல்லி, 'தயாபாத்ரம்' எனகையாலே - பகவதநந்யார்ஹஶேஷபூதனை சேதநன் அவன்க்ருபைக்குப் பாத்ரமென்னுமத்தைச சொல்லுகிறது. அடியில் பதத்தில் - ஆசார்யனை அவன்தானாகச் சொல்லுகிறது, விஶேஷநிஷ்டாதத்தாலே; தத்குணஸாரத்வாத் தத்வ்யபதேஶம்போலே; "[illegible]" இத்யாதி, "[illegible]" 'தீபக்த்யாதிகுணார்ணவம்' என்கிறஇப்பதத்தாலும் "தாமரையாள்கேள்வனொருவனையே நோக்குமுணர்வு" என்றும், "ஆதியஞ்சோதிக்கே யாராதகாதல்" என்றும், "உன்னித்துமற்றொருதெய்வந்தொழாள்" என்றும் சொல்லுகிறபடியே ஜ்ஞாநபக்திவைராக்யங்களை ப்ரதிபாதிக்கையாலே அகாரோதித பகவச்சேஷத்வத்தை பக்தியாலே சொல்லுகிறது; ஸ்வரூபமும் உன்னிணைத்தாமரைகட்கு அன்புருகி நிற்குமதிறே; அகிஞ்சித்கரஸ்ய ஶேஷத்வாநுபபத்தே: ஜ்ஞாநமாவது - தஜ்ஜ்ஞாநமிறே; பகவதேகாவலம்பியாயிறே ஜ்ஞாநம் இருப்பது. வைராக்யமாவது - தேவதாந்தரத்யாக ப்ரதாநமாயிறே இருப்பது. [யதீந்த்ரப்ரவணம்] - யதீந்த்ரராகையாவது - ஸ்வஸ்வரூபத்தை அநுஸந்தித்துத் துரும்பு நறுக்காதிருக்குமவர்களைத்

திருத்தித் திருமகள்கேள்வனுக்கு ஆக்கி அடிமைசெய்விக்கை. தம்மளவிலும் - யதிஶப்தம் அவிஶிஷ்ட மாகையாலே, ததிந்த்ரராகையைப்பற்ற ப்ரவணராகிறார்; பகவதநந்யார்ஹஶேஷத்வம் ததீயபர்யந்தமிறே. அன்றிக்கே, [யதீந்த்ரப்ரவணம்] - அஸாதாரணமான ராமாநுஜஶப்தபர்யாயவாசகமாயிறே இத்திருநாமம் இருப்பது; அதுவும் ப்ரணவார்த்தம். ராமஶப்தத்தாலே - அகாரார்த்தமும், அநுஜஶப்தத்தாலே - தச்சந்தா நுவர்த்தியாயிருக்கிற ஆத்மஸ்வரூபமுமிறே சொல்லுகிறது. "ராமாநுஜம் யதிபதிம் ப்ரணமாமி மூர்த்நா" என்றிறே ப்ராவண்யம் இருப்பது. [வந்தேரம்யஜாமாதரம்முநிம்] - இத்தாலும் உக்தார்த்தமே சொல்லுகிறது; ரம்யஜாமாத்ருஶப்தத்தாலே - அகாரவாச்யனைச் சொல்லி, முநிஶப்தத்தாலே - ததநந்யார்ஹ ஶேஷத்வஜ்ஞாநத்தையுடைய பரமசேதநனைச் சொல்லுகிறது. ரம்யஜாமாதுர்மநநம் கரோதீதி - ரம்யஜா மாத்ருமுநி:. ஆக, இவையெல்லாவற்றாலும் - ப்ரணவார்த்தமாக அநுஸந்திக்கத் தட்டில்லை.

"ஸயொயத்யாஜயராஜயா" என்றும், "வடதிசை மதுரை அயோத்தி" என்றும் அவதார ஸ்தலத்தைச் சொல்லுகிறபடியே, கோயிலுக்கு வடக்காயிருக்கிற வடதிருவேங்கடநாட்டில் எரார்பெரும் பூதூரிலே எம்பெருமானார் வடமொழியையும் தென்மொழியையும் வெளியிட அவதரித்தருளினார்; "நாரண னைக்காட்டிய வேதம் களிப்புற்றது தென்குருகைவள்ளல் வாட்டமிலாவண்டமிழ்மறைவாழ்ந்தது" என்னக் கடவதிறே. "அரங்கநகரும் மேவுதிருநகரியும் வாழவந்த மணவாளமாமுனி" என்கிறபடியே தென்னாட் டுத் திலதமான தென்குருகூரிலே பெரியஜீயர் தென்மொழியை வெளியிடவே அவதரித்தருளினார்; "விரவு தமிழ்மறைமொழியும் வடமொழியும் வெளியாய்ச்செய்யும்விசித்ரவ்யாக்யாநஶேஷன்" என்னக்கடவதிறே. "ஆம்நாயத்ரயஹ்ருதயமௌஸௌ நாயாக:" இத்யாதி. இவருக்கும் இரண்டினுடைய ப்ரவர்த்தகத்வம் உண்டே யாகிலும், ஊற்றத்தைப்பற்ற ஒன்றிலே ஓதுகிறது. உடையவருடைய அவதாரவிஶேஷமாகையாலும், மற்றும் ஸர்வதாஸாம்யத்தாலும் யதிவரபுநரவதாரமாகையாலே, தீர்க்கஶரணாகதியை ஈன்ற முதல்தாயி னுடைய மாதாபிதாபோலே, யோகித்யமும் ஸ்ரீஶைலேஶமும் நடந்துசெல்லுகிறது. இவரும் ஜந்மபூமியை விட்டுவந்து காவிரிநடுவுபாட்டிலே கருமணியைக்கண்டு தந்மத்யஸ்தராய், வைஷ்ணவஸ்ரீயோடே வாழ்ந்து கொண்டிருந்து, ஸ்ரீரங்க ஸ்ரீயையும் ஶ்ருதிஸாகரத்தையும் த்ராவிடவேதஸாகரத்தையும் பெருகப்பண் ணிப் பெருமாளை நோக்கிப் போந்தார்; அவர் எல்லாவுயிர்கட்கும்நாதனரங்கனென்னும் பொருள் சுரந்தார், இவர் பல்லுயிர்க்கும் விண்ணின்றலைநின்று வீடளிப்பான் அனைத்துலகும் வாழப்பிறந்த எதிராசமாமுனிவ னென்னும் அர்த்தத்தை அருள்சுரந்தார். ஜீயர் அவதரித்து வெளியிடாதபோது கண்ணுறந்தாரகமாயிறே உடையவர்வைபவம் இருப்பது; இராமாநுசமுனி செய்யகுன்றிலேற்றிய தீபமிறே இவர். நாராயணா வதாரம் போலேயிறே இவர்களுடைய அவதாரமும்; "நாராயணம் நமஸ்க்ருத்ய நரஞ்சைவ நரோத்தமம்", "ஸாக்ஷாந்நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும்", "யோகீந்த்ரவிக்ரஹே", "தஸ்யாம் ஹி ஜாத: முநி:"; இரண்டுக்குமுண்டான தர்மைக்யமும் அப்படியே; ஸம்பந்தமும் அப்படியே; அவர் நாரா யணவைபவப்ரகாஶகர், இவர் ராமாநுஜவைபவப்ரகாஶகர். அவ்வவதாரத்திலும் இவ்வவதாரத்துக்கு ஏற்றமுண்டு; "பிறப்பாயொழிவது": நாராயண, ராமாநுஜ என்றிறே சதுரக்ஷரிகளின் வாசி இருப்பது. இவர் சதுரரில்தலையாகையாலே சரமசதுரக்ஷரியிலே நிலைநின்றார்; "எத்திருப்பாரைவெல்லுமே மற்றவரைச் சாத்தியிருப்பார்தவம்," "தஸ்மாந்நந்தகவைஷ்ணவஶ்ரீஜந்யாவிஶேஷத:", "அடியேன் சதிர்த்தே னின்றே", "நம்புவார்பதி வைகுந்தங்காண்மினே". ஆழ்வார்க்கு மதுரகவிகளிலும் சரமமான திருவடிகள் ராமாநுஜனைப்போலே, அந்தராமாநுஜனை இவர்க்கும் ஸ்ரீவத்ஸாங்காசார்யரிலும் சரமமான சரணங்கள் யதீந்த்ரப்ரவணனிறே; ஆகையால், சரமபர்வமான ஜீயர்விஷயமான இத்தனியனும் ஸகலவேதஸாரமான ப்ரபத்திபோலே நித்யாநுஸந்தேயமாகக்கடவது. (க)

பொதுத்தனியன்கள்.

ஆழ்வான் அருளிச்செய்தது.

லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம் |
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம் ||

[லக்ஷ்மீநாதஸமாரம்பாம் இத்யாதி]: இத்தனியன்தான், ஸர்வாத்மஹிதைஷியாய் ஆப்ததமராய் குரூத்தமரான கூரத்தாழ்வான் அனைவர்க்கும் குருபரம்பராநுஸந்தாநத்தாலே உஜ்ஜீவநமுண்டாம்படி அருளிச்செய்ததாயிருக்கும்; ஆகையாலிறே, ஸர்வஶிஷ்டர்களும் இதை அங்கீகரித்து அநுஸந்தித்துக்கொண்டு போருகிறது.

[லக்ஷ்மீநாதஸமாரம்பாம்] - அதில் முற்பட "ப்ரயாணாயாதிகுரவே" என்று ரஹஸ்யத்ரய ப்ரதிபாதகத்வத்தாலே ப்ரதமகுரு ஸ்ரீயःபதியான எம்பெருமானாகையாலே முற்பட அருளிச்செய்கிறார்; "நரநாரணனாயுலகத்தறநூல் சிங்காமைவிரித்தவன்" என்றும், "தன்னடியார்திறத்தகத்துத் தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல், என்னடியாரதுசெய்யார் செய்தாரேல் நன்றுசெய்தாரென்பர்" என்றும், "பார்த்தனுக்கன்றருளிப் பாரதத்தொருதேர்முன்னின்று", "குருமுகமாய்", "பண்டேபரமன்பணித்த பணிவகை" என்றும் சொல்லக்கடவதிறே; "குருரஸ்மி", "குருபரமாஸி", "ஹஸ்த்யுபாத்த உபகாராசார்யகுரும்", "பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாகிவந்து," "அறியாதனவறிவித்தவத்தா," "என்னைத்தீமனங்கெடுத்தாய்", "மருவித்தொழும் மனமேதந்தாய்" என்றுமிற்று அநுஸந்தித்துப்போருவது. பெரியபிராட்டியாருக்கு முற்படவாயிற்று ஸர்வேஶ்வரன் ஸ்ரீவிஷ்ணுலோகத்திலே த்வயத்தை அருளிச்செய்தது. "த்வத்தவ்யஸ்யாஶ்ரயாத்" என்றுளே; அவன் தானும் "மாமாஸ்ரித்ய புருஷாஸ்ரய ஸம்ப்ராப்ய விஷ்ணுமேவோத்தமம் பாவாத் । ததஸ்தத்ப்ராப்தமேவோத்தஞ்யாதும் ஸநாதநம்" என்று அருளிச்செய்தானிறே அத்தாலும், கடகத்வத்திலே முற்பாடுடையளாகையாலும், மற்றையார்க்கு வுடகத்வம் அவளடியாகையாலும், "லக்ஷ்மீநாதஸமாரம்பாம்" என்று - மிதுநச்சேர்த்தியாக அருளிச்செய்தது. "இறையுமகலகில்லேன்" என்றிருக்கையாலே பிரிந்து நிலையில்லை; லக்ஷ்மிக்கு லக்ஷ்மீதந்த்ரத்திலே ப்ரபத்திப்ரவர்த்தகத்வம் உண்டிறே. ஸமாரம்பாம் என்று - இவர்கள் தொடக்கமாகக் குருபரம்பரையைச் சொல்லுகையாலே, ஸ்ரீவிஷ்வக்ஸேநஸம்ஹிதையிலே பகவானாலே ப்ரபத்யுபதேஶம் பண்ணப்பட்டதாகச் சொல்லப்படுமவருமாய், "ததஶ்ச லோகதீதவிஶ்வாஸபாராஜ்யபதே" என்று - பூவளருந்திருமகளாலே அருள்பெற்று, அத்தாலே "ஸ்ரீமதிவிஷ்வக்ஸேந" என்னும்படி கைங்கர்ய ஸ்ரீயையுடைய ஸேனைமுதலியாரும், "திருமாலாலருளப்பட்ட சடகோபன்", "திருமாமகளாலருள்மாரி" என்னும்படியான ப்ரபந்நஜநகூடஸ்தரும் ஸூசிதர். ஸேனைமுதலியாரும், விஷ்வக்ஸேநஸம்ஹிதாதிகளிலே ஸநகாதிகளுக்கு ப்ரபத்தியை வெளியிட்டருளினாரிறே; இப்படி வெளியிட்ட ப்ரகாரத்தை, "ஜகத்த்ராணஜந்மநாமயோ விஶ்வாநநஸோ ஸ்வதி" என்று தாமே அருளிச்செய்தார்; அத்தைப்பற்றவாயிற்று "நம்மாழ்வார் ஏதஜ்ஞாநயாதம்யாயோ" என்று அத்யாத்மசிந்தையிலே அருளிச்செய்தது அவ்வளவன்றிக்கே, ஆழ்வாரவதாரவைபவத்தை ஸநத்குமாரர் மார்க்கண்டேயபுராணத்திலே ஒரு அத்யாயமெல்லாம் சேர அருளிச்செய்தாராகையாலே, இவர்களளவும் விவக்ஷிதம்.

இத்தக்குருபரம்பரையில் ஆதிமத்யாவஸாநங்களை அருளிச்செய்கிறவராகையாலே நாதயாமுநர்களை மத்யமபதஸ்தராக அருளிச்செய்கிறார். 'நாதயாமுநமத்யமாம்' என்று. நாதயாமுநர்கள் - நாதமுனிகளும் யாமுநமுனிகளும். அவர்கள் தாம் பரமஹம்ஸரிறே; "நாதயாமுநர் போல்வாரை அன்னமென்னும்" என்றிறே ஆசார்யஹ்ருதயத்திலே அருளிச்செய்தது; அவனும் அன்னமாகியிறே அருமறைகளை அருளிச்செய்தது. ஏவம்விதரான இவர்தான் மதுரகவிகளினுடைய திவ்யப்ரபந்தாவதாநுஸந்தாநத்தாலே ஆழ்வாருடைய அருள்பெற்ற நாதமுனியானார்; அந்நாதமுனியருளாலேயிறே யமுனைத்துறைவர் அவதரித்து தர்

ஶநத்தை ஆள வந்தாரானது. "நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம் பஹுபிருபசிதம் யாமுநேயப்ரபந்தை:" என்னக்கடவதிறே. அவ்வளவன்றிக்கே, "விஷ்ணுபக்திப்ரதிஷ்டார்த்தம் ஸேநேஶோவதரிஷ்யதி" என்று ஸ்ரீஸேநாபதியாழ்வா ரவதாரமாக நம்மாழ்வாரைச் சொல்லிற்றிறே. ஆளவந்தாருக்கு ப்ரபத்யர்த்தோபதேஶம் பண்ணுகைக்கு அடியான உய்யக்கொண்டாரும் மணக்கால்நம்பியும் இவர்களிடையிலே அடைபடக்கடவரா யிருப்பர்கள். நாதயாமுநமத்யமாம் என்று - ஆழ்வான் அநுஸந்தாநக்ரமமாயிற்று இது; இவரை யொழிந்த மற்றையார் "ஈஶ்வரஸமாரம்பாம் பதிபோதாசார்யகாம் | லக்ஷ்மீவல்லபபர்யந்தாம் வந்தே குருபரம்பராம்" என்றுமிறே அநுஸந்தித்துப்போருவது.

உடையவர்தாம், குருபரம்பரைக்கு நடுநாயகமிறே அவர்தாம் ஆழ்வானுக்கு ஸாக்ஷாதாசார்யரா கையாலே 'அஸ்மதாசார்யபர்யந்தாம்' என்கிறது. "ஈஶ்வரோபாஸ்ரமதேதாஸ்யப்ரயோகேஷ்வபிதேஶிநா ராமாநுஜஸ்ய" என்னக்கடவதிறே; "ராமாநுஜாங்க்ரிஶரணோஸ்மி" என்றும் அநுஸந்தித்தார். இதிலே யமுனைத்துறைவ னிணையடியாங் கதிபெற்றுடைய இராமாநுசனுகையாலே - ஆளவந்தாருக்குச் சரணத்வயமென்னலாம்படியான பெரியநம்பியும் ஸூசிதர். "இளையாழ்வாரை விஷயீகரித்த அநந்தரத்திலே, 'இளையாழ்வீர் ! பெருமாள் ஸ்ரீதண்டகாரண்யத்துக்கு எழுந்தருளும்போது மரவடியைத் தம்பிக்கு வான் பணையம் வைத்துப்போய் வானோர்வாழ எழுந்தருளினாற்போலே. மேலை வானோர்வாழ இவரும் தமக்கு அடியானை அடியேனை அப்படி உமக்குவைத்துத் திருநாட்டுக்கு எழுந்தருளினார்' என்று அவர் அருளிச் செய்தார்; அத்தைப்பற்ற "யமுனைத்துறைவனிணையடியாங்கதி பெற்றுடைய இராமாநுசன்" என்று அமுதனார் அருளிச்செய்தார்" என்று திருநாராயணபுரத்தில் திருவாய்மொழியரசாயர் அருளிச்செய்தார். உடையவரை குருபங்க்திஹாரநாயகமாக நடுவே அநுஸந்திக்கவேண்டியிருக்க, யதாபாடம் எல்லாரும் அநுஸந்திக்கிறது - "ஆழ்வான் திவ்யஸூக்தி" என்னுமது எல்லாரும் அறிகைக்காக. இதிலே, ஆசார்யாபிமாநயுக்தராய் இவ்வருகிலுமுண்டான அனைவரும் ஸ்வாசார்யபர்யந்தமாக அநுஸந்திக்கும்போது நாதயாமுநர்களை நடுவாகச்சொன்னது - யதிவரர்க்கும் உபலக்ஷணமாகிறதென்று கண்டுகொள்வது. 'அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தேகுருபரம்பராம்' என்கிற இத்தால் - 'ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததா மபிவர்த்ததாம்' என்று - எம்பெருமானார் திவ்யஸங்கல்பத்தாலே வர்த்தித்துக்கொண்டு போருகிற ஆசார்யபரம்பரையானது ஸ்வாசார்யபர்யந்தம் ஸேவிக்கப்படுமதென்கிறது. "எம்பெருமானிற்காட்டில் குருபரம்பரை அதிகம்; குருபரம்பரையைக்காட்டில் ஸ்வாசார்யன் அதிகன்" என்னக்கடவதிறே அஸ்மதாசார்யபர்யந்தாம் என்கையாலே - இவ்வருகுள்ளார்க்கு உத்தேஶ்யராய் ப்ரபத்திமார்க்கப்ரவர்த்தகரான கூரத்தாழ்வான், அவர் செல்வத்திருமகனாரான பட்டர் நஞ்சீயர் நம்பிள்ளை வடக்குத்திருவீதிப்பிள்ளை பிள்ளைலோகாசார்யர் கூரகுலோத்தமதாஸநாயன் திருவாய்மொழிப்பிள்ளை பெரியசீயர் முதலாக "ஸர்வமாசார்யம்" என்னுமவர்களெல்லாரும் அநுஸந்தேயராம்படி ஸூசிதர்.

வேதாந்தாசார்யரான அண்ணவும் "ப்ரத்யக்ஷப்ரதிபந்நாத்ய யஜ்ஞநாயகஶேஷம் | ஶ்ரிய:க்ஷோதாஶயஸமாஹதஸ்யதேதாம் ஶமாஶதே | ஈஶோஶேஷாய ராமாநுஜார்யாய பொதிநே" என்று தொடங்கி, "ப்ரதீநவ்யவணாய ஸ்வஸ்தாபவேதமணமாஸிதே | ப்ரபோதே ஶேஷம்ராமாநுஜார்யாய பொதிநே" என்று நடுவாகவும், "பரிஶ்ரவிப்ரஷேஷமவிஷேஷவிஶேஷ ரவேதாநந்யதே | ஶேஷம்ராமாநுஜார்யாய ஶ்ரீநாய உபாஸ்ய || ஸவ்யஸ்ரீஶைலநாயாப்ரவிஷ்ணுஜாஷ்டே | ராமாநுஜார்யாய நமஹா ஶேஷநாயகம்" என்று - ஶ்ரிய:பதியைத் தொடங்கி ஸ்ரீமத்ராமாநுஜார்யர் நடுவாகவும், ஸ்ரீஶைலேஶதயாபாத்ரரான பெரிய சீயரளவாக ஶேஷரிக்கையாலே, இதுவே ஶித்தஸம்ப்ரதாயம்; மநுவிபரீதம்போலே, இதுக்குப் புறம்பானது அஸம்ப்ரதாயம். உபாயாந்தரோபதேஷ்டாக்கள் - ஸ்வரூபநாஶகரான குருக்கள்; ஆகையாலிறே, "ஶாஸ்த்ரமிது ஸர்வக்ஷராம்ஶாஸநம்ஜம்" என்றது. "ஸாக்ஷாத் பலைகலக்ஷ்யத்வ ப்ரதிபத்தியாலே மந்த்ரரத்நத்தை உபதேஶிக்குமவர்களிறே - ஸத்குருக்களாகிறார்; "த்வயத்தினுடைய அர்த்தத்தையும் திரு

வாய்மொழியினுடைய அர்த்தத்தையும் உபதேசிக்கிறான் யாவனொருவன், அவனுக்கேயிறே ஆசார்யத்வ பூர்த்தி உள்ளது'' என்று ப்ரமேயரத்நத்திலே அருளிச்செய்தார். ஏவம்விதமான குருபரம்பரையிறே ஸேவ்ய மென்கிறது. மேலும், குருகுலதுர்யரான வரவரமுனிவர்யருடைய பரம்பரயா '' [illegible] '' என்று நடந்துசெல்லுவது; '' [illegible] '' என்று தொடங்கி, ''[illegible]'' என்றிறே தலைக்கட்டியருளினார். '' [illegible] '' என்று தொடங்கி, '' [illegible] '' என்று நடுவாகவும். '' [illegible] '' என்று எம்பெருமானளவாகவும் - வாக்யகுரு பரம்பராக்ரமத்தாலே வாதிகேஸரி அழகியமணவாளச்சீயர் அருளிச்செய்தது; இந்த க்ரமத்தை ''முந்தை வினையகலமுன்னருளுமாரியனால், எந்தையெதிராசனின்னருள் சேர்ந்து-அந்தமில்சீர்ப் பொற்பாவை[illegible]ருளால் பொன்னரங்கர்தாள் பணிந்து, நற்பாலடைந்துய்ந்தேன் நான்'' என்றும், '' [illegible] '' என்று விவரணமாலை யின் அடியிலும் தத்வதீபாதியிலும் அருளிச்செய்தார்.

இந்தக்ரமம், '' [illegible] '' என்கிற ஶ்ருதியையும், '' [illegible] '' என்கிற பாஷ்ய காரவசநத்தையும் பற்றி யிருக்கிறது; '' [illegible] '' என்னக்கடவதிறே. '' [illegible] '' என்கிற இத்தனியனில் குருபரம்பராக்ரமத்தையும் ''தென்னரங்கனொருந்திருமகளுமாதியா, அன்னவயற்பூதூர்மன்னுமிடையா - என்னையரு, ளாரியனேதானளவா வன்னகுருமுறையின், சீரியதாள்சேர்ந்துய்ந்தேனே'' என்றும் அவர்தாமே அருளிச்செய்தார். இந்தக்ரமம், '' திருவருள்மால்சேனைமுதலிசடகோபன்'', '' [illegible] '' என்கிற தனியன்களிலும், ''ஆதிமுதல்மாயன்மலர்மங்கைசேனைத்தலைவன்'' என்றும், ''சேனைநாதன் அருள்மாறன் நாதமுனி தாமரைக்கண் இராமர்வாழ், சீர்சிறந்தயமுனைத்துறைக்கிறைவர் செய்தொடைக்கதிபரருளினால், தானமர்ந்தவெதிராசர் கூரம்வருதலைவர் நீதிபுனைபட்டர்பின், தலைமையான மாதவச்சீயர் நம்பிள்ளை தழைத்தகண்ண ரிருவகையினோ, ரீனமின்றியருளுலகவாசிரிய ரினியகூரகுலதாதருக், கின்பமேவுதிருவாய்மொழிப்பிள்ளை யிவர்க்குத்தானடிமையாகவே, யானவாழ்வுபெறவருள்வார் கோலமணவாளமாமுனிவன்'' என்றுஞ் சொல்லிற்றிறே. இப்படி ஆரோஹாவரோஹக்ரமங்களிரண்டாலும் குருபரம்பரையை அநுஸந்திக்கக் குறையில்லை. '' [illegible] '' இத்யாதியாலே எம்பெருமான் செய்த ஆசார்யஸம்பந்த பர்யந்தமான உபகார பரம்பரையை அநுஸந்தித்தால், குருபரம்பரைக்குத் தலையான எம்பெருமானை முந்துறப்பற்ற அடுக்கும்; '' [illegible] '' இத்யாதியாலும், '' நாராயணன்திருமால் '' இத்யாதியாலும் ஆசார்யன்பண்ணின பகவத்ஸம்பந்தவைபவத்தை அநுஸந்தித்தால், '' [illegible] '' என்று ஆசார்யனை முந்துற அநுஸந்திக்க அடுக்கும். '' குருபரம்பரையை முன்னிடவே ஶரணாகதன் குறைதீரும், பிராட்டியை முன்னிடவே ஶரண்யன் குறைதீரும் '' என்றிறே ஆச்சான்பிள்ளை மாணிக்கமாலையிலே அருளிச்செய்தது. '' ஜப்தவ்யம் குருபரம்பரையும் த்வயமும் '' என்றிறே அருளிச்செய்தது. குருபரம்பராபூர்வகமல்லாத த்வயாநுஸந்தாநமும், நாவகாரியமிறே. இப்படி ஆதிமத்யாவஸாநஸஹிதையான ஸத்குருஸந்ததி, ஸர்வஸத்துக்களாலும் ஸதாநுஸந்தேய மென்றாயிற்று.

(உ)

இதுவும் ஆழ்வான் அருளிச்செய்தது.

யோ நித்யமச்யுத பதாம்புஜ யுக்ம ருக்ம வ்யாமோஹதஸ் ததிதராணி த்ருணாய மேநே।
அஸ்மத் குரோர் பகவதோஸ்ய தயைக ஸிந்தோ: ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே ॥

[யோநித்யம் இத்யாதி] - ஸ்ரீராமாவரஜமுநீந்த்ரலப்தபோதராய், "ஸ்ரீவத்ஸசிஹ்ந:" என்று நிரூபகத்தையுடையரான கூரத்தாழ்வான், ஸ்ரீராமாநுஜதர்சநத்தை ரக்ஷிக்கவேண்டி ராஜகோஷ்டியிலே சென்று, "நாராயண பரம் ப்ரஹ்ம" என்றும், "நாராயண பரா வேதா:" என்றும், "நாரணனைக்காட்டிய வேதம்" என்றும், "நாராயணாத் தயிந்த்ரஷ்டிவேதிகா: ச" என்றும் "நாரணனேயாவதீதன்றென்பாரார்" என்றும், "அந்யாயமந்யாயம்" என்று அறைகூறி வென்று, "கலையறக் கற்றமாந்தர் காண்பரோ கேட்பரோதான்" என்னும்படி அவர்கள் தர்சநம் அஸஹ்யமாய், அத்தர்சநத்தை வேண்டாதே மீண்டு எழுந்தருளி தர்சநப்ரவர்த்தகரான எம்பெருமானார்தர்சநத்தை அபேக்ஷித்துக் கொண்டு எழுந்தருளியிருக்க, அவரும் "இனியறிந்தே னீசற்கும் நான்முகற்குந் தெய்வம் - நற்கிரிசை நாரணன்றீ" என்று திருவில்லாத்தேவரொல்லார்க்கும் மேலாக மேல்நாட்டிலே திருநாராயணனை ஸ்தாபித்து மீண்டு எழுந்தருளி, "அரங்கனல்லால்தெய்வமில்லை" என்று அறுதியிட்டு அரங்கனார்க்கு ஆள் செய்துகொண்டிருக்கிறவர், ஆழ்வான் கண்ணழிவுகண்டு கண்கலங்கியருளி, "பேரருளாளர், நேத்ரபுத்ராதிகளான ஐஹிகபுருஷார்த்தத்தையும், பெரியவிசும்பாகிற ஆமுஷ்மிக புருஷார்த்தத்தையுங் கொடுக்குமவராகையாலே, நேத்ரவிஷயமாக ஒரு ஸ்தோத்ரத்தைச் செய்யும்" என்று நியமிக்க, அப்படியே "அஸ்து" என்று ஸம்மதிபூர்வகமாக ஸ்தவம்பண்ணுகிறவர், "நேத்ரஸாக்ஷாத் க்ஷீரஸாகரே" என்றும், "க்ஷீரஸமுத்ரோபரிஸ்த்தம் ஸமீரே" என்றும் அங்குத்தையிலநுபவபரிகரமான அப்ராக்ருத சக்ஷுஸ்ஸை அபேக்ஷிக்க, அப்படியே பேரருளாளரான பெரியபெருமாளும், "பச்யந்தி ஸதா தேவம் நேத்ரேண நயனாம்போஜை", "ஸர்வம் ஹ பச்ய: பச்யதி" என்னும்படியான இமையாத கண்ணை இவர் பெறும்படி பெரியவீட்டுக்கு விடைகொடுத்தருள, அவரும் அதிப்ரீதராய் ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையர் திருமாளிகையிலே புறவீடுவிட்டிருக்க, இத்தை எம்பெருமானார் கேட்டருளி "அறப் பதறினார்" என்று பதறிக்கொண்டு இவரிருந்தவிடத்தேற எழுந்தருள, அவரும், பரந்தாமமென்னும் திவந்தருகைக்காக அவர்க்கு மறுக்கவொண்ணாதபடி அவர்விஷயத்தில் ப்ரபத்தியான இச்ச்லோகத்தை "ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே" என்று விண்ணப்பஞ்செய்து திருவடிகளிலே விழ, அவரும் இவரபிப்ராயம் அறிந்து தம்முடைய ஸ்வமான ப்ரபத்தியை "திருநாரணன்தாள் காலம்பெறச் சிந்தித்துய்ம்மினோ" என்னும்படி "ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே" என்று குறைவற அவர்வலத்திருச்செவியிலே ப்ரஸாதித்தருளினாரிறே; அதடியாக, ஸ்ரீவைகுண்டகத்யத்திலே அவர்ப்ரார்த்தித்தருளின பேற்றை இவரும் ஸ்ரீவைகுண்டஸ்தவத்திலே ப்ரார்த்தித்துப் பேற்றோடே தலைக்கட்டினார்; அப்பேறுதான் ஆசார்யாதீநமாகையாலே அவரை அடியிலே சரணம் புகுகிறார்.

[யோநித்யம்] - இதில் - பக்திவிரக்திஜ்ஞப்திகுருத்வாநுகம்பாதிக்ய குணத்தாலே முக்திப்ரதத்வ சக்தியையுடைய உடையவர் திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறார். [யோநித்யம்] - "திசையனைத்து மேறுங்குணன்" என்று சொல்லப்படுகிற குணவத்தாப்ரதையையுடையராய், நாள்தோறும் ஆச்ரிதரை நழுவுதலின்றிக்கே ரக்ஷித்துக்கொண்டு போருகிற ஸர்வேச்வரனுடைய சரணாரவிந்தயுகலவ்யாமுக்ததையாலே தத்வ்யதிரிக்தஸமஸ்தவஸ்துக்களையும் த்ருணவத்ப்ரதிபத்திபண்ணியிருப்பாராய், அடியேனுக்கு அஜ்ஞாதஜ்ஞாபநம்பண்ணும் ஆசார்யராய், அதுக்கடியான ஜ்ஞாநாதிக்யத்தை யுடையருமாய், அகதிகள்விஷயங்களில் "ஐயோ!" என்று இரங்கும் ஆந்ருசம்ஸ்யத்தை யுடையருமாய், சரூபியாய் முன்வந்துநிற்கிற இந்த ராமாநுசனுடைய சரணங்களை சரணமாக அடைகிறே னென்கிறார்.

[யோநித்யம்] - யஃ என்று - "வைதிகோத்தமர்" என்னும் ப்ரஸித்தியைப்பற்றச் சொல்லுகிறது. நித்யம் அச்யுதபதாம்புஜயுக்மருக்மவ்யாமோஹதஃ என்று - "ஸர்வேஷ்வேவ ஸுகாலேஷு ஸர்வாவஸ்தாஸு ஸர்வதா । கிங்கரோஸ்மி" என்றும், "ஸர்வதா ஸர்வகாலேஷு தாஸ்யம்" என்றும் சொல்லுகிறபடியே ப்ரணதார்த்திஹராச்யுதரானபேரருளாளர் ஸ்ப்ருஹணீயமான திருவடித்தாமரைகளிலே நிரவதிகப்ரேமத்தாலே, "தத்பாதகமலாத்ந்யத்" என்கிறபடியே திருவடிகளுக்கு அசலான அனைத்தையும் த்ருணஸமமாக எண்ணியிருப்பரென்கிறது. "நிரவதிகப்ரேமபரவஶம்", "தென்னத்தியூர்கழலிணைக்கீழ்ப் பூண்ட அன்பாளனிராமானுசன்" என்று வரதநாராயணனை யாயிற்று; "யோநித்யமச்யுதநாராயணம்" என்று நிரவதிக ப்ரேமத்துடனே நித்ய திருவாராதநமாக நடத்திப்போருவது; அந்தபக்த்யைஶ்வர்யமதத்தாலே, "த்ருணீக்ருத விரிஞ்சாதி நிரங்குஶவிபூதயஃ", "கொள்வதெண்ணுமோ தெள்ளியோர்குறிப்பு" என்னும்படி பண்ணியிருப்பராயிற்று; "ஸ்வாஹம் ஹ்ருதயவதர்ஶனீயவரிவஸ்யாமி" என்றாயிற்று இவர் ஸ்ரீஸூக்தியும் இருப்பது. [யஃ] - "திக்குற்றகீர்த்தி யிராமானுசன்" என்று ப்ரஸித்தரானவர். [நித்யம்] - நாடோறும். [அச்யுதபதாம்புஜயுக்மருக்மவ்யாமோஹதஃ]-அச்யுதனாகையாவது - குணவிக்ரஹவிபூதிகளை நழுவுதலின்றிக்கே யிருக்குமவ னென்னுதல், ஆஶ்ரிதரை நழுவ விடாதவ னென்னுதல், ஆஶ்ரிதரக்ஷணத்தில்நின்றும் நழுவாதவ னென்னுதல். "வீவிலின்பம்மிக வெல்லே நிகழ்ந்த நம்மச்சுதன் வீவில்சீரன் மலர்க்கண்ணன் விண்ணோர் பெருமான்" என்றும், "ஆதுமிலகாலத் தெந்தை யச்சுதனமலன்" என்றும், "அயரவாங்குநமன்றமர்க்கருநஞ்சினை யச்சுதன்றன்னை" என்றும், "நத்யஜேயம்" என்றுஞ் சொல்லப்படுகிற குணங்களிலேயாயிற்று இவர் ப்ரவணராயிருப்பது. அந்த அச்யுதபதாம்புஜயுக்மருக்மவ்யாமோஹம், அர்ச்சாவதாரந் தொடங்கிப் பரபர்யந்தமாக எங்கும் நித்யமாக உண்டாயிறே இவர்க்கு இருப்பது. அது எங்ஙனேயென்னில்;—அத்திகிரிப்பச்சைநிறத்தச்சுதனுடைய பதாப்ஜங்களிலும், வேங்கடத்தச்சுதனுடைய தாங்கு தாமரையன்ன பொன்னாரடியிலும், அரங்கமாநகரச்சுதனுலகமளந்த பொன்னடியிலும், நண்ணித்தொழுமவர் நச்சுவார்முன்னிற்கும் நாராயணனச்சுதனுடைய துளங்கு சோதித்திருப்பாதத்திலும், தயரதற்குமகனை அச்சுதன் காடுறைந்த பொன்னடியிலும், கோவிந்தனச்சுதன் பொற்றாமரையடியென்று பேசும்படியாய்க் கானில்கன்றின்பின்போன பொன்னடியிலும், அச்சுதனனந்தசயனன்செம்பொன்திருவடியிணையிலும், வீவிலின்பம்மிக எல்லைநிகழ்ந்த நம்மச்சுதனை விண்ணோர் பிரானார் மாசில்மலரடியிலு மாயிற்று, இவர் மயல்கொண்டிருப்பது. இதுதான் "ஆவமொடுநிச்சல்நினைவார்" என்னும்படியிறே நித்யேச்சை நடந்து செல்வது. "தென்னத்தியூர்கழலிணைக்கீழ்ப்பூண்டவன்பாளன்", "அரங்கன்கழல் சென்னிவைத்துத் தானதில்மன்னும்", "பஞ்சித்திருவடிப் பின்னைதன்காதலன் பாதம் நண்ணு", "நின்றவண்கீர்த்தியும் நீள்புனலும் நிறைவேங்கடப்பொற்குன்றமும் வைகுந்தநாடுங் குலவியபாற் கடலு முன்தனக்கெத்தனையின்பந்தரும்" என்னக்கடவதிறே. அவர் தாமும் "ஶரணாகதி", "ஸ்ரீரங்கநிவாஸ," "ஸ்ரீரங்கஶாயிநம்" என்றும், "க்ருதாநுஸாரயேம்" என்றும், "ஸ்வாகதம்", "ஶேஷிணேஶேஷஶாயிநே", "ஸ்ரீவேங்கடநாய" என்றுமிறே அருளிச்செய்தது. ஆகையாலே, பூவார்கழல்களிலும், கண்ணன் கழலிணையிலும், காகுத்தன்தன்னடியிலும், பாற்கடலுள்பையத்துயின்ற பரமனடியிலும், வைகுந்தச்சேவடியிலும், ஸர்வாந்தர்யாமியான நாராயணசரணங்களிலுமாயிற்று வ்யாமுக்தராயிருப்பது. இப்படி பஞ்சாவஸ்தாவஸ்திதனை ஸர்வேஶ்வரனுடையசரணாரவிந்தயுகளமகரந்தரஸாஸ்வாத மதுவ்ரதமாய் அநுபவித்து அதிலே மக்நராய், அத்தாலே ததிதரங்களாய் ஆவிர்ஞ்ச அமங்களமான பாஞ்சபௌதிகவிஷயபஞ்சகத்தையும், அதுக்குமேலான ஆத்மாநுபவத்தையும் த்ருணவத்ப்ரதிபத்தி பண்ணியிருப்பாராயிற்று. இப்படி பக்திவிரக்தியுடைய இவர்திருவடிகளைத் தாமும் அப்படி பரத்வாதிகளெல்லாமாக அறுதியிட்டு அடையப் பார்க்கிறார்.

[அஸ்மத்குரோஃ] - கீழ்ச்சொன்ன அச்யுதபக்தியாலே த்திதரங்களை த்ருணவத்கரிக்கையாலுமாயிற்று, இவரை ஆசார்யவரணம் பண்ணுகிறது "விஜ்ஞாதஸகலதத்வார்த்தாய" என்னும்படி தத்த்வத்ரயத்தையும் உபதேசிக்கையாலே அலகலகாக ஆராய்ந்து "மஹாஜேஸ்விபிஸ்வாஷி

பஞ்சாஶத்வ்ருத்தாநுஹ்ருதிதிதியாகிமஶ்ரீக்ருதா | ஸர்வஜ்ஞ ஜ்ஞாநஜோஷ ஜ்யேஷ்ட ஹம்ஸஜுஷ்டம்” என்று தத்த்வத்வய விஷய வைராக்யத்தையும், “தவதாஸ்யஹோ ஸஸங்க:” என்று தத்த்வைகவிஷய பக்தியையுமுடையராகையாலே தமக்கு அநுகுணமாகவே ‘அஸ்மத்குரோ:’ என்கிறார். “ஜ்ஞாநீத்வாத்மைவ மே மதம்”, “க்ருஷ்ணம் ப்ரதிபந்நாயிக்ய: ஸ்வபாவாத் ஹ்ருதயஸ்தித”. இவர்க்கும் இரண்டிற்கும் அடி எம்பெருமானாரிறே; “ஸ்ரீவத்ஸசிஹ்நஜநாநுஜாஸ்ய ஸத்வயமிமதஸ்ஸௌஸ்வாத்வித்ஸ்ய:” என்றாயிற்று இருப்பது. இவரையாயிற்று ப்ரதாந ஶிஷ்யராக ப்ரதமம் பெரியதிருமந்த்ரம் முதலான ரஹஸ்யங்களை ப்ரஸாதித்து அபிமாநித்தருளிற்று. நரநாராயணாவதார மென்னலாம்படியிறே, ராமாநுஜ கூராதிபர்கள் கூட்டாவிருப்பது. எல்லாரும் ஒருதட்டும் இவர் ஒருதட்டுமாகவிறே எம்பெருமானார் எண்ணியிருப்பது; அத்தைப்பற்ற, “ஒருமகள்தன்னை யுடையேன்” என்றாரிறே. இப்படி அத்விதீயமாயிற்று இரண்டு விஷயமும் இருப்பது. “கலையறக்கற்றமாந்தர்” என்னலாம்படியான இவருக்கு ஸகலார்த்தமும் ப்ரஸாதிக்கும்படியான ஜ்ஞாநவைபவத்தைச் சொல்லுகிறது ‘பகவத:’ என்று. “சொல்லார்தமிழொருமூன்றும் சுருதிகள்நான்கு மெல்லையில்லாவறநெறி யாவுந்தெரிந்தவன்”, “உண்மை நன்ஞான முரைத்த”, “இராமானுசன் மெய்ம்மதிக் கடல்” என்னும்படியிறே ஜ்ஞாநவைபவம் இருப்பது. “ஸர்வகல்யாணஸம்பூர்ணம் ஸர்வஜ்ஞாநோபப்ருஹ்மிதம் | ஜ்ஞாநஶக்திபலைஶ்வர்யவீர்யதேஜாம்ஸ்யஶேஷத:” என்னக்கடவதிறே; பகவச்சப்தம் - ஸர்வகல்யாணகுணங்களையும் பரிபூர்ணஜ்ஞாநத்தையும் சொல்லுகையாலே, அவற்றால்குறைவற்ற விஷயமாயிருக்கை. இத்தால் - தமக்கு அஜ்ஞாதஜ்ஞாபநம் பண்ணுகைக்கு உடலான ஜ்ஞாநவைபவத்தைப் பேசினார். இனித் தம்முடைய துர்க்கதி கண்டு இரங்கும்படி தயாபூர்த்தியை அருளிச்செய்கிறார், “அஸ்யதயைகஸிந்தோ:” என்று; ஈடுபடுகிறார். அஸ்ய - ராமாநுஜஸ்ய என்று மேலில் பதத்தோடே சேர்த்தி தயைகஸிந்து என்று - கேவலக்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்ய ரென்றபடி. “பயனன்றாகிலும் பாங்கலராகிலும், செயல்நன்றாகத்திருத்திப் பணிகொள்வான், குயில்நின்றார் பொழில்சூழ் குருகூர்நம்பி” என்றிறே இருப்பது. “பாடினனருள்கண்டீர் இவ்வுலகினில்மிக்கதே,” “எண்டிசையுமறிய வியம்புகேனொண்டமிழ்ச்சடகோபனருளை” என்னுமாபோலே, “நிகரின்றி நின்ற வென்னீசதைக் குன்னருளின்கணன்றிப், புகலொன்றுமில்லை யருட்குமஃதேபுகல்” என்றும், “உன்பெருங்கருணை தன்னை” என்றும், “வண்மையினாலும் தன் மாதகவாலும்” என்றுமிறே இவர்க்ருபையின் பெருமை இருப்பது. அருளாழியம்மானாய், “தயாஸிந்தோ பந்தோ” என்னும்படியான ஸர்வேஶ்வரன் க்ருபை மறுத்தகாலத்திலும் ஒதுங்கலாம்படியான க்ருபை; அவன்கைவிட்ட ஸம்ஸாரிகளையும் “வ்யாமோஹவஶதோ யாதோ ஹ்யவஸீதந்வஸந்ததி: | தஸ்யாதநந்தரம் ஜந்துஸ்ஸந்துஷ்யந்தி ப்ரணம்ய ஜ” என்று உபதேஶித்துத் திருத்துமவரிறே. கீழ்ச்சொன்ன ஜ்ஞாநபக்திவைராக்யம், நிரவதிகதயையாகிற இந்தக்குணங்களெல்லாம் கேட்டேபோகாமே கண்ணாலே கண்டு அநுபவிக்கலாம்படி ப்ரத்யக்ஷமாய் முன்வந்து நிற்குமவரை ‘அஸ்ய ராமாநுஜஸ்ய’ என்று அநுபவிக்கிறார். இந்த ராமாநுஜனுடைய வென்று - இவர்க்கு ஈடுபாட்டுக்கு விஷயம் இருக்கிறபடி. ‘ராமாநுஜஸ்யசரணௌ ஶரணம்ப்ரபத்யே’ என்று நாராயணசரண ஶரணவரணத்திற் காட்டிலும் ராமாநுஜசரணஶரணவரணம் ஸ்வரூபாநுகுணமுமாய் அமோகமுமா யிருக்குமாகையாலே, அவர்திருவடிகளை ஶரணமாகப் பற்றுகிறார்; “பழுதாகாதொன்றறிந்தேன்” இத்யாதி. “மாறாயதானவனை - வேறாக, வேத்தியிருப்பாரை வெல்லுமே மற்றவரைச், சாத்தியிருப்பார்தவம்”, “பாற்கடலு முன்தனக்கெத்தனை யின்பந்தரும்” என்று செழுந்திருப்பாற்கடல் கண்துயில்மாயன் திருவடிக்கீழ் விழுந்திருப்பாரிறே. வளர்ந்தவெங்கோப மடங்கலொன்றாய் அன்று வாளவுணன் கிளர்ந்தபொன்னாகங்கிழித்தவன்கீர்த்திப்பயிரெழுந்து விளைந்திடும் சிந்தையிராமானுசனைக் கண்டுஇறைஞ்சி மற்றவரைச் சாத்தியிருக்கப் பார்க்கிறார். எம்பெருமானார்தவம் - தபஶ்ஶப்தவாச்யையான ப்ரபத்தி. இவர்தவம் - “எம்பெருமானார் திருவடிகளே ஶரணம்” என்னும் ஆசார்யாபிமாநம்; “ராமாநுஜார்யவிஷயீக்ருதம்” என்றாரே. அவர்தவத்தைக்காட்டிலும் இவர்தவம் வென்றதாயிற்று; அவர்க்குமுன்னேயிறே இவர்க்குப் பேறு ஸித்தித்தது; “ஸித்திர்ஹி வைகுண்டநதீஸம்ஶ்ரயோ வ்யாதத்தவைகுண்டம் | * நதீஸம்ஶ்ரயோக்திகதநீஹக்ருதபர்வதார்த்தநாம்”, “நம்புவார்பதி வைகுந்தங் காண்மினே” என்னும்படி வைகுண்டப்ரியதர்ஶநம் பண்ணினார்.

---

* திஸம்ஶ்ரயஸ்ய என்று பாடாந்தரம்.

இந்த ராமாநுஜப்ரபத்தியிலே நாராயணப்ரபத்யர்த்தமெல்லாம் அநுஸந்தேயம்; கீழ் பக்திவிரக்ஜ்ஞப்தி வ்யாஜிதையாகிற இவை - முக்திப்ரதபக்திஸாதநங்களாயிருக்கும்; இதிறே, புருஷகாரஹாதுக்கு அநுகுணமான ஸ்ரீமத் பதார்த்தமும். இவையும் ஈஸ்வரவஶீகரண ஹேதுவான குணமிறே. புருஷகாராந்தரநிரபேக்ஷமாயிறே இவ்விஷயம் இருப்பது. இனி, வாத்ஸல்ய ஸ்வாமித்வ ஸௌஶீல்ய ஸௌலப்யாதிகள் ஸௌகர்யாபாதகங்களாயிருக்கும், நாராயணபதத்திற்போலே; "ஏதாவிதாஹாதாநிவாஸ; ஶரணம்ஸுஹ்ருத்கதிர்நாராயண:" என்று இஸ்ஸம்பர்ந்தத்தாலே வாத்ஸல்யாதிகள் அநுஸந்தேய அங்கு. "இதத்தா யிராமாநுசன்", "எந்தையிராமாநுசன்", "எம்மையனிராமாநுசன்", "எலப்புனெதன்னைமார்". என்னைமார் - ஆணுடன்பிறந்தவர்கள் என்னுமாபோலே இங்கு எல்லாரோடுமுண்டா ஸௌப்ராத்ரம், "கோயிலண்ணனிராமாநுசன்", "அடியேனுக்கிருப்பிடம்", "இராமாநுசன்சரண்", "இராமாநுசன்சரணேகதி" என்கையாலே; தோஷபோக்யத்வமாகிற வாத்ஸல்யமும், ஸ்வத்தினுடைய லாப லாபம் ஸ்வாமியதாம்படியாய் ஸ்வத்தை நோக்குகிற ஸ்வாமித்வமுமாகிற இவை - ராமாநுஜபதத்தாலும் அநுஸந்தேயம்; தாழ்ந்தவர்களோடே தன்பேறுகக் கலக்கையாகிற ஸௌஶீல்யமும் ஆஶ்ரயிப்பார்க்கு த்ருஷ்டிகோசரமாய்ப் புரோவர்த்தியாய் நிற்கிற ஸௌலப்யம். ஜ்ஞாநமாவது - ஆஶ்ரிதர்க்கு த்யாகஸ்வீகாரங்களுக்கு உறுப்பான இஷ்டாநிஷ்டங்களை யறிகைக்கு உடலான அறிவு; ஶக்தியாவது-அநிஷ்டங்களைபோக்குகைக்கும் இஷ்டங்களைக்கொடுக்கைக்கு முடலாய், அஶக்தரானவர்களை அக்கரையேற்றவல்லஶக்தி. பூர்த்தியாவது - இவனிட்டதுகொண்டு த்ருப்தனாகவேண்டாத பூர்த்தி; ப்ராப்தியாவது-தன்பேறுகச்செய்தலைக்கட்டுகைக்கு உடலான ஸம்பந்தம்; காருணிகத்வமாவது - ஸம்பந்தமில்லாவிடிலும் குருடன் குழியிலேவிழுந்தால் எடுக்கைக்கு ஸம்பந்தம் வேண்டாதாபோலே பிறர்நோவுகண்டால் 'ஐயோ!' என்ன வேண்டும்படியான தயை; "ஸுஹ்ருதம்ஸர்வபூதாநாம்" என்னக்கடவதிறே. ஔதார்யமாவது - கொள்வாரைத் தேடிக் கொடாவிடில் தரியாமற்கொடுக்கும் கொடையுடைமை; இப் ஸௌகர்யாபாதக குணசதுஷ்டயமும், கார்யாபாதககுணஷட்கமும் இங்கும் அநுஸந்தேயம். அது எங்ஙனேயென்னில்;—"இப்படியைத்தொடருமிராமாநுசன்" என்னும்படி அவர்பின்படரும் குணனுய் "நீம்பலனென்றுநினைத்தென்னையிகழா தெதிராச, ரன்றறிந் தங்கீகரிக்கையால்" என்கிற வாத்ஸல்யமும், "அண்ணலிராமாநுசன்" என்னும்படியுடையவராகையாலே பல்லுயிர்க்கும் வீடளிப்பானுய் விண்ணின்தலைநின்று மண்ணின்தலத்து உதித்தபடியாலே ஸ்வத்திருந்தவிடத்தேவந்து நோக்கும்படியான ஸ்வாமித்வமும், "அருவினையின் திறஞ்செற் றிரவும்பகலும் விடா தென்தன்சிந்தையுள்ளே நிறைந்தொப்பறவிருந்தான்" என்னும்படி ஒருநீராகக் கலந்த ஸௌஶீல்யமும், "என்கண்ணுள்ளும்நெஞ்சுள்ளும்நின்ற" என்று சொல்லும்படியான ஸௌலப்யமும், "மெய்ஞ்ஞானத்திராமாநுசன்", "கதி ராமாநுசன்", "உண்மை நல்ஞானமுரைத்த விராமாநுசன்" என்று அறியாதன அறிவிக்கைக்கும் அவர்களுக்குச் செய்யவேண்டுவதும் தவிர்க்கவேண்டுமெதுவும் அறிகைக்கும் ஈடான ஜ்ஞாநமும், நிலத்தைச்செறுத்துண்ணும் நீசக்கலி வினைப்பரிய பலத்தைச் செறுத்தும் என்பெய்வினை தென்புலத்தில் பொறித்த வப்புத்தகச்சும்மை பொறுக்கியும் போருகிற பாபவிமோசகதவஶக்தியும், "சலியாப்பிறவிப்பவந்தரும் தீவினைபாற்றித்தரு பரந்தாமமென்னுந்திவந்தரும்" என்னும்படி விரோதிநிவ்ருத்திபூர்வக பகவத்ப்ராப்தியை உண்டாக்கிக் கொடுக்குமதான ஶக்தியும், பகவத்விஷயத்தை அண்டைகொண்ட பூர்த்தியும், "எந்தையிராமாநுசன் வந்தெடுத்தனனின்றென்னை" என்கிற ப்ராப்தியும், "காரேய்கருணை" என்கிற காருணிகத்வமும், "கொண்டலனைய வண்மை", "உன்னுடைய கார்கொண்டவண்மை", "உன்வண்மையென்பாலென்வளர்ந்ததுவே" என்று அபேக்ஷாநிரபேக்ஷமாக உபகரிக்கும் ஔதார்யஸ்வபாவமுமாகிற ப்ரபத்யபேக்ஷித குணங்களெல்லாம் குணந்திகழ்கொண்ட விராமாநுசனிடத்திலே கண்டு அநுபவிக்கலாம்படியா யிருக்குமிறே.

இப்படி கோடித்வய குணயுக்தரான ராமாநுசனுடைய சரணங்களை உபாயமாக ஸ்வீகரிக்கும் சொல்லுகிறது-"ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்யே"என்று;குலந்தரும் நலந்தருஞ்சொல்லான நாராயணா என்னும் நாலெழுத்துப்போலே ஸகலபுருஷார்த்த ஸாதநமன்றிக்கே, கேவலம்மோக்ஷைகஹேதுவாயிற்று, இந்தச் சதுரக்ஷரி இருப்பது; "வந்தாரவந்தாக்ஷரீ" என்றாரே இவர்தாமே. "யதா நாராயணாயேதி ஜப்யதே த்வதக்ஷரம்"; நாராயண ராமாநுஜ என்றிறே விகல்பிக்கலாயிருப்பது இத்திருநாமந்தான், யுகந்தோறுமுண்டாயிருக்குமாயிற்று; இளையபெருமாளிடத்திலும், நம்பிமூத்தபிரானுக்குத் தம்பியான க்ருஷ்ணனிடத்திலும், இப்போது இளையாழ்வாரான இவரிடத்திலும் பேர்பெற்று

யிருப்பது. ஏதத்பூர்வாவதாரத்வயமும், ஸாதுபரித்ராணத்துக்கும் துஷ்க்ருத்விநாஶத்துக்கும் உடலாயிருக்கும்; இவ்வவதாரமும், வைதிகமார்க்கத்தை ஸ்தாபிக்கைக்கும், அவைதிகமார்க்கத்தை நிரோதிக்கைக்கும், ப்ரபத்திமார்க்கத்தைப் பெருக்கி வளர்க்கைக்கும் உடலாயிருக்கும். அவ்வவதாரங்களிலும் அப்படியே, "ஸக்ருதேவ ப்ரபந்நாய," "ஏகம் ஶரணம் வ்ரஜ", "அநந்யஶரண: த்வத்பாதாரவிந்தயுகளம் ஶரணமஹம் ப்ரபத்யே" என்றிறே இவர்கள் ப்ரபத்தியை வர்த்திப்பித்தது. அவர், ஸ்ரீமந்நாராயணவிஷயத்தில் ப்ரபத்தியை கத்யமுகேந வெளியிட்டார்; இவர், ராமாநுஜவிஷயத்தில் ப்ரபத்தியை இப்பத்யமுகேந வெளியிடுகிறார். அங்கு, ப்ரமேயபூதர் வெளியிட்டார்கள்; இங்கு, ப்ரமாதாவானவர் வெளியிட்டார் [ராமாநுஜஸ்யசரணௌஶரணம்ப்ரபத்யே] என்று. 'அஸ்யராமாநுஜஸ்ய சரணௌ' என்று "இராமாநுசன்பரன்பாதமுமென்சென்னித்தரிக்கவைத்தான்" என்னும்படி திருவடிகளிலே தலையைமடுத்து ஶிரஸா யாசிக்கிறார். ராமஶரணாகதி, "ஶிரஸா யாசதஸ்தஸ்ய வசநம் ந க்ருதம் மயா" என்று பலித்ததில்லை; ராமாநுஜ ஶரணாகதி அவ்யபிசரிதமாக பலிக்குமிறே. "ஸக்ருச்சரணௌ" என்னும்படி, "ராமாநுஜஸ்ய சரணௌ" என்று - வேறு த்வயம் வேண்டாதே, அடியே த்வயமாயிருக்கை. லோகவிக்ராந்தசரணம் போலே மாறிநடப்பனவாயிறே இராமாநுசன்தன் இணையடி இருப்பது; நாராயணசரணங்களளவுஞ் செல்லவேண்டாத பூர்த்தி. விக்ரஹைகதேஶத்தைச் சொன்னது - விக்ரஹத்துக்கும் உபலக்ஷணமாக. "கையிற்கனியென்னக் கண்ணனைக்காட்டித்தரிலு முன்றன், மெய்யிற் பிறங்கிய சீரன்றி வேண்டிலன்யான்" என்னும்படியாயிருக்கும். [சரணௌஶரணம்] - "இராமாநுசன் நம்மை நம்வசத்தே விடுமே சரணமென்றால்" என்கிற உபாயாத்யவஸாயத்தைச் சொல்லுகிறது. 'ப்ரபத்யே' என்று - உபாயஸ்வீகாரஞ் சொல்லுகிறது. "நையும்மனமுன் குணங்களை யுன்னி யென்னாவிருந்தெம்,மையனிராமாநுசனென் றழைக்கு மருவினையேன், கையுந்தொழும்", "வாசா யதீந்த்ர மநஸா வபுஷா ச யுஷ்மத்பாதாரவிந்தயுகளம் பஜதாம் குரூணாம் | கூராதிநாத" என்னும்படி த்ரிவிதகரணத்தாலும் பற்றுகிறார். "இராமாநுசனையுன்னுந்திண்மை" என்று - எல்லார்க்கும் மாநஸாத்யவஸாயமாகலாம்; இவர் பூர்ணாதிகாரியாகையாலே த்ரிவிதகரணத்தாலும் பூர்ணப்ரபத்தி பண்ணுகிறார். இந்த ஸ்வீகாரம் ப்ராப்யமாகையாலே, "ஏய்ந்தபெருங்கீர்த்தி யிராமாநுசமுனிதன், வாய்ந்தமலர்ப்பாதம் வணங்குகின்றேன்" என்று வர்த்தமாநமாய் நடக்கிறது.

இவர் தீர்க்கபந்துவாகையாலே, எல்லார்க்கும் தாம் பண்ணின ப்ரபத்தியே தஞ்சமாம்படி கொழுந்துவிட்டுப்படரும்படி பண்ணுகிறார்; அத்தைப்பற்றவிறே "வ்யாஸகார்ய ராமாநுஜார்ய நமஸ்தே" என்றது. இத்தால் - இவர் சரமகாலத்திலே பண்ணின சரமப்ரபத்தியே இவர் சரண்கூடின சரமபர்வநிஷ்டர்க்கெல்லாம் அவ்யபிசரிதமான உபாயமாய்ப் பேற்றோடே தலைக்கட்டுமென்றதாயிற்று. "ப்ரபந்நஜநகூடஸ்தரான எம்பெருமானார், தம்முடைய பெருகிப்போருகிற பெருங்கருணையாலே பெரியபெருமாள் திருமுன்பே சென்று பெரியபிராட்டியாரை முன்னிட்டு, 'ப்ரபந்நஜநங்களான பெரியோர்களிடத்திலே பேதைகளானவர்கள் செய்யும் பெரும்பிழைக்கும் ப்ரபத்தியே இவர்சரண்கூடின சரமபர்வநிஷ்டர்க்கெல்லாம் ப்ராயஶ்சித்தமாகக்கடவது' என்று ப்ரார்த்திக்க, புருஷகாரபலத்தாலே 'பொறுத்தோம்' என்ன, இந்த ப்ரார்த்தநாப்ரகாரத்தை ராமாநுசனைத்தொழும் பெரியோரான கூரத்தாழ்வான் ஏகாந்தத்திலே ஸேவித்து, அனைவர்க்கும் தஞ்சமாக "நமோஸ்து" இத்யாதி ஶ்லோகத்தை அருளிச்செய்தார்" என்று பெரியோர்கள் அருளிச்செய்வர்கள். வாதிகேஸரி அழகியமணவாளச்சீயரும், பகவந்தம் யதிவரம் ப்ரணிபத்ய யதீந்த்ராங்க்ரிகிங்கரான்வயரானார்; அத்தைப்பற்றப் பின்புள்ளாரும் "ந்யாஸாதீஶஸ்ய" என்றார்கள்; ஈட்டுக்கு ப்ரவர்த்தகரான ஈயுண்ணிமாதவப்பெருமாள் ப்ரஶிஷ்யரான நாலூர்ப்பிள்ளையும் ராமாநுஜதாஸரிறே; யதிவரபுநரவதாரமாய் யதீந்த்ரப்ரவணரான சீயரும் தம்ஶிஷ்யபுத்ரர்களுக்கு ராமாநுஜநாமத்தையுண்டாக்கி நடத்தியும், நூற்றந்தாதியை அநுகரித்து அருளிச்செய்த யதிராஜவிம்ஶதியிலே ஸ்ரீவத்ஸசிஹ்நரடியாக "வாசாமகோசரமஹாகுணதேஶிகாக்ர்யகூராதிநாத" என்றும், "ஶ்ரீமந்மஹாபூர்ண கூராதிநாத ப்ரமுகதேஶிகவர" என்றும், ஸ்ரீஶைலநாதரிடத்திலே ஶேகரித்தது. ஏவம்வித ஸம்பந்தயுக்தராய் குருகுலதுர்யரான பெரியசீயர்ஸம்பந்தமேயிறே ப்ரபலம்; இத்தால் - விஶிஷ்டபக்ஷத்திலே ஊன்றின ஶிஷ்டராய், அத்தாலே ஶ்ரேஷ்டருமாய், ஸர்வப்ரகாரத்தாலும் அஹங்காரரஹிதரான ஆசார்யர்கள் ஸம்பந்தமே ஆதரணீயமென்றதாயிற்று. (௩)

ஆளவந்தார் அருளிச்செய்தது.

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூதிஸ் ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம் |
ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுலாபிராமம் ஸ்ரீமத் ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா ||

[மாதா இத்யாதி] - இந்த ஜ்ஞாநம் அதிக்ருதாதிகாரமாயப் போகாமே ஸர்வாதிகாரமாம்படி த்ராமிடியான ப்ரஹ்மஸம்ஹிதையை "மயர்வறமதிநலம்" என்கிற பக்தியாலே வாசிகமாக்கி, "மரங்களுமிரங்கும்வகை" என்கிற தம்முடைய ஆகர்ஷகமான ஈரச்சொல்லாலே அருளிச்செய்கையாலும், பெரியமுதலியார்க்கு இந்த ஜ்ஞாநத்துக்கு உபாதாநம் ஆழ்வாராகையாலும், அவர்திருவடிகளிலே விழுகிறார். "உரவிணேடிணைந்திருந்தேங்கியவெளிவெத்திறம்" என்றும், "செய்யுண்வார்த்தையுளன்னைகோல்கொள்ள" என்றும், "எல்லாங்கண்ணன்" என்றும் பெரியமுதலியாரையும் ஸ்ரீபராஶரபகவானையும்போலே க்ருஷ்ணைவித்தராயிருக்கிறபடியையும் நினைத்து ஆழ்வார்திருவடிகளிலே ஶரணம்புகுகிறார்.

[மாதா] - உத்பத்திக்கு முன்னே வரங்கிடந்து பெறுகைக்கு வருந்தி, பத்துமாஸம் கர்ப்பதாரணம் பண்ணி, ப்ரஸவவேதனையநுபவித்து, அஶக்திகளையும் மதியாதே பால்யதஶையில் ஆதரித்து வளர்த்து-பக்வனானால் பின்பு பருஷபாஷணம்பண்ணினாலும் அவற்றைப்பொறுத்து, அகலவிசையாதே இவன் ப்ரியத்தையே வேண்டியிருக்கும் மாதாவைப்போலே உபகாரகராயிருக்கை. [பிதா] - அவள்பாத்ரமாத்ரமென்னும்படி உத்பாதகனாய், என்றுமொக்க ஹிதைஷியான பிதா பண்ணும் உபகாரத்தைப் பண்ணுமவரென்கை. "ஶ்ரேயாநுப்ரும்ஹயிதா". [யுவதய:] - இவ்விருவரையும் மறந்து விரும்பும் யுவதிகளைப்போலே நெஞ்சுக்கினியராயிருக்கை. [தநயா:] - அவர்களுடைய யௌவநத்தை அழியமாறிப்பெற்றவராய், பால்யத்தில் லாலகராய், பக்வதஶையில் ரக்ஷகராய், நிரயநிஸ்தாரகரான புத்ரர் பண்ணும் உபகாரத்தைப் பண்ணுமவரென்கை. [விபூதி:] - விபவமில்லாதபோது இவையெல்லாம் அஸத்ஸமமாகையாலே, இவையெல்லாவற்றையும் நன்றாக்கும் ஐஶ்வர்யம்போலேஉத்தேஶ்யராயிருக்குமவரென்கை.[ஸர்வம்]-அநுக்தமான ஸர்வைஹிகங்களுமாயிருக்கை. அதாவது - மோக்ஷோபாயமும் மூக்தப்ராப்யமும். [யதேவ] - அவதாரணத்தால் "சேலேய்கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும் மேலாத்தாய்தந்தையு மவரே" என்றிருக்கும் ஆழ்வார் நினைவுக்கே. [நியமேந] - என்றுமொக்க, அவர்க்கு ப்ரியமென்று போமதொழிய ப்ராமாதிகமாகவும் புறம்பு போகக்கடவதன்றிக்கேயிருக்கை. [மதந்வயாநாம்] - "வித்யயா ஜந்மநா வா" என்கிற உபயஸந்தாநஜாதர்க்கு. [ஆத்யஸ்ய ந:] - வைஷ்ணவஸந்தாநத்துக்கு ப்ரதமாசார்யரென்கை. [குலபதே:] - ஸ்த்ரீக்கு பர்த்ருகுலம்போலே கோத்ரருஷியும் அவரே. [வகுலாபிராமம்] - திருமகிழ்மாலையாலே அலங்க்ருதமாயுள்ளத்தை. இத்தால் - திருவடிகளில் பரிமளத்தால் வந்த போக்யதையைச் சொல்லுகிறது. திருத்துழாயாலே அலங்க்ருதமான பகவச்சரணாரவிந்தங்களை வ்யாவர்த்திக்கிறது. "நல்லடிமேலணிநாறுதுழாய்." [ஸ்ரீமத்] - ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயோடே நித்யஸம்யுக்தமாயிருக்கை; "ஸுஹ்ருதிகா ஸ்ரீரோது", "ஸ தந்நாமவஶ்ஸ்ரீரோது" என்று - பகவத்ப்ரத்யாஸத்தியை ஐஶ்வர்யமாகச் சொல்லக்கடவதிறே. என்னுடைய ஸம்பத்துக்கு ஊற்றான ஐஶ்வர்யத்தையுடையவரென்னவுமாம். [ததங்க்ரியுகலம்]-அதுவென்னுமத்தனையொழியப் பேசிமுடியவொண்ணாதென்கை. [யுகலம்]-சேர்த்தியால்வந்த அழகையுடைத்தாயிருக்கை. [ப்ரணமாமி மூர்த்நா] - ஆழ்வாருடையபடிகளை நினைத்தவாறே, நம: என்று நிற்கமாட்டாதே அவர் திருவடிகளிலே தலையைச் சேர்க்கிறார்.

(ஸ

பட்டர் அருளிச்செய்தது.

பூதம் ஸரஶ்ச மஹதாஹ்வய பட்டநாத ஶ்ரீபக்திஸார குலஶேகர யோகிவாஹாந் ।
பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ரமிஶ்ராந் ஶ்ரீமத்பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் ॥

கீழ் உபகாரகரை ஆஶ்ரயித்த இத்தால் செய்ததாயிற்று - முமுக்ஷுவுக்கு உபகாரகர் ஶேஷித்வ ப்ரதிபத்திவிஷயபூதரும் ஸ்துத்யருமென்னுமிடம் சொல்லுகிறது. ஒருவனுக்கு ஶேஷிகள் இருவருமாம்படி எங்ஙனே? என்னில்-க்ருதிஶேஷித்வம் யாகாதிகளுக்கும் புரோடாஶாதிகளுக்கும் உண்டானாற்போலே ஈஶ்வரன் ப்ரதாநஶேஷியாய் பாகவதர் த்வாரஶேஷிகளாமிடத்தில் விரோதமில்லை; அதவா, ஈஶ்வரன் நிருபாதிக ஶேஷியாய், தத்ஸம்பந்த மடியாக வந்ததாகையாலே பாகவதஶேஷத்வம் ஸோபாதிக மென்றுமாம். "தமக்கு ஸ்தோத்ராரம்பஹேதுவான பக்த்யாதிகள் பிதாமஹோபாத்தநம்" என்கைக்காக முதலிலே பெரியமுதலியாருடைய ஜ்ஞாநபக்திகளுடைய ஆதிக்யஞ் சொன்னார். நான்காம்ஶ்லோகத்தாலே - இவ்வர்த்தம் த்ரைவித்யவ்ருத்தாநுமத மென்கிறது. ஐந்தாம்ஶ்லோகத்தாலே - இந்தஜ்ஞாநம் இவர்க்கு ஆழ்வார்களாலே வந்த தென்கை. "ஸக்யம் யதீந்த்ரஶிஷ்யாணாம் ஸாக்ஷ்யம் வேதாந்தவேதிநாம்" என்று ஆழ்வான் அக்ரகண்யராகையாலே - "ஸஹ்ருதோ" என்றார். அப்படிப்பட்ட பாரதந்த்ர்யத்தை "இவ்வாத்மவஸ்து அவர்க்குஶேஷமாகில் அவருடைய விநியோகப்ரகாரங் கொண்டு கார்யமென்?" என்றார்; ஏவம்விதஸ்வரூபராகையாலே, உடையவரும் "ஒருமகள்தன்னை யுடையேன்" என்றார். இப்படி ஸ்வாசார்யவிஷயத்தில் பாரதந்த்ர்யத்தாலும், "நாம் பெற்ற லோகம் நாலூரானும் பெறவேணும்" என்று ப்ரார்த்திக்கையாலும், "ஶிஷ்யாசார்யக்ரமத்துக்கு ஸீமாபூமி கூரத்தாழ்வான்" என்றார்கள்; "ஆசார்யவிஷயஸ்ய வஶிஷ்யவ்ருத்தேஸ் ஸீமேதி தேஶிகவரோக்திவஶீதக்ஷ்யேண" என்னக்கடவதிறே. அதைப்பற்ற, உடையவரும் "யத்ஸவ்யநாத:" என்று ப்ரார்த்தித்தருளினர்; நூற்றந்தாதியிலும் மொழியைக்கடக்கும் பெரும்புகழா னடியாக விரும்பியருளினர். மற்றையாரான இவ்வருகிலுள்ளாரும் அல்லா வழியைக் கடப்பது அவர்களாலேயிறே; அவர்கள்தாம் யோநித்யம் த்ரைவித்யாதிகளடியாக அடியுடையராயிருப்பார்கள். "மாறனடிபணிந்துய்ந்தவன்", "ராமாநுஜாங்க்ரிஶரணோஸ்மி" இத்யாதி. மதுரகவிகளடிப்பாட்டிலே நடக்கிற க்ருபாமாத்ரப்ரஸந்நாசார்யர்கள் ஆழ்வானடியாயிருப்பார்கள்; "ஶ்ரீவத்ஸசிஹ்நவத:" இத்யாதி. "ஆரியர்காள்கூறும்" என்கிற எழுபத்துநாலுமுதலிகளுக்கும் உடையவரடியான ஆசார்யத்வம்; அதில் முக்யம் ஆழ்வான் ஸம்பந்தம்; பட்டரடியாகவிறே. அஷ்டஶ்லோகீமுகேந ரஹஸ்யத்ரயார்த்தஸம்பந்தம். திருவாய்மொழியும் அடியாயிருக்கும், ஒன்பதினாயிரம் பன்னீராயிரத்திலே பர்யவஸித்தது; பெரியபட்டருடைய ப்ரஶிஷ்யரான நம்பிள்ளை திருவடிகளிலேயிறே நடுவில்திருவீதிப்பிள்ளைபட்டர் ஆஶ்ரயித்தது; அவரும் ராமாநுஜநாமாவிறே; அஷ்டாக்ஷரதீபிகை அவரடியாயிருக்கும்; நம்பிள்ளைகுமாரரும் ராமாநுஜனிறே; அவரும் ஸாரஸங்க்ரஹஞ் செய்தருளினர்; தத்வம்ஶயரும் கோயிலுடையவர்க்குச் சிறிது கைங்கர்யங்களுஞ் செய்தார்கள். வடக்குத்திருவீதிப்பிள்ளை குமாரரான பிள்ளைலோகாசார்யரும் வகுளபூஷணஶாஸ்த்ரஸாரமான வசநபூஷணாதி ரஹஸ்யப்ரபந்தகர்த்தாவாய், தம்முடைய ப்ரதாநஶிஷ்யரான எம்பெருமானார்க்கு "கூரகுலோத்தமதாஸர்" என்று திருநாமஞ்சாத்தினர்; "என்னாரியர்க்காக எம்பெருமானார்க்காக" என்றிறே அக்கோஷ்டியில் பரிமாற்றம் இருப்பது.

[பூதம்ஸரஸ்ய] - பட்டர் திருக்கோட்டியூரிலே எழுந்தருளியிருக்கச்செய்தே, நஞ்சீயர்புருஷகாரம் பிறக்க, அவர்க்காக ஆழ்வார்களை அநுஸந்தித்ததாயிருக்கும் இஶ்ஶ்லோகம். ஆண்டாளை "நீளா" என்று தனித்து ஶரணம்புகுகிறதாயிருக்கும் அஶ்ஶ்லோகம். ஆழ்வார்கள்தஞ்செயலை விஞ்சியிறே அவள்வைபவம் இருப்பது. [பூதம்ஸரஸ்ய இத்யாதி] - நிரவதிகபகவத்ப்ரேமயுக்தரான ஆழ்வார்கள் பதின்மரையும், அவர்களுக்குஶேஷபூதரான மதுரகவி யதிவரர்களிருவரையும் தாம் நித்யஸேவை பண்ணும்படியை அருளிச்செய்கிறார். "மேவினே னவன்பொன்னடி மெய்ம்மையே" என்னுமவராகையாலே ஆழ்வாரைச் சொன்னபோதே அதிலே அவரும் அந்தர்ப்பூதர்.

[பூதம்] - பூதத்தாராகிறார் - "மாதவன்பூதம்" என்று நிரூபிக்கும்படியான மஹத்தையையுடையராய், மாமல்லையில் மாதவீகுஸுமத்திலே அவதரிக்கையாலே "கடல்மல்லைப்பூதத்தார்" என்று நிரூபகமானவரென்கை. 'ஸரஸ்ய' என்று - "மல்லையாய் மதிட்கச்சியூராய்" என்கிறபடியே மல்லைக்குஅநந்தரபாவியாக எடுப்பதான கச்சிவெஃகாவில் பொய்கையிலே, "பூவில்நான்முகனைப்படைத்த" என்கிறபடியே பொற்றாமரைப்பூவிலே அவதரித்த பொய்கையாரென்றபடி. மஹதாஹ்வயாராகிறார் - "மாடங்கள் சூழ்ந்தழகாய கச்சி" என்னும்படியான அத்தேசத்துக்கு ஸமமாயிருப்பதான மாடமாமயிலையில் மாவல்லிக்கேணியில் செவ்வல்லிப்பூவிலே அவதரித்து, "யானுமோர்பேயன்", "பித்தரென்றே பிறர்கூற" என்று பேசும்படியான பேயார். இவர்கள் மூவரும் பரவிஷயத்தில் பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளையுடையராயிறே இருப்பது. அதில் சரமதசையான பரமபக்தியையிறே, இவர் ப்ராப்தரானது. பட்டநாதராகிறார் - "வேதாந்தவிழுப்பொருளின்மேலிருந்த விளக்கை விட்டுசித்தன் விரித்தனன்" என்கிறபடியே - வித்வத்கோஷ்டியிலே சென்று அவர்களை வென்று, பரதத்வநிர்ணயமுமேகொ 'பட்டர்பிரான்' என்று பேர்பெற்றவரென்கை. இவரும் "சோராதகாதல்பெருஞ்சுழிப்பால் தொல்லைமாலையொன்றும் பாராதவனைப் பல்லாண்டென்றுகாப்பிடும்" என்னும்படி நிரவதிகபகவத்ப்ரேமயுக்தராயிறே இருப்பது. பட்டநாத, ஸ்ரீ என்று - பிந்நபதமாய், லக்ஷ்மீதுல்யையான ஆண்டாளென்னுதல்; அன்றிக்கே, பட்டநாதஸ்ரீயென்று - பெரியாழ்வார்க்கு ஸ்ரீயான ஆண்டாளென்று அநுஸந்திக்கவுமாம். "திருமகள்போல வளர்த்தேன்" என்றாரிறே. மேல் 'பக்திஸார' என்கிறது; அன்றிக்கே, பட்டநாதர்க்கநந்தரம் "ஸ்ரீபக்திஸார" என்று சொல்லுகிறது - "பெறற்கரிய நின்னபாதபத்தியான பாசனம், பிறர்க்கரியமாயனே எனக்குநல்கவேண்டுமே" என்று ப்ரார்த்தித்து பக்தியைப் பெற்று, 'பக்திஸாரர்' என்று நிரூபகமானவரென்கையைப் பற்றவாயிற்று; "பொன்னிசூழரங்கமேய பூவைவண்ண" என்றிறே இவருடைய முடிந்த அவாவுக்கு விஷயம் இருப்பது. குலசேகரராகிறார் - "அங்கையாழியரங்கனடியிணை, தங்குசிந்தைத் தனிப்பெரும்பித்தன்" என்னும்படி பெரியபெருமாள் விஷயத்திலே நிரவதிகப்ரேமத்தையுடையரான ஸ்ரீகுலசேகரப்பெருமாளென்கை; மாலடிமுடிமேல் கோலமாங் குலசேகரனிறே. "எம்பெருமான்தன் சரிதை செவியாற்கண்ணுற்பருகுவோ மின்னமுத மதியோமன்றே" என்றிறே பெருமாள்விஷயத்திலும் இவர் ப்ரேமம் இருப்பது. யோகிவாஹராகிறார் - முநிவாஹநரான பாண்பெருமாளென்கை. இவரும் "இலங்கைக்கிறைவன் தலைபத்துதிரவோட்டி யோர்வெங்கணையுய்த்தவ னோதவண்ணன், அரங்கத்தம்மான்" என்றும், "அணியரங்கனென்னமுதனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக்காணாவே" என்றும் அவ்விஷயத்தில் அஸ்தமிதாந்யஸ்பரிஹாவராயிருக்கும்படியாயிற்று. இவர்பக்தியும். பக்தாங்க்ரிரேணுவாகிறார் - "எல்லையிலடிமைத்திறத்தினிலென்றுமேவுமனத்தனும்" என்றும், "அடியார்க்கென்னையாட்படுத்தாய்" என்றுஞ் சொல்லுகிறபடியே எல்லையான ததீயசேஷத்வமே நிலைநின்ற ஸ்வரூபமென்று அறுதியிட்டு, அதுவே நிரூபகமான தொண்டரடிப்பொடியாழ்வாரென்கை; "துளபத்தொண்டாயதொல்சீர்த்தொண்டரடிப்பொடி" என்றும், "தொடையொத்ததுளவமும் கூடையும் பொலிந்துதோன்றிய தோள் தொண்டரடிப்பொடி" என்றும் தாமேஅருளிச்செய்தாரிறே. இவர்தாம் "தன்பால் ஆதரம்பெருகவைத்த வழகன்" என்று பேசுகையாலே பகவதப்ரஸாதாயத்தபக்தியையுடையவரென்னுமது தோற்றுகிறது. பரகாலயாகிறார் - "மருவலர்தமுடல் துணிய வாள்வீசும் பரகாலன்" என்கிறபடியே - பகவத்த்விட்டுக்களான பாஹ்யர்கள் கேளாராகையாலே அவர்களைத் தோள்வலியாலும் நிரஸித்து அதுக்குமேலே சாஸ்த்ரீயமார்க்க ப்ரவர்த்தகராய் வந்த சத்ருக்களை ஸ்வோக்திசாஸ்த்ரங்களாலும் நிரஸித்து, "ஸஹுவேஷேர | ஊணிணைவவவுஹணாநிடியெவாஸகாஒகவிஃ" என்னும்படி காயிககைங்கர்யங்களையும், "அரங்கமாலைச் சொல்லினேன் தொல்லைநாமம்", "என்னுடைச்சொற்களென்னும் தூயமாமாலைகொண்டு சூட்டுவன் தொண்டனேன்" என்றும் வாசிககைங்கர்யங்களையுஞ் செய்து போந்தவரென்கை. "காம்பினார் திருவேங்கடப்பொருப்ப நின்காதலையருளெனக்கு" என்று ப்ரார்த்தித்து, "பத்திமைக்கன்புடையேனாவதே பணியாயெந்தாய்" என்னும்படி ஆசைதான் பெரியதாயிற்று; "அரங்கமென்பதிவள்தனக்காசை" என்னக்கடவதிறே. ததீயசேஷத்வத்திலும "நின்திருவெட்டெழுத்தும் கற்று நானுற்றது முன்னடியார்க்கடிமை" என்றிறே இருப்பது.

யதீந்த்ரமிஸ்ராராகிறார் - "ஸம்ஸேவிதஸம்யமிஸப்தஸ்ரா" என்னும்படி யதிகளாலே ஸேவிக்கப்படும் எதித்தலைநாதனான எம்பெருமானாரென்கை. மிஸ்ரஸப்தம் - பூஜ்யவாசி; "ராமாநுஜாசார்யர்" என்னுமாபோலே. மிஸ்ராந் என்கிற பஹுவசநம் எல்லாரையுஞ் சொல்லுகிறதாய், இதிலே அநுக்த

ரான மதுரகவிகளையுங் கூட்டி அநுஸந்திக்கிறதாகவுமாம். "மதுரகவியாழ்வா ரெதிராசரா மிவர்கள்" என்றிறே சேர்த்தி இருப்பது. அன்றிக்கே, மிஶ்ரஶப்தம் - பெரியோரைச் சொல்லுகிறதாய், அத்தாலே சடகோபனைச் சிந்தையுள்ளே பெய்தற்கிசையும் பெரியவரான மதுரகவிகளைச் சொல்லுகிற தென்னுதல்; அன்றிக்கே, இவரும் பொன்னரங்கமென்னில் மயலேபெருகு மிராமாநுசனுய், ரங்கேஶகைங்கர்ய துரந்தரராயிறே இருப்பது; அச்யுதபதாம்புஜ யுக்மருக்மவ்யாமோஹம் இவர்க்கு முண்டிறே [ஸ்ரீமத்பராங்குஶமுநிம்] - "யதீந்த்ரஸ்ய" என்று - கீழ்உக்தரானவர்களெல்லாரும் ஒருதட்டும், ஸ்ரீமத்பராங்குஶமுநியென்கையாலே - ஆழ்வாரொருவரும் ஒருதட்டு மென்னுமது தோற்றுகிறது; எல்லாரையும் அவயவபூதராயுடையராயிறே ஆழ்வார்தாம் இருப்பது. ஸ்ரீமத் என்கையாலே - ஒழிவில்காலத்தில் ப்ரார்த்தித்த கைங்கர்ய ரூப ஸம்பத்தை யுடையவ ரென்கை. பராங்குஶ ரென்கையாலே-"மதாவலிப்தர்க்குஅங்குசமிட்டு"என்னும் படியிருக்கை; "வித்யாமதோ தநமதஸ்த்ருதீயோபிஜநோ மத:"* என்று சொல்லப்படுகிற முக்குறும்பையறுக்கும் அங்குஶமாயிறே இவர் இருப்பது. "ஓதியுணர்ந்தவர்முன்னு வென்சவிப்பார்மனிசர்" என்றும், தத்ராஹித்யமுடையவர்களை "முழுதுணர்நீர்மையினூர்" என்றும், "கொள்ளென்றுகிளர்ந்தெழுந்த பெருஞ்செல்வம் நெருப்பாகக் கொள்ளென்று தமமூடும்" என்றும், "பெருஞ்செல்வமு மவரே" என்றும், "பரமனைப்பயிலுந் திருவுடையார்யவரேலும்" என்றும், "சண்டாளசண்டாளர்களாகிலும் வலந்தாங்குசக்கரத்தண்ணல் மணிவண்ணற்காளென்றுள்கலந்தாரடியார்தம்மடியாரெம்மடிகள்" என்றும் இப்படி ஸ்வஸூக்த்யங்குஶத்தாலே அஜ்ஞருடைய மும்மதங்களை அருளென்னுந்தண்டாலே தமித்து ஓட்டினபடி. அன்றிக்கே, பராங்குஶரென்று - நிரங்குஶஸ்வதந்த்ரனை ஈஶ்வரனை ஸ்வஸூக்த்யங்குஶத்தாலே வஶீகரிக்கவல்ல ரென்னவுமாம்;"வலக்கையாழி யிடக்கைச்சங்க மிவையுடை மால்வண்ணனை,மலக்குநாவுடையேற்கு" என்று தாமும் அருளிச்செய்தார்; "வசீக்ருதஹரே: வசஸ்ஸம்பதா"என்று பின்புள்ளாரும் பேசினுர்கள். முநிஶப்தத்தாலே - மநநஶீலரென்கிறது. எண்ணுதனவெண்ணும் நன்முனிவரிறே. பரரக்ஷணமேயாயிற்று, இவர் சிந்தாமூலத்திலே சிந்தித்திருப்பது. ஸர்வேஶ்வரனுடையவும் ஸம்ஸாரிகளுடையவும் ஸம்ரக்ஷணத்திலேயாயிற்று, இவர் திருவுள்ளம் ஊற்றிருப்பது. "ஆளுமாளார்", "தனிமையும் பெரிதுனக்கு", "அவத்தங்கள்விளையுமென்சொற்கொள்" என்றும், "உலகினதியல்வே", "இவையென்னவுலகியற்கை" என்றும், இவர்கள் துர்க்கதியைக் கண்டு "மற்றுென்றில்லை சுருங்கச்சொன்னோம் மாநிலத்தெவ்வுயிர்க்கும்" என்று உபதேஶித்துத் திருத்திப்போருமவரிறே; இவரும், மதிநலம்அருளப்பெற்று ஆராதகாதலையுடையராயிறே இருப்பது. 'பரகாலயதீந்த்ரமிஶ்ராந் ஸ்ரீமத்பராங்குஶமுநிம்' என்கையாலே -"கலியுங்கெடுங் கண்டுகொண்மின்" என்று ஆழ்வாராலே இருவரும் ஸூசிதரென்னுமதுவும், "பராங்குஶபரகாலயதிவராதிகள்" என்கிற ப்ரபந்நஜநகூடஸ்தத்வமும் தோற்றுகிறது. "திரிவிக்கிரமனடியிணைமிசை"என்றும், "எந்நாளேநாம் மண்ணளந்தவிணைத்தாமரை" என்றும்நிர்த்தேஶித்து, "உன்னடிக்கீழமர்ந்துபுகுந்தேனே" என்றும், "உலகமளந்தபொன்னடியேயடைந்துய்ந்தேன்" என்றும், "ஶோகவிக்ராந்தசரணௌ ஶரணம் த்வம் ப்ரபத்ய விஹ" என்றுமிறே, இவர்கள் ப்ரபத்திபண்ணும் க்ரமம் இருப்பது. இந்தக்ரமம் ஆழ்வார்களெல்லார்க்கும் ஒக்குமிறே. "த்ரிவிக்ரமக்ரமாக்ராந்த", இவர்கள்தாம் ஸர்வேஶ்வரன்பக்கல் தாங்கள் கற்றதையிறே பேசி யோதச் சொல்லுகிறது. "பேசுமின் திருநாமமெட்டெழுத்தும்", "மனமுடையீர் மாதவனென்றேதுமின்" என்று. "த்வயார்த்தம் ஸூக்தம் நாந்யம் ஸம்ஶ்ரயேத்" என்று உடையவரும் பெரிய பெருமாளிடத்திலே கேட்டு உபதேஶித்தும், "பாருலகிலாசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள்கூறும்" என்றுபேசியும் வரம்பறுத்துச் செய்தருளினூரிறே. உடையவர் தாம் த்வயத்தை ஜ்ஞாநாதிகர்க்கு ப்ரீத்யதிஶயத்தாலே புந:புந: ப்ரஸாதிக்கையும், அஜ்ஞர்க்கு அவர்களநர்த்ததர்ஶநத்தாலே அருள்விஞ்சி ப்ரஸாதிக்கையுமாகிற ஆகாரத்வயம் உண்டிறே; எட்டு மிரண்டு மறிவித்தஎம்பெருமானூரிறே. "யதீந்த்ரஸ்ய ஸ்ரீஶ்வத்யாநாக்ஷமஶமாதிமீ" என்கையாலே திருவாய்மொழிமுதலான 'திவ்யப்ரபந்தங்களாலும் ஸ்ரீபாஷ்ய

---

* "த்ருதீயோபிஜநோ மத:" என்ற பாடம் லக்ஷணையால் பொருள் கொள்ளத் தகுந்தது.

யாதி ஸ்ரீஸூக்தியாலும் தர்சநத்தை நடத்திப்போருமவர்களாய், ஆழ்வாருக்கு சரணவத் பரதந்த்ரராய் “மாறனடிபணிந்துய்ந்தவன்” என்றும், “சடகோபர்தேமலர்த்தாட்கேய்ந் தினியபாதுகமா மெமந்தை யிராமாநுசனை” என்றும் ஆழ்வார்திருவடிகளுக்கு அத்யந்தம் அந்தரங்கரான ஆகாரத்தைப் பற்ற, அண்மையாக அருளிச்செய்தது. ஆழ்வானும் ‹‹ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே›› என்று அநந்தரஶ்லோகத்திலே ‹‹தத்ஸம்ஶ்ரயேம வகுளாபரணாங்க்ரியுக்மம்›› என்று ஆழ்வாரை அநுஸந்தித்தருளினர். ‹‹யதீந்த்ராய ஸம்ஶ்ரிஷே›› என்றிறே சேர்த்தி இருப்பது.

‹‹ஸித்தம் ஸாரஸ்ய›› என்று தொடங்கி - ஆழ்வார்களோடு அவர்களையும் ‹‹யதீந்த்ரஶ்ரீ ஸ்ரீஶத்வராஜக்ஷமாஶீநிஷ்ட›› என்று ஸஹபடித்தது - இவர்கள் ப்ராதாந்யம் தோற்ற. ‹‹யோநித்யம்›› ‹‹மாதா›› என்கிற இரண்டு தனியனாலும் - விசேஷித்து ஆசார்யர்கள் அநுஸந்தித்தார்கள், குருபரம்பரையிலும் த்வயத்திலும் எம்பெருமானை அநுஸந்திக்குமாபோலே. அதிலும் உடையவர் ப்ராதாந்யத்தாலே - யோகித்யம் முற்பட்டிருக்கும். ஆகையால், யதிவரசரமராய் அவரோடும் தசமரான தேசிகர்களையும், தேசிககுலகூடஸ்தரான சடாரிபுசரணங்களையும் ‘ப்ரணதோஸ்மிநித்யம்’ என்று நித்யஸேவைபண்ணும்படி சொல்லுகிறது. உபகாரத்துக்காகில் ‹‹தமேவஸநஶ:›› என்று ஒருகால் அநுஸந்திக்குமதே உள்ளது, ப்ராப்யபுத்யா ஸதாவிறே. ‹‹பாதாக்ஷாஸாதேஹ்ய நித்யோக்ரவ்யாவசேவ்ய ஸாவஹிதம்››, ‹‹ஸதா பாதாவலி›› என்று அங்கும் அநுவர்த்தநமுண்டாகவிறே அருளிச்செய்தது. ‘ப்ரணதோஸ்மி’ என்று - ததீயவிஷயத்தில ‹‹நிஹ்யதஸ்வ்யணதஸ்வ்யஹ:›› என்கிறபடியே த்ரிவிதகரணப்ரவணதையாலே ப்ரணாமம்பண்ணுகிறே னென்கிறார். இத்தால் - பக்திபாரவஶ்ய ப்ரபந்நரான ஆழ்வார்களும், அவர்களோடு விகல்பிக்கும்படியான ஸ்ரீபாஷ்யகாரரும், ஸர்வதாபஜநீய ரென்றதாயிற்று. ‹‹ஶம்ஶிவாக்ஷிஜ் ஜ்ஞதவோஹஸிதவேதாந்த மோக்ஷமார்க்கீநு ஶ்ரீநிவாஸகாருண்யேவாள ஸத்வதேஶ்ணாஸத்த்வவள யோகவிஶயோயதீந்த்ரம் தயாந்யாநஶேஷார்க்கீநு ஸ்ரீயஶேவிவஸாயாஞ்ஞீராஞ்ஞவேகாணநாயம்ஸ்ரயே›› என்றிறே ஆழ்வார்களைத் தொடங்கி ஸேவிக்கும்க்ரமம் இருப்பது.

பிள்ளைலோகம்ஜீயர் திருவடிகளே சரணம்.

வ்யாக்யாந ஸஹிதங்களான

திருவாய்மொழியின் ஈட்டுத்தனியன்கள்.

திருமலையாழ்வார் அருளிச்செய்தது.

நாதம் வந்தே முநீந்த்ரம் ததநு முநிவரம் யாமுநார்யம் மஹார்யம்
யோகீந்த்ரம் கூரநாதம் ததநுஜமபி ஸ்ரீபராஸர்யபட்டம் ।
வேதாந்தீந்த்ரம் முநீந்த்ரம் தமநு ச குருவர்யம் க்ருஷ்ணபாதம்
வந்தே லோகார்யமாதௌ குருமதவிஷயம் ஸ்ரீஸைலேஸம் ச தேவம் ॥

மணவாளமாமுநிகள் அருளிச்செய்தது.

திருவருள்மால் சேனைமுதலி சடகோபன் நாதமுனி சீருய்யக்கொண்டார் மணக்கால் நம்பி சென்றுமாளவந்தார், குருமாலாதரர் குருகைப்பிராற்கன்பாமெதிராசர் கோவிந்தர் கூரேசர் பட்டர் வேதாந்திமுநி, இருகண்ணர்க்கன்புடையநம்பிள்ளை யிவரீட்டளித்தற்கேய்ந்தமாதவர் பற்பநாப ரிவரருளாளர், திருவடியூன்றியதேவப்பெருமாள் கைக்கொண்டருளும் திருமலையாழ்வார் பதங்கள் முன்பென்னுட்சேர்ந்தனவே.

"நாதம் வந்தே" என்கிற தனியனிலும், "திருவருள்மால்" என்கிற திருநாமத்திலும், திருவாய்மொழியின் ஈட்டின் ஸம்ப்ரதாயத்தை அடியேதொடங்கித் திருவாய்மொழிப்பிள்ளை யளவும் தர்ஸிப்பித்தபடி சொல்லுகிறது. "நமோஸ்மதாசார்யபரம்பராப்ய:" "வந்தே குருபரம்பராம்" என்கிறபடியே, நாதாதியாக தேவாதிப ரளவு மூண்டானவர்களை "வந்தே" என்று - குருபங்க்திநமஸ்காரத்தைச் சொல்லுகிறது, 'நாதம்' இத்யாதியால்.

[அமரர்கள்தொழுதெழ] - கவிழ்ந்து 'உப்புச்சாறுகிளருவது எப்போதோ?' என்றுகிடக்கி தேவஜாதியானது எழுத்துவாங்கும்படியாகவாயிற்று தோளுந் தோள்மாலையுமாய் ஒருகடல் ஒ கடலை நின்று கடையுமாபோலே கடைந்தபடி. [தொழுதெழ] - குணங்களுக்குத் தோற்று "தொ தெழு" என்கிற தம்பாசுரமேயாய்விட்டது அழகுக்குத் தோற்ற அவர்களுக்கு மேன்கிறார். [அம பொழில்] - சேர்ந்த பொழில். [வளங்குருகூர்] - வளப்பத்தையுடைத்தாய், ஸம்பத்தையுடை தான திருநகரி. [சடகோபன்குற்றேவல்கள்] - இத்திருநகரிக்கு நிர்வாஹகரான ஆழ்வார் வாசி மான அடிமைசெய்தபடியாயிற்று இதுதான். பூர்ணவிஷயத்தில் வாசிகமான வ்ருத்திக்கு மேற்பட செய்யலாவதில்லையே; "தத்விப்ராஸோவிபந்யவ:" (தத்விப்ராஸோவிபந்யவ:) என்று நித்ய ஸூரிகளுக்கும் இதுவேயிறே வ்ருத்தி. [அமர்சுவையாயிரம்] - ரஸகநமாயாயிற்று ஆயிரந்தான் இருப்பது. இத்தால் - வாசிகமான அடிமை "முறை" என்று கார்யபுத்த்யா செய்யவேண்டா வேன்றபடி. [அவற்றினுளிவைபத்தும்] - *"விண்ணவரமுதுணவமுதில்வரும் பெண்ணமுதுண்ட' என்னுமாபோலே, அவைதன்னிலே ரஸகநமாயிருக்குமாயிற்று இத்திருவாய்மொழி. இவற்றை அப்யஸிக்க வல்லார் நித்யஸூரிகளோடொத்த உச்ச்ராயத்தை யுடையராய், தங்களுடைய ஜந்ம

நிகமம் - அமரர்கள் இத்யாதி. 'அமரரோடுயர்வில்' இத்யாதியைக் கடாக்ஷித்து ஸங்கதி - இத்தி வாய்மொழியை இத்யாதி. அறவைச்சிறை - தயநீயமான சிறை, துःகைகரூபமான சிறை யென்றுமாம்.

அம்ருதப்ராசநாநந்தரம் ஹர்ஷோத்பத்திகள் அமரர்களென்று திருவுள்ளம்பற்றி அருளிச்செய்கிறார் கவிழ்ந்து இத்யாதி. இத்தால் சாவாமைக்குப் பரிகரமான அம்ருதத்தில் இவர்களுக்கு உண்டான அபிநிவேச மும், இப்படிக்கொத்தவர்களையும் தனக்கு அடிமையாக்கிக் கொள்ளவல்ல அவனுடைய ஸௌந்தர்யாதிசயமும் சொல்லுகிறது. உப்புச்சாறு - அம்ருதம். கிளருவது - உத்பந்நமாவது. எழுத்துவாங்குகையாவது "வஹ்நிர்தேவோபவிஷ்டோ ஹ்யுபரி ஸுரமுநிவ்யாஸவாதாத்ரதீச்ச:। தஸ்மாத்ஸூர்யஸ்ஸுகோடூன் யமநியமதநூன் பாவயந்..." என்றதில் "உபரிஸுரமுநி" என்கிற தாஸ்யம். அதாவது ஸ்வாமிபேரை மார்விலே யெழுதிக்கொள்ளுகை. தோளுந் தோள்மாலையு மென்றது - அர்த்தாத் ஸித்தம். 'அலைகடல்' என்ற தாலே - அக்ஷோப்யதகருணைப்புதி ஸூசிதமாகையாலே அருளிச்செய்கிறார் - ஒருகடல் இத்யாதி. அந யப்ரயோஜநரான தமக்கன்றோ 'தொழுதெழு' என்னக்கூடுவது, ப்ரயோஜநாந்தரபரர்க்குக் கூடுமோ? என்ன, துணங்களுக்கு இத்யாதி. குற்றேவல் - குறுகின ஏவல், அந்தரங்க கைங்கர்யம். இத்திருவாய் மொழி இவருடைய குற்றேவலாம் ப்ரகாரத்தை அருளிச்செய்கிறார் - இத்திருநகரிக்கு இத்யாதி. வாசிகமாத்ரம் போருமோ? என்ன, பூர்ண இத்யாதி. உக்தமாவதாரஸ்ய - தத்விப்ராஸஸ்த்ராதி. ஸோதநே விப்ராஸ: - மேதாவிந: ஸாமவேதஸ்வரூபாஜ்ஞாநவந்த:. விபந்யவ: ஸூரய:. யந ஸ்தோதார:, வாசிகஸ்துதிர்யநப்ரஜ்ஞாநவந்த:. கார்யபு த்த்யா கர்த்தவ்யத்யா. இதினுடைய போக்யதையே இழியப்பண்ணு மென்றபடி. போக்யத்திலும் போக்யாம்சமாகச் சொன்னதுக்கு ஸம்வாதம் - விண்ணவர் இத்யாதி. தேவர்கள் அம்ருதத்தை புஜிக்க அந்த அம்ருதம் கோதாம்படி அதில்நின்றும் வந்துதோற்றின பெரியபிராட்டியாராகிற அம்ருதத்தை புஜித்த என்

---

* பெரியதிருமொழி, சு - க - உ.

மாகிற விலங்கு அறப்பெறுவர்கள். இப்பத்தைக் கற்றபோதே இவனை நித்யஸூரிகளிலே ஒருவனாக நினைப்பிடும், ஶரீர விஶ்லேஷம் பிறந்தால் போய்ப்புகு மித்தனை; ராஜா ஒருவனுக்கு நாடிட்டால் க்ரமத்திலே போய்ப்புகுமித்தனையிறே. ராஜபுத்ரன் தலையிலே முடியைவைத்து, பின்னை விலங்குவெட்டிவிடுமாபோலே, நித்யஸூரிகளிலே ஒருவராம்படியான தரத்தைப் பெற்று, பின்னை ஸம்ஸாரநிகளவிச்சேதத்தைப் பெறுவர்கள்.(*அன்றியே,[அமரரோடு உயர்வில்சென்று]-ஆதிவாஹிகரோடே விரஜையிலே சேன்று. [அறுவர் தம்பிறவியஞ்சிறையே] - ஸூக்ஷ்மஶரீரவிதூநநம்பெறுவர்.) "த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி" (த்யக்த்வாதேஹம்புநர்ஜந்மநைதிமாமேதி) என்று அருளிச்செய்த அதுவே பலமாகக்கடவது.

முதற்பாட்டில், ஸுலபனென்றார்; இரண்டாம்பாட்டில், கீழ் ப்ரஸ்துதமான ஸௌலப்யத்தை ஸப்ரகாரமாக அருளிச்செய்தார்; மூன்றாம்பாட்டில், அவனுடைய அவதாரரஹஸ்யம் ஒருவர்க்கும் அறியநிலமல்ல வென்றார்; நாலாம்பாட்டில், அப்படிகள்தான் ஆஶ்ரிதர்க்கு அறியலாம், அநாஶ்ரிதர்க்கு அறியப்போகாது என்றார்; அஞ்சாம்பாட்டில், இப்படிப்பட்டவனை அவன் அருளிச்செய்த பக்திமார்க்கத்தாலே ஆஶ்ரயியுங்கோ ளென்றார்; ஆறாம்பாட்டில், ஆஶ்ரயணீய வஸ்து இன்னதென்றும்,ஆஶ்ரயிக்கும் ப்ரகாரம் இன்னதென்றும் அருளிச்செய்தார்; ஏழாம்பாட்டில், நீங்கள் மந்தாயுஸ்ஸுக்களாகையாலே விளம்பிக்கவொண்ணாது, கடுக ஆஶ்ரயியுங்கோ ளென்றார்; எட்டாம்பாட்டில், ஆஶ்ரயிக்கவே விரோதிகளடங்கலும் நஶிக்கு மென்றார்; ஒன்பதாம்பாட்டில், ப்ரஹ்மேஶாநாதிகளுக்கும் காரணபூதனானவன் வந்து அவதரிக்கைக்கு ஹேது அருளிச்செய்தார்; பத்தாம்பாட்டில், இப்படி ஸுலபனானவனை த்ரிவிதகரணங்களாலும் அநுபவிக்கப் பாரித்தார்; இத்தை அப்யஸித்தார்க்கு பலஞ்சொன்னார் நிகமத்தில். (கக)

ஸ்வாமியானவனே என்றபடி. அமரரோடு உயர்விற்சென்று - உயர்வில்வந்தால், அமரரோடொத்த உச்ச்ராயத்தையுடையராய். சிறைக்கு அழகாவது - 'நல்லபாம்பு' என்னுமாபோலே க்ரூரமாயிருக்கை. பிறவியற்று அமரரோடுயர்விற்சென்று என்னவேண்டாவோ ? என்ன, இப்பத்தைக்கற்ற இத்யாதி. ஶரீரவிஶ்லேஷத்தை உடனே பிறப்பிக்க வொண்ணாதோ? என்ன, ராஜா இத்யாதி. இவன்பக்கல் ஆதரத்தாலே நித்யஸூரிகளிலே ஒருவனாக நினைப்பிடுகையன்றிக்கே, ஸம்ஸாரத்தினுடைய அநர்த்தகரத்வத்தாலும் நினைப்பிடுமென்னுமத்தை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச் செய்கிறார் - ராஜபுத்ரன் இத்யாதி. தரம் - வரிசை. அவதாரஸௌலப்ய ப்ரதிபாதகமான இத்திருவாய்மொழி கற்றவர்களுக்கு ஸ்ரீ கீதையிற் சொன்னதுவே பலம் என்கிறார் - த்யக்த்வேதி. தேஹம் த்யக்த்வா மாமேதி ஜந்ம புநர்நைதீத்யந்வய:. ஸ்வயம்ஜ்ஞாந: ஸுகவேஶவஶவிவித:. ஶ்ரோத்ருபுத்தி ஸமாதாநார்த்தம் பாட்டுக்கள்தோறும் ப்ரமேயத்தை அருளிச்செய்கிறார் - முதற்பாட்டில் இத்யாதி. அமரர்கள் தொழுதெழ இத்யாரப்ய, பத்தும்வல்லார் உயர்வில் அமரரோடு சென்று தம்பிறவி யஞ்சிறை யறுவர் இத்யந்வய:. (கக)

த்ரவிடோபநிஷத் ஸங்கதி:—ஏவமுக்தவ்யூஹ ஸௌலப்ய ...

த்ரவிடோபநிஷத் தாத்பர்யரத்நாவளி:— ...

---

* குண்டலிதக்ரந்தம் சில ஸ்ரீகோஶங்களில் இல்லை யென்பர்.

ஈடு.—பரத்வத்தையும் ஸுஜநீயதையையும் ஸௌலப்யத்தையும் அநுபவித்து ஹ்ருஷ்டராய்த் தாமாய்ப் பேசினார் கீழ்; இதில், தாமானதன்மை யழிந்து ஒரு பிராட்டி தசையை ப்ராப்தராய், ஹர்ஷத்தாலே சொல்லும் பாசுரம் போய் ஆற்றாமையாலே சொல்லும் பாசுரமாய்ச் செல்லுகிறது; "அயமபரஃகாரக நியமஃ" (அயமபரஃகாரக நியமஃ) என்னுமாபோலே, கீழ்ப் போந்த ரீதி யொழிய வேறேயொன்றாயிறே இருக்கிறது. முற்காலத்திலே அல்பம் விவக்ஷிதனா யிருப்பானொருவன், 'வீதராகரா யிருப்பார் பரிக்ரஹித்துப் போருகிற தொன்றா யிருந்தது தத்த்வபரமாக அடுக்கும்' என்று இத்திருவாய்மொழியளவும் வர அதிகரித்து, இத்திருவாய்மொழியளவிலே வந்தவாறே 'இது காமுகவாக்யமா யிருந்ததீ!' என்று கைவிட்டுப்போனானும்; "நிதித்யாஸிதவ்யஃ" (நிதித்யாஸிதவ்யஃ) என்று விதிக்கிற பகவத்காம மென்று அறிந்திலன் பாக்யஹாநியாலே. "'அயர்ப்பில னலற்றுவன் தழுவுவன் வணங்குவன்" என்ற இது அநுபவிக்கிறார்' என்று பிள்ளான் பணிக்குமென்ற இது, இவருக்கு முனியேநான்முகனளவும் உள்ளது மாநஸாநுபவ மாகையாலே அத்தோடே சேரவிழுமிறே; அநுபவிக்கப் பாரிக்கிறா ரேன்கிற விடம், இத்தோடே போரச் சேர்ந்திருக்கும். திருவுலகளந்தருளினவனுடைய திருவடிகளை அநுபவிப்பதாக ஒருப்பட்டுக் கட்டிக் கொண்டார்; அது ஒரு காலவிசேஷத்திலேயாய், தாம் பிற்பாடராய்த் தோற்றுகையாலே, துணுக்கென்று தாமான தன்மை யழிந்து ஒருபிராட்டி தசையை ப்ராப்தராய், ஹர்ஷத்தாலே சொல்லும் பாசுரம் போய் ஆற்றாமையாலே சொல்லும் பாசுரமாய்விட்டது."ஆர்த்தோவாயதிவாத்ருப்தஃ" (ஆர்த்தோவாயதிவாத்ருப்தஃ) என்கிற விஷயத்தை அநுபவித்த இவர்க்கு இழவு வருகைக்கு ப்ரஸங்கம் என்? என்னில்;-'ஆமத்திற் சோறு வாயகம்' என்னுமத்தாலே நிதாநஜ்ஞரான பிஷக்கு

அஞ்சிறையமடநாரை ப்ரவேசம். ஸங்க்ரஹஸங்கதி - பரத்வத்தையும் இத்யாதி. தாமானதன்மை- புருஷபாவம். ஆற்றாமை - விரஹக்லேசம். ரீதிபேதத்துக்கு த்ருஷ்டாந்தம் - அயமபர இத்யாதி. இது மஹாபாஷ்யவாக்யம்; கர்மகர்த்ருகரணாதிரூபேண காரகம் அநேகவிதமிறே; அங்கே "அபரஃகாரக நியமஃ" என்று பூர்வகாரகநியமாபேக்ஷயா உத்தரகாரகநியமம் விலக்ஷணமென்று சொல்லிற்றிறே; அது போலே என்றபடி. ரீத்யந்தரமென்னுமதுக்கு ஐதிஹ்யம் - முற்காலத்திலே இத்யாதி. விவக்ஷிதன் - வித்வான். தத்த்வபரமான இதிலே காமுகவாக்யமென்று விப்ரதிபத்தி பண்ணுகைக்கு அடி யெது? என்ன, நிதித்யாஸிதவ்யஃ இத்யாதி. ப்ருஹதாரண்யகே - மைத்ரேயீப்ராஹ்மணே - "ஆத்மாவா அரே த்ரஷ்டவ்யஃஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்யஃ". "அரே அயமாத்மா ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்யோ த்ரஷ்டவ்யஃ" இதி ஶ்ருதயஃ. பக்தி சார்யமான உக்தியைக் காமுகவாக்ய ரூபேண சொன்னது - புருஷன் புருஷனைக் கண்டு ஸ்நேஹிக்குமதிலும் "காமிநீ ஷண்டம் பவேத்" என்கிறபடியே ஸ்த்ரீக்குப் புருஷவிஷய ஸ்நேஹம் பள்ளமடையாகையாலே தாத்ருஶமான தம்முடைய அதிமாத்ரப்ராவண்ய ஸூசகமாகையாலும், குடஜிஹ்விகாந்யாயேந விஷயப்ரவணரான ஸம்ஸாரிகள் பரிக்ரஹித்து உஜ்ஜீவிப்பர்க ளென்னுமத்தாலும். விஸ்தரஸங்கதி - அயர்ப்பிலன் இத்யாதி. ஆற்றாமையாலே சொல்லும் பாசுரமேது? என்ன, அயர்ப்பிலன் இத்யாதி என்னுதல். அத்தோடே - பிள்ளான் பணித்த மாநஸாநுபவத்தோடே. இத்தோடே - இத்திருவாய்மொழியோடே. போரச்சேர்ந்திருக்கும் - மாநஸாநுபவ மாகையாலே மாநஸமாக அநுபவித்து பாஹ்யஸம்ஶ்லேஷாபேக்ஷை பிறந்து ததலாபத்தாலே தாமானதன்மை யழிந்து என்று அத்யாஹரித்து நிர்வஹிக்கவேண்டும் பிள்ளான் நிர்வாஹத்தைப் பற்றப் போரச்சேரு மென்றபடி. "தழுவுவன் வணங்குவன்" இத்யாதிக்கு வர்த்தமாநார்த்தங் கொள்ளுகிறதும் அமுக்யமிறே. போரச்சேர்ந்திருக்கு மென்றதைக் காட்டுகிறார், திருவுலகளந்தருளின இத்யாதி. துணுக்கென்று-திடுக்கிட்டு, பயப்பட்டு, கலங்கி என்றபடி. "ஆர்த்தோவாயதிவாத்ருப்தஃ - அரிஃ ப்ராணாந் பரித்யஜ்ய ரக்ஷிதவ்யஃ க்ருதாத்மநா" விபீஷணம்-நியமாரபணைஷிஷீ. பெருமாள் திருவுள்ளத்தாலே ஆர்த்தனுமாம், முதலிகள் திருவுள்ளத்தாலே த்ருப்தனுமா மென்றபடி. அநுபவித்த இவர்க்கு-அநுபவித்து அநுபவவிசேஷத்தையாசைப்பட்ட இவர்க்கு. இழவு-விஶ்லேஷவ்யஸநம். ஆமம்-அஜீர்த்தி. போநின்றன்-

கள் ஹேஜை நிரோயம்பண்ணுமாபோலே, மேல்வரும் அநுபவங்கள் ஸாத்மிக்கைக்காக நாலடிபேர நின்றான்; மருத்துவனாய் நின்ற மாமணிவண்ணனிறே. அநந்தரம் கலங்கினார். மயர்வறமதிநல மருளப்பெற்றவரிறே இப்படி கலங்கினார்; அவன்தானே கொடுத்த அறிவும் விஶ்லேஷத்தில் அகிஞ்சித்கரமாம்படியிறே அவனுடைய வைலக்ஷண்யம்; "தத்தஸ்ய ஸத்ருஶம் பவேத்" (தத்தஸ்ய ஸத்ருஶம்பவேத்) என்றிருந்தவள்தானே வேண்யுத்க்ரதநாதிகளிலே ஒருப்பட்டாளிறே. "ஹம்ஸகாரண்டவாகீர்ணாம் வந்தே கோதாவரீம் நதீம்" (ஹம்ஸகாரண்டவாகீர்ணாம் வந்தே கோதாவரீம்நதீம்) என்றும், "அஶோகஶோகாபநுத ஶோகோபஹதசேதஸம்" (அஶோகஶோகாபநுத ஶோகோப ஹதசேதஸம்) என்றுமிறே அவர்கள் வார்த்தையும். பிராட்டிமார் தசை தான் உண்டாகிறபடி யெங்ஙனே? என்னில்;—அநந்யார்ஹஶேஷத்வத்தாலும் அநந்யஶரணத்வத்தாலும், அந்வயத்தில் தரித்தும், வ்யதிரேகத்தில் தரியாதொழிகையாலும், தததேக போகராகையாலும், அவன் நிர்வாஹகனாக இத்தலை நிர்வாஹ்யமாகையாலும், பிராட்டிமார்தசை யுண்டாகத் தட்டில்லை. ஆனால், பிராட்டிதானாகப் பேசுவானேன்? என்னில்;—தாமரை திருவடி

போனான். இவன் பிஷக்கோ? என்ன, **மருத்துவன்** இத்யாதி. ஆசார்யாதிரூபேண ஸம்ஸாரபிஷக்காய் நின்ற நீலமணிபோன்ற நிறத்தையுடையவன். **அநந்தரம்**-பேசநின்ற அநந்தரம். **கலங்கினார்**-கலங்கிப் பிராட்டி தசையை ப்ராப்தராய்த் தூதுவிடுகிறார். "ஹந்த ஜ்ஞாநாநவிஷ்யந்த: । அஹிம்ஸ்ரியஜ்ஞாநாவஸ்தேந:" என்றிருக்கவேண்டாவோ? ஜ்ஞாநாதிகரான இவர் கலங்கலாமோ? என்ன, **மயர்வற** இத்யாதி. பக்திரூபாபந்ந ஜ்ஞாநத்தையுடைய ராகையாலே கலங்கினாரென்றபடி. பக்திமாத்ரமன்றிக்கே தத்வைலக்ஷண்யமும் கலங்கப் பண்ணுமென்கிறார் - **அவன்தான்** இத்யாதி. **அகிஞ்சித்கரமாகை** - "தத்தஸ்ய ஸத்ருஶம் பவேத்" என்றிருக்கும்படி பண்ணுமை. இப்படி ஜ்ஞாநாதிகராய்க் கலங்கின பேருண்டோ? என்ன, தத்தஸ்ய இத்யாதி. ஸுந்தரகாண்டே ஏகோநசத்வாரிம்ஶே ஹநூமந்தம் ப்ரதி ஸீதா; "ஶரேஸ்து ஸங்குலாம் க்ருத்வா லங்காம் பரபலார்தந: । மாம் நயேத்யதி காகுத்ஸ்த: தத்தஸ்ய ஸத்ருஶம் பவேத்". ததைவ அஷ்டாவிம்ஶே "இதீவ தேவீ பஹுதா விலப்ய ஸீதாய வேண்யுத்க்ரதநம் க்ருஹீத்வா । உத்பத்ய வேண்யுத்க்ரதநேந ஶீக்ரம் அஹம் கமிஷ்யாமி யமஸ்ய மூலம்". 'தத்தஸ்ய ஸத்ருஶம் பவேத்' என்றது-வேண்யுத்க்ரதநாநந்தரத்திலே யாகிலும், வேண்யுத்க்ரதநாத்பூர்வமும் இந்தநினைவு உண்டாகலாமாகையாலே விரோதமில்லை. கலங்கி, பக்ஷிகளைத் தூதுவிட்டதுக்கு த்ருஷ்டாந்தத்வயம் - ஹம்ஸ இத்யாதி. "க்ஷிப்ரம் ராமாய ஶம்ஸ த்வம் ஸீதாம் ஹரதி ராவண:" இத்யுத்தரார்த்தம். இதம் ஆரண்ய காண்டே கோதாவரீம்ப்ரதி, ராவணநீதஸீதாவாக்யம். தத்ரைவ ஸீதாவியோக ஸந்தப்தோ ராம: - அஶோக இத்யாதி. "த்வந்நாமாநம் குரு க்ஷிப்ரம் ப்ரியாஸந்தர்ஶநேந மாம்" இத்யுத்தரார்த்தம். ஹம்ஸேத்யாதிக்கு - நதிக்குப் பக்ஷிகளைக்கொண்டு தேசாந்தரத்தேயாகிலும் அறிவிப்பிக்கைக்கு ஶக்தி யுண்டென்றிருக்கிறாளாயிற்று, கலக்கத்தாலே யென்று கருத்து. **அஶோகேத்யாதிக்கு** - ஒருவன் அஶோகனாயிருக்கைக்கு பலம், பிறர்ஶோகத்தைப் போக்குகை யென்றிறே தாமிருப்பதென்று கருத்து. பகவத்விஶ்லேஷ கார்யங்கள் பிராட்டிமாருடைய தர்மமிறே. அது இவர்க்குக் கூடும்படி யெங்ஙனே? என்னும் ஆக்ஷேபத்தை அநுவதித்துப் பரிஹரிக்கிறார்-**பிராட்டிமார் தசை** இத்யாதி. "அநந்யதைவகஸ்ய" இத்யாதியாலே அநந்யார்ஹ ஶேஷத்வமும், "தத்தஸ்ய ஸத்ருஶம் பவேத்" "தவஸ்ஶுஶ்ரூஷணாஜ்ஞாநாத்" இத்யாதியாலே அநந்யஶரணத்வமும், "நைஷா பஶ்யதி" "யந்த்ரா: பஶ்யந்தி நேநாஜ்யே" இத்யாதியாலே தததேக போகத்வமும், "யஸ்த்வயா ஸஹ ஸ ஸ்வர்க:" "நச ஸீதா" இத்யாதியாலே அந்வயத்தில் தரிப்பும் வ்யதிரேகத்திலே தரியாமையும், "அநந்யா ராகவேணாஹம்" இத்யாதியாலே தததேகநிர்வாஹ்யத்வமும் பிராட்டிக்குக் கண்டுகொள்வது. சேதநர்க்கும் இந்த குணஷட்கம் திருமந்த்ரத்திலே கண்டுகொள்வது. ஆனாலும், கிஞ்சித்ஸாத்ருஶ்யங்கொண்டு இப்படி சொல்லலாமோ? என்கிற ஶங்கையை அநுவதித்து ஸௌஸாத்ருஶ்யத்தாலே சொல்லலாமென்று பரிஹரிக்கிறார் - **ஆனால்** இத்யாதி. பிராட்டி தானா

களுக்குப் போலியாயிருக்க, " வையங்கொண்ட தடந்தாமரை " என்று - தாமரையாகவே திருவடிகளைப் பேசுகிறாப்போலே, இங்கும் பிராட்டியாகப் பேசுகிறது ; முற்றுவமை யிருக்கிறபடி. ராஜருஷி, ப்ரஹ்மருஷியானபின்பு க்ஷத்ரியத்வம் பின்னாட்டிற்றில்லையிறே ; எதிர்த்தலையில் பும்ஸ்த்வத்தையழித்துப் பெண்ணுடை யுடுத்தும்படியிறே அவனுடைய புருஷோத்தமத்வம் இருப்பது. கூடுமிடம் - குறிஞ்சி ; அதுக்கு பூதம்-ஆகாசம் ; பிரியுமிடம் - பாலை ; அதுக்கு பூதம் - தேஜஸ்ஸு; ஊடலுக்கு ஸ்தாநம்-மருதம்; அதுக்கு பூதம் - வாயு ; பிரிந்தார் இரங்குமிடம் - நெய்தல்; அதுக்கு பூதம் - ஜலம் ; பிரிந்தார் இரங்குவது - நெய்தல்நிலத்திலே யாகையாலே ; பிராட்டி, தானும் தன் பரிகரமுமாக லீலோத்யாநத்திலே புறப்பட்டாளாய், தோழிமார் பூக்கொய்கையிலே அந்யபரைகளாக, நாயகனும் தன்னேராயிரம் பிள்ளைகளும் தானுமாக வேட்டைக்குப் புறப்பட்டுவர, ஏவுண்ட ம்ருகம் இவனை இந்த உத்யாநத்திலே தனியே கொண்டுவந்து மூட்டி, அது மறைய, தைவயோகத்தாலே இருவர்க்கும் ஸம்ஶ்லேஷம் ப்ரவ்ருத்தமாய், கூட்டின தைவம் பிரிக்கப் பிரிந்து, ' இனி இரண்டு தலையையும் அழித்தாகிலும் கிட்டவேணும் ' என்னும் ஆற்றாமை பிறந்து, தன் பரிஸரத்திலுள்ளார் " எம்மின்முன் னவனுக்கு மாய்வர் " என்கிறபடியே தளர்ந்து, கால்நடை தருவாரில்லாமையாலே அப்பரிஸரத்திலே வர்த்திக்கிற சில திர்யக்குக்களைப் பார்த்து, 'இவை வார்த்தை சொல்ல

கப் பேசுகிறதென்றது - " கிளிமொழியா ளலற்றியசொல் " என்றத்தைப் பற்ற. வையம் இத்யாதி - பூமியெல்லாம் அளந்துகொண்ட விஸ்த்ருதமான தாமரைபோன்ற திருவடிகளுக்கே. அங்குத்தான் எப்படியென்ன, முற்றுவமை இதி. முற்றுவமை - ஸௌஸாத்ருஶ்யம்; பூர்ணோபமை யென்றபடி. புருஷராகையாலே பும்ஸ்த்வம் பின்னாட்டாதோ ? என்ன, ராஜருஷி இத்யாதி. ' விஶ்வாமித்ரனுக்கு ' என்று கூட்டுவது. ஸ்த்ரீத்வம் ஸித்தமானாலன்றோ தத்விஶேஷமான பிராட்டிதசை கூடுவது ? இவர்க்கு ஸ்த்ரீத்வதஶாப்ராப்தி ஹேதுவேது? என்ன, எதிர்த்தலை இத்யாதி. " ஸஹவாஸோ ஹி ... ஸாக்ஷாத் ... ஸ்த்ரீத்வம் ... " " ... " என்னக்கடவதிறே. " பாண்டவானாம் ... " என்று த்ரௌபதியினுடைய ப்ராக்ருதஶரீரம் அவஸ்த்தாந்தரத்தையுண்டாக்கினால் பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரியாய் அப்ராக்ருதமான வடிவழகு பண்ணச் சொல்லவேண்டாவிறே இதிபாவ:. பெண்ணுடையுடுத்தும்படி - ஸ்த்ரீவஸ்த்ரதாரணம் பண்ணும்படி. அந்த:புரத்தில் வர்த்திக்கிற இப்பிராட்டிக்குத் தூது விடுகைக்குப் பக்ஷிகளுண்டோ ? என்ன, தமிழர் ஸமாதியாலே கூடுமென்கிறார் - கூடுமிடம் இத்யாதி. அதாவது - நாயகவிஶ்லேஷஜநித ஶோகாவிஷ்ட நாயிகாஸ்த்தாநம் ஸமுத்ரப்ராந்தம் என்கிற தமிழர் ஸமாதியாலே, தானிருந்த இத்தேசத்தில் வர்த்திக்கிற பக்ஷிகளைத் தூதுவிடுகிறாளென்றபடி. இதுக்கு ஸம்வாதமாக " போக்கெல்லாம், பாலைபுணர்தல் நறுங்குறிஞ்சி - யாக்கஞ்சேர்ந்தூடலணிமருதம், நோக்குங்கால், இல்லிருக்கைமுல்லை யிரங்கல் நறுநெய்தல், சொல்லிருக்குமைம்பால் தொகை" இத்யாதியைத் திருவுள்ளம்பற்றி ப்ரஸங்காத் ஸ்த்தலாந்தரங்களையும் நிரூபிக்கிறார் - கூடுமிடங்குறிஞ்சி இத்யாதியாலே, போக்கெல்லா மென்றது- புணர்ந்துடன் போக்கென்றும், தனிப்போக்கென்று முண்டாகையைப் பற்ற. " கொடுங்காற்சிலையர் " என்கிற பாட்டிலே தனிப்போக்கையும், " நானிலம் வாய்க்கொண்டு " என்கிற பாட்டிலே புணர்ந்துடன்போக்கையும் அருளிச்செய்தாரிறே. காடுசார்ந்த நிலம் - முல்லை. நாடுசார்ந்த நிலம் - மருதம். மலைச்சார்வு - குறிஞ்சி. கடற்சார்வு-நெய்தல். நீரின்றி வேனில் தெறுநிலம் - பாலை. வேனில் - வெய்யில். தெறு - ஸம்ஹரிக்கிற. ஊடல்-ப்ரணயகலஹம். நெய்தல் நிலத்திலே யாகையாலே என்றதுக்கு - 'கண்ணுற்கண்டவற்றை யெல்லாம்' என்றத்தோடே அந்வயம். இவளுடைய விஶ்லேஷந்தான் ஸம்ஶ்லேஷ பூர்வகமாயல்லது இராமையாலே ஸம்ஶ்லேஷம் ப்ரவ்ருத்தமானபடியென்? என்ன, - காந்தர்வவிவாஹப்ரக்ரியையாலே அருளிச்செய்கிறார் - பிராட்டிதானும் இத்யாதி. உத்யாநமென்றது - "புன்னையம்பொழில்சூழ்" என்றத்தைப்பற்ற. ஏவுண்ட-எய்யப்பட்ட. தோழிமாரைத் தூதுவிட்டாலோ வென்ன, எம்மின்முன் இத்யாதி. ஈடுபடுகிற எனக்குமுன்னே ' இவளுக்கு அவனுதவப்பெறு

மாட்டாது' என்னுமது அறியாதே. 'இவற்றுக்குப் பக்ஷபாத முண்டாயிருந்ததாகையாலே கடுகப் போய் நங்கார்யம் செய்யவற்று' என்று கமநஸாதநமான பக்ஷபாதமே பற்றாசாக, ராவணமாயை யால் வரும் அதிஶங்கையு மில்லாமையாலே கண்ணால் கண்டவற்றையெல்லாம் தூதுவிடுகிறாள்; "சக்ரவர்த்தித்திருமகன் திருவவதரித்த பின்பு வாநரஜாதி வீறுபெற்றாற்போலே காணும், ஆழ்வார்கள் திருவவதரித்துத் திர்யக்ஜாதி வீறுபெற்றபடி" என்று பட்டர் அருளிச்செய்வர். இனி, இவர்க்கு யாத் ருச்சிக ஸம்ஶ்லேஷமாவது - அநாதிகாலம் இவரைத் தன்னோடே சேர விடுகைக்கு அவஸர ப்ரதீக்ஷ ராய்ப்போந்தவன் இவர்பக்கலிலே அப்ரதிஷேத முண்டாவதொரு அவகாஶம் பெற்று, அவன் மயர் வறமதிநலமருளபெற்ற இது. விஶ்லேஷமாவது - அவன்கொடுத்த ஜ்ஞாநம் பேற்றோடே தலைக் கட்டப்பெறாமை. தூதுவிடுகைக்குப் பற்றாசுதான் ஏது? என்னில்;-தன்மேன்மையாலே இத்தலையில் தண்மைபாராதே வந்து கலந்தான்; கிட்டினவாறே தோஷ தர்ஶநத்தைப் பண்ணினான்; பிரிந்த வளவிலே 'இதுவன்றோ இருந்தபடி' என்று அநாதரித்தான்; தோஷதர்ஶநம் பண்ணுமளவே யன்றிக்கே, தமக்கு அபராதஸஹத்வ மென்றொரு குணமுண்டு நிரூபகமா யிருப்பதொன்று; அத்தை யறிவிக்க வருமென்று அந்த அபராதஸஹத்வம் பற்றாசாகத் தூதுவிடுகிறாள்.

முதற் பாட்டு.

அஞ்சிறையமடநாராய்! அளியத்தாய்நீயும்நின்
அஞ்சிறையசேவலுமாய் அவாவென்றெனக்கருளி
வெஞ்சிறைப்புள்ளுயர்த்தார்க்கு என்விடுதூதாய்ச்சென்றக்கால்
வன்சிறையிலவன்வைக்கில் வைப்புண்டாலென்செய்யுமோ?

ஆ.—எம்பெருமானோடு கலந்து பிரிந்தாளொரு பிராட்டி, தன்முன்னே ஸம்ஶ்லே ஷித்து வர்த்திக்கிற நாரைகளைக் கண்டு, தான் வ்யஸநாதிஶயத்தாலே அறிவிழந்திருக்கையால், 'தன்வார்த்தைகளை அறியா' என்னுமிடத்தை விவேகிக்கமாட்டாதே, அவற்றினுடைய ஸம்ஶ் லேஷ ஸ்வபாவத்தைக் காண்கையாலே தன்னோபாதி அளவுடையவாகக் கொண்டு, அவற்றைக் குறித்து, தன்னளவிலே வார்த்தை சொல்லுகிறவிடத்தில் சேவலைக்குறித்துச் சொல்லுகை ஈடல்

கிறதில்லை' என்று அவன் பொருட்டு ஈடுபடா நிற்பர்கள். செய்யவற்று - செய்ய ஸமர்த்தம். பக்ஷபாத மேன் கிறது - சாடு, பக்ஷாப்யாம் கமநம். "பத்லு - கதௌ" இதிஹி தாது:. தன் ஆற்றாமை அறிவிக்கலாம்படி தன் பரிஸரத்திலே வர்த்திக்கிற பக்ஷபாதம். பற்றாசாக-அவலம்பநமாக. பிராட்டியைப்போலே ஒன்றைத் தூதுவிட் டால் அம்மையாதோ? என்ன, ராவணமாயை இத்யாதி. ரஸோக்தி - சக்ரவர்த்தி இத்யாதி. யாத்ருச்சிக ஸம்ஶ்லேஷத்துக்கு ஸ்வாபதேஶம் அருளிச்செய்கிறார் - இனி இவர்க்கு இத்யாதி. ஸ்வாபதேஶ ப்ரஸங்கத் திலே 'பிராட்டிதானும்' இத்யாதிக்கு ஸ்வாபதேஶம் - இச்சேதநன் "தூர்த்தரோடிசைந்தகாலம்" என்கிற படியே தூர்த்தரோடேகூட "பெய்தகாவு" என்கிற லீலாவிபூதியிலே அற்பசாரங்களவை சுவைத்தகன்ற வளவிலே, ஸர்வேஶ்வரன் "தன்னேராயிரம்பிள்ளைகள்" என்கிறபடியே ஸாம்யாபந்நரான நித்யஸூரிகளும் தானுமாக "காட்டைநாடித்தேனுகனும்" என்கிறபடியே விரோதி நிரஸநார்த்தமாக லீலாவிபூதியிலே அவ தரித்து இவர்பக்கல் அத்வேஷமாகிற அவகாஶம் பெற்றவாறே அங்கீகரிக்கையென்று. பற்றாசு ஏது? என் கிற ஶங்கைக்குப் பரிஹாரம் அபராத ஸஹத்வமென்னப் பார்த்து, பிரிகைக்கு ஹேது அபராதமென்று விவ க்ஷித்து, அபராதமுண்டானால் முன்பு கலப்பானென்? என்கிற ஶங்கையிலே அருளிச்செய்கிறார்-தன் மேன்மை யாலே இத்யாதி. மேன்மை - ஸ்வாதந்த்ர்யம். கலந்தவன் பிரிவானென்? என்ன, கிட்டின இத்யாதி. தோஷ தர்ஶநத்தைப்பண்ணி - பிரிந்தானென்று கூட்டுவது. "என் பிழைத்தாள் - தகவினுக்கு" என்றத்தைப் பற்ற, அபராத ஸஹத்வம் என்றது.

லாமையாலே, அத்தைக்குறித்துச் சொல்லுகிற வார்த்தையையும், ஔசித்யத்தாலே பேடை நோக்கி, 'நினைத்தவிடத்திலே நினைத்தபோதே செல்லுகைக்கீடான உபகரணங்களை யுடை யாய், ஸம்ஸ்லேஷத்தையே ப்ராரகமாகவுடையையாய், து:காஸஹிஷ்ணுவுமாயிருந்த நீ, என்பக் கிலே க்ருபைபண்ணி, ஆஸ்ரிதருடைய ஸமஸ்த து:கநிரஸந ஸ்வபாவனான பெரிய திருவடி திவ்யவாஹநமாகவுடைய எம்பெருமானுக்கு என்விடுதூதாய்ச் சென்று என்திறத்தைச் சொல் வேணும்' என்று அபேக்ஷித்து, பின்னையும் அவைபோகாதிருந்தவாறே, 'சொன்ன வார்த்தை அவன் அங்கீகரியாதொழியில் செய்வதென்?' என்று போகாதிருந்தனவாகக் கொண்டு, இப்ப ஆஸ்ரிதவத்ஸலனானவன் அங்கீகரியா தொழியுமோ? அவன் என்வார்த்தையை அங்கீகரி தொழிகையாகிற வன்சிறையில் அவன் உங்களை வைக்கில் அத்தனையும் எனக்காகப் பட்டா காதோ? என்றே செய்யவேணு மென்று சொல்லுகிருள்.

ஒ.—முதற்பாட்டில், இப்பிராட்டி, உத்யாநத்திலே ஸம்ஸ்லேஷித்து வர்த்திக்கிற சில நாரைகளைக் கண்டு, ஸ்த்ரீத்வத்தாலே அவற்றில் தன்னோடு ஸஜாதீயமான பேடையை நோக் எம்பெருமானுக்கு என் ஆர்த்தியை அறிவிக்கவேணு மென்கிருள்.

[அஞ்சிறை என்று தொடங்கி] - சேவலோட்டை ஸம்ஸ்லேஷத்தாலே செருக்கித் நினைத்தவிடத்திலே போகைக்கீடான சிறகை யுடையையாய் பவ்யமான நாராய்! இத்தலையிலே உதவும்படியான தகைமையையுடைய நீயும் நீ இட்டவழக்காய் அழகிய ஜமந ஸாதநத்தையுடை தான சேவலுங் கூடி ஆர்த்தையான எனக்கு ஐயோ? என்று க்ருபை பண்ணி. [வெஞ்சிறைப்பு உயர்த்தார்க்கு] - அங்கேபோனால் அவனை அறியும்படி எங்ஙனே? என்னில், - ப்ரதிபக்ஷத்துக் வெவ்விதான சிறகையுடைத்தான பெரிய திருவடியைக் கொடியாகவுடையவ னென்று அடை ளம் சொல்லுகிருள்; தன்னைப் பிரித்துச் சடக்கெனக் கொடுபோகையாலே "ககு-ஸ்ரா:கு- ரஹ்ருதய:" என்னுமாபோலே இவ் வெவ்விதான சிறகையுடைய புள்ளாலே வஹிக்கப்பட்ட னுக்கு என்ருளாகவுமாம். [என்விடுதூதாய்ச் சென்றக்கால்] - அத்யார்த்தையான எனக் தூதாய்ச் சென்றக்கால். [வன்சிறையில் என்று தொடங்கி] - தான் அர்த்திக்கச்செய்தே அ போகாதொழிந்தவாறே. தன்பக்கல்நின்றுஞ் சென்ற தங்கள் வார்த்தையை அவன் அங்கீகரி னென்று பார்த்து அவை போகாதொழிந்தனவாகக் கொண்டு அப்படி நீர்மையுடையவன் உ ளைக் கொண்டாடாமையாகிற வன்சிறையிலே வைக்கில்; 'பரார்த்தமாகச் சிறையிருக் கிடைப்பதொன்றோ?' என்று ஸ்வகோஷ்டீ ப்ரஸித்தியாலே சொல்லுகிருள்.

ப.—முதற்பாட்டில், தன் புறச்சோலையில் தடாகத்திலே தன்சேவலோடும் இருக் நாரையைக் கண்டு கருடத்வஜனுக்குத் தூதாக அபேக்ஷிக்கிருள்.

அளியத்தாய்-எனக்கு அளிக்கத் தகுதியான ஸ்வபாவத்தையுடையையாய், அஞ்சிறை (நான் சொன்ன கார்யத்தில் செல்லுகைக்கீடான) அழகிய சிறகையும், மடநாராய் - (சேவலே உண்டான சேர்த்தியாலே வந்த துவட்சியாலே) மடப்பத்தையுமுடைய நாராய்! நீயும் - (சேவ யொழியச் செல்லாத) நீயும், நின் அஞ் சிறைய சேவலுமாய் - உன்னோட்டைச் சேர்த்தியா புதுக்கணித்த சிறகையுடைய சேவலுமாய், ஆவாவென்று - (என் தனிமைகண்டு) ஐயோ! ஐ என்று, எனக்கு அருளி - எனக்கு க்ருபையைப்பண்ணி, வெஞ்சிறை - (விரோதி விஷயத்தி வெவ்விய சிறகையுடைய, புள் - பெரிய திருவடியை, உயர்த்தார்க்கு - ரக்ஷணத்துக்குக்கொடி எடுத்தவனுக்கு, என்விடுதூதாய்ச் சென்றக்கால் - என்னாலே விடப்பட்ட தூதாய்ச் சென்றக்கா வன்சிறையில் - (உங்கள் முகம்பார்த்து வார்த்தை கேளாமையாகிற) வலியசிறையிலே, அ வைக்கில் - ப்ரணயியான அவன்தானே வைக்கில், வைப்புண்டால் - அதுக்கு இசைந்திருந்தா என்செய்யும் - (அவ்விருப்பு) என்ன குற்றஞ்செய்யும்?

ஓ என்கிற அசை-கூடாததுகூடுமோ? என்றபடி. பிறர்க்காகச் சிறையிருக்கை பெரிய கோன்மையென்று கருத்து. புள்ளாலே உயர்த்தப்பட்டவ ரென்னவுமாம். இவ்விடத்தில் நாரை தொடக்கமானவற்றைத் தூதாகச் சொல்லிற்று - வுடகருடைய கார்யதேஶிகத்வ ஸூசநார்த்த மாக. சிறகைக் கொண்டாடிற்று - ஜ்ஞாநப்ரேமரூப பக்ஷத்வயாந்வயத்தாலே. பேடும் சேவலு மான சேர்த்தி - வுடகருடைய பரஸ்பர ஶேஷஶேஷி பாவஸூசகம்.

இ.—முதற்பாட்டில், தன்கண்வட்டத்திலே சேவலோடே கலந்திருக்கிறதொரு நாரையைப் பார்த்து 'நீ அவனுக்கு என் தசையை அறிவிக்கவேணும்' என்கிறாள்.

[அஞ்சிறைய] - ப்ரஜைக்குத் தாய்முலையிலே கண் ஓடுமாபோலே தனக்கு உபகாரக மான சிறகிலேயாயிற்று முற்படக் கண்வைத்தது. ஆசார்யனுடைய ஜ்ஞாநத்தை அநுமித்து ஶிஷ்யன் உபஸத்தி பண்ணுமாபோலே, வுடகருடைய பரிகரவத்தையை அறிந்து பற்றவேணு மிறே. 'அம்' என்று அழகு. 'சிறை' என்று சிறகு. அழகிய சிறகையுடைய. தன்னைப்போலே உருவியிராதே, சேவலோட்டை ஸம்ஶ்லேஷத்தாலே செந்தலித்திருக்கை. "ஸவக்ஷா நேம காரா விவக்ஷாவிவக்ஷி நீ" என்றிறே தன்தஶை. [மடநாராய்]-ஸம்ஶ்லேஷத்தாலே துவண்டு தூதுபோகைக்கு யோக்யமாயிருக்கை. நாண் மடம் அச்சம் என்று ஸ்த்ரீத்வமாய், பிரிவில் வ்ய ஸநமறியும் தன் இனத்தைப் பார்த்துச் சொல்லுகிறா ளென்னவுமாம். [அளியத்தாய் நீயும்] - இத் தஶையிலே உதவும் அநுக்ரஹஶீலையான நீயும். [நின் அஞ்சிறைய சேவலுமாய்] - நீ இட்டவழக் காய், நல்ல ஶுமந பரிகரத்தையுடைத்தான சேவலுமாய். சேவலைப் பற்றுவது பேடை முன்னாக வென்றும், ஆர்த்தரக்ஷணம் பண்ணுவதும் ஒரு மிதுநமென்றிருக்கிறாள். [ஆவாவென்று] - என் தஶையைப் பார்த்து, ஐயோ! ஐயோ! என்று. [எனக்கு] - "ஸாஸீவஶ்ய ஶரீராணி" என்று தன்வடிவைக் காட்டுகிறாள். [அருளி]-க்ருபைபண்ணி. இரப்புக்குச் செய்ததாகையன்றிக்கே உங் கள்பேறாக அருளி. "விக்ஷதஸ்ய ஸமுக்ஷஸ்ய வ்ராஜக்ஷஸ்ய வாநரோத்த." எங்களை ஸ்தோத்ரம் பண்ணுகிறதென்? அங்கேசென்றால் எல்லாரும் ஸாம்யாபந்நரா யிருக்கையாலே தெரிய வொண்ணாது; அடையாளமென்? என்று இருக்கிறனவாகக்கொண்டு சொல்லுகிறாள் - [வெஞ்சிறைப்புள்ளுயர்த்தார்க்கு] - வெவ்விய சிறகையுடைய பெரிய திருவடியை த்வஜமாக எடுத் தவர்க்கு. வரும்போது ப்ரதிபக்ஷத்தை நிரஸித்துக்கொண்டு வரும்படியைச் சொல்லுகிறது; "ஸர்வ பந்நகஸர்வஸ்வ ஶாதகம்". உயர்க்கையாகிறது-வஹிக்கையாய் "ஆக்ரூர: க்ரூரஹ்ருதய:" என்னுமாபோலே தன்னைப்பிரித்துச் சடக்கெனக் கொண்டுபோன கொடுமையைச் சொல் லிற்றாகவுமாம். [என் விடுதூதாய்] - பெருமிடுக்கரான பாண்டவர்கள் க்ருஷ்ணனைத் தூதுவிட்டாற் போலேயோ? அபலையாய் அத்யார்த்தையான நான் விடவன்றோ போகிறது? பரார்த்தமாகத் தூது போகை கிடைப்பதொன்றோ? [சென்றக்கால்]-அவன்பக்கலிலே யன்றோ செல்லுகிறது. உங்கள் வழிபோக்குத்தானே அடிக்கழஞ்சு பெறுமதோ? [வன்சிறையில்]-ப்ரணயிநிபாடுநின்றும் வந்தவர் களைச் சிறையிடுவான் ஒரு மூர்க்க னுண்டோ? இனி, சிறையாகிறது - இவர்கள் வார்த்தையை அநாதரிக்கை; இவர்களைக் கண்டபோதே துணுக்கென்று "ஶயாநாஶயநாவா கிமாஸ ஶாஸிநீ" என்னுமையிறே. [அவன் வைக்கில்] - "நைவ ஶம்ஸாமஶோகாந்" என்று ஆதரியாதொழியுமோ? [வைக்கில்] - அநாதரிக்க ப்ரஸங்கமில்லை, ஶிரஸா வஹிக்குமென்று கருத்து. [வைப்புண்டா லென்செய்யுமோ?]-அங்ஙனேயாகில் அது உங்கள்பேறன்றோ? பரார்த்த மாகச் சிறையிருக்கை கிடைப்பதொன்றோ? என்றிருக்கிறாள். தேவஸ்த்ரீகளுக்காகத் தான் சிறையிருந்தவளிறே?

ஈடு.—முதற்பாட்டு. தன்பரிஸரத்திலே வர்த்திப்பதோரு நாரையைப் பார்த்து, 'எ றும் சேவலைக்கார்யங்கொள்ளுவார் பேடையை முன்னாகக் காரியங்கொள்ளவேணும்' என்றிருக்கு தம் வாஸநையாலே பேடையை முன்னிட்டுச் சேவலைப்பற்றி, 'நீ என் தசையை அறிவித்து எ னையும் அவனையுஞ் சேர்க்கவேணும்' என்கிறாள்.

[அஞ்சிறைய] - ப்ரஜை, தாயினுடைய அவயவங்களெல்லாங் கிடக்க, முலையிலே வா வைக்குமாபோலே கமநஸாதநமான சிறகிலே யாயிற்று முற்படக் கண்வைத்தது. நீர்பாய்ந் பயிர்போலே பரஸ்பர ஸம்ஶ்லேஷத்தால் பிறந்த ஹர்ஷம் வடிவிலே தோடைகொள்ளலாம்ப இராநின்றது. சிறையென்று சிறகு. ஆசார்யன்ஜ்ஞாநத்தை அநுமித்து ஶிஷ்யன் உபஸத்தி பல் ணுமாபோலே சிறகிலே கண்வைக்கிறாள். [மட]-ஏவிக்கார்யங்கொள்ளலாம்படி பவ்யதை தோற் இருந்தது. ஸம்ஶ்லேஷத்தாலே துவண்டு தூதுபோகைக்கு யோக்யமாம்படி யிருக்கை. நான் மடம் அச்சமென்று ஸ்த்ரீத்வமாய், பிரிவில் வ்யஸநமறியும் தன்னினமான பேடையைப் பார்த்து சோல்லுகிறு ளென்றுமாம். [நாராய்] - "அம்மே!" என்னுமாபோலே. [அளியத்தாய்] - அவ போகட்டுப்போன ஸமயத்திலே ஆற்றாமை அறிவிக்கலாம்படி வந்து முகங்காட்டின உன் அநுக்ரஹ லதை இருந்தபடி யென்! அளி - க்ருபை; க்ருபைபண்ணத் தக்கா யென்றபடி. "பம்பா தீரே ஹநுமதா ஸங்கத:" (பம்பாதீரேஹநுமதா ஸங்கத:) போலே; வழிபறிப்பார் கையிலே அகப்பட்டு நிற்க, தாய்முகத்திலே விழித்தாற்போலே. [நீயும்] - "ஸப்ராதுஶ்சரணௌ காடம் நிபீட்ய ரகுநந்தந: | ஸீதா..." (ஸப்ராதுஶ்சரணௌகாடம் நிபீட்யரகுநந்தந:, ஸீ

முதற்பாட்டு - அஞ்சிறைய இத்யாதி. "மடநாராய்" என்று பேடையை முன்னிடுகிறதுக்கு ஹாவ என்றும் சேவலை இத்யாதி. இத்தால் பகவத்விஷயத்திற்போலே ஆசார்யவிஷயத்திலும் புருஷகாரம் வே மென்றபடி. சேவல் - பும்பக்ஷி. பேடை - ஸ்த்ரீபக்ஷி. நீ என் தசையை அறிவித்து இத்யாதி பலிதம்.

அல்லாத அவயவங்கள் கிடக்கச் சிறகைச் சொல்லுகிறதுக்கு ஹாவம் - ப்ரஜை இத்யாதி. 'அ என்றதுக்கு ஹாவம் - நீர்பாய்ந்த இத்யாதி. பரஸ்பர ஸம்ஶ்லேஷம் - சேவலோட்டை ஸம்ஶ்லேஷ தோடைகொள்ளலாம்படி - அறியலாம்படி. த்ருஷ்டாந்த முகேந சிறகுக்கு ஸ்வாபதேசம் - ஆசார்யன் இ யாதி. ஆசார்யன் - சேவல். "உபாப்யாமேவ பக்ஷாப்யாம் யதா கே பக்ஷிணாம் கதி: | ததைவ ஜ்ஞாநகர்மாப்யாம் ப்ராப்யதே பரமம் பதம் ||" இத்யாதிகளையும், "ஆசார்யஸ்ய ஜ்ஞாநவத்தாநுமேய தத்பூர்வ உபஸத்தி: க்ரியதே" என்ற பாஷ்யவாக்யத்தையும் உட்கொண்டு, ஆசார்ய ஜ்ஞாநத்தை என்றது. ஸ்வாபதேசத்திலே 'சிறகு' என்று ஜ்ஞாநகர்மங்களும், 'மட' என்று தயாத்யாத் குணங்களும், 'நாரா' யென்று வெளுப்பாய் ஶுத்தஸ்வபாவமும் தோன்றுகிறது. அது மத்ஸ்யாதிகளை த்யாகம் பண்ணிக்கொண்டிருக்குமாபோலே ஆசார்யனுடைய பகவத்த்யாநபரதையும் தோற்றுகிறது. மடப்பம் பவ்யதையாதல், துவட்சியாதல், ஸ்த்ரீத்வமாதல். துவண்டு - ஶரீரம்வாடி; லகுவாய். நாண் - லஜ்ஜை; அச்ச பயம்; மடம் - ஒடுக்கம். ஸ்த்ரீத்வம் சொன்னதுக்கு ப்ரயோஜநம் - பிரிவில் இத்யாதி. தன் இனம் - த கூட்டம். "நாராய்" என்றஸ்வரத்துக்கு பாவம்-அம்மேயென்னுமாபோலே என்று. அதாவது-ப்ரஜை ஸங்காதி யத்தாலே "அம்மே" என்னுமாபோலே, இவளும் இதன்பக்கல் ஸங்காதிஶயத்தாலே சொல்லுகிற வார்த்தை யென்றபடி. அளியத்தாய் - எனக்கு க்ருபை பண்ணுகைக்குத் தகுதியான ஸ்வபாவத்தை யுடையையாயென் னாரைக்கு விசேஷணம். போகட்டுப்போன ஸமயத்திலே, முகங்காட்டினதுக்கு த்ருஷ்டாந்தம் - பம்பா இத்யா ஸங்க்ஷேபம் - "ஶபரீ வநமாஸாத்ய தத்ர சாகத்ய சாகதம் | பம்பாதீரே ஹநுமதா ஸங்கதோ வாநரேண ஹ" இதுக்குத் தாத்பர்யம் - வழிபறிப்பார் இத்யாதி. இவ்விடத்தில், வ ழிப்பார்கையிலே அகப்படுகையாவது - பிராட்டியுடைய கண்ணுக்கும் முகத்துக்கும் போலியான செங்கழு தாமரைப்பூ முதலானவற்றாலே நெஞ்சுபறியுண்கை. விழித்தாற்போலே இருக்கிறது ருஷிக்கு என்று தா பர்யம். சேவலுக்கு முன்னே "நாராய்நீயும்" என்றதுக்குத் தாத்பர்யம் - ஸப்ராது: இதி. அயோத்யாகாண்

முவாச) என்கிறபடியே என்றும் சேவலைக் காரியங்கொள்ளுவார் பேடையை முன்னிட்டுப்போலே காணும் கார்யம் கோள்வது. [நின்அஞ்சிறைய சேவலுமாய்] - பேடையை யிட்டாயிற்று சேவலின் பக்கல் ப்ரதிபத்தி. "ஶ்ரிய:பதி" என்னுமாபோலே. [நின் அஞ்சிறைய சேவலுமாய்] - "பேண் ணணைந்தவடிவு" என்று தோற்றுநின்றதாயிற்று. அதுஇட்டவழக்கான நீயும், நீயிட்ட வழக்கான சேவலுமாய். [ஆவாவென்று] - "ஐயோ! ஐயோ!" என்று. மிதுநமாயிருக்கிறது தன்ஆர்த்தி பரிஹரிக் கைக்கு என்றிருக்கிறாள். [எனக்கு] - "ஏஹி பஶ்ய ஶரீராணி" (ஏஹிபஶ்யஶரீராணி) என்று விரஹம் தின்ற தன்வடிவைக் காட்டுகிறாள். அவனோடேகலந்து பிரிந்து, 'கண்ணாலே காணப் பெறுவதுகாண்' என்னும் அபேக்ஷையோடே யிருக்கிற எனக்கு. [அருளி] - இரப்புக்குச் செய்த தாகை யன்றிக்கே உங்கள் பேறாக அருளி. தயைபண்ணுகைக்கு அத்தலை குறைவற்றாற்போலே யன்றோ! தயாவிஷயமான இத்தலை குறைவற்றபடி. பகவத்விஷயத்திலுபகரிப்பார், ப்ரத்யுபகாரத் துக்கல்ல உபகரிப்பது, தங்கள் க்ருபையாலே யாயிற்று; உபயவிபூதியுக்தனை அவர்கள் உபகரித் தால், அவனுக்கு ஸத்ருஶமாக உபகரிக்கலாவதில்லையே இவனுக்கு! "விக்ராந்தஸ்த்வம் ஸமர்த்தஸ்த்வம் ப்ராஜ்ஞஸ்த்வம் வாநரோத்தம" (விக்ராந்தஸ்த்வம் ஸமர்த்தஸ்த்வம் ப்ராஜ்ஞஸ்த்வம் வாநரோத்தம) என்றாற்போலேயிறே இவள் இவற்றை ஶ்லாகித்தது. "எங்களை இங்ஙன் கோண்டாடுகிற தேன்? உன் தசையைக் கண்டு போகட்டுப்போனவன் எங்கள் வார்த்தை கேட்கப் புகாநின்றானோ?

ராமம்ப்ரதி லக்ஷ்மணோக்தம். "ஸீதாऽபாவாதியஶாராவவஶ ஹோ வ்ருதம்" இத்யுத்தரார்த்தம் அத்ர விவக்ஷிதம். பலிதத்தை ஸ்வாநுபவ கர்ப்பமாக அருளிச்செய்கிறார் - என்றும் சேவலை இத்யாதி. 'நின்' என்று நிரூபித்ததுக்கு பாவம் - பேடையையிட்டு இத்யாதி. ப்ரதிபத்தி - விஶ்வாஸம். "நின்னஞ்சிறைய" என்றவிடத்தில் 'அம்' என்றதுக்கு பாவம்-பெண்ணணைந்த இத்யாதி. ஸமுச்சயத்வயார்த்தம் - அது இட்ட இத் யாதி. 'நீயும்' இத்யாதி பதச்சேர்த்திக்குத் தாத்பர்யம் - மிதுநம் இத்யாதி. எனக்கு - விரஹக்லிஷ்டமான வடிவையுடைய எனக்கு என்னுதல், அவனைக் காணவேணுமென்னும் ஆசையுடைய எனக்கு என்னுதல். இரண் டர்த்தத்தையும் அருளிச்செய்கிறார் - "ஏஹி பஶ்ய" இத்யாதியாலும், அவனோடே கலந்து இத்யாதியாலும். ஆரண்யகாண்டே ஷஷ்ட்டே ராமம்ப்ரதி முநய:. "ஏஹி பஶ்ய ஶரீராணி முநீநாம் பாவிதாத்மநாம் । ஹதாநாம் ராக்ஷஸைர்கோரைர்பஹூநாம் பஹுதா வநே." இரப்புக்கு இத்யாதி -"ஸாயுத நிரபேக்ஷ பராத:பவ நிராவிக்ஷ்யாக்ஷயா" என்று திருவுள்ளம். 'நீயும் நின் னஞ்சிறைய சேவலுமாயெனக்கு' என்று கூட்டித் தாத்பர்யம் - தயைபண்ணுகைக்கு இத்யாதி. அத்தலை குறை வறுகையாவது - மிதுநமாயிருக்கை. இத்தலை குறைவற்றிருக்கையாவது - ஆகிஞ்சந்யாநந்யகதித்வங்களையுடைத் தாயிருக்கை. 'அருளி' என்றதுக்கு ஸ்வாபதேசம் - பகவத்விஷயத்தில் இத்யாதி. அம்மாத்ரமன்றிக்கே உப காராநுகுண ப்ரத்யுபகாரமும் கூடா தென்கிறார் - உபயவிபூதி இத்யாதி. இவ்விடத்திலே, "ப்ருஹஸ்பதி ஸ்ருஷ்டாநஸ்ய தைவோபி ந ஶக்யதே । ப்ரதிப்ருஷ்டாநமேவாஸ்ய ப்ராயஶ்சித்த க்ருதாத்மா:॥ யோத த்ராத்மவஜ் ஜ்ஞாநம் காயத்ரஸ்யோபவேஶநம் । க்ருஸ்நாம் வா ப்ருதிவீம் தத்த்வா ஶாத்ரூம் கயஶ்ஞந" என்றது அநுஸந்தேயம். தர்மோபஸேவநம் - தர்மாநுஷ்டாநம். 'அஞ்சிறைய' என்று தொடங்கி ஶ்லாகித்ததுக்கு த்ருஷ்டாந்தம் - விக்ராந்த இத்யாதி. ஸுந்தரகாண்டே ஷட்த்ரிம்ஶே ஹநூ மந்தம்ப்ரதி ஸீதா. "தத்ஸ்ய ஹ்ருதி பாஷா ஸத்யம்ஸதே ஸஹாயாதா । ஶ்ரீத்யா ப்ரியம் ஶ்ருத்வா ப்ராஶம்ஸத மஹாகபிம்॥ விக்ராந்தஸ்த்வம் ஸமர்த்தஸ்த்வம் ப்ராஜ்ஞஸ்த்வம் வாநரோத்தம। யேநேதம் ராக்ஷஸபதம் த்வயைகேந ப்ரதர்ஷிதம் ॥." விக்ரமம் - பராஹிஹவநஸாத் யத்வம். ஸாமர்த்த்யம் - கார்யகாரணஶக்தி. ப்ராஜ்ஞதை - இக்குணங்களை யுடையவனுக்குப் பிரிந்து நோவு படுகிற அபலையை உபேக்ஷிக்கை கொத்தை யென்கிற ஜ்ஞாநம். மேலுக்கு அவதாரிகை - எங்களை இத்யாதி. 'உன்தசையைக்கண்டு' இத்யாதி ஶங்காத்வயமும் - "புள்ளயர்த்தார்க்கு வெஞ்சிறை" என்கிற பதங்களைக் கடா க்ஷித்து. "எங்கள் வார்த்தை கேட்கப்புகாநின்றானோ" என்கிற முந்தின ஶங்கையிலே - வழியில் விரோதிக

இனித்தான் "நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி" (நிரஞ்ஜநஃபரமம் ஸாம்யமுபைதி) என்கிறபடியே அங்குள்ளார் பரமஸாம்யாபந்நராயன்றோ இருப்பது. 'நாங்கள் அவனுக்கும் அவர்களுக்கும் வாசியறியும்படி என்?' என்றன்றோ நாங்களிருக்கிற தென்று அவற்றுக்குக் கருத்தாக மேல் வார்த்தை சொல்லுகிறாள். [வெஞ்சிறைப்புள்ளுயர்த்தார்க்கு] - அவர்கள் பரமஸாம்யாபந்நராயிருக்கையாலே தனக்கு வ்யாவர்த்தகவிஶேஷணமாகப் பெரியதிருவடியை த்வஜமாக வுடையனாயிருக்கும் விரோதியைப் போக்கிக்கொண்டு வருகைக்கு அங்கே நமக்கு ஆளுண்டென்கிறாளாதல், நிர்த்தயமகப் பிரித்துக்கொண்டு போகையாலே "அக்ரூர: க்ரூரஹ்ருதய:" (அக்ரூரஃ க்ரூரஹ்ருதயஃ) என்னுமாபோலே சொல்லுகிறாளாதல். [புள்ளுயர்த்தார்க்கு] - புள்ளாலே வஹிக்கப்பட்டரேன்னுதல்; புள்ளை த்வஜமாகவுடையவரேன்னுதல். [என்விடுதூதாய்] - அவன் ஆள்வரவிடஇருக்கக்கடவ நானன்றோ விடுகிறேன். [விடு] - "க்ரியதாம்" (க்ரியதாம்) என்கிறபடியே நாஏவவன்றோ நீங்கள் போகிறது. பெருமிடுக்கரான பாண்டவர்கள் க்ருஷ்ணனைத் தூதுவிட்டாபோலேயோ? அபலையாய் அத்யார்த்தையான நான் ஏவவன்றோபோகிறது. பரார்த்தமாகத் தூதுபோகை கிடைப்பதொன்றோ? [சென்றக்கால்]-எனக்கு முன்னே உங்களுக்கு உத்தேஶ்யமன்றோ ஸித்திக்கப்புகுகிறது? உங்கள் போக்கு அடிக்கழஞ்சு பெறாதோ? [வன்சிறையில்] - இவள்பாடுநின்றுஞ் சென்றவற்றைச் சிறையிட்டு வைக்கிறானன்றே; இவர்களுக்கு முகங்கொடாதே அந்யபரனாகையிறே இவர்களைச் சிறையிட்டுவைக்கையாவது. ராஜபுத்ரர்களுக்கு ப்ராப்தகாலங்களிலே வெளியிடாதபோது மாந்துவர்களிறே. [என்விடுதூதாய்ச் சென்றக்கால் வன்சிறையில் அவன் வை

ளுண்டேயென்கிற ஶங்கையும் கண்டுகொள்வது; உத்தராநுகுணமாக. இனித்தான் - கிஞ்ச. ஸாம்யாபத்தி ஶ்ருதி; "ததா வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி." த்விதீயஶங்காபரிஹாரம் - அவர்கள் இத்யாதி. இந்தப்பக்ஷத்துக்கு, புள்ளை த்வஜமாக உடையவனென் அர்த்தமே வேண்டுவது. ப்ரதமஶங்கையை த்விவிதமாகப் பரிஹரிக்கிறார்—விரோதியை இத்யாதி வாக்யத்வயத்தாலே. 'வெம்' என்று - சிறகுக்கு விசேஷணமாதல், புள்ளுக்கு விசேஷணமாதல். விரோதியை இத்யாதி முந்தின பரிஹார வாக்யத்திலே - ப்ரதமஶங்காவாக்யத்திற்சொன்ன ஶங்காத்வயத்துக்கும் தந்த்ரேண பரிஹாரங் கண்டுகொள்வது. அதாவது - நீங்கள் அறிவிக்குமத்தனையே வேண்டுவது; விரோதியைப் போக்குகைக்கும் அங்கே ஆளுண்டென்றபடி; த்விதீயபரிஹாரம் - ஸ்வபுத்த்யாவன்றிக்கே பரப்ரேரிதனாய்ப் போகையாலே வருமென்று. இந்த அர்த்தத்வயத்துக்கும், புள்ளாலே வஹிக்கப்பட்டவனென்று கண்டுகொள்வது. "வஹந்த்யேவம் ஸுபர்ணஸ்ய பார்ஶ்வே: க்ருஷ்ணஸ்ய ... த்ருஷ்டா க்ரூரா:; "அக்ரூர: க்ரூரஹ்ருதயஶ்ஶீக்ரம் ப்ரேரயதே ஹயாந் । ஸர்வஸ் ... க்ருபா ... நஜாயதே." 'என்விடு' என்றதுக்கு - அபிமதையான நான் விடுகிற என்று அர்த்தம் அருளிச்செய்கிறார் - அவன் ஆள்வரவிட இத்யாதி. 'விடு' என்றதுக்கு ஸாவம் க்ரியதாம் இத்யாதி. ஆரண்யகாண்டே பஞ்சதஶே பஞ்சவட்யாம் ராமம்ப்ரதி லக்ஷ்மண:-"பரவாநஸ்மி காகுத்ஸ்த த்வயி வர்ஷஶதம் ஸ்திதே । ஸ்வயந்து ருசிரே தேஶே க்ரியதாமிதி மாம் வத". நான் ஏவ நீங்கள்போகிறது ஸ்வரூபாநுரூபமன்றோ வென்றபடி. "என்விடு" என்றதுக்கு - அபலையாய் ஆர்த்தையான நானென்று அர்த்தாந்தரம் - பெருமிடுக்கரான இத்யாதி. சென்றக்கா லென்றதுக்கு க்ருஷ்ணன் தூதுபோலேயும், அக்ரூரயாநம்போலேயுமாக ஸாவத்வயம் அடைவே அருளிச்செய்கிறார் - பரார்த்தமாக இத்யாதி வாக்யத்வயத்தாலே. விவரணம் - உங்கள் இத்யாதி. ஆக, பரார்த்தமாகப் போகை அடிக்கழஞ்சு பெறுமென்றும் எனக்குமுன்னே உங்களுக்குப் பலஸித்தி யென்றும் இரண்டர்த்தம். அடிக்கழஞ்சு பெறுகை - ஶ்லாக்யதை. சிறையிட்டுவைக்குமோ? என்ன, இவள்பாடு இத்யாதி. அவன் வைமுக்யம் இவர்களுக்கு பாதகமென்கைக்கு த்ருஷ்டாந்தம் - ராஜபுத்ரர்களுக்கு இத்யாதி. மாந்துவர் - க்லேஶிப்பர். தாத்பர்யாந்தரம் சொல்லுகைக்கா ப்ரதீகோபாதாநம் - என்விடு தூது இத்யாதி. ஸ்வாரஸ்யஸூசிதம் ஸாவமாஹ-நீங்கள் இத்யாதி வாக்யத்ரயத்தாலே,

கில்] - நீங்கள் ஏதேனும் அவனுக்குத் தூதுபோகிறீர்களோ? சிறைகட்டுதல், சிங்கவிளக்கேரித்தல் செய்யில் செய்வதேன்? என்று கூசுகைக்கு; எனக்குத் தூதுபோனாரை "பரிஷ்வங்கோ ஹநூமத:" (பரிஷ்வங்கோஹநூமத:) என்னுமாபோலே மார்பிலே யணைக்கும் காணுங்கோள். நான் அணைய ஆசைப்படுகிற மார்வன்றோ உங்களுக்குப் பரிசிலாகப் புகுகிறது? [அவன்வைக்கில்] - "வ்யஸநேஷு மநுஷ்யாணாம்" (வ்யஸநேஷு மநுஷ்யாணாம்) என்றிருக்குமவன் வைக்குமோ? ஶிரஸா வஹியானோ? [வைப்புண்டாலென்செய்யுமோ?] - அது போல்லாதோ கிடைக்குமாகில்? பரார்த்தமாகச் சிறையிருக்கக் கிடைப்ப தொன்றோ? ராவணன் தேவஸ்த்ரீகளைச் சிறையிட்டு வைக்கத் தான் அவர்கள்காலில் விலங்கைத் தன்காலிலே கோத்துச் சிறையிட்டவளிறே.

இரண்டாம் பாட்டு.

என்செய்யதாமரைக்கண் பெருமானார்க்கென்தூதாய்
என்செய்யுமுரைத்தக்கால் இனக்குயில்காள்! நீரலிரே
முன்செய்தமுழுவினையால் திருவடிக்கீழ்க்குற்றேவல்
முன்செய்யமுயலாதேன் அகல்வதுவோவிதியினமே?

ஆ.—(என்செய்ய.) பின்னையும் அந்த நாரைகள் போகாதிருந்தவாறே சில குயில்களை நோக்கி, தன் அழகாலே என்னைத்தோற்பித்து அடிமையாக்கினவனுக்குநீங்கள்என்திறஞ்சொன்னால் தான் என்செய்யும்? என்று சொல்ல, அவையும் போகாதிருந்தவிடத்தில், சொல்லும்வார்த்தை கேட்டுப் போகைக்கு நின்றனவாகக்கொண்டு, 'என்னுடைய ஜந்மாந்தரபாபத்தாலே உன்திருவடிகளில் அடிமைசெய்கைக்குப் பண்டு பாக்யம் பண்ணப் பெற்றிலேன்; இனி உன்திருவடிகளை நான் அகன்றுபோமத்தனையோ? என்று சொல்லுங்கோள்' என்கிறாள்.

ஒ.—இரண்டாம்பாட்டில், சில குயில்களைக் குறித்து எம்பெருமான்பக்கல் சென்றால் விண்ணப்பம் செய்யும் பாசுரத்தைச் சொல்லுகிறாள்.

[என் என்று தொடங்கி] - விஶ்லேஷதசையில், 'ஆத்மாத்மீயங்களெல்லாம் உன்னது' என்பாரைப்போலே ஸஸ்நேஹமாக நோக்கின நோக்கையும் இத்தலையைத் தோற்பிக்கை

அவனுக்கு - அவனனுப்ப வென்றபடி. **சிறைகட்டுதல்** - ப்ரஹ்மாஸ்த்ரத்தாலே கட்டுதல். **சிங்கவிளக்கேரிக்கையாவது** - லோகத்திலே ஸிம்ஹாகாரப்ரதிமை பண்ணி அத்தைத் தலையிலே வைத்தெரிக்கை யென்று த்வநி. இங்கு வாலிலே சீலையைக்கட்டி யெரிக்கை; அவமதிபண்ணுகையென்று தாத்பர்யம். **பின்னை என்செய்யுமென்ன** - **எனக்குத்தூது** இத்யாதி. இது "வைக்கில்" என்றதின் தாத்பர்யம். யுத்தகாண்டே ப்ரதமே "ஏஷ ஸர்வஸ்வபூதஸ்து பரிஷ்வங்கோ ஹநூமத: । மயா காலமிமம் ப்ராப்ய தத்தஸ்தஸ்ய மஹாத்மந:." ஸர்வஸ்வபூத: என்றதுக்கு பாவம் - **நான் அணைய** இத்யாதி. **பரிசில்** - ஸந்தோஷாதிஶயத்தாலே கொடுக்கும் உசிதம். யதிஶப்தார்த்தம் - "வ்யஸநேஷு இத்யாதி. இதம்வசநம் "துயரறு சுடரடி" இத்யத்ர லிகிதம். இத்தால் அவன் ஸ்வபாவத்தாலும் வைய்யா னென்றபடி. ஸ்வரத்துக்கு அர்த்தம் - **அதுபோல்லாதோ** இத்யாதி. அது து:க்கரூபமன்றோ வென்ன, **பாரார்த்தமாக** இத்யாதி. "கிடைப்ப தொன்றோ" என்கைக்குத் தனக்கு உத்தேஶ்யமாயிருக்குமோ? என்ன, **ராவணன்** இத்யாதி. இதுக்கு, "ஸாத்வீ ராவணநாஶஸ்ய ஸாத்வீநாம் ஶோகமோசநே ஸமாநஸ்ய மம ஶோகோ ஹதாஶாநா வாஸவஸ்ய" என்றதிலே நோக்கு. (௬)

யாலே மிகவும் மேனணிப்பையும் உடையவனா யிருந்தவனுக்கு; ஸம்ச்லேஷ தசையில் ஸஸ் நேஹமாக நோக்கின நோக்காலே என்னை அடிமைகொண்டவனுக்கு என்றுமாம். அத்யார்த்தை யான என்னுடைய தூதாய், எனக்காக ஒருவார்த்தை அங்கே அறிவித்தால் உங்களுக்கு என்ன சேதமுண்டு? சிலவருடைய ஆர்த்திக்கு உதவுகை கிடைப்பதொன்றோ? என்று கருத்து. [இன க்குயில்காள் நீரலிரே] - எங்களைப்போலே பிரியாதே கூட இருப்பது நீர்மைக்கு நீங்களாவது [முன்செய்த என்று தொடங்கி] - அநாதிகாலம் ஸஞ்சிதமான மஹாபாபத்தாலே திருவடிக்கீழ் அந்தரங்கவ்ருத்திகள் பண்ணுகைக்கு ஈடான பாக்யத்தைப் பண்டு பண்ணாத நான் அகன்றே போமித்தனையோ? தந்தாமுக்கென்ன ஒன்றில்லாதார் தயநீயரன்றோ? என்று கருத்து. [விதி யினம்] - பாவியோம்; விதி இன்ன மென்றுமாம்.

ப.—அநந்தரம், கீழ்ச்சொன்ன நாரைகளிற்காட்டில் திரளாகையாலே கார்யகரங் ளென்று நினைத்து, சில குயில்களை,'என்னுடைய புண்டரீகாக்ஷன்பக்கல் தூதாக வேணும்'என்று அபேக்ஷிக்கிறாள்.

இனக்குயில்காள் - திரளான குயில்காள்! நீரலிரே-ச்ராவ்யமான வாய்வீட்டையுடை நீங்களல்லீர்களோ? என் - எனக்கே தம்மை ஸ்வம்மாக்கித்தந்த, செய்ய தாமரைக்கண் - சிவந் தாமரைபோலும் கண்ணையுடையராய், பெருமானார்க்கு - (பின்பு எனக்கு எட்டாமல் உயர்ந்திரு கிற) ஸர்வாதிகருக்கு, என்தூதாய் - என்னுடைய தூதாய், உரைத்தக்கால் - வார்த்தைசொன்னல் என்செய்யும் - என்ன தப்புச்செய்யும்? முன்செய்த - முன்புசெய்த, முழுவினையால் - பூர்ணபாப தாலே, திருவடிக்கீழ் - (ச்லாக்யமான) திருவடிகளிலே, குற்றேவல் செய்ய - அந்தரங்கவ்ருத் பண்ணுகைக்கு, முன் - முன்புத்தை, முயலாதேன் - ஸாதநத்தில் முயலாத நான், இனம் - இ னம், அகல்வதுவோ விதி - அகல்வதுவோ அறுதியிட்டது? இவ்விடத்தில் வடகருடைய உக் மாதுர்யமும் ஸமவாயமும் ஸூசிதம்.

இ.— இரண்டாம்பாட்டில், சில குயில்களைக் குறித்து, அவன்பக்கலிலே சென்று சொல்லும் பாசுரத்தைச் சொல்லுகிறாள். நாரைகளைத் தூதுபோகவேணுமென்று அர்த்தித்தா அவை போனல் சொல்லும் வார்த்தையைச் சிலகுயில்களைக்குறித்துச் சொல்லுகிறாள்; ... இருந்ததீ! என்னில்;—இவ்வஸங்கத பாஷணம் பண்ணிற்றிலளாகி விஷய வைலக்ஷண்யத்துக்கு நமஸ்கார மாமிறே.

[என்செய்ய தாமரைக்கண் பெருமானார்க்கு] - விச்லேஷ தசையிலே தான் வருந்தி யும் இவள் தரித்திருக்கைக்காக 'ஆத்மாத்மீயங்கள் எங்கேனுங் கிடக்கிலும் உன்னதன்றோ?' எ கிற வார்த்தையாலே, என்னுடையவ ரென்கிறாள். ஐச்வர்யத்தாலும் வாத்ஸல்யத்தாலும் கல யாலும் சிவந்த திருக்கண்களையுடையவர். இவையெல்லாம் இவள் அநுபவித்தவையிறே; முத திருவாய்மொழியில் ஐச்வர்யமும், மூன்றாந்திருவாய்மொழியிலே வாத்ஸல்யமும், இத்திருவா மொழியிலே கலவியும். [பெருமானார்க்கு] - ஸ்வாபாவிகமான பௌஷ்கல்யத்துக்கு மேலே தன்னைத் தோற்பித்தத்தால் வந்த மேனணிப்பைச் சொல்லுகிறாள்.ஸம்ச்லேஷதசையில் ஸஸ் ஹமாக நோக்கி, அந்நோக்காலே என்னை அடிமைகொண்டவனுக்கு என்றுமாம். [என்தூதாய் அந்நோக்குக்கு இலக்காய்; இன்று வெறுந்தரையான என்தூதாய். [என்செய்யு முரைத்தக்கால் அவனோடே கூட்டச் சொல்லுகிறேனோ? ஒரு வார்த்தை சொன்னல் என்ன சேதமுண்டு? ஆர்த் ரக்ஷணம் சிலர்க்குக் கிடைப்பதொன்றோ? [இனக்குயில்காள்] - இனமாயிருப்பார்க்கு, தனிய யிருப்பாரைக் கூட்டவேண்டாவோ? [நீரலிரே] - நானும்அவனும் சேர இருந்தபோது, போ

போக்கக்கடவர்களல்லீர்களோ? 'நீர்மைக்கு நீங்கள்' என்னுமத்தனையன்றோ? என்னவுமாம். போனால் சொல்லும் பாசுரம் அறியாமலிருக்கிறனவாகக்கொண்டு சொல்லுகிறாள் - [முன்செய்த முழுவினையால்] - அநாதிகால ஸஞ்சிதமான பாபத்தாலே. பாபம் ஸாவதியாதல், பாபம் பண்ணின காலம் ஸாவதியாதலானாலன்றோ என்கையில் என்னைக் காட்டித்தருவது? இதிஹாஸம் - பட்டர் திருக்கோட்டியூரிலே எழுந்தருளியிருக்கச்செய்தே, தெற்காழ்வானும் கோளரியாழ்வானுமென்று இரண்டு திருப்பதியாருண்டு; கோளரியாழ்வான் ஸதாசாரபரனாயிருக்கும்; தெற்காழ்வான் மேலெழத் திரியும்; ஒரு விசேஷதிவஸத்திலே இருவரும் சேர்ந்தவளவில், கோளரியாழ்வான் தெற்காழ்வானை 'இன்றாகிலும் ஒரு முழுக்கிடமாட்டாயோ?' என்ன, 'என்னுடைய பாபம் தெற்காழ்வார்கையில் திருவாழியாலே போக்கப்போமதொழிய ஓரிரண்டுமுழுக்கால்போமதன்றுகாண்' என்ன, அத்தைக் கேட்டு 'இவனை மேலெழ விசாரித்தோமே' என்று வித்தராயருளினார் பட்டர். [திருவடிக்கீழ் குற்றேவல் முன்செய்யமுயலாதேன் அகல்வதுவோ] - திருவடியின்கீழே அந்தரங்கவ்ருத்தி பண்ணுகைக்கு ஏற்கவே ப்ரவர்த்திக்கப்பெறாத நான் அகன்றேபோமித்தனையோ? முன்செய்ய முயலுகையாவது-அதுக்கீடான பாக்யத்தைப் பண்ணுகை; "க்ரியதாமிதி மாம் வத" என்றும், "முகப்பே கூவிப் பணிகொள்ளாய்" என்றும் சொல்லுகிறபடியே கண்வட்டத்திலே நின்று பண்ணுகைக்கு ஈடாக முயலாத நான் அகன்றேபோமித்தனையோ? என்றுமாம். தந்தாமுக்கென்ன ஒன்றில்லாதார் தயநீயரன்றோ? என்று கருத்து. "க்ஷுத்ரபாஷ்பவதீ" என்னக்கடவதிறே. [விதியினம்] - விதியென்று பாபமாய், விதியையுடையோம்; பாவியோமென்றபடி. கீழே "முழுவினை" என்று சொல்லிற்றிறே? என்னில்; மஹாபாபத்தைப் பண்ணின பாவியோமென்றபடி. "பாவமே செய்து பாவியானேன்" என்னக்கடவதிறே. அன்றிக்கே, எங்கள் தலையில் குற்றத்தை இசைந்தபின்பும் அகலுமத்தனையோ? என்றுமாம். இனம் - இன்னம். விதி - உன்கருத்து.

ஈடு.—இரண்டாம்பாட்டு. சிலநாரைகளைத் தூதுபோகவேணும் என்று இரந்தாள் கீழ்; அங்குப்போனால் சொல்லும் பாசுரத்தைக் குயில்களுக்குச் சொல்லாநின்றாள்; "அந்யதுபக்ராந்தமந்யதாபதிதம்" (அந்யதுபக்ராந்தமந்யதாபதிதம்) என்னும்படியாய் வந்து விழுந்தது; இத்தனையும் கலங்கிற்றிலளாகில் இவள் பிரிந்த விஷயத்துக்கும் நாட்டார் பிரிந்த விஷயத்துக்கும் வாசியன்றிக்கே யொழியுமே, இப்படி கலங்கப்பண்ணுதவன்று குணாதிகவிஷயத்துக்கு நமஸ்காரமா மித்தனையிறே.

இரண்டாம்பாட்டு - என்செய்ய. இத்யாதி. இரண்டும் அஸங்கதமென்கிறார் - அந்யதிதி. ஸோऽயம் வாக்யஸந்தர்ப்பஸ்ய விஷயீக்ருத்ய பூர்வாபரவிரோதாபாஸாத் அந்யதுபக்ராந்தமந்யதாபதிதம்', "கண்டூலஹஸ்தாக்ரகஷிதமாத்ர", "க்ஷுத்ராநுவ்ருத்ஷ்: கோவிதாராநாவஷ்" இத்யாத்யநுஸந்தேயம். இப்படி கலங்கலாமோ? என்ன, இத்தனையும் இத்யாதி. இத்தனையும் கலங்கிற்றிலளாகில் இவ்விஷயத்தைப் பிரிந்த இவளுக்கும் இதரவிஷயத்தைப் பிரிந்த நாட்டார்க்கும் வாசியன்றிக்கே யொழியுமென்று அந்வயித்து, ஆழ்வார் தம்முடைய ப்ராவண்யத்தாலே கலங்கினாரென்றபடி. இதுக்கு நியாமகம் - கலங்கிற்றிலளாகில் என்று ஸ்வகர்த்ருகநிர்த்தேசம். விஷய வைலக்ஷண்யத்தாலுங் கலங்கினாளென்கிறார் - இப்படி இத்யாதி. ஆக, இரண்டு வாக்யத்தாலும் இவர் ப்ரமேயத்துக்கும் விஷயவைலக்ஷண்யத்துக்கும் அவத்யமாமென்கிறாரென்றபடி. நமஸ்காரமாமித்தனை என்றது-'நமஸ்ஸாயதநீஷ்டஸ்தே' என்னுமாபோலே பரித்யாஜ்யமாய்விடுமென்றபடி.

[என்]-பிரிந்த ஸமயத்திலும் 'என்னுடையவன்' என்று சொல்லலாம்படிகாணும் கலக்கி
ஸமயத்திலே அவன் இவளிட்டவழக்காயிருந்தபடி. அன்றிக்கே, பிரிகிற ஸமயத்திலே தான்வருமளவு
இவள் தரிக்கைக்காக 'இது எங்கேயிருக்கிலேன்? எங்கே போகிலேன்? உன்சரக்கன்றோ?' என்
சொல்லிப்போமே; அத்தாலே யாகவுமாம். [என் செய்யதாமரைக்கண்பெருமானார்க்கு] - ஸ்
பாவிகமான ஐஶ்வர்யத்தாலும் சிவந்திருக்கும்; ஸ்வகீயவஸ்துக்கள்பக்கல் வாத்ஸல்யத்தாலு
சிவந்திருக்கும்; மதுபாநமத்தரைப்போலே இவளோட்டைக்கலவியாலும் சிவந்திருக்கும்; பிரிவாலே
அரையாறுபட்டுச் சிவந்திருக்கும்; இவையெல்லாம் இவள் அநுபவித்தவளிறே. முதல் திருவா
மொழியிலே ஐஶ்வர்யம், மூன்றாந்திருவாய்மொழியிலே வாத்ஸல்யம், இத்திருவாய்மொழியிலே க
வியும் பிரிவும். [பெருமானார்க்கு] - பிரிகிறபோது கண்ணாலேநோக்கி அநந்யார்ஹையாக்கிப் போ
படி; ஸ்வாபாவிகமான ஐஶ்வர்யத்துக்குமேலே இத்தலையிலொடுக்குமாட்டா லுண்டான ஐஶ்வர்
முண்டாகையாலே இரட்டித்திருக்குமிறே. [என்தூதாய்] - கடலேறிவடிந்தாற்போலேகாணு
கிடக்கிறது. அவனோடே கலந்துபிரிந்து வெறுந்தரையாயிருக்கிற எனக்குத் தூதாய். [என்செய்
முரைத்தக்கால்] - உபயவிபூதியுங் கண்டது உங்களுக்குக் கிஞ்சித்கரிக்கவென்றிருக்கிறாள். [உரை
தக்கால்] - அவனைக்கொடுவந்து சேர்க்கச் சொல்லுகிறேனோ; ஒருஉக்தி நேர்ந்தால் என் செய்யும்
[இனக்குயில்காள்] - என்னைப்போலே தனியிருக்கிறீகளன்றே. [நீரலிரே] - நீர்மைக்கு நீங்களன்றோ
நானும் அவனுமானபோது கேட்ட வார்த்தைக்கு ப்ரதிவசநம் பண்ணின நீங்கள் அவன்பிரிந்தவாறே
வேறு சிலரானிகளோ? [முன்] - நான்பாபம்பண்ணிப்போருகிற காலம் ஸாவதியோ? [செய்த
ஸங்கல்பித்துவிட்டவளவேயோ? [முழுவினை]-அதுதன்னில் ஏதேனும் அகஞ்சுரிப்பட்டதுண்டோ

---

*பிரிந்துபோகட்டுப்போன ஸமயத்திலே "என்னுடையவன்" என்கைக்கு ஹேதுவை இரண்டுவ
யாக அருளிச்செய்கிறார்* - **பிரிந்தஸமயத்திலும்** *இத்யாதி வாக்யத்வயத்தாலே.* **இவளிட்டவழக்காய்** - *இவ
ளீநனாய். **இது** - த்வததீநவஸ்து. **உன் சரக்கு** - உன்பதார்த்தம். பிரிவில் திருக்கண்கள் சிவந்திருக்குமே
என்ன,* **ஸ்வாபாவிக** *இத்யாதி. இத்தால் - தூதர்க்கு நாயகனை யறியும்படி அடையாளஞ் சொன்னபடி.* **அ
யாறுபட்டுச் சிவந்திருக்கும்** - *அர்த்தம் சிவந்திருக்கும். இதெல்லாம் இவளநுபவித்தாளோ? வென்ன,* **இ
யெல்லாம்** *இத்யாதி. எங்கேயநுபவித்தாள்? என்ன,* **முதல்** *இத்யாதி. வாத்ஸல்யமென்றது, 'கணக்கறுந
தனன்' என்றத்தைப்பற்ற. இத்திருவாய்மொழியிலே கலவியும் பிரிவும் என்றது பிரிவு கலவிமுன்னாக வ
மதாகையாலே கலவி அர்த்தாத்ஸித்த மென்றத்தைப் பற்ற. பிரிவில் அரையாறுபட்டுச் சிவந்திருக்கும்படி
இவளநுபவித்தாளோ? என்னில்,-பெரியதிருவடி எடுத்துக்கொண்டு போகிறபோது பிரிவாற்றாமையாலே பு
துபார்க்குமே அவன்; அப்போது கண்ணிற் சிவப்பு அரையாறுபட்டிருக்கு மத்தைக் கண்டு அநுபவித்தா ளென்
படி. 'என்' என்றத்தைக் கண்ணுக்கு விசேஷணமாக்கி ஸாவம் -* **பிரிகிறபோது** *இத்யாதி. 'என்' என்றத
'பெருமானார்க்கு' என்றத்தோடேகூட்டித் தாத்பர்யம்-* **ஸ்வாபாவிகமான** *இத்யாதி. ஆக, 'பெருமானார்க்கு' என்
துக்குப் பிரிகிறபோது கண்ணாலேநோக்கி அநந்யார்ஹையாக்கினவர்க் கென்றும், இத்தலையில்ஸர்வஸ்வாபஹா
பண்ணிக்கொண்டுபோருகையாலேபெருமானாயிருக்கிறவர்க்கென்றும்இரண்டர்த்தம்.* **ஒடுக்குமாட்டால்** *-மாட்
யொடுக்கி யென்றாய், முட்டிக்கோல் கொள்ளுகையாய், ஸ்த்ரீத்வம்முதலான ஸர்வஸ்வாபஹாரத்தாலு மென்றப
மாடு-தநம், ஸர்வஸ்வாபஹாரம். விவரணம்-* **அவனோடே** *இத்யாதி. "ஸ்வாமிதாவ்யுஹ்நிணீயஃ" என்கி
ந்யாயத்தாலே. உரைத்தக்கா லென்செய்யும் - என்னபொல்லாங்கு வரும்? ஒருபொல்லாங்கும் வாராது; ப்ரத்
விபூதித்வயத்தையும் தருமென்கிறார் -* **உபயவிபூதியும்** *இத்யாதி. "உரைத்தக்கால்" என்றதிலே நோக்கா
"என்செய்யும்" என்றதுக்குத் தாத்பர்யாந்தரம் -* **அவனை** *இத்யாதி.* **ஒரு உக்தி நேர்ந்தால்** *- ஒருவார்த்
சொன்னால்.* **என்செய்யும்** *- என்ன ஹாநிவரும்?* **இனக்குயில்காள்** *- மிதுநமான குயில்காள். நீர்மை-க்ருபை
அர்த்தாந்தரம் -* **நானும்அவனும்** *இத்யாதி. முந்தின அர்த்தத்துக்கு, நீரென்று - நீர்மையாய், நீர்மைய
ப்ரவித்தரன்றோ? என்றபடி. த்விதீயார்த்தத்துக்கு, நீரலிரே - நீங்களன்றோ? வேறுசிலரானீர்களோ? என்
படி. 'முழு' என்றதுக்கு - ஸாகல்யமும் மஹத்த்வமும் விவக்ஷிதம்.* **அகஞ்சுரிப்பட்டது** *- குறைந்தது.* *வி

என்னுல் பரிஹரிக்கலாதல், தம்மால் பரிஹரிக்க வொண்ணுதொழிதல் செய்யிலன்றே எனக்கு இழக்கவேண்டுவது. திருக்கோட்டியூரிலே தெற்காழ்வான் கோளரியாழ்வானுக்குத் தீர்த்தந்துறையிலே சொன்ன வார்த்தை. "ஒருமுழுக்காலும் இரண்டுமுழுக்காலும் போகாதுகாண் - தெற்காழ்வார்கையில் திருவாழியாலே வினையையறுத்துக்கொண்டுபோகில் அத்தனை யொழிய ஒன்றிரண்டு முழுக்கால் போகாதுகாண் நான்பண்ணின பாபம்"என்று. [திருவடிக்கீழ்] - ப்ராஹ்மணர் பிச்சேறினுலும் ஓத்துச் சொல்லுமாபோலே, இவர் பிராட்டியானுலும், முலையால்அணைக்க நினையார்; திருவடிகளிலே யணையத் தேடுமேத்தனை. [குற்றேவல்] - திருவடிகளிலே கிட்டி அந்தரங்கவ்ருத்தி பண்ண ஆசைப்படுமத்தனை. **[திருவடிக்கீழ் குற்றேவல் முன்செய்ய முயலாதேன்]** - ஏற்கவே கோலாத நானென்னுதல்; [முன்]- "க்ரியதாமிதிமாம்வத" (க்ரியதாமிதிமாம்வத) என்கிறபடியே இன்னதைச் செய்யென்று ஏவத் திருமுன்பே அடிமைசெய்ய முயலாதே னென்னுதல். [அகல்வதுவோவிதி] - திருவடிகளிலே அடிமைசெய்கைக் கீடாயிருப்பதொரு ஸாதநாநுஷ்டாநம் என்தலையால் பண்ணுத நான் அகன்றேபோ மித்தனையோ? முதலில்லாதார் பலிசையிழக்குமித்தனையன்றோவென்ன, முதலில்லாதாரன்றோ பலிசையிழப்பார்! அவன்தானே முதலாகவிருக்கும் கோஷ்டியிறே இவர்கள் கோஷ்டி ; * "களைகண்மற்றிலேன்" என்றும், † "உன்சரணல்லால் சரணில்லை" என்றும், ‡ "மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும் மற்றவை" என்றும், ¶ "நெறிவாசல் தானேயாய் நின்றானை" என்றும், § "விழிக்குங்கண்ணிலேன் நின்கண்மற்றல்லால்" என்றும், $ "வாழும் சோம்பர்" என்றும் இப்படிகளிலேயிறே இவர்கள் கோஷ்டியில் வார்த்தைகளும் இருக்கும்படி. [விதியினமே] - விதியினன் என்றாய், பாபத்தை யுடையேனான நான்; அகன்றே போமித்தனையோ?

யின் விசேஷணங்களால் பலிதம் - **என்னுல் இத்யாதி.** *இவனால் அபரிஹார்யமென்னுமதுக்கும், அவனால் பரிஹரிக்கலாமென்னுமதுக்கும் ஐதிஹ்யம்* - **திருக்கோட்டியூரிலே இத்யாதி.** *'இந்தப்புண்யதிவஸத்திலே பாபக்ஷயார்த்தமாகப் புண்யதீர்த்தஸ்நாநம்பண்ண வேண்டாவோ?' என்று கேட்ட கோளரியாழ்வானுக்கு என்றபடி. ஸம்ஶ்லேஷிக்கவென்னாதே "திருவடிக்கீழ் குற்றேவல்" என்கிறதென்? என்ன,* **ப்ராஹ்மணர் இத்யாதி. ஓத்து**- *வேதம்.* **அணைக்க** - *ஸம்ஶ்லேஷிக்க.* **முன்** - *ஏற்கவே யென்னுதல், ஸந்நிதியிலே யென்னுதல். இவ்விரண்டர்த்தத்தையும் க்ரமேண அருளிச்செய்கிறார்* - **ஏற்கவே இத்யாதியாலும், க்ரியதாம இத்யாதியாலும். முயலுகை**- *ஒருப்படுகை.* **கோலாத நான்**-*ஸாதநாநுஷ்டாநம்பண்ணக் கோலாத நான். "முன்செய்யமுயலாதேன் இன்னமகல்வதுவோவிதி" என்று அந்வயித்துத் தாத்பர்யம்*-**திருவடிகளிலே இத்யாதி.** *விதி-ஸங்கல்பம்,ந்யாய்யமாதல்.* **இனம்**-*இன்னம்;ஏற்கவே ஸாதநாநுஷ்டாநம் பண்ணுத நான் இன்னம் அகன்றேபோமதுவேயோ ஸங்கல்பம்? என்றுபொருள்; அன்றிக்கே, விதியினம்-"விதிவிடயாநஞ்"என்று புண்ணியமாய், அநந்தன்மேற்கிடந்த எம் புண்ணியனை யுடையோமாய்வைத்தும் அகல்வதுவோ? என்று விவக்ஷித்துத் தாத்பர்யம்*-**முதலில்லாதார்இத்யாதி.** *இந்த யோஜனையில் விதியினம் - புண்யத்தையுடையோ மென்றபடி. பலிசு-வ்ருத்தி.* **இவர்கள்**-*ஆழ்வார்கள்.* **களைகண்மற்றிலேன்**-*வேறொரு கதியுடையேனல்லேன்.* **உன்சரணல்லால்சரணில்லை**-*தேவர் திருவடிகளல்லது வேறுஉபாயமில்லை.* **மைத்தெழுந்த இத்யாதி**-*ஆகாசத்திலே கறுத்தெழுந்த மேகங்களையே பார்த்திருக்குமத்தனையல்லது நீர்நிலந் தேடிப்போக அறியாத பயிர்போலே.* **நெறிவாசல் இத்யாதி** - *உபாயமும், தத்ஸாத்யமான உபேயமும் அநந்யஸாத்யனான தானேயாய்க்கொண்டு நின்ற ஸர்வேஶ்வரனை.* **விழிக்கும் இத்யாதி** - *உன்னுடைய கடாக்ஷமொழிய வேறுநோக்குகைக்கு ஒரு மறுவிழியை யுடையேனல்லேன்.* **வாழும்சோம்பர்** - *உன் பக்கலிலே ந்யஸ்தபரராய் ஸ்வஹிதத்திலே சோம்பினவர்கள். உபாயம் ஈஶ்வரனேயானால், பின்பு ஹேயமே யுள்ளதாகையாலே ஸ்வஹிதத்தில் சோம்பியிருக்கும் இருப்புத்தானே வாழ்ச்சியானஇருப்பாயிருக்கு மென்றபடி. அன்றிக்கே, 'விதி' என்றதுக்கு-பாபமென்று அர்த்தாந்தரம்.* **விதியினமே இத்யாதி** - **விதியினன்** - *பாபத்தையுடையனான நா னென்றபடி. இந்தப்பக்ஷத்தில் "மனக்களுழறிவரும்" என்றத்தைக் கண்டுகொள்வது. 'திரு*

* *திருவாய்மொழி, ரு - அ-அ.* † *பெருமாள் திருமொழி, ரு - க.* ‡ *ஷை, ரு - எ.* ¶ *முதல் திருவந்தாதி, ௬.* § *பெரியாழ்வார் திருமொழி, ரு - க - உ.* $ *திருமாலை, ௩அ.*

என்னுதல்; "இனம்" என்ற இத்தை இன்னம் என்ருக்கி, 'எங்களபிமதம் பெறுகைக்கு எங் பக்க லொரு நன்மையில்லாதபின்பும் தாழ்க்குமித்தனையோ ? என்கிருள்' என்று பிள்ளை திருந யூரரையர் பணிக்கும்படி. விதியினம் - பாவியோ மென்றபடி. கீழே 'முழுவினை' என்று லிற் றிறேயென்னில்; மஹாபாபத்தைப் பண்ணின பாவியோ மென்றபடி; *" பாவமே செய்து பா யானேன்" என்னக்கடவதிறே.

மூன்ரும் பாட்டு.

விதியினல்பெடைமணக்கும் மென்னடையஅன்னங்காள் !
மதியினல்குறள்மாணுய் உலகிரந்தகள்வர்க்கு
மதியிலேன்வல்வினையே மாளாதோவென்றுஒருத்தி
மதியெல்லாமுள்கலங்கி மயங்குமாலென்னீரே.

ஆ.—(விதியினல்.) பாபம்பண்ணினல் அது மாளுந்தனையும் அநுபவிக்கவே டாவோ? என்னில், என்னுடைய பாபமேயோ காலமெல்லாம் அநுபவித்தாலும் மாளாதது தென் ஒருத்தி மதியெல்லா முள் கலங்கி அறிவிழந்தாளென்று, தன்னுடைய திவ்யசேஷ்டிதங்களா என்னைத் தோற்பித்தவனுக்குச் சொல்லுங்கோளென்று, பாக்யாதிசயத்தாலே பரஸ்பரம் ஸம் ஸ்லேஷித்து வர்த்திக்கிற சில அன்னங்களைக் குறித்துச் சொல்லுகிருள்.

ஒ.—மூன்ரும்பாட்டில், "தாந்தாம்பண்ணின பாபம் தாந்தாமே அவஶ்யம் அ பவிக்கவேண்டாவோ?" என்று உபேக்ஷித்திருக்கிறனாகக் கொண்டு எல்லைச்சதிரியான சிந்தயந் பாபம் அநுபவவிநாஶ்யமாகலாம்; நான் பண்ணின பாபமேயோ அநுபவ விநாஶ்யமாகாதே தென் எம்பெருமானுக்கு விண்ணப்பம் செய்யவேணுமென்று சில அன்னங்களை அர்த்திக்கிருள்.

[விதியென்று தொடங்கி] - நான்பண்ணின பாக்யத்தாலே பேடையோடே ஸம்ஶ் ஷித்து அந்த ஸம்ஶ்லேஷ ரஸத்தாலே ஆகர்ஷகமான நடையையுடைய அன்னங்காள்! புத் யோகத்தாலே வாமநவேஷனாய் குணசேஷ்டிதாதிகளாலே ஈடுபடுத்தும் ஸ்வபாவனானவனுக் [ஒருத்தி] - ஒருத்தியென்னவே, தானே "இன்னள்" என்று அறிகிறானிறே என்று கருத்

அருளாதநீரருளி - முந்தின அர்த்தத்தில ஸங்கல்பத்திலே லக்ஷணை வ்யாக்யாதாவின் கருத்து - மயர்வற இத்யாதி நிரதிஶயக்ருபாவிஷ்டத்வாத் அருளாத நீர் இத்யாதி தமைந்து - அது பலியோசயாமலிக்கே யிருக்கை த்வித்யார்த்தத்துக்குச் சேர பாவம அருளேநிரூபகம்இத்யாதி 'நீர்' என்கிற பதத்திலே தயாநிரூபயத்வம தோற்றுகிறதென்று கருத்து 'அவராவிதுவராமுனனருளி' என்று அந்வயித்து, 'அருளாதநீர்' என்றதின் முந்தின அர்த்தத்துக்குச் சேர ஸங்கதி - பின்னையும் இத்யாதி பதார்த்தம - அவளுடைய இத்யாதி முன்னே அருளவேணுமென்றதுக்கு ஸம்வாதம - ஜீவந்தீம் இத்யாதி ஸமுத்ரகாஞ்சீ ஸீதா "த்வயா ஸமுத்ரகாஞ்ச்யா" ... "ஸகருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி யாசதே। அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம" ... 'அருளாழிப்புள' என்றதுக்கு அவதாரிகை - நாங்கள் இத்யாதி ஆழி - கடல் போலே, 'வெஞ்சிறைப்புள' என்றதை,

அருட்கடலான புள்ளை "வெஞ்சிறைப்புள்" என்றாள் கொண்டுபோனபடியாலே, இப்போது வரவுக்கு உடலாகையாலே "அருளாழிப்புள்" என்கிறாள். [கடவீர்] - அங்ஙனே அவர் கண்டு வாழாகைக்கும் ஸம்ஸ்பர்சத்தாலுமாகப் போகாதே பிசுகிச அழியாநிற்குமிறே; அசேதனமான ரதத்தோபாதி வடிம்பாலே தாக்கி நடத்த வேணுமாயிற்று. எங்கேதான்? என்னில், [அவர்வீதி] - அவள் தெருவிலே அங்ஙன் செல்லுமோ? ஒருதெருவிலே பலகால் போகப்புக்கவாறே "இது வேறொன்று" என்னாரோ? என்னில், [ஒருநாள்] - நாங்கள் ஜீவித்துக் கிடக்கைக்கு ஒருநாள் போகவமையும். [அருளாழியம்மானை] பெரிய திருவடியும் மிகை, *"தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல் என்னடியார் அது செய்யார்" என்னுமபடி அருட்கடலானவனன்றே அறிக்கே, திருவடி ஒருவனுமாயிருந்ததோ! அங்கு கையாளாயுள்ளாரடைய நம பக்ஷரமன்றோ? அருளே நிரூபகமாகவுடைய திருவாழியைக் கையிலே உடையவனை அருளார் திருச்சக்கரமிறே! ஸர்வேச்வரனுக்கும் கைக்கூலியாடப்பை வாங்குவது இங்கேயிறே! ஸர்வேச்வரனபக்கல் அருள் மறைத்தாலும் அருள் கூடக் கடைநிற்கும் இடமிறே. [இது சொல்லியருள்]-இத்தனையுஞ் சொல்லியருளவேணும் என்னவில்லை, "அருளாழிப்புட்கடவீர் அவர்வீதியொருநாள்" என்கிற வார்த்தைமாத்ரம் சொல்லியருளவேணும். [ஆழிவரிவண்டே] பரமஹம்ஸமாய அழகிதான வண்டே! என்றுதல், ரேகை சிறந்திருக்கையதே காம்பீர்யம் பெருத்திருக்கிற படியைச் சொல்லுதல். ஆழியென்று - வட்டமாய, சுழலப்பறக்கிற வண்டே என்னுதல். கடகருடைய ஆத்மகுணத்தோபாதி ரூபகுணமும் உத்தேச்யமென்றாக. [யாமுமேனை பிழைத்தோமே] நாங்கள் என்ன தப்புச்செய்தோம்? தம் பிரிந்து துவளவிட்டு வைத்தாற்போலே, நாங்களும் க்ரமத்திலே பெறுகிறோமென்று ஆறியிருந்தோமோ? நீயகின் காலிலே

' அருளாழிப்புள் ' என்றுல் ... என்ன, வெஞ்சிறை இத்யாதி 'நீர்கொடல்' ... அசேதன ... என்ன, அநுகூலர் இத்யாதி ... அசேதநமான இத்யாதி - ... வடிம்பாலே தாக்கி - ... மாத்தலே குத்தி அங்ஙன் செல்லுமோ - அப்படி புக்கபோது இதுவேறொன்று - இது வேறுபிரயன்று ... என்ன - நாங்கள் இத்யாதி அருளாழியம்மானை ... மிகை அதிசய ... திருவடியும் மிகையாம்படி ... என்ன, தாமரையாளாகிலும் இத்யாதி - பெரியபிராட்டியாரே யாகிலும் குற்றஞ்சொல்லுவாளல்ல, என்னடியார் குற்றஞ்செய்யார் என்று சொல்லும்படி கையாளாயுள்ளார் - பரிகரமாயுள்ளார், கையிலேயிருக்கிறதாக சொன்னதாம் ... அருளே நிரூபகமாக இத்யாதி அப்படி அருளே நிரூபகமாயிருக்குமோ? என்ன, அருளார் இத்யாதி. 'ஆர்' என்றதற்கு அர்த்தம் ஸர்வேச்வரனுக்கும் இத்யாதி கைக்கூலியாடப்பை வாங்குகை - ... 'கைக்கூலி - ஆடப்பைக்கூலி' என்று சொல்லிய பரியாயம். ... 'கைக்கூலியாகத் தாரும், ஆடப்பைக் கூலியாகத் தாரும்' என்று சொல்லுகை ... ஸர்வேச்வரன் இத்யாதி - ... ஸர்வேச்வரன் பக்கல் இத்யாதி அருள் மறைத்தாலும் - ... அருள் கூடக் கடைநிற்கும் ... இருக்குமென்று ... ஆழியென்று - ... விகசித்து - பரமஹம்ஸமாய் இத்யாதி ஆழியென்று - ஆழமாய, அத்தாலே - காம்பீர்யம் விகசித்து, ரேகை இத்யாதி ... ரேகை சிறந்திருக்குமென்று அர்த்தம். ஆழியென்று - வட்டமாய, அத்தாலே - சுழலுதலைச் சொல்லுகிறது - ஆழியென்று இத்யாதி இரண்டு பொருளுக்கும் ... இரண்டர்த்தத்திலே, இதுக்கு காம்பீர்யமாவது - சொன்னதைக் கடக்கும் ... ஆத்மகுணம் ... ப்ரபாவம் - கடகருடைய இத்யாதி 'யாமும்' என்ற உம்மையர்த்தம் - தாம்பிரிந்து இத்யாதி துவளவிட்டு - ... ஆறியிருந்தோமோ? என்ன, நீயகின் இத்யாதி நீயகின் காலிலே - "ஸா ஸ்ரீ ...

* பெரியாழ்வார் திருமொழி ௪-௯-௨

விழுவாரும், தூதுவிடுவாரும், தாமாயிருக்க, அத்தலை இத்தலையாயும் வாராதிருக்கிற தம்மதோ குற்றம்? எங்களதோ? (௬)

ஏழாம் பாட்டு.

என்பிழைகோப்பதுபோலப் பனிவாடையீர்கின்ற
என்பிழையேநினைந்தருளி அருளாததிருமாலார்க்கு
என்பிழைத்தாள்திருவடியின் தகவினுக்கென்றொருவாய்சொல
என்பிழைக்குமிளங்கிளியே! யான்வளர்த்தநீயலையே

ஆ — (என்பிழை) தாமரைப் பிரியாநின்ற வ்யஸநத்தின்மேலே எலும்பிலே இழைகோத்தாற்போலே என்னைப் பனிவாடை ஈராநின்றதாகச் செய்த்தையும், என் கருணையை ஒன்றும் நினையாதே என்பிழையே நினைந்தருளி அருளாதிருக்கிறவருக்கு, நான் ஏதேனும் பிழைசெய்தால் தம்முடைய கருணைக்கு விஷயமல்லாதொரு பிழையுமுண்டோ? என்று ஒருவார்த்தை சொல்லவேணும்; என்னுடைய நிறக்கேடு காட்டியும் அவனுடைய திருநாமத்தைச் சொல்லியும் என்னுடைய எலும்பை இழைக்கிற இளங்கிளியே! அவருக்குச் சொல்லுமிடத்தில், அவர் வார்த்தையை மறுத்தருளினும் பிராட்டி திருமுகம் பார்த்து வார்த்தை சொல்லவேணுமென்று இத்தனைக்கும் உறவுபோராதோ? என்கிறாள்.

ஒ — ஏழாம்பாட்டில், இத்திருவாய்மொழிக்கு நிதானமான அபராதஸஹத்வத்தை அநுஸந்தித்து, 'என்னுடைய இக்குறைக்கு நான் புறம்போன' என்று எம்பெருமானுக்கு அறிவி' என்று ஒரு கிளியை நோக்கிச் சொல்லுகிறாள்.

[என்பிழை என்று தொடங்கி] விரஹவ்யஸநத்தாலே எலும்பை இழைகோத்தாற்போலே பனிவாடை ஈராநின்றது, நிரதிசய க்ருபாவானான தனக்கு இங்ஙனே நோவுபடக் கண்டிருக்கை போராதென்று பாராதே பொட்டியோடே கூடி என்குற்றங்களையே அநுஸந்தித்து கருணைபண்ணாதிருக்கிறவனுக்கு என் அபராதமெல்லாம் பொறுக்கக்கூடும்படி பிராட்டி ஸந்நிதியிலே அறிவியென்று கருத்தாகவுமாம் [என்பிழைத்தாளென்று தொடங்கி] ஸ்வாமியான உன்னுடைய அபராதஸஹத்வத்துக்கு விஷயமன்றிக்கே நோவுபடுகைக்கிடான என்ன தப்புச் செய்தாள்? என்று ஒருவார்த்தை சொல்லு [என்பிழைக்குமென்று தொடங்கி] பரமஹம்ஸமான நிறத்தாலும் வடிவழகாலும் பவ்யதையாலும் மெல்லப்பேச்சாலும் வாயின் சிவப்பாலும் பருவத்தாலும் எம்பெருமானோடு ஒப்பொத்திருக்கிற உன்படியைக் காட்டி எலும்பை யிழைத்து நோவு படுத்துகிற இளங்கிளியே! என்பிழைக்கும் என்ன தப்புண்டா மென்னவுமாம் [யான்வளர்த்த நீயலையே] தாய்மாரைப்போலே நீயும் நலிவையோ?

ப — அநந்தரம், அவர் தம்முடைய அகலிக்கருணைக்குச்செய்ததொரு தப்புண்டோ? என்று சொல்லென்று, தான் வளர்த்ததொரு கிளியைப் பார்த்து வார்த்தை சொல்லுகிறாள்.

ஜு. கி. "ஆழ்வு அரிவனே, அருளாழிப்புட்கடவீர் அவர்வீதி ஒருநாள் என்று இது சொல்லியருள, தங்கள் குறைபாராதே வாசொல்லுகிறது என்? பட்டோலைக்கென்னில், யாமுமென்பிழைத்தோமோ என்று சொல்லியருள, அதாவது இத்தனையுஞ் சொல்லியருளவேணுமத்தனையே (௮)

என் பிழைக்கும் இளங்கிளியே (உன்னுடைய ரூபசோபையாலும் வடிவின் மென்மையாலும் மனோஹரமாய்க்கொண்டு) என் உயிரைச் செகுக்கின்ற கிளியே! யான் வளர்த்த நீயல்லையே - (பருவம் செய்துக்கும் இளமைக்கு ஈடாக) நான் வளர்த்துப்போந்த நீயல்லையோ? (என்கிறாள்.)

என் பிழை கோப்பது போல - என்னுடைய பிழை எல்லாவற்றையும் கோத்துக் கொண்டாற்போலே, பனிவாடை - குளிர்ந்த வாடை, ஈர்கின்றது - ஈர்கின்றது, என் பிழையே நினைந்தருளி - (இவள் பக்கல்) அபராதத்தையே நினைத்தருளி, (தம்முடைய குணங்களைப் பாராமல்), அருளாத - கலக்குமார்க்க, திருமாலார்க்கு - அருளுவதற்கு நல்லராயிருக்கிற அவர்க்கு, திருவடியின் - திருவடியினுடைய, தகவினுக்கு - வாத்ஸல்ய குணத்துக்கு, என் - என்ன, பிழைத்தேன் - தப்புச் செய்தேனென்று, ஒரு வாய்ச்சொல் - ஒரு வார்த்தையைச் சொல் - சொல்லிவிட்டுவாய் - வார்த்தையை, என் பிழைத்தான் - உன்னைப் பெறுவதற்கு தான் என்ன தப்புச் செய்தான்? என்று ஒரு வார்த்தை சொன்னால் என்ன பிழையுண்டாமென்றபடி. "ஈர்கின்றது" என்றது பாடம் [illegible] உடையவருடைய அபிப்பிராயம், [illegible] தோற்றுகிறது.

இ—ஏழாம் பாட்டில், தம்முடைய அபராதங்களைக் கண்டு [illegible] என பிழையென்று அவர்க்கு அறிவிப்பாய் என்று கிளியைப் பார்த்துச் சொல்லுகிறாள்; இத்திருவாய்மொழிக்கு நிதானமான பாட்டாயிருக்கும் இது.

[என் பிழை கோப்பது போல] - என்னுடைய [illegible] கோத்துக் கொண்டாற்போலே. [பனிவாடை] "வாதவர்ஷதி ச தீவ்ரவேகா" என்கிறபடியே மண்டி குளிர்ந்து போரும் வாடை இப்போது வருகிறபடி [ஈர்கின்றது] - ஈர்கின்றது [illegible] "வ்ருக்ஷமா [illegible]" [என் பிழையே நினைந்தருளி] வாடை ஈர்த்தபடி போராதென்று [illegible] "வஸ்ரஸ [illegible]" என்கிறபடியே தோஷத்தில் [illegible] இருக்கிறது. [அருளாத திருமாலார்க்கு] - என் பிழை பார்த்தால் கைவிடுமோ, "ந ஜஹ்யாம்" என்னுமவரோடே அன்றோ இருக்கிறோம்? [illegible] 'அபராதங்களைக் கணக்கிடுவார்க்கு அவளும் கூட இல்லை' என்னுமவள். [என் பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு] அவாமியான உம்முடைய தகவினுக்கு என்ன தப்புச் செய்தாள்? அபராதம் [illegible] அதுக்கு அடியான தவ - தகவு [illegible] என் பிழை அனாதிகாலம் [illegible] தம்முடைய க்ஷமைக்கு எல்லை போரும்? "[illegible]" [திருவடியின் தகவினுக்கு] - இழவு பேறு தம்மதாம்படியான முடலுக்கு [illegible] குறைந்தாய் வைத்திட்டது அமையாதோ? பாபத்துக்குப் போராது, க்ஷமைக்கும் போராது [ஒருவாய்ச் சொல்] - ஒரு வார்த்தை சொல்லு. [என் பிழைக்கும் இளங்கிளியே] - பருவத்தாலும் நிறத்தாலும் வாயின் பழுப்பாலும் பேச்சின் இனிமையாலும் அவருடைய வடிவைக் காட்டி என்னைப் பிழைக்கிறாய் நீ, ஒரு வார்த்தை சொன்னால் என்ன [illegible] உண்டாமோ [யான் வளர்த்த நீயல்லையே] - கல்தார் செய்யுமவற்றை வயிற்றில் பிறந்தாரும் செய்வரோ? இவளைக் கிலேசப்படுத்தச் செய்து நீயும் செய்யவோ?

௮டு — ஏழாம்பாட்டு தன்னுடைய அபராதத்தைப் பாராதே, "அருளாழிப்புள் கடவீர் அவர்வீதி" என்று சொல்லுமித்தனையோ வேண்டுவது அவர்க்குக் கருத்தாக; எங்கள்

ஏழாம்பாட்டு - என் பிழை இத்யாதி [illegible] 'என் பிழைத்தேன்' என்று பிழையை

குறைமொன்றுமேயோ பார்ப்பது? தம்முடைய அபராதஸஹத்வம் பார்க்கக்கடவ தன்றே? என்று சொல்ல என்று தனகிளியை இரக்கிறாள்

[என் பிறை கோப்பதுபோல] எலும்பும் நரம்புமேயாம்படி சரீரந்தான் போர க்ருசமாயிற்று எலும்பைத்தோளைத்து, அதிலே ஜாதமா யிருப்பதொன்றை வ்யாபரிப்பித்தாற்போலே யாயிற்று, பனிவாடையாகின்றது நஞ்சூட்டின வாடையானது இருக்கிறபடி. "வஜ்ராவபந்நாதம்" (பம்போபவநமாருதம்) என்று நாயகனுக்கிருந்தாப்போலே இராநின்றதுகாணும் இவ்வாடை இவளுக்கு "பத்மஸௌகந்திகவஹம்" (பத்மஸௌகந்திகவஹம்) கலம்பகன் சூடுவாரைப் போலே தாமரையோடை செங்கழுநீரோடைகளிலே சென்று புக்கு, "பூவிலிழியில் அதில் வேகைகை தட்டுமே" என்று, மேலே நின்று, அரிகீதியான பரிமளத்தைக் கொய்துகொண்டு வாராநின்றது "சிவம்" (சிவம்) கலப்பற்ற பசுந்தேனாய் யிராநின்றது அகாலத்தில் பறிப்பே சிலாக்கு உடம்பு கொடுத்துச் சுணங்காதியாதே காயத்தலைத் தொன்றாயிருந்தது "சோகவிநாசநம்" (சோகவிநாசநம்) நம்மை இனி ப்ராணனோடே வைத்து நலியாதுபோலே யிருந்தது "தந்யாஸ்" (தந்யாஸ்) காற்று வாராநின்றதென்று, ஏநாகதல் கதவம் தேடிப்பதொன்றை படுக்கிறவர்களும் சிலரே "ஸுக்ஷ்ண வைவஸ்தே" (ஸுக்ஷ்ணவைவஸ்தே) இதுபோலே வந்தது என்றிருப்பார்கள் "வஜ்ராவபந்நாதம்" (பம்போபவநமாருதம்) 'அந்தரந்தில் நெருப்பு' என்றாற்போலே இப்படி மஹர்ஷியானவர் வாடைக்கு இடைந்து நோவுபடாநிற்க, இதைப் பரிஹரிக்கக் கடவ அவர், கடலடைப்பது படைதிரட்டுவதாகிறபடி. நாயகநாயகிகள் ஒருவரையொருவர் பிரிகவாறே அந்தராஜாதிகாலிலே துணை யுண்பதே இப்படி? *(அந்தரத்திலே ஜாதமானது அந்தரஜாதி ஆகாசாதவாயுவிறே கால்

கடலைப்பண்ணியுண்டானதால் அருளிச்செய்த இப்படி, கடலைப்பண்ணியுண்டானதால் அருளிச்செய்கிறார்

உடம்பென்றும் 'என்பு' என்றதால் பாவம் - எலும்பு இத்யாதி ஸர்வமாமிசம் சொல்லை என்றாலே - 'இறை' என்று - ஸர்வமான ரஸவாதிகளுக்கும் உபலக்ஷணமென்றபடி. கோப்பது தொளை யிலேயாகையாலே தொளைத்தென்று - அதுதவிதம் 'பனி' என்ற விசேஷித்ததற்கு பாவமுந்து' என் இத்யாதி பனிவாடை யென்றதற்கு தாத்பர்யம் வஜ்ராவபந்நாதி இவ்வோகத்துக்கு வ்யாக்யானம் பண்ணுவதாக இக்கொண்டாடி வஜ்ராவநாதி கிஷ்கிந்தாகாண்டம் - "வஜ்ரவண் பத்மஸௌகந்திகவஹம் சிவம் சோகவிநாசநம் தந்யா ஸ்ந்ஷண வைவஸ்தே வஜ்ராவபந்நமாருதம்"

ஸௌகந்திகம் - செங்கழுநீர் புஷ்பங்களையுடைத்தாகைக்கு தருதல் - கலம்பகன் இத்யாதி கலம்பகன் - நானாபுஷ்பங்களை தொடுத்த மாலைவாணமாலை - ஸாஸ்ஸ பலஸௌகந்திகங்களை தத்தந்தவர்க்கள் என்று திருவுள்ளம்பற்றி அருளிச்செய்கிறார் - பரிமளியில் இத்யாதி அரிகீதியான என்றது - சாடு அரி யாலே - வண்டாலே பிதிக்கப்பட்ட பரிமளமென்று ஸ்வபாவார்த்தம் அரியையிதித்த செல்லென்று சாடு அது போலே ஸ்லாக்யமான பரிமளமென்றபடி கொய்துகொண்டு - கவர்ந்துகொண்டு சிவம் - சாத்தம் சுகாஸ்வாதி யாதே - தன் அதிஶயமாகுமன்றே காயத்தலைத்தொன்றாய் - தாய - பாதமத்திலேயுண்டாய தலைத்தென்றல ஸ்லாக்யமான தென்றலென்றபடி சோகவிநாசத்வம் - ப்ராணவிநாசகமா என்னுமதுதன வாததாளத்தாக்கு அர்த்தம் - இதுபோலே இத்யாதி இதுக்கு - லேவினாமத்தில் அபர்யாப்தியில் லோகத்து அந்தரத்தில் நெருப்பு பட்டாளம் 'அந்தரத்தில் நெருப்பு' இத்யாதி வாசயாகந்தரத்திலே, 'நாயகநாயகிகள்' இத்யாதி வாக்யத்தில் ஸ்வஸ்திகல்பம் மேலுக்கு அவதாரிகை-இப்படி மஹர்ஷியானவர் இத்யாதி இது வ்யதிரேக லக்ஷணை அந்தராஜாதி காலிலே-அந்தரத்திலே - ஆகாசத்திலே ஜாதியை - ஜன்மத்தையுடைய, காலிலே - காற்றிலே என்றபடி 'ஆகாசாத் வாயு:' இதே ஸ்ருதி ஸித்திலேன்று தவிர இதைப்பரிஹரிக்கைக்கு அவ கடலடைப்பது படைதிரட்டுவதாகிறபடி என்ற வ்யதிரேகலக்ஷணயோகத்துக்கு கடுமையாகத் நான்படு

* குண்டலிதம் வ்யாக்யானதிருத்தம் என்பர்

காற்ற) [எனபிழையே நினைதருளி] - காணபடுகிற க்லேசம போராதேன்று கிடாம்படைச்சியை வாசியாரினருர், அவிஜ்ஞாதாவாகை தவிர்க்க, "ஸர்வஜ்ஞ: ஸர்வசக்தி:" (ஸர்வஜ்ஞனும் ஸர்வசக்தனும்) எனகிற படியே இப்போதுதோஷத்தில் ஸர்வஜ்ஞராயாயிற்று இருக்கிறது [அருளாததிரு மாலார்க்கு] "அகஸ்மாத் அனவாப்த்யா கி" (தகம்சிங்காபராத்யதி) என்பாரும் அருகே யிருக்க, எங்கள் குற்றம் பார்த்து அவள்பக்கல் முகமபெறவிருக்கிறரோ?" என்று நஞ்சீயர் அருளிச்செய்யும் படி. "நானிப்படி நோவுபடவேண்டுகிறது அவனுக்கு அவள் முகங்கொடுத்து அங்கே துவக்குண்கையிறே" யென்று இனைக்குதாகிறாள்" என்று பிள்ளான் பணிக்கும்படி. உறவுள்ளாவிடத்திலேயிறே வெறுப்புமாவது அருளாதொழிகிறதென்? என்றால், தந்தாமகுற்றம் பாராதே அருளச் சொல்லுகிறதல்லவோ வேண்டுவது? என்று "சொல்ல நினைத்தாராகில் நீங்கள்தான இங்ஙனே சொல்லுங்கோள் என பிழை தான் திருவடியின் தகவினுக்கு என்னுங்கோள் எனகுற்றத்தைப் பார்த்து தரிக்க நினைக்காராகில், தமபொறையாகிற நோதவைக் காட்டுங்கோள் ஸ்வாமிகளான தம் பொறை வழியிலே எங்களாற் குறைந்து போமோ? என்னுங்கோள் ஆமராயத்துக்குத் தக்கபடியன்றோ எதுமாமே; நாங்கள் குற்றஞ் செய்வதும் எங்களளவிலே, தாம பொறுப்பது தம்மளவிலே யன்றோ? [திருவடியின தகவினுக்கு என பிழைத்தாள்] "தேவரீர் க்ருபைக்குத் தண்ணீர்க் துரும்பாக ஏதேனும் பரதந்தின நமஸ்காராதிகள் பண்ணிற்றுண்டோ" என்று நம்பிள்ளை அருளிச்செய்யும்படி. [தகவினுக்கு] "ஆநுருஸம்ஸ்யம் பரோ தர்ம:" (ஆந்ருசம்ஸ்யம்பரோதர்மம்) என்று சொல்லும்படி யிருக்கும் ரீலக்கு என் பிழைத்தாள் - என்ன தப்புச் செய்தாள்? "அபராத ஸஹஸ்ரம்" (அபராதஸஹஸ்ரம்) என்று ளிறே தானை ராஜபுத்ரர்களை காகுஸ்தன் பின்னுக்கு ஒழித்த நம்பிரானைத் தானகள்போகப்ரமாணமா

[illegible] இத்யாதி கிடாம்படைச்சியை - பழுக்கனைச்தர்க்கனிலே கிடந்த கிழவியை 'பிழையே' எனகிற ஏவகாரத்தம் - அவிஜ்ஞாதாஹ்ருதி ஸ்ரீஸஹஸ்ரநாமத்தி - "அவிஜ்ஞாதா ஸஹஸ்ராம்சு: [illegible]" பூர்வாஷுபரிசதோஷவிஷயத்திலே அவிஜ்ஞாதாவாய, குணவிஷயத்திலே ஸர்வஜ்ஞனாய் - ஸர்வஜ்ஞராய் போர்த்தை இப்போது அந்த ஆகாரத்தை விட்டு, தோஷஜ்ஞராய் இருக்கிறாரென்ற படி. நிருமாலார்க்கு என்றதுக்கு - திருவிடத்திலே [illegible] என்று பேர் [illegible], திருவினைமுக்கு விஷயபூதரென்று பிள்ளானிர்வாஹம். எனக்கு அருளாமையாலே, இவர் திருவிடத்திலே [illegible] பெருமிதத்தை போக்கி, அவன முகங்கொடாமை என்று பேர் நிர்வாஹத்துக்கு அர்த்தம் அருளாதொழிகைக்கு ஹேது - அவனுக்கு அவள் பராமுகமாய், தன்பக்கல் பெறுகைக்கு விஷயமாக்கி முகங்கொடுத்துக்கொண்டிருக்கையிறே யென்று பிராட்டியை இன்னதென்றென்று பிள்ளானிர்வாஹத்துக்கு அர்த்தம் [illegible] [illegible] "[illegible]" இன்றதுகிறாள் - வெறுக்கிறாள் ஸ்வாமிகளை வெறுக்கலாமோ? என்ன, உறவுள்ளவிடத்திலே இத்யாதி ஸம்பந்த ஜ்ஞானமுண்டாகிற 'தகவு' என்றதுக்கு - பொறையாக அர்த்தம் - என்குற்றந்தை இத்யாதி தரிக்க தண்டிக்க (நீத்தால்) - விரோதத்திலே 'திருவடியின் தகவினுக்கு' என்ற கூட்டி பாவார்த்தம் - ஸ்வாமிகள் இத்யாதி. செய்யபோகதபடியென்? என்ன, ஆமராயத்துக்கு இத்யாதி விபுத்வனுக்கு ஸம்பந்தத்துக்கு என்றபடி. விவரணம் - நாங்கள் இத்யாதி இத்தபலத்திலே பிழை - அக்ருத்யகரணம். 'தகவு' என்றது க்ருபையாக அர்த்தாந்தரம் - தேவரீர் இத்யாதி இத்தபலத்திலே பிழை உபாயாந்தரங்களை. விவரணம் . ஆந்ருசம்ஸ்யம் [illegible] [illegible] [illegible] இதுக்கு அர்த்தம் - ராஜபுத்ரர்கள் இத்யாதி. [illegible]

யிருந்து அவற்றையொன்றையும் புகுதப்பண்ணாதே, 'உம்முடைய கோபத்துக்கு அடியேன்?' என்றிறே, அவர்கள் பொறையை நினைத்திருந்த கனத்தாலே “[illegible]” (மநுஜேந்த்ரபுத்ர)- அறுபதினாயிரமாண்டு செய்தார் செய்த குற்றங்களைப் பொறுத்துச் சேரவிட்டு ஆண்டுகொண்டு போந்தான உங்கள் தமப்பனார், அவன் வயிற்றிலே பிறந்து குற்றஞ்செய்தோமென்று தலையறுக்க வந்து நின்றீர் நீர், அழகிதாயிருந்தது உம்முடைய போக்கு! “கஸ்தேந ஸந்திஷ்டதி வாங்நிதேசே” (கஸ்தேந ஸந்திஷ்டதி வாங்நிதேசே) பரஸ்தரவம்ய மனறிக்கே கண்டத்திலே கட்டிச் சாபத்தைப் பண்ணி மீளமாட்டாத திர்யக்குக்களை நீரே 'இழந்த போகங்களைப் புஜிப்பது' என்று சோத்துவிட்டு, நீர் சொல்லிற்றுச் செய்தனவென்று தலையறுக்க வந்து நின்றீர் இப்படிச் சொல்லலாம்படியிறே இவர் பொறையிருப்பது [ஒருவாய்ச் சொல்] “ஒருவாய்” என்றது ஒரு வார்த்தை யென்றபடி. “சொல்” என்றது சொல்லு என்றாய், ஒருவார்த்தை சொல்லு என்றபடி. [என் பிழைக்கு மிளங்கிளியே] மௌக்த்யத்தாலும் ஸங்கீதமான பணிதியாலும், வடிவில் பசுமையாலும், வாயில் பழுப்பாலும் நாயகனுக்கு ஸ்மாரகமாய் எழுமையையிழைக்கிற கிளி யென்னுதல், என் பிழைக்கும் என் தன்மையை அறிவித்தால் என்ன தப்புண்டா மென்னுதல் [யான் வளர்த்த நீயலையே] ஸ்ரீயப்பதியாய்த் தான்தோன்றியாயிருப்பார் செய்வதை வயிற்றில் பிறந்தாரும் செய்வரோ? கலந்துபிரிந்தார் செய்வதை வளர்த்தவர்களும் செய்வர்களோ? [யான் வளர்த்த நீயலையே] அவன்தான் இப்படிச் செய்யவேண்டிச் செய்தானோ? என்னோடுடை ஸம்பந்தமன்றோ அவன் இப்படிச் செய்தது? அப்படி என்னோடுடை ஸம்பந்தம் உனக்கு முண்டானபின்பு, நீ நலியச் சொல்லவேணுமோ? [யான் வளர்த்த நீயலையே] எனக்குத் தக்காற்போலே யன்றோ நீயும் இருப்பது, உனக்குக் குறையோ? (எ)

எட்டாம் பாட்டு.

நீயலையே சிறுபூவாய்! நெடுமாலார்க்கு என்தூதாய்
நோயெனது நுவலென்ன நுவலாதே யிருந்தொழிந்தாய்
சாயலொடு மணிமாமை தளர்ந்தேன் நான் இனி உனது
வாயலகில் இன்னடிசில் வைப்பாரை நாடாயே

போக்கு - வ்யாபாரம் பரத்யுத பரிஹாஸமே வன்னதென்கிறார் - கஸ்தேந இத்யாதி ப்ரதிஜ்ஞாதகாலாதிக்ரமத்திலும் 'கஸ்தேந ஸந்திஷ்டதி வாங்நிதேசே' என்றதுக்குக் கருத்தென்? என்ன, ஸாவஷ்டம்பஸ்ருஷ்டிக்ராதி காலாதிக்ரமம் உம்முடைய நியமத்தாலே வந்த தென்றபடி. என்பிழைக்கும் - எலும்புகளைச் சிதைக்குமென்று முதலர்த்தம் என் - என்ன, பிழைக்கும் பிழையாம்? தப்புண்டா மென்றபடி என்று இரண்டாமர்த்தம் யான் வளர்த்த நீயலையே என்றதுக்கு - 'ஒருவாய்ச்சொல்' என்றவாறே, அது செருக்கடித்து அநாதரித்திருக்க, சொல்லுகிறென்று அவதாரிகை அநுஸந்தேயம் 'திருமால்' என்றதைப்பற்ற ஸ்ரீயப்பதியாய் என்றது தான்தோன்றி என்றது 'திருவடி' என்றதைப்பற்ற, ஸ்வதந்த்ர னென்றபடி விவரணம் - கலந்து இத்யாதி தாத்பர்யார்த்தம் - அவன்தான் இத்யாதி விவரணம் - எனக்குத் தக்காற்போலே இத்யாதி, மூன்றும் தாத்பர்யமாதல் 'என்பிழைக்கும்' என்றதின் ப்ரதமத்விதீயார்த்தாநுகுணமாக, 'யான் வளர்த்த' என்றதுக்குத் தாத்பர்யத்வயமென்று கண்டுகொள்வது ஸ்ரீயப்பதியாய இத்யாதி வாக்யத்வயத்துக்கு - 'வளர்த்த' என்றதிலே நோக்கு அவன்தானித்யாதி வாக்யத்துக்கு - 'நீயலையே' என்றதிலே நோக்கு என்பிழைக்கு மிளங்கிளியே, என்பிழை கோபத்தோடே பணிவாடையீரென்ற என்னிடத்திலும், என்பிழையே நினைந்தருளி அருளாத திருமாலார்க்கு திருவடியின் தகவினுக்கு என்பிழைத்தாளென்று ஒருவாய்ச்சொல் பின்னையும் அது அப்யாஸமாயிருக்க, யான் வளர்த்த நீயலையேயிதி இத்யந்வய: (எ)

ஆ—(நீயலையே) தன்னுடைய அவஸாதத்தைக் கண்டு அலமாக்கிற பூவையை நோக்கி, எனக்கு அரியனாகையாலே நானுக்கு ஸ்வருபமாயிருக்கிறவர்க்கு நோவென்று நவிலன்னே, நலமாதே யிருந்தொழிந்தாய் நீயலையோ? என உயிரானது முடிந்ததிடாய், உனக்கு ஈழ்கமைத் தேடாய் என்று சொல்லுகிறாள்

ஒ—எட்டாம்பாட்டில, ஒரு பூவையைக் குறித்து பகவத்விஷயங்களிலே தனக்கு வந்த மறவைத்தனைச் சொல்லுகிறாள்

[நீயலையே யென்று தொடங்கி] - இன்று என அவஸாதத்தைக் கண்டு மிகவும் கனறுகிற நீயன்றோ? ஆமாரிதருடைய நோவு பொருகிற அவர்களமன் மேலே அநிலையாமுகந்தொழிருகிற எம்பெருமானுக்கு விரஹவஸனத்தாலே மிகவும் நொந்திருக்கிற என்னுடைய தூமாய என்னுடைய மறவைத்தனைச் சொல்ல என்ன, சொல்லாதே செல்லமயில்லை அதனை மறுத்தாய [சாயலொடு என்று தொடங்கி] - சாயலோடே கூட மலை நிறத்தை இழந்தேன் நான், இனி உன பாக்கு மயிர்த்து உன்னை வளர்ப்பாரைத் தேடு, நான் முடிந்தேன் என்று கருத்து

ப—அனந்தரம், பிரதிபமவத்வனுனவைபகனில் போய் என்னை அறிவித்திலையென்று, தான் வளர்த்ததொரு முகதுமான பூவையைப் பார்த்துச் சொல்லுகிறாள்

சிறுபூவாய - பாலைத்தாலே சிறுமின பூவாய! நெடுமாலாக்கு - (ஆமாரிதவிஷயத்தில பிரதிபமமாதவையத்தாலே) பெருமாளோசாரனவாக்கு, என தூதாய - என்னுடைய தூதாயச் சென்று, எனது - என்னுடைய, நோய - விரஹவயாதியை, நுவலிலன்னே - சொல்லிலன்னே, நுவலாதே - சொல்லாதே, இருந்தொழிந்தாய செருக்கடித்திருந்துவிட்டாய், நீயலையே - நீயல்லையோ? நான - நான, சாயலொடு - ஒளியோடுகூடின, மணி - மலாக்யமான, மாமை நிறத்தை, தளர்ந்தேன - இழந்தேன, இனி - இப்படி இடைபட்டபின்பு, உனது - உன்னுடையதான, வாயலகில் - வாயலகுக்குள்ளே புக, இன அடிசில - மதுரமான அடிசிலை, வைபாரை வைடுவோரை, நாடாய் - புறம்பேபோய ஆராய்வேணுமவள் இத்தால - வைடகிகேங்கிதனாம பண்ணுதாது தன் இழவென்று தோற்றித்து சிறுபூவையென்று - வைடகருடைய பருவசிறுமையும் உக்தேமய மென்று தோற்றுகிறது

இ—எட்டாம்பாட்டில், தன்தசையைக் கண்டு உருகுகிற தன்பூவையைக் குறித்துத் தன்னுடைய அவஸ்தையைச் சொல்லுகிறாள்

[நீயலையே] - என அவஸ்தத்தைச் சென்று சொல்லிலன்ன, செருக்கடித்திருந்தாய நீயன்றோ? இதுக்குச் சொன்னுவோ? என்னில், இழில அதற்கு சொல்லுகிறதாவது இதுக்குச் சொல்லித்து என்றிருக்கிறாள், கலக்கதினை மிகுதியாலே இன்று என அவஸ்தையைக் கண்டு தளர்ந்திருக்கிற நீயன்றோ அன்று செருக்கடித்திருந்த பென்றவாம [சிறுபூவாய] - உன பாலயம் ஸம்ஸாரபத்தைக் கெடுத்ததில்லையோ? [நெடுமாலாக்கு] - ஸர்வேஸ்வரனென்னுதல், ஆமரிதர்பக்கல் அதிவயாமோஹமென்னுதல் [என்தூதாய] - அன்று அவன் வ்யாமோஹத்துக்கு இலக்காய, இன்று வெறுந்தரையாயிருக்கிற என்தூதாய [நோயெனது நுவலென்ன] என் நோயைச் சொல்லென்ன இவள் நோயென்றால் வைராக்யமாயிறு இருப்பது ப்ரீ பராமுவான நோயென்றால் சாதுதிகமாயிராதே, "ஜ்வரம்," "பொ ஆவ்யாபிதபுகேங்கிஷ" என்பாகிகளுக்கு வ்யாதிவிஷயங்களிலே இழவு பேருகையாலே பகவத்விஷயேவஷயம் அறியாக்கள. [நுவலாதே யிருந்தொழிந்தாய] நோயறியாமை சொல்லாதிருந்தாயல்ல என்ன வயலாமையன்று, சொல்லாமையிலத்தனமடித்திருந்தாய் இத்தனையிறே அத்தலையில வ்யாமோஹம் அது, இத்தலையில நோவு இது, இரண்டு தரமியையும் ஒருமிழற்றத்தாலே சொல்லாயிருக்கவன்றோ நீ ஆயிருந்தது?

[சாயலொடு மணிமாமை தளர்ந்தேன் நான்] அது, 'போகிறேன்' என்று உபயோகித்தது, இனி ஆனை நோக்கப் போகிறு யென்கிறாள் ஸமுதாயசோபையோடே கூடின அழகிய நிறத்தை இழந்தேன் [இனி உனது வாயலகில் இன்னடிசிலவைப்பாரை நாடாயே] இனி உனக்குச் செய்ய அடுப்பது, உன் பாகருசியறிந்து வளர்ப்பாரைக் கேடுகைகான சரமதசையிலே கமமுடைய திருவாராதமான பிள்ளையைப் பார்த்து, "வாயலகிலின்னடிசில வைப்பாரை நாடாயே" என்று அருளிச் செய்தார் பெரியதிருமலைநம்பி

ரு —எட்டாம்பாட்டு முன்பு இவள் வார்த்தை சொல்லிக் கொண்டாடுகையாலே தரித்திருந்த பூவையானது இவள் உருவப்புகவாறே தானும் உருவப்புகத்து, அதைப் பார்த்து முன்பே என் தன்மையை அறிவியென்னச் செருக்கடித்திருந்தாய், நானோ முடியாநின்றேன், இனி உன்னை ரக்ஷிப்பார் ஆர்த தேடப்பாரா யென்கிறாள் பூவையென்பது நாகணவாய்ப்புள், அதாவது ஒரு பக்ஷிவிசேஷம்

[நீயலையே] என் தன்மையை அறிவிக்க வேணுமென்ன, அறிவியாதேயிருந்த உன்னாலே வந்ததன்றோ இது ? அறிவித்தால் வாராதே யிருந்தானாகிலன்றோ அவனுக்குக் குறையாவது? பக்கல்லாபம் சோப்பாராலே என்றிருக்கிறாள், அவயவதாநேந ஸம்பந்தம் எம்பெருமானோடே யாயிருக்க, ஆசார்யனை விரும்புகிறது - பண்ணின உபகாரத்தைப் பற்றவிறே, "ஆதத்யதோஜ்ஞாநம் தம்பூர்வம்பிவாதயேத்" (ஆதத்யதோஜ்ஞாநம் தம்பூர்வம்பிவாதயேத்) என்னுநின்றதிறே [சிறுபூவாய்] உன்பருவம் நிரம்பாமையிறே நமக்கு ஆயத்தைக் கெடுத்தது [நேமோலாக்கு] அவர்க்கு வ்யாமோஹத்தை யுண்டாக்கிக்கொடுவரவேணுமென்று இருந்தாயல்லையே? [என்தாய்] எனக்கு அவர்பக்கல் வ்யாமோஹந்தானில்லாமை இருந்தாயுமன்றே! *(வயிற்றில் பிறந்த உங்களைக் கொண்டு அபிமதம் சோரக்கவேண்டுமேபடியன்றோ! எனக்கு உண்டான ஆசை) [நோயெனது] 'பிரபராதழவான நோய்' என்றால் சாதுர்த்திகமாயிராதே? "ஜடிலம்" (ஜடிலம்) நல்ல மாலை வந்தால 'பிள்ளை பரதனமயிருக்காயிருந்தது' என்றுயிறு,*சகரவாததி வாயவிடுவது, அவனு யிற்று சடை புனைந்திருக்கிறான் "சீரவஸநம்" (சீரவஸநம்) நல்ல பரிவட்டங் கண்டால 'இது பிள்ளைக்காம்' என்று வாயவிடுவோர்கள், அவனன்றோ மரவுரியுடுத்திருக்கிறான் "ப்ராஞ்ஜலிம்" (ப்ராஞ்ஜலிம்) அவாக எிரந்துகோடுக்கப் பெறுமவன், தன் அபிமதத்துக்குத் தான் இரப்பாளனு

எட்டாம்பாட்டு - நீயலையே இத்யாதி 'நுவலென்ன நுவலாதே யிருந்தொழிந்தாய்' என்று இப்போது சொல்லுகையாலே, 'என்தன்மையை அறிவி' என்று சொன்னது விதம்

'என்துயோய நுவலென்ன நுவலாதே இருந்தொழிந்தாய நீயலையே' என்று அநுவதித்து அருளிச்செய்கிறார் - என் தன்மையை இத்யாதி இது - தளருகை என்னாலே யென்கிறபடியன்? வாராதிருந்த அவனன்றோ குறைய? என்ன, அறிவித்தால் இத்யாதி ஸ்வாபதேசம - பக்கல்லாபம் இத்யாதி ப்ரஸங்காத் ஆசார்ய கைங்கர்ய ப்ரகாரத்தை அருளிச்செய்கிறார் - அவயவதாநேந இத்யாதி அவயவதாநே - ஸாக்ஷாத் ஆசார்யனை ஆதரிக்கையிலே ப்ரமாணம - ஆதத்யேத்யாதி "லௌகிகம் வைதிகம் வாபி ததாத்யாத்மிகமேவவா' இதி வாக்ய ஶேஷம் ஜ்ஞாநம் லௌகிகம் விஷமமரணாதி வயோமி, வைதிகம் ஸமயாதி வேதார்த்தவயோமி, ஆத்யாத்மிகம் மோக்ஷ வயோமி 'சிறு' என்றதுக்கு பாவம் - உன்பருவம் இத்யாதி நேமோலாக்கு - மிக்க வ்யாமோஹம் அவர்க்கு இத்யாதி - முன்பே அவர் வ்யாமோஹரானன்றோ? என்று கருத்து எனக்கு அவர்பக்கல் இத்யாதிக்குக் கருத்து - வயிற்றில்பிறந்த உன்னைத் துதவிமேபடியன்றோ என் வ்யாமோஹ மென்று 'என்துநோய்' என்கையாலே - லோகவ்யாவ்ருத்தியை விசித்தவகரித்து தருஷ்டாந்தம - ஸ்ரீபரதாழ்வார் இத்யாதி கண்வைக்கவோர்

* குணவிதய வ்யாக்யானவிருத்தம் என்பர்

யிருந்தான "பதிதம்புவி" (பதிதம்புவி) - "அங்கேபரதமாரோபய" (அங்கேபரதமாரோபய) என்னும் கிலே பெற்றதில்லே 'படுகேசை உறத்தும்' என்ற மடியிலே காலவளருமவனுயிற்ற தரைக்கிடை கிடக்கிறன "தர்ப்பராமோ தாத்தாமம்" (தர்ப்பராமோ தாத்தாமம்) - வைத்தகண் வாங்காதே கண்டுகொண்டிருக்கும் பெருமாளுக்கும் கண்வைக்கவொண்ணுதபடி இருக்கிறவனே "யுகாந்தே பாஸ்கரமயதா" (யுகாந்தே பாஸ்கரமயதா) - பெருமாட்டொருவர்க்கும் கண்வைக்கவொண்ணுமையே யன்றிக்கே, 'ஜகதுபஸம்ஹாரம் பிறக்கப் புகுகிறதோ?' என்னும்படி யிருந்தான [கோயென்று நவலேனை] என்றவையை அங்கே சென்று சொல் என்ன, சொல்லாதே யிருந்தொழிந்தாய. நவலாதே யிருந்தா யென்னுதல, நவலாதே யொழிந்தா யென்னுதல் செய்ய அமையாதோ? இரட்டிப்பெனி? என்னில்,—'வந்தொழிந்தான், போயொழிந்தான்' என்கைகடவதிறே, வழக்கச்சொல் இருக்கிறபடி. இரண்டு தாழ்வையும் ஒரு உக்திமாத்ரத்தாலே போக்கலாயிருக்கவன்றே நீ ஆறியிருந்தது! 'அதுக்கு இப்போது வந்ததென?' என்ன, - [சாயலொடு மணிமாமை தளர்ந்தேன் நான்] - ஸமுதாய சோபையோடே நிறத்தில் பௌஷ்கல்யமும் இழந்தேன 'இனிப் போய் அறிவிக்கிறேன' என்று தவிக்கப்புக்கது; கதேஜலேஸேதுபந்தம்போலே இனி அறிவித்தால் என்ன லாபமுண்டு? [இனியுனது இத்யாதி] - இனி உனக்கு ரக்ஷகரைத் தேடப்பாராய அவன் வந்தாலும் போனநிறத்தை மீட்கப்போகா தென்றிருக்கிறுள பெரியதிருமலைநம்பி, தம்முடைய அந்திமதசையிலே, தமக்கு ஒரு வெண்ணெய்க்காடும்பிள்ளையாயிற்று திருவாராதநம்; அவர் திருமுனபில் திருத்திரையை வாங்கச் சொல்லி, "சாயலொடு மணிமாமை தளர்ந்தேன நான இனி யுனது வாயலகில் இன்னடிசில் வைப்பாரை நாடாயே" என்றாராம் (அ)

ஒன்பதாம் பாட்டு.

நாடாதமலர்நாடி நாடோறும்நாரணன்தன்
வாடாதமலரடிக்கீழ் வைக்கவேவகுக்கின்று
வீடாடிவீற்றிருத்தல் வினையற்றதென்செய்வதோ?
ஊடாடுபனிவாடாய்! உரைத்தீராயெனதுடலே

ஜுமையேயன்றிக்கே - கண்வைக்கப் போகாமை மாத்ரமன்றிக்கே. என்னும்படி - என்று பயப்படும்படி [illegible] ஏ.டி.பெ.டு.க் ஙு ப-டுக. 'பெருமானொருவர்க்கும்' என்கிற இடத்திலே - காட்டைக்கும் கண்வைக்கப் போகாதவனும் [illegible] ஜகதுபஸம்ஹாரம் பிறக்கை யாவது - இவன் தசையைக் கண்டால் பெருமாளும் இடையாது, பின்னை விழுமியம் இல்லையாம் மென்றபடி. நவலுகை - சொன்னதை நடந்த படியை அறிவித்துப் பரிஹரிக்கிறேர் - நவலாதே இத்யாதி வழக்கச்சொல் - [illegible] பாவித்தமான சொல், நிலைச்சொல், செயப்படுசொல், வழக்கச்சொல் என்று [illegible] 'நவலாதேயிருந்தொழிந்தாய' என்றதுக்கு ஸாமம் - இரண்டு தாழ்வையும் இத்யாதி இரண்டு தாழ்வையும் என்றது - [illegible] [illegible] சாயல் - சாயை, ஸமுதாயசோபை மாமை நிறம், அழகிய மேனி என்று - [illegible], பௌஷ்கல்யமா சொல்லுகிறது மேனுக்கு அழகியமை - இனிப் போய் இத்யாதி [illegible] இனி உனக்கு இத்யாதி [illegible] [illegible] - அவன் வந்தாலும் இத்யாதி [illegible] - பெரிய திருமலைநம்பி இத்யாதி [illegible], [illegible] என்று [illegible] இருந்தொழிந்தாய [illegible], [illegible] மணிமாமை தளர்ந்தேன், இனி உனது வாயலகில் இன்னடிசில் வைப்பாரை நாடாயே இத்யர்த்தம். (அ)

ஆ —(நாடாதமலர்) ஒருவாடை வந்து தன்னை ஸ்பர்சிக்க, அது எம்பெருமானுடைய நியோகத்தாலே வந்திருக்கிறதாகக் கொண்டு அதனைக்குறித்து, 'ஸர்வஸ்வாமியான தன் திருவடிகளிலே அநாயாஸ ஸாத்யபுஷ்பாதி ஸர்வபரிசர்யோபகரணங்களைக்கொண்டு ஸர்வகாலமும் ஸர்வ தேசமும் வருத்தியும் பண்ணுகைக்காசவன்றோ என்னுடைய ஸ்வரூபம் பரிகல்பிதமாயிற்று? ஆன பின்பு, இப்படி சேஷத்வைக ஸ்வபாவையான நான் தன்னை விஸ்லேஷித்து, விஸ்லேஷத்திலே அபிஷிக்தையாயிருக்கும் இப்பொல்லாவிருப்பு என்செய்வதோ?' என்று எம்பெருமானுக்கு விண்ணப்பஞ்செய்தால் அவன் உபேக்ஷித்திருந்தானாகில் பின்னை வந்து ஸ்பர்சிக்கவேணும் என்கிறாள்.

ஒ —ஒன்பதினாயிரப்படியில், தனக்கு போக்யமாயிருக்கிற வஸ்து இங்ஙனே அவஸந்நமாய் முடிந்துபோகப் பெறலாமோ? என்று எம்பெருமானுக்கு அறிவித்தால், அவன் உபேக்ஷித்தருளினானாகில் அப்போது என்னை முடிக்கவேணுமென்று ஒரு வாடையை இரக்கிறாள்.

[நாடாதமலரென்று தொடங்கி] இஜ்ஜகத்தில் ஒருவரால் தேடவொண்ணாத செவ்விப் பூவெல்லாம் தேடி ஸர்வேஸ்வரனானவனுடைய வாடாதமலரின் செவ்வியையுடைத்தான திருவடிகளின் கீழே நித்யமும் அடிமைசெய்ய இவ்வாத்மா உண்டாகிறது [வீடென்று தொடங்கி] விரஹவ்யஸநத்திலே ப்ராப்தாபிஷிக்தமான பொல்லாத இருப்பு என்செய்யக்கடவதோ? எம்பெருமானைப் பிரிந்து விரஹவ்யஸநத்திலே ப்ராப்தாபிஷிக்தமாயிருக்கைக்கீடாக பாக்யஹீநமான இவ்வாத்மவஸ்து என்செய்யக்கடவது? என்று மாறி உறவுமுறையாரோடேக் கொற்று அறுகைக்கும் உடம்பைப் பிரிகிறிருக்கைக்கும் ஈடான இப்பொல்லாதா இருப்பு என்செய்வது? [ஊடாடுபனிவாடாய் என்றுமேனுக்கு] அங்கேயோடு இங்கேயோடு உலாவித்திரிகிற குளிர்காற்றே! எம்பெருமானுக்கு என்னை அறிவித்தால் அவன் உபேக்ஷித்தானாகில் அப்போது ஸ்பர்சிக்கவேணும், அவனோடே விரஹத்தாலும் நெஞ்சு இளையாயிருக்கிற என்னுடைய உடலை.

ப —அநந்தரம், முன்புபோலன்றியே முடியும்படியாக அவனைப்பிரிகின்றும் வந்ததொரு வாடையைப் பார்த்து, திருவாதிக்கப்படுமவனவருக்கு ஒருவார்த்தை சொல்லிவந்து பின்னை ஸ்பர்சியாயென்கிறாள்.

ஊடு - (அவர்க்கும் எனக்கும்) நடுவே, ஆடு - நடையாடித்திரிகிற, பனிவாடாய் - குளிர்ந்த வாடாய்! நாடாத (ஆகாதுருபமாகக்) தேட அரிய, மலர் - பூக்களை, நாடி - தேடி, நாடோறும் - நித்யமாக, நாரணன்தன் - (திருமந்த்ர ஸம்பந்தங்களையுடைய ஸ்வாமியான) நாராயணனுடைய, வாடாத மலர் அடிக்கீழ் - செவ்வித் தாமரைப்பூப்போலே போக்யமான திருவடிகளிலே, வைக்கவே - ஸமர்ப்பிக்கவே, வகுக்கின்று (காரணங்களை) வகுக்கிறதாயிருக்க, வீடு - விஸ்லேஷத்திலே, ஆடி - வர்த்தித்து, வீற்றிருத்தல் - தனியிருத்தலாகிய, வினை அற்றது - பாக்யஹீநருத்யம், என்செய்வதோ - என்ன ப்ரயோஜனம் தருவதோ? என்று, உரைத்து (அவனுக்கு) உரைத்து (அதுகேட்டுக் காம பெறாதொழிந்தால்), எனது உடல் - என் சரீரம், ஈராய் - இரங்கிப்படி ஈர்த்துப்போகடு. வீடு - பிரிவு. இதகால - வடகா அவஸ்தாவிசேஷத்தாலே பாதகமாகிலும் அதில் தாத்பர்யமில்லை, சாபகாரகில் உதர்ஜிதமென்று கருத்து.

இ —இருபத்துநாலாயிரப்படியில், முன்புதன் தவாடைபோலன்றிக்கே, தன்னை முடிக்க அவனே வரக்காட்ட வந்ததாகத் தோற்றுகிறதொரு வாடையைப் பார்த்து, தனக்கு போக்யமான வஸ்து இங்ஙனே முடிந்துபோமித்தனையோ? என்று அவனுக்கு அறிவித்தால், அவன் உபேக்ஷித்தானாகில் பின்னையும் நான் இராமே முடிக்கவேணுமென்று இரக்கிறாள்.

[நாடாதமலர்நாடி] அபிநிவேசத்துக்கீடாகத் தேடவரிதான புஷ்பங்களைத் தேடி, "எண்டிசையுமுள்ள பூக்கொண்டு" என்னுமாபோலே [நாடோறும்] விச்சேதியாதபடி நிருபித

அசித்து ஸ்வரூபம் பெறும் ஸத்தைக்கு, விசேஷம் ஸ்வரூபமாறாதிறே [காரணன் கண் மாரத மலராடிக்கீழ்] - ஸர்வேஸ்வரனுடைய ஏகரூபமான செவ்விப்பூப்போலே இருக்கின்ற திருவடிகளின்கீழே அகிஞ்சிநகராமனவனாம் விடவொண்ணாதபடி நிரதிசய போக்யமான திருவடிகள் [வைகலே வருகின்று]-"ஸர்வ்வேஷு தேசகாலேஷு" என்னுமாப்போலே இருக்ககடவதாய் இவளை உடைடாக்கித்து வைக்க - சோக்த சேஷூகவேதக் கொதிகாதகரிலே ஸமாநமாய் மாறுத்போலே, சேஷிக்கும் இருதிகரியாக்குகொண்டு வருமாறேயிறே ஸ்வரூபஸித்தி [வீடாடிவீற்றிருத்தலென்று கொடைவதி] - விடோ வாழ் விபவமே போர தூவிதை - அதிலே அவகாஹிக்கை வீற்றிருத்தல் - அதிலே பூர்த்தாபிஷிக்தனாகை வினை - கலவியின் அழகாத்மாபிமானக விபவேலைத்திலே அவகாஹித்து அதிலே பூர்த்தாபிஷிக்தமாய் பரகமுமையான இருப்பு, பக்வதீபமான இவளாதமவஸ்து என்னவுமாம் வீடுதையும் வேண்டாதபடி உறவுமுறையான் தோற்றுமைக்கும் உண்மை பிரிந்திருக்கைக்கும் அடா இட்டபைவாயிருப்பு என்னவுமாம், "ஸாதனம் பழிப்புண்டிகொண்டாவாச விழிப்புண்டு" என்னுமாப்போல [என்னிசையவிர்ந்தா] - என் செய்யுமோவென்றுக்கத என்னவுமாம் இது தமிழ்ப்புலவர், இதுக்கு பூ ர்வாசார்யாளில்லே என்ற படி [விடாய்வெளிவிடாய] - ஊடொன்று உள்ளது, தூதுவின் - கைங்கரியமான அர்த்தமான ஸ்வ சரிதை அவகோடு இவகோடு அநுசந்தானங்கொண்டு ஸம்ஸாரிகள் தூதுவாக நாம் பெற் 'ஸமய வேதத்தையில் எனக்குப் பாதகமான ஸம்ஸாரிகள் போலிறே' என்று சொல்லுவார் [நலமிகு] - அவனும் என் ஸ்வரூபத்தை விஸ்மரிக்கையாலே ரக்ஷகனா யாக்கை ப்ரவ்ருத்திக்கின் 'மாறாமல் ஏவிழ வைகலே வருகின்று' என்கிற பகோக்ஷ்ய சொல்லி, [ஏஜமானதாலே]-'அவனாலே வரும் விரோதங்களையும் வேண்டா' என்று சோபிக்கிறதில்லை, அவ்வளவில் வந்து சேர்ந்திருக்க வேணும் [என்றாடலே] - அவளுடைய பிரிவுக்குக் கொதிகோளாக இந்த பரிமாற்றை முடிக்க வேணும் இப்போது இருப்புத் தேட்டமாறாமாலே அப்போது முடிவு தேட்டமாயிற்று.

நூல் —ஒன்பதாம்பாட்டு "சாயலோமேனியாளை தளர்ந்தேன் காண" என்றுஇருக்கிற ஸமயத்திலே ஒருவாடை வந்து உடம்பிலே பட்டது; இதின் வாடைய தோற்றம் இருந்தபடியாலே வேறுமனன்று, மஹாராஜருடைய மிடறுகுரலையில் தெளிவைக் கேட்டே தாரை, 'பூர்வபக்ஷத்திலே வாலிகையாலே கேருசகுண்டுபோனவர் இப்போது இப்படி தெளிந்துவந்து அறைகூவுகிற இது வேறுமனல்ல, இதுக்கு ஓரடியுண்டு' என்றுப்போலே, இவளும் இ வாடைக்கு ஓரடி யுண்டாக வேணும் என்று பார்த்து, ராஜாக்கள் ராஜத்ரோஹம் செய்தவர்களை ஈலிகைக்கு வேறகாரரை ஏவி விடுமாபோலே ஈவலையலிகைக்காக ஸர்வேஸ்வரன் இவ்வாடையை ஏவிவிட்டானாகவேணுமென்று பார்த்து, வேற்காரர் கோவேபோய் ஈலியப்புக்கவாறே 'நீதியுண்டு' என்பாரைப்போலே, நான் சொல்லுகிற வார்த்தையை நீ அங்கே சென்று அறிவித்தால் 'அத்தலையால்வரும் ஈலையும் வேண்டா' என்றிருந்தாளாகில், அவஸரம் வந்து என்னை முடிக்கவேணுமென்று அவ்வாடையை இரக்கிறாள்

ஒன்பதாம்பாட்டு - நடாத இத்யாதி "சாய" என்கையாலே வாடை பாதகமென்றும், 'உலைந்து' என்று அவனுக்குச்சொலவி என்னை முடி யென்கையாலே - அவளைவவிட்டாரென்றும் தோன்றுகையாலே இவ்விரண்டுக்கும் அநுகுணமாக அவதாரிகை சாயலோடு இத்யாதி 'வாடாய்வாளிவிடாய' என்றதைப்பற்ற - இதினுடைய இத்யாதி என்றுப்போலே இத்யாதி - இதினுடைய தோற்றம் இத்யாதி, வேறுமனன்று இவ்வாடைக்கு ஓரடி யுண்டாகவேணுமென்று பார்த்து என்று அவ்வாடை பூர்வபக்ஷ பாதகமானமை மிடற்றோசையில் தெளிவு என்றது - "பெருங்குரல்" என்றதைப்பற்ற 'ஸமாகலஸ்ய நிஸ்வனம் விபுலம்' ... பூர்வபக்ஷத்திலே இத்யாதி அறைகூவுகை யுத்தத்துக்கு அழைக்கை, இது ஓர் அடியுண்டாகவேணும் - ஸ்வாதந்த்ர்ய காரணமுண்டாகவேணும் 'உலைந்திட' என்றதைப்பற்ற - ராஜாக்கள் இத்யாதி வேற்காரர் ஆயுதமேந்தி இருப்பவர் பணியாளர் என்றது - "வைகலே வருகின்ற" என்றதைப்பற்ற. தாவுடனிதிலே, இதின்றாடுகை - அலைகை

[நாடாத மலர்நாடி] 'ஆத்மபுஷ்பத்தைச் சொல்லுகிறது' என்பாருமுண்டு, அங்ஙனன்றிக்கே, நீர், "எண்டிசையுமுள்ள பூக்கொண்டு" என்கிறபடியே, 'தேடவரிய புஷ்பங்களெல்லாம் தேடி' என்று அருளிச்செய்வர். இதுதான் ஒருநாள் தேடிவிடுகையன்றிக்கே, [நாடோறும்] விச்சேதியாதபடி கிஞ்சித்கரித்து ஸ்வரூபம்பெறும் வஸ்துவுக்கு, விச்சேதம் ஸ்வரூபஹாநியிறே. [நாரணன்] - நித்யபரிசர்யை பண்ணவேண்டும்படி ஸர்வஸ்வாமியானவன். [வாடாத மலரடிக்கீழ்] செவ்விமாறாத பூப்போலேயிருக்கிற திருவடிகளின்கீழே ஸ்வரூபஹாநியாலும் விடவொண்ணாதபடி நிரதிசய போக்யமான திருவடிகள். [வைக்கவே] சேர்க்கவே [வகுக்கின்று] உண்டாக்குகிறது. "ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய" (ஸ்ருஷ்டஸ்த்வம்வநவாஸாய) போலே. இப்படி விலக்ஷணமாய் ஸ்வாபமுமாய் நிரதிசய போக்யமுமான திருவடிகளிலே ஸர்வவித கைங்கர்யங்களையும் பண்ணவாயிற்று இத்தை யுண்டாக்கிற்று. சேஷபூதனுக்குக் கிஞ்சித்கரித்து ஸ்வரூபஸித்தியானாற்போலே சேஷிக்கும் கிஞ்சித்கரிப்பித்துக் கொண்டிறே ஸ்வரூபஸித்தி. இப்படியிருக்க, [வீடாடி வீற்றிருத்தல் வினையற்றது என்செய்வதோ] வீடென்று விடுகை, அதாவது - விச்லேஷிக்கை. ஆடுகை அவகாஹிக்கை. வீற்றிருக்கையாவது விச்லேஷத்திலே முதுகாரிஷிக்கையாயிருக்கை. வினையற்றதாவது நல்வினையற்றகை. இப்படி பாக்யஹாநியாலே விச்லேஷத்திலே அபிஷேகம்பண்ணின தன்மைப் பிரிந்திருக்கிற இப்போலாத இருப்பு உண்டு, இது என்செய்யக்கடவதோ? என்னுதல், அன்றிக்கே, தம்மையும் பிரிந்து, தம்மோடு ஒரு ஸம்பந்தத்தையிட்டு பந்துக்களும் கைவிட, அவர்களையும் விட்டு, வேறுபட்டிருக்கிற இவ்வஸ்து, என்செய்யக்கடவதோ? என்னுதல். * "எமராலும் பழிப்புண்டு இங்கு என் தம்மால் இழிப்புண்டு" என்னக்கடவதிறே. [ஊடாடு பனிவாடாய்] வேறொரு அங்குத்தை வார்த்தையை

நாடாத - தேடவரிய - ஒருவராலும் தேடப்போகாத தொன்றில்லையிறே ஆகையாலே, தேடவரியது ஆத்மபுஷ்பமிறே என்று கருத்து. இத்தை [illegible] - ஆத்மாவைத்திருத்தி ஸமர்ப்பிக்கையும் ஈச்வரனுக்கு [illegible] போக்யமாகையாலே [illegible] "[illegible]" என்றது அநுஸந்தேயம். அங்ஙனல்லாதபடி [illegible] நாடோறும் வேணுமோ? என்ன, கிஞ்சித்கரித்து இத்யாதி. விச்சேதம் - ஸ்வரூபஹாநியாகைக்கு ஸ்வரூபம்தானிருக்கும்படி எங்ஙனே? என்ன நித்யபரிசர்யை இத்யாதி. திருவடிகளின் போக்யதையுபபாதனம் அருளிச்செய்கிறார் - ஸ்வரூபஹாநி இத்யாதி. ஸ்வரூபஹாநியாலும் [illegible] அல்லாவிடார் [illegible] இத்யாதி † [illegible] வந்தேந்த்ராம் [illegible] என்றது அயோத்யாகாண்டே லக்ஷ்மணம் ப்ரதி ஸுமித்ரா "ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய [illegible]" கைங்கர்யத்தால் இவனுக்கு ஸ்வரூபலாபமொழிய ஈச்வரனுக்கு பரபோஜனமில்லையே ஆகையாலே, அவதாரிகையில் சொன்ன கைங்கர்யத்தி தருவதுடான் தம்சோராதே என்ன, [illegible] இத்யாதி 'வாடாத' என்கிற விசேஷணத்துக்கு - மலரடிக்கீழ்வையாதபோது மலரடி வாடுமென்று கருத்து. 'வினையற்றதாலே வீடாடி வீற்றிருத்தல் என் செய்வதோ' என்று அந்வயித்து அர்த்தம் - இப்படி பாக்யஹாநியாலே இத்யாதி என் செய்யக்கடவதோ - விச்லேஷாத்மகமாகிறதோ? நாசாத்மகமாகிறதோ? என்றபடி. வீடாடியிருப்பதாய் வீற்றிருத்தலையுடைத்தா யிருக்கிற வினையற்றது - பாக்யஹீனமான இந்தச் சேதநவஸ்துவென்று தனியே நிர்வாஹார்த்தம் தனியாத்தத்துக்கு வீற்றிருத்தல் வேறுபட்டிருக்கை வீடாடியென்று - விச்லேஷத்துக்கும் உபலக்ஷணம் 'வீற்றிருத்தல், வினையற்றது' என்கிற பதத்வயத்துக்கும் அர்த்தமாய 'வினையற்றது என்செய்வதோ' என்ற அந்தமம், என்று இத்யாதியாலே இவ்வஸ்துவென்று-ஸ்வஸ்வரூபத்தை அவனைப் பிரிந்திருக்கிற தசையிலே அவனோடுண்டான ஸம்பந்தமே வேறுவாக பந்துக்களும் கைவிடுமென்னைக்கு உதாஹரணம்-"எமராலும்" இத்யாதி என்னுடைய அநுபந்தமுடையாராலும் பழிக்கப்பட்டு, தம்மாலும் உபேக்ஷிக்கப்பட்டு, இருத்தை யிருப்புக்கு என்ன பரயோஜனமுண்டு? [illegible] நடுவாதல், அந்தரங்கமாதல் அந்தரங்கமென்ற பக்ஷத்தில் - அவனுக்கு அந்தரங்கமென்னுதல், எனக்கு அந்தரங்கமென்னுதல் - நடுவென்ற அர்த்தத்தைக் காட்டுகிறார் - வேறொரு இத்யாதி

* திருவாய்மொழி - ௯. ௭. ௨. † [illegible]

இங்கே சொல்லி, இங்குத்தை வார்த்தையை அங்கே சொல்லித்திரியுமாபோலே, அங்கோடிங்கோ டாய்த் திரியாநின்றதாயிற்று ஊடேன்று - உள்ளாய், ஆடுகை - ஸஞ்சரிக்கையாய், அங்கே அந்த ரங்கமாக ஸஞ்சரிக்கை, அன்றிக்கே, ஸம்ச்லேஷஸமயத்திலே கிட்டி வர்த்தித்துப்போந்த நீ யென்னுதல் [உரைத்து] - நித்யகைங்கர்யத்துக்கு இட்டுப் பிறந்த வஸ்து இப்படி யிருக்கக்கடவதோ? என்று அறிவித்தால், 'அத்தலையால்வரும் கைங்கர்யமும் நமக்குவேண்டா' என்றிருந்தானாகில், அவ்வளவும் வந்து அவனுடைய பிரிவுக்குச் சிளையாத என்னுடலை முடித்துவிடவேணு மென்று காலைப்பிடித்து வேண்டிக்கொள்ளுகிறாள் (௯)

பத்தாம் பாட்டு.

உடலாழிப்பிறப்புவீடு உயிர் * முதலா முற்றுமாய்க்
கடலாழிநீர்தோற்றி அதனுள்ளேகண்வளரும்
அடலாழியம்மானைக் கண்டக்காலிதுசொல்லி
விடலாழிமடநெஞ்சே! வினையோமொன்றாமளவே

ஆ—(உடலாழி) ஸர்வ ஜகத்ஸ்ருஷ்டியையும் பண்ணி, ஸ்ருஷ்டமான ஜகத்தி னுடைய ரக்ஷணார்த்தமாகத் திருப்பாற்கடலிலே திருவாழிதொடக்கமானவற்றை யுடையனாய் மேற்கொண்டு கண்வளர்ந்தருளுகிற பரமகாருணிகனான எம்பெருமானைக் கண்டக்கால், "வாடாதமலரடி" இத்யாதி, "வினையற்றதென்செய்வதோ" என்று இது சொல்லி, அவன் நம் முடைய அபேக்ஷிதம் செய்தருளுமளவும் என்னை நீ தரித்துக்கொண்டிரு வென்று தன் திருவுள் ளத்தைக்குறித்துச் சொல்லுகிறாள்.

ஈ—பத்தாம்பாட்டில், கீழ்ப்பாட்டிலே பரஸ்பரமான போக்யத்வத்தை அறுவிக் கிறதுப பற்றுகிற மாத்ரத்தை 'எம்பெருமானுக்கு நம்முடைய காயத்தை விண்ணப்பஞ்செய்து நமக்கும் அறுதிப்படுத்தியுந் தரவல்ல என்னை விடாதே கொள்' என்று பார்த்திக்கிறாள்

[உடலென்று தொடங்கி] - அஸங்க்யமான சரீரங்களினுடைய ஜந்மத்தையும் சரீர ஸத்தமான ஆத்மாவையும் மற்றுமெல்லாவற்றையும் உண்டாக்குகைக்காக ஆத்மாவை உண்டாக்கு கையாவது - சரீரஸம்பந்தத்தோடே கூட்டுகை [கடலென்று தொடங்கி] - பெரிதான நீரையுடைய ஏகார்ணவத்தைத் தோற்றுவித்து இப்படியுண்டான ஸ்ருஷ்டபதார்த்தங்களுக்காக அதிலுள்ளே கண்வளர்ந் தருளும் ஸர்வேச்வரனாய் ஆச்ரிதவிரோதி நிரஸநபரமான திருவாழியை யுடையனான எம்பெரு மானைக் கண்டக்கால் கீழ்ப்பாட்டிற்சொன்ன வார்த்தையை சொல்லி [விடலென்று தொடங்கி] - சுழன்று வருகிற பேதைநெஞ்சே! நமக்கும் அறுதிப்படுத்தியும் என்னை விடாதேகொள் அவ வுடைமையாய பயமான தென்று சொன்றமாம்

அந்தரங்கமென்ற பதத்தில் அர்த்தத்வயத்தையும் அருளிச்செய்கிறார் - ஊடேன்று-உள்ளாய் இத்யாதியால், ஸம்ச்லேஷ இத்யாதியால். இந்த போஜனைக்கு; ஊடேன்று - உள்ளு ஆடுகை-ஸஞ்சரிக்கை சிளையாத-சலியாத காலைப்பிடித்தென்றது - ஈடு காலை - ஸற்றும், பாதமுமா ... மேல்லடி ... காலைப்பிடிக்கவே வருகின்று - உண்டாக்கித்து இப்படியிருக்க வினையற்றது - வினையுறவையவே விடாதிருந்திருந்த தென்செய்வதோ என்று உரைத்து, அவன் வேண்டா என்னு னாகில்; என்று உடலை யிராய் இத்யாதி (௯)

* 'முதலாயவென்று உரையின்பாடம்.

ப — அநந்தரம், கிரமசொன்னவை [illegible] அதுவரை [illegible] யானவையனைத்திலே தானே போகிற நெஞ்சைக் குறித்துச் சாமர்த்யம் பண்ணுவிடுகிறார்

ஆழி அகாதமாய், மட நெஞ்சே (எனக்கு) பவ்யமான நெஞ்சே! உடல் உடலிலே, ஆழி அபாரமாக, பிறப்பு மாறிமாறிப் பிறக்கிற ஜந்மபரம்பரையும், வீடு (தந்நிவ்ருத்தி பூர்வகமாக ப்ராப்யமான) மோக்ஷமும், உயிர் (இப்போக மோக்ஷங்களுக்கு அவலம்பநா போக்தாவான) ஆத்மாவும், முதலாய முதலானவற்றுக்கு நிர்வாஹகனாய், முற்றுமாய் (மற்றும் போக்ய போக்தோபகரணங்களெல்லாம் ஸ்வப்ரகாரமாம்படி) ப்ரகாரியாய், (ரக்ஷகனாக), ஆழிநீர் அகாதஜலமான, கடல் ஸமுத்ரத்திலே, தோற்றி ஸந்நிஹிதனாய், அதனுள்ளே அத்தற்குள்ளே, கண்வளரும் கண்வளராநிற்குமவனாய், அடல் (ஆஸ்ரித விரோதி நிரஸநத்தில்) புகழ்களையுடைய, ஆழி திருவாழியாழ்வானையுடையவனான, அம்மானை ஸ்வாமியை, கண்டக்கால் கண்டால், இது (மாத்ருசமான) இந்த அர்த்தத்தை, சொல்லி (அவனுக்குச்) சொல்லி, வினையோம் (வினைகளையுடையோமான) நாம், ஒன்றுமளவு (அவனோடு) ஒன்றுமளவும், விடல் விடாதே கொள் 'என்னை விடாதே கொள்' என்று சொல்லுவாய் 'ஆழிமட நெஞ்சே சூழ்ந்து வருகிற பேதைநெஞ்சே!' என்று சொல்லுவாய் இத்தால் [illegible]

இ — பக்ஷாந்தரம் பாட்டில், கீழ் ப்ரஸ்துதமான மோக்ஷதசையை நினைத்துப் பேசுகிற திருவுள்ளத்தை 'நம் காரியம் ஈடேறும்படியும் என்னைக் கைவிடாதே கொள்' என்கிறார் 'கீழ் [illegible] மாறிலையைத் [illegible]' என்பாருமுண்டு

[உடலாழிப்பிறப்பு] சரீரரூபமான ஸம்ஸாரஸாகரத்தில் பிறப்பு வீடு மோக்ஷம் இப்போது மோக்ஷமென்? என்னில், மோக்ஷார்த்தமாகவிறே ஸ்ருஷ்டி [உயிர்முதலா] நித்யமான ஆத்மாவை உண்டாக்குகையாவது ஶரீரத்தோடே கூட்டுகை [முற்றுமாய்] இவை முதலான எல்லாவற்றையும் உண்டாக்குகைக்காக முற்றுமாய் என்கிறது, "பஹுஸ்யாம்" என்கிற ஸங்கல்பத்தாலே அஸங்க்யேயமான ஶரீரங்களையுடைய ஜந்மங்களையும் ஶரீரஸ்தமான ஆத்மாவையும், இவை முதலான எல்லாவற்றையும் உண்டாக்குகைக்காக என்றுமாம் அப்போது, ஆழியென்பது - காம்பீர்யமாய், அபரிச்சிந்நமான ஶரீரபேதங்களென்றபடி [கடலாழி நீர் தோற்றி] - அகாதமான நீரையுடைத்தான கடலைத் தோற்றுவித்து "அப ஏவ ஸஸர்ஜாதௌ" என்கிறபடியே ஏகார்ணவத்தை ஸ்ருஷ்டித்து, [அதனுள்ளே கண்வளரும்] இப்படியுண்டான ஸ்ருஷ்ட்யாதிகளுக்காக அதிலே கண்வளரும் இப்போது காரணத்வம் சொல்லுகிறது, இதனை உண்டாக்கினவன் அறிவித்தால் விடாதென்னைக்காக [அடலாழியம்மானை] ஆஸ்ரித விரோதி நிரஸந ஶீலமான திருவாழியையுடைய ஸர்வேஶ்வரனை 'கண்வளரும் அடலாழியம்மானை' என்று காரணத்வத்தோடு [illegible] இவற்றினுடைய ஸம்பந்தம் சொல்லுகிறது [இது சொல்லி] கீழ் "வைகலவே வருகின்று" என்ற வார்த்தையைச் சொல்லி [விடல்] விடாதே கொள் [ஆழிமட நெஞ்சே] - கம்பீரமாய் பவ்யமான நெஞ்சே! சூழ்ந்து வருகிற பேதைநெஞ்சே! என்றுமாம் [வினையோம்] அவன் தொடங்கின காரியத்துக்கு இன்று நாம் வழிபோகவிருக்கும்படி பாபத்தைப் பண்ணின நாம் [ஒன்றுமளவு] நம் காரியம் [illegible] பிறக்குமளவும் "ஸாயுஜ்யம் ப்ரதிபந்நாயே" என்கிறபடியே அவனோடே சேர்ந்துவிடுமளவு என்றுமாம் 'அடலாழியம்மானைக் கண்டக்கால் இது சொல்லி, வினையோமொன்றுமளவும் என்னை விடல் ஆதலால் அவனைக் கண்டக்கால் இது சொல்லி, நம் காரியம் முடியுமளவும் அவனை விடாதே கொள்' என்று அந்வயம்

* 1—27

ஈடு —பத்தாம் பாட்டு 'அல்லாதவற்றை யெல்லாம் விட்டு, நெஞ்சைத் தாழ்விலே மருள்' என்பாரு முண்டு அப்போது, விடேனென்று அவனை விடாதே கொள் என்கை. அன்றிக்கே, கீழ்ப்பாட்டில், 'வைக்கவே வகுக்கின்று' என்று கைங்கர்யம் ப்ரஸ்துதமானவாறே, தாய்முலையை நினைத்த கன்றுபோலே திருவுள்ளம் பதறி சரீரத்தை விட்டுப் போகப் புக்கது; நம் கார்யம் ஓரளவில் முடிக்குமளவும் நீ என்னை விடாதே கொள் என்னுதல்.

[உடலாழிப்பிறப்பு] உயிரினுடைய உடலாழிப்பிறப்பு *(ஆத்மாவினுடைய சரீரஸம்பந்தமான பிறப்பு) வீடுமுதலா முற்றுமாகைக்காக - மோக்ஷாதி புருஷார்த்தங்களைப் பெறுகைக்காக - சரீரத்தினுடைய உடலான பிறப்பு, அன்றிக்கே, ஆழியென்று கடலாய், அத்தால் - காரணமாய், அலங்கமயமான ஜந்மமென்னுதல். வீடு - மோக்ஷம். ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜநம் மோக்ஷமாகையாலே சொல்லுகிறது. அன்றிக்கே, [வீடு உயிர்] - ஜந்மங்கள்தோறு முண்டான சரீரஸ்த்தமான ஆத்மாக்கள் உயிர்தொடக்கமாக முற்றுமுண்டான கார்யஜாதத்தை உண்டாக்குகைக்காக [கூடு ஆய்] - "ஸோऽகாமயத" (பஹு ஸ்யாம்) என்கிறபடியே, தன் விகாஸமே யாகையாலே [கடலாழி நீர்தோற்றி] - ஆழ்நீர் ஆழியநீர் "அப ஏவ ஸஸர்ஜாதௌ" (அப ஏவ ஸஸர்ஜாதௌ) என்கிறபடியே மிக்க ஜலத்தையுடைத்தான ஏகார்ணவத்தை யுண்டாக்கி, இவற்றுக்குண்டான ஸ்ருஷ்டியாதிகளுக்காக அங்கே வந்து கண்வளர்ந்தருளும் [அடலாழியம்மானை] - ஸ்ருஜ்யபதார்த்தங்களுக்கு விரோதிகளாயிருப்பாரை அழியச்செய்கைக்காக ஆசிலே வைத்த கையுந் தானுமாயிருக்குங் கண்வளர்ந்தருளுவது [கண்டக்கால்] என்னிலும் உனக்கன்றோ பேறு முற்பட்டிருக்கிறது "த்ருஷ்டா ஸீதேதி" (சந்த்ரேத்ருஷ்டிவாதம்) போலே கண்டாரைக் காணுமித்தனையிறே தனக்கு [இதுசொல்லி] -

பத்தாம்பாட்டு - உடலாழி இத்யாதி விட்டுப்போகப் புக்கது - அத்தைக் குறித்து என்று அர்த்தமதரம். அளவு - நிர்ணயம். விடாதே கொள் என்னுதல் - விடாதே கொள்ளவேணுமென்றபடி.

அர்த்தம் - உயிரினுடைய இத்யாதி அதாவது - ஆத்மாவினுடைய சரீரத்தினுடைய உடலான பிறப்பினுடைய வீடென்று மோக்ஷம், அது முதலான ஸகலபுருஷார்த்தங்களையும் பெறுகைக்காக என்றபடி. "ஆழி" என்றதற்குத் தாத்பர்யம் - அன்றிக்கே ஆழியும் - ஆகைக்காக, பெறுகைக்காக என்றபடி. இத்யாதி அடையவே சொல்லுதே நிமித்தங்களுக்கு முன்னே மோக்ஷத்தைச் சொல்லுவானேன்? என்ன, ஸ்ருஷ்டிக்கு இத்யாதி "உடலாழி" இத்யாதிக்கு அர்த்தாந்தரம் - அன்றிக்கே இத்யாதி இந்த பக்ஷத்தில், சரீரத்தினுடைய அவஸ்தாந்தரமான பிறப்புக்கள்தோறுமுண்டான சரீரஸ்த்தமாக்கள் முதலான தேவாதி கார்யஜாதத்தை உண்டாக்குகைக்காக என்றபடி. வீடுயிர் - சரீரஸ்தமான ஆத்மாக்கள். முதல் - ஆக்குகைக்காக', உண்டாக்குகைக்காக என்றபடி. இப்பக்ஷத்தில், ஆக்குகைக்காக என்னுமிடத்தே "ஆய" என்பானேன்? என்ன - பஹுஸ்யாம் இத்யாதி "கடலாழிநீர்தோற்றி" என்று - ஸமஷ்டி ஸ்ருஷ்டியைச் சொல்லுகிறது. ஆழி நீர்க்கடல் இத்யாதி [illegible] "அப ஏவ ஸஸர்ஜாதௌ தாஸு வீர்யமவாஸ்ருஜத்" [illegible] "அப ஏவ ஸஸர்ஜாதௌ" என்கிறபடியே ஸமஷ்டி ஸ்ருஷ்டி. க்ரமவர்த்தமானமின்படியே என்றபடி. "அப ஏவ ஸஸர்ஜாதௌ" என்றது ஸமஷ்டி ஸ்ருஷ்டி ப்ரமேயம். "கடலாழிநீர்" என்று விசேஷிக்கையாலே - ஏகார்ணவத்தைச் சொல்லுகிறது. அதனுள்ளே என்று - அநிருத்தரூபியான கண்வளர்ந்தருளிய பரமபதத்தை [illegible] ஆக, முன்னே ஸ்ருஷ்டியைப் பண்ணி, அதிலே லோகஸ்ருஷ்டியைப் பண்ணி, அதிலே அண்டத்தையுண்டாக்கி, அதிலே பதினாலு லோகத்தை யுண்டாக்கி, அதிலே கண்வளர்ந்து சதுர்முகனை உத்பாதித்து, இவற்றுக்குண்டான ஸ்ருஷ்டி ஸ்திதிகளுக்காக க்ஷீரார்ணவத்திலே அநிருத்தரூபியாய்க் கண்வளர்ந்தருளுமென்றபடி. ஆசு - ஆயுதத்தின்பிடி. "கண்டக்கால்" என்று - அப்படியைக் கண்டால் சொல்லுவதற்கு பாவம் - என்னிலும் இத்யாதி தான் கண்டிலேனோ! என்ன, ஹநுமானுடைய, ராஜ [illegible] "த்ருஷ்டா ஸீதேதி தத்த்வத:" [illegible] "த்ருஷ்டா ஸீதேதி" இதில் பரமபுருஷனான இதுசொல்லி என்றதுக்கு

* குண்டலிதம் க்ஷாமிதம் என்பர்

'வைகக்கவே வகுக்கின்று' என்கிற வார்த்தையைச் சொல்லி யென்னுதல், ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜநம் - "விசித்ராதேஹஸம்பத்திரீஸ்வராய நிவேதிதும்" (விசித்ராதேஹஸம்பத்திரீஸ்வராய நிவேதிதும்) என்கிறபடியே, தேவர் திருவடிகளிலே ஸர்வ கைங்கர்யங்களையும் பண்ணுகையன்றோ என்கை. விடல் என்கிற பதம், மேலே அந்வயிக்கிறது. [ஆழிமட நெஞ்சே] ஆராவுடையையாய் பவ்யமான நெஞ்சே யென்னுதல், சுழன்றுவருகிற பேதை நெஞ்சே யென்னுதல். [வினையோம் ஒன்றாமோ விடல்] ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜநம் அங்கே அவரைக் கிட்டி அடிமை செய்கையாயிருக்க, பிரிகைக்குடலான பாபத்தைப் பண்ணின நாம் அவரோடே சேருமளவும் நீ அவரை விடாதே யொழியவேணும். (க௦)

பதினோராம் பாட்டு.

அளவியன்ற வேழுலகத்தவர் பெருமான் கண்ணனை
வளவயல் சூழ் வண்குருகூர்ச் சடகோபன் வாய்ந்துரைத்த
அளவியன்ற வந்தாதி ஆயிரத்துள் இப்பத்தின்
வளவுரையால் பெறலாகும் வானோங்கு பெருவளமே

ஈடு (அளவியன்ற) அபரிச்சேத்ய மஹிமையை யுடையனுய், ஸர்வலோகேஸ்வரனுய், ஆஸ்ரிதஸுலபத்வத்தை ஸ்வரூபனுயிருந்த எம்பெருமானைப் பாடுகிற அபரிச்சேத்ய மஹிமையை யுடையனார் இத்திருவாய்மொழியை அப்யஸிக்க வல்லவர் திருநாட்டிலே சென்று பரமபதத்தைப் பெறுவாரென்கிறார்.

மூ—நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார் திருநாட்டில் முகப்பாயமான நிரதிசய ஸம்பத்தைப் பெறுவரென்கிறார்.

[அளவியன்ற என்று தொடங்கி] அபரிச்சேத்யமஹிமனுய ஸர்வலோகேஸ்வரனுய ஆஸ்ரிதபவ்யனுயிருக்குமவனான எம்பெருமானை, ஏழுலகத்தவர் பெருமான் என்று தம்மையும் அசப

அர்த்தத்தைப் பொன்று கண்டுகொள்வது விவரணம் - ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜநம் - விசித்ரோதயாதி ஸ்ரீவிஷ்ணு தர்மத்தில் "விசித்ராதேஹஸம்பத்திரீஸ்வராய நிவேதிதும்। பூர்வமேவ க்ருதா ப்ரஹ்மந் ஹஸ்தபாதாதிஸம்யுதா" அவனை விடல் என்ற பதத்திலே - ஆராவுடைய இத்யாதி என்னை விடல் என்ற பதத்திலே - சுழன்று இத்யாதி ஆழியென்று - ஆழமாய், அதனாலே ஆராவுடைமையைச் சொல்லுகிறது ஆரா - ஜ்ஞாநம் மடப்பம் பவ்யதை இரண்டாமர்த்தத்தில், ஆழியென்று - சுழலுகையாய், மடப்பமென்று - அறிவிலித்தனமாய், சுழன்றுவருகிற பேதைநெஞ்சமே! என்றபடி. வினையோம் என்று ஆத்மஸம்பந்த வசனம் பாதமாவதாரிகைக்குச் சேர அருளிச்செய்கிறார் ஸ்ருஷ்டிக்கு இத்யாதி ஆழிமட நெஞ்சே, உயிருடலாழிப்பிறப்பு வீடு முதலாய முற்றுமாய், ஆழிநீரகடலைத் தோற்றி அதனுள்ளே கண்வளரும் அடலாழியம்மானைக் கண்டக்கால் இது சொல்லி-ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜநம் தேவர் திருவடிகளிலே கைங்கர்யம் பண்ணுகையன்றோ? என்கிற இதைச் சொல்லி, வினையோமொன்றாமளவும் - வினையோமான நாம் அவனோடே சேருமளவும் அவனை விடல் என்று முந்தின அவதாரிகைக்குச் சேர அந்வயம் த்வதீயாவதாரிகைக்கு, அடலாழியம்மானைக்கண்டு, வினையோமொன்றாமளவும் வினையோமான நம் கார்யம் தலைக்கட்டுமளவும், இது சொல்லி - கீழ்ப்பாட்டிலே "வைகக்கவே வகுக்கின்று" என்கிற இத்தைச் சொல்லிக் கொண்டு அவனை விடல் என்று அந்வயம் கண்டக்கால் என்றது - கண்டபடி. காலென்றது - அவ்யயம் கண்ட - கண்டு (க௦)

பட்டாங்கிலே உதவுக்குறைவில்லாமை பரிதாபத்தைச் சொல்லுகிறார் [வளவயலசூழ் வண்குருகூர்] - வளவிதான வயல் சூழ்ந்த நிரதிசயபோக்யமான குருகூர்ச் சடகோபன் வாய்ந்துரைத்த உரைத்த அபரிச்சேத்யமாய அந்தாதியான ஆயிரத்துள் இப்பத்தினுடைய வளவிதான உரையாலே

ப—அவதாரம், இத்திருவாய்மொழிக்கு பலம் ... என்று அருளிச்செய்கிறார்

அளவு இயன்ற - எல்லையைக் கடந்த, ஏழ் - ஏழுலகையுமுடைய, உலகத்தவர் - லோகத்திலுள்ள சேதனவர்க்கத்துக்கு, பெருமான் - ஸ்வாமியான ... , கண்ணனை - (ஆச்ரிதஸுலபனான) க்ருஷ்ணனை, வளம் ... , வயல் - வயலாலே, சூழ - சூழப்பட்ட, வண் - அழகிய, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வார், வாய்ந்து உரைத்த - (தம்முடைய ஐதாந பரேமத்தாலே) கிட்டி அருளிச்செய்த, அளவு - (எழுத்துச்சொல்பொருள்யாப்பு அலங்காரங்களைச் சொல்லுகிற) ப்ரமாணங்களிலே, இயன்ற - வாய்த்திருப்பதாய், அந்தாதி - அந்தாதியான, ஆயிரத்துள் - ஆயிரத்துள்ளும், இப்பத்தின் - இப்பத்தினுடைய, வளம் - இனிதான, உரையால் - மொழிமாத்ரத்தாலே, வான் - பரமபதத்தில், ஓங்கு - உத்துங்கமான, பெருவளம் - கைங்கர்யஸாம்ராஜ்யம், பெறலாகும் - பெறலாம் அளவியன்ற கண்ணனென்று - அளவிறந்த வாத்ஸல்யமுடைய ... என்றுமாம் அளவியன்ற அந்தாதியென்று - எல்லையிறந்த பெருமையையுடைய அந்தாதியென்றுஞ் சொல்லுவர் இத்திருவாய்மொழி அளவியு ... கலித்துறையாகவுமாம்

இ—ஈகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார், பரமபதத்தில் ... மஹாஸம்பத்தைப் பெறுவரென்கிறார்

[அளவியன்றவேழுலகத்தவர் பெருமான்] "... விஶ்வஸ்ய ..." என்கிறபடியே தமிழ்ப்புலவர் வந்து தோற்றினபடியை அருளிச்செய்கிறார் [அளவியன்ற] - அபரிச்சேத்ய மஹிமாவானவையாலே இவ்வளவிலே வந்து முகம் காட்டினவனை ஆச்ரிதருண்டுபோல் உள்ளதை [ஏழுலகத்தவர்பெருமான்] - ஸ்வாமித்வம் விகலமாகாதபடி ஸர்வே ... ஏழுலகத்தவரென்று தம்மையுங் கூட்டிக்கொள்ளுகிறார் [கண்ணனை] - 'இவ்வளவில் முகங்காட்டிற்றிலன்' என்கிற குறை தீருகையாலே ஆச்ரிதஸுலபனானவன் "பத்துடை யடியவ"ரில் க்ருஷ்ணாவதாரத்திலே அநுபவிக்கப் பாரித்து, அது கிடையாமையாலே அது விட்டாரகையாலே இங்கு முகங்காட்டினை க்ருஷ்ணன் என்னவுமாம் [வளவயல்சூழ் வண்குருகூர்] - வளவிதான வயல் சூழ்ந்து நிரதிசயபோக்யமான ஊர்; இவர் உருகினபோது "... " என்கிறபடியே உருகின ஊர் இவர் தரித்தவாறே "... " என்கிறபடியே தரிக்கும் ஊரிதுமாம். [வாய்ந்துரைத்த] - கிட்டியுரைத்த அதாவது - மானஸமான கிட்டுகை, பரேமர்த்தமிக்குரைகை [அளவியன்றவந்தாதியாயிரம்] - அபரிச்சேத்யனானவனுக்குமேல் ஆக்கவுறுப்பு அந்தாதியான ஆயிரம் [இப்பத்தின் வளவுரையால் பெறலாகும்] - வளவுரை - நற்சொல்லு பாலைக்குடிக்க நோயு போமாபோலே, இத்திருவாய்மொழியின் இனிய சொல்லாலே பெறலாம் [வானோங்குபெருவளமே] - வானென்று பரமபதமாய், பரமபதத்திலே விலக்ஷணமாய நிரதிசயமான ஸம்பத்தைப் பெறுவர்கள் பிதா க்ருஷியின்விலைத்தால் புத்ரனுக்கு பலத்திலே அந்வயமாமாபோலே, இப்பத்தையும் கற்றவர்களுக்கு, இவர் தாமிட்டுப் பட்ட க்லேசம் படவேண்டா, இவர் பேற்றைக் கொடுக்கும் இப்பத்து

ப்டு —நிகமத்தில், இத்திருவாய்மொழியில் ஸப்தமாத்ரத்தை அப்யஸிக்கவே யமையும் திருநாட்டைப் பெறுகைக்கு என்கிறார்

[அளவியன்ற] வியந்த என்கிறஇது 'வியன்ற' என்று கிடக்கிறது தவ்வுக்கு றவ்வாய், வியத்தல் கடத்தலாய், அளவைக் கடந்திருக்கு மென்றபடி , அபரிச்சேத்யமஹிமனானக இத் தால் இத்தசையிலே முகங்காட்டுகைக்கீடான ஜ்ஞாநாதி குண பூர்ண னென்கை [ஏழுலகத் தவர்பெருமான்] நாராயணத்வம் விகல மாகாதபடி ஸர்வேச்வரனானவன ஏழுலகத்தவர்க்கென்னவே, தாழ்ச்சி அதிலே அந்தர்ப்பூதமிறே [கண்ணனை] - இவளவிலே வந்து முகங்காட்டிற்றில னென்கிற குறைந் தீர வந்து முகங்காட்டுகையாலே ஆச்ரிதஸுலபனானை 'பத்துடையடியவ'ரில் க்ருஷ்ணா வதாரத்திலே அநுபவிக்கப் பாரித்து, அது கிடையாமையாலே தூதுவிட்டாராகையாலே இங்கு முகங்காட்டினது க்ருஷ்ண னென்னவுமாம் இத்தால் அவனுடைய மேன்மையும் ஸௌலப்ய மும் சொல்லிற்று, இவர்க்கு முகங்காட்டினபின் பாயிற் றென்றபடி [வளவயல] "அகாலபலிநோவ்ருக்ஷா:" (அகாலபலிநோவ்ருக்ஷா:) என்கிறபடியே திருநகரியும் தளிரும் முறியுமாயிற்று [வாய்ந்துரைத்த] வாய்கை கிட்டுகை அதாவது பாவபந்தத்தையுடைய ராகை , நெஞ்சு பிணிப்புண்டு சொன்னதா யிருக்கை [அளவியன்றவந்தாதி] அபரிச்சேத்யவஸ்துவுக்கு வாசகமா கையாலே தானும் அபரிச்சிந்நமாய், ஒருவரால் சலிப்பிக்கவொண்ணாதா யிருக்கிற ஆயிரத்துள் இப்பத்தினுடைய நன்றான உரையாலே [வாழ்ந்தெழுந்த பெருவளம் பெறலாகும்] பாலகுடிக்க நோய் தீருமாபோலே இத்திருவாய்மொழியின் இனிய சொல்லாலே பெறலாம் ஸ்வயம்ப்ரயோஜந

நிகமம் அளவியன்ற இத்யாதி 'வளவுரையால் வான்றோங்குபெருவளம் பெறலாகும்' என்ற பதங் களைக் கடாக்ஷித்து ஸங்கதி - இத்திருவாய்மொழியில் இத்யாதி

வோம்' என்கையாலே கூப்பிடுகைக்கு ப்ரயோஜநம் அழுகையென்று தோற்றுகிறது. ஓருப்ரயோஜநமென்றதின் விவரணம் - அவனைப்பெறவோ இத்யாதி. எம்பெருமான் நாரணற்கு மடநெஞ்சந் தோற்றேம், எம்ஆற்றுமைசொல்லி அழுவோமை இத்யந்வயம் ஹ்ருதிநிதாயோக்தம் - அழப்பெறுமோ என்றது. ஆற்றுமையாலே அழுகைக்கும் யோக்யதையில்லையோ? என்றபடி. அல்லாதவற்றுக்கு இத்யாதி - தன்னோடு ஸமதுஃகிகளானவற்றின்படியுமன்றிக்கே, உதாஸீநர்படியுமன்றிக்கே, உபயவிலக்ஷணமான ஆகாரம் உனக்கு உண்டாவதேயென்று - நீயின் தாத்பர்யம். கீழ் வாக்யவிவரணம் - அவனையொழிந்த இத்யாதி. நம்மில்நாம் - உனக்கும் இதுவேயிறே அடுப்பதென்று கருத்து. 'நடுவே' என்றஇதுக்கு - எங்கள்மத்யத்திலே யென்று பொருள்; இல்லையாகில், இந்தயோஜனைக்கு ஶப்தஸ்வாரஸ்யஞ் சொல்ல வழியில்லையிறே. அவதாரிகையிலே, இருள் வந்து முகத்தை மறைக்கவென்று ஶப்தார்த்தம் சொன்ன ப்ராயமிறே. 'நடுவே' என்றதின் தாத்பர்யம் - நலிகைக்கு இத்யாதி. நலிகைக்குஎன்கிறது - இவ்வளவுக்கும் ஆர்த்திகார்த்தம். வேற்றேர் - ஹிம்ஸகாஃ. வகை - தேஷாம்பேதஃ. அதிலும்கொடிதாக நலிகிறதென்? என்ன, அதினுடைய க்ரௌர்யத்தை இரண்டுவகையாக அருளிச்செய்கிறுர் - ஶத்ருக்களானாலும் என்று தொடங்கி. நோவுபட்டாரை - கச்சாநுஜாநாமிபிலே தாத்பர்யம். எனை - அநேகம். 'வேற்றேர்வகை' இதி - ஸ்வய ஹிம்ஸகஶ்சேந, நிரந்தரஹிம்ஸகத்வமேவாவிவக்ஷிதஃ; தஸ்மாத் உபயவியாகு ஹேதாவப்யதிகம்க்ரௌர்யமஸீத்யபிப்ராயேணோக்தம் - ராவணாதிகள் இத்யாதி. நீர்மையுடையார் - நீர்மையுடைய ஶத்ருக்க ளென்றபடி. பலிதம் - நீர்மையுடையார்படியும் இத்யாதி. ஶத்ருக்கள் - நீர்மையில்லாத ஶத்ருக்கள். 'வேற்றேர்வகையிற் கொடிதா யெனையூழிநிற்றி' இத்யுக்தியா நரஶாயாம் 'வாழி' இதி - ஆஶீர்வாதவ்யாஜேந ஸ்துதிஃ பாதுகரை இதி. உடன்பிறந்தீர் - 'தயைபிறக்குமோ'என்னும் நசையாலே சொல்லும் வார்த்தை. எம்பெருமான் நாரணற்கு மடநெஞ்சந்தோற்றேமாயிருக்க எம்ஆற்றுமை சொல்லியென்று அந்வயம். கனவிருளென்னுதல், கனையிருளென்னுதல்-செறிந்தவிருள் இதி. "க்வணிதேஶப்தே கனஶப்தோ நாமாநுகாரஶப்தோ வா ஶப்த இதிஹாவஃ." கனைத்துக்கொண்டு - கோபித்துக்கொண்டு. யோஜநாந்தரம் -

வருகிற இருளே யென்னுதல். அன்றியே, ப்ரகரணத்தோடே சேர்ந்த பொருளாவது-தமஸ்ஸென்று ஒரு பதார்த்தமாய், 'அதுதான் ஒளிமழுங்கி அடங்கியிருக்கை ஸ்வபாவம்' என்று அறியாதே, அபிமதவிஸ்லேஷத்தாலே ஒளிமழுங்கி வாய்விட்டுக் கூப்பிடவும்மாட்டாதே நோவுபடுகிறபடியைக் கண்டு, 'உன்இழவு கனத்திருந்தது!' என்கிறாள். வகுத்தவிஷயத்திலே நாமெல்லாம் நெஞ்சிழந்து கூப்பிடாநிற்க, நீ உன்ஆற்றாமையைக் காட்டி நலியாநின்றாய்; உன் அவஸாதம் நீங்கி நீ ஜீவித்திடுக என்கிறாள். (எ)

எட்டாம் பாட்டு.

இருளின் திணிவண்ணம் மாநீர்க்கழியே! போய்
மருளுற்றிராப்பகல் துஞ்சிலும்நீ துஞ்சாயால்
உருளுஞ்சகடம் உதைத்தபெருமானார்
அருளின்பெருநசையால் ஆழாந்துநோந்தாயே

ஆ.—(இருளின்.) இருளின் திணிவண்ண மாநீர்க்கழியே! போய்அறிவழிந்து இராப்பகல் முடியிலும் நீ உறங்குகிறிலை; நீயும் என்னைப்போலே உருளுஞ் சகட முதைத்த பெருமானாரோடே ஸம்ஶ்லேஷிக்கையிலுள்ள அபிநிவேசத்தாலே ஆழாந்து நோந்தாயாகாதே யென்கிறாள்.

ஒ.—எட்டாம்பாட்டில், இருளாலே ஜலஸத்தலவிபாக மறியாதே ஒருகழியிலேசென்று 'நீயும் என்னைப்போலே எம்பெருமான்பக்கல் நசையாலே தரைப்பட்டு நொந்தாயாகாதே' என்கிறாள்.

[இருளென்று தொடங்கி] - இருள்செறிந்தாற்போலே யிருக்கிற பெருநீரையுடைய கழியே! மிகவும் அறிவுகெட்டுக் காலம் முடியிலும் நீ முடிகிறிலை. [உருளுஞ் சகடமென்று மேலுக்கு] – அஸுராவேசத்தாலே உருளுகிற சகடத்தை உதைத்த உப

அன்றியே இத்யாதி. உன்ஆற்றமையைக்காட்டி நலியாநின்றாய்-உன்ஆற்றாமையைக்காட்டி ஶத்ருக்களைக்காட்டிலும் நலியாநின்றா யென்றபடி. இந்தயோஜனையில், 'நடுவே' என்கிறது - நாரைமுதலானவற்றின் நடுவே யென்றபடி. அதாவது - நாரைமுதலானவை தங்கள் வ்யஸநத்தைக்காட்டி என்னைப் பிரியாநிற்க, நீயும் அவைபோலே உன்னுடைய வ்யஸநத்தைக் காட்டிப் பிரிக்கக்கடவையோ? என்றபடி. 'நீநடுவே' என்றது - எங்களாற்றாமையைக்காட்டில் வ்யாவ்ருத்தமாயிருந்தது! உன்ஆற்றாமை யென்றபடி யென்னவுமாம். இது ஆளவந்தார் நிர்வாஹத்துக்கு. 'கனையிருள்' என்றது - நியதஸ்வபாவ மென்று அறியாதே, 'பகவத்விஶ்லேஷத்தாலே ஒளிமழுங்கியிருக்கிறது' என்றிருக்கிறா ளென்று கருத்து. அடங்கியிருக்கை - வெளிப்புறப்படாம லிருக்கை. எம்பெருமான் நாரணற்கு மடநெஞ்சம் தோற்றோமென்று அந்வயத்திலே அர்த்தம்-வகுத்தவிஷயத்திலே என்று தொடங்கி. இந்தயோஜனைக்கு, வேற்றோர்வகை இத்யாதிக்கு - உன்ஆற்றாமையைக்காட்டி ஶத்ருக்கள் நலியும் ப்ரகாரத்திலும் அதிகமாக நலிகிறாயென்று கண்டுகொள்வது. 'எனையூழி மாற்றாண்மை நிற்றியோ' என்றதுக்கு ஸ்வாரஸ்யமில்லை; 'வாழி' என்றதுக்கு - ஸ்வாரஸ்ய முண்டு. முந்தினயோஜனையில், 'கொடிதாயெனையூழிமாற்றாண்மைநிற்றி' இத்யாதி ஸ்வாரஸ்ய முண்டு. கனையிருளே, எம்பெருமான் நாரணற்கு மடநெஞ்சந்தோற்றோம்; எம்ஆற்றாமைசொல்லி யழுவோமை நீநடுவே வேற்றோர்வகையில் கொடிதாய் எனையூழி மாற்றாண்மை நிற்றியோ? வாழியென்று அந்வயம். (எ)

காரத்தாலே சேதநரையெல்லாம் அடிமைகொண்ட க்ருஷ்ணன் அவ்வாபத்தை நீக்கினாற் போலே இவ்வாபத்துக்கும் உதவுமென்னும் பெருநசையாலே முடியாதே ஆழவிழுந்து நோவுபட்டாயே!

ப.—அநந்தரம், 'அவன்காருணிகத்வத்திலே நசைபண்ணி ஆழங்காற்பட்டாயோ?' என்று கழியைப் பார்த்துக் கலங்கி உரைக்கிறாள்.

இருளின் - இருளினுடைய, திணிவண்ணம்-செறிந்த நிறத்தையுடைத்தான, மா - பெரிய, நீர் - நீரையுடைய, கழியே - கழியே! போய் - மிகவும், மருளுற்று - அறிவு கெட்டு, இராப்பகல் - அஹோராத்ரரூபமான காலமும், துஞ்சிலும் - முடியிலும், நீ - நீ துஞ்சாய் - உறங்குகிறிலை; ஆல் - ஆதலால், உருளும் - உருளுதலையுடைத்தான, சகடம்- சகடத்தை, உதைத்த - (திருவடிகளாலே) உதைத்த, பெருமானார் - பெரியவருடைய, அருளின் - க்ருபாகுணத்திலுண்டான, பெருநசையால் - பெரிய ஆசையாலே, ஆழாந்து- ஆழங்காற்பட்டு, நொந்தாயே - நொந்தாயோ? மாநீரென்றது - கறுத்தநீரென்றுமாம். இத்தால் - ஜலப்ரக்ருதிகளும் அவன்க்ருபாகுணத்திலே அகப்பட்டால் கால்தாழ்வ ரென்று கருத்து.

தி.—எட்டாம்பாட்டில், இருளாலே ஜலஸ்த்தலவிபாக மறியாதே ஒருகழி யிலே சென்று 'நீயும் என்னைப்போலே அவன்பக்கல் நசையாலே தரைப்பட்டு நொந்தா யாகாதே' என்கிறாள்.

[இருளின் இத்யாதி] - இருள் செறிந்தாற்போலே யிருக்கிற பெருநீரை யுடைய கழியே! [போய்மருளுற்று] - மிகவும் அறிவுகெட்டு; உள்ளுள்ளவையெல்லாங் கலங்கி; மயர்வறமதிநலமருளப்பெற்ற அவ்வளவெல்லாங் கலங்கினார்க்குப் போலியாயிருக் கை. [இராப்பகல் இத்யாதி] - காலதத்வம் முடியிலும் நீ உறங்குகிறிலை. [உருளும் சகட முதைத்த] - ரக்ஷையாக வைத்த சகடம், அஸுராவேசத்தாலே மத்யராத்ரத்திலே ஊர்ந்துவந்து மேல்விழ ஸ்தந்யார்த்தியாய் அழுகிறபோதைத் திருவடிகளுக்கு இலக்காய், அது துக்ளாம்படி பண்ணின. [பெருமானார்] - அத்தையழியச்செய்து ஜகத்துக்கு ஒரு ஸேஷியைத் தந்தவன். [அருளின்பெருநசையால்] - அவ்வாபத்துக்கு உதவினாற்போலே இப்போதும் உதவுமென்னும் நசையாலே. அருள் ஸாவதியாகிலிறே நசையும் ஸாவதி யாவது. தாய்க்கு உதவினவன் ப்ரணயிநிக்கு உதவானோ? என்னும் நசையாலே. [ஆழா ந்துநொந்தாயே] - அறவிழிந்து நோவுபடுகிறாயே!

ஈடு.—எட்டாம்பாட்டு. அவ்விருளுக்கு இறுய்த்து அங்கேஇங்கே ஸஞ்சரியா நிற்க,இருள் செறிந்தாற்போலே யிருப்பதோரு கழியிலே சென்று இழிந்தாள்; அது மடலே டுப்பாரைப்போலே கெட்டோடாநிற்குமே; பாவியேன், சகடாஸுரநிரஸநம் பண்ணின அச்செயலிலே நீயும் அகப்பட்டாயாகாதே யென்கிறாள்.

எட்டாம்பாட்டு - இருளின் இத்யாதி. இருளுக்கு அநந்தரம் கழியைச் சொன்னதுக் குச் சேர்த்தியேது? என்ன, அவ்விருளுக்கு இத்யாதி. இறுய்த்து-பின்வாங்கி.

[இருளின்திணிவண்ணம்] - அச்சமான இருள். வெளிறுன இருளன்றிக்கே, இருளின் புறவிதழை வாங்கி வயிரத்தைச் சேரப்பிடித்தாற்போலே யிராநின்றது. இருளின்திணிபோலே யிருக்கிற நிறத்தை யுடைத்தாய்ப் பெருநீரையு முடைத்தான கழியே! [போய்மருளுற்று] - மிகவும் அறிவுகேட்டு. மயர்வற மதிநலமருளப்பெற்றார் அறிவுகேட்டுக்கும் அவ்வருகேயா யிராநின்றதீ! உன்அறிவுகேடு! [இராப்பகல் இத்யாதி] - காலத்துக்கு ஓரெல்லை காணிலும் உன் ஆற்றாமைக்கு ஓரெல்லை காண்கிறிலோம். [உருளும்சகடமுதைத்த]-காவலாகவைத்த சகடந்தானே அஸுராவேசத்தாலே ஊர்ந்துவர, தாயுங் கூட உதவாத ஸமயத்திலே முலைவரவுதாழ்த்துச் சீறிநிமிர்த்த திருவடிகளாலே முடித்து, 'ஜகத்துக்கு ரக்ஷையைத்தந்த உபகாரகன் ப்ரணயிநிக்கு உதவானோ?' என்னும் நசையாலே [அருளின்பெருநசையால்] - அருளின்கனத்துக்குத் தக்கபடியிறே நசையின் கனம் இருப்பது. [ஆழாந்துநொந்தாயே] - தரைப்பட்டு நோவுபட்டாயாகாதே. (அ)

ஒன்பதாம் பாட்டு.

நொந்தாராக்காதல்நோய் மெல்லாவியுள்ளுலர்த்த
நந்தாவிளக்கமே! நீயுமளியத்தாய்
செந்தாமரைத்தடங்கண் செங்கனிவாயெம்பெருமான்
அந்தாமத்தண்துழாய் ஆசையால்வேவாயே.

ஆ.—(நொந்தாரா.) நந்தாவிளக்கே! இப்பாடு படுகைக்கு ஈடன்றியே யிருந்த நீயும் என்னைப்போலே, காலதத்வமெல்லாம் அநுபவித்தாலும் ஆராத காதல்

'திணி' என்றதுக்கு ஸாவம்-அச்சமான இத்யாதி. வெளிறனஇருளன்றிக்கே - வெளிறு-அஸாரம். புறவிதழ் - பஹிர்தளம். ஸப்தார்த்தம் - இருளின் இத்யாதி. திணிபோலே - வயிரம்போலே. போய் - மிகவும். "வார்தல் போத லொழுக லிவை நெடுமையாகும்" என்னக்கடவதிறே. 'மிகவும்' என்றத்தை விவரிக்கிறார் - மயர்வற இத்யாதி. இராப்பகல் என்று காலாவயவங்களைச் சொன்னது - காலத்துக்கும் உபலக்ஷணம். காலத்துக்கு இதி - "அநாதிர் பகவாந் காலோ நாந்தோஸ்ய த்விஜ வித்யதே" இதி. அஹோராத்ர ஸஹஸ்ராணி ... துஞ்சிலும்-முடியிலும். தனக்கு திவாராத்ரவிபாக மற்றிருக்கையாலும்,'காலமாகில் திவாராத்ரவிபாக விபக்தமாயே யிருக்கும்' என்றிருக்கையாலும், 'காலம் நசித்தது' என்றிருக்கிறாள். துஞ்சாயால் - உறங்குகிறிலை. ஆற்றாமையால் வரும் ஜாஸ்ரத்துக்குக் காலம் வேண்டாவாகாதே. அதவா, "அநாதிர் பகவாந் கால:" என்கிறபடியே அநந்தமான காலம் அவன் விஷயமாக மருளுற்று, ஆற்றாமையாலே முடிந்து பிழைத்திருக்கவும், என்னைப்போலே "ஜீவந் பத்ராணி பஶ்யதி" என்று நசையின் கனத்தாலே முடிந்து பிழைக்கவும் பெற்றாயில்லை யென்றபடி. காவல் - ரக்ஷை. உருளும் - ஊர்ந்துவரும். தாழ்த்து-விளம்பித்து. "விக்ஷேபசரணாவ் ப்ருத்வ ஸ்தந்யார்த்தீ ப்ரருரோத ஹ" இத்யுக்த ரீதியா ஹ - முலைவரவு இத்யாதி. உதைத்த - முறித்த. கழி, ஸ்த்ரீயாகையாலே ப்ரணயிநிக்குஉவதானோஎன்றது. நசைக்குப் பெருமையேது? என்ன, அருளின் இத்யாதி.ஆழாந்து-தரைப்பட்டு. (அ)

நோயானது உன்னுடைய மெல்லாவியை உள்ளுலர்த்த, செந்தாமரைத்தடங்கண் செங் கனிவாய் எம்பெருமான் அந்தாமத் தண்துழாயினுள்ளே ஆசையாகிற மஹாக்நியாலே வேவாநின்றாயாகாதே யென்கிறாள்.

ஒ.—ஒன்பதாம்பாட்டில், ஆற்றாமையாலே தன் மாளிகையிலே புகுந்து அங்கே எரிகிற விளக்கைக்கண்டு, பகவத் விஶ்லேஷத்தாலே வெதும்புகிறதாகக் கொண்டு, 'என்னைப்போலே நீயும் இங்ஙனே பட்டாயாகாதே' என்கிறாள்.

[நொந்தாரா என்று தொடங்கி] - விடாதே நலிகிற ப்ரேமவ்யாதி, பகவத் துஃகாநுஸந்தாநத்தாலே நைந்திருக்கிற ஆத்மாவை உள்ளுள்ள பசையெல்லாம் அறும் படி உலர்த்த, விச்சேதியாதே உருவச்செல்லுகிற விளக்கே! நானேயன்றிக்கே நீயும், [அளியத்தாய்] - அருமந்த நீ. [செந்தாமரைத் தடங்கணென்று மேலுக்கு] - அப்போ தலர்ந்த செந்தாமரைப் பூப்போலேயாய்ப் பெருத்திருக்கிற திருக்கண்களாலே நோக் குகை பூர்வகமாக ஸாந்த்வநம் பண்ணித் திருத்தோளில் தோள்மாலையை வாங்கித் தோளி லேயிட்டு அவன் பண்ணும் ப்ரஸாதத்தை நினைத்து அதில் ஆசையாலே பரிதபிக்கிறாயே.

ப.—அநந்தரம், 'கமநீய விக்ரஹனானவனுடைய போக்யதா விஷயமான ஆசையாலே வெதும்புகிறாயோ?' என்று ஒரு விளக்கை உரைக்கிறாள்.

நந்தா விளக்கமே - ஒன்றாய் வீவற்ற விளக்கே! அளியத்தாய் - இப்படி வில க்ஷணமான, நீயும் - நீயும், நொந்தாரா - ஈடுபட்டிருக்கச் செய்தேயும் ஈடுபடுத்துகிறதால் வயிறுநிறையாத, காதல் நோய் - காதலாகிற நோயானது, மெல்லாவி - (உன்மேனி போலே) மெல்லிதான ப்ராணனையும், உள் உலர்த்த - உள்ளே உலர்த்தும்படியாக, செம் தாமரை - சிவந்த தாமரைபோன்ற, தட - பெரிய, கண் - கண்களையும், செம் கனி - சிவந்த கனிபோன்ற, வாய் - வாயையுமுடையனான, எம்பெருமான் — என்ஸ்வாமியானவ னுடைய, அம் - அழகிய, தண்துழாய்த்தாமம் - திருத்துழாய் மாலையி லுண்டான, ஆசையால் - ஆசையாலே, வேவாயே - பரிதபிக்கிறாயோ? அளியத்தா யென்று - 'அரு மந்த' என்னுமாபோலே, நன்மையைக் காட்டுகிறது. இத்தால் — அவன் வடிவழகில் ஆசை தேஜஸ்விகளையும் பரிதபிக்கு மென்கை.

இ.—ஒன்பதாம் பாட்டில், ஆற்றாமையாலே தன் மாளிகையிலே புகுந்து அங்கே எரிகிற விளக்கைக் கண்டு, பகவத்விஶ்லேஷத்தாலே வெதும்புகிறதாகக்கொண்டு 'நீயும் நான்பட்டது பட்டாயாகாதே' என்கிறாள்.

[நொந்தாராக்காதல் இத்யாதி] - இடைவிடாதே உருவநலிகிற ப்ரேமவ்யாதி. ப்ரேமவ்யாதிக்கு உள்ளதொன்றிறே இது. [மெல்லாவி] - விளக்கின் ப்ரக்ருதியின் மார்த்தவம்போலே யிருக்கும் ஆத்மாவு மென்றிருக்கிறாள். அதாகிறது - பகவத்குணாநு பவத்தாலே நைந்திருக்கை. [உள் உலர்த்த] - தோற்புரையன்றிக்கே, உள்ளே குருத்து வற்றாக வற்றுவிக்க. [நந்தா விளக்கமே] - முடியவும்பெறாதே உருவச் செல்லுகிற விளக்கே! அநுமாநஸித்தமான நஶ்வரத்வத்தை விஸ்மரித்தாள். [நீயும்] - லோகத் துக்குக் கண்காட்டியான நீயும். [அளியத்தாய்] - அருமந்த நீ பரார்த்தமான உடம் பிலே இந்நோவுபடுவதே! [செந்தாமரை இத்யாதி] - கண்ணாலே குளிரநோக்கி ஸ்மித பூர்வமாக ஸாந்த்வநம் பண்ணி, அந்த நோக்காலும் அந்த ஸ்மிதத்தாலுமாக என்னை

அநந்யார்ஹமாக்கினவனுடைய அழகிய திருத்துழாய்மாலையி லுண்டான ஆசையாலே. "ஸ்வாராதநந்தவநராஜ" என்று மங்களாஶாஸநம் பண்ணின பிராட்டியை, தாம் வருமளவும் தரித்திருக்க, "பதிஸம்மாநிதா ஸீதா" என்கிறபடியே - தோளின்மாலையை இவள்தோளிலே யிட்டுக் குளிரநோக்கி ஸ்மிதம்பண்ணிக் கொண்டாடினாற்போலே. [ஆசையால் வேவாயே] - ஆசையே நெருப்பாக வேகிறாயே. உடம்பே இந்தநமாக வேகிறாயே. "கஜ்ஞெநவாஞ்ஜிவவ்ருத்தஃ" என்னக் கடவதிறே.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. அக்கழிக்கு ஒருகரை காணமாட்டாதே மீண்டுவந்து படுக்கையிலே விழுந்தாள்; அங்கு எரிகிற விளக்கைக் கண்டாள்; அது 'உடம்பில் கை வைக்கவொண்ணாதபடி விரஹஜ்வரம் பற்றி எரியாநின்றது' என்று அத்தைப்பார்த்து நீயும் நோவுபட்டாயாகாதே யென்கிறாள்.

[நொந்து இத்யாதி] - 'நோவ' என்று புக்கால், நொந்து தலைக்கட்டக்கடவதன்றிக்கே யிருக்கிற ப்ரேமவ்யாதியானது, தொட்டார்மேலே தோஷமாம்படி ம்ருதுவாயிருக்கிற ஆத்மாவைக் குருத்துவற்றாக உலர்த்த. [மெல்லாவி] - பகவத்குணாநுபவத்தாலே நைந்திருக்கை· காற்றுப்படப் பொறாதிருக்கை. [நந்தாவிளக்கமே] - ஜ்வாலாபேதாநுமாநம் இருந்து பார்க்கிறாளன்றே. ஸந்தாநவிச்சேதமின்றிக்கே உருவ நோவுபடுகிறாயாகாதே. [நீயும் அளியத்தாய்]-நாட்டேக்குக் கண்காட்டியான நீ படும்பாடே இது! [அளியத்தாய்]- அருமந்த நீ பரார்த்தமான உடம்பிலே உனக்கு நோவுவருவதே? [செந்தாமரை இத்யாதி] - "பதிஸம்மாநிதா ஸீதா ஹர்த்தாரமஸிதேக்ஷணா" (பதிஸம்மாநிதா ஸீதா

ஒன்பதாம்பாட்டு - நொந்தாரா இத்யாதி. கழியைச்சொன்ன அநந்தரம் விளக்கைச் சொன்னதுக்கு ப்ரஸக்தி யேது? என்ன, அக்கழிக்கு இத்யாதி. அக்கழிக்கு ஒரு கரை காணமாட்டாதே உதிவாடீமம். தத்ஸ்வஸ்யாம் த்ருஷ்ட்வா ஸஹஸா ஸ்தீயுஷிம்.

'ஆரா' என்றதுக்குத்தாத்பர்யம்-நோவவென்றுபுக்கால்நொந்துதலைக்கட்டக் கடவதன்றிக்கே என்றது. உள்-குருத்துவற்றாக. ஆத்மாவுக்கு மார்தவமேது? என்ன, பகவத்குண இத்யாதி. "தொட்டார்மேலே தோஷம்" இத்யாதியின் விவரணம் - காற்றுப்பட இத்யாதி. நந்தாவிளக்கு - விச்சேதமில்லாத விளக்கென்று ஶப்தார்த்தம். நந்துதல் - சிந்துதல். ஜ்வாலாபேதாநுமாநத்தாலே நாஶம்ஸித்தமாயிருக்க, 'நந்தாவிளக்கம்' என்கிறதென்? என்ன, ஜ்வாலாபேத இத்யாதி வாக்யத்வயத்தாலே.ஸந்தாநவிச்சேதமின்றிக்கேஇருக்கையாலேஉருவநோவுபட்டாயாகாதேஎன்கிறாளென்று கூட்டுவது; ப்ரமித்துச்சொல்லுகிறாளென்று கருத்து 'நந்தா' என்ற இதுக்கு - முடிந்துபிழைக்கப்பெற்றிலையேயென்று ஹாவம். அந்தஸந்தாநம் ஏகாத்மாதிஷ்டிதமென்று தாத்பர்யம். எப்போதுமொக்க உனக்கு இப்படிஇற்றிற்றெரிகையே ஸ்வபாவமாம்படி விளைவதேயென்றபடி. ஜ்வாலாபேதாநுமாநமாவது-ப்ரதிக்ஷணவிநாஶிநீ ஜ்வாலா, ப்ரதிக்ஷணத்வம் ஸித்தி விநாஶவதீ, கூடஃ, வஸ்த்வவயவஸம்யோகஜந்யவஸ்த்வவயவவிநாஶித்வாத், ப்ரதிக்ஷணஜ்வாலாவத் என்றது. அளியத்தாய் நீயுமென்றுஅந்வயம் திருவுள்ளம்பற்றி அர்த்தம்-நாட்டேக்குஇத்யாதி. கண்காட்டியான - கண்ணுக்கு விஷயங்களைக் காட்டுகிற. "அளியத்தாய்" என்று முழுச்சொல்லாய், அருமந்த நீ யென்றபடி. அதாவது - எல்லாராலும் க்ருபை பண்ணத்தக்க நீ யென்றபடி. "அளியத்தாய்" என்றத்தை "வேவாயே" என்றத்தோடே கூட்டி ஹாவம்-பரார்த்தமான இத்யாதி. உத்தரார்த்தமாத்ரத்துக்கு ஹாவம்-பதிஸம்மாநிதா இத்யாதி. யத்வா, "அந்தாமத் தண்டுழாய்"

பர்த்தாரமஸிதேக்ஷணு) என்ற பேறு பெறவேணும்' என்றத்தையோ நீயும் ஆசைப்பட்டது? [செந்தாமரைத் தடங்கண்] - முகத்தைப் பார்த்துக் குளிரநோக்கினபோதைத் திருக்கண்களில் செவ்வி சொல்லுகிறது. [செங்கனிவாய்] - இன்சொல் சொல்லுகிறபோதைத் திருவதரத்தில்பழுப்பைச் சொல்லுகிறது. [எம்பெருமான் இத்யாதி] - 'நோக்காலும் ஸ்மிதத்தாலும் என்னை அநந்யார்ஹையாக்கினவனுடைய அழகிய திருத்துழாய்மாலை பெறவேணும்' என்னும் ஆசையாலே. [வேவாயே] - உக்கக்காலுக்கு உளையக்கடவ உன்னுடம்பே நெருப்பாக வேகிறுயாகாதே. (௯)

பத்தாம் பாட்டு.

வேவாராவேட்கைநோய் மெல்லாவியுள்ளுலர்த்த
ஓவா திராப்பகல் உன்பாலேவீழ்த்தொழிந்தாய்
மாவாய்பிளந்துமருதிடைபோய் மண்ணளந்த
மூவாமுதல்வா! இனியெம்மைச்சோரேலே.

ஆ.—(வேவாரா.) அதாஹ்யமான என்னுடைய மெல்லாவி முடிந்தாலும் தவிராதே நின்று வேட்கைநோயானது தஹிக்கும்படி உன்னுடைய குணசேஷ்டிதங்களாலே என்னை ஓவாதே இராப்பகல் உன்பக்கலிலே விழுந்து கிடக்கும்படி பண்ணினுய்; இனி அடியேனைச் சோரவிடாதொழியவேணும் என்கிறுர்.

ஓ.—பத்தாம்பாட்டில், இப்படி தன்னுடைய அவஸாதமெல்லாந் தீரும்படி வந்துஸம்ஶ்லேஷித்த எம்பெருமானைக் குறித்து, இனி ஒருநாளும் என்னை விடாதொழிய வேணு மென்று அவனை அர்த்திக்கிறுர்.

[வேவாராவென்றுதொடங்கி] - சிலநாள் நலிந்து விடக்கடவதன்றிக்கே, மேன்மேலென மிகவும் நலியக்கடவதான விரஹவ்யஸநம் பாரமில்லாத ஆத்மாவை மிகவும் நோவுபடுத்த, நிரந்தரமாக உன்னுடைய குணசேஷ்டிதாதிகளைக் காட்டி என்னை அகப்படுத்திக் கைவிட்டாய். [மாவாய்பிளந்துஎன்று மேலுக்கு] — கேஶியை நிரஸித்து, யமளார்ஜுநங்களின் நடுவே போய், திருவுலகளந்தருளி மஹாபலியால் வந்த ஆபத்தை இந்த்ரனுக்குப் போக்கியருளி ஒன்றுஞ்செய்யாதாரைப்போலே மீளவும் ஜகத்ரக்ஷணத்திலே ஒருப்படுமாபோலே, என்னுடைய ப்ரதிபந்தகத்தைப் போக்கி இம்மஹாவஸாதத்திலே வந்து ஸம்ஶ்லேஷித்து என்னை யுண்டாக்கினவனே!

என்றத்தைத்கடாக்ஷித்து ஹாவம்-வதிஇத்யாதியாதல். ஸ்ரூஜாநிதா என்ருய்,தன் திருக்கழுத்தில் மாலையை வாங்கிச் சாத்த, அஸிதேக்ஷணு என்கையாலே "அவளும் ஒருமாலையிட்டாள்போலே காணும்" என்று ஆழ்வான்நிர்வஹித்தானிறே. அயோத்யாகாண்டேஷோடஶே:'வதிஸம்ரோநிதாஸீதாஹாராஸிதேக்ஷணா । ஆஜகாம ஜநாவஹ்ராஜ ஜோநாஜிஹ்ஷ்ஷே." பழுப்பு - சிவப்பு. "செங்கனிவாய்" என்றதுக்கு ஹாவம்-இன்சொல் இத்யாதி. 'வேவாய்' என்றதுக்கு ஹாவம்-உக்கம் இத்யாதி. உக்கம் - விசிறி. கால் - காற்று: உளைகை - குன்றுகை. நந்தாவினக்கமே, அளியத்தாயான நீயும், செந்தாமரை இத்யாரப்ய, ஆசையால் - நொந்தாராக் காதல்நோய் மெல்லாவியுள்ளுலர்த்த - வேவாயே இத்யந்வயः. உலர்ந்திறே வேவது.. (௯)

ப.—அநந்தரம், இவ்வார்த்தியைக் கண்டு ஸந்நிஹிதனான ஸர்வகாரணபூதனுமுள்ள ஈஶ்வரனை, நீ என்னை நழுவாதொழியவேணுமென்று அபேக்ஷிக்கிறார்.

வேவாரா - வேவித்து த்ருப்தமாகாத, வேட்கை நோய் - ஆசையாகிற நோயானது, மெல் ஆவி - (விரஹத்தாலே) பலஹீநமான ஆத்மாவை, உள் உலர்த்த - குருத்துவற்றாக வற்றுவிக்க, இராப்பகல் - இராப்பகல், ஓவாது - இடைவிடாதே, உன்பாலே - உன் ஸ்வபாவங்களிலே, வீழ்த்தொழிந்தாய் - தாழ்ந்து அகப்படும்படி பண்ணினவனாய், மா - (உன்னைக்கிட்டுவார்க்கு விரோதியான கேஶியாகிற) குதிரையின், வாய்-வாயை, பிளந்து - பிளந்து, மருது - (த்வந்த்வமான) மருது (முறியும்படி), இடை - நடுவே, போய் - போய் (அநந்யார்ஹமாம்படி), மண் - பூமியை, அளந்த - அளந்துகொண்டு, மூவா - அத்தாலே இளகிப்பதித்த, முதல்வா - ஸர்வகாரணபூதனே! இனி - இனி ஒருகாலமும், எம்மை - எங்களை, சோரேல் - நழுவ விடாதொழியவேணும். மூவா முதல்வா என்றது - நித்யயௌவநஸ்வபாவனான உத்பாதகனென்றுமாம். இத்தால் - தம்முடைய அநிஷ்டங்களைப் போக்கி ஸத்தையையுண்டாக்கினபடியை அநுஸந்தித்தாராயிற்று. இதில் ஏகாரம் - தேற்றம்.

இ.—பத்தாம்பாட்டில், அவன் இவ்வவஸாதமெல்லாம் தீரும்படி வந்து முகங்காட்ட, இனி ஒருநாளும் என்னைவிடாதொழியவேணு மென்கிறார்.

[வேவாராவேட்கைநோய்] - ஒருகால் வெந்து சமையக்கடவதன்றிக்கே, "க்ஷுந்நேவாந்நிவஸ்த்ர:" என்கிறபடியே வெந்தஇடமே இந்தநமாக தஹியாநிற்கிற காதல். அளவில்லாத வேட்கைநோய். [மெல்லாவி] - பாத்தம்போராத ஆத்மாவை. அதாஹ்யமாயிருப்பது கேவலாக்நியாகிலிறே. [உள் உலர்த்த]-"ஶுஷ்கே கோடரே ந்நிரிவ ஜ்வலந்" கோடரத்தில்பற்றின அக்நிபோலே குருத்துவற்றாக வற்றுவிக்க. [ஓவாது இராப்பகல்உன்பாலே வீழ்த்தொழிந்தாய்] - வேவாராவேட்கைநோயாகைக்கு அடியிருக்கிறபடி. இடைவிடாதே ஸர்வகாலமும் உன் குணங்களைக் காட்டி என்னை உன்பக்கலிலே விழவிட்டு நீ கடக்கநின்றாய். விழவிட்டுக்கொண்டா யென்னவுமாம். [மாவாய் இத்யாதி] - கேஶியை நிரஸித்து யமளார்ஜுநங்கள் நடுவே போய் அவ்வாபத்தைத் தப்பி, மஹாபலியால் வந்த ஆபத்தை இந்த்ரனுக்குப்போக்கி, ஒன்றுஞ் செய்யாதாரைப்போலே ஸ்ருஷ்ட்யாதி ஜகத்ரக்ஷணங்களைப் பண்ணினவனே! மூவாதொழிகையாவது - இளகிவருகை. அதாகிறது - ஒன்றுஞ்செய்யாதானாய் ரக்ஷணத்தே ஒருப்படுகை. இத்தாற் சொல்லிற்றாயிற்று-அப்படியே என்னுடைய விரோதிகளைப் போக்கி இம்மஹாவஸாதத்திலே வந்து ஸம்ஶ்லேஷித்து என்னையுண்டாக்கினவனே! என்கிறார். [இனி எம்மைச் சோரேலே] - இதுக்குமுன் நீ போய்நின்று பட்டது போரும், இனி என்னை விடாதொழிய வேணுமென்கிறார்.

ஈடு.—பத்தாம்பாட்டு. இவளவஸாதமெல்லாம் தீர வந்துஸம்ஶ்லேஷித்த எம்பெருமானைக்குறித்து, 'இனி ஒருநாளும் என்னை விடாதொழியவேணும்' என்கிறார்.

பத்தாம்பாட்டு - வேவாரா இத்யாதி. 'இனியெம்மைச்சோரேலே' என்றத்தைக் கடாக்ஷித்து அவதாரிகை - இவளவஸாதம் இத்யாதி.

[வேவாராவேட்கைநோய்] - ‘வேவ’ என்று தொடங்கினால், ஒருகால் வெந்து தலைக்கட்டமாட்டாதாயிற்று. அல்லாதவைபோலன்றிக்கே, ப்ரேமவ்யாதிக்கு உள்ள தோன்றுயிற்று இதுதான். [மெல்லாவி] - ஶரீரத்திலுண்டான ஸௌகுமார்யம், ஆத்மாவிலுமுண்டாயிருக்கிறதாயிற்று இவர்க்கு. [உள்ளுலர்த்த] - ‘‘கூடோக்நிரிவபாதபம்’’ (கூடோக்நிரிவபாதபம்) என்கிறபடியே, உள்ளேபிடித்துப் புறம்பே வர வேவாநின்றதாயிற்று. அதாஹ்மாயிருப்பது கேவலாக்நியாகிலிறே. ‘‘மஹதா ஜ்வலதா நித்யமக்நிநேவாக்நிபர்வத:’’ (மஹதாஜ்வலதாநித்யமக்நிநோவாக்நிபர்வத:)என்று வெந்தவிடமே விறகாக வேவாநின்றது. [ஓவாது இராப்பகல்] - வேவாராவேட்கைநோய்போலே இராப்பகல் ஓவாதொழிகிறபடி. [உன்பாலே வீழ்த்தொழிந்தாய்] - அகப்பட்டார்க்கு மீளவொண்ணாத உன்பக்கலிலே விழவிட்டுக்கொண்டாய் என்னுதல்; [உன்பாலே வீழ்த்து] - உன் பக்கலிலே விழவிட்டுக்கொண்டு. [ஒழிந்தாய்] - முகங்காட்டாதே கடக்கநின்று யென்னுதல். [மாவாய் இத்யாதி] - கேஶிவாயை அநாயாஸேந கிழித்து, யமளார்ஜுநங்களின் நடுவே போய், மஹாபலி அபஹரித்துக்கொண்ட பூமியை எல்லைநடந்து மீட்டுக்

வேவஎன்றுதொடங்கினல் - *தஹிக்கவென்று தொடங்கினு லென்றபடி. லோகத்தில் தஹித்துத் தலைக்கட்டவில்லையோ ? என்ன, அல்லாதவை இத்யாதி; அல்லாதவை சரீராந்தமாகையாலே முடியும், இது ஆத்மாந்தமாகையாலே முடியாதென்றபடி. இதுதான் - வெந்து தலைக்கட்டாமைதான். மென்மை சரீரத்துக்கன்றோ உள்ளதென்ன, சரீரத்திலுண்டானஇத்யாதி. அதாவது- ப்ரேமவ்யாதிக்கு தாஹ்யமாமிடத்தில் பாத்தம்போராத மார்த்தவம் இவளதென்றபடி. இது இருபத்துநாலாயிரத்திலே வ்யக்தம். ஆத்மாவுக்கு மார்த்தவம்-பகவத்ப்ராவண்யப்ரயுக்தம். புறம்புஉலர்த்தியன்றோஉள்உலர்த்தவேணும், முதலிலே உள்ளுலர்த்த என்பானென்? என்ன,-‘‘கூடோக்நி:’’ இத்யாதி. அயோத்யாகாண்டே |ஶ்ருங்கிபேரபுரே பரத: - ‘‘[illegible]’’ இத்யாதி. ‘‘[illegible] | [illegible] கூடோக்நிரிவபாதபம்’’. ‘‘[illegible]’’என்னுகிற்க, இதுகூடுமோ? என்ன, அதாஹ்யமாய்இத்யாதி. ‘வேவாரா’ என்றதுக்கு ப்ரமாணம்-‘‘மஹதா’’ இத்யாதி. ஸுந்தரகாண்டே பஞ்சத்ரிம்ஶே ஸீதாம்ப்ரதி |மாருதி: -‘‘[illegible] | மஹதா ஜ்வலதா நித்யமக்நிநேவாக்நிபர்வத:’’. ‘ஹிமவத்பர்வதம்’ என்றாற்போலே, ‘அக்நிபர்வதம்’. என்றொரு பர்வதமுண்டு என்ற உடாலியை வ்யாவர்த்தித்து, அக்நிமய: பர்வத: என்று அபூதோபமா விவக்ஷிதேத்யபிப்ராயேணாஹ - வெந்தவிடமே இத்யாதி. அதாவது - அக்நிபர்வதம் அக்நியினாலே வேமாபோலே யென்றபடி. வேவாரா வேட்கைநோய்போலே இராப்பகலோவாதொழிகிறபடி இதி - ‘‘விரஹக்லேஶாதிஶய[illegible]’’. ப்ரேமவ்யாதி அவிச்சிந்நமாக நலிகிறப்போலே,"இராவும்பகலும் அவிச்சிந்நமாக நலிகிறதென்றிறே - வேவாரா வேட்கைநோய்போலே|"இத்யாதி|வாக்யத்துக்கு அர்த்தம்; இது ‘ஓவாதிராப்பகலுன்பாலே வீழ்த்தொழிந்தாய்’ : என்ற மூலத்துக்கு அநுகுணமாக யோஜிக்கப்போகாமையாலே, வேவாராவேட்கைநோய்போலே இத்யாதி|வாக்யம் - கிஞ்சித்ஸந்திக்தம்; வேவாராவேட்கைநோய்போலே யென்ற வாக்யத்துக்கு - அவிச்சிந்நமாக நோய் வேவிக்கிறப்போலே என்னை இராப்பகலோவாதே உன்பக்கல் விழவிட்டுக்கொண்டாயென்று பொருள்; உரையிலே, ‘இராப்பகல்இடைவிடாதே உன் ஸ்வபாவங்களிலே தாழ்ந்து அகப்படும்படி பண்ணினாய்’என்றிருக்கையாலே,என்று இப்படி மூலாநுகுணமாக யோஜிக்கில் ஸந்தேஹம்| பரிஹரிக்கலாம். முந்தின அர்த்தத்திலே, ‘வீழ்த்தொழிந்தாய்’*

கொண்டு,இப்படி உபகாரங்களைப் பண்ணி;பின்னையும் ஒன்றும் செய்யாதானாய்க் குறைப்பட்டு, இவற்றினுடைய ரக்ஷணத்திலே உத்யுக்தனாயிருக்குமவனே ! இப்படியெல்லாம் செய்யச்செய்தேயும் ஒன்றுஞ் செய்யாதாரைப்போலே ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணினவனே ! [இனியெம்மைச்சோரேலே] - கேஶிதொடக்கமான விரோதிகளைப் போக்கினாற்போலே தம்விரோதியையும் போக்கி அவன் வந்து முகங்காட்டச் சொல்லுகிறாராதல்; தம்முடைய ஆபத்தின் கனத்தாலே 'வந்து முகங்காட்டும்' என்னும் விஶ்வாஸத்தாலே சொல்லுகிறாளாதல். [இனி] - "[illegible]" (புத்வாகாலமதீதஞ்சமுமோஹபரமாதுரஃ) என்னுமாபோலே, முன்புள்ள காலம் இழந்ததாகிலும் இனிமேலுள்ள காலம் இவ்வஸ்துவைக் கைவிடாதொழியவேணும்; 'போனகாலத்தைமீட்கவொண்ணாது'என்று அதுக்கு ஶோகிக்கிறார்."[illegible]" (நமேதுஃகம்ப்ரியாதூரே) - என்னுடைய ப்ரியையானவள் தூரத்திலே இருக்கிறாளென்று அதுக்கு ஶோகிக்கிறேனல்லேன்; அது ஒருபயண மெடுத்து விடத் தீரும். "[illegible]" (நமேதுஃகம்ஹ்ருதேதிவா) - வலிய ரக்ஷஸ்ஸாலே பிரிவுவந்ததென்று அதுக்கு ஶோகிக்கிறேனல்லேன்; அது அவன் தலையை அறுக்கத் தீரும். "[illegible]" (ஏததேவாநுஶோசாமி) - இதுஒன்றுமே எனக்கு ஶோகநிமித்தம்: "[illegible]" (வயோ஽ஸ்யாஹ்யதிவர்த்ததே) - போனபருவம் இப்பால் மீட்கவொண்ணாதிறே. (கo)

என்று - முழுச்சொல்லு. த்விதீயார்த்தத்தில், பிக்ஷபதம். ஒன்றுஞ்செய்யாதானாய்க் குறைப்பட்டு என்றது - 'மூவா' வின் தாத்பர்யம். மூவா - முடியாத; சோம்பாத வ்ன்னுதல். மூவுதல் - நஶித்தல். மூவாமை - நஶியாமை; நித்ய மென்றபடியாதல். 'முதல்வா' என்றதுக்கு ரக்ஷகனாக அர்த்தம்- இவற்றினுடைய ரக்ஷணத்திலே இத்யாதி. ஸ்ரஷ்டாவாக அர்த்தாந்தரம் - இப்படியெல்லாம் இத்யாதி. 'இனியெம்மைச்சோரேல்' என்றது - எந்த அவஸ்தையைப்பற்றச் சொல்லுகிறதென்ன, இரண்டுவகையாக அருளிச்செய்கிறார் - கேஶி இத்யாதியாலும்,தம்முடைய இத்யாதியாலும். வந்து முகங்காட்டச்சொல்லுகிறா ரென்று - முந்தின அர்த்தம்; 'ஸமீபஸ்த்தனாயிருந்தே முகங்காட்டுகிறிலன், அவஶ்யம்முகங்காட்டும்' என்னும் விஶ்வாஸத்தாலே யென்று - இரண்டாமர்த்தம். "இனி" என்றதுக்குத்தாத்பர்யம் - [illegible] இத்யாதி. கிஷ்கிந்தாகாண்டே மால்யவதி ராமஃ "[illegible] | [illegible] | [illegible]." 'முன்புள்ளகாலமிழந்ததாகிலும்' என்றத்தால் பலிதமாஹ - போனகாலத்தை இத்யாதி. அப்படி சோகித்த பேருண்டோ? என்ன, [illegible] இத்யாதி. யுத்தகாண்டே பஞ்சமே ஸமுத்ரதீரே லக்ஷ்மணம்ப்ரதி ராமஃ - "[illegible] | [illegible]."என்னுடைய ப்ரியையானவள் இத்யாதி-"[illegible]" என்று - போனபருவத்தை மீட்கையினுடைய துஶ்ஶகத்வஞ் சொல்லுகையாலே, கீழ்ச்சொன்னவற்றினுடைய ஸுஶகத்வம் த்யோதிதமிறே. மாவாய் இத்யாரப்ய, முதல்வா - வேவாரா இத்யாரப்ய, வீழ்த்தொழிந்தாய் - இனி எம்மைச்சோரேலே இத்யந்வயஃ. உள்உலர்த்த - உள்ளே உலர்த்தும்படியாக. (கo)

பதினோராம் பாட்டு.

சோராதவெப்பொருட்கும் ஆதியாஞ்சோதிக்கே
ஆராதகாதல் குருகூர்ச்சடகோபன்
ஓராயிரஞ்சொன்ன அவற்றுளிவைபத்தும்
சோரார்விடார்கண்டீர் வைகுந்தம்திண்ணனவே.

ஆ.—(சோராத.) இப்படி எம்பெருமானைப் பிரிந்த வ்யஸநத்தாலே முடியப்புகுகிற தம்மை உஜ்ஜீவிப்பிக்கைக்காக வந்து தோற்றியருளின எம்பெருமானைக் கண்டு தாம் உஜ்ஜீவித்து, ஸ்வோஜ்ஜீவநத்தாலே எம்பெருமான் ஸர்வேஶ்வரத்வம் அவிகலமானபடியைக் கண்டு ப்ரீதராய், 'அடியேன் இவனுடைய ஸர்வேஶ்வரத்வம் அவிகலமாகப் பெற்றேனாகாதே' என்று உகந்துகொண்டு எம்பெருமானுடைய ஸர்வேஶ்வரத்வத்தை அநுபவித்து, இப்படி ஸர்வேஶ்வரனாயிருந்த எம்பெருமான்பக்கலுள்ள நிரவதிகமான ஆசையாலே சொன்ன இத்திருவாய்மொழியை விடாதார் ஒருநாளும் எம்பெருமானைப் பிரியார்; இது நிஶ்சிதமென்கிறார்.

ஒ—நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார் திருநாட்டிலே நித்யவாஸம் பண்ணப் பெறுவார்; இது நிஶ்சிதமென்கிறார்.

[சோராத என்று தொடங்கி] - ஆழ்வாரோடே ஸம்ஶ்லேஷித்து அவரை உளராக்குகையாலே ஒன்றொழியாமே ஸகலபதார்த்தத்துக்கும் ஈஶ்வரனானவன் திருவடிகளிலே லோகத்தில் அந்யபரமான பதார்த்தங்களெல்லாம் தம்மைப்போலே எம்பெருமானைப் பிரிந்து நோவுபடுகிறனவாக ப்ரமிக்கைக் கீடான நிரவதிகபக்தியை யுடையரான ஆழ்வார். ஓராயிரம் – விலக்ஷணமா யிருக்கை.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழிக்கு பலம் பரமபதப்ராப்தி யென்று அருளிச்செய்கிறார்.

சோராத - ஒன்றுஞ் சோராதபடி, எப்பொருட்கும்-எல்லாப் பொருளுக்கும், ஆதியாம் - காரணபூதனான, சோதிக்கே - பரஞ்ஜ்யோதிஶ்ஶப்தவாச்யனுக்கே, ஆராத - (ஒருகாலும்) த்ருப்திபிறவாத, காதல் - அபிநிவேஶத்தையுடைய, குருகூர்ச் சடகோபன்- ஆழ்வார், ஓர் ஆயிரம் - அத்விதீயமான ஆயிரமாக, சொன்ன அவற்றுள் - சொன்னவற்றுக்குள்ளே, இவை பத்தும் - (அதிப்ரேமப்ரகாசகமான) இவை பத்தையும், சோரார் – நழுவுதலில்லாதவர்கள், வைகுந்தம் - பரமபதத்தை, திண்ணனா - அறுதியாக, விடார்கண்டீர் - விடாதவர்கள்கிடீர். இது - கலிவிருத்தம்; நாலடித்தாழிசையுமாம்.

இ.—நிகமத்தில், இப்பத்தையும் அப்யஸிப்பார் பரமபதத்திலே நித்யவாஸம் பண்ணப்பெறுவர்; இது நிஶ்சிதம் என்கிறார்.

[சோராத இத்யாதி] - இப்படி இவரோடே கலந்து இவரை உளராக்குகையாலே ஒன்றொழியாதபடி ஸகலபதார்த்தங்களுக்கும் ஈஶ்வரனுமாய், சோதி - ரூபமலர்த்தியும் தன்னதாம்படி யிருந்தான். இவரொருவரையுஞ் சோரவிட்டானாகில், ஸர்வ

ஸஷியாகமாட்டானே. [சோதிக்கே] - நிரவதிகதேஜோரூபமான விக்ரஹத்தை யுடையனென்றுமாம். ஸர்வ ரக்ஷகத்வமும் நிலைநின்றது, வடிவழகும் புதுக்கணித்தது. ஆராத இத்யாதி] - லோகத்தில் ஸகலபதார்த்தங்களும் தம்மைப்போலே அவனைப் பிரிந்து நோவுபடுகிறனவாகக் கொண்டு ப்ரமிக்கும்படியான நிரவதிகபக்தியையுடையவர். நிரூபகதர்மம் இவர்க்குக் காதலாயிற்று. தம்படி சொல்லிலும் தாமே சொல்லுமத்தனை. ஓராயிரம்] - அபிநிவேசத்தோடே அருளிச் செய்த தாகையாலே விலக்ஷணமான ஆயிரம். [அவற்று ளிவை பத்துஞ் சோரார்] - அவற்றிலும் விலக்ஷணமான இவை பத்தையுஞ் சோராதவர்கள். [விடார்கண்டீர் வைகுந்தம்] - எல்லாரும் இழந்து நோவுபடுகிறனவாக அநுஸந்திக்க வேண்டும் தேசத்தை விட்டு, ஸகலரும் பகவல்லாபத்தாலே களித்து வர்த்திக்கும் தேசத்திலே நித்யவாஸம் பண்ணப்பெறுவர். கண்டீரென்று - கையெடுத்துக் கூப்பிடுகிறார். [திண்ணனவே]-ஸுநிஶ்சிதம்.

ஈடு.—நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார், கண்ணாலகண்டதெல்லாம் பகவதலாபத்தாலே நோவுபடுகிற ஸம்ஸாரத்திலேயிருந்து நோவுபடாதே, கண்டாரெல்லாம் பகவல்லாபத்தாலே களித்துவர்த்திக்கும் நாட்டிலே புகப்பெறுவரென்கிறார்.

[சோராத எப்பொருட்குமாதியாஞ்சோதிக்கே] - இவ்வளவிலே வந்து இவரோடே கலந்து இவரை உளராக்குகையாலே, ஒன்றொழியாதபடி ஸகலபதார்த்தங்களுக்கும் ஈஶ்வரனுமாய்; இவரோடே வந்துகலந்து அத்தாலே உஜ்ஜ்வலனுமாயிருந்தான். இவர்க்கு வந்து முகங்காட்டுவதற்குமுன்பு ஸர்வேஶ்வரத்வமும் அழிந்ததுபோலே கிடந்தது; இவரொருத்தரையும் சோரக்கொடுக்கவே ஸர்வேஶ்வரத்வம் அழியுமிறே. இவரிழவு தீர வந்து முகங்காட்டினபின்பு எல்லாப்பொருட்கும் நிர்வாஹகனானான். [சோதிக்கே] - பேறிழவுகள் இவரதன்றிக்கே, 'தன்னது' என்னுமிடம் வடிவில் புகரிலே தோற்றாநின்றது. "க்ருதக்ருத்ய:" (க்ருதக்ருத்ய:) என்னும்படியானான். [ஆராதகாதல்] - இத்திருவாய்மொழியால் சொல்லிற்றாயிற்று-கண்ணாலகண்ட பதார்த்தங்களுமெல்லாம் பகவதலாபத்தாலே தம்மைப்போலே நோவுபடுகிறனவாகக்கொண்டு, அவற்றுக்குமாகத் தாம் நோவுபடும்படியான இவருடைய அபிநிவேசமாயிற்று. [காதல்குருகூர்ச்சடகோபன்] - காதலையிட்டாயிற்று இவரை நிருபிப்பது. தம்படிசொல்லும்போதும் தாமே சொல்லவேணுமே.

நிகமம் - சோராத இத்யாதி. 'இவைபத்தும் சோரார் விடார்கண்டீர் வைகுந்தம்' என்கிற பதங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை - இத்திருவாய்மொழி கற்றார் இத்யாதி. இந்த அவதாரிகை - "இனியெம்மைச்சோரேல்" என்கிறவிடத்தில் த்விதீயார்த்தாபிப்ராயேண. இப்பத்தும் கற்றார்க்கு ஆழ்வாருடைய ஹாவவ்ருத்தி யுண்டாமென்று தாத்பர்யம்.

சோராதஎப்பொருட்கும் - ஒன்றுக்குறையாத எல்லாப்பதார்த்தங்களுக்கும். ஆதியாம் - ஈஶ்வரனும். இவரொருத்தருக்கு முகங்காட்டாவிடில் ஸர்வேஶ்வரத்வம் அழியுமோ? என்ன, இவர்க்குவந்து இத்யாதி. அது எப்படி? என்ன, இவரொருத்தரையும் இத்யாதி. இவரோடுவந்து கலந்துஅத்தாலே உஜ்ஜ்வலனாயிருந்தத்தால் பலிதமாஹ - பேறிழவுகள் இத்யாதி. அவன்அப்படியிருக்குமோ? என்ன, க்ருதக்ருத்ய இத்யாதி. ஸ்ரீஸங்க்ஷேபே "ஸுஹ்ருத்வ்ருவஞ்சயாம் ராக்ஷஸேந்த்ரம்விபீஷணம் | க்ருதக்ருத்யஸ்ததா ராமோ விஜ்வர: ப்ரமுமோத ஹ". 'ஆராத காதல்' என்று இப்போது எதுக்காகச் சொல்லுகிறார்? என்ன, இத்திருவாய்மொழியால் இத்யாதி. ஸ்வப்ரஶம்ஸை பண்ணலாமோ? என்ன, தம்படி இத்யாதி. இது - ஆராதவின் தாத்பர்யம். அவர்

[சொன்ன]-இக்காதலோடேயாயிற்று ஆயிரம் அருளிச்செய்தது. [அவற்றுளிவைபத்தும்]-அல்லாதவை ஒருதலையாக, இது ஒருதலையாம்படி அக்காதலை முக்தகண்டமாகச் சொன்ன திருவாய்மொழியாயிற்று இது. [இவைபத்தும் சோரார் விடார்கண்டீர் வைகுந்தம்] - இங்கேயிருந்து, கண்ணுக்கிலக்கான பதார்த்தங்களடங்கலும் பகவதலாபத்தாலே நோவுபடுகிறனவாக அநுஸந்திக்குமவர்கள், இவ்விருப்பைவிட்டு, கண்ணால்கண்டாரடங்கலும் பகவல்லாபத்தாலே களிக்கும் நித்யவிபூதியை விடாதே நித்யாநுபவம்பண்ணப் பெறுவர்கள். கண்டீரென்று - கையெடுத்துக் கூப்பிடுகிறார். [திண்ணனவே] - இது ஸுநிஶ்சிதம். இவ்வருகே சிலரைப்பற்றிச் சொல்லிற்றோரர்த்தமாகில்றே ஸம்ஶயவிபர்யயங்களுள்ளது, பகவத்ப்ரபாவத்தைப்பற்றிச் சொன்னதாகையாலே இதுதனக்கு எங்கேனும் ஶபதம்பண்ணலாம். முதற்பாட்டிலே தொடங்கி, நாரைதொடக்கமாக, அன்றில் கடல் காற்று மேகம் சந்த்ரன் இருள் கழி விளக்கு இப்பதார்த்தங்களைக் குறித்து அநுஶோகித்து மிகவுந்தளர்ந்தவளவிலே அவன் வந்து முகங்காட்ட 'இனி என்னைவிடாதொழியவேணும்' என்று, இத்திருவாய்மொழி கற்றார்க்குப் பலத்தைச் சொல்லித் தலைக்கட்டினார். (கக)

ஹ்ருதிஸ்வபாவம்அவர்க்கே தெரியுமதொழிய,பிறர்க்குத்தெரியாதிறே; இவருடையஆகாரங்கள் ஓரிடத்திலும் காணுமையாலே யென்றபடி. ஆராதகாதல் குருகூர்ச்சடகோபன் சொன்ன ஓராயிரம் என்று அந்வயித்து அர்த்தம் - இக்காதலோடே இத்யாதி. ''இவை'' என்றதுக்கு ஸ்வாரஸ்யம் - அல்லாதவை இத்யாதி. சோரார் - விடாதவர்கள்; அநுஸந்திக்குமவர்க ளென்றபடி. அநுஸந்திக்குமவர்களாவது - அநுஸந்திக்க யோக்யரானவர்க ளென்றபடி. ''விடார்'' என்ன அமைந்திருக்க, 'கண்டீர்' என்றதின் தாத்பர்யம் - கையெடுத்துக்கூப்பிடுகிறார் என்றது. அப்யஸித்தமாத்ரத்திலே இது கூடுமோ? என்ன, இவ்வருகே சிலரை இத்யாதி. சோராத இத்யாரப்ய, இவைபத்தும் சோரார் வைகுந்தம் விடார்கண்டீர்; இது திண்ணனவே இத்யந்வய꞉. (கக)

த்ரவிடோபநிஷத்ஸங்கதி:— [illegible] ॥

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலீ:— [illegible] ॥

திருவாய்மொழி நூற்றந்தாதி.

வாயுந்திருமால்மறையநிற்க ஆற்றாமை
போய்விஞ்சிமிக்கபுலம்புதலாய்—ஆய
அறியாதவற்றோடணைந்தழுதமாறன்
செறிவாரைநோக்கும்திணிந்து.

ஆழ்வார் திருவடிகளே சரணம், எம்பெருமானார் திருவடிகளே சரணம், ஜீயர் திருவடிகளே சரணம்.

இரண்டாந்திருவாய்மொழி—திண்ணன்வீடு: ப்ரவேசம்.

ஆ.—(திண்ணன்வீடு.) இப்படி ப்ரஸ்துதமான ஸர்வேஶ்வரத்வத்தைத் தம்முடைய ப்ரீத்யதிஶயத்தாலே ஸஹேதுகமாக உபபாதிக்கிறார்.

ஒ.—இரண்டாந் திருவாய்மொழியில், கீழ் தமக்கு வந்த வ்யஸநாதிஶயத்தையும் மறக்கும்படி வந்த ப்ரீதி ப்ரகர்ஷத்தையும் அநுபவித்து விஸ்மிதராயுள்ள ஆழ்வார், 'இப்படி ப்ரீதராகைக்குக் காரணம் - எம்பெருமான் நிரதிஶய போக்யனாகையால்' என்றும், 'இந்தபோக்யதைக்கு ஹேது - ஸ்ரஷ்ட்ருத்வ வாத்ஸல்யப்ரமுகமான ஸமஸ்தகல்யாண குணாத்மகனான ஸர்வேஶ்வரனாகை' என்றும் இம்முகத்தாலே அவனுடைய ஈஶ்வரத்வத்தையும் அநுஸந்தித்து அத்தை உபபாதிக்கிறார்.

ப.—இரண்டாந்திருவாய்மொழியில், கீழ்உக்தமான போக்யத்வத்தினுடைய நிரதிஶயத்வபாதகமாய், "மாவாய்பிளந்து" என்று தொடங்கிக் கீழ் ப்ரக்ருதமான ஸௌலப்யத்துக்கும் ஸ்வாமித்வத்துக்கும் ப்ரகாஶகமான மநுஷ்யத்வேபரத்வத்துக்கு உபபாதகமான அவதார தஶையிலும் அவனுடைய ஸர்வநிர்வாஹகத்வத்தையும், அநிஷ்டநிவ்ருத்தி இஷ்டப்ராப்தி ஹேதுத்வத்தையும், ஸர்வாதிகத்வத்தையும், ஸர்வப்ரகார ஸமாராத்யதையையும், ஆதிக்யஸூசகமான புண்டரீகாக்ஷத்வத்தையும், ஆஶ்ரிதரக்ஷணார்த்தமான அர்ணவஶாயித்வத்தையும், அகடித கடநா ஸாமர்த்த்யத்தையும், ஸர்வப்ரகாரரக்ஷகத்வத்தையும், ஜகஜ்ஜந்மாதி ஹேதுத்வத்தையும், ஸர்வதேவதா ஸமாஶ்ரயணீயத்வத்தையும் அருளிச்செய்து, ஸர்வஸ்மாத்பரனாய் ஸர்வஸுலபனான ஈஶ்வரனுடைய போக்யத்வவர்த்தகமான உத்துங்கலலிதத்வத்தை உபபாதிக்கிறார்.

இ.—இரண்டாந் திருவாய்மொழியில், கீழ் தமக்குப்பிறந்த ஆற்றாமையை மறக்கும்படி முகங்கொடுக்கையால் வந்த ப்ரீதிப்ரகர்ஷத்தை அநுபவித்து, 'இதுக்குஅடி - அவனுடைய நிரதிஶய போக்யதை' என்றும், 'அதுக்குஅடி - ஸ்ரஷ்ட்ருத்வ வாத்ஸல்ய ப்ரமுக ஸமஸ்தகல்யாணகுணாத்மகனாகை; அதுக்குஅடி - ஸர்வேஶ்வரத்வம்' என்றும், இம்முகத்தாலே ப்ராஸங்கிகமாகப் பரத்வத்தை அநுஸந்தித்து அத்தை உபபாதிக்கிறார். கீழே, "சோராதவெப்பொருட்கு மாதியாஞ்சோதிக்கு" என்று ப்ரஸ்துதமான ஈஶ்வரத்வத்தைத் தெரியப் பிறர்க்கு உபதேசிக்கிறாராகவுமாம். 'இப்பரத்வம் முதல்திருவாய்மொழியிலே சொல்லிற்றன்றோ?' என்னில்; இவர்தாம் ஒருகால் அநுபவித்த குணத்தையே அபூர்வமாக அநுபவிக்கவல்ல அபிநிவேஶத்தையுடையவர்; அவனும் அநுபூத குணங்களையே அபூர்வமாக அநுபவிப்பிக்க வல்லன்; அதுவேயன்று: அங்கு - தாம் அநுபவித்தார்; இங்கு - பிறர்க்கு உபதேசிக்கிறார். அங்கு - அந்வயத்தாலே உபபாதித்தார்; இங்கு- அந்வயவ்யதிரேகங்களிரண்டாலும் உபபாதிக்கிறார். அங்கு - ஶ்ருதிப்ரக்ரியையாலே; இங்கு - இதிஹாஸ புராண ப்ரக்ரியையாலே.

ஈடு.—கீழில் திருவாய்மொழியில் இவர்க்குப் பிறந்த ஆற்ருமை பேச்சுக்கு நிலமன்றிறே; 'கடல் வெதும்பினுல் விளாவ நீரில்லை' என்னுமாபோலே. 'ஆற்ருமையோடே முடிந்துபோமித்தனை' என்றிருந்தார்; அநந்தரம் அவன் வந்து முகங்காட்டினவாறே ஆற்ருமை புக்கவிடங் கண்டிலர்; 'இதுக்கு அடி என்?' என்று பார்த்து ஆராய்ந்தவாறே, இதரவிஷயங்களினுடைய லாபாலாபத்தளவல்லாத விஷயவைலக்ஷண்யமாயிருந்தது; பிரிந்தபோது தன்னையொழிய வேருென்று தோற்ருதபடியாய், கலந்தபோதும் தன்னையொழிய மற்ருென்று தோற்ருதபடியான விஷயவைலக்ஷண்யமா யிருந்தது; 'இதுக்கு அடி என்?' என்று பார்த்தார், ஸமஸ்தகல்யாண குணுத்மகனுகையாலேயா யிருந்தது; 'இதுதனக்கு அடி என்?' என்று பார்த்தவாறே, ஸர்வேஶ்வரனுகையாலேயா யிருந்தது; "உயர்வறவுயர்நலமுடையவன்" என்ருல், "அயர்வறுமமரர்களதிபதி" என்றிறே தோற்றுவது; ஆக, இங்ஙனே ப்ராஸங்கிகமாக ப்ரஸ்துதமான ஈஶ்வரத்வத்தை அநுஸந்தித்து; அத்தை அருளிச்செய்கிருர். 'கீழே 'மூவாமுதல்வா' என்று காரணத்வம் ப்ரஸ்துதமாகையாலே, 'அந்தக்காரணத்வத்தை உபபாதிக்கிருர்' என்று பணிக்கும் பிள்ளான். முதல் திருவாய்மொழியிலுஞ் சொல்லிற்றில்லையோ ஈஶ்வரத்வம்? என்னில்; — 'ஒருகால் சொன்னேும்' என்று கைவாங்கியிருக்கவல்லரல்லர் இவர்; ஒருகால் சொல்லிற்றென்று கைவாங்கலாம் விஷயமன்று அது. இனித்தான் பகவத்விஷயத்தில் புநருக்தி, தோஷாய

திண்ணன்வீடு ப்ரவேஶே, 'கீழோடு இதுக்கு, ப்ராஸங்கிக ஸங்கதியும், ஸாக்ஷாத் ஸங்கதியு மென்று த்வேதா ஸங்கதி' என்று திருவுள்ளம்பற்றி, ப்ரதமம் ப்ராஸங்கிக ஸங்கதி மாஹ - கீழில் திருவாய்மொழியில் இத்யாதி - ப்ரஸ்துதமான ஈஶ்வரத்வத்தை அநுஸந்தித்து அத்தை அருளிச்செய்கிறர் என்னுமளவும். கீழே "மூவாமுதல்வா" இத்யாதி வாக்யத்தாலே ஸாக்ஷாத்ஸங்கதி: ப்ராஸங்கிகஸ்து என்றதுக்கு பாவம் - ஈஶ்வரன் ஸாத்ம்ய போகப்ரதனுகையாலே, முந்துறத் தன்னுடைய ஈஶ்வரத்வத்தை அநுபவிப்பித்துப் பின்னை ஊனில்வாழுயிரிலே தன்னை அநுபவிப்பிக்கிருனென்று. வெதும்பினுல் - உஷ்ணமானுல். இதுக்கடி - அவன் பிரிந்தபோது 'முடிந்துபோமித்தனை' என்றிருக்கையும், அவன் முகங்காட்டினுல் ஆற்ருமை தெரியாமையுமாகிற இதுக்கு அடி யென்றபடி. கீழ் வாக்ய விவரணம் - பிரிந்தபோது இத்யாதி: இதுக்குஅடி - இந்த வைலக்ஷண்யத்துக்கு அடி. வைலக்ஷண்யத்துக்கு அடி குணங்க ளென்றது - "ஜ்ஞாநஶக்திபலைஶ்வர்ய வீர்யதேஜாம்ஸ்யஶேஷத:" என்றத்தைப் பற்ற. இதுதனக்கு அடி - ஸமஸ்தகல்யாணகுணுத்மகத்வத்துக்கு அடி. ஸமஸ்தகல்யாணகுணுத்மகத்வத்துக்கு அடி ஸர்வேஶ்வரத்வ மென்று தோற்றுமோ? என்ன, உயர்வற இத்யாதி. ("ஜ்ஞாநஶக்திபலைஶ்வர்ய:" இத்யாதிகளாலே பெருமாள் குணங்களைச் சொல்லிக்கொடுவந்து, கீழ்சொன்ன குணங்களுக்கு ஹேதுவாக, "ஸஹி தேவைருதீர்ணஸ்ய" இத்யாதியாலே ஈஶ்வரத்வஞ் சொல்லிற்றிறே" என்று அருளிச்செய்வர். "ஈஶ்வரத்வத்தை யநுஸந்தித்து" என்ற அநந்தரம் - பராநர்த்தாஸஹிஷ்ணுவாகையாலே, தேவதாந்தரபரத்வ புத்தியாலே அநர்த்தப்படுகிற ஸம்ஸாரிகளுக்கு அத்தை நிவர்த்திப்பிக்கைக்காக 'பகவத்பரத்வத்தை உபதேஶிப்போம்' என்று பார்த்து 'அத்தை அருளிச்செய்கிருர்' என்று சிலகூட்டி நிர்வஹிப்பது. ஸாக்ஷாத்ஸங்கதிமாஹ - கீழே மூவா இத்யாதி. கீழ்வாக்யத்வயத்தாலும் பரிஹாரத்வயம் அருளிச்செய்து, த்ருதீயபரிஹார மாஹ - இனித்தான் இத்யாதி. "ப்ரஶம்ஸாயாம் ப்ரதிஜ்ஞாயாம் ப்ரமாதே ஹ்ருதநிஶ்சயே | ஹர்ஷே விஸ்மயே சைவ பௌநருக்த்யம் ந தூஷ்யதி:" என்றதில் பகவத்பரத்வ ப்ரதிஜ்ஞாபரமாகையாலே புநருக்தி தோஷமில்லை. 'ஒருகால் சொன்னேமென்று' இத்யாதி வாக்யத்வயத்தையும்

வாகாது; ஒருகுணத்தையே எல்லாக்காலமும் அநுபவிக்கவல்லாரோருவ ரிவர்; ஒரு குணந்தன்னையே 'இதுக்குமுன்புஅநுபவிப்பித்தது இக்குணம்'என்றுதோற்றுதபடி க்ஷணந் தோறும் புதுமை பிறப்பித்து அநுபவிப்பிக்கவல்லானொருவன்அவன்; பயிலாநிற்கச்செய்தே யிறே பண்டுஇவரைக்கண்டறிவதெவ்வூரில் யாமேன்பது; ஆகையிறே, ஏகவிஷயமே நித்ய ப்ராப்யமாகிறது; இவர்தாமும்,* "எப்போழுதும் நாள் திங்களாண்டூழி யூழிதோறும் அப் பொழுதைக்கப்போழுது என்னாராவமுதம்" என்னாநின்றார். ஆனாலும், இதுக்கு வாசி யுண்டு; முதல்திருவாய்மொழியிலே - பரத்வஞ் சொல்லாநிற்கச்செய்தே, அது ஸ்வாநுபவ மாயிருக்கும்; அந்தப்பரத்வந்தன்னை எல்லார்க்கும் அநுபவிக்கலாம்படி பிறர் நெஞ்சிலே படுத்துகிறாராகையால் பரோபதேசத்தாலே பரத்வாநுபவம் பண்ணுகிறார்; அங்கு - அந் வயமுகத்தாலே பரத்வஞ் சொன்னார்; அந்வயவ்யதிரேகங்களிரண்டாலும் பரத்வஞ்சோல் லுகிறார் இங்கு; அங்கு - ஶ்ருதிச்சாயையாலே சொன்னார்; இங்கு - இதிஹாஸபுராணப்ரக்ரி யையாலே சொல்லுகிறார்; அங்கு-பரத்வத்திலே பரத்வம்; இங்கு-அவதாரத்திலே பரத்வம்.

முதற்பாட்டு.

திண்ணன்வீடு முதல்முழுதுமாய்
எண்ணின்மீதியன் எம்பெருமான்
மண்ணும்விண்ணு மெல்லாமுடனுண்ட நங்
கண்ணன்கண்ணல்லது இல்லையோர்கண்ணே.

அடைவே விவரிக்கிறார் - ஒருகுணத்தையே இத்யாதி வாக்யத்வயத்தாலே. இந்த வாக்யத்வய மும் - அந்த வாக்யத்வயத்துக்கு விவரணமா யிருக்கச் செய்தே, அதிற் சொன்ன அர்த்த த்வயத்திலேயும் க்ரமேண ஹேதுபரமா யிருக்கிறது. யத்வா, உபதேஷ்ட்ருஸ்வபாவத்தாலும், உபதேஶ்யஸ்வபாவத்தாலும் அநுபாவ்யஸ்வபாவத்தாலும். அநுபவித்ருஸ்வபாவத்தாலும், அநு பாவயித்ருஸ்வபாவத்தாலும் புநருக்தி தோஷாய அன்று என்கிறார் - ஒருகால்சொன்னோம் என்று தொடங்கி க்ரமேண அஞ்சுவாக்யத்தாலே. அப்படி க்ஷணந்தோறும் புதியதா யிருக்குமோ? என்ன, பயிலாநிற்க இத்யாதி. பயிலா நிற்கச்செய்தே - பரிசயம்பண்ணாநிற்கச் செய்தே. பண்டு இத் யாதி - திருமொழி - (அ,௫,௯.) பண்டிவரைக் கண்டறிந்தது எவ்வூரிலே நா மென்கை. அவ்விஷயம் இவர்க்கும் அப்படி யிருக்குமோ? என்ன, இவர்தாமும் இத்யாதி. எப்போழுதும் இத்யாதி. எல்லா க்ஷணம், எல்லாநாள், எல்லாமாஸம், எல்லாவாண்டு, எவ்வகைப்பட்ட ஊழியூழிதோறுமான அவ் வோஅகாலங்களிலே எனக்கு அத்ருப்திகரமான அம்ருதமானவனே யென்கை. ஆக, கீழ் பௌநருக்த்யத்தை அப்யுபகம்யவாதத்தாலே பரிஹரித்து, அநப்யுபகம்யவாதத்தாலே பரிஹரிக் கிறார் - ஆனாலும் இத்யாதி. இதுக்கு - இத்திருவாய்மொழிக்கு. ஆனாலும் - ஈஶ்வரத்வஞ் சொன் னாலும். வாசியுண்டு - விசேஷமுண்டு. வாசியை நாலுவிதமாகக் காட்டுகிறார் - முதல் திருவாய் மொழியில் இத்யாதி. அந்வயவ்யதிரேகங்களிரண்டாலும் என்றது - "நங்கண்ணன் கண்ணல்ல தில்லையோர் கண்ணே" என்றத்தைப் பற்ற. ஶ்ருதிச்சாயை - ஸாமாநாதிகரண்யம். இதிஹாஸ புராணப்ரக்ரியை - வையதிகரண்யம். இதிஹாஸபுராண ப்ரக்ரியையாலே என்றது - "க்ருஷ்ண ஏவ ஹி லோகாநாமுத்பத்திரபி சாப்யய:", "மாபாவம் விட வரற்குப் பிச்சைபெய்" இத் யாதியைப்பற்ற. பரத்வத்திலே பரத்வம் என்றது-"அயர்வறுமமரர்களதிபதி" என்றத்தைப்பற்ற. அவதாரத்திலே பரத்வம் என்றது - "கண்ணன்" என்றத்தைப்பற்ற.

* திருவாய்மொழி - உ - ரு - ச.

ஆ.—மோக்ஷாத்யபேக்ஷபுருஷார்த்தப்ரதனும், வாங்மநஸாபரிச்சேத்ய கல்யாணகுணங்களை யுடையனும், எனக்கு ஸ்வாமியாய், ஸர்வாத்ம ஸம்ரக்ஷகனுமிருந்த வண்துவரைப்பெருமானே இஜ்ஜகத்தில் ஈஶ்வரன்; மற்றுஈஶ்வரனில்லை; இதில் ஒரு ஸம்ஶய மில்லை யென்கிறார்.

ஒ.—முதற்பாட்டில், இஜ்ஜகத்துக்கு க்ருஷ்ணனே ஈஶ்வர னென்கிறார்

[திண்ணம்] - த்ருடம். [வீடு முதல் முழுதுமாய்] - மோக்ஷப்ரப்ருத்யபேக்ஷ புருஷார்த்த ப்ரதனும்; [திண்ணன் வீடு முதல் முழுதுமாய்] - ஒருநாளும் அழியாத பரமபதம் தொடக்கமான அபேக்ஷவிபூதியையுடையனு யென்றுமாம். [எண்ணின் என்று தொடங்கி]-அஸங்க்யேயகல்யாணகுணங்களையுமுடையனும், ப்ரளயாபத்து வந்தபோது பூமி தொடக்கமான ஸகலலோகத்தையும் தரம்பாராதே ஒக்கத் திருவயிற்றிலே வைத்துக் கொண்ட நம்முடைய க்ருஷ்ணனே இஜ்ஜகத்துக்கு த்ருஷ்டி. நங்கண்ணனென்று - ரக்ஷகத்வ ப்ரஸித்தியைச் சொல்லுகிறது.*

ப.—முதற்பாட்டில், க்ருஷ்ணனே ஸர்வநிர்வாஹக னென்கிறார்.

திண் - திண்மையையுடைததாய், நல்வீடு - விலக்ஷணமானமோக்ஷம், முதல் - முதல், முழுதுமாய் - ஸகலப்ரயோஜநநிர்வாஹகனும், எண்ணின்மீதியன் - நினைவுக்கு அவ்வருகான அபரிச்சிந்நஸ்வபாவனும்,எம்பெருமான்-(இம்மேன்மையைக்காட்டி என்னை அடிமைகொண்ட) ஸ்வாமியாய், மண்ணும் - பூமியும், விண்ணும்-ஊர்த்வலோகமும், எல்லாம் - ஒன்றொழியாமல், உடன் -(தாரதம்யமில்லாதபடி) ஏகோத்யோகத்திலே, உண்ட- வயிற்றிலே வைத்துநோக்கி, நம்கண்ணன்-க்ருஷ்ணனும் அவதரித்து நமக்கே தன்னைத் தந்த ஸௌலபனே, கண் - ஜகத்துக்கு நிர்வாஹகன்; அல்லது - அல்லது, ஓர்கண் - ஒரு நிர்வாஹகவஸ்து, இல்லை-இல்லை. கண் - களைகண். திண்ணனென்றது - நிஶ்சித மென்றுமாம்.

இ.—முதற்பாட்டில், இத்திருவாய்மொழியில் சொல்லுகிற பரத்வத்தை ஸங்க்ரஹேண சொல்லுகிறார். ஸமஸ்தகல்யாணகுணாத்மகனும் ப்ரளயாபத்ஸகனுன க்ருஷ்ணனே ஈஶ்வர னென்கிறார்.

[திண்ணன்] - த்ருடம். [வீடுமுதல்முழுதுமாய்] - மோக்ஷப்ரப்ருத் யபேக்ஷ புருஷார்த்தப்ரதனும். [திண்ணன் வீடுமுதல்முழுதுமாய்] - ஒருநாளும் அழியாத பரமபதம் முதலான ஸகலலோகங்களையுமுடையனு யென்றுமாம். [எண்ணின்மீதியன்] — எண்ணுக்கு மேற்பட்டான். அஸங்க்யேயகல்யாணகுணகணன். கீழ் - புருஷார்த்த ப்ரதத்வமாகிற ஔதார்யகுணபரமானபோது அநுக்தகுணங்களைச் சொல்லிற்றாகக்கடவது. [எம்பெருமான்] - குணவிபூதிகளைக்காட்டி என்னை எழுதிக்கொண்டவன். [மண்ணும் இத்யாதி] - பூம்யந்தரிக்ஷாதிகளைப் பிரிகதிர்படாமே தரம்பாராதே ஒருகாலே திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்த. [நங்கண்ணனென்று] - "க்ருஷ்ணவ வஷியொகா நாதோ தத்திர விஸ்வயை: க்ருஷ்ணஸ்யஹிக்ருதெ தூதந் ஶிவம் விஶ்வம் வராவர:" என்கிற ப்ரமாண ப்ரஸித்தியைச் சொல்லுகிறது. நம்மென்று - அத்தைத் தமக்கு ப்ரகாஶிப்பித்தவன். [கண்] - த்ருஷ்டி; நிர்வாஹகன். "களைகண்" என்று - நிர்வாஹகரைச சொல்லக்கடவதிறே. [அல்லதில்லையோர்கண்ணே] - வேறொரு த்ருஷ்டி யில்லை. அர்த்தமின்றிக்கே,

* இப்பாட்டின் வ்யாக்யானம் கிடைக்கவில்லை.

"பீலிக்கண், மாலைக்கண்" என்னுமாபோலே உக்திமாத்ரமாக இருப்பது மொன்றில்லை. 'கண்ணன் கண்' என்றது - அந்வயத்தாலே; 'அல்லதில்லையோர்கண்' என்றது - வ்யதிரேகத்தாலே. இல்லை யோர்கண் - இது திண்ணம்.

ஈடு.—முதற்பாட்டு. இத்திருவாய்மொழியில் சொல்லுகிற பரத்வத்தை ஸங்க்ரஹேண அருளிச்செய்கிறார்.

[திண்ணன்வீடுமுதல்முழுதுமாய்] - திண்ணனென்றது – திண்ணம் என்றபடி; அதாவது - த்ருட மென்றபடி. த்ருடமான வீடென்று நித்யவிபூதிக்கு விசேஷணமாய், தார்ட்யமாவது ஆவிர்ப்பாவ திரோபாவஜந்மநாஸ விகல்பங்க ளென்னுமவை யில்லாமையாலே கர்மநிபந்தநமாக வரும் அழிவில்லை யென்கை. ஐச்சமாக வரும் விகாரங்களுண்டாகில் தோஷாயவுமன்று; அது அழிவாயுந் தோற்றாதிறே. ஏதேனுமாக ஸம்ஸாரவிபூதியிற்போலே கர்மநிபந்தநமாக வருமவை யில்லை யென்கை. திண்ணிதான நித்யவிபூதி தொடக்கமான எல்லாவிபூதியையு முடையனாய். அன்றியே, "திண்ணம்" என்கிறத்தை விட்டுவைத்து, வீடுமுதல் முழுதுமாய் மோக்ஷப்ரப்ருத் யசேஷபுருஷார்த்தப்ரதனா யென்னவுமாம். [எண்ணின்மீதியன்] - அஸங்க்யேயமான கல்யாணகுணத்தை யுடையவன். கீழ் விபூதிபரமானபோது, எண்ணின்மீதிய னென்றது - குணபரமாகிறது; கீழ் குணபரமானபோது, எண்ணின்மீதிய னென்ற விடம் - விபூதிபரமாகிறது. வீடுமுதல் முழுதுமா யென்றபோது - மோக்ஷப்ரதத்வத்தையே நினைத்ததாகில், எண்

முதற்பாட்டு - திண்ணன் இத்யாதி. "மனக்க ளூழறிவரும்" என்கிற ந்யாயத்தாலே, திண்ணமென்றபடி என்றது. ஸ்ரீவிஷ்ணுபுராணே ப்ரதமேம்ஸே, "ததேததக்ஷயம் நித்யம் ஜகந்முநிவராகிலம் | ஆவிர்பாவதிரோபாவஜந்மநாஸவிகல்பவத்", "[illegible]" இத்யாதிகளை உட்கொண்டு அருளிச்செய்கிறார் - தார்ட்யமாவது - ஆவிர்ப்பாவ இத்யாதி. ஆவிர்ப்பாவதிரோபாவங்களென்று - ஸமஷ்டி ஸ்ருஷ்டியையும், ஸமஷ்டி ஸம்ஹாரத்தையுஞ் சொல்லி; ஜந்மநாஸங்களென்று - வர்த்தமாநோத்பத்திநாசங்களைச் சொல்லுதல்; ஆவிர்ப்பாவ திரோபாவரூப ஜந்மநாஸங்க ளென்னுதல். ஆவிர்ப்பாவம் - தோற்றுகை. திரோபாவம் - மறைகை. விமாநகோபுரமண்டபாதி ரூபேண பரிணாம முண்டாயிருக்க, 'இல்லை என்கிறதென்?' என்ன, கர்மநிபந்தந இத்யாதி. அங்கும் பரிணாமமுண்டேயென்ன, ஐச்சமாக இத்யாதி. அழிவாய்த்தோற்றாவிட்டாலும் விகாரமுண்டேயென்ன, ஏதேனும் இத்யாதி. ஸப்தார்த்தம் - திண்ணிதான இத்யாதி. இவ்வர்த்தத்தில், 'முழுதுமாய்' என்றது - லீலாவிபூதியைச் சொல்லுகிறது. 'ஆய்' என்ற ஸாமாநாதிகரண்யம் - நிர்வாஹ்யநிர்வாஹகபாவேந. மோக்ஷ இத்யாதி - ஐஸ்வர்யகைவல்யாத்யசேஷபுருஷார்த்த ப்ரதனா யென்றபடி. இத்தால் - ஔதார்யகுணத்தைச் சொல்லிற்றாய், இது மற்ற குணங்களுக்கும் உபலக்ஷணமாய், ஸமஸ்தகல்யாணகுணங்களையு முடையவ னென்றபடி. 'ஆய்' என்ற ஸாமாநாதிகரண்யம் - ப்ரதாத்ருப்ரதேயபாவேந. பௌநருக்த்யம் வாராமல் பரிஹரிக்கிறார் - கீழ் விபூதி இத்யாதி. குணபரமாகிறது-ஸமஸ்தகுணபரமாகிறது. கீழ்குணபரமானபோது - புருஷார்த்தப்ரதத்வம்-குணாந்தரங்களுக்கும் உபலக்ஷணமென்று தாத்பர்யம். மோக்ஷப்ரதத்வத்தையே-மோக்ஷப்ரதத்வமாத்ரத்தையே; அதாவது - ஔதார்யகுணமாத்ரத்தையே சொல்லிற்றாகி லென்றபடி. மோக்ஷபதம் - புருஷார்த்தமாத்ரோபலக்ஷணம். ஆக, 'திண்ணன்வீடு' இத்யாதிக்கு மூன்றர்த்தம்: அதாவது - 'திண்ணன்வீடு' இத்யாதியாலே - உபயவிபூதியையும், 'எண்ணின்மீதியன்' என்று குணங்களையுஞ் சொல்லுதல்; யத்வா, 'திண்ணன்வீடு' இத்யாதியாலே - மோக்ஷபுருஷார்த்தப்ர

ணின்மீதிய னென்ற இடம் - அநுக்தமான குணங்களைச் சொல்லுகிறது. எண்ணின்மீதிய னென்ற இடம் - எண்ணுக்குமேலாயுள்ளா னென்றபடி; குணங்களாலேயாதல், விபூதியாலேயாதல் வந்த அபரிச்சேத்யஸ்வபாவதையைச் சொல்லுகிறது. [எம்பெருமான்] - குணவிபூதிகளை யுடையனுயிருக்கிற இருப்பைக் காட்டி என்னையெழுதிக்கொண்டவன். [மண்ணும்இத்யாதி]-இப்படி இவற்றையுடையனாய், உடைமை நோவுபட விட்டிருக்கையன்றிக்கே, ப்ரளயாபத்திலே வயிற்றிலேவைத்து நோக்கு மென்கிறார். பூம்யந்தரிக்ஷாதிகளை வெள்ளங்கொள்ளப்புக, எடுத்து வயிற்றிலேவைக்கிற இடத்தில் ஒன்றும் பிரிகதிர்ப்படாமே, ஏககாலத்திலே வைத்து ரக்ஷித்த நம் கண்ணன். [உடனுண்ட] - ரக்ஷணம் அவனுக்கு தாரகமாகையாலே - "உண்ட" என்கிறது. இல்லையாகில், காக்கும் என்ன அமையும். க்ருஷ்ணனோ பின்னை ஜகத்தை விழுங்கினான்? என்னில்; - ஆம், க்ருஷ்ணனே; அங்காந்திட வையமேழுங் கண்டாளிறே யசோதை. ஆகையாலே, ஸர்வரக்ஷகனான க்ருஷ்ணனே ஜகத்துக்கு த்ருஷ்டி; "க்ருஷ்ண ஏவ ஹி லோகாநாமுத்பத்திரபி சாப்யய: । க்ருஷ்ணஸ்ய ஹி க்ருதே" (க்ருஷ்ணஏவஹிலோகாநாமுத்பத்திரபிசாப்யய: । க்ருஷ்ணஸ்யஹிக்ருதே) என்கிறப்ரமாணப்ரஸித்தியிருக்கிறபடி. [அல்லதில்லை யோர்கண்ணே]-இவ்வர்த்தத்தையொழிய ஶப்தத்தைக்கொண்டுபோய், "பீலிக்கண்" என்று வ்யவஹரியாநின்றதிறே; அதுக்குங் கூசவேண்டும்படியிருக்கும். மாலைக்கண் என்றிருப்பார்க்கு அல்லாத

தத்வரூபௌதார்யாதி குணங்களைச் சொல்லி, 'எண்ணின்மீதியன்' என்று உபயவிபூதியையுஞ் சொல்லுதல்; அன்றிக்கே, 'திண்ணன்வீடு' இத்யாதியாலே - ஔதார்யாதிகுணமாத்ரத்தையே சொல்லி, 'எண்ணின்மீதியன்' என்று அநுக்தங்களான குணங்களைச் சொல்லுதலென்று. ஏகஶப்தத்துக்கே நினைத்தவகைகளெல்லாஞ் சொல்லக்கூடுமோ? என்ன, ஸாமாந்யஶப்தமாகையாலே கூடு மென்கிறார். - எண்ணின்மீதியனென்றவிடம் இத்யாதி. கீழ்வாக்யவிவரணம் - குணங்களாலே இத்யாதி. 'மண்ணும்' இத்யாதிக்கு அவதாரிகை - இப்படி இத்யாதி. 'எல்லாம்' என்றதுக்கு அர்த்தம் - ஒன்றும்பிரிகதிர்ப்படாமே என்று. பிரிகதிர்ப்படாமே - தப்பிப்போகாதே. 'உடன்' என்றதுக்கு அர்த்தம்-ஏககாலத்திலே என்று. ரக்ஷித்தவன் என்னாதே, 'உண்ட' என்கிறதென்? என்ன, ரக்ஷணம் இத்யாதி. தாரகமானுலாயிற்று- 'உண்ட' என்ன அடுப்பதென்று கருத்து. காக்குமென்னஅமையும் - 'கண்ணன்கண்' இத்யாதிக்கு இதுவே ஹேதுவாகப் போருமிறே யென்று கருத்து. "ஐயகாவழித்தாளுக்கங்காந்திட,வையமேழுங்கண்டாள்பிள்ளைவாயுளே"-பெரியாழ்வார்திருமொழி-(க - க - சு.)ம்ருதுவான திருநாக்குவழித்தயசோதைக்கு அதுக்குடலாக வாயைத்திறக்க, லோகங்களேழையும்பிள்ளையுடைய வாய்க்குள்ளேகண்டா ளென்கை. த்ருஷ்டி-நிர்வாஹகன். 'எம்பெருமான்' என்றிருக்க, 'நம்' என்கிறதென்? என்ன, அது ப்ரஸித்திபரமென்கிறார்-க்ருஷ்ண ஏவஹி இத்யாதி. மஹாபாரதே ராஜஸூயே பீஷ்ம: - "க்ருஷ்ண ஏவ ஹி லோகாநாமுத்பத்திரபி சாப்யய: । க்ருஷ்ணஸ்ய ஹி க்ருதே பூதமிதம் விஶ்வம் சராசரம்". இத்தால்உண்டஎன்றதுக்கு ஸ்வாஶ்ரயாவஸ்தாநவிவக்ஷயா, ஸ்வாஶ்ரயாவஸ்தாநவிவக்ஷயா ஸ்வாஶ்ரயம் ஸித்தம்.
'ஓர்' என்றதுக்கு பாவம்-இவ்வர்த்தத்தை இத்யாதி. இவ்வர்த்தத்தையொழிய - 'கண்' என்று - ரக்ஷகமென்னும் இவ்வர்த்தத்தை யொழிய. அதாவது - தர்ஶநஸாதநமான சக்ஷுரிந்த்ரியஸ்தாநமான கோளகத்தையிறே 'கண்' என்கிறது; தாத்ருஶநிர்வாஹகத்வமில்லாமலிருக்கவும் 'பீலிக்கண்' என்று ப்ரயோகிக்கிறதிறே கிஞ்சிதாகார ஸாத்ருஶ்யத்தாலே; அங்ஙனும் இதைச் சொல்லவொண்ணாது அத்யந்தவைஸாத்ருஶ்யத்தாலே; கிஞ்சிந்நிர்வாஹகத்வமும் ததீந மென்றபடி. பீலிக்கண் என்கிறது-மயில்தோகையி லுண்டானவை. அதுக்கும் - ஶப்தமாத்ரத்துக்கும். கண்-ரக்ஷகன். ப்ரஹ்மாதிகளையும் லோகத்திலே ரக்ஷகராக வ்யவஹரிக்கிறார்களே யென்ன, மாலை இத்யாதி. மாலைக்கண் என்றிருப்பார்க்கு - ஸர்வேஶ்வரனை 'ரக்ஷகன்' என்றிருப்பார்க்கு. மாலைக்கண்

தேல்லாம் மாலைக்கண்ணுய்த் தோற்றுமிறே. இது திண்ணம் - த்ருடம். "ஸத்யம் ஸத்யம்" (ஸத்யம்ஸத்யம்) என்னுமாபோலே. நம் கண்ணன் கண் என்கையாலே - அந்வயத்தாலே பரத்வஞ் சொன்னார்; அல்லதில்லை யென்கையாலே - வ்யதிரேகத்தாலே பரத்வஞ் சொன்னார். (க)

இரண்டாம் பாட்டு.

ஏபாவம்பரமே யேழுலகும்
ஈபாவஞ்செய்து அருளாலளிப்பாரார்?
மாபாவம்விட அரற்குப்பிச்சைபெய்
கோபாலகோளரி யேறன்றியே

ஆ.—(ஏபாவம்.) இஜ்ஜகத்துக்கு வேறாரக்ஷகனில்லையோ? என்னில்; - "நஹிபாலந ஸாமர்த்த்யம்ருதே ஸர்வேச்வரம் ஹரிம்" என்றுகொண்டு, ருத்ரனுடைய மஹாபாபத்தைப் போக்கி அவனை ரக்ஷித்தருளின பரமகாருணிகனாயிருந்த கோபால கோளரியேறன்றி, இந்த ஸர்வலோகங்களினுடைய பாபத்தைப் போக்கி ரக்ஷிப்பார் உளரோ? ரக்ஷிக்கவல்லார்தா னுளரோ? இது உபபாதிக்க வேணுமோ? என்கிறார்.

*ஒ.—[மாபாவமென்று தொடங்கி]-ருத்ரனுக்கு; லோககுருவாயும் பிதாவாயுமுள்ள ப்ரஹ்மாவினுடைய ஶிரஸ்ஸை அறுக்கையாலே வந்த மஹாபாபம் நீங்கும்படி அவனுடைய பிக்ஷாபாத்ரமான கபாலத்தைத் தன் திருவுடம்பிலே ஸ்வேத ஜலத்தாலே நிறைப்பதுஞ் செய்து இங்ஙனொத்த ஆபத்துக்களுக்கு உதவுகைக்காக ஸ்ரீநந்தகோபர் திருமகனாய் வந்து திருவவதாரம் பண்ணினவனாகையாலே மேனாணித்திருந்துள்ள எம்பெருமானன்றி.

ப.—அநந்தரம், அநிஷ்ட நிவ்ருத்திக்கும் இஷ்டப்ராப்திக்கும் ஹேது க்ருஷ்ண னென்கிறார்.

மா - அறப்பெரியதான, பாவம் - குருபாதகம், விட - விட்டுப்போம்படி, அரற்கு - ருத்ரனுக்கு, பிச்சைபெய் - பிக்ஷாப்ரதானம்பண்ணினவனாய், கோபாலகோள்

ளுய்த்தோற்றுமிறே - ராத்ரியில் பதார்த்ததர்ஶநாக்ஷமமான சக்ஷுஸ்ஸுபோலே அரக்ஷகமென்றே தோற்று மென்றபடி. ஸம்வாதம் - ஸத்யம்ஸத்யம் இத்யாதி. ஐதிஹாஸிகபௌராணிகவசநம் "ஸத்யம் ஸத்யம் புநஸ் ஸத்யம் உத்த்ருத்ய புஜமுச்யதே | வேதஶாஸ்த்ராத்பரம் நாஸ்தி ந தைவம் கேஶவாத்பரம்". 'அந்வயவ்யதிரேகங்களிரண்டாலும் பரத்வஞ் சொல்லுகிறார் இங்கு' என்று ப்ரவேஶத்தில் சொன்ன அர்த்தத்தைக் காட்டுகிறார் - நங்கண்ணன்கண் இத்யாதி. அந்வயத்தாலேஇதி - வாக்யபேதே தாத்பர்யம். அல்லது-தத்வ்யதிரேகேண. ஓர்கண் -ஒருநிர்வாஹகன். திண்ணன்வீடு இத்யாரப்ய, நங்கண்ணன்கண்; அல்லதோர்கண்ணில்லையே இத்யந்வய:. யத்வா வீடுமுதலித்யாரப்ய அல்லதோர் கண்ணில்லையே; திண்ணம் இத்யந்வய:. (க)

---

* இப்பாட்டின் அவதாரிகையும், இதன் முன்பாதிக்கு வ்யாக்யாநமும் கிடைக்கவில்லை.

அரியேறு - கோபகுலத்தில்பிறந்தார்க்குள் ஸிம்ஹச்ரேஷ்டமான க்ருஷ்ணன், அன்றியே - அன்றி, ஏழுலகும் - ஸர்வலோகத்தையும், ஈபாவஞ்செய்து - நசித்த பாபத்தை யுடைத்தாம்படி பண்ணி, அருளால் - தன்க்ருபையாலே, அளிப்பார் - (அபிமதங்களைக் கொடுத்து) ரக்ஷிப்பார், ஆர் - ஆர்? ஏபாவம் - என்னபாவமிருந்தபடி! பரமே - (இவனுடைய ஸர்வாதிகத்வஞ் சொல்லுதல் நமக்கு) பரமாவதே! ஏ என்று - வெறுப்பைக் காட்டுகிறது.

இ.—இரண்டாம்பாட்டில், 'அல்லதில்லை' என்கிறதென்? ருத்ராதிகளும் ஈச்வரர்களாயன்றோ இருக்கிற தென்ன, அவர்கள் அநீச்வரத்வம் இன்றாக ப்ரதிபாதிக்க வேண்டும்படி அப்ரஸித்தமாயிருக்கிறதோ? என்கிறார்.

[ஏ பாவம் பரமே] - 'இவனுடைய பரத்வம் ஸாத்யமாய், ஸாதிக்கவேண்டுவதே! என்னபாபமோ!' என்கிறார். "ஏ" என்றது - ஓவென்றபடி; விஷாதாதிசயஸூசகம். [பரமே] - ஜ்ஞாநம்பிறந்தால் குணாநுபவம் பண்ணுகையன்றிக்கே, சிலருடைய விப்ரதிபத்தியைப் பரிஹரிக்கை பரமாவதே! [ஏழுலகும்இத்யாதி] - ஸகலசேதநருடைய பாபங்களையும் தன்க்ருபையாலே போக்கி ரக்ஷிப்பார் ஆர்? [ஈபாவஞ்செய்து]-பாபங்களை ஈயும்படிபண்ணி. 'ரக்ஷிப்பார் இன்னார்' என்னாதே, 'ஆர்' என்கிறது - ப்ரதிவாதிகளுக்கும் இசையவேண்டும்படியான ப்ரமாணப்ரஸித்தி. "வாஸநாத்வாஸுதேவஸ்ய வாஸிதம் தே ஜகத்த்ரயம்", "ஸர்வபூதநிவாஸோஸி வாஸுதேவ நமோஸ்து தே".[மாபாவம்இத்யாதி]- அதில், ஈச்வராபிமாநிகளை ரக்ஷிக்கும்படி சொல்லுகிறது. [மாபாவம் விட] - லோககுருவுமாய், பிதாவுமாயிருக்கிறவன் தலையை அறுத்த பாபம் விட்டுப்போம்படி; "ஸாஹங்காரேண ப்ரஹ்மணஸ் ஸிரஶ்சித்த்வா"- தன்னுடைய ஜந்மாதிக்யமும் ஜ்ஞாநாதிக்யமும் செருக்குக்கு உடலாய்ப் பாபார்ஜந ஹேதுவானபடி. [அரற்கு] - அரனுக்கு. [பிச்சைபெய்] - தன்திருவுடம்பில் ஸ்வேதஜலத்தாலே அவன்கபாலத்தை நிறைத்தவன்; "ததோ நாராயணஸ்ஸ்ரீமாந் மயா பிக்ஷாம் வியாசித:" என்று அவன் அபேக்ஷிக்க, "தத ஸ்வபார்ஶ்வாத் விஸ்ருஜ்ய தாராம் ஶதஸஹஸ்ரிணீம். விஷ்ணுப்ரஸாதாத் ஸுஶ்ரோணி கபாலம் தத் ஸஹஸ்ரதா। ஸ்புடிதம் பஹுதா யாதம் ஸ்வப்நலப்தம் தநம் யதா" என்னக்கடவதிறே. [கோபாலகோளரியேறு] - சிறியாரை ரக்ஷிக்கும்படி சொல்லுகிறது; ஸ்ரீநந்தகோபர் திருமகனாய் வந்து அவதரித்து, அவர் சீராட்டி வளர்க்க, அத்தாலே மேனாணித்திருக்குமவன். கோளென்று - மிடுக்காதல், ப்ரதிபக்ஷத்தை க்ரஹிக்கு மென்னுதல், இடையருடைய ஶத்ருக்களைக் கொள்ளு மென்கை. [கோளரியேறு] - நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனானவன், இடையருக்கு நியாம்யனாகப்பெற்ற மேனாணிப்பு. [அரற்குப்பிச்சைபெய் கோபாலகோளரி] - ருத்ரன் பாதகியாயிற்றது, தன்நிலை குலையாத ஏற்றத்தோடே யாயிற்று; இவன் ரக்ஷிப்பது, தாழநின்றவிடத்தே யாயிற்று; ஹிமவானிலேயாதல், திருப்பாற்கடலிலேயாதல். [ஏறன்றி அருளால் அளிப்பாரார்] - தலையறுப்புண்டும், தலையையறுத்துப் பாதகியாயும் நின்ற இவர்களை 'ஈச்வரன்' என்னவோ? கர்மவஶ்யரை ஈச்வரராகச் சொல்லவொண்ணாதிறே!

ஈடு.—இரண்டாம் பாட்டு. "அல்லதில்லை" என்று நீர் சொல்லுவானேன்? ப்ரஹ்ம ருத்ரர்களும் ஈஶ்வரர்களாக அவர்களுக்கும் சில ப்ரமாணங்க ளுண்டாயன்றோ போருகிறது என்னில், - அவர்கள்நிலைகளை ஆராய்ந்து பார்த்தால், தலையறுப்பார் சிலரும், அறுப்புண்டேநிற்பார் சிலரு மாகாநின்றார்கள்; அவர்களாபத்தைப் போக்கி ரக்ஷியாநின்றான் இவன்; அவர்களோ இவனோ ஈஶ்வரன்? என்கிறார்.

முதற்பாட்டில் - மேல் பரக்க அருளிச்செய்கிற இத்திருவாய்மொழியில்அர்த்தத்தை ஸங்க்ரஹேண அருளிச்செய்தார். இரண்டாம்பாட்டு முதல் - து꞉கநிவர்த்தகனாகையாலும், ஶீலவானாகையாலும், ஸுகுமாரனாகையாலும், புண்டரீகாக்ஷனாகையாலும், ஆபத்ஸகனாகையாலும், அகடிதகடநாஸமர்த்தனாகையாலும், ஸ்ருஷ்டிஸ்த்திதிகளைப் பண்ணுகையாலும், ஸம்ஹாரமாகிற செயலைச் செய்கையாலும், ஈஶ்வராபிமாநிகளாயிருக்கிறவர்களுடைய ஸ்தோத்ராதிகளாலும், இப்படி பஹுப்ரகாரங்களாலே அவனுடைய பரத்வத்தை அருளிச்செய்து, இதுகற்றார்க்குப் பலஞ்சொல்லித் தலைக்கட்டினார் (கக)

யாதி. ஆபிஜாத்யம் - திருவாய்மொழிக்கு என்றபடி. '[illegible] - இத்தனைபோது இத்யாதி வாக்யத்வயே. அதாவது இத்யாதி - விஷயமான அவன்தன்னை உள்ளபடி ப்ரகாஶிப்பியாமல் மறைத்துக்கொண்டிறே யிருப்பது; அவனுடைய ஸ்வபாவத்தையெல்லாம் ஸ்பஷ்டமாக ப்ரகாஶிப்பிக்கிறது இப்ப்ரபந்தமிறே. உடன் - ஸஹ ஸ்ஸோடே. 'ஓர்' என்கையாலே - ஊனத்தினுடைய வைவித்யத்தை அருளிச்செய்கிறார்-இவ்வாத்மாவுக்கு இத்யாதி. ஊனம்-குறை.

இரண்டாம்பாட்டு முதல் - *இரண்டாம்பாட்டுத்தொடங்கி. க்ரமேண அந்வய꞉.* (கக)

த்ரவிடோபநிஷத்ஸங்கதி :—[illegible]

த்ரவிடோபநிஷத் தாத்பர்யரத்நாவளி :—[illegible]

திருவாய்மொழி நூற்றந்தாதி.

திண்ணிதாமாறன் திருமால்பரத்துவத்தை
நண்ணியவதாரத்தேநன்குரைத்த — வண்ணமறிந்து
அற்றார்கள்யாவர் அவரடிக்கேயாங்கவர்பால்
உற்றாரைமேலிடாதான்.

ஆழ்வார் திருவடிகளே சரணம், எம்பெருமானார் திருவடிகளே சரணம், ஜீயர் திருவடிகளே சரணம.

மூன்றாந் திருவாய்மொழி—ஊனில்வாழ்: ப்ரவேசம்.

ஆ.—(ஊனில்வாழுயிரே.) இப்படி ஸ்வோஜ்ஜீவநார்த்தமாக வந்து தோற்றி யருளினவன் தம்மோடே கலந்தருளினபடியைச் சொல்லுகிறார்.

ஒ.—மூன்றாந்திருவாய்மொழியில், எத்தனையேனும் அளவுடையார்க்கு பாஹ்யபலத்தால் ஸம்பாதிக்கவொண்ணாததுமாய், தமக்கு நிர்ஹேதுகபகவத்ப்ரஸாத லப்தமுமாய், நிஸ்ஸமாதிகமுமா யிருந்துள்ள பகவத்ஸம்ஶ்லேஷஸுகத்தை அநுபவித்து, அப்படிப்பட்ட ஸுகம் தம்மால் தனியநுபவிக்க வொண்ணாமையாலே, அதுக்கு நிலவரான அயர்வறு மமரர்களோடேகூட அநுபவிக்கைக்காக, 'அவர்களை நான் என்றோ கிட்டுவது?' என்று மநோரதித்து முடிக்கிறார்.

ப.—மூன்றாந்திருவாய்மொழியில், இப்படி உதநுங்கலவிதனுன இவனுடைய ஸர்வவித ஸாரஸ்யாதிஶய ப்ரயுக்தமான திவ்யபோக்யதையை அருளிச்செய்வதாக, அவனுடைய ஸர்வரஸாத்மகத்வத்தையும், ஸாரஸ்யயுக்தனான அவன்விஷயத்தில் நம்முடைய உபகாரஸ்ம்ருதியையும், ஸ்வவிஷயத்தில் தம்மை அவன் அபிநிவேஶிப்பித்தபடியையும், அவ்வுபகாரத்துக்கு ப்ரத்யுபகார மில்லாதபடியையும், தன்னுடைய அப்ராக்ருதபோக்யதையையும் ப்ரகாஶிப்பித்துச் சேர்த்துக்கொண்டபடியையும், இந்த ஸம்ஶ்லேஷம் ஸ்வரூபப்ரயுக்தமாகையாலே அநாதிஸித்தமானபடியையும், போக்யதாதிஶயத்தாலே வ்யதிரேகத்தில் தரிக்க அருமையையும், அவ்வநுபவம் தமக்குக் கைபுகுந்தமையையும், ஸர்வப்ரகாராநுபவத்தால் பிறந்த ஆநந்த விஶேஷத்தையும், இப்படி அநுபவித்து ஆநந்திகளான ஸூரிகளோடு தாம் கூடியநுபவிக்கையி லுண்டான ஆசையையும் அருளிச்செய்து, கீழ்ச்சொன்ன ஸர்வப்ரகாரஸாரஸ்யம் ஸூரிபோக்யமென்னுமிடத்தையும் உபபாதித்தருளுகிறார்.

இ.—மூன்றாந்திருவாய்மொழியில், எத்தனையேனும் அளவுடையார்க்கும் ஸ்வயத்நத்தாற் கிட்டவரிதாய், அவன்தானே காட்டுகையாலே தமக்குஎளிதாய், ஸமாதிக ரஹிதமுமா யிருந்துள்ள அநுபவரஸம் தம்மால் தனியநுபவிக்கவொண்ணாமையாலே, இதுக்கு உசாத்துணையாவாரை இங்குக்கிடையாமே இதுக்கு நிலவரான நித்யஸூரிகளோடே அநுபவிக்க ஆசைப்பட்டு அதுகிட்டாமையாலே, 'அவர்கள் திரளை என்றோ நான்கிட்டுவது?' என்று அநவாப்தியோடே தலைக்கட்டுகிறார். வாயுந்திரையுகளோடேயாயிற்று, இத்திருவாய்மொழிக்கு நேரே ஸங்கதியுள்ளது; ஈஶ்வரன் இவர்ப்ராக்ருதியறியுமவனாகையாலே ப்ராஸங்கிகமாகப் பரத்வத்தை அநுபவிப்பித்து, பின்னை இத்தை அநுபவிப்பித்தான். வாயுந்திரையுகளில் ஆற்றாமைக்கு, அறிவுநடையாடாத திர்யக்குக்களையும் அசேதநங்களையுஞ் சேர்த்தார்; ஸம்ஶ்லேஷத்தால் வந்த ப்ரீதிக்கு, அறிவு நைஸர்க்கிகமான நித்யஸூரிகளை உசாத்துணையாகத் தேடுகிறார்.

ஈடு.—வாயுந்திரையுகளில் ஆர்த்திதீர வந்து ஸம்ஶ்லேஷித்த ஸம்ஶ்லேஷத்தைச் சொல்லுகிறது-இத்திருவாய்மொழியில். நடுவே ப்ராஸங்கிகமாக ப்ரஸ்துதமான இத்தனைச்

ஊனில்வாழுயிர் ப்ரவேஶ ஸங்கதிமாஹ - வாயுந்திரை இத்யாதி. நடுவே இத்தனை வீடென்றுக்கு என்ன, நடுவே இத்யாதி. விஸ்தராமாஹ - தாம்பெற்ற இத்யாதி. அளவுபட்

வரத்வம் தாம்பெற்ற பேற்றின் கனத்தைப் பார்த்தார்; அது தாமடியாக வந்ததாகிலிறே அளவுபட்டிருப்பது; ஸர்வேஶ்வரனடியாக வந்ததாகையாலே கனத்திருக்குமிறே தாம் அநுபவித்த அநுபவத்துக்குள்ளே எல்லாரஸங்களு முண்டாய், அதுதான் ஸமாப்யதிக வர்ஜிதமுமாயிருந்தது; 'இப்படிப்பட்ட பேற்றுக்கு உசாத்துணையாவார் ஆர்?' என்று பார்த்த விடத்தில், ஸம்ஸாரத்தில் ஆளில்லாமையாலே, 'அவன் தன்னோடொக்க ப்ராப்யருமாய், அவனை நித்யாநுபவம்பண்ணுநிற்பாருமாய், பகவதநுபவத்துக்கு தேஶிகருமா யிருக்கிற நித்யஸூரிகள் திரளிலே போய்ப்புக்கு போதயந்த பரஸ்பரம் பண்ணி யநுபவிக்கப் பெறுவது எப்போதோ?' என்னும் அநவாப்தியோடே தலைக்கட்டுகிறார் வாயுந்திரையுகளில் ஆற்றாமைக்கு அறிவுநடையாடாத திர்யக்குக்களையும் அசேதநங்களையும் சேர்த்தார் அங்கு; இங்கு; ஸம்ஶ்லேஷத்தால் வந்த ப்ரீதிக்கு அறிவு நைஸர்க்கிகமான நித்யஸூரிகளைத் தேடுகிறார் "ராமஸ்த" (ராமஸ்து) - பெருமாளும் பிராட்டியும் ஏகதத்த்வமென்னலாம்படி கலந்த கலவியைச் சொல்லுகிறது 'பித்ருஶுஶ்ரூஷணபரராஞர், தாமங்களை ப்ரவர்த்திப்பித்தார்; தேவதாஸமாராதநம் பண்ணினார்' என்றுயிற்று சொல்லிக்கொண்டுபோந்தது; இப்படிப்போந்த இவை இப்போது 'வாத்ஸ்யாயநங்கற்றுக் காமதந்த்ரமேயோ நடத்திப்போந்தது?' என்னும்படி வேறுபட்டார் "ஸீதயாஸார்த்தம்" (ஸீதயாஸார்த்தம்) - பரமபதத்தில் சென்னியோடே வந்தவளும் பிறந்தவிடமும்படி போமஸ்ரோதஸ்ஸிலே முற்பாடரானார். "விஜஹார" (விஜஹார) - இப்படி பரிமாறச்செய்தேயும்

டிருப்பது - பரிச்சின்னமாயிருப்பது 'தேனும் பாலும்' இத்யாதியைப் பற்ற, எல்லாரஸங்களும் என்றது. ஸமாப்யதிகவர்ஜிதம் என்றது - 'ஒத்தாரமிக்காரையிலையாய' என்றதைப் பற்ற. விஷயம் ஸமாதிகரஹிதமாகையாலே அநுபவமும் ஸமாதிகரஹித மென்றபடி. 'களிப்பும் கவர்வும்' என்கிற பாட்டை உட்கொண்டு, இப்படிப்பட்ட இத்யாதி. உசாத்துணை - ஸஹாயம். 'நித்யஸூரிகள் உசாத்துணை' என்கைக்கு ஹேது - அவன்தன்னோடு இத்யாதி. ப்ராப்யராய் இத்யாதி விஶேஷணத்ரயமும் - "ஸாயுஜ்யாஸஹி", "[illegible]ஶ்ருதி", "யேவாரணா:" என்றத்தைப் பற்ற. ஸாத்யா:-ப்ராப்யா இத்யர்த்த:. 'கூடுங்கொலோ தென்றுகொலோ' என்றத்தைப்பற்ற, அநவாப்தியோடே தலைக்கட்டுகிறார் என்றது. வாயுந்திரையுகளிற்போலே ப்ரீதிக்கும் திர்யக்குக்களைத் தேடாதே நித்யஸூரிகளைத் தேடுகிறதென்? என்ன, வாயுந்திரைஇத்யாதி. அதாவது-வாயுந்திரையுகளில் ஆற்றாமையால்வந்த கலக்கத்துக்குச்சேர அஜ்ஞமான திர்யகாதிகளைக் கூட்டிக்கொண்டார்; இங்கு - ஸம்ஶ்லேஷமூலத்தால் வந்த தெளிவுக்குச் சேர அறிவுநைஸர்க்கிகமானவர்களைத் தேடுகிறாரென்றபடி. போதயந்த இத்யாதி - கீதாஸந்தஶ்மே. "மச்சித்தா மத்கதப்ராணா போதயந்த: பரஸ்பரம் । கதயந்தஶ்ச மாம் நித்யம் துஷ்யந்தி ச ரமந்தி ச". ஸம்ஶ்லேஷத்துக்கு த்ருஷ்டாந்தம் - ராமஸ்து இத்யாதி. பாலகாண்டே, "ராமஸ்து ஸீதயா ஸார்த்தம் விஜஹார பஹூந் ருதூந் । மநஸ்வீ தத்கதஸ்தஸ்யா நித்யம் ஹ்ருதி ஸமர்ப்பித:". ஶ்லோகதாத்பர்யம்-பெருமாளும்இத்யாதி. துஶப்தார்த்தம்-பித்ருஶுஶ்ரூஷண இத்யாதி வேறுபட்டார் என்றது - துஶப்தார்த்தம். கீழெல்லாம் - பூர்வாவஸ்தையில் தர்மைகபரம். வாத்ஸ்யாயநம் - காமஶாஸ்த்ரம். ஸீதாஶப்தத்தால் தோற்றுகிற அயோநிஜத்வத்தையும், "ஸஹயா[illegible]" இதி த்ருதீயாவிபக்த்யர்த்தத்தையும் பற்ற பரமபதத்தில் இத்யாதி. லாங்கலபத்ததியிலே பிறந்தவள்-ஸீதேத்யாக்ய: - "ஸீதா ஸமர்த்தா[illegible]"

ஹோமோபோஷ்வோதத்துக்கு அவ்வருகுபட்டிலர். "பஹூந்ருதூந்" (பஹூந்ருதூந்)-'பஹூந்ஸம்வத்ஸராந்' என்னாதே யொழிந்தது 'அவவோகாலவிசேஷங்களுக்கு அடுத்த் போகோபகரணங்களைக்கொண்டு புஜித்தார்' என்னுமிடம் தோற்றுகைக்காக."மநஸ்வீ" (மநஸ்வீ) - ஸம்ஶ்லேஷத்தில் பிராட்டிகோலினவளவுக்கு அவ்வருகுபட்டுப் பரிமாறினார். "தத்கதஃ" (தத்கதஃ) - தஸ்யாம்கதஃ-ஜாதிகுணங்கள் த்ரவ்யத்துக்கு ப்ரகாரமாய்ப் பிரிக்க வொண்ணாதபடியா யிருக்குமாபோலே பிரிக்கவொண்ணாதபடி ஒருநீராகக் கலந்தபடி. "தஸ்யாநித்யம்ஹ்ருதிஸமர்ப்பிதஃ' (தஸ்யாநித்யம்ஹ்ருதிஸமர்ப்பிதஃ)-இவருயர்த்தியை யறிந் திருப்பாளொருத்தியாகையாலே -அப்பெரியவன் இப்படி தாழவிடுவதே' என்று அச்சேய லிலே தன்னெஞ்சு துவக்குப்பட்டு 'அதுஅது' என்று கிடக்குமாயிற்று. அப்படியாயிற்று இங் குக்கலந்த கலவிதான்

முதற்பாட்டு.

ஊனில்வாழுயிரே! நல்லைபோஉன்னைப்பெற்று
வானுளார்பெருமான் மதுசூதனென்னம்மான்
தானும்யானுமெல்லாம் தன்னுள்ளேகலந்தொழிந்தோம்
தேனும்பாலும்நெய்யும் கன்னலுமமுதுமொத்தே.

ஆ.—'ஆஶ்ரிதஸம்ஶ்லேஷைகபோகனாய், ஆஶ்ரிதவிரோதிநிரஸநஸ்வபாவ னாய், எனக்கு ஸ்வாமியா யிருந்த எம்பெருமான்தானும் யானும் எல்லாப்படியாலும் இந்தக்கலவியினுள்ளே எல்லாரஸங்களும் உண்டாம்படி கலந்தொழிந்தோம்; திருநாட்டி லே சென்றால் ரஸிக்கக்கடவ பகவதேகபோகத்வத்தை, இந்த ப்ரக்ருதியிலே யிருந்து வைத்தே பெற்று வாழ்கிற நெஞ்சே! உன்னைப்பெற்றே இந்தஸம்ருத்தியெல்லாம் விளைந் தது; நல்லைநல்லை' என்று நெஞ்சைக் கொண்டாடுகிறார்

ஈ.—முதற்பாட்டில், அபரிச்சேத்யமான ஸுகம் பிறக்கும்படி எம்பெருமா னுமநானுமகலந்தோம்; இதெல்லாம் உன்னாலேவந்த ஸம்ருத்தியிறே யென்று நெஞ்சைக் கொண்டாடுகிறார்.

[ஊனில்வாழுயிரே]-ப்ரக்ருதியிலே யிருந்துவைத்தே பகவத்குணங்களை தார கமாகக்கொண்டு வாழ்கிற நெஞ்சே! 'ப்ரக்ருதியே தாரகமாக வாழ்கிற நெஞ்சே!' என்று

"விஜஹார' என்று-விளையாட்டாகச் சொல்லுகையாலே, உபோத்காதத்துக்குஅவ்வருகுபட்டிலர் என்றது. உபோத்காதம் - உத்யோகமாத்ரம். ஸம்வத்ஸராந் என்னாதே என்றது -"ஸஹஸ்ர ஸம்வத்ஸரம்" என்றத்தைப் பற்ற. அடுத்த - உசிதமான. "மநஸ்வீ" என்கிற விக்ரஹம்- பூமாவிலே என்று திருவுள்ளம்பற்றி, அது ஸப்ரதிகோடிகமாகையாலே அருளிச்செய்கிறார் - ஸம்ஶ்லேஷத்தில் இத்யாதி. "மதஃ" என்றதுக்கு வாஸனை - ஜாதி இத்யாதி. "தத்கதஃ" என் கையாலே - பெருமாளுக்குப் பிராட்டியிடத்தி லுண்டான ப்ராவண்யஞ் சொல்லுகிறது; "தஸ்யா ஹ்ருதிநித்யம்ஸமர்ப்பிதஃ" என்று அவளுடைய ஹ்ருதயத்திலே தாம் ஸமர்ப்பிக்கப்பட்டாரென் கையாலே - பிராட்டிக்குப் பெருமாளிடத்திலுண்டான ப்ராவண்யஞ் சொல்லப்பட்டது. "ஸஹஸ்ர தேஷ்வ்ராமநஸ்வீநூதஸ்யவாஸ்யாம்ப்ரதிஷ்டிதஃ" என்னக்கடவதிறே.

பழையதசையைச் சொல்லிற்றாகவுமாம்; நல்லைநல்லையென்று கொண்டாடுகிறது [உன்னை யென்று தொடங்கி] - நீ பாங்காகையாலே அயர்வறுமமரர்களதிபதியாய்வைத்து என்னோட்டை ஸம்ஶ்லேஷத்துக்குள்ள விக்நங்களையெல்லாம்போக்கி என்னை அடிமைகொண்டு அத்தாலே நிரதிஶயபோக்யனான தானும தன்னோடு யதாமநோரதம் ஸம்ஶ்லேஷிக்கப் பெறுமையாலே வாயுந்திரையுகளிற்படியே மிகவும் நோவுபட்ட நானும் ஸர்வஸுகமும் இக்கலவியிலே யுண்டாம்படி பூர்ணமாகக் கலந்தோம்; ரஸவஸ்துககளெல்லாஞ் சேர்ந்தால் அதினுள்ளே ஸர்வரஸமுமுண்டாயிருக்குமாபோலே இதிலே சொன்னவை - ஸர்வ வஸ்துக்களுக்கும் உபலக்ஷணம்.

ப.—முதற்பாட்டில், ஸாவரஸமான வஸ்துவோடு தமக்கு உண்டான ஸம்ஶ்லேஷம் தம்முடைய திருவுள்ளமடியாக வாதலால் நெஞ்சைப்பார்த்து உகக்கிறார்

ஊனில் - மாம்ஸமயமான சரீரத்திலே, வாழ - (இநதளத்தில் தாமரைபோலே பகவதநுபவததைபபெற்று) வாழ்கிற, உயிரே — நெஞ்சே! நல்லை போ - நல்லைகாண்; (எங்ஙனேயென்னில்), - உன்னை — உன்னை, பெறறு - (எனக்குவிதேயமாகப) பெறுகையாலே, வானுளார் - பரமபதவாஸிகளான நித்யஸூரிகளுககும், பெருமான - மேலான மேன்மையையுடையனாய், மதுசூதன் — (தன்னையநுபவிககபபாரித்த எனனுடைய ப்ரதிபந்தகத்தை) மதுவைமுடித்தாற்போலேமுடித்து; என் அம்மான் தானும - என்னை அடிமைகொண்டருளின தன்மையையுடைய அவனும், யானும் - (அவனையநுபவிக்க ஆசைபபட்டு அடிமைபுககு) நானும், தன்னுள்ளே - தனக்குள்ளே, எல்லாம - எல்லாவினிமையுமாம்படி, தேனும்—தேனும் தேனும், பாலும்-பாலும் பாலும, நெய்யும்-நெய்யும் நெய்யும, கன்னலும் - கன்னலும் கன்னலும், அமுதும்ஒததது-அமுதமும்அமுதமும்போல, கலந்தொழிந்தோம் - கலந்துவிட்டோம். இததால் - ஏகஜாதித்ரவயங் கலநதாற்போலே யென்றபடி. அநேகத்ருஷ்டாந்ததாத்பர்யம் - ஸர்வவிதஸாரஸ்யமும் தோற்றுகைக்காக. தேனென்று — ஸர்வரஸஸமவாயம். பாலென்று - ஸ்வாபாவிகரஸம். நெய்யென்று - பருஹணரஸம். கன்னலென்று - கரும்பாய், அதனுடைய பாகஜரஸத்தை நினைக்கிறது. அமுதென்று - நித்யரஸம். உயிரென்று - ப்ராணாஶ்ரயமான நெஞ்சைச் சொல்லுகிறது. போவென்று - ஸாதரமான ஸம்புத்திஸூசகம்.

இ.—முதற்பாட்டில், இந்த ஸம்ருத்தியெல்லாம் உன்னாலே வந்ததன்றோ? என்று திருவுள்ளத்தைக் கொண்டாடுகிறார்.

[ஊனில வாழுயிரே] - மாம்ஸப்ரசுரமான ஶரீரததிலே யிருந்துவைத்து வாழுகிற உயிரே! ஶரீரத்தைப்பற்றி வாழ்ந்து போந்த உயிரே! என்றுமாம. பரமபதத்தைப் பெற்று அங்கேதான் பகவதநுபவம்பண்ணுகிற விடத்தேயோ நீ உதவிற்று? மாம்ஸாதிபுஞ்ஜமான ஶரீரத்திலே, நித்யஸூரிகள் அநுபவிக்கும் அநுபவத்தையன்றோ நீ உபகரித்தது. [நல்லைபோ] - "போ" என்று போக்கு — வரவைக்காட்டி, நெஞ்சே வா என்னுதல்; "ஹோ" என்கிறத்தைத் தமிழ்செய்து, ஸம்போதநமென்னுதல். நல்லைபோ என்று முழுச்சொல்லாய், நல்லைநல்லை யென்னுதல். 'என்னைக்கொண்டாடுகிறதென்?' என்ன, [உன்னைப்பெற்று] - ஈஶ்வரனும் என்று முளன்; தத்ஸம்பந்தமும் அநாதி; அவன் எதிர்சூழல்புக்கு அவஸரப்ரதீக்ஷனாய்நிற்க, நீ ஆபிமுக்யம்பண்ணுகையாலேயன்றோ இழந்தது; நீ ஆபிமுக்யம்பண்ணியிறே இப்பேறு பெற்றது. 'நீர்பெற்ற பேறுதான் ஏது?' என்ன.

[வானுளார்இத்யாதி] - நித்யஸூரிகளுக்கும அவ்வருகானவன், ஸம்ஸாரிகளுக்கும் இவ்வருகான என்னளவும் வரச் செடிசீய்த்து என்னைத் தனக்காக்கின தானும், வாயுந்திரையுகளில் யானும்; விடாய்ப்பித்த தானும், விடாய்த்த நானும்; க்ருஷிபண்ணின தானும், க்ருஷிக்கு விஷயபூதனான நானும்; எல்லாரஸங்களுந் தன்னுள்ளேயாம்படி கலந்தோம் "ஸ்வயம் து ஸமயாவ்யாவ்யா வேவராஜ்யாநயொர்மனணா: । ஹதஸ்தா... விஜயிநம் ராமம் வயஸ்ரீஜிஸு..."'. [கலந்தொழிந்தோம்] - பேற்றுக்கு இனி அவ்வருகில்லை. பரமபதத்தே போகத் தேடுகிறதும், உசாத்துணைக்காகவும் விச்சேதியாமைக்கு மாயிற்று. [தேனும்இத்யாதி] - 'தேனும் தேனு மென்று - ஏகஜாதித்ரவ்யங் கலந்தாற்போலே' என்று ஆளவந்தார்; "ஸர்வரஸ:" என்கிற வஸ்துவாகையாலே ஸர்வரஸங்களும் உண்டாம்படி கலந்தோம்' என்று எம்பெருமானார்.

ஈடு.—இதில், முதற்பாட்டில்-ராஜ்யத்தையிழந்த ராஜபுத்ரனை ஒருவன் ராஜ்யத்திலே ப்ரவேசிப்பித்தால், 'இவனாலே நாம் இப்பேறு பெற்றோம்' என்று அவனைக் கொண்டாடுமோபோலே, 'கைங்கர்யஸாம்ராஜ்யத்துக்கு இட்டுப் பிறந்துவைத்து நெடுநாள் இழந்துகிடக்க இந்நெஞ்சிறே இத்தைத்தந்தது' என்று திருவுள்ளத்தைக்கொண்டாடுகிறார்.

[ஊனில்வாழுயிரே] - ஊனென்று-ஶரீரமாய், வாழ்கையாவது - வர்த்திக்கையாய, சரீரத்திலே வர்த்திக்கிற உயிரேன்னுதல்; சரீரத்தைப்பற்றி அவ்வருகு ஒன்றறியாதே வாழ்ந்துபோன உயிரேன்னுதல். மாம்ஸலமான சரீரத்திலே யிருந்துவைத்து வாழ்கிற உயிரே! பரமபதத்தைப்பெற்று அங்கே நாநாஸவநத்தோடே அநுபவிக்கிறவிடத்தேயோ நீ உதவிற்று; மாம்ஸாஸ்ருக் பூய விண் மூத்ர ஸ்நாயு மஜ்ஜாஸ்த்திகளான ஶரீரத்திலே, நித்யஸூரிகள் அநுபவிக்கும் அநுபவத்தையன்றோ நீ உபகரித்தது? இத்தால் - வாழ்கையாவது - அநுபவிக்கையாய், நெடுநாள் ப்ராக்ருதபோகங்களை புஜித்துப்போந்த நீ அப்ராக்ருத போகத்துக்குக் கைதர நிற்பதே! என்றபடி மநஸ்ஸை 'உயிர்' என்பானேன்?

முதற்பாட்டு - ஊனில் இத்யாதி. திருவுள்ளத்தைக் கொண்டாடுகைக்கு ஹேதுவை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார் - ராஜ்யத்தை இத்யாதி.

வர்த்திக்கையாய் என்றது - ஊனிலிருப்பை வாழ்வாக நினைத்திருக்குமவரல்லாமை ஸமர்த்திக்கை. ஶரீரத்தைப்பற்றி இதி-முன்பு உண்டான புத்த்யநுஸாரத்தாலே வாழ்வாகச் சொல்லவுமா மென்றபடி. அவ்வருகொன்றறியாமை - வாழ்வென்கையாலே அர்த்தாத்ஸித்தம். மாம்ஸலமான இத்யாதி வாக்யம் - சில ஸ்ரீகோஶங்களிலே இல்லை. உண்டானால் - அர்த்தத்ரயம்; அதாவது - வாழ்கை - வர்த்தநமும், ஶப்தாதிவிஷயாநுபவஸுகமும், நித்யமுக்தரைப்போலே பகவதநுபவஸுகமும். இல்லாத பக்ஷத்தில்-அர்த்தத்வயம்; அதாவது - ஊனிலே வர்த்திக்கிற உயிரேயென்றும, ஊனிலே ஸுகிக்கிற உயிரே யென்றும். வாழ்கை - ஸுகிக்கை. மூன்றின அர்த்தத விவரணம்-பரமபதத்தை இத்யாதி வாக்யதவயமும். "ஸ்வானகஸ்யாஹவதி" இத்யாதியைப்பற்ற நாநாபவநத்தோடே என்றது. மாம்ஸ இத்யாதி - ப்ரதமேம்ஶ (கள - சஉ) தைத்யதநயாங்ப்ரதி ப்ரஹ்லாத:, "மாம்ஸாஸ்ருக்பூயவிண்மூத்ரஸ்நாயுமஜ்ஜாஸ்திஸம்ஹதௌ। தேஹேஷ்வஸ்மிந் ... " த்விதீயார்த்தவிவரணம்-இத்தால் இத்யாதி. இத்தால்-ஶரீரத்தைப்பற்றி அவ்வருகுஒன்றறியாதே வாழ்ந்துபோனஉயிரென்னுதல்" என்கிறஇத்தால். நெடுநாள்விஷயங்களை அநுபவித்துப பரிஹரிக்கிறார் - மநஸ்ஸை இத்யாதி. முதல இதி-ஷஷ்ட்

என்னில்; - ஆத்மாவுக்கு தர்மபூதஜ்ஞாநம் நித்யமாயிருக்கச்செய்தே, ‘‘மந ஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ:’’(மநஏவமநுஷ்யாணும்காரணம்பந்தமோக்ஷயோ:) என்று - பந்தமோக்ஷங்களுக்கு ஹேது மநஸ்ஸென்கிற ப்ராதாந்யத்தைப் பற்ற· ‘உயிரே’ என்று - ஆத்மாவை ஸம்போதிக்குமாபோலே, ஸம்போதிக்கிருர். [நல்லேபோ] - நல்லேவா என்றபடி நல்லேநல்லே என்று கோண்டாடுகிருா. போ என்று ஸம்போதநமாகவுமாம் நல்லேபோவென்று - முழுச்சொல்லாய், 'நல்லே நல்லே யென்னுதல். நடுவே என்னைக்கோண்டாடுகிற தேன்? என்ன, [உன்னைப்பெற்று] - பந்துஹேதுவாய்ப் போந்த நீ மோக்ஷஹேதுவாகப்பெற்று ஈஶ்வரனும் என்றும் உண்டு, தத்ஸம்பந்தமும் அநாதி; அவன் எதிர்சூழல்புக்குத் திரியாநிற்கவும், நீ ஆபிமுக்யம்பண்ணுமையாலேயன்றோ நெடுங்காலம் இழந்தது; இன்று நீ ஆபிமுக்யம்பண்ணியன்றோ இப்பேறு பெற்றது· நீர்பெற்றபேறு எது’ என்ன, சொல்லுகிருர் மேல்,- [வானுளார்பெருமான் மதுசூதனனென்னம்மான்தானும் யானும்] - அயர்வறுமமராகளபதியாயிருந்து வைத்து அவதரித்து, மதுவாகிறஅஸுரனைப் போக்கினுற்போலே என்னேட்டை ஸம்ஶ்லேஷவிரோதியைப் போக்கி, என்னைத் தோற்பித்துத் தன்பக்கலிலே கைங்கர்யத்திலே மூட்டினதானும், கைங்கர்யத்துக்கு விஷயபூதஞன நானும். வாயுந்திரையுகளில் - கண்ணுற் கண்ட பதார்த்தங்களடங்கலும் பகவதலாபத்தாலே நோவுபடுகிறனவாக நினைத்து விடாய்த்த நானும், நெடுநாள் என்னைப்பெறுகைக்கு எதிர்சூழல்புக்கு விடாய்ப்பித்த தானும். க்ருஷிபண்ணின தானும், க்ருஷிக்கு விஷயபூதஞன நானும் [எல்லாம் தன்னுள்ளே கலந்

டேம்போ ஸப்தமே, (உஅ) ‘‘மந ஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ: । பந்தாய விஷயாஸங்கி முக்த்யை நிர்விஷயம் மந:’’. ‘‘நல்லேபோ’’ என்றதுக்கு மூன்று அர்த்தம்: முந்தினது - ‘போ’ என்று விபரீதலக்ஷணையாய், நல்லேவா என்றபடி. ‘நல்லேவா’ என்று - லாலநோக்தியாதல்; ‘நல்லேபோ’ என்று - முழுசசொல்லாய், நல்லேநல்லே யென்று கொண்டாடுகிறதாதல், ‘போ’ என்று - ‘ஹோ’ என்றபடியாய், ஸம்போதநமாதல். த்விதீயார்த்தவிவரணம் - நல்லேபோவேன்று இத்யாதி. நடுவே-பகவதநுபவமத்யத்திலே. மநஸ்ஸம்பந்தம் முன்பே ஸித்தமாயிருக்க, இப்போ‘பெற்று’ என்கிறதுக்கு ஹாவம் - பந்தஹேதுவாய் இதயாதி. என்னை ‘மோக்ஷஹேது’ என்கிறது எக்கொண்டு? என்ன, ஈஶ்வரனும் இதயாதி. ஈஶ்வரனும் தத்ஸம்பந்தமும் நித்யமாயிருக்கசசெய்தேயும், பலாந்வயவ்யதிரேகஙகள் த்வதாபிமுக்யாந்வய வ்யதிரேகாயத்தமாகையாலே மோக்ஷஹேதுவென்கிற தென்று தாதபர்யம். ‘வானுளார்’ இத்யாதி பதங்களுக்கு அடைவே அர்த்தம்-அயர்வறும் இதயாதி. வானுளார் - வானிலுள்ளார். ஸமுதிவ்யாஹாரதாத்பர்யம் - மதுவாகிற இத்யாதி. ‘அம்மான்’ என்றத்தால் பலிதார்த்தம்-கைங்கர்யத்திலே மூட்டின தானும் என்று. கைங்கர்யத்துக்கு விஷயபூதஞன நானும்-கைஙகர்யத்திலே மூட்டுகைக்கு விஷயபூதஞன நானுமென்றபடி. அர்த்தாந்தரம் - வாயுந்திரையுகளில் இத்யாதி. ப்ரதமார்த்தவிவரணம் - க்ருஷிபண்ணின இத்யாதி. ‘அம்மான் தானும் யானும்’ என்கிறதுக்கு அர்த்தமாக - ஆறுவாக்யஙகள் சில ஸ்ரீகோஶங்களிலே இருக்கின்றன; சில ஸ்ரீகோசங்களிலே* எட்டுவாக்யங்கள்; இந்த வாக்யங்களெல்லாம் - ‘ஏகார்த்தபரங்களாதல்-அர்த்தத்வயபரங்களாதல்’ என்று நிர்வஹிப்பர்கள்; ‘‘இந்தவாக்யங்களெல்லாம்-ஆளவந்தார் நிர்வாஹாநுகுணங்கள்; மேலே. ‘தானும்யானும்’ என்கிறதுக்கு அர்த்தமாகச

* எட்டுவாக்யமுள்ள பாடம் கிடைக்கவில்லை.

தொழிந்தோம்] - ஆயிரத்திலொன்றும், கடலிற்குளப்படியும் போலே, தானும் நானுமான சேர்த்தியிலே எல்லாரஸங்களும் பிறக்கும்படி ஸம்ஶ்லேஷித்தோம். [ஒழிந்தோம்]-நித்ய விபூதியில் புக்காலும் இப்பேற்றை அசையிட்டிருக்குமித்தனை; அங்கு ஏறறமாகச் செய்ய லாவதில்லை, இதினுடைய அவிச்சேதமே அங்குள்ளது இப்படி இங்கே கலந்திருக்க, இனிப் பரமபதத்தேறப்போகத் தேடுகிறது உசாத்துணைக்காகவும், இதுதான் விச்சேதியா மைக்கு மாயிற்று. என்போலே கலந்தது? என்றால்-[தேனும்பாலும் இத்யாதி] - இதுக்கு ஆளவந்தார் அருளிச்செயதாராகத் திருமாலையாண்டான் பணிக்கும்படி - 'ஏகஜாதீயத்ரவ் யங்கள் தன்னிலே கலந்தாற்போலே' என்று அதாவது-தேனும் தேனுங் கலந்தாற்போல வும், பாலும் பாலுங் கலந்தாற்போலவும், நெய்யும் நெய்யுங் கலந்தாற்போலவும், கன் னலும் கன்னலுங் கலந்தாற்போலவும், அமுதும் அமுதுங் கலந்தாற்போலவும் - என்று. அங்ஙனன்றியே, எம்பெருமானார் அருளிச்செய்யும்படி.' இவற்றை - ரஸவத்பதார்த் தங்களுக்கெல்லாம் உபலக்ஷணமாக்கி - 'தானும் நானுமான கலவிக்குள்ளே எல்லா ரஸங்களும் பிறக்கும்படி ஸம்ஶ்லேஷித்தோ மென்கிறார்' என்று. "ஸர்வ கந்தஸ் ஸர்வரஸ:" (ஸர்வகந்தஸ்ஸர்வரஸ:) என்கிற வஸ்துவோடேயிறே கலக்கிறது; ஜ்ஞாநாநந்தவஸ்துக்க ளுடைய சேர்த்தியிலே ஸர்வரஸங்களும் பிறக்கும்படியாயிற்று கலந்தது இவையேல்

சொல்லுகிற 'ஸர்வகந்தஸ்ஸர்வரஸ:' இத்யாதி வாக்யஙகள் - எம்பெருமானார் நிர்வாஹாநுகுணங கள்" என்று சொல்லுவர். எம்பெருமானார் நிர்வாஹததிலே அருளிசசெய்கிறார் - ஆயிரத்தில் இத யாதி. ஆயிரத்திலொன்றும், கடலிற்குளப்படியும் உணடாயிருக்குமாபோலே, ஜ்ஞாநாநந்தவஸ் துக்களான தானும் யானுமான சேர்த்தியிலே எல்லாரஸங்களும் பிறக்கும்படி ஸம்ஶ்லேஷித்தோ மென்றபடி. இவ்விடத்திலே - "யத்ஸாரஸ்யஹாஸ்யத்நாஸ்திஸர்வநந்ஸ்நிஸாஹிதம்" என்றது அநுஸந்தேயம். 'ஒழிந்தோம்' என்று - இனிக் காத்தவ்யாம்ஶமில்லை யென்று தோற்றுகையாலே அதின்கருத்தை அருளிசசெய்கிறார் - நித்யவிபூதியில் இத்யாதி. ஆனால், "அடி யார்கள் குழாங்களை உடன்கூடுவ தென்றுகொலோ" என்கிறதென்? என்ன, இப்படி இங்கே இத்யாதி. 'என்போலே கலந்ததென்றால்' என்கிற வாக்யம் - நிர்வாஹத்வயஸாதாரணம். ஆள வந்தார நிர்வாஹத்துக்கு, 'தானும் யானுமெல்லாம்' என்றது முழுச்சொல்லாய், தானும் யானு மெனறபடியாய, 'தனனுள்' என்று - தன்னில் தானென்றபடியாய், தானும் யானுமாகிற இரண்டு பேருமபரஸபரம் தேனும் தேனும் பாலும் பாலும் நெய்யும் நெய்யும் கன்னலும் கன்னலும் அமு தும் அமுதுங் கலந்தாறபோலே கலந்தொழிந்தோ மென்று பாவார்த்தம்; இப்பக்ஷத்தில், 'ஒத்து' என்றது -போலே யென்றபடி. எம்பெருமானார் நிர்வாஹததுக்கு, தானும் யானுமாகிற தன் னுள்ளே - தானும் யானுமாகிற கலவிக்குள்ளே தேனும் பாலும் நெய்யும் கன்னலும் அமுதுமான வெல்லாமுணடாம்படி கலந்தொழிந்தோ மென்று பாவார்த்தம்; இந்தயோஜனையில், தன்னுள்ளே என்றது-கலவிக்குள்ளே யென்றபடி. 'ஒத்து' என்றது - உண்டாம்படி யென்றபடி. அவனோட்டை ஸம்ஶ்லேஷத்துக்குள்ளே எல்லாரஸமும் உண்டாம்படிஎன்? என்ன - ஸர்வகந்த இத்யாதி. சாந் தோக்யே ஶாண்டில்யவித்யாயாம்- "ஸர்வகந்த: ஸர்வரஸ:" இத்யாரப்ய, "ஸர்வ கந்த: ஸர்வரஸ: ஸர்வமிதமப்யாத்தோऽவாக்யநாதர:". ஆனாலும், இரண்டு தலையும் விலக்ஷணமாக வேண்டாவோ? என்ன, ஜ்ஞாநாநந்த இத்யாதி. ஆளவந்தார் நிர்வாஹத்திலே, 'தேனும தேனும் கலந்தாற்போலே கலந்தோமென்றால்-ஸ்வரூபைக்யஞ் சொல்லிற்றாகாதோ? என்ன, இவையேல்

லாவற்றையும் சேர்த்துச்சொல்லும்போது, வருவதொரு பரிமாணாதிக்யம் உண்டிறே; அது தானேயிறே த்ரவ்யஸத்பாவத்தில் ப்ரமாணம். (க)

இரண்டாம் பாட்டு.

ஒத்தார்மிக்காரை இலையாயமாமாய
ஒத்தாயெப்பொருட்கும் உயிராய்என்னைப்பெற்ற
அத்தாயாய்த்தந்தையாய் *அறியாதனவறிவித்து
அத்தா!நீசெய்தன அடியேனறியேனே.

ஆ.—(ஒத்தார்.) இப்படி நெஞ்சைக் கொண்டாடி, எம்பெருமான் தமக்குச் செய்தருளின ஸம்ருத்தியை அவன்தனக்குச் சொல்லிக்கொண்டு அநுபவிக்கிறார்.

நிரஸ்தஸமாப்யதிகனாய், ஆஸ்சர்யபூதனாயிருந்து வைத்து, ஆஸ்ரித ஜநங்களெல்லாரோடும் ஸஜாதீயனாய் வந்து பிறந்தருளி அவர்களுக்கு அத்யந்தஸுலபனாயிருந்து, எனக்கு அவ்வளவன்றியே ஒருவன் தான் தனக்குச் செய்யும் நன்மையும், மாதா புத்ரனுக்குச் செய்யும் நன்மையும், பிதா புத்ரனுக்குச் செய்யும் நன்மையும், ஆசார்யன் ஶிஷ்யனுக்குச் செய்யும் நன்மையும் செய்தருளினாய்; இன்னம் அடியேன் திறத்து நீ செய்தருளினவற்றுக்கு ஒரு முடிவு காண்கிறிலேனென்கிறார்.

ஒ.—இரண்டாம் பாட்டில், நிரபேக்ஷனாயிருக்கிற நீ என் பக்கலிலே ஸாபேக்ஷனாய்க்கொண்டு என் ஹ்ருதயத்தையும் எனக்கு அநுகூலமாக்கி எனக்குப் பண்ணின உபகார பரம்பரைகளை என்னால் பரிகணித்து முடியவொண்ணாதென்கிறார்.

[ஒத்தார் இத்யாதி] - ஸமாதிக தரித்ரனாய் அத்யாஸ்சர்யமான படியையுடையவனே! ஆஸ்ரிதஸுலபத்வார்த்தமாக தேவமநுஷ்யாதி ஸஜாதீயனாய், [உயிராய் என்று தொடங்கி] - ஒருவன் தான் தனக்குப் பண்ணிக்கொள்ளும் நன்மைகளையும் பெற்ற தாய் செய்யும் நன்மைகளையும் தமப்பன் செய்யும் நன்மைகளையும் ஆசார்யன் செய்யும் நன்மைகளையுஞ் செய்து இவ்வழியாலே என்னை அடிமைகொண்ட என்ஸ்வாமீ!

லாவற்றையும் இத்யாதி. சேர்த்துச்சொல்லும்போது - கூட்டிப்பார்க்கும்போது. இவையெல்லாவற்றையும் - தேன்முதலாகிய எல்லாவற்றையும். ஐக்யமாகில், ப்ரஸ்த்தத்வயஸம்மேலநத்தில் ப்ரஸ்த்தமாத்ரபரிஶேஷம் ப்ரஸங்கிக்கும் என்றபடி; ஆகையாலே; பிரிக்கவொண்ணாமைக்கு த்ருஷ்டாந்தமித்தனை யொழிய, வஸ்து இரண்டாயேயிருக்குமென்றபடி. த்ரவ்யஸத்பாவம்-த்ரவ்யாந்தரஸத்பாவம். ஆளவந்தார் நிர்வாஹத்தில் 'உன்னைப்பெற்று' இத்யாரப்ய, தன்னுள்ளே தேனும் பாலும் நெய்யும் கன்னலும் அமுதுமொத்துக்கலந்தோம்; ஊனில்வாழுயிரே, நல்லைபோ இத்யந்வய:. எம்பெருமானார் நிர்வாஹத்தில், உன்னைப்பெற்று இத்யாரப்ய, தானும் யானுமாகிற தன்னுள்ளே தேனும்பாலும் நெய்யும் கன்னலும் அமுதுமான எல்லாம் ஒத்துக்கலந்தொழிந்தோம்; ஊனில்வாழுயிரே நல்லைபோ. இத்யந்வய:. யச்சாஸ்யேத்யாதி - அஸ்ய - உபாஸகஸ்ய, இஹ - லோகே, யத் - போக்யஜாதம் அஸ்தி, இஹ யச்ச நாஸ்தி, தத்ஸர்வமஸ்மிந்-ஸர்வேஶ்வரே ஸமாஹிதமஸ்தீத்யர்த்த:. (க)

---

* அறியாதன வறிவித்த என்றும் பாடமுண்டு.

ப.—அநந்தரம், ஏவம்விதஸாரஸ்யயுக்தன் தம்விஷயத்தில் பண்ணின உபகாரம் அபரிச்சேத்யம் என்கிறார்.

ஒத்தார் மிக்காரை இலையாய - இந்த ஸாரஸ்யாதிசயத்துக்கு ஸமாப்யதிகதரித்ரனாய், மாமாய - (ப்ரதிக்ஷணம் அநுபவியாநின்றாலும் அபூர்வவத் விஸ்மயாவஹமான) மஹாஸ்சர்யயுக்தனாய், ஒத்தாய் எப்பொருட்கும் - ஸர்வபதார்த்த ஸஜாதீயனாய் வந்தவதரித்து அநுபவிப்பிக்குமவனாய், உயிராய்-ஆத்மா சரீரத்துக்கு தாரகனாமோபாதி ஸர்வபதார்த்ததாரகனாய், என்னை - என்னை, பெற்ற - உத்பாதித்த, அ - அந்த அஸாதாரண ஸம்பந்தத்தையுடைய, தாயாய் - தாயாம்படி ப்ரியபரனாய், (அ) - ததாவிதோத்பத்தி ஹேதுவான, தந்தையாய் - பிதாவாம்படி ஹிதபரனுமாய் (ஆசார்யனோபாதி), அறியாதன - அஜ்ஞாதமான அநுபவாதிகளை, அறிவித்து - அறிவிப்பதுஞ் செய்து, அத்தா - இவ்வுபகாரங்களுக்கு அடியான ஸம்பந்தத்தையு முடையவனே! நீ - (ஸோபாதிகரான அவர்களைப்போலன்றியே நிருபாதிகஸம்பந்தயுக்தனான) நீ, செய்தன - செய்த உபகாரங்கள், அடியேன் - அடியேனான உறவாலே யென்றிருக்குமதொழிய, அறியேன் - அளவிட்டு அறியமாட்டுகிறிலேன். ஸர்வவிதபந்துவான நாராயணனிறே மாதாவும் பிதாவும் குருவு மென்று கருத்து.

ஈ.—இரண்டாம்பாட்டில், எம்பார் கோஷ்ட்டியில் இதிஹாஸம். 'என்னைக் கொண்டாடுகிறதென் உபகரித்தா ரிருக்க?' என்ன, இசைவிக்கும்படியான ஸர்வேஸ்வரனைக் கொண்டாடுகிறார்.

[ஒத்தார் இத்யாதி] - ஸமாதிகதரித்ரனாய் அபரிச்சேத்யங்களான குணசேஷ்டிதங்களை யுடையவனே! அவாப்தஸமஸ்தகாமனுக்கும் நித்யதாரித்ர்யமுண்டு. [ஒத்தாயெப்பொருட்கும்] - இப்படி ஸர்வாதிகனான நீ என்னைப் பெறுகைக்காக அநேகாவதாரங்களைப் பண்ணினாய். மேன்மையோடே வரில் 'கிட்டவொண்ணாது' என்று அகலுவர்கள்; தாழவிட்டு வரில் காற்கடைக் கொள்ளுவர்கள்; ஆகையாலே, ஸஜாதீயனாய் வந்து பொருந்துமது; "ஸுரேஷு ஸாமந்யமனஸுரேஷ்வம்ருதிகுணைஷுதந்யக்ஷோகலிதமா | ஸந்தாநஜாவதாம் ஸுரநாரீணாம் கலாநிஜாநரஸ்ய தேஹாந்தரபாலனாய" இப்படி அவதரித்துச் செய்ததென்? என்னில்,—[உயிராய்] - தனக்குத்தான் பண்ணிக்கொள்ளும் நன்மை யென்னுதல், ஆத்மாவா யென்னுதல். [என்னைப்பெற்ற அத்தாயாய்] - வளர்த்த தாயை வ்யாவர்த்திக்கிறது; எனக்கு ப்ரியமே செய்யக்கடவ தாயாய். [தந்தையாய்] - நேரே உத்பாதகனாய்க்கொண்டு ஹிதைஷியாய். [அறியாதன அறிவித்து] - "ஸஹிவித்யாதஸ்தம்ஜநயதி" என்கிறபடியே ஆசார்யனாய், "ஸ்தாதா", ஸுஹ்ருச்சரணம் கதி:" என்னுமவனிறே. [அத்தா] - ஸ்வாமீ! இவ்வுபகாரங்களை உடையனாகையாலே செய்தா யென்கிறார். "மாதா பிதா ப்ராதா" இத்யாதி; "நாராயண:" என்கிறார். [நீ செய்தன] - பேசவும் போகாது, நினைக்கவும் போகாது; 'நீசெய்தன' என்னுமத்தனை. [அடியேன் அறியேனே] - உபகரித்த நீயே அறியுமத்தனை. நான் அதுக்கு இலக்காய்க் குமிழ்நீருண்ணுமத்தனை யென்கிறார்.

ஈடு.—இரண்டாம்பாட்டு. இப்பாட்டு ப்ரஸ்துதமான வளவிலே எம்பார கோஷ்டியிலே 'இவ்வாத்மாவுக்கு ப்ரதமகுரு ஆர்?' என்று பிறந்ததாய், இருந்த முதலி களிற் சிலர், 'ஆசார்யனன்றோ' என்றார்கள்; சிலர் 'ஆசார்யன்ஸ்ரீபாதத்திலே ஆஶ்ரயிக் கப்போரு' என்று அழைத்துக்கொண்டுபோய்ச் சேரவிட்ட ஸ்ரீவைஷ்ணவன் ப்ரதம குரு என்றார்கள்; 'அங்ஙனன்றுகாண், அவன்இவனை அழைத்தாலும் இவன் 'அல்லேன்' என்னாதபடி "இசைவித்தென்னை" என்கிறபடியே அகவாயிலேயிருந்து இசைவித்த ஸர் வேஶ்வரன்காண் ப்ரதமகுரு' என்று அருளிச்செய்தார். 'அகன்ற நம்மை அவன் திருவடி களிலே சேரவிட்டது நெஞ்சிறே' என்று இவர் திருவுள்ளத்தைக் கொண்டாடப் புக்க வாறே, 'நீர் வழி போவாரைக் கொண்டாடுகிறதேன் அடியறியாதே?' என்ன, ஆராய்ந்த வாறே, அதுக்கும் அடி அவனாயிருந்தது; 'நடுவே நெஞ்சைக் கொண்டாடினோ மித்தனை யாகாதே' என்று, அத்தைவிட்டு - 'என்னையும் இசைவித்த ஸர்வேஶ்வரனைக் கொண்டா டீர்' என்ன, தந்திருவுள்ளத்தை விட்டு, ஸர்வேஶ்வரனைக் கொண்டாடுகிறார்.

[ஒத்தாரா மிக்காரை யிலையாய மாமாய] - என்னை இப்படி விஷயீகரித்த நீதான் ஒருகுறைவாளனாய்ச் செய்தாயோ? ஶ்ரியঃபதிக்கும் தன்னால் கழிக்கவொண் ணாதபடி யிருப்பதொரு தாரித்ர்ய முண்டு: "ந தத்ஸமஶ்சாப்யதிகஶ்ச த்ருஶ்யதே" (நதத்

*இரண்டாம்பாட்டு - ஒத்தார் இதயாதி. 'அறியாதன அறிவித்து' என்ற பதததிலே நோக்காக ஐதிஹ்யம்-இப்பாட்டு இத்யாதி. பிறந்ததாய் இதி-'அறியாதனவறிவிததததா' என்று - ஸாக்ஷாதநுபதேஷ்டாவான ஈஶ்வரனிடததிலும் ஆசார்யதவம் ப்ரஸ்துதமாகையாலே ஆசார்ய பஹுத்வம் தோற்றுகையாலே, அந்த ப்ரஸங்கததிலே, பிதருமாதுலாத்யநுபதேஷ்டாக்களிலும், காயத்ர்யுபதேஷ்டாக்களிலும், பின்னையும் மந்த்ரோபதேஷ்டாக்களிடத்திலும் குருஶப்தப்ரயோ கம் காண்கையாலே, இவர்களிலே உத்தேஶ்யரான ப்ரதமகுருக்கள் ஆரென்று விமர்ஶம் பிறந்ததா யென்றபடி. ஆசார்யனன்றே என்றார்கள் - 'ஆசார்யன் ப்ரதமகுரு' என்பார்க்கு - குருபரம்பரா நு ஸந்தாநம் ஆலம்பநம். ஸ்ரீ வைஷ்ணவன் பிரதமகுரு என்றார்கள் - 'ஸ்ரீ வைஷ்ணவன் ப்ரதமகுரு' என்பார்க்கு - "ஸாத்விகைஸ்ஸம்பாஷணம் ஸாத்விகைஸ்ஸஹ வாஸஶ்ச" இதிவசநம் ஆலம்ப நம். சீழ்ப்பாட்டோடே இப்பாட்டுக்கு ஸங்கதி - அகன்ற இதயாதி. கொண்டாடப்புக்கவாறே, 'அடியறியாதே நீர் வழிபோவாரைக் கொண்டாடுகிறதென்? அததைவிட்டு என்னையும் இசைவித்த ஸர்வேஶ்வரனைக் கொண்டாடீர்' என்ன, ஆராய்ந்தவாறே அதுக்கடி அவனாயிருந்தது: 'நடுவே நெஞ்சைக்கொண்டாடினோ மிததனையாகாதே' என்று தந்திருவுள்ளததை விட்டு ஸர்வேஶ்வரனைக் கொண்டாடுகிறாரென்று வாக்யத்தை அர்வயித்துக்கொள்வது. அத்தை - என்னைக்கொண்டாடு கிற அத்தை.

'ஒத்தார்மிக்காரையிலையாயமாமாய' என்று ஸம்போதிக்கிறவருடைய ஹார்தஹாவம்- என்னை இப்படி இத்யாதி. இப்படி விஷயீகரித்த என்றது - 'அறியாதனவறிவித்த' என்றத்தைப் பற்ற. இப்பதம் வர்த்வாறே எம்பார் அருளிச்செய்துபோரும் ரஸோக்தி-ஶ்ரியঃபதிக்கும் இத்யாதி வாக்யத்வயோ. ஒத்தார் இத்யாதிக்கு - ஸமரையும் அதிகரையு முடையை யல்லையாய், அபரிச் சேத்யமான ஆஶ்சர்யகுணசேஷ்டிதங்களையுடையவனே! என்று ஶப்தார்ததம். இல்லாதவனை 'தரித்ரன்' என்று சொல்லுவர்களிறே. அது எது? என்ன, ந தத்ஸம இத்யாதி. இயம்ஶ்ருதிঃ

ஸமஶ்சாப்யதிகஶ்ச த்ருஶ்யதே) என்கிறபடியே ஸமாதிகதரித்ரனாயிருக்கும். [மாமாய]- இது என்ன ஆஶ்சர்யந்தான்! [ஒத்தாய் எப்பொருட்கும்] - நீ யாராய் என்பட்டாய்? ஸமாதிக தரித்ரனா யிருக்கிற நீயே இதரஸஜாதீயனாய வந்து அவதரித்தாய். [எப்பொருட்கு மொத்தாய்] - ப்ரஹ்மருத்ரர்கள் நடுவே விஷ்ணுநாமாவாயும், இந்த்ராநுஜனாயும்; ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைப்பண்ணியும், திர்யக்குக்களோடொக்க மஹாவராஹமாய், ஸ்த்தாவரங்களோடொக்க குப்ஜாம்ரமாயும் நிற்கும் நிலை. குப்ஜாம்ரமாய் நின்றதுக்குக் கருத்து - 'சேவலேநின்றால் பெண்ணுக்கும் பேதைக்கும் எறவொண்ணாது' என்று எல்லார்க்கு மொக்க ஸுலபனாகைக்கு. இப்படி நிற்கிறதேன்? என்னில்; மேன்மையோடேவரில் 'கிட்டவொண்ணாது' என்று அகலுவர்கள்; தாழவிட்டுவரில் காற்கடைக்கொள்ளுவர்கள்; ஆகையாலே, ஸஜாதீயனாய் வந்து அவதரிக்கவேணும்; "ப்ரஹ்மேஶமத்யகணநாகணநார்க்யபங்க்தாவிந்த்ராநுஜத்வமதிதேஸ்தநயத்வயோகாத் | இக்ஷ்வாகுவம்ஶயதுவம்ஶஜநிஶ்ச ஹந்த ஶ்லாக்யாங்க்ரிண்யநுபமஸ்ய பரஸ்ய தாம்நஃ" (ப்ரஹ்மேஶமத்யகணநாகணநார்க்கபங்க்தாவிந்த்ராநுஜத்வமதிதேஸ்தநயத்வயோகாத், இக்ஷ்வாகு வம்ஶயதுவம்ஶஜநிஶ்ச ஹந்த ஶ்லாக்யாங்க்ரிண்யநுபமஸ்ய பரஸ்யதாம்நஃ) என்னக்கடவதிறே. இப்படி அவதரித்துச் செய்ததேன்? என்னில்,— [உயிராய்] - இச்சேதநன்தான் தனக்குப் பார்க்கும் ஹிதத்தையும் பார்க்கக்கடவனா யிருக்கை. தாரகனா யென்னவுமாம். [என்னைப்பெற்ற அத்தாயாய்] - தானுண்டாகிலிறே தான் தனக்கு ஹிதம் பார்ப்பது.

ஶ்வேதாஶ்வதரே (கசு). ஸமாப்யதிகராஹித்யேபி ஸ்வவிஷயீகாராநுகுணகல்யாண குண வத்தாம் பராம்ருஶந் 'மாமாய' என்றதுக்கு ஹாவம் - இது என்ன ஆஶ்சர்யந்தான் என்று. இப்போது, 'மாமாய' என்றது - கீழுக்கு ஶேஷம். ஒத்தார்மிக்காரையிலையாய - ஒத்தாய் எப்பொருட்குமென்று கீழேயுங் கூட்டி ஹாவம்-நீயாராய் இத்யாதி. இப்போது 'மாமாய' என்றது - மேலுக்கு ஶேஷம். நீ யாராய் என்பட்டாய் என்றது - நீ ஒரு காபுருஷனாய் இப்பாடுபடுகிறாயோ? என்றபடி. விவரணம் - ஸமாதிக இத்யாதி. 'ஒத்தார்மிக்காரையிலையாய' என்றதுக்கு - 'அறியாதனவறிவித்து' என்றத்தைப் பற்றக் கீழே ஒரு தாத்பர்யம் 'என்னை இப்படி' இத்யாதி வாக்யத்திலே அருளிச்செய்து, இவ்வாக்யம் - 'ஒத்தார்மிக்காரையிலையாய' என்றதுக்குத் தாத்பர்யாந்தரமாகக் கண்டுகொள்வது. ஸகலபதார்த்தங்களிலும் ஒத்தவனாம் ப்ரகாரத்தை அருளிசசெய்கிறார் - ப்ரஹ்மருத்ரர்கள் இத்யாதி. இவ்விடத்திலே - "[illegible] | [illegible]" என்றது அநுஸந்தேயம். இப்படிநிற்கிறது - எப்பொருட்கும் ஸஜாதீயனாய் நிற்கிறது. அப்படி தேவதிர்யகாதி ரூபேண அவதரித்தானோ? அப்படி அவதரித்தால் ஜந்மநிபந்தநமான தோஷஸம்ஸர்க்கம் வாராதோ? என்ன, ப்ரஹ்மேஶ இதி. அதிமாநுஷஸ்தவே (கசு) [illegible] "க்ஷிதிபதநாதஹம்விஷ்ணோஃ" இதி. ஜநிஶ்ச - ஜந்மமும். ஜநிமி - ஜந்மாதி. அநுபமஸ்ய உபமாநரஹிதஸ்ய. பரஸ்யதாம்நஃ - நிரவதிகதேஜோரூபமான ஸர்வஸ்மாத்பரனுக்கு. ஶ்லாக்யாநி - தோஷாவஹங்களன்று. 'உயிர்' என்று - ஆத்மாவையும், பிராணனையுஞ் சொல்லுகிறது. மாதாபிதாக்கள் செய்யும் க்ருத்யத்தையும், ஆசார்யன்செய்யும் உபகாரத்தையும் தமக்குச் செய்ததாக மேல்சொல்லுகையாலே, இதுவும் - தமக்குச்செய்ததோ ருபகாரமாகவேணு மென்று விவக்ஷித்து அருளிச்செய்கிறார் - இச்சேதநன் இத்யாதி. 'தாரகனாய்' என்ற பக்ஷத்திலும் - அந்தர்யாமியாய் நின்று தாரகனுமளவன்றிக்கே, அவர்கள் த்ருஷ்டிகோசரனாய்க்கொண்டு தாரகனாயிருக்கையைச் சொல்லுகிறதென்று யோஜிக்கக்கடவது. 'உயிராய்' என்றது போராதோ? தாயாய்த்தந்தையாய் நிற்கையிலே ஆதிக்யமெது? என்ன, தானுண்டாகில் இத்யாதி. 'பெற்ற' என்றும் 'அ' என்றுஞ் சொல்லுகிறதுக்கு ஹாவம் -

வளர்த்துக்கொண்ட தாயன்றிக்கே, 'பெறவேணும்' என்று நோன்புநோற்றுத் தன் சரீரத்தை யொறுத்துப்பெற்று, இவன் ப்ரியத்தையே நடத்தக்கடவ தாயாய் [தந்தையாய்]- இப்படி நோன்பு நோற்று வருந்தி வரங்கிடந்து பெற்ற தாயும் இட்டுவைக்கைக்கு ஒருபை மாத்ரமாம்படி, இவனுக்கு உத்பாதகனாய் ஹிதம்பார்க்குந் தந்தையாய். அவ்வளவன்றிக்கே, [அறியாதன அறிவித்து] - "ஶரீரமேவ மாதாபிதரௌ ஜநயத:" (ஶரீரமேவ மாதாபிதரௌஜநயத:) என்னுமளவன்றிக்கே, ஜ்ஞாநவிகாஸத்தைப் பண்ணித்தரும் ஆசார்யனுமாய்; "ஸ ஹி வித்யாதஸ்தம் ஜநயதி தச்ச்ரேஷ்டம் ஜந்ம" (ஸஹிவித்யாதஸ்தம்ஜநயதிதச்ச்ரேஷ்ட்டம்ஜந்ம) என்கிறபடியே. "ஏதத் வ்ரதம் மம" (ஏதத்வ்ரதம்மம); "மாமேகம் ஶரணம் வ்ரஜ" (மாமேகம்ஶரணம்வ்ரஜ) என்னுமவனிறே. [அத்தா] - மஹோபகாரகனானவனே! இவ்வுபகாரங்களை உடையவனாகையாலே சேப்தா னென்கிறார். "மாதா பிதா ப்ராதா நிவாஸ: ஶரணம் ஸுஹ்ருத் கதிர்நாராயண:" (மாதாபிதாப்ராதா நிவாஸஶ்ஶரணம் ஸுஹ்ருத் கதிர்நாராயண:) என்கிறார். * "பெற்றதாய் நீயே பிறப்பித்ததந்தை நீ மற்றையாராவாரும் நீ" என்றாரிறே [நீசெய்தன] — ஒன்று இரண்டாகிலிறே 'இன்னது' என்னலாவது; ஆகையாலே, 'நீசெய்தன' என்றுமித்தனை. ஸ்வாமியான நீ ஶேஷபூதனான என்பக்கல் பண்ணின உபகாரங்களை அடியேன் அறியேனே; உபகரித்த நீ அறியில்அறியுமித்தனை; என்றுற் சொல்லித் தலைக்கட்டப்போமோ அநுபவித்துக் குமிழிநீருண்டுபோமித்தனை யொழிய என்கிறார். (உ)

வளர்ந்துக்கொண்ட இத்யாதி. யாந்ரம் என்றது-"மாதாபிதா ஸஹஸ்ரேப்யோ வத்ஸலதர:" என்றத்தைப்பற்ற. இப்போது, 'ஆசார்யனுமாய்' என்கைக்கு - ஆசார்யன் மாதாபிதாக்களிலும் பற்றப் பண்ணும் ஆதிக்யம் ஏது? என்ன, ஶரீரமேவ இத்யாதி. 'ஆசார்யன் ஜ்ஞாநப்ரதாநம்பண்ணும்' என்னுமதுக்கு ப்ரமாணம் - ஸஹிவித்யாத இத்யாதி. ஆபஸ்தம்பதர்மே, "ஸ ஹி வித்யாதஸ்தம் ஜநயதி தச்ச்ரேஷ்டம் ஜந்ம ஶரீரமேவ மாதாபிதரௌ ஜநயத:" - யாதொரு காரணத்தாலே தர்மத்தை அநுஷ்டிப்பிக்கிறான் ஆசார்யன், அவன்பொருட்டு ஒருகாலும் அபசாரப்படக்கடவனல்லன்; அந்த ஆசார்யன் அந்த சிஷ்யனை வித்யையாலே ஜநிப்பிக்கிறான்; அந்தவித்யையால் வந்த ஜந்மமே ஶ்ரேஷ்டமன்று அர்த்தம். அறியாதன அறிவித்தானோ? என்ன, "ஏதத் வ்ரதம்" இத்யாதி. 'அத்தா' என்கிறதுக்கு அர்த்தாந்தரம் - மஹோபகாரகனானவனே என்று. அர்த்தாந்தரம் - இவ்வுபகாரங்களை இத்யாதி. அத்தன் - ஸ்வாமி. இவ்வுபகாரங்களை யென்றது - ப்ரியஹிதகரணோபதேசங்களை. ஆக, 'அத்தா' என்கிறதுக்கு - ஜ்ஞாநப்ரதத்வமும், உபகாரகத்வமும், ஸ்வாமித்வமும் என்று அர்த்தத்ரயம். 'தாயாய்' இத்யாதி - ஸர்வவிதபந்துத்வத்துக்கும் உபலக்ஷணமென்கிறார் - மாதாபிதா இத்யாதி. ஸுபாலோபநிஷத்து இயம்ஶ்ருதி:. ஸர்வவிதபந்துத்வத்துக்கு ப்ரமாணாந்தரம் - பெற்றதாய் இத்யாதி. தாய்போல் பரிவனானவனும் நீ. உத்பாதகனான பிதாவைப்போலே ஹிதபரனானவனும் நீ, மஹோபகாரகரான ஆசார்யர்களைப்போலே அறியாதன அறிவிப்பாயும் நீயே யென்கை. 'செய்தன' என்கிற பஹுவசநத்துக்கு பாவம் - ஒன்றிரண்டு இத்யாதி. 'அத்தா, அடியேன்' என்கிற பதங்களை உட்கொண்டு அருளிச்செய்கிறார் - ஸ்வாமியான இத்யாதி 'அடியேன்' என்கிறதுக்கு பாவம் - உபகரித்த இத்யாதி 'அடியேனறியேன்' என்கிறதுக்குத் தாத்பர்யாந்தரம் - அநுபவித்து இத்யாதி. குமிழிநீருண்கை - தலஸ்பர்ஶியாக அவகாஹிக்கை. க்ரமேண அந்வய:. (உ)

---

* பெரிய திருவந்தாதி - ௫.

மூன்றாம்பாட்டு.

அறியாக்காலத்துள்ளே அடிமைக்கணன்புசெய்வித்து
அறியாமாமாயத்து அடியேனைவைத்தாயால்
அறியாமைக்குறளாய் நிலம்மாவலிமூவடியென்று
அறியாமைவஞ்சித்தாய் எனதாவியுள்கலந்தே.

ஆ.—(அறியா.) தந்திறத்தில் எம்பெருமான் செய்தருளின நன்மைக பேசுகிறார்.

ஒ.—மூன்றாம்பாட்டில், 'உமக்கு என்ன உபகாரஞ்செய்தோம்?' என்ற பெருமான் கேட்க, 'என்பக்கல் யோக்யதையின்றிக்கேயிருக்க, உன்னோட்டைக்கல என்னை நிலவனாக்கி வைத்தாய்' என்கிறார்.

[அறியாவென்று தொடங்கி] - மிகவும் அறிவுகேட்டைப் பண்ணவற்றான ஸாரத்திலே யிருக்கிற என்னை அறிவுபிறக்கைக்கு ஸம்பாவனையில்லாத பால்யத் அடிமையிலே ஸ்நேஹத்தைப் பிறப்பித்துவைத்தாய். [அறியாமையென்று தொட அழகிலே மஹாபலி மதிமயங்கி 'ஈஸ்வரன்' என்று ஆராயாதபடி வாமநனாய் மநோ மான பேச்சாலே மஹாபலி மதிமயங்கும்படி பண்ணி அவன் ஸர்வஸ்வாபஹாரத் பண்ணினாய். [எனதாவியுள் கலந்தே என்றது] - அப்படியே என்னுள்ளே புகுந்த னுடைய குணசேஷ்டிதங்களைக் காட்டி வசீகரித்து.

ப.—அநந்தரம், தன்பக்கலிலே அவன் தம்மை அபிநிவேசிப்பித்தப அருளிச்செய்கிறார்.

அறியாமை - (பிறர் தன்னை உள்ளபடி அறியாதபடி வடிவழகாலே) ம கின, குறளாய்-வாமநனானவனாய், நிலம் மாவலி மூவடி யென்று - நிலம் மாவலி என்று அநந்விதபதமாய் அபரிஸமாப்தமானவாக்யத்தாலே, அறியாமை- '(இவன்ஈச என்று அறிவிக்கிற ஶுக்ராதிகள் பாசுரமும்) நெஞ்சில்படாதபடியாக, வஞ்சித் (அவன் 'தன்னது' என்றிருந்த ஜகத்தை) வஞ்சித்துக்கொண்டவனே' எனதாவி கலந்து - (இவ்வபதாநத்தை எனக்கு ப்ரகாசிப்பித்து) என்னெஞ்சுக்குள்ளே கலந் கணக்கிலே, அறியா - அறியாமையை விளைப்பதாய், மா - துஸ்தரமான பெரும யுடைத்தாய், மாயத்து-மாயாகார்யமான ஸம்ஸாரத்திலே; (ஸ்வதஸ்ஸித்தமான த்வஸம்பந்தம் பற்றாசாக), அடியேனை-என்னை, அறியாக்காலத்துள்ளே - அந்தஸே அறிகைக்கு ஸம்பாவனையில்லாக் காலத்திலே, அடிமைக்கண் - தத்பலமான ஶேஷ யிலே, அன்பு - ஆதரத்தை, செய்வித்துவைத்தாயால் - பிறப்பித்துவைத்தாயிறே, உன்னுடைமை நழுவவிடாமைக்கிறே யென்று கருத்து.

இ.—மூன்றாம்பாட்டில், நாம் உமக்கு என்ன உபகாரம்பண்ணினோம்? யோக்யதையின்றிக்கேயிருக்க, உன்திருவடிகளிலே கைங்கர்யத்திலே நிலவனாக்கி வ யென்கிறார்.

[அறியாக்காலத்துள்ளே இத்யாதி] - அறியாமாமாயத்து அடியேனை - அறியாக்காலத்துள்ளே அடிமைக்கண் அன்புசெய்வித்து - வைத்தாய். அறிவுகேட்டைப் பண்ண வற்ருய் துஸ்தரமான ஸம்ஸாரத்திலே யிருக்கிற என்னை. அடியேன் என்கிறது - அஹம்சப்த பர்யாயம். அறிவுக்கு ஸம்பாவனையில்லாத பால்யத்திலே ப்ராப்தி பலமான அடிமையிலே ஸ்நேஹத்தைப் பிறப்பித்து வைத்தாய். அடியேனென்கிறது - 'நமக்கு அர்ஹமான வஸ்து இப்படி எளிவரவுபடுவதே!' என்று செய்தருளின அத்தனையிறே யென்றுமாம். இங்கேவைத்து பகவதவிஷயத்தை அவகாஹிப்பித்தது - அத்தாலே ஒரு தேசவிசேஷத்தில் பெறும்பேறு ஸாதமிகம்கைக்காகவும், ப்ராப்யத்தில் த்வரை விஞ்சுகைக்காகவுமிறே; போக்யதை மிகக்கிருக்கிறபடி. மேல் தம்மை வஸீகரித்தபடிக்கு நிதர்ஸநம் - [அறியாமைஇத்யாதி] - தன்னெஞ்சை யொளிப்பாரைப்போலே பிராட்டியும் அறியாதபடி. [குறளாய்] - சேர்ப்பால்போலே போக்யதை மிக்கிருக்கிறபடி. தன்னைத்தாழவிட்டு அர்த்தியானபடி. "நிலம்" என்றால், அவன்முகம்பாராமையாலே, 'மாவலி' என்றான். முதற்பேர்சொல்லுவாரில்லாமையாலே அவன்பார்த்து, 'உனக்கு வேண்டுவதென்?' என்ன. 'மூவடி' என்றான். இப்படி அநேகவிதமான பேச்சாலே வசீகரிக்கை. [அறியாமை வஞ்சித்தாய்] - சுக்ராதிகள் 'இவன் ஸர்வேஸ்வரன், தேவகார்யஞ்செய்ய வந்தான்' என்ற வார்த்தை செவிப்படாதபடி தன் பேச்சாலே வஞ்சித்தான். [எனதாவியுள்கலந்தே] - அந்யபரமான என் ஆத்மாவிலே புகுந்து, தன் குணசேஷ்டிதாதிகளாலே வசீகரித்து. அறியாமைக் குறளாய் நிலம்மாவலிமூவடி யென்று அறியாமை வஞ்சித்தாற்போலே எனதாவியுள் கலந்து அறியாமாமாயத்தடியேனை அறியாக்காலத்துள்ளே அடிமைக்கணன்பு செய்வித்து வைத்தாயால்

ஈடு.—மூன்றும்பாட்டு. ஆளவந்தார் அருளிச்செய்ததாகத் திருமாலையாண்டான் பணிக்கும்படி:— 'அறிவுநடையாடாத தசையிலே ஸம்பந்தஜ்ஞாநத்தைப் பிறப்பித்து, பிறந்த ஜ்ஞாநத்தை யழிக்கக்கடவதான தேஹஸம்பந்தத்தோடே பின்னையும் வைத்தாய் என்கிற இழவாலே சொல்லுகிருர்' என்றும். இத்தை எம்பெருமானுர் கேட்டருளி, 'முன்னிற்பாட்டுக்களும் பின்னிற்பாட்டுக்களும் ப்ரீதியோடே நடவாநிற்க, நடுவே அப்ரீதி தோற்றச் சொல்லுமது சேராது; ஆனபின்பு, இங்ஙனேயாமித்தனை - 'அறியாமாமாயத்தடியேனை - அறியாக்காலத்துள்ளே அடிமைக்கணன்புசெய்வித்து - வைத்தாயால் - என்கிருர்' என்று இத்தையும் ஒருவுபகாரமாக்கி அருளிச்செய்தார். "அத்தா நீசெய்தன" என்று - நாம்பண்ணின உபகாரங்களைச் சொல்லாநின்றீர்; அவற்றிலே நீர் மதித்திருப்பதொரு உபகாரத்தைச் சொல்லிக் காணீர்-என்ன, அத்தைச் சொல்லுகிருர்.

மூன்றும்பாட்டு - அறியாக்காலம் இத்யாதி. ஆளவந்தார் நிர்வாஹத்தில் - கீழிரண்டு பாட்டிலும் கலந்த கலவி மாநஸாநுபவமாத்ரமாய் பாஹ்யஸம்ஸ்லேஷயோக்யமல்லாமையாலே, 'இதுக்குஅடி ப்ரக்ருதிஸம்ஸர்க்கம்' என்று வெறுக்கிருர் இப்பாட்டிலென்று ஸங்கதி கண்டுகொள்வது. 'கையார்சக்கரத்திலே கீழும் மேலும் ஹர்ஷமாயிருக்க, "என்கொள்வன்" என்கிற இரண்டு பாட்டாலும் - கீழ்ப்பிறந்த ஸம்ஸ்லேஷம் பாஹ்யஸம்ஸ்லேஷயோக்யமல்லாமையாலே, 'இதுக்கு உடலான ப்ரக்ருதியோடே வைத்தாய்' என்று வெறுத்தாரிறே; இங்கும் அப்படியே வெறுக்கிருர்' என்று அருளிசசெய்வர். எம்பெருமானுர் நிர்வாஹத்திலே அவதாரிகை - அத்தாநீ இத்யாதி.

[அறியாக்காலத்துள்ளே] - "பால்யாத்ப்ரப்ருதி ஸுஸ்நிக்த:" (பால்யாத்ப்ரப்ருதி ஸுஸ்நிக்த:) என்கிறபடியே, அறிவுநடையாடாத பால்யத்திலே [அடிமைக்கணன்பு செயவித்து] - அடிமைக்கண் - அடிமையிலே "அஹம் ஸர்வம் கரிஷ்யாமி" (அஹம்ஸர்வம் கரிஷ்யாமி) என்கிறபடியே, அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தரான நித்யஸூரிகளுடைய பரிமாற்றத்திலேயன்றோ என்னை அந்வயிப்பித்தது [அன்புசெய்வித்து] - "வரில்போகடேன், கெடில் தேடேன்" என்றிருக்கையன்றிக்கே. "குருஷ்வ" (குருஷ்வ) என்னும்படி பெறுவிடில் முடியும்படியன்றோ பண்ணிற்று? [அறியா இத்யாதி] - பிள்ளாய் ஊமத்தங்காய் தின்று ப்ரமித்தாரைப்போலே, அசித்ஸம்ஸ்ருஷ்டனாயிருக்கிற என்னைக் கிடீர் இப்படி பண்ணிற்று. அறிவுகேட்டைப் பண்ணக்கடவதான ப்ரக்ருதிஸம்ஸ்ருஷ்டனாயிருக்கிற அடியேனை, 'இது எங்கே சிறைப்பட்டாலும் நல்லது, நம்வஸ்துவன்றோ' என்று. [வைத்தாயால்] - இத்தண்ணீர்ப்பந்தலை வைத்தாயாலென்கிறார். அறியா மாமாயத்து அடியேனை - அறியாக்காலத்துள்ளே அடிமைக்கண் அன்புசெய்வித்து வைத்தாயால் இதுக்கு நல்லநிதர்சநமுண்டே. [அறியாமை இத்யாதி] - நெஞ்சறியாதபடி கார்யம் செய்வாரைப்போலே, திருமாரிலிருக்கிற நாய்ச்சியாருங்கூட அறியாமே வாமநவேஷத்தைப் பரிக்ரஹித்து "கோள்வனுன்மாவலி" என்றாறபோலே. நிலம்மாவலிமூவடியென்று - அநந்விதபாஷணங்களைப்பண்ணி பண்டும் இரந்து பழக்கமுண்டாகிலிறே அந்விதபாஷணம்பண்ணுவது. [அறியாமைவஞ்சித்தாய்] - சுக்ராதிகள 'இவன் ஸர்வேஶ்வரன், தேவ

இததால் ஹாவம் - அஹம்ஸர்வம் இத்யாதி. அன்புஎன்று - பெறில் ஜீவிததல, பெறுவிடில முடியுமதான ஸங்காநந்தரஹாவிகாமததைச சொலலுகிறது. "குருஷ்வ" என்றதில் "வெயஶ்ரூம் நேஹவிஷ்யதே" என்றது இவ்விடததுககுஉபயுகதம் அயோத்யாகாண்டேங்க-உஉ "குருஷ்வ மாமநுசரம் வைதர்ம்யம் நேஹ வித்யதே । க்ருதார்தோஹம் பவிஷ்யாமி தவ சார்த்தப்ரகல்பநே" "பால்யாத்ப்ரப்ருதி" "அஹம்ஸர்வம் கரிஷ்யாமி" இதயாதி, பூாவமேவ மஹாப்ரவேஶே லிகிதம். இதுக்குத தாதபாயம் - பிளளாய் இதயாதி பிள்ளாயென்றது - வாாததைபபாடு. அசித்ஸம்ஸ்ருஷ்டனும் - தத்ப்ரயுக்தமௌட்யபாயந்தம் விவக்ஷிதம். ஶப்தாாததம - அறிவுகேட்டை இதயாதி. 'அடியேன்' எனறதுககு ஹாவம - இதெங்கே இதயாதி. இாதவாகயம - எமபெருமானுர் நிர்வாஹததிலே யானபோது, அதிஜுகுப்ஸநீயமான அசிதஸம்ஸ்ருஷ்டனேயாகிலும் ஸம்பந்தததாலே அஙகீகரிதது அடிமைக்கண அன்பு செய்வித்து வைததா யெனறு தாதபர்யம. ஆளவந்தாா நிர்வாஹததிலே யானபோது, 'நமககுப் பாதநதரமன்றோ, எஙகே சிறைப்பட்டாலும கரமேண அஙகீகரிககிறோம்' என்று வைததாயாலென்று வெறுககிறாரென்று கருதது. சிறைப்படுகை - ஹேயஸம்ஸ்ருஷ்டமாகை. அன்பு செயவிததாயால் என்ன அமைந்திருகக, 'வைததாயால' என்கையாலே - ஒரு கௌரவம தோற்றுகிறதிறே, அததை அருளிச செய்கிறார் - இத்தண்ணீர்ப்பந்தலை இத்யாதி. இது - எம்பெருமானாா நிாவாஹததைப் பற்றி உபகாரஸ்ம்ருதியிலே. அநவயஙகாட்டுகிறார் - அறியாமாமாயத்து இதயாதி. மேலே 'அறியாமை' என்றிருக்கையாலே, அததோடு புநருக்தமாகாதபடி வ்யாகயாநம் பணணுகிறார் - நெஞ்சறியாத இதயாதி. 'அப்போது பிராட்டியுணடோ?' என்ன, ரஸமாக, "க்ருஷ்ணாஜிநே நவஸம்வ்யாணே யஜ்ஞோபவீதிநம்" என்னக்கடவதிறே - என்று அருளிச செயவா. அநந்வயமாகச சொல்லுகைக்கு ஹேது - பண்டும் இத்யாதி. "ஶ்ருதஸ்ய ஶ்வோ ப்ருதிஷேய:" இதி ந்யாயேந, அறியாமைக்கு ப்ரஸங்கம் ஸம்பாதயதி - ஶுக்ராதிகள் இதயாதி "அறியாமை" இதயாதிகம் - த்ருஷ்டாந்தார்தத

கார்யம்செய்ய வந்தான்; உன்ஸர்வஸ்வத்தையும் அபஹரிக்கவந்தான்' என்றால், அவர் கள்பாசுரஞ் செவிப்படாதபடி தன் பேச்சாலே அவனை அறிவுகெடுத்து வஞ்சித்தானாயிற்று. அப்படியே, [எனதாவியுள்கலந்து]-நானிருக்கிற இடத்தளவும் வந்து, என்னோடேகலந்து. அத்யந்தம் அந்யபரனான என் ஆத்மாவிலே புகுந்து உன்குணசேஷ்டிதங்களாலே வசீகரித்து அறியாமைக்குறளாய் நிலம் மாவலி மூவடியென்று அறியாமை வஞ்சித்தாற்போலே, எனதாவியுள்கலந்து – அறியாமாமாயத்து அடியேனை - அறியாக்காலத்துள்ளே அடிமைக்கண் அன்புசெய்வித்து வைத்தாயால் என்று அந்வயம் (௩)

நான்காம்பாட்டு.

எனதாவியுள்கலந்த பெருநல்லுதவிக்கைம்மாறு
எனதாவிதந்தொழிந்தேன் இனிமீள்வதென்பதுண்டே?
எனதாவியாவியும்நீ பொழிலேழுமுண்டவெந்தாய்!
எனதாவியார்யானார்? தந்தநீ * கொண்டாக்கினையே.

ஆ:—(எனதாவி.) இப்படி எம்பெருமானோடு கலந்த கலவியாலுள்ள நிரவதிகப்ரீதியாலே அறிவழிந்து, 'இவ்வாத்மா தம்முடையதன்று' என்று நிரூபிக்கமாட்டாராய், அவன் தம்மோடுகலந்த இப்பெருநல்லுதவிக்குக் கைம்மாறாகத் தம்முடைய ஆத்மாவை அவனுக்கு மீளாவடிமையாகக் கொடுத்து, பின்னையும் தம்முடைய ஸ்வரூபத்தை உள்ளபடி விவேகித்து, 'தருகிற நான் ஆர்? தரப்புகுகிற இவ்வாத்மா ஆர்? பண்டே உனக்குச் சேஷமாயிருக்கிற இவ்வாத்மாவை நீ கொண்டருளினாயத்தனையிறே' என்கிறார்.

ஓ:—நாலாம்பாட்டில், தமக்கு எம்பெருமான் பண்ணின உபகாரத்துக்கு ப்ரத்யுபகாரம் காணாதே தடுமாறுகிறார்.

[எனதாவியுள்கலந்த என்று தொடங்கி] - அத்யந்தநிக்ருஷ்டனான என்னுடைய ஆர்த்தி தீரும்படி உன்பேறாக வந்து கலந்த மஹோபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமாக என் ஆத்மாவை உனக்கே தந்தேன். [எனதாவியென்று தொடங்கி] - என்னாத்மாவுக்கு சேஷியாயிருக்கிற நீ ப்ரளயம் நலியாதபடி லோகங்களையெல்லாம் திருவயிற்றிலே வைத்துக்கொண்டாற்போலே உன்னைப் பிரிந்து நான்பட்ட வ்யஸநமெல்லாம் தீரும்படி என்னோடே வந்து கலந்து என்னை அடிமைகொண்டவனே! கொடுக்கப்படுகிறேனாய் நிற்கிற என்னோடும் கொடுக்கிறேனாய் நிற்கிற என்னோடும் எனக்கு என்ன அடைவுண்டு? உன்னதை நீ கொண்டபின்பு

மென்கிறார் - அப்படியே இத்யாதி. நானிருக்கிறஇடத்தளவும் வந்து என்கையாலே - தாம் விமுகராயிருந்தமை தோற்றுகிறது. 'மஹாபலியை வஞ்சித்தாற்போலே என்னையும் வஞ்சித்தான்' என்று விவக்ஷித்து, வஞ்சநம் உபகாரமாம் ப்ரகாரத்தை அருளிச்செய்கிறார் - அத்யந்தம் இத்யாதி. ப்ரதிபத்திஸௌகர்யார்த்தம் அந்வயம்-அறியாமை இத்யாதி. ஆளவந்தார் நிர்வாஹத்திலே, அறியாமைக்குறளாயென்று தொடங்கி, வஞ்சித்தாற்போலே எனதாவியுள் கலந்து அறியாக்காலத்துள்ளேயித்யாரப்ய, வைத்தாயா லித்யந்வய:. (௩)

* கொண்டாய்க்கினியே என்றும் பாடமுண்டு.

ப.—அநந்தரம், இவ்வுபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமில்லை யென்கிறார்.

பொழிலேழும் - ஸமஸ்தலோகங்களும், (ப்ரளயத்திலேஅழியப்புக), உண்ட - வயிற்றிலேவைத்துநோக்கின, எந்தாய் - ஸ்வாமியே! (அப்படி நானும்அழிந்துபோகாத படி), எனதாவியுள் - (அத்யந்தஹேயமான) என்ஆத்மாவுக்குள்ளே, கலந்த - ஒருநீராகக் கலந்த, பெரு - (அது தன்பேறும்படி) பெருத்து, நல் - (நிர்ஹேதுகமாகையாலே) நன்றான, உதவி - உதவிக்கு, கைம்மாறு - ப்ரத்யுபகாரமாக, எனதாவி - என்ஆத்மாவை, தந்தொழிந்தேன் - (உனக்குத்) தந்தேவிட்டேன்; இனி - இனி, மீள்வது - (அதுக்கு) மீட்சியென்பதொன்று, உண்டே - இல்லை; (இதுதான்ஆரதென்றுஆராயில்), எனது ஆவியும் - என்னுத்மாவுக்கும், ஆவி - ஆத்மா, நீ - நீ, (ஆதலால்), எனதாவி யார்-(தரப்படுகிற) என் ஸ்வரூபத்தினுடைய கர்மத்வமும் நானிட்டவழக்கல்ல; யான்ஆர் - தருகிற என்னுடைய கர்த்ருத்வமும் நானிட்டவழக்கல்ல; தந்த - (ஞாத்ருத்வகர்த்ருத்வாதி விஶிஷ்டமான இவ்வஸ்துவினுடைய ஸத்தையை அடியிலேயுண்டாக்கித்) தந்த, நீயே - நீதானே, கொண்டாக்கினை - பின்னையும் ஸ்வீகரித்தாய். ஆதலால், உனக்கே சேஷமென்றிட்டு, எனக்கு ஸமர்ப்பணத்தில் கர்மத்வமில்லை, கர்த்ருத்வமு மில்லை. கைம்மாறு - ப்ரத்யுபகாரம்.

இ.—நாலாம்பாட்டில், தமக்குஅவன்பண்ணின உபகாரததுக்கு ப்ரத்யுபகாரங் காணுதே தடுமாறுகிறார்.

[எனதாவி] - அநாதிகாலம் ஸம்ஸாரத்திலே வாஸனைபண்ணிப்போந்த என்னோடேகிடீர் கலந்தது. வஸிஷ்டன் சண்டாள ஶ்ரேணியிலே புகுந்தாற்போலே தம்மை அநுஸந்திக்கிறார். [உள்கலந்த] - அபிமதவிஷயத்தில் அழுக்குஉகக்கும் செருக்கரைப் போலே, அதுவே ஹேதுவாகத் தன்பேறாகக் கலந்தான். "தன்னுள்ளே கலந்தொழிந்தோம்" என்கிறபடியே கலந்தபடி. [பெருநல்லுதவி] - அதாவது - தன்பேறாக உபகரிக்கை. [கைம்மாறு] - கைம்மாறாக. ப்ரத்யுபகாரம்பண்ணியல்லது தரிக்கவொண்ணாதபடி. [எனதாவிதந்தொழிந்தேன்] - நீ உன்னை எனக்காக்குகையாலே வெளிறுகழிந்த என்ஆத்மாவைத் தந்தேன். 'நெடுநாளிழந்தவராகையாலே இவர் திரியநிற்கும்' என்றுகொண்டு, இது எத்தனைகுளிக்கு நிற்கும்? என்ன, [இனிமீள்வதென்பதுண்டே] - ஸத்யோதஶாஹமாகத் தந்தேன்; 'மீள்வு' என்றோ ர்த்தந்தானு முண்டோ? 'இவரை ப்ரமத்தோடே விடுகிறதென்? என்று 'யார்பொருளை யாருக்குக் கொடுத்தீர்?' என்ன, [எனதாவியாவியும்நீ] - என்ஆத்மாவுக்குஅந்தராத்மாவாய் நிற்கிறாய் நீ; இது உனக்குஅநங்யார்ஹ ஶேஷமன்றோ? [பொழிலேழுமுண்ட வெந்தாய்] - ப்ரளயார்ணவத்திலே நஶியாதபடி ஜகத்தை ரக்ஷித்தாற்போலே நான் பிரிந்து நோவுபடாதபடி என்னோடே கலந்து அடிமைகொண்டவனே! ப்ரளயங்கொள்ளாமே நோக்குகையாலும் நீயே ஸ்வாமி யென்னவுமாம். [எனதாவியார் யானார்] - "எனதாவி" என்று - ப்ரதேயவஸ்துவான நான் ஆர்? "தந்தொழிந்தேன்" என்று - ப்ரதாதாவான நான்ஆர்? [தந்த நீ கொண்டாக்கினையே]-நீ ரென்றுஒருத்தரில்லையோ? பலபோக்தாக்கள் நீரல்லீரோ? என்ன, உன்னுடைய வஸ்துவை நீயே கொண்ட பின்பு; நித்யமான ஆத்மாவை இவன் தருகையாவதென்?என்னில்; ஸத்தை அவனிச்சாதீநமாகையாலே - 'தந்தான்' என்கிறது. "ஊஹ தவாவ தவவிஶ்வஷாய-ஶஸ்த்ர".

ஈ௫.—நாலாம்பாட்டு. "வைத்தாயால்" என்று அவன்பண்ணின உபகாரத்தை அநுஸந்தித்து இங்ஙனே கிடந்து நெஞ்சாறல் படாநில்லாதே, ப்ரத்யுபகாரமாக உம்மதாயிருப்பதொரு வஸ்துவைக் கொடுத்து நெஞ்சாறல் தீரமாட்டீரோ? என்ன, 'அப்படியேயிறே செய்வது' என்று அவன்திருவடிகளிலே ஆத்மஸமர்ப்பணத்தைப் பண்ணி அநுஶயிக்கிறார்.

[எனதாவியுள்கலந்த] - அநாதிகாலம் ஸம்ஸாரத்திலே வாஸநை பண்ணிப் போந்த என்னுடைய ஆத்மவஸ்துவிலேகிடீர் வந்து கலந்தது! [எனதாவி]-வஸிஷ்டன் சண்டாலஶ்ரேணியிலே புகுந்தாற்போலே தம்மைஅநுஸந்திக்கிறார்;†"நீசனேன்"என்றிறே தம்மைஅநுஸந்திப்பது. [உள்கலந்த] - அதுதன்னிலுங் கடக்கநின்று சில போகமோக்ஷங்களைத் தந்துபோகையன்றிக்கே, "எல்லாம் தன்னுள்ளே கலந்தொழிந்தோம்" என்னும்படி கலப்பதே! உதவி, நல்லுதவி, பெருநல்லுதவி. உதவியாவது - உபகரிக்கை. நல்லுதவியாவது - பச்சைகொள்ளாதே உபகரிக்கை. பெருநல்லுதவியாவது - தன்பேறாக உபகரிக்கை. இம்மஹோபகாரத்துக்கு, கைம்மாறாக - ப்ரத்யுபகாரமாக. [எனதாவிதந்தொழிந்தேன்] - என்னுடைய ஆத்மவஸ்துவை தேவர்திருவடிகளிலே ஸமர்ப்பித்தேன். அழகிது, இதுதான் எத்தனைகுளிக்கு நிற்கும்? என்றான் ஈஶ்வரன். [இனிமீள்வதென்பதுண்டே] — *ஸத்யோதஶாஹமாகத் தந்தேன். 'அழகிது! நீர்தாம் ஆரதை யாருக்குத் தந்தீரென்று ஆராய்ந்துபார்த்துக்காணும்' என்றான் ஈஶ்வரன் ; ஆராய்ந்தவாறே அவனதை அவனுக்குக் கொடுத்ததாயிருந்தது. [எனதாவியாவியும்நீ]-என்னுத்மாவுக்கு அந்தராத்மா

நாலாம்பாட்டு - எனதாவி இத்யாதி. 'எனதாவிதந்தொழிந்தேன், எனதாவியார் யான்ஆர்' என்றத்தைக் கடாக்ஷித்து ஶங்காபரிஹாரரூபேண ஸங்கதி - வைத்தாயாலென்று இத்யாதி. அநுஶயிக்கிறார் - அநுதபிக்கிறார். நெஞ்சாறல் - மநோதுஃகமும், விசாரமும்.

"எனதாவி" என்றதுக்கு ஹார்த்தபாவம் - அநாதிகாலம் இத்யாதி. பலிதம் - வஸிஷ்டன் இத்யாதி. 'புகுந்தாற்போலே அவன் தம்மோடே கலந்தான்' என்று தம்மை அதிநீசனாக அநுஸந்திக்கிறா ரென்றபடி. இப்படி அநுஸந்திப்பானென்? என்ன, - நீசனேன் இத்யாதி. 'உள் கலந்த' என்றதுக்கு வாஸனை - அதுதன்னிலும் இத்யாதி. கடக்கநின்று சிலபோகத்தைக் கொடுக்கையாவது - தான் ப்ராப்யனன்றிக்கேயொழிகை.கடக்கநின்று மோக்ஷத்தைக் கொடுக்கையாவது- "மோக்ஷயிஷ்யாமி", "நிவ்ருத்திஜராமரண விஷயவிமோக்ஷணம்" என்று புருஷார்த்த ப்ரதாநத்தை ஸங்கல்பித்து, அந்தரஸத்தை அநுபவிப்பியாமலிருக்கை. எல்லாம் இத்யாதி - எனதாவியி லுண்டான கலவிக்குள்ளே ஸமஸ்தரஸங்களுமாம்படி கலந்தா னென்றபடி. விஶேஷணங்களுக்கு பாவம் - உதவியாவது இத்யாதி. கைம்மாறு - கைமாறுகை. கை - கொடுக்கை. மாறு - ப்ரதியாக. ப்ரதியாகக்கொடுக்கை - ப்ரத்யுபகார மென்றபடி. தன்பேறாக - இவன் அர்த்தியாதிருக்க, ஸ்வப்ரயோஜநமாக. அழகிது - ஸம்யக் என்றபடி. எத்தனைகுளிக்கு என்றது - குளியென்று - ஸ்நாநமாய், நாலு ஆறு குளிபர்யந்தம் புஷ்பாங்கராகாதி பரிமளம் இருக்குமாபோலே இதுவும் எத்தனைகாலமிருக்கு மென்றபடி; ஸ்த்தாயித்வாபாவத்திலே நோக்கு. ஸத்யோதஶாஹம் என்றவிடத்திலே - "க்ரயஶ்ச விக்ரயஶ்சைவ தத்த்வஸ்ய ததைவ ச | தஶாஹாந்நிவர்த்தந்தே நவஸ்த்ரா ..." என்றத்தை நினைப்பது. நவவஸ்த்ராஸ - ந்ருபவஸ்த்ராஸ உத்யமாஃ. "தஶாஹாஸ" என்ற வளவன்றிக்கே ஸத்யோதஶாஹ மென்றபடி. மேலுக்கு அவதாரிகை - அழகிது இத்யாதி. "ஆராய்ந்தவாறே" இத்யாதி வாக்யாநந்தரம் - "பகவதீயமான" இத்யாதி வாக்யத்தை அநுஸந்தித்து, அநந்தரம், "எனதாவியாவியும்நீ" என்று பதோபாதாநம்பண்ணி, "என்னுத்மாவுக்கு" இத்

---

† திருவாய்மொழி ௩-௩-௪.

* க்ரய விக்ரயங்கள் பரிவர்த்தனைகள் பண்ணுமிடத்தில் பத்துநாளுக்குள்ளே யானல் மீளக்கடவது; அப்பால் மீளக்கடவதில்லை என்று சொல்லக்கடவதிறே; அப்படி இந்தப் பத்துநாளும் இன்றே சென்றதாகக் கொடுத்துவிட்டே னென்றபடி என்பது அடையவளைந்தான்.

வாய்ப் புகுந்து நிற்கிறாயும் நீயாயிருந்தாய். பகவதீயமான வஸ்துவை நெடுநாள் 'நம்மது' என்றிருந்து, இத்தை இன்று அவன்பக்கலிலே ஸமர்ப்பித்தோம்; ஸர்வஜ்ஞனானவன் என்நினைத்திருக்கும்? என்று, தாம் அத்தையறிந்து அதுக்கு லஜ்ஜிக்கிறார். ஆத்மஸமர்ப்பணம் பண்ணவிடில் ஸர்வமுக்திப்ரஸங்கமாம். ஸமர்ப்பிக்கில் அவனதான வஸ்துவை அவனுக்குக் கொடுத்ததாம்; ஆனால் செய்யஅடுப்பதேன்? என்னில்; - ப்ராந்திஸமயத்தில் ஸமர்ப்பிக்கவும் வேணும்; தெளிந்தால் 'கொடுத்தோம்' என்றுஇருக்கக்கடவனல்லன்; "மயாஸமர்ப்பித: - அதவாகிந்நுஸமர்ப்பயாமிதே" (மயாஸமர்ப்பித: - அதவாகிந்நுஸமர்ப்பயாமிதே) என்றாரிறே. [பொழிலேழுமுண்டஎந்தாய்] - ஸ்வாபாவிகமான சேஷித்வங்கொண்டு சொல்லவேணுமோ? ப்ரளயாபத்திலே வயிற்றிலேவைத்து நோக்கின அது போராதோ 'நீ சேஷி' என்கைக்கு? [எந்தாய்] - ப்ரளயாபத்திலே நசியாதபடி ஜகத்தை ரக்ஷித்தாற்போலே, பிரிந்துநசியாதபடி என்னோடே கலந்து அடிமைகொண்டவனென்றுமாம். [எனதாவியார் யானார்] - ப்ரதேயமான வஸ்து ஆரது? ப்ரதாதா ஆருடையவன்? 'நான் என் ஆத்மாவை ஸமர்ப்பித்தேன்' என்னக்கடவேனோ? [தந்தநீகொண்டாக்கினையே] - முதலி

யாதி வாக்யஞ் சொல்லிக்கொள்வது. லஜ்ஜிக்கிறார் என்றது - "எனதாவியார்யானார்" என்றத்தைப் பற்ற. இந்த ப்ரஸங்கத்திலே ஸ்வரூபசிக்ஷைபண்ணுகிறார் - ஆத்மஸமர்ப்பணம் இத்யாதி. யத்வா, "[illegible]" என்றுஇராதே, ஆத்மஸமர்ப்பணம் பண்ணுவானென்? பின்பு லஜ்ஜிப்பானென்? என்ன, - ஆத்மஸமர்ப்பணம் இத்யாதி ஆதல். அதாவது - "[illegible]" என்று சொல்லும்படியான [illegible] என்ற அத்யந்தபாரதந்த்ர்யாநுஸந்தாநதசையைப் பார்த்தால், 'அஹமத்யைவ மயாஸமர்ப்பித:' "[illegible]" என்று அநுஸந்திக்கிற கேவலசேஷத்வ ஜ்ஞாநதசையும் பாரதந்த்ர்யஜ்ஞாநகார்யமேயாகிலும், 'அதுவும் ப்ராந்திதசை' என்னும்படியாயிருக்கும் என்று அருளிச்செய்வர். "நியதஸ்வமிதி ப்ரபுத்ததீ:" என்றவிடத்தில் - த்வத்விஷயமான பாரதந்த்ர்யத்தை நிச்சயித்தென்றபடி. இதுக்கு நியாமகமேது? என்ன, மயாஸமர்ப்பித இத்யாதி. அதாவது-ஆத்மஸமர்ப்பணம் ஸர்வமுக்திப்ரஸங்கபரிஹாரார்த்தமாகிலும், ஆத்மவஸ்து அத்யந்தபாரதந்த்ரமாகையாலே அநந்தரம் அநுதபிக்கவேண்டும்படி யிருக்குமென்றபடி. "கிந்நு ஸமர்ப்பயாமி" என்று - ஸ்வாதீநகர்த்ருத்வநிவ்ருத்தி சொல்லுகிறது - என்ற பக்ஷாந்தரம் அயுக்தமென்றபடி. ஸ்தோத்ரே * "வபுராதிஷு" இத்யாதி. "மமநாத" இத்யாதி. "எனதாவியாவியும்நீ" என்றத்தால் - ஸ்வாமித்வஞ் சொல்லி, மீளவும் 'எந்தாய்' என்கிறதென்? என்ன. ஸ்வாபாவிகமான இத்யாதி. பொழிலேழு முண்கையாலே, 'எந்தை' என்று மூந்தினஅர்த்தம். அர்த்தாந்தரம் - ப்ரளயாபத்திலே நசியாதபடி இத்யாதி. பொழிலேழு முண்டாற்போலே எந்தையானதுவும் என்றுஇரண்டாமர்த்தம். எனதாவியாவியும் நீயானபின்பு - எனதாவியார் யானார் என்று ஹேது ஹேதுமத்பாவேநார்த்தம் - ப்ரதேயமான இத்யாதி. ஸர்வமும் ஈச்வரனுக்கே சேஷமாகையாலே, தத்வ்யதிரேகேண ஸ்வதந்த்ரதயா ஸமர்ப்பணகர்த்தாவும் ஸமர்ப்பணீயவஸ்துவும் இல்லையென்றபடி. ஸப்தார்த்தம் - முதலிலே இத்யாதி. தந்தநீ - உண்டாக்கின நீ. தருகை - உண்டாக்குகை. கோண்

---

* "வபுராதிஷு யோபி கோபி வா குணதோஸாநி யதாதயாவித: । ததயம் தவ பாதபத்மயோரஹமத்யைவ மயாஸமர்ப்பித: ॥" "மமநாத யதஸ்தி யோஸ்ம்யஹம் ஸகலம் தத்தி தவைவ மாதவ । நியதஸ்வமிதி ப்ரபுத்ததீரதவா கிந்நு ஸமர்ப்பயாமி தே."

லே இத்தையுண்டாக்கின நீயே கோண்டாயாஞய். உண்டாக்குகையாவதேன் நித்ய வஸ்துவை? என்னில்; - "𑌇𑌚𑍍𑌛𑌾𑌤 𑌏𑌵 𑌤𑌵 𑌵𑌿𑌶𑍍𑌵𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌸𑌤𑍍𑌤𑌾" (இச்சாதஏவதவவிஶ்வ பதார்த்தஸத்தா) என்று அவனுடைய நித்யேச்சையாலேயிறே இதினுடைய நித்யத்வம்.

ஐந்தாம்பாட்டு.

இனியார்ஞானங்களால் எடுக்கலெழாதவெந்தாய்!
கனிவார்வீட்டின்பமே! என்கட்றபடாவமுதே!
தனியேன்வாழ்முதலே! பொழிலேழுமேனமொன்றாய்
நனியார்கோட்டில்வைத்தாய் உனபாதஞ்சேர்ந்தேனே.

ஆ.—(இனியார்.) அநாஶ்ரிதர் எத்தனையேனும் உத்க்ருஷ்டரேயாகிலும் அவர்களுடைய ஜ்ஞாநங்களுக்கு அகோசரனாய், அநந்யபக்திகளாயிருப்பார்க்குப் பரம ஸுலபனாய், தாத்ருஶபக்திஹீநனாயிருக்கச்செய்தே எனக்கு அயத்நஸித்த போக்யனாய், ஸமுத்ரத்திலே அழுந்திக்கிடக்கிற ஆத்மவர்க்கத்தை நிர்ஹேதுகமாகஎடுத்து உஜ்ஜீவிப்பித்தாற்போலே, உன்னுடைய கருணையாலே, அநந்யகதியாயிருந்த என்னுடைய உஜ்ஜீவந ஹேதுபூதனானவனே! உன்திருவடிகளை இனிஒருநாளும் பிரியாது ஒருபடி சேர்ந்தேனே யென்கிறார்.

ஓ.—அஞ்சாம்பாட்டில், ப்ரளயார்ணவத்திலே மக்நமான ஜகத்தை எடுத்தருளினாற்போலே, ஸம்ஸார ஸாகரத்திலே முழுகிக்கிடக்கிற என்னை உன் திருவடிகளில் உறவை அறிவித்து எடுத்தருளுகையாலே, இனி உன் திருவடிகளைப் பெற்றேனென்று க்ருதார்த்தராகிறார்.

[ஆர்ஞானங்களா லெடுக்கலெழாத வெந்தாய்] - திருவடிகளில் அடைவிலராகில் எத்தனையேனும் அளவுடையாருடைய அறிவுகளாலும் பரிச்சேதிக்கவொண்ணாத என் நாதனே! [கனிவாரென்று தொடங்கி] - ஓரளவுமில்லையே யாகிலும் திருவடிகளில் ஆசையுடையார்க்கு மோக்ஷஸுகம் போலே போக்யமாமவனே! பக்திமான்களில் பரிகணிக்கப்படாதே யிருக்கிற எனக்கும் அயத்நஸித்த போக்யமே. வீட்டின்பம் - அவர்களிருந்தவிடத்தே வந்து போக்யமாகையுமாம். [தனியேன்என்று தொடங்கி]-ஸம்ஸாரியாய்த் திருவடிகளி லுறவும் அறியாதிருக்கிற காலத்திலே திருவடிகளைப் பெறுகைக்கு அடியான ஸுக்ருதத்துக்கு உத்பாதகனே! நனியார் கோடு - கூர்மைமிக்க கொம்பு.

ப.—அநந்தரம், உன்னுடைய அப்ராக்ருதபோக்யதையைக் காட்டி ருசிஜநகனானபடியாலே உன்திருவடிகளைப் பெற்றேனல்லேனோ? என்கிறார்.

யார் - எத்தனையேனும் அதிஶயிதரானவர்களுடைய, ஞானங்களால் - ஜ்ஞாநங்களால், எடுக்கல் எழாத - எடுக்கைக்கு எடுப்புண்ணாத, எந்தாய் - ஸ்வாமியாய், கனி

டாக்கினையே - கொண்டாயாஞய். தடஸ்த்தசங்கையை அநுவதித்துப் பரிஹரிக்கிறார் - உண்டாக்குகை இத்யாதி. நித்யேச்சையடியாக இது நித்யமாயிருக்கையாலே 'உண்டாக்கின' என்கிறாரென்றபடி. ஸ்ரீவைகுண்டஸ்தவே- "𑌇𑌚𑍍𑌛𑌾𑌤 𑌏𑌵 𑌤𑌵 𑌵𑌿𑌶𑍍𑌵𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌸𑌤𑍍𑌤𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌸𑍍𑌤𑌵 𑌤𑍁 𑌕𑍇𑌚𑌨 𑌤𑍇 𑌹𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌃। 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌤𑍍𑌵𑌦𑍇𑌕𑌪𑌰𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌨𑌿𑌜𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾 𑌭𑌾𑌵𑌤𑍍𑌕𑌮𑌙𑍍𑌗𑌲𑌗𑍁𑌣𑌾 𑌹𑌿 𑌨𑌿𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌨𑌃". க்ரமேண அந்வயः.

வார் - (உன்பக்கல் ஸ்நேஹத்தாலே) பரிபக்வஹ்ருதயரானவர்களுக்கு; வீட்டின்பமே - மோக்ஷாநந்தபூதனாய், என் - (உபயவ்யாவ்ருத்தனான) எனக்கு (மதநாதியத்நத்தால்), கடல்படா - கடலிலே உண்டாகாத, அமுதே - (அப்ராக்ருதமான) அம்ருதமாய், தனியேன் - (ஸம்ஸாரத்திற்பொருந்தாமையாலே) தனியனான என்னுடைய, வாழ் - (த்வததநுபவரூபமான) வாழ்வுக்கு, முதலே - (ருசிஜநகத்வாதியாலே) ப்ரதமஹேதுபூதனாய் (என்னை ஸம்ஸாரார்ணவத்தினின்று மெடுக்கைக்கு ஸூசகமாக), பொழிலேழும் - ஸப்தத்வீபயுக்தமான ஜகத்தை, ஒன்று - அத்விதீயமான, ஏனமாய் - மஹாவராஹமாய்க் கொண்டு, நுனியார் - கூர்மைமிக்க, கோட்டில் - கொம்பிலே, வைத்தாய் - வைத்தவனே! இனி - இனி நீயே ஹேதுபூதனாய் நிர்வஹிக்கிறபின்பு, உனபாதம் - உன்திருவடிகளை, சேர்ந்தேனே - ப்ராபித்தேனேயன்றோ? ஏகாரம்-தேற்றம். எடுக்கல்-தம்வசமாக்குதல்.

இ.—அஞ்சாம்பாட்டில், 'உமக்கு ஜ்ஞாநலாபமே அமையுமோ? ப்ராப்தி வேண்டாவோ?' என்ன, 'எனக்கு ப்ரதம ஸுக்ருதமும் நீயேயாய் உன் திருவடிகளிலே கைங்கர்ய ருசியைத் தந்த பின்பு இனிப் பெற்றேனேயன்றோ' என்கிறார்.

[ஆர்ஞானங்களா லெடுக்க லெழாத வெந்தாய்] - ஸ்வயத்நத்தாலே காணநினைப்பார் எத்தனையேனும் அதிசயித ஜ்ஞாநரே யாகிலும் அவர்களால் பரிச்சேதிக்கவொண்ணாத என்நாயனே! அதாகிறது - துர்யோதநனால் பரிச்சேதித்தல், ராவணனால் எடுக்கலாயிருத்தல் செய்ய அரிதாயிருக்கை. "ஹிஸவா நீ" இத்யாதி, "வாயுஸூநொஹ்ய ஹிமவாந மந்தரோ வா மஹீதலாத் ஸ்தாநாச்சாலயிதும் ஶக்யோ ந ராகவ:". [கனிவார்வீட்டின்பமே] - ஓராளவில்லையேயாகிலும் பகவத் விஷயத்தில் பக்வமான ப்ரேமமுடையவர்களுக்கு மோக்ஷ ஸுகமானவனே! அவர்களிருந்த விடத்தே வந்து போக்யனானவனே யென்னவுமாம்; "தொல்லையின்பத்திறுதி கண்டாளே" என்னக் கடவதிறே. [என் கடற்படாவமுதே] - உபயகோடியிலும் வ்யாவ்ருத்தனான எனக்கு அயத்நஸித்தமான போக்யமே! [தனியேன் வாழ்முதலே] - எனக்கு இப்பேற்றுக்கு அடியான ப்ரதம ஸுக்ருதத்துக்கு உத்பாதகனானவனே! பந்துக்கள் நடுவே யிருக்கிறவர் 'தனியேன்' என்கிறாரிறே; வழிபறிக்காரர் நடுவே நின்றால் அவர்கள் துணையாகாரிறே. எனக்கென்றிருப்பார் நடுவே இருக்கையிறே - இவர்க்குத் தனிமை. தம்மை அத்தலைக்கு ஆக்கிவைக்கையிறே - இவர்க்கு வாழ்வு. [பொழிலேழும் இத்யாதி] - ஸப்தத்வீபவதியான பூமியை அத்விதீயமான வராஹவேஷத்தைக்கொண்டு கூர்த்தகொம்பிலே எடுத்துவைத்தாற்போலே, ஸம்ஸாரஸாகரங் கொண்ட என்னை எடுத்தா யென்கிறார். [இனியுனபாதஞ் சேர்ந்தேனே] - "இமையோர் தலைவா - இந்நின்ற நீர்மை யினியாமுறாமை" என்னும்படி அறிவைத் தந்தபோதே உன் திருவடிகளைப் பெற்றேனேயன்றோ?

ஈடு.—அஞ்சாம்பாட்டு. ஜ்ஞாநலாபமே அமையுமோ? ப்ராப்திவேண்டாவோ? என்ன, எனக்கு ப்ரதமஸுக்ருதமும் நீயேயாய், என்னை ஸம்ஸாரிகளில் வ்யாவ்ருத்தனாக்கினஅன்றே பெற்றேனேயன்றோ? என்கிறார்.

அஞ்சாம்பாட்டு - இனியார் இத்யாதி. 'தனியேன்வாழ்முதலே, இனி யுனபாதஞ் சேர்ந்தேனே' என்ற பதங்களைக் கடாக்ஷித்து இரண்டாம் பாட்டோடே ஸங்கதி - ஜ்ஞாநலாபமே இத்யாதி. "அறியாதன வறிவித்து" என்று ஜ்ஞாநலாபமுண்டாயிற் றென்றபடி.

இனி - மேலே அந்வயம் [ஆர்ஞானங்களால் எடுக்கலெழாதவேந்தாய்] - எத்தனையேனும் அதிசயிதஜ்ஞாநரானவர்களுடைய ஜ்ஞாநவிஶேஷங்களாலும் ஸ்வயத்நத்தாலே அறியப்பார்க்குமன்று பேர்க்கப்பேராதிருக்கிற என்நாயனே! அதாவது - துர்யோதநனாலே பரிச்சேதித்தல், ராவணனாலே எடுக்கலாயிருத்தல் செய்ய அரிதாயிருக்கை. [கனிவார் வீட்டின்பமே] - 'நீ' என்றால் உள்கனிந்து பக்வமாயிருக்குமவர்களுக்கு மோக்ஷஸாதகமானவனே! அன்றியே, 'நீ' என்றால் இனியராயிருக்குமவர்களிருப்பிடத்திலே வந்து அவர்களுக்கு ஆநந்தத்தை விளைக்குமவனே' அப்படி எங்கேகண்டோம்?என்னில்; யசோதைப்பிராட்டி, தோல்லையின்பத்திறுதிகண்டாளிறே. [என்கடற்படாவமுதே] - அவ்விரண்டு கோடியிலும், எண்ணவொண்ணாதபடியிருக்கிற எனக்குஅத்யத்நஸித்தபோக்யனானவனே! [தனியேன்வாழ்முதலே] - தனியேனான என்னுடைய அநுபவத்துக்கு ப்ரதமஸாதக்ருதமானவனே' ஏகாக்ஷீயேககர்ணிகள் நடுவே யிருந்தாறபோலே பிராட்டி, இவருக்கும் தனியாயிருக்குமிறே ஸம்ஸாரத்திலிருப்பு. [பொழில்இத்யாதி] - தனிமையிலே வந்துஉதவும்படியைச் சொல்லுகிறது அத்விதீயமஹாவராஹவேஷத்தைப் பரிக்ரஹித்து, ப்ரளயங்கொண்ட புவநங்களேழையும் எடுத்து. [நுனியார்கோட்டில்வைத்தாய்] - நுனியென்று - கூர்மை. ஆர்கை - மிகுதி. கூர்மைமிக்க கோட்டிலே வைத்தா யென்றபடி. இத்தால், ரக்ஷ்யவர்க்கத்தினளவல்லாத ரக்ஷகனுடைய பாரிப்பைச் சொல்லுகிறது. [இனியுனபாதஞ் சேர்ந்தேனே] - ப்ரளயங்கொண்ட பூமியை எடுத்தாற்போலே ஸம்ஸாரப்ரளயங்கொண்ட என்னை எடுத்தபோதே, தேவர்திருவடிகளை நான் கிட்டினேனேயன்றோ. "இமையோர்

இனி மேலே அந்வயம் என்றது - 'இனி' என்றதுக்கு - 'உன பாதஞ் சேர்ந்தேன்' என்றத்தோடே அந்வய மென்றபடி. ஆர்ஞானங்களால் - ஆருடைய ஜ்ஞாநங்களாலும். ஆர் என்று - உத்க்ருஷ்டபுருஷவாசி. எடுக்கலெழாதவேந்தாய் - எடுக்கைக்கு எடுப்புண்ணாத என்ஸ்வாமீயென்று பதார்த்தம். பேர்க்கப்பேராதிருக்கிற - சலிப்பிக்கச் சலியாதே யிருக்கிற. அதாவது - பரிச்சேதித்து அறியப்போகாதிருக்கிற வென்றபடி. எடுக்கப்பார்க்குமன்று, எடுக்கப்போகாதிருக்கிற என்று கூட்டிக்கொள்வது. 'ஞானங்களால்' என்றது - சக்திக்கும் உபலக்ஷணம். எடுக்கலெழாத என்றது - அறியப்போகாமைக்கும் உபலக்ஷணம். விவரணம் - அதாவது இத்யாதி. வீடு - மோக்ஷமும், க்ருஹமும். மோக்ஷஸாதகமானவன் - மோக்ஷஸாதகத்தைக் கொடுக்குமவன். வீட்டிலே வந்து ஆநந்தத்தை விளைக்குமவனென்று இரண்டாமர்த்தம். தோல்லை இத்யாதி - பெருமாள்திருமொழி எ-அ. பழையதான ஆநந்தத்தினுடைய எல்லைகண்டாளே யென்றபடி. கடற்படாவமுதே-படுகை - உண்டாகை. "கடற்படாவமுது" என்கைபாலே - ப்ராப்பத்வஞ் சொல்லிற்று. அவ்விரண்டு கோடியிலும் என்றது - ஶத்ருக்களான ராவணாதிகளுடையவும், அதிஶயிதபக்திமான்களான யசோதாதிகளுடைய கோடியிலும் என்றபடி. எனக்கு, அத்வேஷமாத்ரமுடைய எனக்கு. வாழ்முதலே - வாழ்ச்சிக்கு முதலானவனே. இவர்க்கு வாழ்ச்சி - பகவதநுபவமிறே. ஸம்ஸாரிகளிருக்க, 'தனியேன்' என்கிறதென்? என்ன, ஏகாக்ஷீ இத்யாதி பிராட்டிக்கு ஏகாக்ஷீயேககர்ணிகள் நடுவிருப்புப்போலே, இவர்க்கும் ஸம்ஸாரத்திலிருப்புத் தனியாயிருக்கு மென்றபடி. "வியஜ்ஞநவேபதீம்" இத்யாதி. தனிமையிலே - ரக்ஷகாபேக்ஷையிலே. இத்தால் - "நுனியார்" என்கிற இத்தால். பூர்வவாக்யார்த்தத்தை த்ருஷ்டாந்தீகரித்து [illegible], "அறியாதனவறிவித்து" என்றதைக் கடாக்ஷித்து 'இனி' என்றதுக்கு ஸாவம் - ப்ரளயங்கொண்ட இத்யாதி. பொய்ந்நின்றஞானத்தில் விசேஷகடாக்ஷபரமாகத் தாத்பர்யாந்தரம்-இமையோர்தலைவா இத்யாதி. திருவிருத்தம்-க.

தலைவா - இந்நின்றநீர்மை யினியாமுறாமை” என்னும்படி, அறிவைத் தந்தபோதே உன் திருவடிகளைப் பெற்றேனேயன்றோ? (ரு)

ஆறாம் பாட்டு.

சேர்ந்தார்தீவினைகட்கருநஞ்சைத் திண்மதியைத்
தீர்ந்தார்தம்மனத்துப் பிரியாதவருயிரைச்
சோர்ந்தேபுகல்கொடாச் சுடரையரக்கியைமூக்கு
ஈர்ந்தாயையடியேனடைந்தேன் முதன்முன்னமே·

ஆ.—(சேர்ந்தார்.) 'போனகாலமும் ஸம்ஶ்லேஷித்தோம்' என்று தமக்குத் தோற்றும்படி எம்பெருமானோடே தாம் ஸம்ஶ்லேஷிக்கையாலே, ஆஶ்ரிதருடைய ஸ்வவிஷயதிவ்யஜ்ஞாநவிரோதிபாபங்களுக்கு நஞ்சாய், அவர்களுக்கு ஸ்வவிஷயத்ருடஜ்ஞாநப்ரதனாய், இப்படி தன்னுடைய ப்ரஸாதத்தாலே லப்தஜ்ஞாநராகையாலே ஸம்யகவ்யவஸிதராயிருந்தவர்களை ஸம்ஸாரத்திற்புகவிடாதே அவர்களோடு பிரியாதே ஸம்ஶ்லேஷிக்கும் ஸ்வபாவனுமாய், ஆஶ்ரிதவிரோதி நிரஸநஸ்வபாவனுமாயிருந்த உன்னோடு இன்றோ அடியேன் ஸம்ஶ்லேஷிக்கப்பெற்றது? இவ்வாத்மா உள்ளவன்றே பெற்றேனன்றோ? என்கிறார்.

ஒ.—ஆறும்பாட்டில், அநாதிகாலம் விஶ்லேஷித்த விஶ்லேஷமெல்லாம் தெரியாதபடி எம்பெருமான் தன்னோடே ஸம்ஶ்லேஷிக்கையாலே, இன்றோ பெற்றது; இவ்வாத்மாஉள்ளவன்றே தேவரீரைப் பெற்றேனல்லவோ? என்கிறார்.

[சேர்ந்தாரென்று தொடங்கி] - ஆஶ்ரிதருடைய பாபங்களை மறுவிடாதபடி போக்குவதுஞ்செய்து ஒருவராலும் கலக்கவொண்ணாத அறிவைக் கொடுக்கும் ஸ்வபாவனாய் உனக்கே தீர்ந்து உன்னாலல்லது செல்லாதே யிருக்கிறவர்கள் ஹ்ருதயத்தினின்றும் ஒருகாலும் பிரியாதேயிருந்து உன்னைப்பிரிந்து அவர்களாத்மா மங்கிப்போகாதபடி பரிஹரித்து அத்தாலே உஜ்ஜ்வலனாய்ப் பிராட்டியோட்டை ஸம்ஶ்லேஷத்துக்கு விரோதியானசூர்ப்பணகியைப் போக்கினாற்போலே அவர்களோட்டைப் பரிமாற்றத்துக்கு விரோதியைப்போக்கும் ஸ்வபாவனானவனை.

ப.—அநந்தரம், இந்தப்ராப்தி, ஸ்வரூபப்ரயுக்தமாகையாலே அநாதிஸித்தமன்றோ வென்கிறார்.

நித்யஸூரிகளுக்குத் தலைவனானவனே! இவற்றில் நிலைநின்றபோந்த வாஸநாருசிகளாகிற ஸ்வபாவவிஶேஷங்களை, உன்கடாக்ஷம்பெற்ற நாங்கள் அடையாதபடி யித்யர்த்தः. மேலிற்பாட்டிலே 'முதல் முன்னமே” என்ற பதத்தின் மூன்றுமர்த்தத்துக்குச் சேர, 'இனி' என்றதுக்கும் மூன்றுமர்த்தமாக இன்னமும் ஓரர்த்தம் அத்யாஹரித்துக்கொள்வது. அதாவது - வாயுந்திரையுகளில் வ்யஸநந்தீர, ஊனில்வாழுயிரிலே ஸம்ஶ்லேஷித்தபோதே, உனபாதஞ் சேர்ந்தேனேயன்றோ வென்று. ஆக, 'இனி' என்றதுக்கு - மூன்றர்த்தம், அர்த்தத்வயம்வா. ஆர் ஞானங்களால் தொடங்கி, வாழ் முதலே - ஓரேனமாய் - பொழிலேழும் - நுனியார்கோட்டில் வைத்தாய் இனியுனபாதஞ்சேர்ந்தேனே இத்யந்வயः. 'என்கடற்படாவமுது' என்கையாலே - ப்ராப்யத்வமும், 'தனியேன்வாழ் முதல்' என்கையாலே - ப்ராபகத்வமுஞ் சொல்லிற்று. (ரு)

சேர்ந்தார் - உன்னையடைந்தவர்களுடைய, தீவினைகட்கு - க்ரூரமான பாபங்களுக்கு, அருநஞ்சை - காற்றவரிய நஞ்சாய், திண்மதியை - திண்ணிதான மதியாகிற (வ்யவஸாயந் தானாய்நிற்கிறா னென்னலாம்படி அதுக்கு உத்பாதகனாய்), தீர்ந்தார்தம் - அந்த வ்யவஸாயத்தை யுடையவர்களுடைய, மனத்து - மநஸ்ஸிலே, பிரியாது - விடாதே, அவருயிரை - அவர்களாத்மவஸ்துவை, சோர்ந்தே - (என்றும் விஷயாந்தரங்களிலே புக்குச்) சோர்ந்து, புகல்கொடா - போகக்கொடாதே, சுடரை - (தன்வடிவையே அவர்களுக்கு விஷயமாக்கும்) உஜ்ஜ்வலஸ்வபாவனாய் (அவர்கள்விஷயருசியை), அரக்கியை - சூர்ப்பணகியை, மூக்குரர்ந்தாயை - அரிந்தாற்போலே அழித்துக்கொடுக்க வல்ல உன்னை, அடியேன் - (உனக்குசேஷபூதமான ஸ்வரூபத்தையுடைய) நான், முதல் முன்னமே - முகனுக்குமுன்னே, அடைந்தேனே - அடைந்தேனல்லவோ? மயர்வற மதிநலமருளுவதற்குமுன்னே ப்ராப்தி யுண்டல்லவோ என்று கருத்து.

இ.—ஆறும்பாட்டில், “இனிஉனபாதஞ்சேர்ந்தேனே” என்றார். ‘இனி’என்று விசேஷிக்கவேணுமோ? முன்பே உன்னைப்பெற்றேனல்லேனோ? என்கிறார்.

[சேர்ந்தார்] - கெடுமரக்கலம் கரைசேர்ந்தாற்போலே இவனைக்கிட்டினவர்கள். [தீவினைகட்கு அருநஞ்சை]-அவர்களுடைய பாபத்துக்குக்காற்றப்போகாத நஞ்சானவனை. [திண்மதியை] - விரோதியைப் பரிஹரிக்கையன்றிக்கே, தன்னாலும் கலக்கவொண்ணாத அத்யவஸாயத்தைக் கொடுக்குமவனை. “ஸ்யாவிஷ்ணுரேஷ ய_ம் தவஸம்ஹாஷ யாஜ்யஹம் | நாஹமாராயயாமிசூரம் தவ வைஹாயஜ்ஞம்:” அம்பரீஷன்தபஸ்ஸு பண்ணாநிற்க ஸர்வேஶ்வரன் இந்த்ரவேஷத்தை தரித்துக்கொண்டு சென்று, ‘உனக்கு வேண்டுமவற்றை வேண்டிக்கொள்’ என்ன, ‘நான் உன்னை யாராதிக்குமவனல்லேன்காண், என்னை ஸமாதிபங்கம் பண்ணாதே போகவல்லையே; உன்னைக் கும்பிடுகிறேன்’ என்றானிறே. [தீர்ந்தார் இத்யாதி] - தன்னையொழியச செல்லாதவர்கள் - தீர்ந்தாராகிறார். அவர்களுக்குச் செல்லிலும் தனக்குச்செல்லாதாயிருக்கை. [அவருயிரை இத்யாதி] - விஶ்லேஷத்தில் நீர்ப்பண்டமாய் மங்கிப்போம்படியாயிற்று அவர்கள்படி. அவர்களாத்மாவை மங்கிப்போக விட்டுக்கொடான். [சுடரை] - அவர்கள் நோவுபடாத இத்தால் தனக்குஉண்டான ஔஜ்ஜ்வல்யம்; “க்ரூதக்ரூத்யஹ:”. [அரக்கியைமூக்கீர்ந்தாயை] - அவர்களோட்டைக் கலவிக்கு வரும் ப்ரதிபந்தங்கள் சூர்ப்பணகிபட்டது படுமத்தனை; ‘ஈர்ந்தாயை’ என்கிறார், “ராக்ஷஸ்யாஹ க்ஷிணோவாஹ:” என்கிற ப்ரஸித்தியாலே. [அடியேனடைந்தேன்முதன் முன்னமே]-அநாதிகாலம்இழந்தஇழவை மறக்கும்படி வந்துகலக்கையாலே இன்றேபெற்றது, இவ்வாத்மாஉள்ளவன்றேபெற்றேனல்லேனோ? சேஷத்வம்ஸ்வதஸ்ஸித்தம், அசித்ஸம்ஸர்க்கமாய்அது புழுதியேறினவோபாதி; அத்தை மறக்கும்படி கலந்தானாகையாலே சொல்லலாமிறே. ஸம்ஸாரிகளில் வ்யாவ்ருத்தனாக்கி,முறைமையை அறிவித்தவன்றே பெற்றேனல்லேனோ? என்றுமாம். வாயுந்திரையுகளில் - முன்பு ஸம்ஶ்லேஷித்த தேற்றமும் கலங்கி விஶ்லேஷமாய்ச் சென்றாற்போலே கலவியின்மிகுதியாலே அத்தை மறந்து, முன்பேபெற்றேனல்லேனோ? என்றுமாம். [முதன்முன்னமே] - முன்பே; பழையதாக வென்றபடி.

ஈடு.—ஆறும்பாட்டு. "இனியுனபாதஞ்சேர்ந்தேனே" என்றார்; 'இனி' என்று விசேஷிக்கவேணுமோ? பொய்ந்நின்றஞானத்திலே நீ விசேஷகடாக்ஷம்பண்ணினபோதே கிட்டிற்றிலேனோ? என்னுதல்; அன்றிக்கே, ஸ்வரூபத்தைஅநுஸந்தித்தவாறே ஸ்வாபாவிகசேஷத்வமேயாய் நிலைநின்றஆகாரம், நடுவுள்ளது வந்தேறியாய்த் தோற்றுகையாலே சொல்லுகிறாராகவுமாம்.

சேர்ந்தாருண்டு - "த்விதா பஜ்யேயமப்யேவம் ந நமேயம் து கஸ்யசித்" (த்விதா பஜ்யேயமப்யேவம்நநமேயந்துகஸ்யசித்) என்னும் நிர்ப்பந்த மில்லாதவர்கள். [சேர்ந்தார்] - கெடுமரக்கலம் கரைசேர்ந்தாற்போலே இவனைக் கிட்டினவர்கள். அநாதிகாலம் ஸம்ஸரித்துப்போந்த ஆத்மா ஸர்வேஶ்வரனைக் கிட்டுகையாவது - கரைசேர்கையிறே. இக்கரையேறினார்களிறே அவர்கள். [தீவினைகட்கருநஞ்சை]-அவர்களுடைய ப்ராப்திப்ரதிபந்தக கர்மங்களுக்குக் காற்றவொண்ணாத நஞ்சானவனை. [திண்மதியை] - முன்பே சேர்ந்திருக்குமவர்களுக்குத் திண்ணியதான மதியைக் கொடுக்குமவனை. அம்பரீஷன் தபஸ்ஸு பண்ணாநிற்க, ஸர்வேஶ்வரன் இந்த்ரவேஷத்தை தரித்துக்கொண்டு சென்று, 'உனக்கு வேண்டியவற்றை வேண்டிக்கொள்' என்ன, 'நான்உன்னைஆராதிக்குமவனல்லேன் காண்; என்னை ஸமாதிபங்கம்பண்ணாதே போகவல்லையே; உன்னைக் கும்பிடுகிறேன்' என்றானிறே - "நாஹமாராதயாமி த்வாம் தவ பத்தோயமஞ்ஜலி:" (நாஹமாராதயாமித்வாம் தவபத்தோயமஞ்சலி:) என்று தானே அழிக்கப்பார்க்குமன்றும் அழிக்கவொண்ணாதபடியான திண்ணியமதியைக் கொடுக்குமவனை. [தீர்ந்தார்இத்யாதி] - "ஜலாந் மத்ஸ்யா..."

ஆறும்பாட்டு - சேர்ந்தார் இத்யாதி. கீழ்ப்பாட்டில், 'இனி' என்றதின் அர்த்தத்வயாநுகுணமாக அவதாரிகாத்வயம் - இனியுனபாதம் இத்யாதி. இனிஎன்றுவிசேஷிக்கவேணுமோ-"அறியாதனவறிவித்த" என்று விசேஷிக்கவேணுமோ? என்றபடி. 'கிட்டிற்றிலனோ' என்ற அநந்தரம் - என்கிறாரென்று சேஷம். அன்றிக்கே இத்யாதி - இவ்வவதாரிகையிலே, இனியென்று விசேஷிக்கவேணுமோ? என்கிறது - பொய்ந்நின்ற ஞானத்திலே மயர்வறமதிநல மருளினபோதே பெற்றேனேயன்றோ வென்று விசேஷிக்கவேணுமோ? என்றபடி. நிலைநின்ற ஆகாரம் ஸ்வாபாவிகசேஷத்வமேயாய் என்று அந்வயம். ஸ்வரூபத்தை அநுஸந்தித்தவாறே, ஸ்வாபாவிகாகாரம் சேஷத்வமேயாய், நடுவுள்ளது வந்தேறியாய்த் தோற்றுகையாலே, பண்டேயடைந்தேனேயன்றோ வென்கிறாரென்றபடி.

மேலே, 'தீர்ந்தார்' என்று சொல்லுகையாலே. அத்தோடே புநருக்தமாகாமைக்காக, 'ஆபிமுக்யமுடையவர்கள்' என்று அர்த்தம் - சேர்ந்தாருண்டு இத்யாதி. நிர்ப்பந்தமில்லாதவர்கள் - அத்வேஷாதிகளுடையவர்கள். யுத்தகாண்டே ஷட்த்ரிம்சே ராவணேந, - "த்விதா பஜ்யேயம்" இத்யாதி பூர்வமேவ லிகிதம். இவர்களை 'சேர்ந்தார்' என்கிறதென்? என்ன, கெடுமரக்கலம் இத்யாதி. கெடுமரக்கலம் - வழிதப்பின ஓடம். கரைசேர்ந்தாற்போலேயானபடியென்? என்ன, அநாதிகாலம் இத்யாதி. இத்தை ப்ரமாணமுகேந அருளிச்செய்கிறார் - இக்கரை இத்யாதி. பெரியாழ்வார் திருமொழி ரு-௩-எ. "அக்கரையென்னும்" இத்யாதி - பாட்டடி. அக்கரை - ஸம்ஸாரம். இக்கரை - பரமபதம். காற்றவொண்ணாத - ப்ரத்யௌஷதமிட்டுக் காக்கவொண்ணாத. திண்ணிதானமதி - த்ருடாத்யவஸாயம். "திண்மதியை" என்கிற ஸாமாநாதிகரண்யம் - ஜந்யஜநகபாவநிபந்தநம். அப்படிகொடுத்த இடமுண்டோ? என்ன - அம்பரீஷன் இத்யாதி. உக்ரம் தப: ... ணம்வது, ஸமேத்ய ஹரி ... - நாஹம் இத்யாதி. ஸ்ரீவிஷ்ணுதர்மே த்விதீயேத்யாயே - "... " இத்யுத்தரார்த்தம். 'தீர்ந்தார்' என்றதுக்கு அர்த்தத்வயம் - ப்ராப்யத்வாநிஷ்டரென்னுதல், ப்ராப்யப்ராபகநிஷ்டரென்னுதல். ப்ரதமார்த்தம் - ஜலாந் மத்ஸ்யா இத்யாதி. "சேர்ந்தேபுகல்கொடா" என்கிறதுக்கு அர்த்தம்

தள" (ஜலாந்மத்ஸ்யாவிவோத்த்ருதௌ) என்று தன்னைப் பிரியமாட்டாதே யிருக்குமவர்கள் நெஞ்சைவிட்டுப்போகமாட்டாதே, அவர்களுயிர் தன்னைப்பிரிந்து த்ரவீபூதமாய் மங்கிப்போகக்கொடாதே, 'அது தன்பேறு' என்னுமிடம் வடிவிலே தோன்ற இருக்குமவனை. தீர்ந்தாருண்டு - உபாயத்தில் துணிவுடையார். அவர்களாகிறார் - 'ப்ராப்யப்ராபகங்களிரண்டும் அவனே' என்றிருக்குமவர்கள. அவர்கள் தன்னைப்பிரிந்து நோவுபடாதபடி அவர்கள்நெஞ்சிலே யிருக்குமவ னென்றுமாம். [அரக்கியைமூக்கீர்ந்தாயை] - பிராட்டியோட்டை ஸம்ஶ்லேஷவிரோதியைப் போக்குமாபோலே யாயிற்று, அவர்களுடைய விரோதிகளைப் போக்கும்படியும். ஆனால், இவனோ பின்னைஅவள்மூக்கறுத்தா னென்னில்;-ஆம், கையாலே யறுக்கவேணுமே, "ராமஸ்ய தக்ஷிணோபாஹு:" (ராமஸ்யதக்ஷிணோபாஹு:) என்னக்கடவதிறே. [அடியேன் இத்யாதி] - ஶேஷபூதனான நான் பண்டேஅடைந்தேனேயன்றோ? [அடியேனடைந்தேன்முதன்முன்னமே] - அநாதிகாலம்இழந்த இழவை மறக்கும்படி வந்து கலக்கையாலே, இன்றோபெற்றது? இவ்வாத்மாவுள்ளவன்றே பெற்றேனல்லேனோ? என்றுமாம். வாயுந்திரையுகளில் - கீழ் ஸம்ஶ்லேஷித்த தேற்றம் போய்க்

த்ரவீபூதமாய் மங்கிப்போகக்கொடாதே என்று. 'சுடர்' என்றதின் தாத்பர்யம் - அதுதன்பேறு இத்யாதி. த்விதீயார்த்தம் - தீர்ந்தாருண்டு இத்யாதி. துணிவு-அத்யவஸாயம். தடஸ்த்தஶங்கையை அநுவதித்துப் பரிஹரிக்கிறார் - ஆனால் இத்யாதி. ராமஸ்ய இத்யாதி - ஆரண்யகாண்டே த்வாத்ரிம்ஶே ராவணம்ப்ரதி சூர்ப்பணகா, "ஹ்ருதாதாரஸ்ய" இத்யாதி. "லக்ஷ்மணோ நாம வீர்யவாந் | ஸுஹ்ருச்ச ஸுப்ரியோ ஜ்ஞாதா விக்ராந்தோ ஜிதமாநஸ: | ராமஸ்ய தக்ஷிணோ பாஹு: நித்யம் ப்ராணோ பஹிஶ்சர:". த்விதீயாவதாரிகைக்குச் சேர அருளிச்செய்கிறார் - ஶேஷபூதனான இத்யாதி. ப்ரதமாவதாரிகைக்குச் சேர, அறியாதன வறிவித்தபின்பு என்று விஶேஷிக்க வேணுமோ? பொய்ந்நின்ற ஞானத்திலே விஶேஷகடாக்ஷம் பண்ணினபோதே கிட்டிற்றிலனோ என்று த்விதீயார்த்தங் கண்டுகொள்வது. கீழ்ப்பாட்டில் "இனி" என்றதின் மூன்றுமர்த்தத்துக்குச் சேர மூன்றுமர்த்தம் - அநாதிகாலம் இத்யாதி. இத்தை த்ருஷ்டாந்தபூர்வகமாக விவரிக்கிறார் - வாயுந்திரை இத்யாதி. முழுச்சொல்லென்று காட்டுகிறார் - பழையதாகவேன்றபடி என்று. ஆக, 'இனி' என்றதுக்கு - அறியாதன வறிவித்தபோதே பெற்றேனேயன்றோ வென்றும், பொய்ந்நின்ற ஞானத்தில் விஶேஷகடாக்ஷம் பண்ணினபோதே பெற்றேனன்றோ வென்றும், வாயுந்திரையுகளில் ஆர்த்திதீர ஸம்ஶ்லேஷித்தபோதே உனபாதஞ் சேர்ந்தேனேயன்றோ வென்றும் இப்படி மூன்றர்த்தமானபோது, "முதன்முன்னமே" என்றதுக்கும் மூன்றர்த்தம். அதாவது- 'இனி' என்று -*பொய்ந்நின்ற ஞானத்திலே விஶேஷகடாக்ஷம் பண்ணினபோதே பெற்றேனென்று விஶேஷிக்கவேணுமோ? அநாதிகாலமே பிடித்துப் பெற்றேனேயன்றோ வென்னுதல்; இனியென்று - அறியாதன அறிவித்தபோதே பெற்றேனேயன்றோ வென்று விஶேஷிக்க வேணுமோ? பொய்ந்நின்ற ஞானத்தில் ந விஶேஷகடாக்ஷம் பண்ணினபோதே பெற்றேனென்னுதல்; இனியென்று - வாயுந்திரையுகளில் ஆர்த்திதீரக் கலந்தபோதே பெற்றேனென்று விஶேஷிக்கவேணுமோ? அநாதிகாலந்தொடங்கி விஶ்லேஷமின்றிக்கே ஸம்ஶ்லேஷமாயன்றோ நமக்குச் சொல்லுகிறதென்னுத லென்று. 'இனி' என்றதுக்கு அர்த்தத்வயமானபோது, ததநுகுணமாக அவதாரிகாத்வயம்; அதில் ப்ரதமாவதாரிகாநுகுண ஸாவபரம் - ஶேஷபூதனான இத்யாதிவாக்யம். த்விதீயாவதாரிகாநுகுண ஸாவபரம் - அநாதிகாலம் இத்யாதி வாக்யம். வாயுந்திரை யித்யாதி வாக்யம் - தத்விவரணபரமென்று. இப்படியே "முதன்முன்னமே" என்றதுக்கும் அர்த்தத்வயம். இரண்டர்த்தமென்றால் நன்றாயிருக்கும். இந்தப் பக்ஷத்தில், பண்டேயென்றது - பொய்ந்நின்ற ஞானத்தில் விசேஷகடாக்ஷம் பண்ணினபோதே யென்றபடி. 'என்றுமாம்' என்கிற பதஸ்வாரஸ்யத்தாலே, வாயுந்திரையுகளில் இத்யாதி வாக்யம் - மூன்றும் ஸாவபரமாகவுமாம். இப்போது

கலங்கி விச்லேஷமேயாய்ச் சென்றாற்போலே, இங்குக் கலவியின்மிகுதியாலே அத்தை மறந்து முன்பே பெற்றேனல்லேனோ? என்கிறாரென்றுமாம். முதல்முன்னமே - பழையதாக வென்றபடி. (௬)

ஏழாம் பாட்டு.

முன்னல்யாழ்பயில் நூல்நரம்பின்முதிர்சுவையே!
பன்னலார்பயிலும் பரனே! பவித்திரனே!
கன்னலே! அமுதே! கார்முகிலே! என்கண்ணா!
நின்னலாலிலேன்காண் என்னைநீகுறிக்கொள்ளே.

ஆ.—(முன்னல்.) ஸர்வ கரணங்களுக்கும் நிரவதிக போக்யபூதனாய், உன் திருவடிகளுக்கு நல்லராயிருப்பாரெல்லாருக்கும் உன்னைக்கொடுக்கும் ஸ்வபாவனாய், அவர்களுடைய த்வதநுபவவிரோதி ஸர்வதோஷநிரஸந ஸ்வபாவனாயிருந்த உன்னை எனக்கு நிர்ஹேதுகமாகத் தந்தருளினாய். நீயல்லது எனக்கு ஒரு தாரகமில்லை; இனி என்னைக் கைவிடாதே கிடாய் என்று கொண்டு, 'எம்பெருமானோடு தமக்கு விருத்தமான ஸம்ச்லேஷத்துக்கு பங்கம்வருகிறதோ?' என்னும் அதிசங்கையாலே எம்பெருமானை அபேக்ஷிக்கிறார்.

ஒ.—ஏழாம்பாட்டில், கலந்த கலவிக்கு விச்சேதம் பிறக்கிலோவென்று சங்கித்து 'விச்லேஷிக்கில் தரிக்கும் ப்ரக்ருதியல்ல' என்று என்னைத் திருவுள்ளத்திலே கொண்டருளவேணுமென்கிறார்.

[முன்நல்யாழ்பயில் நூல்நரம்பின்முதிர் சுவையே] - பழையதாய் விலக்ஷணமாய் அப்யஸிக்கப்படுவதுமாய் யாழ் விஷயமாக ப்ரவ்ருத்தமான சாஸ்த்ரஞ்சொன்ன லக்ஷணத்தையுடைய நரம்பாலே பிறந்த முதிரான ரஸம்போலே போக்யனானவனே! [பன்னலாரென்று தொடங்கி] - அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரான அயர்வறுமமரர்களெல்லாரும் எப்போதும் அநுபவித்தாலும் தொலையாத போக்யதையை யுடையையாய் ஸம்ஸாரிகளையும் அந்யபரதையைக் கெடுத்து உன்பக்கலிலே ப்ரவணராக்கிக் கொள்ளுமவனே! உன்திருவடிகளுக்கு நல்லார் பலரும் எப்போதும் அநுபவியாநின்றாலும் தொலையாத போக்யதையை யுடையையாய், அவர்களுக்கு த்வதநுபவ விரோதிகளைப் போக்குமவனே! என்றுமாம். [கன்னலேயென்று தொடங்கி]-நிரதிசயபோக்யனாய்ப் பரமோதாரனாய் நிர்ஹேதுகமாக எனக்கு உன்னைத் தந்தவனே! உன்னையொழியத் தரியேன்.

ப.—அநந்தரம், இப்படி உபகரித்த நிரதிசயபோக்யனான உன்னை யொழிந்தால் எனக்கு ஸத்தையுண்டோ? என்கிறார்.

முன் - அநாதியாய், நல் - விலக்ஷணமாய், யாழ் - யாழைப்பற்றியிருப்பதாய், பயில் - (வ்யுத்பித்ஸுக்களாலே) பயிலப்படுவதான, நூல் - கீதசாஸ்த்ரத்தில் லக்ஷணம்

'முதன்முன்னமே' என்றதுக்கு அர்த்தத்ரயம்; பொய்ந்நின்ற ஞானத்தில் விசேஷகடாக்ஷம் பண்ணினபோதே யிதி ப்ரதமः, அநாதியாகவேஇதி த்விதீயः, வாயுந்திரையுகளில் ஆர்த்திக்குமுன்னே தானே இதி த்ருதீயः. க்ரமேண அந்வயः. (௬)

தப்பாத, நரம்பில் - நரம்பிலேகிளர்ந்த, முதிர்சுவையே - கீதரஸம்போலே நிரதிஶயபோக்யபூதனுய், பல் - (இந்த ரஸஜ்ஞராய்) பஹுவிதராயிருக்கிற, நலார் - (அஸ்கலிதஜ்ஞாநாதி) வைலக்ஷண்யத்தை யுடையார், பயிலும் - நித்யாநுபவம்பண்ணுவதற்கு, பரனே - மேலாயிருக்குமவனுய், பவித்திரனே - (இந்த ரஸஜ்ஞரல்லாதார்க்கும் அஜ்ஞாநாதி தோஷங்களைப் போக்கி புஜிப்பிக்கும்) பாவநபூதனுப், கன்னலே - இக்ஷுரஸம்போலே பர்வந்தோறும் நிரதிஶயபோக்யபூதனுப், அமுதே - (அழிந்தாரையும்ஆக்குவதான) அம்ருதரஸமாய், கார்முகிலே - (ஏவம்விதஸாரஸ்யத்துக்கு ஆஶ்ரயமான) கார்காலத்தில் மேகம்போலே உதாரவிக்ரஹயுக்தனுய், என் - (அவ்வடிவழகோடே) எனக்குஅநுபாவ்யனுகைக்கு, கண்ணு - க்ருஷ்ணனுனவனே! நின்அலால் - (இப்படி நிரதிஶயபோக்யபூதனுன) உன்னையொழிந்தால், இலேன்காண் - (எனக்கு) ஸத்தையில்லைகாண்; என்னை - (வ்யதிரேகத்தில் அழியும்படியான) என்னை, நீ - (வ்யதிரேகத்தில்அழிக்கும்படியான போக்யதையையுடைய) நீ, குறிக்கொள் - (இரண்டுதலையையும்அறிந்து) திருவுள்ளம்பற்றவேணும்.

இ.—ஏழாம்பாட்டில், கலந்தகலவிக்கு விச்சேதம் பிறக்கிலோ என்று ஶங்கித்து விஶ்லேஷத்தில் தரிக்கமாட்டேன் என்று திருவுள்ளத்திலே கொண்டருளவேணுமென்கிருர்.

[முன்னலித்யாதி] - பழையதாய் விலக்ஷணமாய், யாழ்விஷயமாக ப்ரவ்ருத்தமாய் அப்யஸிக்கப்படுவதான நூலுண்டு ஶாஸ்த்ரம்; அது சொன்ன லக்ஷணத்தையுடைய நரம்பிலே பிறந்த முதிர்ந்த ரஸம்போலே போக்யனுனவனே; “[illegible]” என்று - ஶப்தஸாரஸ்யத்தைத் தலையாகச் சொல்லக்கடவதிறே. மிடற்றைச் சொல்லாதே, நரம்பைச்சொல்லிற்று - கர்மத்தாலே போது செய்யாததாகையாலே. மேல் இதுக்கு போக்தாக்களிருக்கிறபடி. [பன்னலார் பயிலும் பரனே] - அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரான நித்யஸூரிகள் ஸதா அநுபவித்தாலும் தொலையாத போக்யனுனவனே! “[illegible]”. [பவித்திரனே] - ஸம்ஸாரிகளையும் அந்யபரதையைப் போக்கி உன்பக்கலிலே ப்ரவணராக்கிக் கொள்ளுமவனே! பன்னலாரென்று - முமுக்ஷுக்களைச் சொல்லிற்ருகவுமாம். பவித்திரனே - அவர்களுக்கு த்வதநுபவ விரோதிகளைப் போக்குமவனே! [கன்னலே] - நிரதிஶயபோக்யனுனவனே! [அமுதே] - போனவுயிரை மீட்கவற்ருகை. [கார்முகிலே] - ப்ரயோஜந நிரபேக்ஷமாகக் கொடுக்கை. [என்கண்ணு] - எனக்கு உன்னைத் தந்தவனே! [நின்னலால்இலேன்காண்] - உன்னையொழிய ரக்ஷகரையுடையேனல்லேனென்னுதல், உன்னையொழியத் தரிக்கமாட்டேனென்னுதல். [என்னை] - “[illegible]” என்று தம்மைக் காட்டுகிருர். [குறிக்கொள்ளே] - திருவுள்ளம்பற்றவேணும்.

ஈடு.—ஏழாம்பாட்டு. இப்படி தாம்பெற்ற பேற்றின்கனத்தையும் அநுஸந்தித்து, இவ்விஷயத்தினுடைய போக்யதையையும் அநுஸந்தித்து, ‘இதுஇருந்தபடி கண்டோமுக்குத் தோங்காதுபோலே யிருந்தது’ என்று அதிஶங்கைபண்ணி, ‘தேவர் என்னைக் கைவிடில் நான்உளேனுகேன்; என்னைக் கைவிடாதொழியவேணும்’ என்கிருர்.

ஏழாம்பாட்டு - முன்னல் இத்யாதி. பேற்றின்கனத்தையும் என்றது - கீழ்ப்பாட்டுக்களெல்லாவற்றையுங் கடாக்ஷித்து. போக்யதையும் என்றது - இப்பாட்டில் பதங்களைக் கடாக்ஷித்தாதல், “வீட்டின்பமே - கடற்படாவமுதே” என்றத்தைப்பற்றவாதல். கண்டோமுக்கு - கண்டநமக்கு. தோங்காதுபோலே - நில்லாதுபோலே. உளேனுகேன் - ஸத்தாவானுகேன்.

[முன்னல் இத்யாதி] - "முன்னல்" என்கிற ஒற்றைப்போக்கி - முனலாக்கி, முரலாக்கி நிர்வஹிப்பாரு முண்டு. அன்றிக்கே, முன்னலென்றது - உன்னலாய், உன்னல் - நினைத்தலாய், இனிமையாலே 'அதுஅது' என்று வாய்புலற்றும்படியிருக்கை. அன்றிக்கே, முன் - ஶாஸ்த்ரத்தினுடைய பழமையாய், ஆதியிலேயுண்டாய், நல் - அதுதான் நன்றாய், யாழ்பயில்நூல் - யாழ்விஷயமாக அப்யஸிக்கப்படுவதான நூலுண்டு - ஶாஸ்த்ரம். அந்த ஶாஸ்த்ரோக்தமானபடியே. [நரம்பின்முதிர்சுவையே] - நரம்பிலே தடவப்பட்ட - அதிலேபிறந்த பண்பட்ட ரஸம்போலே போக்யனானவனே! மிடற்றைச் சொல்லாதொழிந்தது - கர்மாநுகுணமாகப் போதுசெய்யுமது உண்டாகையாலே அதுக்கு. இப்படி போக்யதை குறைவற்றால் போக்தாக்கள் வேணுமே, அவர்களைச் சொல்லுகிறது மேல்; [பன்னலார் பயிலும் பரனே] - "தெள்ளியார்பலர்கைதொழுந்தேவனார்" என்கிறபடியே - தாங்கள் பலராய், பகவத்குணங்களுக்கு தேசிகராயிருந்துள்ள நித்யஸூரிகள் ஸதாநுபவம்பண்ணாநின்றாலும்; அநுபூதாம்ஶம் அளவுபட்டு அநுபாவ்யாம்ஶமே பெருத்திருக்கை. [பவித்திரனே] - நித்யஸம்ஸாரிகளுக்கும் நித்யஸித்தரோபாதி உன்னை அநுபவிக்கைக்கு யோக்யராம்படியான சுத்தியைப் பிறப்பிக்குமவன். அன்றிக்கே, பன்னலாரென்று - முமுக்ஷுக்களை யாக்கி, அவர்கள்எப்போதும் அநுபவியாநின்றாலும் தொலையாத போக்யதையை யுடையையாய், அவர்களுக்கு த்வதநுபவவிரோதியைப்போக்கும் சுத்தியோகத்தையுடையவனே! என்றுமாம். [கன்னலே] - எனக்கு நிரதிஶயபோக்யனானவனே! [அமுதே] - என்னைச் சாவாமல் ஜீவிப்பித்துக்கொண்டு போருகிறவனே! [கார்முகிலே] - ஔதார்யத்தைப்பற்ற. [என்கண்ணா] - தன்னைக் கொடுத்தபடி. இவ்வளவும் இவருடைய ஶங்காஹேது. [நின்னலால் இலேன்காண்] - உன்னையொழிய அரை க்ஷணம் ஜீவிக்கமாட்டேன். உன்னையொழிய ரக்ஷகரை யுடையேனல்லே னென்றுமாம். [என்னைநீகுறிக்கொள்ளே] - என்னைப் பார்த்தருளவேணு மென்னுதல், என்னைத் திரு

ஒற்றைப்போக்கி - ஒற்று - ஸம்யுக்தாக்ஷரம். முனலாக்கி முரலாக்கி என்றது - "ஈராலாம்" என்கிற லக்ஷணத்தினாலே ரேபநகாரங்களுக்கு பேதமில்லாமையைப்பற்ற. முனலுகை - முரலுகை. அதாவது - ஶப்திக்கை. முந்தின அர்த்தத்துக்கு, ஶப்தியாநின்றுள்ள யாழ்விஷயமாக அப்யஸிக்கப்படாநின்றுள்ள ஶாஸ்த்ரோக்த க்ரமத்திலே நரம்பிலே தடவப்பட்ட - அதிலேபிறந்த பண்பட்ட ரஸம்போலேயிருக்கிறவனே யென்றபடி. த்விதீயார்த்தத்துக்கு 'முன்னல்' என்றது - நூலுக்கு விஶேஷணம். ஶாஸ்த்ரத்தினுடைய - காந்தர்வஶாஸ்த்ரத்தினுடைய. நரம்பிலே தடவப்பட்ட என்றதுக்கு விவரணம் - அதிலேபிறந்தஎன்று; நரம்பிலே தடவுகையாலே பிறந்த வென்றபடி. பட்ட - பிறந்த. பண்பட்ட வென்றது - "முதிர்" என்றதின் அர்த்தம். யாழ் - வீணை. மிடற்றிலுண்டான கானத்தைச் சொல்லாதொழிவானென்? என்ன, மிடற்றை இத்யாதி. போதுசெய்யுமது - ஶ்லேஷ்மாதிகளாலே விகாரிக்குமது. பன்னலார் இத்யாதி - பலராய் தேஶிகரான நித்யஸூரிகளுக்கும் அளவிறந்தவனென்று விவக்ஷித்து அதுக்கு ப்ரமாணம் - தெள்ளியார் இத்யாதி நாய்ச்சியார் திருமொழி. ௪-௧. தெளிவுடையார் பலர் கைதொழும்படியிருக்கிற தேவரானவ ரென்கை. நன்மைக்குஅர்த்தம் - தேஶிகராயிருந்துள்ள என்றது. 'பயிலும்' என்றவர்த்தமானார்த்தம் - ஸதாநுபவம் இத்யாதி. பவித்ரம் - ஸ்வதஶ்ஶுத்தமாய், ஶுத்த்யாபாதகமுமாயிருக்குமது. அதில், ஶுத்த்யாபாதகத்வத்தை அருளிச் செய்கிறார் - நித்யஸம்ஸாரிகளுக்கும் இத்யாதி. தொலையாத - பரிச்சிந்நமாகாத. ஶுத்தியோகத்தை அருளிச் செய்கிறார்-அவர்களுக்கு இத்யாதி. கன்னல் - வெல்லம். என்னைச் சாவாமல் இத்யாதியாவது - வாயுந்திரையுகளிலே விஶ்லேஷித்து முடியாதபடி ஜீவிப்பித்தவனே யென்றபடி. சிறத்தைப்பற்றவுஞ் சொல்லலாமாகையாலே அத்தை நிவர்த்திப்பிக்கிறார் - ஔதார்யத்தைப்பற்ற என்று. ஔதார்யசரமாவதி - தன்னைக்கொடுத்தபடி யென்று. குறிக்கொள்ளுகையாவது - மெய்க்காட்டைக் கொள்ளுகையாய், பார்க்கையைச் சொல்லுகிறது. 'குறிக்

வுள்ளம்பற்ற வேணு மென்னுதல். [என்னை] - உன்னையொழிந்தவன்று அசித்ப்ராயனை என்னை. [நீ] - இதுக்கு தாரகனை நீ யென்றுமாம். (எ)

எட்டாம்பாட்டு.

குறிக்கோள்ஞானங்களால் எனையூழிசெய்தவமும்
கிறிக்கொண்டிப்பிறப்பே சிலநாளிலெய்தினன்யான்
உறிக்கொண்டவெண்ணெய்பால் ஒளித்துண்ணுமம்மான்பின்
நெறிக்கொண்டநெஞ்சனாய்ப் பிறவித்துயர்கடிந்தே.

ஆ.—(குறிக்கொள்.) தாம் இப்படி எம்பெருமானை அபேக்ஷிக்க, அவனும், 'நாம் விஶ்லேஷிக்க ப்ரஸங்கமென்?' என்று அருளிச்செய்ய, தாமும் நிவ்ருத்தாதிஶங்கராய்க்கொண்டு, அதிதுஷ்கரமாய் அநேககாலஸாத்யமான கர்மயோக ஜ்ஞாநயோக ஸஹக்ருதபக்தியோக ஸாத்யமான ஸம்ஸாரநிவ்ருத்திபூர்வக பகவதநுபவத்தை இஜ்ஜந்மத்திலே அல்பகாலத்திலே அயத்நேந நான் பெற்றேனென்று தாம்பெற்ற ஸம்ருத்தியைச் சொல்லி அநுபவிக்கிறார்.

ஒ.—எட்டாம்பாட்டில்; 'கீழ்ப்பாட்டில் நீர்பண்ணின விஶ்லேஷத்துக்கு ப்ரஸங்கமுண்டோ?' என்று எம்பெருமான் அருளிச்செய்ய, அத்தாலே தரித்த ஆழ்வார், அநேககால ஸாத்யமான நிரதிஶய புருஷார்த்தத்தை இஜ்ஜந்மத்திலே அல்பகாலத்திலே அயத்நேந பெற்றேனென்று ப்ரீதராகிறார்.

[குறிக்கொள்என்று தொடங்கி] - யமநியமாதி க்ரமங்களாலே அவஹிதராய்க்கொண்டு ஸம்பாதிக்கும் பக்திரூபஜ்ஞாநங்களாலே அநேககாலஸாத்யமான புருஷார்த்தத்தை. [யான்] - 'இங்ஙனே யிருப்பதொரு புருஷார்த்த முண்டு' என்றும் அறியாத நான், அநாவிலமாயிருப்பதோருபாயத்தைக் கொண்டு. [உறிக்கொண்ட வெண்ணெ யென்று மேலுக்கு] - தன்திருவடிகளை ஆஶ்ரயித்தாரது ஏதேனுமொரு த்ரவ்யத்தாலல்லது தரியாத ப்ரக்ருதியாகையாலே உறிகளிலே வைத்த வெண்ணெயும் பாலு மெல்லாம் போக்கினேன். இது - பேறுவது. கிறியாவது-பகவத்ப்ரஸாதம் [உறிக்கொண்ட வெண்ணெய் பாலென்று தொடங்கி] - எம்பெருமான் சரமஶ்லோகத்தில் அருளிச்செய்தபடியே; பிறவித்துயர்கடிந்து - பகவத்ப்ராப்திக்கு உபலக்ஷணம். இப்படியும் நிர்வஹிப்பர்.

கொள்' என்றதின் அர்த்தத்வயத்துக்கும் சேர அர்த்தத்வயம் - உன்னை இத்யாதி. இதுக்கு - இவ்வாத்மவஸ்துவுக்கு. 'இதுக்கு தாரகனை நீ யென்றுமாம்' என்றிருக்கையாலே - "நின்னலாலிலேன்" என்றதின் அர்த்தத்வயாநுகுணமாக "என்னை, நீ" என்கிறவிடத்திலும் அர்த்தத்வயபரமான வாக்யங்கள் சில ஸ்ரீகோஶங்களிலே யில்லாதபோது, "ரக்ஷகனை நீ ரக்ஷ்யமான என்னை" என்றும் ஓரர்த்தம் அத்யாஹரித்துக் கொள்வது. "முன்னல்யாழ்" இத்யாதிக்கு - அன்றிக்கே, முன்னலென்றது - உன்னலாய், உன்னல் - நினைத்தலாய், இனிமையாலே "அதுஅது" என்று வாய் புலற்றும்படி யிருக்கை என்றுமோரர்த்தம் சில ஸ்ரீகோஶங்களிலே யிருக்கிறது; இந்தவாக்யத்திலே, நினைத்தலா யென்றது - தத்கார்யமான வாய்புலற்றலை லக்ஷித்து, இனிமையாலே வாய் புலற்றும்படியிருக்கு மென்று யாழுக்கு விஶேஷணமாதல், நூலுக்கு விஶேஷணமாதல். க்ரமேண அந்வயः. (எ)

ப.—அநந்தரம், இவ்வநுபவம் தமக்குக் கைவந்தபடியை அருளிச்செய்கிருர்.

உறிக்கொண்ட - உறியிலே சேமித்துவைத்துக்கொண்ட, வெண்ணெய்-வெண்ணெயையும், பால் - பாலையும், ஒளித்து - (உடையவர்கள் அறியாமல்) க்ருத்ரிமத்தாலே புக்கு, உண்ணும் - அமுதுசெய்த செயலாலே, அம்மான் - (அடிமைகொண்ட) ஸ்வாமியான க்ருஷ்ணனுடைய, பின் - பின்னே (அவ்வபதாநத்துக்குத் தோற்று), நெறி - (அவன்போன) வழியே, கொண்ட - போய்த்திரிகிற, நெஞ்சனுய் - நெஞ்சையுடையேனுய், பிறவித்துயர் - ஜந்மப்ரயுக்த துரிதங்களை, கடிந்து - காற்கடைக்கொண்டு அநாதரித்து, குறிக்கொள் - (கர்த்ருத்வாதி த்யாகத்தாலும் யமநியமாதிகளாலும்) குறிக்கொள்ளப்படுவதான, ஞானங்களால் - (வேதநத்யாநோபாஸநரூப பர்வபேதங்களாலும் ஸத்வித்யா தஹரவித்யாதி வ்யக்தி பேதங்களாலும்) பலவகைப்பட்ட ஜ்ஞாநயோகங்களாலே, “ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு”, “பஹூநாம் ஜந்மநாமந்தே” என்கிறபடியே, எனையூழி - அநேககாலங்களிலே, செய் - செய்யப்பட்ட, தவமும் - (பக்தியோகமாகிற) தபஸ்ஸினுடைய பலத்தை, கிறிக்கொண்டு - (பகவத்க்ருபையாகிற) நல்விரகைக்கொண்டு, இப்பிறப்பே - இஜ்ஜந்மத்திலே, சிலநாளில் - அல்பகாலத்திலே, யான் - (அநுபவத்துக்கு அடைவில்லாத) நான், எய்தினன் - கிட்டப்பெற்றேன். கிறி - விரகு.

ஈ.—எட்டாம்பாட்டில், ‘என்னை நீ குறிக்கொள்’ என்று நீர் விஶ்லேஷஶங்கை பண்ணும்படியோ உமக்கு நாம் செய்தவை? என்ன, அவ்வுபகாரங்களை அநுஸந்தித்து ப்ரீதராகிருர்.

[குறிக்கொள் இத்யாதி] - யமநியமாதி க்ரமத்தாலே அவஹிதராய்க்கொண்டு ஸம்பாதிக்கும் பக்திரூபாபந்ந ஜ்ஞாநங்களாலே வேதநோபாஸந த்யாநாத்யவஸ்த்தா விஶேஷங்களாலே - பலவாகச்சொல்லுகிறது. [எனையூழி இத்யாதி] - அநேககால ஸாத்யமான புருஷார்த்தத்தை, அநாயாஸேந பெறலாவதொரு நல்விரகைப் பெற்று. தபஸ்ஸென்று - தத்பலத்தைச் சொல்லுகிறது. கிறியென்று - பகவத்ப்ரஸாதம். [இப்பிறப்பு இத்யாதி] - இஜ்ஜந்மத்திலே, அதுதன்னிலும் அல்பகாலத்திலே பெற்றேன். [யான்] - ‘ஒரு புருஷார்த்தமுண்டு’ என்றுஅறியாத நான். [உறிக்கொண்ட இத்யாதி] - கீழ் ‘எய்தினன்’ என்கிற பேற்றைச் சொல்லிற்றுதல், ‘கிறி’ என்கிறத்தை உபபாதிக்கிறதாதல். கிறியானபோது [உறிக்கொண்ட வெண்ணெய்பால்] - லோபத்தாலேயாதல், ‘இவனுக்கு ஸாத்மியாது’ என்றுதல் உறியிலே சேமித்துவைத்த வெண்ணெயையும் பாலையும். [ஒளித்துண்ணும்] - ‘தைவங்கொண்டதோ’ என்னும்படியாயிற்று அமுதுசெய்வது. ஐஶ்வரமான மாயையாலன்றிக்கே, களவில் வாஸநை யிருந்தபடி [அம்மான்] - நவநீதசௌர்ய வ்ருத்தாந்தத்தாலே நாட்டை எழுதிக்கொண்டபடி. [பின்னெறிக்கொண்ட நெஞ்சனுய்] - அவனொளித்தாலும் பெருநிலைக்கள்ளரான இவர்க்குத் தெரியாமை யில்லையே. திருத்தேர்த்தட்டிலே அர்ஜுநன் சரமஶ்லோகங் கேட்டது; இவர், வெண்ணெய் களவுகாணப்புக்க இடத்தேயாயிற்று கேட்டது. அர்ஜுநனுக்கு உபதேசித்த அம்ஶத்தைச் சொல்ல நினைத்து, அவ்வளவும்போகமாட்டாதே நவநீதசௌர்ய வ்ருத்தாந்தத்திலே நடுவேமோஹிக்கிருர் அநதரஹஸ்யத்தைப் பின்சென்ற நெஞ்சனுய். [பிறவித்துயர்கடிந்தே] - அதின் பலமாக ஸம்ஸாரதுரிதத்தைக் கடிந்தேன். “ஸஹநாவவது ஸஹநௌ” என்கிற இடம் - ப்ராப்திக்கும் உபலக்ஷணம். ப்ராப்யத்தைச்

சொல்லிற்றனபோது க்ருஷ்ணனே ப்ராப்யனும். [பின்னெறிக்கொண்ட நெஞ்சனாய்] - '.ெயநெயநயாதாஜு' . [பிறவித்துயர் கடிந்தே] - விரோதிநிவ்ருத்தியும் ப்ராப்யாந்தர்க்கதமிறே. பிறவித்துயர்கடிந்தே னென்னுதல், கடிந்தே - எய்தினன் என்னுதல்.

எ௫.—எட்டாம்பாட்டு "என்னை நீ குறிக்கோள்ளே" என்றவாறே அவன் குளிரக்கடாக்ஷித்தான்; அத்தாலே ஸகலவ்யஸநங்களும் போய் அவனை அநுபவிக்கிறார்.

[குறிக்கோள் ஞானங்களால்] - யமநியமாத்யவஹிதராய்க்கோண்டு ஸம்பாதிக்கவேண்டும் ஜ்ஞாநவிஶேஷங்களாலே. அவையாவன - வேதந த்யாந உபாஸநாத்யவஸ்தாவிஶேஷங்கள. [எனையூழிசெய்தவமும்] - அநேககல்பங்கள் கூடி ஶ்ரவணமாய் மநநமாய் த்ருவாநுஸ்ம்ருதியாய், இங்ஙனே வரக்கடவதான தப பலத்தை. [கிறிக்கோண்டு] ஒருயத்நமின்றிக்கே யிருப்பதோரு விரகைப் பேற்று. அதாவது - அவன் தன்னையே கோண்டு என்றபடி. கிறி என்ன - அவனைக்காட்டுமோ? என்னில்; *"பேருங்கிறியார்" என்னக்கடவதிறே. இதுதான் எத்தனை ஜந்மங் கூடி யென்னில், - [இப்பிறப்பே] - இஜ்ஜந்மத்திலே. இஜ்ஜந்மமெல்லாங் கூடியோ? என்னில், [சிலநாளில்] - அல்பகாலத்திலே. அழகிது, ப்ராபிக்கக்கடவீராய் நின்றீரோ? என்ன, [எய்தினன்] - ப்ராபித்தேன் [யான்] - இப்பேற்றுக்கு ஒருயத்நம் பண்ணாத நான். [உறிக்கோண்ட இத்யாதி] - "தவமேய்தினன்" என்கிற பலத்தைச் சோல்லுகிறதாதல். "கிறிக்கோண்டு" என்கிற உபாயத்தைச் சோல்லுகிறதாதல். [உறி இத்யாதி] - உறிகளிலே சேமித்துக் கள்ளக்கயிறு உருவிவைத்த வெண்ணெயையும் பாலையும் 'தெய்வங்கோண்டதோ' என்னும்படி மறைத்து அமுசெய்த அச்சேயலாலே ஜகத்தை எழுதிக்

எட்டாம்பாட்டு - குறிக்கோள் இத்யாதி. 'பிறவித்துயர்கடிந்து தவமெய்தினன்' என்கிற பதங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை - என்னைநீ இத்யாதி.

குறி - குறிப்பு, ஸாவதாநதை. இத்தால் - யமநியமாத்யவஹிதத்வத்தைச் சொல்லுகிறது. எனையூழி - குறிக்கொள்ஞானங்களால் செய்தவமும் என்று அந்வயம் திருவுள்ளம்பற்றி, கீழே சொன்ன 'வேதந' இத்யாதியை விவரிக்கிறார் - அநேககல்பங்கள் இத்யாதி. வேதநத்தால் - ஶ்ரவணமநநங்களையும், த்யாநோபாஸநங்களாலே - நிதித்யாஸநத்தையும் அதினுடைய உத்தரோத்தராவஸ்த்தையையும், ஆதிஶப்தத்தால் - தர்ஶநரூபதையையுஞ் சொல்லுகிறது. இங்ஙனேவரக்கடவதான தப:பலத்தை - இங்ஙனே வரக்கடவதாயிருக்கிற யாதொரு தபஸ்ஸு உண்டு அதினுடைய பலத்தை யென்றபடி. "தவஞூஜொவநெ" என்கிற தாதுவாலும் "யஸ்ஜ்ஞாநமயந்தவ:" என்கிற ந்யாயத்தாலும், தபஶ்ஶப்தம் - ஜ்ஞாநாவஸ்தா விஶேஷமான பரபக்த்யாதிபரம். 'தவம்' என்றது - தப:பல மென்றபடி. பகவத்ப்ராப்திரூபபலே லக்ஷணை. 'குறிக்கொள்' இத்யாதி - அநேககாலங்களிலே யமநியமாத்யவஹிதங்களான ஶ்ரவணமநநாதி ரூபஜ்ஞாநங்களாலே வரக்கடவ பரபக்த்யாதிகளாகிற தபஸ்ஸினுடைய பலத்தை யென்று ஶப்தார்த்தம். கிறி - உபாயம். அவன் தன்னையேகோண்டு - அவன் தன்னையே உபாயமாகக்கொண்டு. தடஸ்த்தஶங்கையை அநுவதித்துப் பரிஹரிக்கிறார் - கிறியென்ன இத்யாதி. பேருங்கிறியார் - பெருவிரகர், மஹோபாயசாலிக ளென்றபடி. 'பின்னெறிக்கொண்டநெஞ்சனாய்' என்றதுக்கு அர்த்தத்வயம். பலபரமாகவும் உபாயபரமாகவுங் காட்டுகிறார் - தவமேய்தினன் இத்யாதி வாக்யத்வயத்தாலே. பலபரயோஜநை - உறிகளிலே இத்யாதி. "கொண்ட" என்றதின் அர்த்தம் - சேமித்து இத்யாதி. ஒளித்தின் அர்த்தம் - மறைத்து

---

* திருவிருத்தம் - கக.

கொண்டவனுடைய. [பின்னெறிக்கொண்டநெஞ்சனாய்] – அவன்பின்னே நெறிப்பட்ட நெஞ்சையுடையனாய்; "யேநயேந யாதாகச்சதி தேநதேநஸஹகச்சதி" (யேநயேந தாதாகச்சதி தேநதேநஸஹகச்சதி) என்கிறபடியே. அன்றியே, பின்னெறிக்கொண்ட என்கிறது, ப்ரபத்தியை. பின்னெறி என்கிறது - பின்னே சொன்ன நெறி யென்றபடி. நெறி-வழி. [பிறவித்துயர்கடிந்தே] - பலத்தைச் சொன்ன இடத்திலே விரோதிநிவ்ருத்தியையுஞ் சொல்லிக்கிடந்ததிறே; அத்தைச்சொல்லுகிறது. அன்றியே, [பின்னெறிக்கொண்டநெஞ்சனாய்] - பாரதஸமரத்திலே அர்ஜுநனுக்கு ஓரவஸ்த்தையைப் பிறப்பித்திறே உபாயத்தை உபதேசித்தது; இவர் வெண்ணெய்களவுகாணப் போனஇடத்திலே அடியோற்றிக் கொண்டுசென்று அவன்புக்க க்ருஹத்திலே படலைத் திருகிவைத்தாயிற்று கேட்டுக்கொண்டது. [பிறவித்துயர்கடிந்தே] - "ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி" (ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி) என்றே வைத்தானிறே. (அ)

ஒன்பதாம் பாட்டு.

கடிவார்தண்ணந்துழாய்க் கண்ணன்விண்ணவர்பெருமான்
படிவானமிறந்த பரமன்பவித்திரன்சீர்ச்
செடியார்நோய்கள்கெடப் படிந்துகுடைந்தாடி
அடியேன்வாய்மடுத்துப் பருகிக்களித்தேனே.

ஆ.—(கடிவார்.) நிரவதிகபோக்யபூதனாய், அயர்வறுமமரர்க ளதிபதியாய், திருநாட்டிலுங்கூடத் தன்னோடு ஒத்தாரையும் மிக்காரையு முடையவனல்லாமையாலே

என்றது. அவன்பின்னே நெறிப்பட்ட நெஞ்சையுடையனாய் - அவன்பின்னே வழிப்படும்படியான நெஞ்சையுடையனாய். அதாவது - கைங்கர்யத்திலே அந்வயித்த நெஞ்சையுடையனா யென்றபடி. உபாயபரயோஜநாமாஹ - அன்றியே இத்யாதி. பின்னெறிக்கொண்ட நெஞ்சனாய் - பின்பு சொன்ன சரமச்லோகோக்தமான உபாயத்திலே அந்வயித்த நெஞ்சையுடையனா யென்று இரண்டாமர்த்தம். பலஞ்சொல்லுகிறவிடத்திலே விரோதிநிவ்ருத்தியைச் சொல்லுவானென்? என்ன,-பலத்தை இத்யாதி. அதாவது - பலபரமான சரமச்லோகத்தில் உத்தரார்த்தத்திலே யென்றபடி. "மாமேகம் சரணம் வ்ரஜ" என்றஇடத்திலே, "மோக்ஷயிஷ்யாமி" என்றுஞ் சொல்லிக்கிடந்ததிறே; அப்படியே இங்கும் "பிறவித்துயர்கடிந்து" என்று விரோதிநிவ்ருத்தியைச் சொல்லுகிறதென்றபடி. இந்தவாக்யம் - பலபரபூர்வயோஜநாசேஷம். "உறிக்கொண்ட" இத்யாதிக்கு ரஸமாக த்ருதீயதாத்பர்யம்-பாரதஸமர இத்யாதி உறிக்கொண்ட வெண்ணெயையும்பாலையும் ஒளித்து உண்ணுகிற்கிற அம்மான்பின் சென்று, நெறியான ப்ரபத்த்யுபாய ப்ரதிபாதக சரமச்லோகத்தை க்ரஹித்த நெஞ்சையுடையனா யென்று ஸமுதாயார்த்தம். ஓரவஸ்த்தையைப் பிறப்பித்து-மோஹயுக்தாவஸ்த்தையைப் பிறப்பித்து. இவர் - ஆழ்வார். அடி யோற்றிக்கொண்டு சென்று - அடிபிடித்துக் கொண்டுபோய்; பின்னே சென்று என்றபடி. "பலத்தைச் சொன்னவிடத்திலே" இத்யாதி வாக்ய விவரணம் - ஸர்வபாபேப்ய இத்யாதி. இவ்விடத்தில் ததிபாண்டன்கதையை நினைப்பது. யான், உறிக்கொண்ட இத்யாதப்ய, நெஞ்சனாய்ப் பிறவித்துயர் கடிந்து - எனையூழி குறிக்கொள்ஞானங்களால் செய்தவமும் இறிக்கொண்டு இப்பிறப்பே சில நாளி லெய்தினன் என்று அந்வயம். (அ)

பரமனாய், ஸ்வாஶ்ரிதருடைய ஸ்வஸம்ஶ்லேஷ விரோதிஸர்வதோஷங்களையும் போக்கும் ஸ்வபாவனாயிருந்த எம்பெருமானுடைய கல்யாணகுணங்களாகிற அம்ருதவெள்ளத்திலே என்னுடைய விடாயெல்லாங் கெடும்படி போய்ப்புக்குப் படிந்து குடைந்தாடி வாய்மடுத்துப் பருகிக் களித்தேன் அடியேன் என்கிறார்.

ஒ.—ஒன்பதாம்பாட்டில், எம்பெருமானுடைய குணங்களைப் பெரியவிடாயோடேகூட அநுபவித்துக் களிக்கப்பெற்றே னென்கிறார்.

[கடிவாரென்று தொடங்கி] - திருவுடம்பில் ஸ்பர்ஶத்தாலே எப்போதும் ப்ரவ்ருத்த மதுதாரமான திருத்துழாயாலே அலங்க்ருதனான க்ருஷ்ணன். [விண்ணவரென்று தொடங்கி] - இவ்வழகாலே அயர்வறுமமரர்களை ப்ரதிக்ஷணந் தோற்பித்து அவர்களை அடிமை கொள்வதுஞ் செய்து திருநாட்டிலுங் கூட ஒருபடியாலுந் தன்னொடொத்தாரை உடையனன்றிக்கே, எல்லாரிலும் மேற்பட்டுள்ளானுமாய், ஸம்ஸாரத்தில் ஆஶ்ரயித்தார்க்குத் தன்னோட்டை ஸம்ஶ்லேஷத்துக்கு விரோதியான பாபத்தைப் போக்குமவனுடைய கல்யாண குணங்களிலே வாயுந்திரையுகளிற் பிறந்த வ்யஸநமெல்லாம் தீரும்படி ப்ரவேஶித்து மிகவும் அவகாஹித்து. [படிவானமிறந்த பரமன்] - மேகம் ஒப்பாக மாட்டாத திருநிறத்தை யுடைய னென்றுமாம். [செடியார் நோயென்று] - ஸம்ஸார துரித மென்னவுமாம்.

ப.—அநந்தரம், இப்படி அவன்குணங்களை அநுபவித்து ஆநந்தியானேனென்கிறார்.

கடி - பரிமளம், வார் - ப்ரவஹிபாநிற்கிற, தண்ணந்துழாய் - செவ்வித்திருத்துழாயையுடையனாய்க்கொண்டு, கண்ணன் - ஆஶ்ரிதபவ்யனான க்ருஷ்ணனாய், விண்ணவர்பெருமான் - (இவ்வடிவழகை யநுபவிக்கிற) பரமபதவாஸிகளுக்கு அவ்வருகான மேன்மையையுடைய தனக்கு, வானம் - பரமபதத்திலும், படி இறந்த - ஒப்பு இல்லையாகையாலே, பரமன் - தனக்கு மேலில்லையான பெரியவனாய், பவித்திரன் - (இப்பெருமையறியாதாரறிவுகேட்டையும் போக்கி யநுபவிப்பிக்கும்)பாவநபூதனுடைய,சீர்-(பரத்வ ஸௌலப்யபோக்யத்வபாவநத்வ ப்ரகாசகமான) குணங்களிலே, செடியார் - ஒன்றோடொன்று மிடைந்து தூறுமண்டினாற்போலே யிருக்கிற, நோய்கள் - (விஷயருசிதொடக்கமான) மஹாவ்யாதிகள், கெட - நஶிக்கும்படி, படிந்து - கிட்டி, குடைந்து - எங்கும் உட்புக்கு, ஆடி - முழுகி, அடியேன் - (அவனையொழியச்செல்லாதபடி அநந்யார்ஹனான) நான், வாய்மடுத்து - (புஜிக்கைக்குஉபகரணமான அபிநிவேஶமாகிற) வாயை மடுத்து, பருகி - (பெருவிடாயன் தண்ணீர்குடித்தாற்போலே) நிரம்பபுஜித்து, களித்தேன்-நிரதிஶயமான ஆநந்தத்தைப் பெற்றேன். படிவானமிறந்த வென்று - வடிவழகுக்கு மேகம் ஒப்பல்ல வென்றுமாம்.

இ.—ஒன்பதாம்பாட்டில், "ஸோ஽ஶ்நுதே" என்கிறபடியே ஒருதேஶ விஶேஷத்தில் குணாநுபவத்தை இங்கே அநுபவிக்கப் பெற்றே னென்கிறார்.

[கடிவாரென்று தொடங்கி]-திருமேனியில் ஸ்பர்ஶத்தாலே பிறந்த மதுதாரைகளை யுடைத்தான திருத்துழாயாலே அலங்க்ருதனான க்ருஷ்ணன். கடியென்று - பரிமளமாய், வாரென்று - மிகுதியாகவுமாம். கடியென்று - புதுமையாய், செவ்வி மிக்க என்னவுமாம். [விண்ணவர் பெருமான்] - இவ்வழகுக்கு போக்தாக்களைச் சொல்லுகிறது. நித்யாநுபவம் பண்ணாநிற்கச் செய்தேயும், க்ஷணந்தோறும் தோற்று எழுதிக் கொடாநிற்பர்கள். [படிவானமிறந்தபரமன்] - பரமபதத்திலும் ஒப்பில்லாத பரமன்.

வானமென்று - மேகமாய், வெறும்புறத்திலே மேகமும் ஒப்பன்று என்னவுமாம். [பவித்திரன்] - ஸம்ஸாரிகளை நித்யஸூரிகளோடே ஒருகோவையாக்கவல்ல ஶுத்தியுக்தன். [சீர்] - சீரிலே. [செடி இத்யாதி] - வாயுந்திரையுகளில் தூறுமண்டின க்லேசமெல்லாம் போம்படி. ஸாம்ஸாரிக துரித மென்னவுமாம். [படிந்து] - சென்றுகிட்டி. [குடைந்து]- எங்கும்புக்கு. [ஆடி] - அவகாஹித்து. [அடியேன் வாய்மடுத்துப்பருகி] - பெருவிடாயோடே அநுபவித்து. [களித்தேனே]-இதரவிஷய ஸ்பர்ஶம் துःகமேயானாற்போலே, பகவத்குணாநுபவம் களிப்பேயாகக்கடவது.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. "ஸோஶ்நுதே ஸர்வாந்காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபஶ்சிதா" (ஸோஶ்நுதேஸர்வாந்காமாந் ஸஹ ப்ரஹ்மணு விபஶ்சிதா) என்கிறபடியே, என்னுடைய ஸகலதுரிதங்களும் போம்படி ஸர்வேஶ்வரனை அநுபவிக்கப்பெற்றேனென்று ஹ்ருஷ்டராகிறார்.

[கடிவார் தண்ணந்துழாய்க் கண்ணன்] - பரிமளப்ரசுரமான திருத்துழாய் மாலையையுடைய க்ருஷ்ணனென்னுதல்; மது ஸ்யந்தியாநின்றுள்ள திருத்துழாயையுடையவ னென்னுதல். [விண்ணவர்பெருமான்] - இவ்வொப்பனையழகாலே எழுதிக்கோள்வது, அநந்தவைநதேயாதிகளை யாயிற்று. [படிவானமிறந்தபரமன்] - தன்படிக்கு வானிலுள்ளார் ஒப்பாகாதபடி யிருக்கிற பரமன் பரமஸாம்யாபந்நரான நித்யஸூரிகளும் தன்படிக்குஒப்பாகாதபடியான மேன்மையையுடையவ னென்னுதல்; தன்திருமேனிக்கு வானமுண்டு - மேகம், அது ஒப்பாகாதபடியிருக்கிறவ னென்னுதல். [பவித்திரன்] - இவ்வடிவழகை ஸம்ஸாரிகளும் அநுபவிக்கைக்கு யோக்யராம்படி பண்ணும் சுத்தியையுடையவனுடைய சீருண்டு - கல்யாணகுணங்கள் - அவற்றை, அடிகாணவொண்ணாதபடி தூறுமண்டிக்கிடக்கிற ஸாம்ஸாரிக ஸகலதுரிதங்களும் போம்படி வந்துகிட்டி, நாலுமூலையும் புக்கு அவகாஹித்து, அநந்யார்ஹனான நான் முழுமிடறுசெய்துஅநுபவித்து, யமாதிகள் தலையிலேயும் அடியிட்டுக் களிக்கப்பெற்றேன். படிந்து - கிட்டி. குடைந்து - எங்கும்புக்கு. ஆடி - அவகாஹித்து. அடியேன், வாய்மடுத்துப் பருகி - பெருவிடாயோடே அநுபவித்து. [களித்தேனே] - இதரவிஷயஸ்பர்ஶம் துःகமேயானாற்போலே, பகவத்குணாநுபவம் களிப்பேயாகக்கடவது. (௯)

ஒன்பதாம்பாட்டு-கடிவார் இத்யாதி. 'செடியார் நோய்கள்கெட-சீர்-வாய்மடுத்துப்பருகிக் களித்தேன்' என்ற பதங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை-ஸோஶ்நுதே இத்யாதி. துரிதங்களும்- துःகங்களும்.

கடி - *பரிமளமும், மதுவும்.* வார்தல் - *மிகுதியும், ஒழுகுதலும். கீழோடே கூட்டி அர்த்தம்* - இவ்வொப்பனை *இத்யாதி.* படி - *ஸ்வபாவமும், விக்ரஹமும்.* வான மென்றது "த்யௌர்நக்ஷத்ரமாலிநீ" *இதிவத், வானிலுள்ளாரைச் சொல்லுதல்; மேகத்தைச் சொல்லுதல்.* இறந்த - *ஒப்பாகாத.* "ந தஸ்ய ப்ரதிமா அஸ்தி" "ந தத்ஸமஶ்சாப்யதிகஶ்ச த்ருஶ்யதே" *இத்யாதி. 'செடியார்' என்றதின் அர்த்தம் - தூறுமண்டிக்கிடக்கிற என்று.* தூறுவது - *அவித்யாதிகள்.* ஆர்தல் - *பூர்த்தி. 'படிந்து, குடைந்து,ஆடி' என்கிற பதத்ரயத்துக்கும் க்ரமேண அர்த்தம்-கிட்டி இத்யாதி.* வாய்மடுத்துப் பருகி-*முழுமிடறுசெய்து அநுபவித்து, மிடறு நிறையக் குடித்தென்றபடி.* வாய்மடுத்துக் *குடித்தென்று ஶப்தார்த்தம்.* மடுத்து - *மடக்கிட்டு: பாநபாத்ரமாக்கி யென்றபடி. ஆநந்தஸ்ய சரமாவதிமாஹ* - யமாதிகள் *இத்யாதி. 'வாய்மடுத்து' என்றதுக்கு ஹாவம் - பெருவிடாயோடே என்று. 'களித்தேனே' என்ற* ஏவகாரார்த்தம் - இதரவிஷய *இத்யாதி.* ஏவகாரம் - *அந்யயோக வ்யவச்சேதபர மென்றபடி. க்ரமேண அந்வயः.* (௯)

பத்தாம் பாட்டு.

களிப்புங்கவர்வுமற்றுப் பிறப்புப்பிணிமூப்பிறப்பற்று
ஒளிக்கொண்டசோதியமாய் உடன்கூடுவதென்றுகொலோ?
துளிக்கின்றவானிந்நிலம் சுடராழிசங்கேந்தி
அளிக்கின்றமாயப்பிரான் அடியார்கள்குழாங்களையே.

ஆ.—(களிப்பும்.) இப்படி எம்பெருமானுடைய குணங்களாகிற அம்ருதத்தை புஜிக்கிற ஆழ்வார், 'இந்தஅம்ருதத்தை, நிரஸ்தஸமஸ்த ப்ரதிபந்தகனுய்க்கொண்டு பகவத்குணைகபோகரான நித்யஸித்தபுருஷர்களுடைய திவ்யபரிஷத்திலேசென்று அவர்களோடேகூட நான் புஜிப்பதுஎன்றோ?' என்கிறார்.

ஒ.—பத்தாம்பாட்டில், 'ஸாம்ஸாரிக துரிதமெல்லாம் ஸமூலமாக நீங்கி அயர்வறு மமரர்களுடையஸமூஹங்களிலே சென்று புகுவதென்றோ?' என்று அநுபவித்த பகவத்குணங்களுக்கு உசாத்துணை தேடுகிறார்.

[களிப்புமென்று தொடங்கி] - விஷயலாபங்களால் வரும் களிப்பையும் விஷய ஸங்கத்தையும், அற்று - ஜந்மமும் ஜந்மப்ரயுக்தமான துரிதங்களுமெல்லாம் அற்று, பகவதநுபவத்துக்குப் பாங்கான தேஹத்தை யுடையோமாய். [துளிக்கின்றவானிந்நிலமென்று மேலுக்கு] - வர்ஷிக்கிற ஆகாசத்தையும் வர்ஷத்தாலே ஜீவித்துக்கிடக்கும் இந்த பூமியையும் தானே திவ்யாயுததரனுய்க்கொண்டு ரக்ஷித்தருளுகிற ஆஸ்சர்யபூதனுன எம்பெருமான்.

ப.—அநந்தரம், ஏவம்விதபோகாநந்தத்துக்கு முக்யபோக்தாக்கள் ஸூரிகளாகையாலே, அவர்களோடுகூடுகையை அர்த்திக்கிறார்.

களிப்பும் - (விஷயலாபத்தில்) களிப்பும், கவர்வும் - (ததலாபத்தில்) அபிநிவேஶமும்,அற்று - அற்று,பிறப்புப் பிணி மூப்புஇறப்புஅற்று - (அதுக்கடியான)ஜந்மவ்யாதிஜராமரணங்களும்அற்று, ஒளிக்கொண்ட - (ஆவிர்ப்பூதமான ஜ்ஞாநாதிகளாகிற) ஒளிகளுக்கு ப்ரகாசகமான, சோதியுமாய் - ஜ்யோதிர்மயவிக்ரஹத்தையுடையோமாய்க் கொண்டு, துளிக்கின்ற - வர்ஷிக்கிற, வான் - ஆகாசத்தையும், இந்நிலம் - (அத்தாலே தரிக்கிற) பூமியையும் (பாதகரஹிதமாம்படி), சுடர் - பேரொளியை யுடைய, ஆழி - திருவாழியையும், சங்கு - திருச்சங்கையும், ஏந்தி - ஏந்தி, அளிக்கின்ற - ரக்ஷித்தருளுகிற, மாயப்பிரான் - மஹோபகாரகனுடைய, அடியார்கள் - நித்யதாஸ்யைகநிரூபணீயரான ஸூரிகளுடைய, குழாங்களை - ஸங்கங்களை, உடன்கூடுவது - ஒருநீராம்படிஉடன்பட்டுக் கூடுவது, என்றுகொலோ - என்றோ? ஸமஸ்தவிரோதி நிவ்ருத்தி பிறந்து ஆவிர்ப்பூதஸ்வரூப ஸ்வபாவரானவர்க்கு ப்ராப்யம் அடியாரான ஸூரிகளென்று கருத்து.

இ.—பத்தாம்பாட்டில், இப்படி களித்து இன்னமும் ஹேயவிஷயங்களிலும் களிக்கஇராதே இதுவே யாத்ரையான நித்யஸூரிகள் திரளிலே புக்கு அவர்களோடே களிக்கப்பெறுவது எப்போது? என்கிறார்.

[களிப்புமென்று தொடங்கி]-அல்பாஸ்த்திரத்வாதிதோஷ துஷ்டமான விஷயலாபத்தால் வந்த களிப்பும்,அவை கிட்டாதொழிந்தால் 'இவைகிட்டாதொழியப்பெற்றோ

மே!' என்றுஇராதே பண்ணும் சாபலமும், இரண்டுக்கும்அடியான ஜந்மம், ஜந்மப்ரயுக்தமான வ்யாதி, ஒன்றால் பரிஹரிக்கவொண்ணாதே அவர்ஜநீயமாய்வரும் மூப்பு, இவற்றோடேயாகிலும் ஜீவிக்கநினைத்தால் வரும் நிரந்வயவிநாசம்-ஆக ஷட்பாவவிகாராதிகள் அற்று. [ஒளிக்கொண்ட]-சுத்தஸத்த்வமயமாகையாலே ப்ரகாசகமான ஶரீரத்தையுடையோமாய். [உடன்கூடுவதென்றுகொலோ] -'நான், எனக்கு' என்று அகன்று நிற்கவேண்டாதே அத்திரளிலே ஒருநீராகக்கூடுவதுஎன்றோ? 'வைஷ்ணவஸஹவாஸம்இனிது' என்றிருக்கச்செய்தேயும் அஹங்காரத்தாலே செய்யப்போகாதொழிகிறதிறே. [துளிக்கின்றஇத்யாதி]-வர்ஷிக்கிறஆகாசத்தையும், அத்தாலே ஜீவிக்கிற பூமியையும், ஸங்கல்பத்தாலன்றிக்கே கையுந் திருவாயுதங்களுமாய் ரக்ஷணமே யாத்ரையாயிருக்கிற ஆஶ்சர்யசக்தியுக்தனை ஈஶ்வரன். பரமபதத்தில்ஆபரணமாய்க் காட்சிதரும், இங்குஆயுதமாயிறே திவ்யாயுதங்களிருப்பது. [அடியார்கள் குழாங்களையே] - இவன்தன்னையேயன்றிக்கே இவனுடைய ரக்ஷகத்வத்திலே தோற்றிருக்கும் ததீயர்திரள்களை. [குழாங்களை]-திரளாகவேணும், அதுதான் அநேகமாகவேணும். இவ்விஷயத்துக்கு உசாத்துணையாம்போது அஸங்க்யாதராகவேணு மென்றிருக்கிறார்.

ஈடு.—பத்தாம்பாட்டு. 'களித்தேனே' என்று,திரியட்டும் ஸம்ஸாரிகளோடேயிருக்கையன்றியே, இவ்வநுபவத்துக்கு தேசிகரான நித்யஸூரிகள் திரளிலே போய்ப் புகுவது எப்போதோ?' என்கிறார்.

[களிப்பும்] - இதரவிஷயாநுபவத்தாலே வரும் களிப்பும். [கவர்வும்] - அவை பெறாதபோது ஆசைப்பட்டுவரும் க்லேசமும். [அற்று] - போய். இவையிரண்டுக்கும்அடியான ஜந்மம், அதுபுக்கவிடத்தே புகக்கடவதான வ்யாதி, அநந்தரம் வரும் ஜரை, 'இத்தோடேயாகிலும் இருந்தாலாகாதோ?' என்று நினைத்திருக்கச்செய்தே வரும் நிரந்வயவிநாசம் - இவையடையஅற்று [ஒளிக்கொண்டசோதியமாய்] - ரஜஸ்தமஸ்ஸுக்கள் கலசின இந்த சரீரம்போலன்றியே,சுத்தஸத்த்வமயமாய் நிரவதிகதேஜோரூபமான சரீரத்தையுடையோமாய். [உடன்கூடுவதுஎன்றுகொலோ] - 'நான், எனக்கு' என்றுஅகலவேண்டாத இவ்வுடம்புடையார் திரளிலே போய்ப்புக்கு நெருக்கப்பெறுவதுஎன்றோ? [துளிக்கின்ற இத்யாதி] - வர்ஷிக்கையே ஸ்வபாவமாகவுடைத்தான ஆகாசம், அத்தாலே விளையக்கடவதான இந்தப்பூமி, இவற்றைக் கடற்கரைவெளியிலே நோக்கினாற்போலே, திவ்யாயுதங்களைத் தரித்து நோக்குகிற ஆஶ்சர்யபூதன். [சுடராழிசங்கேந்தியளிக்கின்ற மாயப்பிரான்]-

---

பத்தாம்பாட்டு - களிப்பும் இத்யாதி. 'அடியார்கள் குழாங்களை உடன் கூடுவதென்று கொலோ' என்ற பதங்களைக கடாக்ஷித்து அவதாரிகை - களித்தேனே இத்யாதி. திரியட்டும் - மீளவும்.

கவர்வு - க்லேசம். பிணி - வ்யாதி. நிரந்வயவிநாசம் - சரீராக்வயாஹாவ ரூபவிநாசம், சரீரஸம்பந்தாஹாவரூபவிநாசம்; மரண மென்றபடி. ஸாந்வயவிநாசமாவது - ஶைஶவயௌவநாத்யவஸ்தைகள். சப்தார்த்தம் - ரஜஸ்தமஸ்ஸுக்கள் இத்யாதி. 'ஒளிக்கொண்டசோதி' என்றத்தால் பலிதம் - சுத்தஸத்த்வமயமாய் என்றது.'அடியார்கள்'என்றத்தைப்பற்ற, நான்எனக்கு என்று இத்யாதி. 'பாகவதஸமுதாயம் ப்ராப்யம்' என்று அறியாநிற்கச செய்தேயும், அஹங்கார மமகாரங்களாலே அகல வேண்டாநின்றதிறே;அப்படி அகலவேண்டாத ஸம்பந்தஜ்ஞாநமுடையவர்க ளென்றபடி. இவ்வுடம்புடையார் - சுத்தஸத்த்வமயமான உடம்புடையார். கூடுவதென்றுகொலோ என்னாதே, 'உடன்' என்கையாலே, நெருக்கப்பெறுவது என்றோ என்றது. 'துளிக்கின்ற' என்ற வர்த்தமாநார்த்தம்-வர்ஷிக்கையே ஸ்வபாவமாக என்றது. 'கடற்கரை' என்றவிடத்திலே - "ராமஇக்ஷணஶூராவஸா" இத்யாத்யநுஸந்தேயம். அளிக்கின்ற - ரக்ஷிக்கிற. போக்யமான திருவாழி

பரமபதத்தில் ஆபரணமாய்க் காட்சிதரும்:இங்கு ஆயுதமாயிறே இருப்பது. இப்படி ரக்ஷிக்கிறவனுடைய அந்த ரக்ஷணத்திலே தோற்றிருப்பாராய்,அவன்தன்னோடொக்க ப்ராப்யருமாய், பகவத்குணங்களுக்கு தேசிகராயிருப்பாருமாய், போதபந்தபரஸ்பரத்துக்குத் துணையாயிருக்கிறவர்களுடைய குழாங்களை கலியர் 'கலவரிசிச்சோறுண்ண' என்னுமாபோலே அத்திரள்களிலே போய்ப்புகப்பெறுவது எப்போதோ? என்கிறார். (கo)

பதினோராம் பாட்டு.

குழாங்கோள்பேரரக்கன் குலம்வீயமுனிந்தவனைக்
குழாங்கொள்தென்குருகூர்ச் சடகோபன்தெரிந்துரைத்த
குழாங்கோளாயிரத்துள் இவைபத்துமுடன்பாடிக்
குழாங்களாய் அடியீருடன்கூடிநின்றுடுமினே.

ஆ.—(குழாங்கொள்.) ஸபுத்ரஜநபாந்தவமாக ராவணன் மடியும்படி சிவந்தவனை உள்ளபடி கண்டுசொன்ன இத்திருவாய்மொழியை பகவத்தேகபோகராயிருப்பார் எல்லாரும் கூடி புஜியுங்க ளென்கிறார்.

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழியை பகவத்தேகபோகராயிருப்பார் எல்லாரும், என்னைப்போலே தனிமைப்படாதே, கூடி புஜியுங்கோ ளென்கிறார்.

[குழாங்கொள் பேரரக்கன் குலம்வீய முனிந்தவனை]-அஸங்க்யேயமான ஸேநாஸமூஹங்களை யுடையனும் அதிபலவானுமான ராவணன் குலம் முடியும்படி சீறினவனை. [குழாங்கொளென்று தொடங்கி]-தம்மை யநுபவிக்க வந்த வைஷ்ணவஸமூஹங்களோடு கூடின திருநகரியையுடைய ஆழ்வார் உள்ளபடியை அநுஸந்தித்துச்சொன்ன. [குழாங்கொளென்று தொடங்கி]-ஓரோதிருவாய்மொழியாய்க்கொண்டு குழாமான ஆயிரத்திலும் இத்திருவாய்மொழியைக் கருத்தோடே கூடப் பாடி.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழியைப் பாடிப் பரஸ்பரஸங்கதராய் ஸங்கிபவித்து ப்ரீதிப்ரேரிதராய் வர்த்தியுங்கோ ளென்று பலத்தை அருளிச்செய்கிறார்.

குழாங்கொள் - (பாதகரான ராக்ஷஸரைத்) திரள்திரளாகவுடையனுயிருக்கிற, பேர்அரக்கன் – பெருமையையுடையனான ராவணனாகிற ராக்ஷஸனுடைய, குலம் - குலமகப்பட, வீய - நசிக்கும்படி, முனிந்தவனை-முனிந்தருளினவனை, குழாங்கொள் - (ஸ்ரீவைஷ்ணவர்கள்) திரளையுடைத்தான, தென்குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வார், தெரிந்து உரைத்த - ஆராய்ந்து அருளிச்செய்த, குழாங்கொள் - பத்தான திரள்களை வடிவாகவுடைத்தான,ஆயிரத்துள்-ஆயிரம்திருவாய்மொழியிலும், இவைபத்தும் - இவைபத்தையும், உடன் - அர்த்தத்தோடேஉடன்பட்டு, பாடி - (ப்ரீதிக்குப்

திருச்சங்குகளை ரக்ஷணத்துக்குப் பரிகரமாகச் சொல்லுவானென்? என்ன - பரமபதத்தில் இத்யாதி. போக்யமென்றது - 'சுடர்' என்றும், 'ஏந்தி' என்று மிருக்கையாலே. ஸமூஹப்ராஹுர்ய கதநத்துக்குத் தாத்பர்யம் - கலியர் இத்யாதி. கலியர் - பசித்தவர். ஆற்றாமையின்மிகுதி இப்படி சொல்லப்பண்ணுமென்று கருத்து. உத்தரார்த்தபூர்வகம் பூர்வார்த்தாநுஸந்தாநம் அந்வயః. (கo)

போக்குவீடாகப் பாடி,குழாங்களாய் - பரஸ்பரஸம்ஶ்லிஷ்டராய்க்கொண்டு பலதிரளாய், அடியீருடன் - அடியாரான உங்கள் ஸ்வரூபத்துக்கு அநுரூபமாம்படி ஏககண்டராய், கூடி - ஸம்ஶ்லேஷித்து, நின்று - இடைவிடாதே நின்று, ஆடுமின் - ஸஸம்ப்ரமந்ருத்தம் பண்ணப் பாருங்கோள். இது — கலிவிருத்தம்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழியை பகவதேகபோகராயிருப்பாரெல்லாரும் என்னைப்போலே தனிப்படாதே கூடியநுபவியுங்கோ ளென்கிறார்.

[குழாங்கொள் இத்யாதி]-பரஹிம்ஸைக்கு ஸஹகாரிகளான பந்துவர்க்கத்தை யுடையனாய், தான் பெருமிடுக்கனான ராவணனை நிஸ்ஸந்தாநமாம்படி சீறினவனை. "கரிஷ்யே மைதிலீஹேதோ ரபிஶாசமராக்ஷஸம்" என்றிறே சீற்றம். [குழாங்கொள் தென்குருகூர்] - 'வாயுந்திரையுகளில் அவஸாதத்தே பிழைத்தவர்' என்று இவரை யநுபவிக்கைக்கு "வ்யூடவ்யூஹே ஜநௌகாயா:" என்கிறபடியே வைஷ்ணவஸமூஹங்களை யுடைத்தாயிற்று திருநகரி. [தெரிந்துரைத்த] - உள்ளபடி யநுஸந்தித்துச் சொன்ன. [குழாங்கொளாயிரம்] - திரண்ட ஶ்ரீவைஷ்ணவர்களுக்கு ஜீவநத்தைக் கூடுபூரித்தாராயிற்று. பத்துப்பத்தான ஆயிரம்; "தொண்டர்க்கமுதுண்ண"என்னக்கடவதிறே. [உடன் பாடி]- கருத்தோடே பாடி. [குழாங்களாய்] - "பருகிக்களித்தேனே" என்று, "உடன் கூடுவதென்றுகொலோ" என்று நான்பட்டதுபடாதே முதலிலே திரளோடே யநுபவிக்கப் பாருங்கோள். [அடியீர் இத்யாதி] - அநுகூலராயிருப்பார் அஹங்காராதிகளாலே பிரிய வர்த்தியாதே, ஏககண்டராய் அநுபவிக்கப் பாருங்கோள். அர்த்தகாமாதிகளைப் பற்றி ஸ்வரூபத்தை இழவாதே கொள்ளுங்கோ ளென்கிறார்.

ஈடு.—நிகமத்தில் - இத்திருவாய்மொழியை, பகவதேகபோகராயிருப்பார் என்னைப்போலே தனிப்படாதே திரளாக அநுபவியுங்கோ ளேன்கிறார்.

[குழாங்கோள் இத்யாதி] - புத்ரபௌத்ராதிகளும் பந்துக்களுமான இவர்களாலே தழாங்கோண்டு, வரபலபுஜபலத்தாலே தழைத்து வேரூன்றின ரக்ஷஸ்ஸினுடைய ஜாதியாகக் கிழங்கெடுத்த சக்ரவர்த்திதிருமகனை "கரிஷ்யே மைதிலீஹேதோ ரபிஶாசமராக்ஷஸம்" (கரிஷ்யேமைதிலீஹேதோரபிஶாசமராக்ஷஸம்) என்கிறபடியே. [குழாங்கோள் தேன்குருகூர்ச்சடகோபன்] - ஜநஸ்த்தாநம்அடியறுப்புண்டபின்பு தண்டகாரண்

நிகமம் - தழாங்கோள் இத்யாதி.'இவைபத்தும் குழாங்களாய் உடன்கூடிநின்றாடுமினே' என்ற பதங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை - இத்திருவாய்மொழியை இத்யாதி. கூட்டமாக இந்தத் திருவாய்மொழியை அநுபவிக்கையே பலமென்று கருத்து. இவர்களாலே தழாங்கோண்டு - இவர்களாலே திரண்டுகொண்டு. பெருமையேது? என்ன, வரபலபுஜபலத்தாலே தழைத்துவேரூன்றின இதி. தழைத்து - ஸம்ருத்தமாய். ரூனிர்தமைக்கு ப்ரமாணம் - கரிஷ்யே இத்யாதி.ஆரண்ய காண்டே சதுஷ்ஷஷ்டிதமே-"ஆகாஶ வ்யோமைநோ ஷிஷ்ட ஸுக்ஷேவமாக நநாஸ்தரஸ்ஸதே:" இதி பூர்வார்த்தம். ஜநஸ்த்தாநம் இதி - ரகுவம்ஶே த்ரயோதஶே,"ஜநஸ்தாநே..." [illegible] ஊதி வ்யதியாணமைக் காண்டாவஸாக்யூதே [illegible]. அடியறுப்புண்டபின்பு - ஸம்ஹ்ருதமானபின்பு. ஸ்ரீவைஷ்ணவர்கள் அங்கே திரண்டிருப்பர்

இ.—அஞ்சாந்திருவாய்மொழியில், ஶ்ரீகஜேந்த்ராழ்வானுடைய, "பரமாபதமாபந்ந:"—என்கிற பரமமான ஆபத்தில் ஆர்த்தத்வநியைக் கேட்டு, "ஸஹர்ஷோ த்வரயா யயௌ யத்ர ஸ நாக:" என்கிறபடியே அரைகுலையத் தலைகுலைய வந்து, அவனுடைய ஆர்த்தியெல்லாந் தீரமுகங்காட்டி ஆஶ்வஸிப்பித்து, அத்தாலே தான் ஹ்ருஷ்டனாய்ப் பெறாப்பேறு பெற்றானாய் நின்றாற்போலே ஆழ்வாருடைய ஆர்தத்த்வநியைக் கேட்டு "அழகிதாக ரக்ஷகரானோம்" என்று ரக்ஷகத்வத்தை நிந்தியாநின்றுகொண்டு, அந்த ஆர்த்தியெல்லாந் தீர முகங்காட்டி அத்தாலே தான் அத்யுஜ்வலனாய், அழகையும் சேஷ்டிதங்களையும் ஆயுதாபரணாதிகளையும் இவரிழவு மறக்கும்படி அநுபவிப்பித்து க்ருதக்ருத்யனான படியைக் கண்டு ஹ்ருஷ்டராய், தமக்குப்பிறந்த ஸம்ருத்தியைப் பேசியநுபவிக்கிறார்.

ஈடு.—"கஜ: கர்ஷதே தீரே க்ராஹ: கர்ஷதே ஜலே" (கஜஆகர்ஷதே தீரேக்ராஹஆகர்ஷதேஜலே) என்னுமாபோலேயிறே கீழ் ஆடியாடியில் ஆழ்வார்க்குப் பிறந்த வ்யஸநம்; அதேல்லாம் ஆறும்படியாக, "அதந்த்ரிதசமூபதிப்ரஹிதஹஸ்தம்" (அதந்த்ரிதசமூபதிப்ரஹிதஹஸ்தம்) என்கிறபடியே பெரியத்வரையோடே ஆயுதாபரணங்களை அக்ரமமாகத் தரித்துக்கொண்டு மடுவின்கரையிலே அரைகுலையத் தலைகுலைய வந்து

அந்தாமத்தன்பு ப்ரவேஶே, வ்ருத்தாநுவாதபூர்வகம் வர்த்திஷ்யமாணஸங்கதிமாஹ-கஜ இத்யாதி. அதாவது விஶ்லேஷவ்யஸநம் முடிக்கத் தேட, நசையானது முடியவொட்டாமல் ஜீவிப்பிக்க, இப்படியேயிறே சென்றதென்றபடி. விஷ்ணுதர்மே அஷ்டஷஷ்டிதமேத்யாயே, "கஜ: கர்ஷதே தீரே க்ராஹ: கர்ஷதே ஜலே | தயோர்த்வந்த்வஸமம் யுத்தம் திவ்யம் வர்ஷஸஹஸ்ரகம்." ஶ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு வ்யஸநமாறும்படி தோன்றின ப்ரகாரத்தை விஸ்தரேண அருளிச்செய்யாநின்றுகொண்டு அப்படியேஇவர்க்குப்பிறந்த வ்யஸநமாறும்படி தோன்றின ப்ரகாரத்தை அருளிச்செய்கிறார்-அதேல்லாமாறும்படி இத்யாதி. ஶ்ரீரங்கராஜஸ்தவே, "அதந்த்ரிதசமூபதிப்ரஹிதஹஸ்தமஸ்வீக்ருதப்ரணீதமணிபாதுகம் கிமிதி சாகுலாந்த:புரம் | அவாஹநபரிஷ்க்ரியம் பதகராஜமாரோஹத: கரிப்ரவரப்ரும்ஹிதே பகவதஸ்த்வராயை நம:". "ஸஹர்ஷோ த்வரயா யயௌ யத்ர ஸ நாக:" என்றத்தைப்பற்ற; ஆயுதாபரணங்களை இத்யாதி. "சக்ராயுதோ ஹ்யபிஸம்யயௌ தாம் கஜேந்த்ர:" என்றத்தைப்பற்ற-மடுவின்கரையிலேயென்கிறார். மஹாபாரதே விஷ்ணுதர்மே, "க்ராஹக்ரஸ்தம் கஜேந்த்ரம் தம் க்ராஹஞ்ச ஜலாஶயாத் | உஜ்ஜஹாராப்ரமேயாத்மா தரஸா மதுஸூதந: | ஸ்தலஸ்தம் தாரயாமாஸ க்ராஹஞ்சக்ரேண

உள்ளேபோய்ப் புக்கு, ஆனையையொருகையாலும் முதலையையொருகையாலுமாக அணைத்தெடுத்துக்கொண்டு கரையிலே யேறி, "க்ராஹம்சக்ரேணமாதவ:" என்கிறபடியே - ப்ரஜையின்வாயிலே முலையைக்கொடுத்து க்ரந்தியை சிகித்ஸிப்பிக்குமாபோலே, பெரிய பிராட்டியாரும் தானுமாக இரண்டுக்கும் நலிவுவாராமே திருவாழியாலே விடுவித்து சாத்தியருளின திருப்பரிவட்டத்தலையைச் சுருட்டித் திருப்பவளத்திலே வைத்து அதினுடைய புண்வாயை வேதுகொண்டு திருக்கையாலே குளிர ஸ்பர்ஶித்துநின்றாற்போலே, இவரும் "வலங்கொள்புள்ளுயர்த்தாய்" என்று கூப்பிட்ட ஆர்த்தநாதம் செவிப்பட்டு, 'அழகிதாக நாம் ஜகந்நிர்வஹணம் பண்ணினோம், நாமாரானோம்' என்று பிற்பாட்டுக்கு லஜ்ஜாபயங்களினாலே விஹ்வலனாய், தன்னுடைய ஸ்வரூபரூபகுணங்கள் ஒப்பனை, திவ்யாயுதங்கள் சேர்ந்த சேர்த்தி, இவையெல்லாவற்றோடும் வந்து ஸம்ஶ்லேஷித்து அத்தாலே ஹ்ருஷ்டனாய் க்ருதக்ருத்யனாயிருக்கிற இருப்பை அநுபவித்து, அவ்வநுபவ ஜநிதஹர்ஷப்ரகர்ஷத்தாலே தாம்பெற்ற பேற்றைப் பேசி யநுபவிக்கிறார்.

முதற்பாட்டு.

அந்தாமத்தன்புசெய்து என்னாவிசேரம்மானுக்கு
அந்தாமவாழ்முடிசங்கு ஆழிநூலாரமுள
செந்தாமரைத்தடங்கண் செங்கனிவாய்செங்கமலம்
செந்தாமரையடிக்கள் செம்பொன்திருவுடம்பே.

ஆ.—நித்யநிர்த்தோஷ நிரதிஶயகல்யாண திவ்யதாமத்திற்பண்ணும் ப்ரேமத்தை என்பக்கலிலே பண்ணிக்கொண்டு, ஸர்வதிவ்யபூஷணாயுத பூஷிதமாய் நிரதிஶயஸௌந்தர்யாதி கல்யாணகுணவிஶிஷ்டமாய், ஶாத்தஜாம்பூநதப்ரபமான திவ்யரூபத்தோடே வந்து என்னோடே கலந்தருளினானென்கிறார்.

மாதவ:" இத்யாதியைப்பற்ற, ஆனையையொருகையாலும் இத்யாதி. "மாதவ:" என்றதுக்கு அர்த்தம் பெரிய பிராட்டியாரும் இத்யாதி. இரண்டுக்கும்-வாராமே-முதலைக்கே நலிவுவரும்படி யென்றுகூட்டுவது. அவன் நிரவதிகவ்யாமோஹயுக்தனாகையாலே ஸம்பாவிதஸ்வபாவங்களை அருளிச்செய்கிறார்- சாத்தியருளின இத்யாதி. இதுக்குஸூசகம் - "விஶ்வஸ்மிந்...... ஜ்ஞாநம் ...... ஷ்யாநிதேஶந்த்ஸ்வ வக்த்ரேந வீஜனம் ...... ஷண்ணகாஷ்டீஷா" என்று ஆழ்வார் அருளிச்செய்த வசநம். வேதுகொண்டு- உஷ்ணமாக்கி, காய்ச்சி யூற்றி யென்றபடி! "யிஜாம்" என்றத்தைக் கடாக்ஷித்து, நாமாரானோம் என்றது. "ஹ்ரீரேஷாஹிமமாதுலா" என்றத்தைப்பற்ற, லஜ்ஜாபயங்களினாலே என்றது. 'முடிந்துவிடுமோ' என்கிற ஶங்கை - பயநிமித்தம். 'தன்னுள்கலவாதது' 'செம்பொன்திருவுடம்பு' 'அரனேயோ' 'பலபலவேயாபரணம' 'ஆழிநூலாரம்' இத்யாதிகளைக் கடாக்ஷித்து அருளிச்செய்கிறார் - ஸ்வரூப இத்யாதி. 'என்னுள்கலந்தவன்' என்றத்தைப்பற்ற, வந்துஸம்ஶ்லேஷித்து என்கிறார். 'மரதகக்குன்றமொக்கும்' 'ஆராவமுதமாய்' இத்யாதியைப்பற்ற, ஹ்ருஷ்டனாய் இத்யாதி. "க்ருதக்ருத்யஸ்ததாராம:" என்றத்தைப்பற்ற-க்ருதக்ருத்யனாய் என்றது.

ஒ.—முதற்பாட்டில், தாம் மநோரதித்தபடியே தன் பரிகரங்களோடேகூடத் தம்மோடேவந்து ஸம்ஶ்லேஷிக்கையாலே எம்பெருமானுக்குப் பிறந்த ஔஜ்வல்யத்தைப் பேசுகிறார்.

[அந்தாமத்தென்று தொடங்கி] - திருநாட்டிலுள்ளார் பக்கல் பண்ணும் அபிநிவேஶத்தை என்பக்கலிலே பண்ணி என்னோடே வந்து ஸம்ஶ்லேஷித்த ஸர்வேஶ்வரனுக்கு அழகிய மாலை செவ்விபெறுகின்றுள்ள திருவபிஷேகம் ஶ்ரீபாஞ்சஜந்யம் திருவாழி திவ்யாபரணங்கள் என்று தொடக்கமாகப் பண்டு என்னோட்டை விரஹத்தாலே அநுஜ்வலமானவை, ஸம்ஶ்லேஷத்தாலே உளவான என்னும்படி உஜ்வலமாயின. தாமம் - தேஜஸ்ஸாகவுமாம். [செந்தாமரைத்தடங்கண்] - ஹர்ஷப்ரகர்ஷத்தாலே உத்புல்ல புண்டரீக தடாகம்போலே விகஸிதமான திருக்கண்கள்.

ப.—முதற்பாட்டில், பூஷணாதி விஶிஷ்டமான விக்ரஹஶோபையை அநுபவிக்கிறார்.

அந்தாமத்து - பரமபதத்தில், அன்புசெய்து - விருப்பத்தைப்பண்ணி, என்னாவிசேர் - ஹேயனானவென்னெஞ்சுக்குள்ளே பொருந்தின, அம்மானுக்கு - நிருபாதிக ஸ்வாமியானவனுக்கு, (ஶேஷித்வஸூசகமான), அம் - அழகிய, தாமம் - மாலையையுடைத்தான, வாள் - உஜ்ஜ்வலமான, முடி - திருவபிஷேகம், சங்கு ஆழி - திவ்யாயுதங்கள், நூல் - திருயஜ்ஞோபவீதம், ஆரம் - திருவாரம், உள - (இவை) ஸ்ப்புரித்துத் தோன்றுநின்றன; கண் - திருக்கண்கள், செந்தாமரைத்தடம் - சிவந்ததாமரைத்தடாகமாயிராநின்றன; செம்கனி - சிவந்தபக்வபலம்போன்ற, வாய் - அதரம், செம்கமலம் - சிவந்த தாமரையாயிராநின்றது; அடிக்கள் - திருவடிகள், செம்தாமரை - சிவந்ததாமரையாயிராநின்றன; திருவுடம்பு - திருவுடம்பு; செம்பொன் - செம்பொன்னாயிராநின்றது; இப்பாட்டு - அந்தராதித்ய வித்யையிற்சொன்ன ஹிரண்மய விக்ரஹயோகத்தையும், புண்டரீகாக்ஷத்வாத்யவயவஶோபையையும், கிரீடமகுடோத்யாபரண ஶோபையையும், த்ருதஶங்கசக்ரத்வத்தையுஞ் சொல்லி, இப்படி ஆதித்யமண்டலாந்தர்வர்த்தியானவன், "ஸ்யஶ்சாயம்புருஷே யஶ்சாஸாவாதித்யே ஸஏக:" என்கிறபடியே - அழகிய ஆதித்யமண்டலத்திற்பண்ணும் விருப்பத்தை என்னெஞ்சிலே பண்ணிப்புகுந்து, அந்தவ்யக்தையைக்யம் இங்கே ஸ்ப்புரிக்கும்படி அத்யுஜ்ஜ்வலனாயிராநின்றானென்றுஞ் சொல்லும்.

இ.—முதற்பாட்டில், தன் பரிகரங்களோடே வந்து கலந்து, அத்தாலே அவனுக்குப்பிறந்த ஔஜ்வல்யத்தைப் பேசியநுபவிக்கிறார்.

[அந்தாமத்தன்பு செய்து] - பரமபதத்திலுள்ளாரெல்லார்பக்கலிலும் பண்ணும் அபிநிவேஶத்தை என்பக்கலிலே பண்ணி "ஶ்ராகெ்ஶாஸ்தீ" இதிவத். [எனாவிசேர்] - கமர்பிளந்த கரையிலே நீரைப்பாய்ச்சினாற்போலே, "உள்ளுளாவி யுலர்ந்துலர்ந்து" என்று குருத்து வற்றுகவற்றின என்னாத்மாவிலே, விடாயர் மடுவிலே விழுமாபோலே வந்து கலந்தான். [அம்மானுக்கு] - நித்யவிபூதியிலுள்ளாரோபாதி லீலாவிபூதியிலுள்ளார்க்கும் வந்து முகங்காட்டவேண்டும் ப்ராப்தியையுடையவனுக்கு. இவரைப்பெற்றபின்பாயிற்று அவன் ஸர்வேஶ்வரனாயிற்று. [அந்தாமவாழ்முடி] - அழகிய

மாலை வாழாநின்றுள்ள முடி. வாளென்று ஒளியாய், அழகியமாலையையும் ஒளியையு முடைத்தான திருவபிஷேக மென்றுமாம். தாமம் - தேஜஸ்ஸாகவுமாம். சங்கு, ஆழி, நூல், திருயஜ்ஞோபவீதம், ஆரம் இவை நித்ய ஸூரிகளுக்கும் உபலக்ஷணம். அடியார்கள் குழாங்களை என்று இவர் ஆசைப்பட்டபடியே ஸபரிகரனாய் வந்து கலந்தான். [உள] - இவரோடு கலப்பதற்கு முன்பு அஸத்ஸமமாய் அநுஜ்வலமுமாயிருந்த இவை உளவுமாய், உஜ்வலமுமாயின வென்கிறது. நித்யரானவர்கள் உளராகையாவதென்? என்னில்;—“ஸநகாகீநாமெக” என்கிறபடியே இவரோடு கலவாதபோது அந்த விபூதியுமில்லையாய்த் தோற்றுகையாலே சொல்லுகிறது. [செந்தாமரை இத்யாதி] - ஆடியாடியில் உருவின திருக்கண்கள் உதபுல்லபங்கஜ தடாகம்போலே விகஸிதமானபடி. ஆர்த்தியெல்லாந் தீர இவரைப்பார்த்துக்கொடுநிற்கிற நிலை. சிவந்து கனிந்தவாய், சிவந்த தாமரைபோலே இராநின்றது. “வவஸாஸாநுயிக்ஷா” என்னும்படியே ஸாந்த்வநம் பண்ணுகிறவாய். நோக்குக்கும் முறுவலுக்குந் தோற்றுவிழும திருவடிகளும் அப்படியே இராநின்றது. [செம்பொன் திருவுடம்பே] - திருவடிகளிலே விழுந்தாரை எடுத்தணைக்கும்உடம்பு. தம்மையணைத்தபின்பு பிறந்தபுகரைச் சொல்லுகிறது. “ஈஜாஹம்”.

ஈடு.—“அடியார்கள்குழாங்களை - உடன்கூடுவ தென்று கொலோ” என்று இவர் ஆசைப்பட்டபடியே வந்து கலந்தா னென்கிருர்.

[அந்தாமத்தன்புசெய்து] - அழகிய தாமத்திலே பண்ணக்கடவ ஸ்நேஹத்தை என்பக்கலிலே பண்ணி. தாமமென்று-ஸ்த்தாநமாய், மஞ்சாக்ரோஶந்தி போலே, பரமபதத்திலுள்ளார்பக்கலிலே பண்ணக்கடவ ஸ்நேஹத்தை என்பக்கலிலே பண்ணி. ஒரு விபூதியிலுள்ளார்பக்கலிலே பண்ணக்கடவ ஸ்நேஹத்தைக்கிடீர் என்னொருவன்பக்கலிலும் பண்ணிற்று. தாமே அருளிச்செய்தாரிறே “முற்றவும்நின்றனன்” என்று. [என்னாவி]- அவன் மேல்விழத் தாம்இறுய்த்தமை தோன்றுகிறது. இவர் பூர்வவ்ருத்தத்தை அநுஸந்தித்து இருயாநின்றுர்; அதுவே ஹேதுவாக அவன் மேல்விழாநின்றான். கமர்பிளந்த விடத்திலே நீர்பாய்ச்சுவாரைப்போலே, “உள்ளுளாவியுலர்ந்துலர்ந்து” என்கிற ஆவியிலே காணும் வந்துசேருகிறது. [சேர்] - விடாயர் மடுவிலே சேருமாபோலே வந்து சேராநின்றான். இப்படி மேல்விழுகைக்கு ஹேதுவேன்? என்னில், - [அம்மானுக்கு]-வகுத்த ஸ்வாமியாகையாலே. நித்யவிபூதியிலுள்ளாரோபாதி லீலாவிபூதியிலுள்ளார்க்கும் வந்து

முதற்பாட்டு - அந்தாமத்தன்பு இத்யாதி. ‘ஆழிநூலாரமுள’ என்றத்தைக் கடாக்ஷித்து, ஆளவந்தார் நிர்வாஹததிலே அவதாரிகை - அடியார்கள் இத்யாதி.

‘அம்’ என்றத்தாலே - விலக்ஷணபோக்ய போகோபகரண போகஸ்தாநங்களாலே வந்த அழகைச்சொல்லுகிறது. தாமமென்று ஸ்த்தாநமாய் இத்யாதி வாக்யம் - பூர்வவாக்யவிவரணமாதல், அர்த்தாந்தரமாதல். விபூதியையிட்டு லக்ஷித்த இதுக்கு ப்ரயோஜநம் - ஒருவிபூதியில் இத்யாதி. அப்படிபண்ணிற்றே வென்ன, தாமே இத்யாதி. ‘என்’ என்றதுக்கு பாவம் - அவன்மேல்விழ இத்யாதி. இறய்த்தமை - பின்வாங்கினமை. விவரணம் இவர் இத்யாதி. ‘ஆவி’ என்று விசேஷிப்பானென்? என்ன, கமர்பிளந்தவிடத்தே இத்யாதி. ஆக, ‘என்னாவிசேர், ஆவிசேர், சேர்,’ என்று மூன்றுவிதமாக்கி அருளிச்செய்தாராயிற்று. வகுத்தஸ்வாமியாகையா[illegible]யிதி - அதாவது - அம்மானாகையாலே அந்தாமத்தன்பு செய்தான், என்னாவிசேர்ந்தா னென்றபடி. விவரணம் - நித்யபூவிதியில் இத்யாதி. அந்தாமத்தன்புசெய்து என்னாவிசேர்ந்த வனந்தரம் - அம்மா

முகங்காட்டவேண்டும் ப்ராப்தியை யுடையவனுக்கு. இவரைப் பெற்றபின்பாயிற்று அவன் ஸர்வேஶ்வரனாயிற்று. [அந்தாமம்இத்யாதி] - "அடியார்கள்குழாங்களை யுடன் கூடுவதென்றுகொலோ" என்று இவர்ஆசைப்பட்டபடியே, நித்யஸூரிகளோடேவந்து கலந்தான்' என்று ஆளவந்தார்அருளிச்செய்தாராகத் திருமாலையாண்டான் பணிக்கும் படி. ஆனால், அவர்களை "ஆழிநூலாரம்" என்றோ சொல்லுவதென்னில்; சிந்மயரா யிருக்கச்செய்தே, பாரதந்த்ர்யஸித்திக்காகத் தங்களை அமைத்துவைக்கிற இத்தனையிறே. அங்ஙனன்றிக்கே, எம்பெருமானார்அருளிச்செய்யும்படி - 'இவரோடு ஸம்ஶ்லேஷிப்பதற்கு முன்பு அவனோடொக்க இவையும் அநுஜ்ஜ்வலமாய் அஸத்ஸமமாய், இவரோடு கலந்த பின்பு உஜ்ஜ்வலமாய் ஸத்தைபெற்றபடி சொல்லுகிறது' என்று; கல்பகதரு வாடினால் அதில் பூவும் தளிரும் வாடுமிறே. [அந்தாமவாழ்முடி] - அழகியமாலையானது முடிசூடி வாழத் தொடங்கிற்று, அன்றியே "வாண்முடி" என்றாய், வாளென்று - ஒளியாய், நிரவ திகதேஜோரூபமான முடியென்றுமாம் தாமம் - தேஜஸ்ஸாகவுமாம். தேஜோரூபமான ஸ்ரீபாஞ்சஜந்யம், தேஜோரூபமான திருவாழி, நூல் - திருயஜ்ஞோபவீதம், ஆரம் - திரு வாரம், இவை - நித்யஸூரிகளுக்கு உபலக்ஷணம். [உள] - நித்யரான இவர்கள் உளராகையாவதென்? என்னில்;—"[illegible]" (ஸஏகாகீநரமேத) என்கிற படியே, இவரோடு கலப்பதற்குமுன்பு அந்தவிபூதியும் இல்லையாய்த் தோற்றுகையாலே. [செந்தாமரைத்தடங்கண்] - ஆர்த்தியெல்லாந் தீர இவரைப்பார்த்துக்கொண்டு நிற்கிற நிலை. இவரோடேகலந்த பின்பாயிற்று திருக்கண்கள் செவ்விபெற்றதும், விகஸிதமா

னதுமென்று அபரபாவியாகத் தாத்பர்யாந்தரம் - இவரைப்பெற்ற இதயாதி இந்தப்பக்ஷத்தில் 'அம்மான்' என்கிற இது - ஸாத்யபரம். ஆளவந்தார் நிர்வாஹத்துக்கு, அந்தாமவாழ்முடி சங்காழி நூலாரம், உள - உண்டென்றபடி; அதாவது - இவற்றோடே வந்தானென்று கருத்து. ஆனால் இத யாதி - 'ஆழிநூலாரம்' என்று - அசேதநமாகச் சொல்லுவா னென் னென்னி லென்றபடி. லோக ந்யாயத்தாலே அசைதந்யம் தோன்றுகையாலே இப்படியேயாகவேண்டாவோ வென்று கருத்து. சிந்மயராய் இத்யாதி - பௌஷ்கரே, "[illegible]". இவரோடு இத் யாதி - எம்பெருமானார் நிர்வாஹத்தில், அம்மானுக்கு - அம்மானுடையதான, அந்தாமவாழ்முடி சங்காழிநூலாரம், உள - ஸத்தைபெற்றன வென்றபடி. இவன்வாடினால் அவற்றுக்கும் வாட்டம் வேணுமோ? என்ன, கல்பகதரு இத்யாதி. "[illegible]" என்னக்கடவதிறே. முடிசூடிவாழத் தொடங்கிற்றென்று - ரஸோக்தி. முடிசூடி - முடியிலே சூட் டப்பட்டு. தாமம்-மாலை. அழகியமாலையானது வாழ்கிற முடியென்று சப்தார்த்தம். 'வாள்' என்று பாடமான போது, 'தாமம்' என்றும் - தேஜஸ்ஸாய், 'தாமவாள்' என்கிற வீப்ஸையாலே - நிரவதிக தேஜோரூபமான முடியென்றபடி. இத்தைக்காட்டுகிறார்-தாமம்-தேஜஸ்ஸாகவுமாம் என்று 'அந் தாமவாள்' என்றத்தை சங்குமுதலானவற்றுக்கும் விஶேஷணமாக்கி அருளிச்செய்கிறார் - தேஜோ ரூபமான - இத்யாதி. ஆரம்-ஹாரம். எம்பெருமானார் நிர்வாஹத்திலே ஶங்கிக்கிறார் - நித்யரான இத்யாதி. உளராகையாவது - இப்போது உளராகையாவது. ஸஏகாகீ இத்யாதி - இந்தவாக்யம் - எம்பெருமானார் நிர்வாஹவிவரணமாதல், அந்தநிர்வாஹத்திலே தாத்பர்யாந்தரமாதல். தாத்பர்யாந் தரமானபோது - முந்தினது வஸ்துதஃ வாடினார்க ளென்றபடி. இரண்டாவது - பகவதபிப்ராயத் தாலே அந்தவிபூதியு மில்லையாய்த் தோற்றிற றென்றபடி. ஆளவந்தார் நிர்வாஹத்தில், ஆர்த்தி யெல்லாம் இத்யாதி. எம்பெருமானார் நிர்வாஹத்தில், இவரோடே இத்யாதி. வ்யாக்யாதாவின்

யிற்றதும் ஏகரூபமானவற்றுக்கேல்லாம் இதோரு விகாரம் பிறக்கிறதிறே. "ஸதைக ரூபரூபாய" (ஸதைகரூபரூபாய) என்கிறவிடத்தில் - கர்மமடியாக வரும் விகார மில்லையேன்கிற இத்தனையிறே. [சேங்கனிவாய்சேங்கமலம்] – சாமுதங்கள் சோல்லு கிற திருவதர மிருக்கிறபடி. சிவந்துகனிந்தஅதரமானது, சிவந்தகமலம்போலே யிரா நின் றது [சேந்தாமரையடிக்கள்] - நோக்குக்கும் ஸ்மிதத்துக்கும் தோற்றுவிழுந் திருவடிகள். திருவடிகளிலே விழுந்து அநுபவிக்கும்திருமேனி [சேம்போன்திருவுடம்பே]- "ருக்மாபம்" (ருக்மாபம்) என்னும்படியாயிற்று இவரோடேகலந்தபின்பு திருமேனியிற் பிறந்த புகர்தான்.

இரண்டாம்பாட்டு.

திருவுடம்புவான்சுடர் சேந்தாமரைகண்கைகமலம்
திருவிடமேமார்வம் அயனிடமேகோப்பூழ்
ஒருவிடமும் எந்தைபேருமாற்கரனேயோ
ஒருவிடமோன்றின்றி என்னுள்கலந்தானுக்கே.

ஆ.—(திருவுடம்பு.) என்னோடேகலந்தருளுகிறான், ஸர்வேஶ்வரியான பெ ரியபிராட்டியாரோடும் ஆஶ்ரிதரான ப்ரஹ்மருத்ராதிகளோடும் கலந்தருளினாற்போ லன்றியே, தன்னுடைய நிரதிஶயதேஜோமயமான திருவுடம்பில் ஒருப்ரதேஶமொழி யாமே ஸமஸ்தப்ரதேஶத்தாலும் கலந்தருளினான்; ஒருவனுடைய அபிநிவேஶமே இது என்கிறார்.

ஒ.—இரண்டாம்பாட்டில், லக்ஷ்மீப்ரப்ருதிகளுந் தன்பக்கல் ஓரோப்ரதே சத்தையேபற்றி லப்தஸத்தாகராம்படி யிருக்கிற ஸர்வேஶ்வரன் ஸர்வாங்கங்களாலும் என்னோடே ஸம்ஶ்லேஷித்தத்தாலே உஜ்வலனானனென்கிறார்.

[திருவுடம்பென்று தொடங்கி] - தேஜோரூபமான திருவுடம்பு மிகவும் ஒளிபெற்றது. [ஒருவிடமு மெந்தை பெருமாற்கரனே] - பிராட்டிக்கும் ப்ரஹ்மாவுக்

ஈடு-பொடி - ஏகநூபமான இத்யாதி. ஏகருபமானவற்றுக்கெல்லா மென்றது - முடிமுதலான நித்ய ஸூரிகளை யபேக்ஷித்து. ஆனால், "ஸதைகரூபரூபாய" என்கிற ப்ரமாணத்தோடே சேரும்படி யெங்ஙனே யென்ன, ஸதைக இதயாதி. ப்ரதமேம்ஶே த்விதீயே, "அவிகாராய ஶுத்தாய நித்யாய பரமாத்மநே । ஸதைகரூபரூபாயவிஷ்ணவே ஸர்வஜிஷ்ணவே". பதசசேர்த்திக்கு ஹாவம் - நோக்குக்கும் இத்யாதி. செம்பொன்போலே திருமேனி யிருக்குமோ? என்ன, நுக்மாபம் இத்யாதி. மாநவே த்வாதஶேத்யாயே, "ப்ரஶாஸிதாரம் ஸர்வேஷாமணீ யாம்ஸமணீயஸாம் । ருக்மாபம் ஸ்வப்நதீகம்யம் வித்யாத்தம் புருஷம் பரம்". ஸ்ப்ருஹ ணீய மென்றபடி. ஆளவந்தார் நிர்வாஹத்துக்கு, அந்தாமவாழ்முடி சங்காழி நூலார முளவாய்க் கொண்டு, அந்தாமத்தன்பு செய்தென்னுவி சேரம்மானுக்கு செந்தாமரை யிதயாரப்யாந்வயஃ; க்ர மாந்வயோவா, எம்பெருமானார் நிர்வாஹத்துக்கு, அந்தாமத்தன்பு செய்தென்னுவி சேர்ந்த வநந்த ரம் - அந்தாமவாழ்முடிசங்காழி நூலாரமுளவாய் - அம்மானுமானவனுக்கு - செந்தாமரையித்யாரப் யாந்வயஃ. (க)

கும் அபாஶ்ரயமான விடததையொழிய நீககின விடத்தைப் பற்றி லப்தஸ்வரூபனு யிருககும ருதரனும். ஓ என்று - விஸ்மயம் [ஒரு விடமென்று தொடங்கி] - இப்படி யிருக்கிற ஸர்வேஶ்வரன் என்னுடைய அங்கத்தில் ஏகதேஶத்திலே தன்னுடைய ஸர்வாங்கத்தோடும் ஸம்ஶ்லேஷித்தான்.

ப.—அநநதரம், இவ்வவயவஶோபையையுடையவன், ப்ரஹ்மருத்ராதிகளான விபூதிபூதர்க்கும் பிராட்டியோபாதி திருமேனியிலே இடங்கொடுத்த ஔஜ்ஜ்வல்யத்தை அருளிச்செய்கிறார்.

ஒருவிடமொன்றின்றி - ஸ்வரூபரூபகுணவிபூதிகளொன்றுஞ் சோராதபடி, என்னுள் - என்னுள், கலந்தானுக்கு - கலந்த, எந்தைபெருமாற்கு - என்குலநாதனுக்கு, திருஉடம்பு - ஶ்லாக்யமானவடிவு, வான்சுடர் - ஆதித்யவர்ணமாயிராநின்றது; கண்கை கமலம் - திருக்கண்ணும் திருக்கையும், செம்தாமரை - சிவந்ததாமரைபோலே செவ்விபெற்றது; மார்வம் - திருமார்வு, திருவிடமே - லக்ஷ்மீஸ்த்தாநமேயாயிற்று; கொப்பூழ் - கொப்பூழ், அயன் - ப்ரஹ்மாவுக்கு, ¹இடமே - ஸ்த்தாநமேயாயிற்று; ஒருவிடமும - நீககியுள்ள இடம், அரனே - ருத்ரனேயாயிராநின்றது. ஓ - இதென்ன ஆஶ்சர்யம், ஒருவுதல் - நீங்குதல். தந்திருவுள்ளத்திலே அவன்கலநதபின்பு ரூபௌஜ்ஜ்வல்யமும் அவயவௌஜ்ஜ்வல்யமும் உண்டானவோபாதி, விபூத்யௌஜ்ஜ்வல்யமும் உண்டாயிற்றென்று கருத்து.

இ.—இரண்டாம்பாட்டில், லக்ஷ்மீ ப்ரப்ருதிகளும் தன் பக்கலிலே ஓரோ ப்ரதேஶத்தைப் பற்றி லப்தஸத்தாகராம்படி யிருக்கிறவன், ஸர்வாங்கங்களாலும் என்னோடே கலந்து உஜ்ஜ்வலனானா னென்கிறார்.

[திருவுடம்பு வான்சுடர] - தேஜோரூபமான திருமேனி மிகவும் ஒளிபெற்றது. "'விக்ரஹமில்லை' என்கிறார முன்பே "யாவற மதிநலமருளப்பெற்றவர்தாமே 'திருவுடம்பு' என்பதே" என்று சீயர் வித்தராவர். [செந்தாமரை இத்யாதி] - திமிர்க்கும்படி நோக்கின கண்ணும், அந்நோக்கிலே நைந்தவர்களை "க்ருதஹஸ்தேந பாணிநா" என்று ஸ்ப்ருஶிக்குங் கைகளும். இவர்க்குக் கவிகளைப்போலே ஒருகாற் சொன்னது தன்னைப் பலகாற் சொல்லுவானென்? என்னில்; முத்துக்கோக்கவல்லவன் முகம்மாறிக கோததவாறே மிகவிலைபெறுமாபோலே, இவரும் ஓரோ முகபேதததாலே அநுபவிக்கிறார். [திருவிடமே மார்வம்] - அகலகில்லேனென்று அணைப்பிக்கும் பெரிய பிராட்டியாருக்கு இருப்பிடம் திருமார்வு. [அயனிடமே கொப்பூழ்] - சதுர்த்தஶபுவந ஸ்ரஷ்டாவான ப்ரஹ்மா திருநாபிகமலத்திலே யிருக்கும். [ஒருவிடம்] - ஓரிடம என்னாதே, "ஒரு விடம்" என்கிறது - ஒருவுதல் - நீங்குதலாய், ஶேஷித்தவிட மென்றபடி. என் குலநாதனுக்கு ஶேஷித்தவிடமெல்லாம் ருத்ரனுக்கு ஸ்ததாநம். [ஓ] - ஓ என்று - விஸ்மயம். [ஒரு விடம் இத்யாதி] - இப்படி யிருக்கிறவன் என்னுடைய ஶரீரைகதேஶத்திலே தன்னுடைய ஸர்வாங்கங்களோடே கலநதான். ஒருவிடமொன்றின்றி என்னுள் கலந்தானுக்கு - திருவுடம்பென்று தொடங்கி, அரனே, ஓ! என்று அந்வயம்.

ஈடு.—இரண்டாம்பாட்டு. தம்மோடே கலந்தபின்பு அவனுக்குப்பிறந்த புகரைச் சொல்லி, தன்னுடம்பைப்பற்றி ப்ரஹ்மேசாநாதிகள் ஸத்தையாம்படி யிருக்கிறவன்தான் என்னுடம்பைப்பற்றித் தன்ஸத்தையாம்படி இராநின்ருனென்கிருர்.

[திருவுடம்புவான்சுடர்] - அணைத்தபோதை ஸ்பர்சஸுகங் கொண்டு அருளிச்செய்கிருரிறே. "ஈச்வரனுக்கு விக்ரஹமில்லை, விபூதியில்லை' என்கிறவர்கள்முன்பே, ஆப்ததமரானஇவர் 'திருவுடம்பு வான்சுடர்' என்னப்பெறுவதே! 'ஈச்வரனுக்கு விக்ரஹமில்லை, குணமில்லை' என்கிறவர்கள் பண்ணிவைக்கமாட்டாத பாபமில்லை; அவர்களை அநுவர்த்தித்து அதுகேட்கஇராதபடி பெருமாள் நமக்குப்பண்ணின உபகாரமேன்?" என்று அருளிச்செய்வர் சீயர். மயர்வறமதிநல மருளப்பெற்றவர் - துவக்குண்கிற திருமேனியிறே "இச்சாக்ருஹீதாபிமதோருதேஹ:" (இச்சாக்ருஹீ தாபிமதோருதேஹ:) என்று தனக்கும் அபிமதமாயிருப்பதோன்றிறே. தான்மதித்தார்க்கு "ஏஷ ஸர்வஸ்வபூத:" (ஏஷஸர்வஸ்வபூதஸ்து) என்றுகோடுப்பதும் திருமேனியையே. [வான்சுடர்] - முதலிலே தேஜோரூபமான திருமேனி மிகவும் ஒளிபெற்றது இவரோட்டைக்கலவியாலே. புறம்பு ஒளியாய் உள்ளும்மண்பற்றியிருக்கை யன்றிக்கே, நெய்திணுங்கினுற்போலே தேஜஸ்த்தத்வமே யாயிருக்கை. "தேஜஸாம்ராசிமூர்ஜிதம்" (தேஜஸாம்ராசிமூர்ஜிதம்) என்கிறபடியே. பஞ்சசக்திமயமாயிருக்கச்செய்தே, "ஷாட்குண்யவிக்ரஹம்" (ஷாட்குண்ய

இரண்டாம்பாட்டு - திருவுடம்பு இத்யாதி. 'எனதுவிசேரமமானுக்கு - செம்பொன்திருவுடம்பே' என்றதிலே நோக்காக - தம்மோடே இத்யாதி. 'அயனிடமே' இத்யாதியைக் கடாக்ஷித்து - தன்னுடம்பை இத்யாதி. 'ஒருவிடமொன்றின்றி' என்றத்தைக் கடாக்ஷித்து - தானேன்னுடம்பை இத்யாதி.

வான்சுடர் - மிக்கதேஜஸ்ஸு. 'என்னுள்கலந்தானுக்குத் திருவுடம்பு வான்சுடர்' இத்யந்வய மூகேநாஹ - அணைத்தபோதை இத்யாதி. பலகாலும் விக்ரஹத்தை வர்ணிக்கிறபடியை அநுஸந்தித்து நம்பிள்ளை ஈடுபாடு - ஈச்வரனுக்கு இத்யாதி. ப்ராஸங்கிகமாக நஞ்சீயருடைய ஸ்வலாபாநுஸந்தாநமாஹ - ஈச்வரனுக்கு இத்யாதி. இத்தால் - விக்ரஹாதிகளில்லை யென்கைக்கு நிமித்தம் அவர்களுடைய பாபப்ராசுர்ய மென்றபடி. இவர் அருளிச்செய்தால் ப்ரமாணமாமோ? என்ன - மயர்வற இத்யாதி. ஆகையாலே, இவரநுபவபரீவாஹரூபமான ஸ்ரீஸூக்தியும் பரமப்ரமாண மென்றபடி. துவக்குண்கிற - ஈடுபட்டு அநுபவிக்கிற. திரு' என்று - அழகாய், அத்தைக் காட்டுகிருர், இச்சாக்ருஹீத இத்யாதி; ஷஷ்ட்டேம்சே பஞ்சமே, பூர்வமேவ லிகிதம். கார்யத்தாலும் அபிமதத்வத்தை உபபாதிக்கிருர் - தான்மதித்தார்க்கு இத்யாதி. யுத்தகாண்டே ப்ரதமே, "ஏஷ ஸர்வஸ்வபூதஸ்து" பூர்வமேவ லிகிதம். முதலிலே இத்யாதி - 'திரு' என்றபோதே - ஸ்வாபாவிகஸர்வாதிசயங்களும் ஸித்திக்கையாலே, பின்னையும் பின்னையும் 'சுடர்' என்னும்போது - இப்படியேயாகவேணு மென்றபடி. வானின்தாத்பர்யம்- புறம்பொளியாய் இத்யாதி. திணுங்குகை- கடீபவிக்கை. உக்தார்த்தஸ்யப்ரமாணம் - தேஜஸாம் இத்யாதி. இந்த நிரவதிகதேஜோரூபதைக்கு அடி பஞ்சசக்திமயமாகையாலே யென்று விவக்ஷித்து, ஆனால் 'ஷாட்குண்யவிக்ரஹம்' என்கிறது சேரும்படியென்? என்ன - பஞ்சசக்திமயம் இத்யாதி; ப்ரதமேம்சே நவமே, "தந்த்ருஷ்ட்வா தேவாஸ்ஸர்வே ப்ரணதா: | ஸர்வேச்வரம் தேஜஸாம்ராசிமூர்ஜிதம்." "பஞ்சசக்திமயோதேவஸ்ஸ்வேச்சாஜ்ஞாநஸ்வரூபவான்| ஷாட்குண்யவிக்ரஹோதேவ: ஸ்வேச்சாநந்தஸுதாகர:." ஷாட்குண்யவிக்ரஹம்தேவம் ஹாஸவஜ்ஞநவநதம்". பஞ்சசக்திகளாவன-

விக்ரஹந்) என்கிறது குணங்களுக்கு ப்ரகாஶகமாகை சுட்டியிறே. [சேந்தாமரைகண்] - கடாக்ஷத்தாலே வவ்வலிட்டுச்சோல்லுகிற வார்த்தை. [கைகமலம்]-"கரேணம்ருதுநா" (கரேணம்ருதுநா) என்கிறபடியே அணைத்த கை. இவர் ஒருகால் சொன்னத்தைப் பல கால்சொல்லுவானேன்? என்னில்; - முத்துக்கோக்கவல்லவன் முகம்மாறிக் கோத்த வாறே விலைபெறுமாபோலே, இவரும் ஓரோமுகபேதத்தாலே மாறிமாறி அநுபவிக்கிறுர். [திருவிடமே மார்வம்] - அக்கையாலே யணைப்பிக்கும் பெரியபிராட்டியார்க்கு இருப் பிடம் திருமார்வு. [அயனிடமே கோப்பூழ்] - சதுர்த்தஶபுவநஸ்ரஷ்டாவான ப்ரஹ்மா, திருநாபீகமலத்தை இருப்பிடமாகக் கோண்டிருக்கும். [ஒருவிடமுமேந்தைபேருமாற் கரனே] - ஓரிடமேன்னுதே, ஒருவிடமேன்கிறது - ஒருவுதல் - நீங்குதலாய், நீங்கினவிட மேன்றபடி என்னுயனுன ஸர்வேஶ்வரனுக்கு நீங்கினஇடமும் ருத்ரனுக்குஇருப்பிடமா யிருக்கும். தாமஸதேவதை யிருப்பிடமாகையாலே, 'நீங்கினவிடம்' என்று அநாதரோக்தி யிருக்கிறபடி. [ஒருவிடமோன்றின்றி என்னுள்கலந்தானுக்கே] - என்னோடேவந்து கலக் கிறவிடத்தில், நீங்குமிடமோன்றுமின்றிக்கே வந்துகலந்தான். [ஓ] - 'அநந்யபரையான பெரியபிராட்டியோடோக்க, அந்யபரரான ப்ரஹ்மருத்ரர்களுக்கும் திருமேனியிலே இடங் கோடுத்துவைப்பதே!' என்று இந்த ஶீலகுணத்தை அநுஸந்தித்து வித்தராயிருந்தார் முன்பு; இப்போது தமக்குஉடம்புகோடுத்தபடி கண்டவாறே 'அது பரத்வம்' என்று தோற்றி, இதுஎன்னஶீலாதிஶயம்! ஓ! என்கிறுர். ஒருவிடமோன்றின்றி என்னுள்கலந்தா னுக்கு - திருவுடம்பேன்றுதோடங்கி, அரனே; ஓ என்று அந்வயம். (உ)

மூன்றும்பாட்டு.

என்னுள்கலந்தவன் சேங்கனிவாய்சேங்கமலம்
மின்னுஞ்சுடர்மலைக்குக் கண்பாதங்கைகமலம்
மன்னுமுழுவேழுலகும் வயிற்றினுள
தன்னுள்கலவாதது எப்போருளுந்தானில்லையே.

ஆ.—(என்னுள்.) நிரதிஶயகல்யாணகுண திவ்யரூபததை யுடையனுய்,ஸ்வ ஸங்கல்பாதீந ஸமஸ்தவஸ்துஸ்வரூபஸ்ததிதி ப்ரவ்ருததிகனுயிருந்தவன் என்னுள்ளே கலநதருளினு னென்கிறுா.

"ஶுபேதஷ்திவ—ஶாந்திஶோஹிவ்ருத்ஹஸுவவ" என்றுசொல்லப்படுகிற நித்யவிபூதிஸ்த்தித பஞ்சபூதங்கள். 'கரேணம்ருதுநா' என்கிறபடியே தடவியணைதத கை யென்றபடி. ஹரிவம்ஶே வண்டாகர்ணமோக்ஷப்ரதாநே, "வஹுஶ ஜம் தஹாவிஷ்ணுஃவிஶாவஹுாவிஹு தஃ | கரேணஶ்ருதுநாதெவஃபாவாந்நிஜெயநுஹரிஃ." முகபேதத்தாலே - க்ரமபேதத்தாலே. மார்வமே - திருவிடம். கொப்பூழே - அயனிடம். எந்தைபெருமாற்கு ஒருவிடமே - அரன். அரனது என்றபடி. கோப்பூழ் - திருநாபி. ஓரிடமேன்னுதே - இன்னவிடமென்று விஶேஷி யாதே. விவரணம் - என்னுயனுன இதயாதி. நிரவதிகதேஜோரூபவிக்ரஹத்தில் நீங்கின விட முண்டோ வென்ன, தாமஸஇத்யாதி. வித்தராயிருந்தார் முன்பு - "ஏறனைப்பூவனை" என்கிறபாட் டிலே யென்றபடி. ஒருவிடமொன்றின்றி யென்னுள்கலந்தானுக்கு - திருவுடம்பு வான்சுடரென்று தொடங்கி, கொப்பூழ், எந்தைபெருமாற்கு - ஒருவிடமே - அரன், ஓ இத்யந்வயः. (உ)

ஒ.—மூன்றும்பாட்டில், ருத்ராதிகள் மாத்ரமன்றிக்கே ஸகலலோகங்களுக்கும் அபாஶ்ரயமான எம்பெருமான், தன்னையொழிந்தால் இவ்வுலகங்களெல்லாம் படும் பாட்டை என்னைப்பிரிந்து தான்பட்டு, என்னோடே ஸம்ஶ்லேஷிக்கையாலே அத்யந்தம் புஷ்கலனானா னென்கிறார்.

[மின்னுஞ்சுடர்மலைக்கு] - என்னோடே ஸம்ஶ்லேஷிக்கையாலே வளர்ந்து உஜ்வலமான திருமேனியையுடையவனுக்கு. [மன்னுமென்று தொடங்கி] - ஸமஸ்த லோகங்களும் தன் ஸங்கல்பத்தைப்பற்றி நிலைநிற்கிறன; தன் திருவுள்ளத்தை அபாஶ்ரயமாக வுடைத்தன்றிக்கேயிருக்கும் வஸ்துதான் முதலிலே யில்லை.

ப.—அநந்தரம், தன்னுள் இராத வஸ்துவுக்கு ஸத்தையில்லையாமோபாதி, என்னுள் தான் கலவாதபோது தனககு ஸத்தையில்லையாக நினைத்து என்னுள்ளே கலந்து உஜ்ஜ்வலனானா னென்கிறார்.

என்னுள் - என்னுள்ளே, கலந்தவன் - கலந்தவனாய், மின்னும் - (அத்தாலே) விளங்கின, சுடர் - சுடரையுடைய, மலைக்கு - மலைபோன்றவனுக்கு, செங்கனிவாய்செங்கமலம் கண்பாதங்கைகமலம் - (முன்புசொன்ன) அவயவஶோபையும் யதாபூர்வமத்யுஜ்ஜ்வலமாயிராநின்றது; மன்னும் - ஸ்திரமாய், முழு ஏழுலகும் - பூர்ணமான ஸகலலோகங்களும், வயிற்றின் உள - அவன்வயிற்றிலேயாய் ஸத்தைபெறுநின்றன, தன்னுள் - தனக்குள்ளே, கலவாதது - ஸம்பந்தியாதிருப்பது, எப்பொருளுந்தான் - ஏதேனுமொரு பொருளும், இல்லை - இல்லை. ஸர்வவஸ்துவுக்கும் தத்வ்யதிரேகத்தில் ஸத்தாஹாநிஸ்வரூபப்ரயுக்தை, ஈஶ்வரனுக்கு 'இவருடைய வ்யதிரேகத்தில் ஸத்தையில்லை' என்று நினைக்கிறவிடம் ஶீலக்ருதமென்று கருத்து.

இ.—மூன்றும்பாட்டில், ருத்ராதிகளளவேயன்றிக்கே ஸர்வலோகங்களுந் தன்னைப்பற்றியல்லது ஸத்தையில்லாதாப்போலே, என்னைப்பற்றியல்லது தனக்கு ஸத்தையில்லை யென்னும்படி இராநின்றா னென்கிறார்.

[என்னுள் கலந்தவன்] - "அஹமந்நமஹமந்நாத:" என்னுமாபோலே, மேன்மைக்கு "ஶ்ரிய:பதி" என்னுமாபோலேயாயிற்று, நீர்மைக்கு - இதுவும். [செங்கனிவாய் இத்யாதி] - சிவந்து கனிந்த வாய், என்னோட்டைக்கலவியாற்பிறந்த ப்ரீதியெல்லாம் ஸ்மிதத்திலே தோற்றும்படி யிருக்கை. [மின்னும் இத்யாதி] - வந்துகலந்தபின்பு புகர்த்து வளர்ந்து ஸ்திரனாய்க் கால்வாங்கிப்போகமாட்டாதே நிற்கிற நிலை. வாமநன் வளர்ந்தபடி. நோக்குகிற கண், நோக்குக்குத்தோற்றுவிழும் திருவடிகள், எடுத்தணைக்கும் கை. [மன்னும் இத்யாதி]- ப்ரவாஹரூபேண நித்யமாய்ப்போருகிற ஸகலசேதநாசேதநங்களும் தன்ஸங்கல்பத்தைப்பற்றி நிலைநிற்கிறன. [தன்னுள் இத்யாதி] - "ந ததஸ்தி விநா யத்ஸ்யாத்" என்கிறபடியே, ப்ருதக்ஸ்திதியோக்யமாயிருப்பதொரு வஸ்து ஶஶவிஷாணத்தோபாதி முதலிலே யில்லை. அவை இவனைப் பற்றுதபோது, ஸத்தையின்றிக்கே யிருக்கிறது ஸ்வரூபத்தாலே, இவன் இவரைக் கலவாதபோது ஸத்தையின்றிக்கே யிருக்கிறது குணத்தாலே.

ஈடு.—மூன்றாம்பாட்டு. ஸ்வவ்யதிரிக்தஸமஸ்தவஸ்துக்களும் தன்னைப்பற்றி உளவாம்படியிருக்கிற ஸர்வேச்வரன், தான் என்னைப்பற்றி உளனாய் என்னோடேவந்து கலந்தானென்கிறார்.

[என்னுள்கலந்தவன்] - "அகஸ்த்யப்ராதா" (அகஸ்த்யப்ராதா) என்னுமா போலே நிரூபக மிருக்கிறபடி. "நாராயணன்" "வாஸுதேவன்" என்னுமாபோலே, "என்னுள்கலந்தவன்" என்றுகாணும் அவனுக்குத் திருநாமம். [செங்கனிவாய்செங்கமலம்] - சிவந்து கனிந்த வாய் செங்கமலம்போலே யிராநின்றது. [மின்னும் சுடர்மலைக்கு]- வாட்டமில்புகழ்வாமநன், கலந்தபின்பு வளர்ந்தபடியும், புகர்பெற்றபடியும், தரையிலே கால்பாவித் தரித்தபடியும், திண்மையையுடையனானபடியும் பற்ற, மலையென்கிறார். [கண் பாதம் கைகமலம்] - முகமறிந்து கோத்தவாறே முத்து விலைபெறுமாபோலே, இவரும் திவ்யாவயவங்களைச் சேர்த்து அநுபவிக்கிறார். [மன்னுமுழுவேழுலகும் வயிற்றினுள] - ப்ரவாஹரூபத்தாலே நித்யமான ஸகலலோகங்களும் தன் ஸங்கல்பத்தைப்பற்றிக் கிடக்கிறன. [தன்னுள் இத்யாதி] - தன்திருவுள்ளத்தை அபாச்ரயமாக வுடைத்தன்றிக்கேயிருக்கிறவஸ்து யாதொன்று, அது நாஸ்திசப்தத்துக்கு அர்த்தமாகிறது. அப்ரஹ்மாத்மகமாயிருப்பதொரு பதார்த்தந்தா னில்லை; "ந ததஸ்தி விநா யத் ஸ்யாத்" (நததஸ்திவிநாயத்ஸ்யாத்) என்

மூன்றாம்பாட்டு - என்னுள் இத்யாதி. 'மன்னுமுழுவேழுலகும்' என்று தொடங்கி, 'என்னுள்கலந்தவன்' என்னுமளவும் கடாக்ஷித்து அவதாரிகை - ஸ்வவ்யதிரிக்த இத்யாதி.

'நாராயணன்' என்கிற வாக்யாநந்தரம், "அகஸ்த்யப்ராதா" என்கிற வாக்யம் அநுஸந்தேயம். அஸங்க்யாதமான நாமங்களிருக்க, 'என்னுள்கலந்தவன்' என்று விசேஷிக்கிறதுக்கு ஹாபவம்-நாராயணன்இத்யாதி. இவ்வர்த்தத்தை த்ருஷ்டாந்தபூர்வகமாக விசதீகரிக்கிறார்-அகஸ்த்யப்ராதா இத்யாதி. நாராயண வாஸுதேவ நாமங்கள் பரத்வத்துக்கு ப்ரதாநங்களானாற்போலே, 'என்னுள்கலந்தவன்' என்கிறது - ஸௌலப்யத்துக்கு ப்ரதாந மென்றபடி. பதத்வயதுக்கும் வ்யுத்க்ரமேண ஹாவம்-வாட்டமில்இத்யாதி. 'வாட்டமில்புகழ்வாமநனை' என்றதுக்கு - 'தன்னுடைமை பெறுகைக்குத்தான் அர்த்தியானவன்' என்றுவைத்து, இங்கே கலந்தபின்பு வளர்ந்தபடியும் என்கையாலே - அவ்விடத்திலே, சிறும்பினவ னென்றும் ஓரர்த்தம் விவக்ஷிதம்' என்றருளிச்செய்வர். மலையென்கிறர் - மின்னும்சுடர்மலை யென்கிறார். திவ்யாவயவங்களைப் பாட்டுக்கள்தோறுஞ் சொன்னல் புநருக்திவாராதோவென்ன, பரிஹரிக்கிறார் - முகமறிந்து இத்யாதி. ப்ரவாஹரூபத்தாலே நித்யமான என்றவிடத்திலே - "யதர்த்தாவ்ருதுலிங்காநி நாநாரூபாணி பர்யயே | த்ருச்யந்தே தாநி தாந்யேவ ததா பாவா யுகாதிஷு" இத்யாத் யநுஸந்தேயம். ருதுலிங்காநி - ருதுசிஹ்நங்கள். பர்யயே - ருதுவின்முடிவிலே. பாவா: - ப்ரபஞ்சபதார்த்தா:. "ஸூர்யாசந்த்ரமஸௌ தாதா யதாபூர்வமகல்பயத்" இத்யாதி. வயிறு- உள். "தந்நஸ்தேவ: ப்ரசோதயாத்" என்று கருத்து. 'மன்னுமுழுவேழுலகும் வயிற்றினுள' என்று அந்வயமுகேந சொன்ன அர்த்தத்தை வ்யதிரேகமுகேந த்ருடீகரிக்கிறார் - தன்னுள்கலவாததெப்பொருளுந்தானில்லையே என்று. தந்திருவுள்ளத்தையிதி - உள் - உள்ளம். கீழே - ஸங்கல்பாதீந மென்றார்; இப்போது - ஸ்வரூபாச்ரிதமென்று அர்த்தாந்தரம் - அப்ரஹ்மாத்மகம் இத்யாதி. தன் - தான். ஸ்வரூபாச்ரிதமென்னுமதுக்கு ப்ரமாணம் - நததஸ்தி இத்யாதி. கீதாஸுதசமே, "யச்சாபி ஸர்வபூதாநாம் பீஜம் ததஹமர்ஜுந| ந ததஸ்தி விநா யத்ஸ்யாந்மயா பூதம் சராசரம்"

ருனிறே. தன்னுள் கலவாதது எப்பொருளுந்தா னில்லையே அவைஇவனைப்பற்றாதபோது ஸத்தையின்றிக்கே யிருக்கிறது - ஸ்வரூபத்தாலே; இவன் இவரைக் கலவாதபோது ஸத்தை யின்றிக்கே யிருக்கிறது - ப்ரணயித்வகுணத்தாலே. (௩)

நான்காம்பாட்டு.

எப்பொருளுந்தானாய் மரதகக்குன்றமொக்கும்
அப்பொழுதைத்தாமரைப்பூக் கண்பாதங்கைகமலம்
எப்பொழுதும்நாள்திங்க ளாண்டூழியூழிதோறும்
அப்பொழுதைக்கப்பொழுது என்னாராவமுதமே.

ஆ.—(எப்பொருளும்.) ஸர்வாந்தராத்மபூதனாய், அளவிறந்த அழகை யுடையனாயிருந்த இவன், அழகாலே ஸர்வகாலமும் ப்ரதிக்ஷணம் எனக்கு அபூர்வவத் போக்யமாயிராநின்றான்; ஒருவனுடைய அழகு இருக்கும்படியே ஈது என்கிறார்.

ஒ.—நாலாம்பாட்டில், என்னோடே கலந்த எம்பெருமான், காலதத்வமுள்ள தனையும் அநுபவிக்கிலும் க்ஷணந்தோறும் நிரதிசயபோக்யனாயிருக்குமென்று விஸ்மித ராகிறார்.

[எப்பொருளுமென்று தொடங்கி] - எல்லாப்பதார்த்தமும் தானிட்டவழக் காய் என்னோடே ஸம்ஶ்லேஷித்து அத்யுஜ்வலனாகையாலும் வளர்த்தியாலும் என்னை விட்டுப்போகாதே நிற்கையாலும் மரதகக்குன்றமொக்கும். [அப்பொழுதைத் தாமரை ப்பூ] - அப்போதலர்ந்த தாமரைப்பூ. [எப்பொழுதும்] - ஒருக்ஷணமும்.

ப.—அநந்தரம், நிரதிசயபோக்யபூதனானவன் என்னுள்ளே புகுந்தபின்பு ஸ்திரஸ்வபாவனானா னென்கிறார்.

எப்பொழுதும் — எல்லாக்ஷணம், எந்நாள் - எல்லாநாள், எத்திங்கள் - எல்லா மாஸம், எவ்வாண்டு - எல்லாவாண்டு, எவ்வூழியூழிதொறும் - எல்லாவகைப்பட்ட ஊழி தோறும், அப்பொழுதைக்கப்பொழுது - அவ்வோகாலங்களிலே, என் - என்னுள்ளே கலந்து, ஆரா அமுதம் - அத்ருப்திகரமான அம்ருதமானவன்; (அத்தால்வந்த தன்னு டைய ப்ரீத்யதிஶயத்தாலே), எப்பொருளும் - எல்லாப்பொருளும், தானாய் - தானான ஸர்வாத்மபாவமும் நிறம்பெற்று, மரதகக்குன்றமொக்கும் - மரதகமலைபோலே உயர்த்தி யும் நிறமும் உரமு முடையனானான்; அப்பொழுதை - அப்போதலர்ந்த, தாமரைப்பூ - தாமரைபோலே, கண் - கண்ணும், அப்பொழுதைக்கமலம் - அப்போதைக் கமலம்போ லே, பாதம் - பாதமும், கை - கையும் புதுமைபெற்றன.

வ்யா॰. அவதாரிகைக்குச்சேரத் தாத்பர்யம் - அவைஇவனை இத்யாதி. என்னுள்கலந்தவனா- மின்னும்சுடர்மலைக்கு - செங்கனிவாய்செங்கமலம், கண்பாதம் கைகமலமித்யாரப்ய அந்வய:. (௩)

இ.—நாலாம்பாட்டில் அவன் காலதத்வமுள்ளதனையும் அநுபவிக்கிலும் நித்யாபூர்வமாய்க்கொண்டு நிரதிஶயபோக்யனாயிருக்கு மென்று விஸ்மிதராகிறார்.

[எப்பொருளும்தானாய்] - ஸகலபதார்த்தங்களும் தனக்கு ப்ரகாரமாகையாலே தானிட்ட வழக்காய். ஸ்வாதீநமல்லாததொரு பதார்த்தத்தைப் பற்றி இப்பாடுபடுகிறானோ. [மரதகக்குன்ற மொக்கும்] - ஜகச்சரீரத்வமேயன்றியே அஸாதாரண விக்ரஹத்தைச் சொல்லுகிறது. கீழே "மின்னும் சுடர் மலைக்கு" என்று - தம்மோட்டைக கலவியாலே வநத புகரைச் சொல்லிற்று; இஙகு - அதுக்கு ஆஶ்ரயமான அஸாதாரண விக்ரஹத்தைச் சொல்லுகிறது. [அப்பொழுதைத்தாமரைப்பூ] - முன்புசொன்ன ஸாமாந்யம் ஒப்பாகமாட்டாது, அப்போதலர்நததானாலாயிற்றுஒப்பாவது [கண்] - வந்தத்தை விளைக்குங் கண். [பாதம்] - வந்தம்பிறந்தால்அநுபவிக்க இழியுந் துறை. [கைகமலம்] - தம்மோட்டை ஸ்பர்ஶத்தாலே செவ்விபெற்றபடி. [எப்பொழுதும்] - க்ஷணகாலமும். கலாகாஷ்டாதிகளாலும் பேதிக்கவொண்ணாத அத்யல்பகாலம்அநுபவிப்பது, ஒருநாள் அநுபவிப்பது, ஒருமாஸம்அநுபவிப்பது, ஒருஸம்வத்ஸரம்அநுபவிப்பது, கல்பநதோறும் கல்பநதோறும்அநுபவிப்பது, இப்படிகாலதத்வமுள்ளதனையும் அநுபவியாநின்றாலும் பூர்வக்ஷணத்திலநுபவம்போலேயன்று உத்தரக்ஷணத்திலநுபவம் ' இருப்பது. [ஊழியூழி] - மேற்போக்கில்லாமையாலே மடிக்கிறார். [அப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுதமே]-யாரா வாஹிக ஜ்ஞாநத்தில் காலோபஷ்டம்பாதிகளால் வருவதொரு பேதமுண்டிறே ஜ்ஞாநத்துக்கு; அதுபோலன்றிக்கே, அநுபவியாத தொன்றை அநுபவித்தாற்போலே நிதயாபூர்வமாயிருக்கை.

ஈடு.—நாலாம்பாட்டு. நீர் ஒருகால்சொன்னத்தை ஒன்பதின்கால் சொல்லி இங்ஙனேகிடந்து படுகிறதேன்? என்ன; நான்அது தவிர்கிறேன், நீங்கள்அவ்விஷயம் ஒருகாலிருந்தபடியே எப்போதுமிருக்கும்படி பண்ணவல்லிகோளோ? என்கிறார்.

[எப்பொருளுந்தானாய்] - ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்தவஸ்துக்களும் 'தான்' என்கிற சொல்லுக்குள்ளே ப்ரகாரமாம்படி, தான் ப்ரகாரியாய். ஸ்வாதீநமல்லாததொரு பதார்த்தத்தைப் பெற்றுத்தான் இப்பாடுபடுகிறானோ? [மரதகக்குன்றமொக்கும்] - கீழ் - ஜகதாகாரனாய் நிற்கும் நிலைசொல்லிற்று; இங்கு - அஸாதாரணவிக்ரஹந்தன்னையே சொல்லுகிறது· கீழ், மின்னும் சுடரென்று - தம்மோட்டைக்கலவியால் வந்த புகரைச் சொல்லிற்று; அதுக்குஆஶ்ரயமான அஸாதாரணவிக்ரஹத்தைச் சொல்லுகிறது இங்கு· [அப்பொழுதை] - 'கீழ் - தாமரையை ஒப்பாகச் சொன்னவிடம் தப்பச்சொன்னோம்' என்றுஅழித்து ப்ரதிஜ்ஞைபண்ணுகிறார். கேவலம் தாமரையை ஒப்பாகச் சொல்லில், செவ்வியழிந்த ஸமயத்திலும் ஒப்பாகத் தொடங்குமே;அப்போதலர்ந்த-செவ்வியையுடைத்

நாலாம்பாட்டு. எப்பொருளும் இதயாதி. திவ்யாவயவங்களைப் பலகாலுஞ் சொன்னதுக்குக் கீழிற்பாட்டுக்களில் அருளிசசெய்த பரிஹாரமொழியப் பரிஹாராந்தரம் - நீர்ஒருகால் இத்யாதி. ஒன்பதின்கால் - ஒன்பதுதரம். 'அப்பொழுதைக்கு' இதயாதியைப்பற்ற, ஒருகாலிருந்த படியே இத்யாதி.

ஜகதாகாரதையைச சொல்லுகிறதுக்கு ப்ரயோஜநம் - ஸ்வாதீந இத்யாதி. இப்பாடு என்றது - தம்மைப்பெற்றபின்பு திருமேனியிற் பிறந்த புகரைப் பற்ற. கீழ்ஜகதாகாரன் இதயாதி இரண்டும் விக்ரஹயோகமாகையாலே, "எப்பொருளும்தானாய்" என்ற வநந்தரம், "மரதகக் குன்றம்" என்றுசேர்த்து அநுபவிக்கிறாரென்று கருதது. புநருக்திக்குப் பரிஹாரம்-கீழ்மின்னும்

தான தாமரை. [கண்பாதம்] - கண் - வந்தத்தை விளக்குங் கண். பாதம் - வந்தமறிந்தால் அநுபவிக்கஇழியும் துறை. [கைகமலம்] - தம்மோட்டை ஸ்பர்ஶத்தாலே செவ்வி பெற்றபடி. இவையெல்லாம் அப்போதலர்ந்த கமலம்போலே யிருக்கும். [எப்போழுதும்இத்யாதி] - கலாகாஷ்டாதிகளாலும் ஹேதிக்கவொண்ணாத அத்யல்பகாலம் அநுபவிப்பது, ஒருநாள் அநுபவிப்பது, ஒருமாஸம்அநுபவிப்பது ஓராண்டுஅநுபவிப்பது, கல்பந்தோறும் கல்பந்தோறும்அநுபவிப்பது, இப்படி காலமெல்லாம் அநுபவியாநின்றாலும், கீழ்ச் சொன்ன அப்போழுதைக்கப்போழுதென்னுராவமுதமே - பூர்வக்ஷணத்தில் அநுபவம்போலல்ல வாயிற்று உத்தரக்ஷணத்தி லநுபவம் இருப்பது. தாராவாஹிக விஜ்ஞாநத்தில் காலோபஷ்டம்பாதிகளாலே வருவதொரு பேதமுண்டிறே ஜ்ஞாநத்துக்கு, இங்கு விஷயந் தானே பேதியாநின்றதாயிற்று. (ச)

ஐந்தாம்பாட்டு.

ஆராவமுதமாய் அல்லாவியுள்கலந்த
காரார்கருமுகில்போல் என்னம்மான்கண்ணனுக்கு
நேராவாய்செம்பவளம் கண்பாதங்கைகமலம்
பேராரநீண்முடிநாண் பின்னுமிழைபலவே.

இதயாதி. அவதாரிகை - கீழ்தாமரையை இதயாதி. 'அப்பொழுதை' என்று விஶேஷித்ததுக்கு ஹாவம்-கேவலம் இதயாதி. பந்தத்தைவிளக்குங்கண்-நவவிதஸம்பந்தத்தையும் ஸ்வவீக்ஷணாதிகளாலே விஶதமாக ஸ்ப்புரிப்பிக்கிறகண் என்றபடி. இவையெல்லாமப்போதலர்ந்த விதி- கண்பாதம் - அப்பொழுதைத் தாமரைப்பூ; கை - அப்பொழுதைக் கமலம் இத்யந்வயஃ. 'எப்பொழுதும்' என்று - அத்யல்பகாலத்தைச் சொல்லுகிறது. 'அப்பொழுதைக்கப்பொழுது' என்று 'எப்பொழுது நாள் திங்கள் முதலானவற்றையெல்லாம் பராமர்ஶிக்கிறது' என்று வானமாமலைஜீயர் நிர்வாஹம். 'நாள் திங்கள் முதலானஎல்லாவற்றிலுமுண்டான, எப்பொழுது மென்று சொன்ன - அத்யல்பகாலங்கள்தோறும் என்னுராவமுதம்' என்று ராமாநுஜப்பிள்ளை நிர்வாஹம். இதுவே ஸ்வரஸம், 'பூர்வக்ஷணத்தில்அநுபவம்போலல்லவாயிற்று உத்தரக்ஷணத்திலநுபவமிருப்பது' என்று வ்யாக்யாந வாக்யம் இருக்கையாலே. 'அப்பொழுதைக்கப்பொழுது' என்கிறவிடத்தில், 'அ' என்கிறது - எல்லாக்காலத்தையும் பராமர்ஶிக்கிறதன்று, அவ்வவகாலஙகளிலுண்டான க்ஷண மாத்ரபராமர்ஶியென்று தோற்றஅருளிசசெய்கிறார் - பூர்வக்ஷணத்தில் இத்யாதி. "தாராவாஹிகேதி - தாராரூபேணவாஹஃ - தாராவாஹஃ; தாராவாஹோஸ்யாஸ்தீதி - தாராவாஹிகம்; தாராவாஹிகஞ்ச தத்விஜ்ஞாநஞ்ச-தாராவாஹிகவிஜ்ஞாநம்". இந்த விஷயந் தானே யிதி - "கடோயங்கடோயம்" என்கிற தாராவாஹிகவிஜ்ஞாநத்தில் பூர்வோத்தர காலாவச்சிந்நவேஷேண கடரூபவஸ்துவுக்கு பேதமுண்டு, இஙகு, காலஸம்யோகரூபகாலோபஷ்டம்பத்தாலும் தேஶஸம்யோகாதிகளாலும் பேதிக்கையன்றிக்கே, ஸ்வதஏவ விஷயந்தானே பேதிக்கிறதென்றபடி; "க்ஷணாந்தரக்ஷணவிஶேஷணவிஶிஷ்டவஸ்துவிஷயத்வநாநயிமதாரூடாந்வா" என்றிறே ப்ராபாகரமதம்; ததநுஸாரேண நிர்வஹிக்கவுமாம். அன்றிக்கே. "கடோயங்கடோயம்' என்கிற தாராவாஹிகவிஜ்ஞாநததில் காலோபஷ்டம்பாதிகளாலே ஜ்ஞாநத்துக்கு பேதமொழிய விஷயத்துக்கு பேதமில்லை" என்ற நையாயிகமதாநுஸாரேண நிர்வஹிக்கவுமாம். உபஷ்டம்பம் - ஸம்யோகம். ஆதிஶப்தத்தாலே-தேஶஸம்யோகமும், உத்பத்திவிநாஶங்களும் சொல்லப்படுகிறது பரதமநிர்வாஹத்தில், ஜ்ஞாநத்துக்கு - விஷயத்துக்கு. விஷயம் பேதிக்கையாவது - போக்யதாப்ரகர்ஷத்தாலே புதியதாய்த் தோற்றுகை. க்ரமேண அந்வயஃ (ச)

ஆ.—(ஆராவமுதமாய்) நிருபமமான ஸௌந்தர்யத்தை யுடையனாய், அபரிமித திவ்யபூஷணோபேதனாய், ஸர்வகாலமும் அநுபவித்தாலும் ஆராதபோக்யமாயிருந்தவன், அத்யந்தம அவஸ்துபூதனாயிருந்த என்னுள்ளே கலந்தருளினா னென்கிறார்

ஒ.—அஞ்சாம்பாட்டில், எம்பெருமானுக்குஎன்னோட்டை ஸம்ஶ்லேஷத்திற பிறந்த அழகுக்கு உபமானமில்லை யென்கிறார்.

[ஆராவமுதமா யென்று தொடங்கி] - நிரதிஶய போக்யனா யிருந்துவைத்து அத்யந்தஹீநனான என்னோடே கலப்பதுஞ்செய்து அத்தாலே கார்காலத்தில் ஆர்ந்த கருமுகில்போலே உஜ்வலனாய் என் ஸ்வாமியான க்ருஷ்ணனுக்கு. [நேராவாயென்று தொடங்கி] - வாயை ஒவ்வாது செம்பவளம் கண்பாதங்கைகளோடு ஒவ்வாது கமலம். இழை - ஆபரணம்.

ப.—அநந்தரம், தம்முடைய திருவுள்ளத்திலே கலந்தவனுடைய அவயவ ஶோபைக்கு உபமையில்லை யென்கிறார்.

ஆராவமுதமாய் — நிரதிஶயபோக்யபூதனாய், அல - ஒன்றல்லாத, ஆவியுள் - என்னெஞ்சுக்குள்ளே, கலந்த - கலந்து, (அத்தாலே), கார - கார்காலத்திலே, ஆர்-பூர்ணமான, கருமுகில்போல் - காளமேகம்போலேயிருக்கிற, என் அம்மான் - என்னுதனான, கண்ணனுக்கு - க்ருஷ்ணனுக்கு, செம் பவளம் - சிவந்த பவளம், வாய் - அதரத்தை, நேராது - ஒவ்வாது; கமலம் - கமலங்கள், கண்பாதம்கை - கண்பாதங்கைகளை, நேரா - ஒவ்வா; (அதுக்குமேலே), பேர் - பெரிய, ஆரம் - ஆரமும், நீள் — உயர்ந்த, முடி - முடியும், நாண் - நாணும் முதல், பின்னும - மற்றுமுண்டான, இழை - ஆபரணங்களும், பல - அஸங்க்யாதங்கள்.

இ.—அஞ்சாம்பாட்டில், என்னோட்டைக்கலவியாலே அவனுக்குப்பிறந்த அழகுக்கு உபமானமில்லை யென்கிறார்.

[அராவமுதம் இத்யாதி] - நிரதிஶயபோக்யனாய்வைத்து, 'சுஸௌநவ' - என்கிற ஆத்மாவோடே வந்துகலந்தான். தன்னையும்அறிந்திலன், என்னையும்அறிந்திலன். [அல்லாவி]- அசித்திற்காட்டிலும் தம்மைக் குறையநினைத்தபடி. அசித்துக்குஇழவில்லை, சேதநனாய்வைத்து ஜ்ஞாநபலமில்லாமையாலே அசித்துக்கவ்வருகாக நினைத்திருக்கிறார். [உள்கலந்த] - "பெருமக்களுள்ளவர்" என்கிற ஸூரிகளளவிற் கலக்குமாபோலேதான் கலந்தானோ? என்னை ஆராவமுதாக நினைத்து, என்னளவாகத்தன்னைநினைத்துக்கிடீர் கலந்தது அவன் இப்படியிருந்தமை என்கொண்டறிவோம் என்னில், -[காரார கருமுகில்போல்] - "என்னோட்டைக்கலவி பெறுப்பேறு" என்னுமிடம் வடிவிலே தோற்ற இராநின்றான்; தனக்கு நிறக்கேடாம்படியிறே என்னோட்டைக்கலவி இருப்பது. கார்காலத்தில் ஆர்ந்தமேகம். தன்காலத்திற் காளமேகம். [என்னம்மான் கண்ணனுக்கு] - அவ்வடிவைக்காட்டி முறையையுணர்த்தின க்ருஷ்ணனுக்கு. [நேராவாய்செம்பவளம்] - கீழ்ஒப்பாகச் சொன்ன சிவந்த பவளம் ஜாதியாக நேர்நில்லாது. [கண்பாதங்கைகமலம் நேரா] - முதலுறவுபண்ணும் கண், ப்ராப்யமான திருவடிகள், எடுத்தணைக்கும் கை

இவற்றுக்குத் தாமரை ஜாதியாகவொப்பாகா. [பேராரம்] - பெரியஆரம், திருக்கழுத்திலே இருமடியாகச்சாத்தின பெரியதிருவாரம். [நீள்முடி] - ஆதிராஜ்யஸூசகமான திருவபிஷேகம். [நாண்] - விடுநாண். [பின்னும்] - பின்னையும் உபமாநமில்லாத ஆபரணம்அநேகம்.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. இத்தனைபோதும் தாமரையை ஶிக்ஷித்து உபமாநமாகச் சொல்லிப்போந்தார்; விஷயத்திலே அவகாஹித்தவாறே நேர்கோடுநேரே உபமாநமாய் நின்றதில்லை; அவற்றைக்கழித்து உபமேயந்தன்னையே சொல்லுகிறார்.

[ஆராவமுதமாய்] - எப்போதும் புஜியாநின்றாலும் மேன்மேலென த்ருஷ்ணையை விளைக்கும் அம்ருதம் போலே நிரதிஶயபோக்யனாய். [அல்லாவியுள்கலந்த]—இப்படிபோக்யம் குறைவற்றால் போக்தாக்களும் அதுக்கு அநுரூபமாகப்பெற்றதோ.[அல்லாவி] - ஒருவஸ்துவாக எண்ணவொண்ணாத என்னுடைய ஆவியோடேகிடீர் வந்து கலந்தது. தன்னையும் அறிந்திலன், என்னையும் அறிந்திலன். [அல்லாவி] - அசித்திற்காட்டில் தம்மைக் குறையநினைத்தபடி. அசித்துக்கு இழவில்லையே, தன்ஸ்வரூபத்திலே கிடந்ததே; சேதநனாயிருந்துவைத்து ஜ்ஞாநபலமில்லாமையாலே அசித்திற்காட்டில் தம்மைக் குறையநினைத்திருக்கிறார் [உள்கலந்த] - பெருமக்களுள்ளவரான நித்யஸூரிகளளவில் கலக்குமாபோலேதான் கலந்தானோ? என்னை ஆராவமுதாக நினைத்து, என்னளவாகத்தன்னை நினைத்துக்கிடீர் கலந்தது. [உள்கலந்த]-"ஏகதத்வம்" (ஏகதத்வம்) என்னலாம்படி கலந்தானாயிற்று. அவன்இப்படி கலந்தமை நீர்என்கொண்டுஅறிந்ததென்னில்; வடிவிலே தொடைகொண்டேனென்கிறார். [காரார்கருமுகில்போல்] - என்னோட்டைக்கலவி 'பெறாப்பேறு' என்னுமிடம் தன்வடிவிலேதோற்ற இராநின்றான். கார்காலத்தில் ஆர்ந்த கருமுகில்போ லென்னுதல்; காரென்று - கறுப்பாய், கருமை

அஞ்சாம்பாட்டு. ஆராவமுதம் - இத்யாதி. கீழ், உபமாநமான தாமரையை சிக்ஷித்து ஒப்பாகச் சொல்லிப்போந்தவர், இங்கு 'ஒப்பில்லை' என்று சொன்னதுக்கு ப்ரயோஜநம் அருளிச்செய்கிறார் - இத்தனைபோதுஇத்யாதி. சிக்ஷித்து - சிறிது விஶேஷணமிட்டு. நேர்கோடுநேர் - ஸாக்ஷாத்

மேன்மேலென இது - அபூதோபமை. அவனுடைய போக்யதையைச் சொன்ன வநந்தரம், தம்முடைய ஹேயதையைச் சொல்லுகிறவருடைய ஹார்த்தபாவம்-இப்படி இத்யாதி. அல்லாவி - அல்லாதஆவி. ஒருவஸ்துவல்லாத ஆத்மாவுக்குள்ளே யென்றபடி. இது அநநுரூபமன்றோ வென்ன, ஒருவஸ்துவாகஇத்யாதி. விவரணம் - தன்னையும்இத்யாதி. 'நல்லதுகெட்டால் நாய்க்குமாகாது' என்றத்தை நினைத்து அருளிச்செய்கிறார் - அசித்திற்காட்டில்இத்யாதி. அத்தைஉபபாதிக்கிறார் - அசித்துக்குஇத்யாதி. அசித்துக்குஇழவில்லையே - அசித்துக்கு 'இழந்தோம்' என்னும்அறிவு இல்லையே. தன்ஸ்வரூபத்திலேகிடந்ததே - வஸ்த்வந்தரமன்றிக்கே கிடந்ததே. ஜ்ஞாநபல மில்லாமையாலே - 'பகவத்ஸம்ஶ்லேஷத்துக்குஅயோக்யம்' என்னும் ஜ்ஞாநபல மில்லாமையாலே. 'உள்கலந்த' என்றதுக்குஅர்த்தத்வயம் - விடாயர் மடுவிலேயவகாஹிக்குமாபோலே அத்யபிநிவிஷ்டனாய்க் கலந்தா னென்னுதல், "ஏகதத்வம்" என்னலாம்படி கலந்தா னென்னுதல். இரண்டர்த்தத்தையும் அருளிச்செய்கிறார் - பெருமக்கள் இத்யாதியாலும் ஏகதத்வமென்னலாம் இத்யாதியாலும். நித்யஸூரிகளளவி லிதி - யோக்யவிஷயத்திற் கலக்கும்போதும் பெருமானாயிறே கலந்ததென்றபடி. என்னளவாகத்தன்னைநினைத்து - தன்னை அல்லாவியாக நினைத்து. தொடைகொண்டேன் - க்ரஹித்தேன். என்னுள்ளே கலந்த அநந்தரம் - காரார்கருமுகிலானான் என்று பரபாவியாக பாவம் - என்னோட்டைக்கலவி இத்யாதி. காரார்கருமுகில்போல் - வர்ஷாகாலீந பரிபூர்ண

மிக்க முகிலேன்னுதல். இவ்வடிவையுடையவன்கிடீர் என்னோடே வந்துகலந்தானென்கிறார் [என்னம்மான்கண்ணனுக்கு] - அவ்வடிவழகாலே என்னையெழுதிக்கொண்ட க்ருஷ்ணனுக்கு [நேராவாய்செம்பவளம்]-பவளமாகிற் சிவந்தன்றோ இருப்பதென்னில்; ப்ரவாளத்தை ஸ்ப்படிகஸ்த்தாநத்திலே யாக்கி அவ்வருகே சிவந்த பவளத்தைக் கற்பித்தால், அப்படி சிவந்த பவளமாயிற்று ஜாதியாகத் திருப்பவளத்துக்கு ஒப்பாகாதது. [கண்பாதம்கைகமலம்நேரா]-குளிரநோக்கின கண், நோக்குக்குத்தோற்று விழுந் திருவடிகள், திருவடிகளிலே விழுந்தாரை யெடுத்தணைக்குங் கை; இவற்றுக்குத் தாமரைஜாதியாக ஒப்பாகா. [பேராரம்] - "பேரியவரைமார்பிற்பேராரம்" என்கிறபடியே, திருக்கழுத்துக்கிருமடியிட்டுச் சாத்தவேண்டும்படியான ஆரம். [நீள்முடி] - ஆதிராஜ்ய ஸூசகமான திருவபிஷேகம். [நாண்]-விடுநாண் [பின்னுமிழைபலவே] அநுபவித்துப்போ மித்தனை போக்கி, என்றுற் சொல்லித் தலைக்கட்டப்போமோ.? (௫)

ஆறும் பாட்டு.

பலபலவேயாபரணம் பேரும்பலபலவே
பலபலவேசோதி வடிவுபண்பெண்ணில்
பலபலகண்டுண்டு கேட்டுற்றுமோந்தின்பம்
பலபலவேஞானமும் பாம்பணைமேலாற்கேயோ!

ஆ.—(பலபலவே.) அஸங்க்யேய திவ்யபூஷணங்களையும், அஸங்க்யேய கல்யாணகுணங்களையும், அஸங்க்யேய தேஜோமயகல்யாண திவ்யரூபங்களையும், அஸங்கயேய திவ்யஹோகங்களையும், அஸங்கயேய திவ்யஜ்ஞாநங்களையு முடையனாய், நாக பர்யங்கஶாயியாய், இப்படி பரிபூர்ணனாயிருந்துவைத்து என்னோடே கலந்தருளினானென்கிறார்.

ஒ.—ஆறும்பாட்டில், தம்மோடே கலந்த எம்பெருமானுடைய அஸங்க்யமான திவ்யபூஷணாதிகளை யநுபவிக்கிறார்.

[பலபலவே யாபரணமென்று இப்பாட்டெல்லாம்] - பாம்பணைமேலாற்கு ப்ரகாரங்களை யெண்ணப்புகில், ஆபரணங்கள், குணசேஷ்டிதங்களுக்கு வாசகமான திருநாமங்

மேகம்போலே யிதி ப்ரதமார்த்தஃ; காரென்று - கறுப்பாய், ஆர்தல் - மிகுதியாய், கருமைமிக்க கருமுகில் -மெய்த்தமுகிலென்று த்வீதியார்த்தம். காரார்கருமுகில்போலே யிருக்கிறவன்கிடீர் - அல்லாவியுள் கலந்ததென்று பூர்வபாவியாக அர்த்தாந்தரம் - இவ்வடிவை இத்யாதி· வாய்க்குச் செம்பவளம், நேரா - ஸத்ருஶமாகா தென்றபடி. பவளமாகிற் சிவந்தன்றேயிருப்பதென்று- அநந்தரம், 'செம்' என்று விஶேஷிக்கவேணுமோ? என்னில் என்று கூட்டுவது. 'பவளம்' என்கிற ஸாமாந்ய நிர்த்தேசத்தைப்பற்ற, ஜாதியாக என்றது. ஜாதிக்குள்ளே ஒருவ்யக்தியும் ஸத்ருஶமன்றென்றபடி. கண்பாதம் கைகமலம்நேரா - கண் பாதம் கைகளுக்குக் கமலம் ஒப்பாகாது. ஆரம் - ஹாரம், முத்துமாலை. பேரியவரையித்யாதி - மூன்றாந்திருவந்தாதி. பெரியமலைபோலே பொருந்தியிருக்கிற திருமார்விலே பெருத்திருக்கிற திருவாரத்தைச் சாத்தி யென்றபடி. இருமடியிட்டு - இரட்டையாக மடித்து. விடுநாண் - கடிஸூத்ரம். 'பலவே' என்றதுக்கு ஹாவம் - அனுபவித்து 'இத்யாதி. க்ரமேண அந்வயஃ. (௫)

கள், திவ்யவிக்ரஹங்கள், ஐந்த்ரியஸுகங்கள், ஜ்ஞாநங்கள் இவையெல்லாம் அஸங்க்யேயங்கள். ஞானமென்று - ஜ்ஞாநஸாதநமான சக்ஷுராதி இந்த்ரியங்களாகவுமாம். ஸர்வேந்த்ரியங்களுக்கும போக்யமாயிருக்கும் பரிகரங்களை யுடையவனென்னுமிடத்துக்கு உபலக்ஷணம் [பாம்பணைமே லாற்கேயோ வென்றது]

ப.—அநந்தரம், பூஷணாத்யபரிச்சேதத்தை அநுபவிக்கிறார்.

பாம்பணைமேலாற்கு-திருவநந்தாழ்வானைப் படுக்கையாககொண்டாற்போலே என்னோடு கலந்தவனுக்கு, பண்பு எண்ணில் - ஸ்வபாவநிரூபணம்பண்ணில், ஆபரணம்-ஆபரணம், பலபல - (கிரீடாதிரூபபேதத்தாலும் ஒரொன்றில் ஸம்ஸ்தாநபாஹுள்யத்தாலும்) பலபலவாயிருக்கும், பேரும் - நாமமும், பலபல - (வ்யக்திபேதத்தாலும் நிர்வசநமுகத்தாலும் ஒரொன்று அநேகநாமாத்மகமாகையாலே) பலபலவாயிருக்கும்; சோதி-ஜ்யோதிரூபமான, வடிவு - அப்ராக்ருதவிக்ரஹமும், பலபல - (பரவ்யூஹாதிபேதத்தாலும் அவாந்தரபேதத்தாலும்) பலபலவாயிருக்கும்; கண்டுஉண்டுகேட்டுஉற்றுமோந்தின்பம் - இந்த்ரியத்வாரா தத்தத்விஷயஸம்யோகத்தால் வருகிற ஸுகமும், பலபல - (வ்யக்திபேதத்தாலும் அவாந்தரபேதத்தாலும்) பலபலவாயிருக்கும்; ஞானமும் - (தத்த்வாரா பதார்த்தங்களிற் பிறக்கிற) ஜ்ஞாநமும், பலபல - (அப்படியே) பலபலவாயிருக்கும் இந்த்ரியத்வாரா வருகிற ஸுகஜ்ஞாநங்களில் ஈஶ்வரனுக்கு எதாக்ரமத்தாலும் வ்யுத்க்ரமத்தாலும் வருமநியமத்தாலே பன்மைசொல்லவுமாம்.

இ.—ஆறும்பாட்டில், தம்மோடே கலந்தவனுடைய ஆபரணாதிகளை அநுபவிக்கிறார்.

[பலபலவேயாபரணம்] - சாதிப்பன்மையும் அவாந்தரப்பன்மையும். [பேரும் பலபலவே] — குணசேஷ்டிதங்களுக்கு வாசகமான திருநாமங்களும் பல. சீலப்பேர், வீரப்பேர் அநேகமாயிருக்கை. [பலபலவே சோதிவடிவு] - அக்குண சேஷ்டிதங்களுக்கு ஆஶ்ரயமான வடிவும் பல. ஶுத்தஸத்வமயமான விக்ரஹத்தையே இதர ஸஜாதீயமாக்குகையாலே, கொண்ட வடிவெல்லாம் ஜோதிவடிவாயிருக்கிறது. ஸௌபரியைப் போலே அநேக வடிவெடுத்தாயிற்று இவரை அநுபவிப்பது. [பண்பெண்ணில்] - அவனுடைய ப்ரகாரங்களை அநுஸந்திக்கில். [பலபலஇத்யாதி] - கண்டுண்டு கேட்டுஉற்றுமோந்தும் உண்டாககட்வதான ஐந்த்ரிய ஸுகமும் பல. [பலபலவே ஞானமும்] - வைஷயிகஜ்ஞாநமும் பலபல. "ஜ்ஞாயதே அநேந" என்கிறபடியே, ஜ்ஞாந ஸாதநமான சக்ஷுராதிகளைச் சொல்லிற்றாகவுமாம். [பாம்பணைமேலாற்கு]-ஸர்வேந்திரியங்களுக்கும் போக்யமான பரிகரங்களையுடையவ னென்னுமிடத்துக்கு உபலக்ஷணம். பாம்பணைமேலாற்கு - பண்பெண்ணில - பலபலவே ஆபரணம், பேரும்பலபல, சோதிவடிவு பலபல, கண்டுஉண்டு கேட்டுற்றுமோந்தின்பம் பலபல, ஞானமும் பலபல, ஓ என்கிறார்.

ஈடு.—ஆறும்பாட்டு. தம்முடனே கலந்து ஆற்றுநாய் அநேகஶரீர பரிக்ரஹம் பண்ணி என்னை அநுபவியாநின்றான்கிடீ ரென்கிறார்.

ஆறும்பாட்டு - பலபலவே இத்யாதி. 'பலபலவேசோதிவடிவு' என்றதிலே நோக்காக அவதாரிகை - தம்முடனே இத்யாதி. தம்முடனே - என்னுடனே. ஆற்றநாய் - ஒருசரீரத்தாலே அநுபவிக்க அத்ருப்தனாய். ஆற்றநாய் - அத்ருப்தனாய்.

[பலபலவேயாபரணம்] - ஜாதிபேதமும் வ்யக்திபேதமும் இருக்கிறபடி. திருக்கைக்குச் சாத்துமவையென்றால் அநேகம்; அவைதன்னிலே 'இடைச்சரி, கடைச்சரி' என்று அநேகமாயிருக்குமிறே. [பேரும்பலபலவே] - அநுபவஸமயத்தில் நாமக்ரஹணத்துக்குஇழிந்தவிடமெல்லாம் துறை; சீலப்பேர், வீரப்பேர் அநேகமாயிருக்குமிறே [பலபலவேசோதிவடிவு] - திருநாமத்வாரா காணும் வடிவுகளும் பல. அப்ராக்ருததிவ்யஸம்ஸ்த்தாநத்தை இதரஸஜாதீயமாக்குகையாலே எல்லாம் சோதிவடிவாயே யிருக்குமிறே. ஸௌபரியைப்போலே அநேகம்வடிவுகொண்டாயிற்று இவரைஅநுபவிக்கிறது. முக்தன் தன்னையநுபவிக்கும்போது படுமோபோலே, தான்என்னையநுபவிக்கப் பலவடிவுகொள்ளாநின்றான் [பண்பேண்ணில்] - ப்ரகாரங்களை அநுஸந்திக்கில். [பலபலஇத்யாதி] - கண்டு உண்டு கேட்டு உற்று மோந்து உண்டாகக்கடவதான ஐந்த்ரியஸுகங்களும் பல பல. த்ருஷ்டிப்ரியமாயிருக்குமவையும், புஜிக்குமவையும், ஶ்ரவணேந்த்ரிய விஷயமாயிருக்குமவையும், ஸ்பர்ஶவிஷயமாயிருக்குமவையும், க்ராணேந்த்ரியவிஷயமாயிருக்குமவையுமாயஅநேகமிறே [பலபலவேஞானமும்]-விஷயங்களைச் சொல்லுதல், அவற்றையறிகைக்கு ஸாமக்ரியான ஜ்ஞாநங்களைச் சொல்லுதல். ஜ்ஞாநமும்பலவுண்டோஎன்னில்; விஷயங்கள்தோறும் பேதிக்குமிறே ஜ்ஞாநமும் ஸ்வவ்யதிரிக்தங்களையெல்லாம் விஷயமாகவுடையனாய், அவற்றையெல்லாம் அறியவும்வல்லனாய், அவற்றையெல்லாம் அநுபவித்தால் வரும் ஏற்றத்தையுமுடையனா யிருக்குமிறே [பாம்பணைமேலாற்கேயோ] - இவையெல்லாம் ஒருவிஷயத்திலே யுண்டாய் அநுபவிக்குமென்னுமிடத்துக்கு உதாஹரணங்காட்டுகிறார். ஸ்பர்ஶேந்த்ரியத்துக்கு உண்டு, க்ராணேந்த்ரியத்துக்கு உண்டு,

த்விருக்திக்கு அர்த்தம் - ஜாதிபேதமும் இத்யாதி. உபபாதநம் - திருக்கைக்கு இத்யாதி. இது - ஜாதிபேதம். அங்குளீயகஜாதியிலும் 'இடைசசரி, கடைச்சரி' என்று வ்யக்திபேதமுண்டிறே. இப்படி எல்லாவற்றிலுங் கண்டுகொள்வது. சரி - வலயம். இடைச்சரி - பாஹுவில் தோள்வளைமுதலானவை. கடைச்சரி - முன்கைவளையாதல். யத்வா, இடைச்சரி கடைச்சரியாவது - விரலிலே மோதிரமிட்டால் முன்னும் பின்னுமிடுகிற மோதிரமாதல். 'பேரும்பலபல' என்கிறவிடத்தில் வீப்ஸையாலே - 'ஓராயிரம்' இத்யாதிப்படியே, ஏகைகநாமத்துக்கும் பஹுமுகத்வம் விவக்ஷிதம் நிருக்திபேதத்தாலே. 'கோவிந்தன்' இத்யாதி - சீலப்பேர். 'மதுஸூதன்' இத்யாதி - வீரப்பேர். 'பலபலவேசோதிவடிவு' என்றதுக்கு அர்த்தத்வயம். முந்தினது அவதாரவிக்ரஹம். இரண்டாவது - இவரை யநுபவிக்கைக்காக ஏககாலத்திலே அநேகவிக்ரஹபரிக்ரஹமாதல். ப்ரதமார்த்தம் - திருநாமத்வாரா இத்யாதி. த்விதியார்த்தம் - ஸௌபரி இத்யாதி. இதரஸஜாதீயமான அவதார விக்ரஹத்துக்குச் சோதியுண்டோ வென்ன, அப்ராக்ருதஇத்யாதி. த்ருஷ்டாந்தாந்தரம்-முக்தன் இத்யாதி. விவரணம் - த்ருஷ்டிப்ரிய இத்யாதி. பலபலவேஞானமும்-ஜ்ஞாயத இதி ஜ்ஞாநமென்கிற வ்யுத்பத்தியாலே - கீழ்ச்சொன்ன ஐந்த்ரியஸுகஹேதுவான ஶப்தாதி விஷயங்களைச் சொல்லுதலென்றபடி. ஜ்ஞாநமும் பலவுண்டோவிதி - தர்மபூதஜ்ஞாநமொன்றன்றோ, பலவுண்டோவென்னி லென்றபடி. விஷயங்கள்தோறுமிதி - விஷயோபாதிகபேதமுண்டென்றபடி. 'பலபலகண்டுண்டு' இத்யாதியையும், 'ஞானம்' என்றதின் அர்த்தத்வயத்தையுங் கூட்டி நிகமிக்கிறார் - ஸ்வ்யதிரிக்தங்களை இத்யாதி. விஷயமாக - ஸ்வஜ்ஞாநத்துக்கு விஷயமாக. அநுபவித்தால் - கரணங்களாலேயநுபவித்தால். ஏற்றம் - இன்பம். ஏற்றமென்றது - அர்த்தாத்ஸித்தம். ஆக, இத்தால் - இவரோடேகலந்தபின்பு ஶப்தாதிவிஷயாநுபவத்தாலுண்டான ஏற்றமெல்லாம் உண்டாயிற்றென்றபடி. ஸ்பர்ஶேந்த்ரியத்துக்குஉண்டு - ஸ்பர்ஶேந்திரியத்துக்கு விஷயமுண்டென்றபடி. இம்மூன்றும் மற்றவிரண்டுக்கு உபலக்ஷணமென்கிறார் - இவைதொடக்கமானவை இத்யாதி. 'ஓ' என்றது - ஹர்ஷஸூசகம். பாம்பணைமேலாற்கு - பண்பெண்ணில்

கண்ணுக்கினிதாயிருக்கும்; இவைதொடக்கமானவை யெல்லாம் உண்டிறே. பாம்பணைமேலாற்கு - பண்பெண்ணில் - பலபலவேயாபரணம் இத்யாதிதொடங்கி, ஓ! என்று அந்வயம். (சு)

ஏழாம் பாட்டு.

பாம்பணைமேற்பாற்கடலுள் பள்ளியமர்ந்ததுவும்
காம்பணைதோள்பின்னைக்காய் ஏறுடனேழ்செற்றதுவும்
தேம்பணையசோலை மராமரமேழெய்ததுவும்
பூம்பிணையதண்டுழாய்ப் பொன்முடியம்போரேறே.

ஆ.—(பாம்பணை.) தன்னுடைய ஸர்வசேஷ்டிதங்களையும் எனக்கேபோக்யமாகச் செய்தருளினா னென்கிறார்.

ஒ.—ஏழாம்பாட்டில், திவ்யசேஷ்டிதங்களை எம்பெருமான காட்டியருளக் கண்டு அநுபவிக்கிறார்.

[பாம்பணையென்று தொடங்கி] - தேவர்களுக்கு ஸமாஸ்ரயணீயனாய்க்கொண்டு திருப்பாற்கடலிலே திருவரவணைமேலே கண்வளாநதருளிற்றும், ஏறேழைச் செற்றதும் நிரதிஸயபோக்யையான நபபின்னைப பிராட்டிக்காக காம்பு - மூங்கில் [தேம்பணைய வென்றுதொடங்கி] - தேனையும பணைகளையுமுடைத்தாய் அடிகருறிக்க வொண்ணாதபடி சோலைசெய்த மராமரம் ஏழ் எய்ததுவும். [பூம்பிணையவென்றுதொடங்கி] - நல்லதொடையையுடைத்தாயுள்ள திருத்துழாயாலே அலங்க்ருதனாய்ப் பொன்முடியையுடையனாய் அத்தாலே மிகவும் மேனாணித்திருந்தவன்.

ப.—அநந்தரம், தம்மோட்டை ஸம்ஶ்லேஷத்தாலே அவனுடைய திவ்ய சேஷ்டிதங்கள் தமக்கு ப்ரகாசித்து நிறம்பெற்றபடியை அநுபவிக்கிறார்.

பாற்கடலுள் - பாற்கடலிலே, பாம்பணைமேல் - பாம்பணையின்மேலே, பள்ளி-கண்வளர்ந்தருளுகையை, அமர்ந்ததுவும் - பொருந்தினதும், காம்பணை - மூங்கில் போன்ற, தோள் - தோளையுடைய, பின்னைக்காய் - நப்பின்னைப்பிராட்டிக்காக, ஏறேழு-ஏறேழையும், உடன் - ஏகோதயோகததிலே, செற்றதுவும்-கொன்றதுவும், தேம் - தேனையும், பணைய - பணையையுமுடைய, சோலை - அததால்சோலையாகத் தழைத்த, மராமரம் ஏழு - மராமரம் ஏழு, எய்ததுவும் - எய்ததுவும், பூ - அழகிய, பிணைய - தொடையையுடைத்தாய், தண் - குளிர்நத, துழாய் - திருத்துழாயாலேஅலங்க்ருதமாய், பொன்முடி- அத்யுஜ்ஜவலமான முடியையுடைத்தாய், அம் — தர்ஶநீயமாய், போர் - (விரோதிநிரஸநோத்யோகஶீலமாய்) செருக்கையுடைததான, ஏறு - ருஷபம்போன்ற வஸ்து.

'ஏறு' என்ற சொற்கு ஈடாக - அமர்ந்ததுவும், செற்றதுவும், எய்ததுவுமென்று அந்விநை.

இ.—ஏழாம்பாட்டில், அவன் திவ்யசேஷ்டிதங்களை அநுபவிக்கிறார்.

ஆபரணம் பலபல, பேரும்பலபல, சோதிவடிவுபலபல, கண்டுகேட்டுற்றுமோந்தின்பம்பலபல, ஞானமும் பலபல, ஓ என்று அந்வயம். உற்று - ஸ்ப்ருஶித்து. (சு)

[பள்ளியமர்ந்ததுவும் பாம்பணைமேற் பாற்கடலுள்] - திருப்பாற்கடலிலே நீரு றுத்தாமைக்குத் திருவநந்தாழ்வான்மேலே தன் ஸௌகுமார்யத்துக்கு அநுகூலமாகக் கண்வளர்ந்தருளிற்றும் ஆர்த்தரக்ஷணத்துக்காக. [ஏறுடனேழ் செற்றதுவுங் காம்பணை தோள் பின்னைக்காய்] - காம்பு - மூங்கில். ருஷபங்களேழையும் ஒருகாலே ஊட்டியாக நெரித்ததும் நிரதிசயபோக்யையான நப்பின்னைப்பிராட்டிக்காக. [தேம்பணையஇத் யாதி] - தேனையும் பணையையுமுடைத்தாய், இலக்குக்குறிக்கவொண்ணாதபடி சோலை செய்த மராமரமேழையும் எய்ததுவும் மஹாராஜர்க்காக. [பூம்பிணையஇத்யாதி] - அழகி தாகத்தொடையுண்ட வென்னுதல், பூவையுடைத்தாய்த தொடையுண்டவென்னுதல. ஸ்ப்ருஹணீயமாய் ஆதிராஜ்ய ஸூசகமான திருவபிஷேகத்தை யுடையனாகையாலே, அழகிதாய்ச் செருக்கியிருந்துள்ள வ்ருஷபம்போலே மேனாணித்திருக்கிறவன்.

ஈடு.—ஏழாம்பாட்டு அயர்வறுமமரர்களதிபதியாயிருந்துவைத்து, க்ஷீராப்தி யிலே கண்வளர்ந்தருளி,ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைப் பண்ணிற்றெல்லாம் எனக்காகக் கிடீர் என்கிறார்.

[பாம்பணை] - ஆர்த்தரக்ஷணத்துக்காகத் திருப்பாற்கடலிலே நீருறுவரைத்தா மைக்கு, ஸைத்யஸௌகந்த்யஸௌகுமார்யங்களையுடையனான திருவநந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளிற்றும். [காம்புஇத்யாதி] - சுற்றுடைமைக்கும் செவ்வைக்கும் மூங்கில் போலேயிருந்துள்ள தோளழகையுடைய நப்பின்னைப்பிராட்டியோட்டை ஸம்ஶ்லேஷத் துக்கு ப்ரதிபந்தகங்களான ருஷபங்களேழையும் ஒருகாலே ஊட்டியாக நெரித்துப் போ கட்டதும். [தேம்பணைய] – மஹாராஜர், 'நீர் வாலியைக் கொல்லமாட்டீர்' என்ன, அவரை விஶ்வஸிப்பிக்கைக்காக; தேனையுடைத்தாய்ப் பணைத்து அடிகண்டு இலக்குக் குறிக்கவொண்ணாதபடியா யிருக்கிற மராமரங்களேழையும் எய்ததும். [பூஇத்யாதி] - பூவையுடைத்தாய்த் தொடையுண்ட வென்னுதல்; நல்லதொடையை யுடைத்தான திருத்துழாய்மாலையாலே அலங்க்ருதனாய், ஆதிராஜ்ய ஸூசகமான திருவபிஷேகத்தை யுடையனாய், இவ்வழகுதன்னை நித்யஸூரிகளை அநுபவிப்பித்து அத்தால்வந்தமேன்மை தோற்ற, அழகியதாய யுத்தோங்முகமான ருஷபம்போலே மேனாணித்திருக்கிற இருப்பு. பொன்முடியம்போரேறு-பாற்கடலுள் பள்ளியமர்ந்ததுவும்-பாம்பணைமேலென்று தனித் தனியே க்ரியையாகக்கடவது இவையெல்லாம் எனக்காகக் கிடீரென்றுமாம். (எ)

ஏழாம்பாட்டு - பாம்பணைமேல் இத்யாதி. 'பூம்பிணைய' இத்யாரப்ய, 'போரேறு - பாற் கடலுள் - பாம்பணைமேற் பள்ளியமர்ந்ததுவும், காம்பணையென்று தொடங்கி, எய்ததுவும்' என்று அந்வயித்து அவதாரிகை - அயர்வறும் இத்யாதி.

உஜ்வலனான தன்னை, நாம் - நாங்கள் நிகர்ஷம்பார்த்தகலாதே, மருவி - மருவி, நன்கு - (ஸூரிகளோபாதி அங்குத்தைக்குத் தகுதியாம்படி) நன்றாக, ஏத்தி - ஏத்தி, உள்ளி - (அவர்கள் சிந்தையுள் வைக்குமாபோலே) நினைத்து, வணங்கி - ("வணங்கிவழிபடும்" என்றபடியே திருவடிகளிலே) விழுந்து, 'இப்படி கரணத்ரயத்தாலுமுண்டான அநுபவத்தாலே), நாம் - நாங்கள், மகிழ்ந்து - ஆநந்திகளாய், ஆட - ஸஸம்ப்ரமந்ருத்தம்பண்ணும்படியாக, நா - நாவிலே, அலர் - அலருகிற, பா - பாவிலே, மருவி - மருவி, நிற்க - (திருவாய்மொழிபாடி) நிற்கும்படி, தந்த - உபகரித்த, பான்மை - ஸ்வஹாவத்துக்கு, ஏய்- பொருந்தின, வள்ளல் - ஔதார்யகுணவிஶிஷ்டனானவன், எங்கும் பக்கநோக்கறியானென்றுஅந்வயம். பான்மை - ஸ்வஹாவம்.

இ).—மூன்றாம்பாட்டில், நித்யஸூரிகளைப்போலே தன்படிகளிலே ஈடுபட்டுப் புகழும்படி பண்ணின இது ஓரௌதார்யமேதான் என்கிறார்.

[தாமரைக்கண்ணனை விண்ணோர் பரவும்] - ஒருகால் நோக்கினால், நித்யஸூரிகள் ஜ்வரஸந்நிபதிதரைப்போலே அடைவுகெடக் கூப்பிடுவர்களாயிற்று. [தலைமகனை] - இப்படிகூப்பிடாநின்றாலும் "ஸ்ரீவத்ஸ வக்ஷா" என்கிறபடியே அவ்வருகாயிருக்கும். [துழாயித்யாதி] - அவர்களைக்கண்ணாலேதோற்பித்தான், என்னைத்தோளின் மாலையாலே தோற்பித்தான். விரையும் பூவும் மருவியிருந்துள்ள திருத்துழாய் மாலையையுடைய என்னுயிரை. [பொன்மலையை] - என்னோட்டைக்கலவியாலே அபரிச்சிந்நமான அழகையுடையனாய்க் கால்வாங்கமாட்டாதே யிருக்கிறவனை; நான் ஏத்தப்பெற்றபடியாலே வளர்ந்தபடி என்னவுமாம். [நாமருவி] - "அருவினையேன்" என்று அகன்றநான் வந்துகிட்டி; ஹகவத்ப்ரத்யாஸத்தியை 'பாபம்' என்று அகன்றநான்கிட்டி. [நன்கேத்தி]- நித்யஸூரிகள் ஏத்தக்கடவ விஷயத்துக்கு நிலவனாய், ஸத்ருஶமாம்படி யேத்தி. "வானவர் சிந்தையுள் வைத்துச் சொல்லும் செல்வனை" என்றவரிறே. "யதோவாசோ நிவர்த்தந்தே" என்று வேதம் மீண்டவிஷயத்தை நன்றாகவேத்தி என்றுமாம். [உள்ளி] - குணங்களை யநுஸந்தித்து. "நினைந்துநைந்து" என்றவரிறே. [வணங்கி]-குணபலாத்க்ருதனாய் நிர்மமனாய் வணங்கி. "வணங்கினால் - மாருண்டோ" என்றவரிறே. [நாமகிழ்ந்தாட]- ஹகவதநுபவத்தால்வந்த ப்ரீதிதத்வத்தில் புதியதுண்ணுதநாம் ஹ்ருஷ்டராய், அதுக்குப் போக்குவிட்டாட. [நாவலரித்யாதி].- காலபுஷ்பம்போலே நாவிலே அலராநின்றுள்ள, பாவும்டு - கவி, அதிலே மருவிநிற்கும்படி - நிலவனாய் நிற்கும்படி தந்த. [நாவலர்பா]- மநஸ்ஸஹகாரமும் வேண்டாதபடி யிருக்கை. [பான்மையே வள்ளலே] - வள்ளலே யென்று - ஸம்போதநமாய், வள்ளலே - இதொருஸ்வஹாவமே என்னுதல்; பான்மையேய் - அத்தை ஸ்வஹாவமாகவுடையவன் என்னுதல். பான்மை - கடன்.

ஈடு.—மூன்றாம்பாட்டு. நித்யஸூரிகளுக்கும் அவ்வருகானவன்தன்னை நான் தேஶிகனாய் அநுபவிக்கும்படி பண்ணின இதுவும் ஓரௌதார்யமேதா னென்கிறார்.

மூன்றாம்பாட்டு - தாமரை இத்யாதி. "விண்ணோர் பரவுந்தலைமகனை, நாவலர் பாமருவி நிற்கத் தந்த பான்மையே வள்ளலே" என்ற பதங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை-நித்யஸூரிகளுக்கும் இத்யாதி.

[தாமரைக்கண்ணனை இத்யாதி]- ஒருகால் திருக்கண்களாலே குளிரநோக்கினால், அதிலேதோற்று ஜ்வரஸந்நிபதிதரைப்போலே அடைவுகேட ஏத்தாநிற்பர்களாயிற்று நித்யஸூரிகள். "ஶ்ருதோதயமர்த்தோராமஸ்ய ஜாமதக்ந்யஸ்ய ஜல்பத:" (ஶ்ருதோதயமர்த்தோராமஸ்யஜாமதக்ந்யஸ்யஜல்பத:) என்கிறபடியே. [தலைமகனை] - இவர்கள் ஏத்தாநின்றாலும், "நிரவத்ய: பர: ப்ராப்தே:" (நிரவத்ய:பர:ப்ராப்தே:) என்று அவன் பரனாயிருக்கும். [துழாய் இத்யாதி] - நித்யஸூரிகளைக் கண்ணழகாலே தோற்பித்தான், இவரைக் கண்ணியிலே அகப்படுத்தினான். மார்வில் மாலையைக்காட்டி மாலாக்கினான். விரை - பரிமளம். விரையும் பூவும் மருவியிருந்துள்ள துழாய்க்கண்ணி யெம்பிரானை. [பொன்மலையை] - என்னோட்டைக்கலவியாலே அபரிச்சிந்நமான அழகையுடையனாய், கால்வாங்கமாட்டாதே யிருக்கிறவனை. நான் ஏத்தப்பெற்றபடியாலே வளர்ந்தபடி யேன்

ப்ர.—(தாமரையித்யாதி) (விண்ணோர்பரவும்) மோக்ஷதர்மே, (௩௪) "ஶ்ருதோதயமர்த்தோராமஸ்ய ஜாமதக்ந்யஸ்ய ஜல்பத: । நாரதஸ்ய ச தேவர்ஷே: க்ருஷ்ணத்வைபாயநஸ்ய ச".

(தலைமகனை) பஞ்சமாம்ஶே ப்ரதமாத்யாயே, "ஸந்த்யஜ்ய ஸர்வாந் ஸ்வாதீநாம் ஶாந்தாநாத்மோதயாந் । ஸ்வகீயஸ்வஸ்யாகாராதிநிரவஸாநத:॥௪௭॥ நிரவத்ய: பர: ப்ராப்தேர்நிர்யிஷ்டோऽக்ஷர: க்ருதீ । ஸர்வேஶ்வர: பராயாரயா ஜ்ஞாநம் யாஜ்ஞாத்மகாக்ஷய ॥௪௮॥" "(பர: ப்ராப்தே:) ப்ராப்தே: பர: - உத்க்ருஷ்டஜ்ஞாநாத்ய:. நிரயிஷ்ட: - நிரபாய:. க்ருதீ - க்ருதக்ருத்யோ மஹாத்மா; 'வ்ருத்திஸம்யுக்தாயநேஷூ க்ருதீ' இதி ஸூத்ரே. வ்ருத்தி:-க்ருதக்ருத்ய:. ஸமஸ்த: - உத்க்ருஷ்ட: ஆயநம் - ஸ்தாநம் ஸமஸ்தாநாம். க்ருதீதி - க்ருதஸம்ப்ருத்தி:. ஸர்வேஶ்வரபராயாரா - ஸர்வேஷாமீஶ்வராணாம் பராயாரா. யாஜ்ஞம் யாஜ்ஞாத்மக-ஜ்யோதிஷாம் ஜ்யோதி:" இதி ஶ்ரீவிஷ்ணுசித்தீயே வ்யாக்யாதம்.

"தாமரைக்கண்ணனை, விண்ணோர் பரவுந்தலைமகனை" என்கிற பதசேர்த்திக்கு பாவம்-ஒருகால் இத்யாதி. பரவுகை - அடைவுகெடக் கூப்பிடுகை. இது - பக்திபாரவஶ்யக்ருதம். "பரவும்" என்றதுக்கு ஸம்வாதம் - ஶ்ருதோயம் இத்யாதி. "நாரதஸ்ய ச தேவர்ஷே: க்ருஷ்ணத்வைபாயநஸ்ய ச" இத்யுத்தரார்த்தம். இதம்ப்ரமாணம்மோக்ஷதர்மே. ஜல்பத:என்று - தஸில் ப்ரத்யயாந்தமான அவ்யயமாய், ராமனுடைய ஜல்பத்தினாலே கேட்கப்பட்டதென்றபடி. ஜல்பநம்-அக்ரமமாகச் சொல்லுகை. தலைமகனை - முதன்மையையுடையவனை. நிரவத்ய இத்யாதி-பஞ்சமேம்போப்ரதமே, "நிரவத்ய: பர: ப்ராப்தே நிர்யிஷ்டோऽக்ஷர: க்ருதீ।ஸர்வேஶ்வரபராயாரயா ஜ்ஞாநயாஜ்ஞாத்மகாக்ஷய""பர: ப்ராப்தே:- ப்ராப்தே: பர:-ப்ராப்தே ஜ்ஞாநாத்யுத்க்ருஷ்ட:. நிரயிஷ்ட: - நிரபாய:. க்ருதீ:-க்ருதக்ருத்யோ மஹாத்மா. ஸர்வேஶ்வரபராயாரா-ஸர்வேஷாமீஶ்வராணாம் பராயாரா. யாஜ்ஞாயாஜ்ஞாத்மக-ஜ்யோதிஷாம் ஜ்யோதிரித்யர்த்த:." "கண்ணியெம்பிரானை" என்ற பதத்தைக் கடாக்ஷித்து ரஸோக்தி-நித்யஸூரி இத்யாதி வாக்யத்வயமும். அந்வயம்-விரையும்இத்யாதி. "எம்பிரானை, பொன்மலையை" இதி பதஸங்கதிஸித்தம்பாவமாஹ - என்னோட்டை இத்யாதி. "வளர்ந்தது" என்றத்தைக் கடாக்ஷித்து

ணவுமாம். ஆக, இத்தால் - இவரைப்பெற்றபின்பு வளர்ந்து புகர்பெற்றபடி. [நாமருவி]- "அருவினையேன்" என்று அகலக்கடவநாம் கிட்டி. [நன்கேத்தி] - நித்யஸூரிகள் ஏத்தக்கடவ விஷயத்தை நன்றாக ஏத்தி; வானவர்சிந்தையுள் வைத்துச்சொல்லும் செல்வனே, எந்தையேயென்பன் என்று அகன்றவரிறே. "யதோவாசோநிவர்தந்தே" (யதோ வாசோநிவர்தந்தே) என்று வேதங்களுங்கூட மீண்டவிஷயத்தை மறுபாடுருவ ஏத்தியென்றுமாம். [உள்ளி] - "நினைந்து" என்று - அநுஸந்தாநத்துக்கு ப்ராயஶ்சித்தம்பண்ணத் தேடாதே அநுஸந்தித்து. [வணங்கி] - குணபலாத்க்ருதராய் நிர்மமராய் வணங்கி. "வணங்கினால், உன்பெருமை மாசூணாதோ" என்னும் நாம்வணங்கி. [நாமகிழ்ந்தாட] - பகவதநுபவத்தால் வந்த ப்ரீதிதத்வம் கணக்கண்டறியாத நாம் ஹ்ருஷ்டராய் அதுக்குப் போக்குவிட்டாட. [நாவலர் இத்யாதி] - நாட்பூ அலருமாபோலே ஜிஹ்வாக்ரத்திலே விகஸியாநின்றுள்ள சந்தஸ்ஸானது என்பக்கலிலே நிற்கும்படியாகத் தந்த இதுதன்னை ஸ்வபாவமாகவுடையையா யிருக்கிற பரமோதாரனே. [நாவலர்பா] - மநஸ்ஸஹகாரமும் வேண்டாதபடியாயிருக்கை. தாமரைக்கண்ணனாய், விண்ணோர் பரவுந் தலைமகனாய் துழாய்விரைப்பூ மருவு கண்ணி யெம்பிரானாய், பொன்மலையாயிருக்கிற தன்னை, நாம் மருவி நன்கேத்தி யுள்ளிவணங்கி நாம் மகிழ்ந்தாடும்படி, நாவலர் பாமருவிநிற்கத் தந்த பான்மையேய்ந்த வள்ளலே யென்று சொல்லுகிறாராகவுமாம். அன்றியே, "தாமரைக் கண்ணனை" என்கிற ஐகாரத்தை - அவ்யயமாக்கி, தாமரைக்கண்ணனாய் - பொன்மலையாயிருக்கிற நீ, நாமருவி - நாவலர் பாமருவிநிற்கத்தந்த பான்மையே - இதுவும் ஒரு ஸ்வபாவமே! வள்ளலே - பரமோதாரனே! என்கிறாராகவுமாம் (௯)

அர்த்தாந்தரம் - நானேத்த இத்யாதி. பலிதம் - ஆகஇத்தால்இத்யாதி: உக்தார்த்ததத்வயத்தாலுமென்றபடி. 'நாம்'என்ற பதத்தை - 'மருவி, நன்கேத்தி, உள்ளி, வணங்கி,'என்ற பதங்களோடே ப்ரத்யேகம்அந்வயித்து, அத்தால் - ஔதார்யாதிசயம் தோன்றுகிறதென்று திருவுள்ளம்பற்றி, ப்ரதிபதம் ப்ரதிகோடிஞ்சதர்ஶயதி-அருவினையேனித்யாதியாலும், வானவர் சிந்தையுள் வைத்துஇத்யாதியாலும், நினைந்தென்றுஇத்யாதியாலும், வணங்கினால்உன்பெருமை யித்யாதியாலும், பகவதநுபவத்தால்இத்யாதியாலும். அருவினையே னென்றதுக்கு - "வளவேழுலகின்முதலாய வானோரிறையை" இத்யாதௌ ஹ்ருதயம். "விண்ணோர்பரவும்தலைமகனை" இத்யேதத்ஹ்ருதிநிதாயாஹ- நித்யஸூரிகளேத்தஇத்யாதி. நன்மைக்கு பாவம் - வானவர்இத்யாதி. ஆகையாலே, நித்யஸூரிகளைப்போலே நன்றாகஏத்தியென்று, அகன்றவரிறே என்றஅநந்தரம் வாக்யத்தைப் பூரிப்பது, நன்மைக்குஅர்த்தாந்தரம் - யதோவாசஇத்யாதி. விஷயத்தை - அபரிச்சிந்நவிஷயத்தை. மறுபாடுருவ என்றது - நன்மையின்அர்த்தம். மறுபாடுருவுகை - பின்னே புறப்படுகை. யாவதவகாஹநத்தைச் சொல்லுகிறது. ஆக, "நன்கேத்தி" என்றதுக்குஅர்த்தத்வயம் - அயோக்யதாநுஸந்தாநத்தாலே அகன்ற நான்அது தவிர்ந்து நித்யஸூரிகளைப்போலே நன்றாக ஏத்தியென்னுதல், அபரிச்சிந்நவிஷயத்தை மறுபாடுருவ ஏத்தி யென்னுத லென்று. நினைந்தென்று இதி - அஸ்ய 'என்பன் நினைந்து நைந்து' இத்யத்ரஹ்ருதயம். ப்ராயஶ்சித்தம்பண்ணத்தேடாதே - அயோக்யதாநுஸந்தாநத்தால் அகலநினையாதே. குணம் - ஸௌஶீல்யாதி. ப்ரதியோகியோடே கூட்டி விவரணம் - வணங்கினால் இத்யாதி. அதுக்கு - ப்ரீதிதத்வத்துக்கு. போக்குவிட்டு - வழிவிட்டு. நாட்பூ - ஸத்யோவிகஸிதபுஷ்பம். சப்தார்த்தம் - ஜிஹ்வாக்ரத்திலேஇத்யாதி சந்தஸ்ஸாகில் நாவினாலேயன்றோ அலருவது, 'நாவலர்' என்று விஶேஷிப்பானென் என்ன-மநஸ்ஸஹகாரம்இத்யாதி. மூர்தினஅந்வயம்-பரோக்ஷநிர்த்தேசமாய், பான்மையோடேகூடின ஔதார்யமிருந்தபடியென் னென்று ஈடுபாடு. த்விதீயாந்வயம் - அபரோக்ஷநிர்த்தேசமாய் ப்ரதமாந்தமாகக் கண்டுகொள்வது. பான்மை-ஸ்வபாவம். பான்மையேய்ந்த - ஸ்வபாவமாக வுடையையாயிருக்கிற. வள்ளலே யென்கிறது - ஸம்போதனே.

நான்காம்பாட்டு.

வள்ளலே! மதுசூதனா! என்மரதகமலையே! உனைநினைந்து
எள்கல்தந்தவெந்தாய்! உன்னையெங்ஙனம்விடுகேன்?
வெள்ளமேபுரைநின்புகழ்குடைந்தாடிப்பாடிக் களித்துகந்துகந்து
உள்ளநோய்களெல்லாம்துரந்து உய்ந்துபோந்திருந்தே.

ஆ.—(வள்ளலே.) ஆஶ்ரிதர்க்கு ஆத்மதாநம்பண்ணும் ஸ்வபாவனே! தத்விரோதிநிரஸந ஸ்வபாவனே! என்னுடைய பரமபோக்யமே! உன்னைநினைந்தால் நீராயுருகும் ப்ரக்ருதியாக என்னைப்பண்ணினவனே! உன்னுடைய ஏவம்விதமான கல்யாணகுணங்களாகிற அம்ருதவெள்ளத்தைக் குடைந்தாடிப் பாடிக்களித்து உகந்துஉகந்துள்ள நோய்களெல்லாந் துரந்து உய்ந்து போந்திருந்து உன்னை எங்ஙனே விடும்படி என்கிறார்.

ஒ.—நாலாம்பாட்டில், நிர்ஹேதுகமாக உன்னைத்தரும் ஸ்வபாவனாய் விரோதிநிரஸந ப்ரமுகமான கல்யாணகுணங்விதனாயிருந்துள்ள உன்னையநுபவித்து வைத்து, விட உபாயமுண்டோ என்கிறார்.

[வள்ளலேயென்று தொடங்கி] - பரமோதாரனாய் உன்னைபுஜிக்கைக்கு விரோதியான ப்ரதிபந்தகங்களைப்போக்கும் ஸ்வபாவனாய். [என்மரதகமலையே] - ஶ்ரமஹரமாய் அபரிச்சேத்யமான உன்னுடையஅழகை எனக்கு அநுபவிக்கத்தந்தவனே. [உனைநினைந்தெள்கல்தந்தவெந்தாய்] - உன்னை அநுபவித்தால் புறம்புள்ளவற்றையெல்லாம் இகழும் ஸ்வபாவத்தை எனக்குத்தந்தவனே. உன்னையநுபவித்தால் ஈடுபடும் ஸ்வபாவத்தை எனக்குத்தந்தவனே யென்றுமாம். [வெள்ளமேயென்றுதொடங்கி] - அபரிச்சேத்யமான உன்னுடைய கல்யாணகுணங்களை ஒரிடமொழியாமே அவகாஹித்து அத்தால் வந்த ப்ரீத்யதிஶயத்தாலே ஆடிப்பாடிக்களித்து ப்ரதிக்ஷணம் ப்ரீதிபெருகிவர அநர்ஹதாநுஸந்தாநத்தாலும் விஶ்லேஷத்தாலும் வந்த வ்யஸநங்களெல்லாவற்றையும் போக்கி உஜ்ஜீவித்து உன்திருவடிகளிலே வந்திருந்து.

ப.—அநந்தரம், ஸர்வப்ரகாரோபகாரகனான உன்னை விடப்போமோ? என்கிறார்.

வள்ளலே-அர்த்தித்வநிரபேக்ஷமாக உபகரிக்கும் மஹோதாரனாய், மதுசூதனா-உபகாரங்கொள்ளுகிற என்விரோதியை மதுவையழித்தாற்போலே அழிக்குமவனாய், என் - (நிவ்ருத்தவிரோதிகனான) எனக்கு, மரதகமலையே - (உத்துங்கமாய் உஜ்வலமான) மரதகமலைபோலே யிருக்கிற வடிவை யநுபவிப்பிக்குமவனாய், ("மாற்பான்மனஞ்சுழிப்ப மங்கையர்தோள்கைவிட்டு" என்கிறபடியே), உனை - உன்னை, நினைந்து - அநுஸந்தித்து, எள்கல் - இதரவிஷயங்களையிகழும் ஸ்வபாவத்தை, தந்த - தந்த, எந்தாய் - ஸ்வாமியே; வெள்ளமேபுரை - பெருங்கடல்போலே அபரிச்சிந்நமான, நின் - உன்னுடைய, புகழ் குணங்களை, குடைந்து - அவகாஹித்து அநுபவித்து, ஆடிப்பாடி - அந்தப்ரீதியாலே ஆடுவதுபாடுவதாய், களித்து - களித்து, உகந்துஉகந்து - அதோரளவில்நில்லாதே மேன்மேலெனஉகந்து, உள்ளநோய்களெல்லாம் — அஹங்காரார்த்தகாமங்கள் அநுபவவிஶ

லேஷம் நிகர்ஷாநுஸந்தாநம்முதலாகவுள்ள நோய்களையெல்லாம், துரந்து - தூரப்போம்படி அகற்றி, உய்ந்து - லப்தஸத்தாகனாய், போந்து - (ஸம்ஸாரஸ்திதிகுலைந்து) உன்னளவும் போந்து, இருந்து - ("மாயநாதெஸ" என்று) அநுபவித்துக்கொண்டிருக்கப் பெற்றுவைத்து, உன்னை - (இப்படி உபகாரகனான) உன்னை, எங்ஙனம் - எங்ஙனே, விடுகேன் - விடுவேன்.

இ.—நாலாம்பாட்டில், இந்த ப்ரீதி எத்தனைகுளிக்குநிற்குமோவென்ன, உன் படிகளை அநுபவித்துவைத்து விடவுபாயமுண்டோ வென்கிறார்.

[வள்ளலேயித்யாதி] - அவன் படிகளைச்சொல்லுகிறார். [வள்ளலே] - உன்னை எனக்குத் தந்த பரமோதாரனே. [மதுசூதனா] - உன்னையநுபவிக்கைக்கு விரோதிகளைப் போக்குமவனே. [என்மரதகமலையே] - உன்னிலும் சீரியதான உன்வடிவழகை எனக்கு அநுபவிக்கத் தந்தவனே. ஶ்ரமஹரமாய் அபரிச்சேத்யமான வடிவு. [உனையித்யாதி] உன்னை அநுபவித்தால் புறம்புள்ளவற்றையெல்லாம் இகழும் ஸ்வபாவத்தை எனக்குத் தந்தவனே. எள்கல் - இகழ்ச்சியாதல், ஈடுபாடாதல். 'உன்னை அநுபவித்தால் அமையும்' என்றிராதே மேன்மேலென ஈடுபடும் ஸ்வபாவத்தை என்றுமாம். [உன்னை யெங்ஙனம் விடுகேன்] - பாஹ்யருசியைத் தவிர்த்த உன்னைவிட்டு எங்கேபோவேன்? உன்பக்கலிலே ஈடுபட்டநான் உன்னைவிட்டால் ஸத்தையுண்டோ. [வெள்ளமேயித்யாதி] - கடல்போலே யிருந்துள்ள உன்னுடையகல்யாணகுணங்களிலே அவகாஹித்து. [ஆடிப்பாடி]- ப்ரீதிக்குப்போக்குவீடான, காயிகமாயும் வாசிகமாயும் உண்டான விக்ருதி. [களித்துகந்துகந்து] - ஹ்ருஷ்டனாய் அது விச்சேதியாதபடியாய் மேன்மேலென ஒருபடிப்பட்டிராதே பெருகிவர. [உள்ளநோய்களெல்லாந்துரந்து] - விஷயப்ராவண்யத்தால் வரும் நோய், விரஹத்தால் வரும் நோய், அயோக்யதாநுஸந்தாநத்தால் வரும்நோய். [உய்ந்து]- "அஸந்நேவ ஸ பவதி" என்கிற நிலைதவிர்ந்து. "ஸந்தமேநம்" என்னும்படிஉஜ்ஜீவித்து. [போந்து] - உன்னளவும்போந்து. ஸம்ஸாரத்திலே யிருக்கச்செய்தே நித்யஸூரிகள் பரிமாற்றமாயிருக்கை. [இருந்தே] - க்ருதக்ருத்யனாயிருந்து. இப்படி யிருந்துவைத்து- உன்னை எங்ஙனம்விடுகேன்.

ஈடு.—நாலாம்பாட்டு. "நாமருவிநன்கேத்தியுள்ளிவணங்கிநாமகிழ்ந்தாட" என்று - தம்முடைய நைச்யத்தை அநுஸந்தித்தவாறே, 'இவர் நம்மைவிடிற் செய்வதென்?' என்று, அவன் அதிஶங்கைபண்ண, நிர்ஹேதுகமாக உன்வடிவழகை நீ என்னையநுபவிப்பிக்க அநுபவித்துஅத்தாலேஶிதிலனான நான்உன்னைவிடஸம்பாவனையுண்டோ? என்கிறார்.

[வள்ளலே]-நிர்ஹேதுகமாகஉன்னை யெனக்குத்தந்த பரமோதாரனே! [மதுசூதனா]- நீயுன்னைத்தருமிடத்தில் நான்ஸ்வீகரியாதபடிபண்ணும்விரோதிகளை,மதுவாகிறஅஸுரனை

நாலாம்பாட்டு - வள்ளலேஇத்யாதி. தம்முடையநைச்யத்தையிதி - 'நாம்' ப்ரீதிதத்வங்களைக்கண்டறியாத நாமென்கையாலே - நைச்யம் த்யோதித மென்றபடி. அதிசங்கைபண்ண - நைச்யாநுஸந்தாநம்அதிசங்காஹேது வென்றபடி. வடிவழகையென்றது - "மரதகமலை" என்றத்தைப் பற்ற. "எள்கல்" என்ற பதத்தின் த்விதீயார்த்தத்திலே நோக்காக - சிதிலனானநான் என்றது. விடஸம்பாவனை யுண்டோ? என்றது - 'எங்ஙனம் விடுகேன்' என்றத்தைப் பற்ற.

ஹேதுபூர்வகமாகத் தரில், அது ஔதார்யமல்லாமையாலே-நிர்ஹேதுகமாக-என்கிறார். 'மதுசூதனா' என்றது-த்ருஷ்டாந்தார்த்தம். உன்னை நீ யாக்கும்படி-உன்னை 'பரன்'என்று ப்ரகாசிப்

நிரஸித்தாற்போலே நிரஸித்தவனே. [என்மரதகமலையே] - உன்னை நீயாக்கும்படி உன்னிலும் சீரியதாய், ஶ்ரமஹரமாய், அபரிச்சேத்யமான வடிவழகையன்றோ எனக்கு ஔதார்யம்பண்ணிற்று [உனைநினைந்தெள்கல்தந்தவெந்தாய்] - உன்னையநுஸந்தித்தால், இதரவிஷயங்களை நான் விடும்படி பண்ணினவனே யென்னுதல்; அன்றிக்கே, எள்கலாவது - ஈடுபாடாய், உன்னை யநுஸந்தித்தால் * "காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்" என்கிறபடியே அள்ளியெடுக்கவேண்டும்படி பண்ணித் தந்த என்னுயனே! என்னுதல். [உன்னையெங்ஙனம்விடுகேன்] - "உதாரனல்லை" என்று விடவோ? "விரோதிநிரஸநனல்லை" என்று விடவோ? "உனக்கு வடிவழகில்லை" என்று விடவோ? உன்விஷயத்திலே இப்படிஈடுபட்டநான் உன்னைவிட ஸம்பாவனையுண்டோ?என்னுதல்; உன்னை யநுஸந்தித்தால், இதரவிஷயங்களில் விரக்தனான நான் விட ஸம்பாவனை யுண்டோ? என்னுதல். இனி மேலெல்லாம் அவன் அதிஶங்கையைத் தீர்க்கிறார், [வெள்ளமேஇத்யாதி] - கடலோடொத்திருந்துள்ள உன்னுடைய கல்யாணகுணங்களை நாலுமூலையும் புக்கு வ்யாபித்து, நான்மறுநினைந்து ப்ரீதிப்ரேரிதனாய்க்கொண்டு பாடி, அத்தாலேசெருக்கி மிகவும்ப்ரீதனாய் [உள்ளநோய்களெல்லாம்துரந்து] - கர்மநிபந்தநமாக வருமவை, உன்னைப்பிரிந்து படுமவை, "அயோக்யன்" என்றுஅகன்று வருமவை, இத்யாதிக ளெல்லாவற்றையும் ஓட்டி [உய்ந்து] - "ஸந்தமேநந்தோவிது꞉" (ஸந்தமேநந்தோவிது꞉) என்கிறபடியே உஜ்ஜீவித்து [போந்து]-ஸம்ஸாரிகளைவிட்டு வ்யாவ்ருத்தனாய். [இருந்து]-நிர்ப்பரனாயிருந்து - வள்ளலே மதுசூதனா - உன்னைஎங்ஙனம் விடுகேன். (ச)

ஐந்தாம்பாட்டு.

உய்ந்துபோந்தென்னுலப்பிலாத வெந்தீவினைகளைநாசஞ்செய்துஉனது
அந்தமிலடிமையடைந்தேன் விடுவேனோ?
ஐந்துபைந்தலையாடரவணைமேவிப் பாற்கடல்யோகநித்திரை
சிந்தைசெய்தவெந்தாய்! உன்னைச்சிந்தைசெய்துசெய்தே.

பிக்கிறபடியென்றபடி. இங்கே 'ஈடுவெஶ்ரீயாவராயோ" இத்யாத்யநுஸந்தேயம். மரதகமலையின் தாத்பர்யம் - உன்னிலும்சீரியதாய் இத்யாதி. சீரியதாய் - ஹோக்யமாய். "எள்கல்" என்றதுக்கு அர்த்தத்வயம் - த்யாகமும், ஈடுபாடும் மூந்தினது - உன்னை இத்யாதி. காலாழும் இதயாதி - கால் தடுமாறுகிற்கும், நெஞ்சு ஶிதிலமாகாநிற்கும், கண் சுழலாநிற்கு மென்றபடி. அள்ளியெடுக்க-வாரியெடுக்க. எங்ஙனம் - எந்தப்ரகாரத்தாலே. "எங்ஙனம்" என்றத்தை விவரிக்கிறார் - உதாரன் இத்யாதி. "வள்ளலே" இத்யாதி பதங்கள் - ஹேதுகர்ப்பங்கள். "எள்கல்" என்கிற பதத்தின் அர்த்தத்வயத்தையும் வ்யுத்க்ரமமாக அருளிச்செய்கிறார் - உன்விஷயத்தில் இத்யாதி. வெள்ளமேபுரை - கடலோடொத்திருந்துள்ள - அபரிச்சிந்நமான வென்றபடி. குடைந்து என்றதின் அர்த்தம் - நாலுமூலையும்புக்கு வ்யாபித்தென்றது. அதாவது - அவகாஹித்து அநுபவித்தென்றபடி. மறுநினைந்து-மறுபாடுருவ நினைந்து; பூர்ணாநுபவம் பண்ணி யென்றபடி. இது "குடைந்து" என்றதில் ஸித்தமான அர்த்தம். "ஆடி" என்றதின் தாத்பர்யமாதல். ஆடி - அவகாஹித்து. களித்து - செருக்கி. உகந்துஉகந்து-மிகவும்ப்ரீதனாய். துரந்து - துரத்தி. போந்து - ஸாம்ஸாரிகஸ்திதி குலைந்து உன்னளவும் போந்து. வெள்ளமேபுரை தொடங்கி, போந்திருந்து - வள்ளலே தொடங்கி, எள்கல்தந்தஎந்தாய்உன்னைஎங்ஙனம்விடுகே னித்யந்வய꞉ (ச)

---

* பெரிய திருவந்தாதி —௩௪—ம் பாட்டு.

ஆ.—(உய்ந்து.) த்வதநுபவ ஜநிதமான ப்ரீதியாலே களித்தாடுகிற திருவநந்தாழ்வான்மேலே உன்னுடைய திவ்யரூபகுணங்களை அநுபவித்துக்கொண்டு கண்வளர்ந்தருளுகிற உன்னை அநுபவித்துய்ந்து போந்திருந்து, என்னுடைய முடிவில்லாத மஹாதுःகங்களைப் போக்கி உன் அந்தமிலடிமை யடைந்தேன்; இனி, விடுவேனோ என்கிறார்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், நித்யகைங்கர்யத்தை ப்ராபித்திருந்துள்ள எனக்கு உன்னை விட ஸம்பாவனையுண்டோ வென்கிறார்.

[உய்ந்தென்று தொடங்கி] - ஸ்வரூப ஸத்பாவம்பெற்று ஸம்ஸாரிகளிற்காட்டில் வ்யாவ்ருத்தனாய், முடிவு இன்றிக்கே மிகவுங்கொடிதான என் கர்மங்களை நசிப்பித்து. [ஐந்தென்று தொடங்கி] - திருப்பாற்கடலிலே உன்னோட்டை ஸம்ஶ்லேஷஸுகத்தாலே யலர்ந்த ஐந்துபணங்களை யுடைத்தாய் கண்வளர்ந்தருளுகைக்கிடாம்படி அசைந்துவாராநின்றுள்ள திருவரவணைமேலே சாய்ந்தருளி ஜகத்ரக்ஷாசிந்தாத்மகயோக நித்ரையைப்பண்ணியருளின இக்குணத்தைக்காட்டி என்னை அடிமைகொண்டவனே, இப்படி உபகாரகனனவுன்னை மிகவும் அநுஸந்தித்து.

ப.—அநந்தரம், த்வதநுபவஜநித கைங்கர்யபோகத்தைப் பெற்ற நான் விடும்படியென் என்கிறார்.

பாற்கடல் - திருப்பாற்கடலிலே, ஐந்து - ஐந்துவகையாய், பை - விரிந்த, தலைபணங்களையுடையவனாய், ஆடு - அசைந்துவருகிற, அரவணை - திருவரவணையின்மேலே, மேவி - பொருந்தக்கண்வளர்ந்து, யோகம் நித்திரை - ஜகத்ரக்ஷணயோகத்தில் நிப்ருததையாலே உறங்குவாரைப்போலே, சிந்தைசெய்த - (ரக்ஷணப்ரகார) சிந்தைபண்ணின, எந்தாய் - என்ஸ்வாமியே! உன்னை - (இப்படிரக்ஷகத்வத்தை ப்ரகாசிப்பித்த) உன்னை, சிந்தைசெய்துசெய்து - நிரந்தராநு ஸந்தானம்பண்ணி, உய்ந்து - லப்தஸ்வரூபனாய், போந்து - அந்யபரரானஸம்ஸாரிகளில் வ்யாவ்ருத்தனாய், என் - நானே எனக்குத் தேடிக்கொண்டு, உலப்புஇலாத - அஸங்க்யாதமாய், வெம் - க்ரூரமாய், தீ - அக்நிகல்பமான, வினைகளை - பாபங்களை, நாசஞ்செய்து - நசிக்கும்படி பண்ணி, உனது - (ப்ராப்தனான)உன்னுடைய, அந்தம்இல்-அபரிச்சிந்நமான,அடிமை-கைங்கர்யபோகத்தை, அடைந்தேன் - கிட்டப்பெற்ற நான், விடுவேனோ - விடக்ஷமனல்லன். ஆஶ்ரிதவிஷயத்தில் உனக்குப் பொருத்தமில்லாமல் விடுகிறேனோ? அவர்கள்ரக்ஷணத்தில் உனக்குச் சிந்தையில்லாமல் விடுகிறேனோ? உன் அநுபவத்தில் எனக்கு ஶீலனமில்லாமல் விடுகிறேனோ? என்ஸ்வரூபம் ப்ரகாசியாமல் விடுகிறேனோ? விஷயாஸக்தரான ஸம்ஸாரிகளோடு பொருத்தமுண்டாய் விடுகிறேனோ? ப்ரதிபந்தகமான பாபமுண்டாய் விடுகிறேனோ? ப்ராப்யமான கைங்கர்யத்தில் சுவடறியாமல் விடுகிறேனோ? இப்படி லப்தாபீஷ்டனான நான் விடுவேனோ? என்றுகருத்து.

இ.—அஞ்சாம்பாட்டில், நித்யகைங்கர்யத்தை லபித்த எனக்கு உன்னைவிட ஸம்பாவனையுண்டோ வென்கிறார்.

[உய்ந்துபோந்து] - ஸ்வரூபத்தைப் பெற்று, ஸம்ஸாரிகளிற்காட்டில் வ்யாவ்ருத்தனாய்ப் போந்து. [என்னுலப்பிலித்யாதி] - முடிவின்றிக்கே அதிக்ரூரமான கர்மங்களை நசிப்பித்து. [உனதித்யாதி] - விரோதிநிவ்ருத்திமுன்னாக உன்திருவடிகளிலே நித்யகைங்கர்யத்திலே அந்வயித்தநான். "ஸுஷ்டுதஸ்யோபாஸ்தாஃ" என்கிறபடியே இதிலே

எல்லாமுண்டாம்படியானத்தைக் கிட்டின நான். [விடுவேனோ] - விஷயாந்தரங்களை விரும்பினேனோ விடுகைக்கு, ஸ்வரூபஸித்தி யின்றிக்கே விடுகிறேனோ, தாஸ்யபரிமளத் திற்சுவடறியாமே விடுகிறேனோ. [ஐந்துபைந்தலையித்யாதி] - அடிமையிற்சுவடறிந்த திருவநந்தாழ்வான் விடிலன்றோ நான் விடுவது. பகவதநுபவஹர்ஷத்துக்குப் போக்கு விடுகைக்கு ஐந்துபைந்தலையை யுடையனாய், சாய்கைக்கு ஸ்வாபாவிகமான குளிர்த்தியை யுடையனாய், ப்ரீதியாலே தூங்குமெத்தைபோலே யசைந்து வாராநிற்பானாய், நாற்றந் துடக்கமானவற்றை ப்ராக்ருதியாகவுடையனான திருவநந்தாழ்வான்மேலே. [மேவி] - கிளப்பவொண்ணாதபடி பொருந்தி திருப்பாற்கடலிலே, யோகநித்திரை - ஜகத்ரக்ஷண சிந்தாத்மகயோகநித்ரையைப் பண்ணியருளின. [சிந்தைசெய்த] - சேதநருடைய உஜ் ஜீவநப்ரகாரமாதல், "ஸூத்ரநம் வாஸுதேவாக்யம் ஸ்நுயந்யவாஸுதேவநம்" என்கிற படியே தன்னை அநுஸந்தித்தலாதல். [எந்தாய்] - இந்நீர்மையைக்காட்டி. என்னை அநந் யார்ஹனாக்கினவனே. [உன்னை] - நான் விட்டவன்றும் விடாதஸ்வபாவனான உன்னை. [சிந்தைசெய்து செய்து] - விச்சேதியாதபடி உன்னை யநுஸந்தித்து.

ஈடு,—அஞ்சாம்பாட்டு. ஆத்மாந்ததாஸ்யத்திலே அதிகரித்த நான் உன்னை விட ப்ரஸங்கமுண்டோ ? என்கிறார்.

[உய்ந்துபோந்து]- நான்உளேனாய், ஸம்ஸாரிகளில் வ்யாவ்ருத்தனாய்ப்போந்து. [என்உலப்பிலாதஇத்யாதி] - என்னுடைய, முடிவின்றிக்கேயிருந்துள்ள கோடியபா பங்களை வாஸனையோடே போக்கி, உன்திருவடிகளிலே ஆத்மாந்ததாஸ்யத்திலே அதிக ரித்த நான், இனிவிட ப்ரஸங்கமுண்டோ ? [விடுவேனோ] - விஷயாந்தரங்களை விரும்பி னேனோ விடுகைக்கு ? ஸ்வரூபஸித்தியின்றிக்கே ஒழிந்து விடுகிறேனோ ? தாஸ்யபரிமளத் தில்சுவடறியாமல் விடுகிறேனோ ? எனக்குத் தேவிட்டிவிடுகிறேனோ ? [ஐந்துஇத்யாதி] - அடிமையிற்சுவடறிந்த திருவநந்தாழ்வான் உன்னைவிடிலன்றோ நான்உன்னை விடுவது. பெருவெள்ளத்துக்குப் பலவாய்த்தலைகள்போலே பகவதநுபவத்தால் வந்த ஹர்ஷத்துக் குப் போக்குவீடாகப் பலதலைகளையுடையனாய், மதுபாநமத்தரைப்போலே ஆடாநிற்பா னாய், சைத்யஸௌகுமார்யஸௌகந்த்யங்களை யுடையனான திருவநந்தாழ்வான்மேலே,

அஞ்சாம்பாட்டு - உய்ந்துஇத்யாதி. "உனதந்தமிலடிமையடைந்தேன்விடுவேனோ" என் றத்தைப்பற்ற அவதாரிகை-ஆத்மாந்தஇத்யாதி. ஆத்மாந்ததாஸ்யம் - யாவதாத்மபாவியான கைங் கர்யம்.

நானுளேனாய் - "உன்னைச்சிந்தைசெய்துசெய்து - உய்ந்துபோந்து" என்றந்வயத்திலே தாத்பர்யம். உன்னை நிரந்தராநுஸந்தாநம்பண்ணி லப்தஸ்வரூபனா யென்றபடி. ஸம்ஸாரிகளில்- அந்யபரான ஸம்ஸாரிகளில். முடிவின்றிக்கே - அஸங்க்யாதமாய். வெந்தீ - க்ரூரமாய், அக்நி கல்பமான. அந்தமிலடிமை - அபரிச்சிந்நமாய் நித்யமான அடிமை. தாஸ்யம்செய்வது திருவடி களிலேயாகையாலே - உன்திருவடிகளிலே என்கிறார். 'உனது' என்றத்தைக் கடாக்ஷித்து - விஷ யாந்தரங்களைஇத்யாதி. "உய்ந்து" என்றத்தைப்பற்ற - ஸ்வரூபஸித்திஇத்யாதி. 'அடிமை' என் றத்தைப்பற்ற - தாஸ்யபரிமளம் இத்யாதி. சுவடு - ரஸம். "அந்தமில்" என்றத்தைப்பற்ற, தேவிட்டிவிடுகிறேனோஎன்றது. தேவிட்டி - அதித்ருப்தியாலே வேண்டியிராமை. "விடுவேனோ" என்றஅநந்தரம் திருவநந்தாழ்வானைச் சொல்லுகிறதுக்கு பாவம் - அடிமையில்இத்யாதி. "ஐந்து" என்றதுக்கு பாவம் - பெருவெள்ளத்துக்குஇத்யாதி. வாய்த்தலைகள் - வாய்க்கால்கள். பைந் தலை - பரந்த தலைகள். பலவாய்த்தலைகளென்றது - தாத்பர்யார்த்தம். "அரவு" என்றதுக்கு பாவம் - சைத்ய இத்யாதி. திருவநந்தாழ்வான்மேலே பொருந்திஎன்று - 'மேவி' என்றதுக்கு

திருப்பாற்கடலிலே, 'ஸகலப்ராணிகளும் கரைமரஞ்சேர்ந்ததாம் விரகேன்?' என்று யோகநித்ரையிலே திருவுள்ளஞ்செய்த என்னுயனனவனே! [யோகநித்திரை] - "ஆத்மாநம்வாஸுதேவாக்யம்சிந்தயந்" (ஆத்மாநம்வாஸுதேவாக்யம்சிந்தயந்) என்கிறபடியே தன்னை யநுஸந்தித்தல் [எந்தாய்] - நீர்மையைக்காட்டி என்னை அநங்யார்ஹனுக்கின வனே! [உன்னைச்சிந்தைசெய்துசெய்து] - நான்நினைக்கைக்கு க்ருஷிபண்ணினஉன்னை நினைத்துவைத்து விட ப்ரஸங்கமுண்டோ? (ரு)

ஆறும் பாட்டு.

உன்னைச்சிந்தைசெய்துசெய்து உன்னேமோமொழியிசைபாடியாடி என்
முன்னைத்தீவினைகள் முழுவேரரிந்தனன்யான்
உன்னைச்சிந்தையினலிகழ்ந்த இரணியனகன்மார்வங்கீண்ட என்
முன்னைக்கோளரியே! முடியாததேன்எனக்கே?

ஆ.—(உன்னை.) இப்படி உன்னை ஸர்வகரணங்களாலும் அநுபவித்து என்னுடைய ஸமஸ்தப்ரதிபந்தகங்களையும் போக்கினேன்; ஆஸ்ரிதன்உன்னைக்கோலுவதற்கு முன்பு அவனுடைய இஷ்டத்தை முடித்துக்கொண்டிருக்கும் ஸ்வபாவனனவனே; எனக்குமுடியாததென்? இந்தஸம்ருத்தியெல்லாம் உன்னுடைய ப்ரஸாதத்தாலே விளைந்த தென்கிறார்.

ஒ.—ஆறும்பாட்டில், 'உமக்கினிச்செய்ய வேண்டுவதென்' என்று எம்பெருமான் கேட்டருள; நான் பெறுததுண்டோ, எல்லாம்பெற்றேன் என்கிறார்.

ப்ர.—(உய்ந்துபோந்தித்யாதி) (யோகநித்திரை) - ஷஷ்ட்யம்ஸே சதுர்த்தே நிர்த்திஷ்டம் ஸ்ரீவிஷ்ணுபுராணே, "ஜநலோகமதேஷு ஸிதேஷு ஸநகாதிஷு ப்ரஹ்மஷு | ப்ரஹ்மலோகமதே தத்ர விஷ்ணுர்நாராயணோ ஹரி: ‖ ரு ‖ ஆத்மாயாவிஷ்ட்ய ரூபம் யோகநித்ராம் ஸமாஸ்ரித: | ஆத்மாநம்வாஸுதேவாக்யம் சிந்தயந்நமஸுதந: ‖ கூ ‖ ஸேஷபர்யங்கமாஸீந: ஸ்ரீமாந்லக்ஷ்ணஸ்ஸ்வயம் ‖ நித்ராம் கத்ரூபமஹேஸ்வரோ மஹோரஹரி: ‖ எ ‖'

அர்த்தமாகக் கூட்டுவது. "யோகஸ்வப்நம் நாவாயச்ரநஸங்கதி சக்ஷுஷ" என்றதில்உபாயவிவக்ஷயா பாவம்-ஸகலப்ராணிகளும்இத்யாதி. த்யாநவிவக்ஷயா அர்த்தாந்தரம்-ஆத்மாநம்இத்யாதி.ஷஷ்டேம்ஸேசதுர்த்தே. "ஆத்மாயாவிஷ்ட்ய ரூபம் யோகநித்ராம் ஸமாஸ்ரித:| ஆத்மாநம்வாஸுதேவாக்யம்சிந்தயந்நமஸுதந:". யோகரூபநித்ரையிலே சிந்தைசெய்கையாவது - யோகரூபநித்ரையைப்பண்ணுகை. நீர்மையைக்காட்டி யென்றது - "பாற்கடல்" இத்யாதியைப் பற்ற: "யோகநித்திரை" என்றதின் முந்தின அர்த்தத்தைக் கடாக்ஷித்து - நான் நினைக்கைக்குஇத்யாதி. உன்னைச் சிந்தைசெய்துசெய்து - உன்னை நிரந்தரமாக அநுஸந்தாநம் பண்ணி. ஐந்துபைந்தலை தொடங்கி, எந்தாய்உன்னைச் சிந்தைசெய்துசெய்து - உய்ந்துபோந்து [illegible] அடிமையடைந்தேன் விடுவேனே இத்யந்வய: (கு)

[உன்னையென்றுதொடங்கி] - நிரதிஶய போக்யனானவுன்னை நிரந்தரமாக அநுஸந்தித்து ப்ரீதிவலாத்க்ருதனாய்க்கொண்டு அபரிச்சேத்யரஸமான இயலை நல்லிசையாலே பாடியாடி அவ்வழியாலே என்னுடைய ப்ராக்தநமான ப்ரதிபந்தகங்களை ஸவாஸநமாகப் போக்கினேன். [உன்னையென்றுதொடங்கி] - நிரதிஶய போக்யனானவுன்னை மநஸ்ஸாலே இகழ்ந்த ஹிரண்யனுடைய அகன்ற மார்வைப் பிளந்து பண்டே எனக்கு உபகரித்த நரஸிம்ஹமே.

ப.—அநந்தரம், இந்தக்கைங்கர்யலாபத்தாலே தம்முடைய ஸர்வாபீஷ்டமும் தலைக்கட்டிற்று என்கிறார்.

உன்னை - (வகுத்தஸ்வாமியுமாய் உபகாரகனுமான) உன்னை, சிந்தையினால் - நெஞ்சாலே, இகழ்ந்த - அநாதரித்த, இரணியன் - ஹிரண்யனுடைய, அகல் மார்வம் - பேரிடமுடைத்தான மார்வை, கீண்ட - (அநாயாஸேந) கிழித்தவனாய், என் - விரோதிநிவ்ருத்திக்கு நிதர்ஶநபூதனாய், முன்னை - (ஆஶ்ரிதனான ப்ரஹ்லாதன் நினைவுக்கு) முற்கோலின, கோளரியே - நரஸிம்ஹமானவனே! உன்னை - (இப்படி ஆபத்ஸகனாய் ப்ராப்தனாய்போக்யனான) உன்னை, சிந்தைசெய்துசெய்து-நிரந்தராநுஸந்தாநம்பண்ணி, நெடு - அந்த்ப்ரீதியாலே உத்துங்கமான, உன் - உன்னுடைய குணவாசகமான, மொழி - திருவாய்மொழியை, மா - அவ்விஷயத்துக்கீடான பெருமையுடைய, இசை - இசையோடே, பாடி - பாடி, ஆடி - (அப்பாட்டுக்கீடான அபிநயந்தோற்றும்படி) ஆடி, (இப்படி கரணத்ரயத்தாலுமுண்டான போகத்தாலே), என் - என்னுடைய, முன்னைத்தீவினைகள் — அநாதிகாலார்ஜிதபாபங்களை, ("ஒநாவஜநம்ஸ்ஸராந" என்னும் கணக்கிலே), யான் - நான், முழுவேரரிந்தனன் - ஒன்றொழியாமல் வேரோடே அரிந்தேன்; (போக்த்ருத்வம் இத்தலையிலே யானவோபாதி, விரோதிநிவர்த்தகத்வமும் இங்கேயாகக் குறையில்லையிறே. ஸ்வரூபம் தத்ப்ரகாரமானபின்பு), எனக்கு - எனக்கு, முடியாதது - தலைக்கட்டாதது, என் - எதுதான்? ஸர்வாபீஷ்டமும் ஸித்தமன்றோ வென்று கருத்து.

ஈ.—ஆறும்பாட்டில், உமக்கினிச்செய்யவேண்டுவதென்? என்ன - நான் பெறாததுண்டோ, எல்லாம்பெற்றேன் என்கிறார்.

[உன்னையித்யாதி] - போக்யனுமாய் ப்ராப்தனுமானவுன்னை, "நிஷ்ப்ராவணீதவ்யா:" என்கிற விபிப்ரேரிதனாயன்றிக்கே, விடமாட்டாமையாலே அநவரதபாவனை பண்ணி. [உன்னெடுமாமொழியிசைபாடியாடி] - நெடியமொழி, மாவானவிசை. இரண்டின் வைலக்ஷண்யமும் பரிச்சேதிக்கவொண்ணாதிருக்கை. ப்ரீதிப்ரேரிதனாய்ப்பாடி, "ஏதத்ஸாமகாயந்நாஸ்தே" என்கிற முக்தாநுபவத்தை இங்கேபெற்றேன். [ஆடி] - காயிகமானவிக்ருதி. பால்குடித்து நோய்போக்குமாபோலே [என்முன்னைத்தீவினைகள்] - அநாதிகாலஸஞ்சிதமான கர்மங்களை. [முழுவேரரிந்தனன்] - ஸவாஸநமாகப்போக்கினேன். யானென்கிறது - பேறுதம்மதானபடியாலே. விரோதியை நீபோக்கினபடியென்? என்ன ;-நரஸிம்ஹமாய்வந்து ஹிரண்யனைப்போக்கினாப்போலே. [உன்னை] - வகுத்தவனுமாய் உபகாரகனுமானவுன்னை. [சிந்தையினாலிகழ்ந்த] - உன்னை வாக்கால் இகழுகையன்றிக்கே, நெஞ்சாலேயிகழ்ந்த. ப்ராப்தியாலும் அழகாலும் இகழப்போகாது, விஷயீகரிக்கைக்கு மித்ரபாவமேயமையும். நெஞ்சோடே தூஷித்தாலாயிற்று கைவிடுவது. [இரணியனகல்மார்வம்] - அஹங்காரமமகாரத்தாலே யகன்றமார்வம். திருவுகிருக்கிரை

போரும்படி வரத்தை பூட்டியாக இட்டு வளர்த்ததிறே· [கிண்ட] - நரஸிம்ஹத்தின் சீற்றத்தைக்கண்டவாறே ஒத்துப்பதஞ்செய்தது; அநாயாஸேந கிழித்தபடி. [என்முன்னைக்கோளரியே] – ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்கு உபகரித்தது உந்தமக்கென்றிருக்கிறார். ஆஶ்ரிதரிலே ஒருவர்க்குச்செய்தது தனக்குச்செய்ததாக நினைத்திராதவன்று ஸம்வத்ஸம்பந்தமில்லையாமித்தனை. [முடியாததென்னெனக்கே] - ஆஶ்ரிதப்ரதிஜ்ஞா ஸமகாலத்திலே உன்னையழியமாறித் தோற்றுவாயானபின்பு பெறாததுண்டோ, எல்லாம்பெற்றேனல்லேனோ.

ஈடு.—ஆறும்பாட்டு· ஆஶ்ரிதனுடைய ப்ரதிஜ்ஞாஸமகாலத்திலே தோற்றுவானொருவனானபின்பு எனக்குஒரு கர்த்தவ்யாம்ஶ முண்டோ? என்கிறார்·

[உன்னைச்சிந்தைசெய்துசெய்து] - இனிமையாலே விடவொண்ணாதிருக்கிற உன்னை மாறாதே அநுஸந்தித்து. [உன்னை] - போக்யனுமாய் ப்ராப்தனுமான உன்னை. [சிந்தைசெய்துசெய்து] "நிதித்யாஸிதவ்ய:" (நிதித்யாஸிதவ்ய:) என்கிற விதிப்ரேரிதனன்றிக்கே, போக்யதையாலே விடமாட்டாதே அநவரதபாவனை பண்ணி· [உன்இத்யாதி] - நெடுமையும், மஹத்தையும் - மொழிக்கும், இசைக்கும் விஶேஷணம். இயலிற்பெருமையும், இசையிற்பெருமையுஞ் சொல்லுகிறது. இயலும்இசையும் கரைகாணவொண்ணாதபடியிருக்கிற மொழியைப் பாடி, அதுஇருந்தவிடத்தில் இருக்கவொட்டாமை ஆடி. [என்இத்யாதி] - என்னுடைய ப்ராக்தநமான கர்மங்களை வாஸனையோடே போக்கினேன். முழுவேர் - வேர்முழுக்க என்றபடி ; பக்கவேரோடே என்றபடி. அவன் விரோதியைப் போக்கச்செய்தேயும், பலாந்வயம் தம்மதாகையாலே [அரிந்தனன்யான் என்கிறார்]· [உன்னைஇத்யாதி] – எனக்குப் பண்டேஉபகரித்தவனே! [உன்னைச்சிந்தை

ப்ர.—(சிந்தைசெய்து செய்து) ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:, [சா - ரு] "ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:".

ஆறும்பாட்டு - உன்னை இத்யாதி. 'என்முன்னைக்கோளரியே முடியாததென்னெனக்கே' என்ற பதங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை - ஆஶ்ரிதனுடைய இத்யாதி. 'இனிஉமக்குச் செய்யவேண்டுவதென்? என்ன,' என்று அவதாரிகையினடியிலே கூட்டிக்கொள்வது.

இனிமையாலே யென்றது - "யோகநித்திரைசிந்தைசெய்த" என்றதின் த்விதீயார்த்தத்தைப்பற்ற. வீப்ஸைக்கு அர்த்தம் - மாறாதேயநுஸந்தித்து என்றது. விவரணம் - போக்யனுமாய் இத்யாதி. 'யோகநித்திரை சிந்தைசெய்த, எந்தாய்' என்ற பதத்வயத்தையும்பற்ற - போக்யனுமாய் ப்ராப்தனுமான உன்னை யென்றது. ஸாதநத்வேந பலகாலும் சிந்திக்கிறாரோஎன்ன, நிதித்யாஸிதவ்ய இத்யாதி. நெடுமையும்,மஹத்தையும்-பர்யாயமன்றோ வென்ன, நெடுமையும்இத்யாதி. நெடு-மொழி, மா - இசை, என்றபடி. உபபாதநம் - இயலிற்பெருமையும்இத்யாதி. இயலிற்பெருமையும், இசையிற்பெருமையுமாவது—அர்த்தகாம்பீர்யத்தாலும், ரஸ்யதாதிரூபத்தாலும்எல்லை காணவொண்ணாதிருக்கை யென்கிறார் - இயலும்இசையும் இத்யாதி. மொழியைப்பாடி - திருவாய்மொழியைப் பாடி. ப்ராக்தநமான - அநாதிகாலார்ஜிதமான. விவரணம் - பக்கவேர் இத்யாதி. ப்ரதாநவேரும், பக்கவேருமாவன - ருசிவாஸனைகள். தீவினைகள் முழுதும் வேரோடே அரிந்தனன் என்றும் ஓரர்த்தமுண்டு. 'அரிந்தனன்யான்' என்று ஸ்வகர்த்ருகமாகச் சொல்லுவானென்? என்ன - அவன்விரோதியைஇத்யாதி. பலாந்வயம் - ப்ரதிபந்தகநிவ்ருத்திரூபபலாந்வயம். அரிந்தனன் - அரியப்பெற்றேனிதியாவத். தாத்பர்யம் - எனக்கு இத்யாதி. இந்தத் தாத்பர்யம் - "என்முன்னைக்கோளரியே' என்னுமளவும் கடாக்ஷித்து. 'சிந்தையினால்' என்று விஶே

யினுலிகழ்ந்த] - உக்திமாத்ரமன்றிக்கே, நெஞ்சாலே இகழ்ந்தானுயிற்று. இத்தால்-அவன் விடுவது, புத்திபூர்வம் ப்ராதிகூல்யம்பண்ணினுரை ; கைக்கொள்ளுகைக்கு மித்ரபாவம் அமையும் [இரணியனகன்மார்வங்கீண்ட] - வரபலஹாஜபலமூட்டியாக வளர்ந்தஶரீரமானது திருவுகிர்க்குஇரைபோராமையாலே, அநாயாஸேந கிழித்துப்போகட்டானுயிற்று. [என்முன்னைக்கோளரியே] - நரஸிம்ஹமாய்உதவிற்றும் தமக்கென்றிருக்கிருர். கோளென்று-மிடுக்காதல், தேஜஸ்ஸாதல். "மஹாவிஷ்ணும்"(மஹாவிஷ்ணும்) என்கிறமிடுக்காதல்,"ஜ்வலந்தம்"(ஜ்வலந்தம்)என்கிற தேஜஸ்ஸாதல்.ஆஶ்ரிதரிலே ஒருவனுக்குச் செய்ததும் தனக்குச் செய்ததாக நினைத்திராதவன்று ஸகவத்ஸம்பந்தமில்லையா மித்தனை. [முடியாததென் எனக்கே] நீ ப்ரதிஜ்ஞாஸமகாலத்திலே வந்து தோற்றுவாயாயிற்ற பின்பு எனக்கு முடியாததுண்டோ? (கு)

ஏழாம் பாட்டு.

முடியாததென்னெனக்கேலினிமுழுவேழுலகுமுண்டான்உகந்துவந்து
அடியேனுட்புகுந்தான் அகல்வானுமல்லனினிச்
செடியார்நோய்களெல்லாந்துரந்து எமர்கீழ்மேலெழுபிறப்பும்
விடியாவெங்நரகத்து என்றுஞ்சேர்தல்மாறினரே.

ஆ:—(முடியாததென்.) ஸர்வேஶ்வரனுயிருந்த எம்பெருமானுக்கு என்பக்கல் அபிநிவேசம்என்னளவில் பர்யவஸிபாதே, என்னேடு ஸம்பந்தித்தார்பக்கலிலுங்கூட வெள்ளங்கோத்தது ; ஆதலால் அவன் என்னை அகலநினைக்கிறிலன் ; இனி முடியாததொன்றுண்டோ என்கிருர்.

ஷித்ததுக்கு ஸாவம் - உக்திமாத்ரமன்றிக்கே இத்யாதி. இகழ்ந்தான்-அநாதரித்தான். "சிந்தையினுலிகழ்ந்த" என்கையாலே - அவனே புத்திபூர்வகமாக ப்ரதிகூலனுய்விட்டால் அவன் விடுவனென்றும், இவன்பக்கல்அல்பாநுகூல்யமுண்டானுல் அவன்அங்கீகரிப்பனென்றும் ஈஶ்வரனுக்குஉண்டான குணுதிக்யம் பலித்ததென்கிருர்-இத்தால் இத்யாதி வாக்யத்வயேந. அமையும்என்ற அநந்தரம், என்றதாயிற்று என்று கூட்டுவது. அகல்மார்வம் - பேரிடமுடைய மார்வம். தாத்பர்யார்த்தம் - வரபலஇத்யாதி. ஊட்டியாக - ஆஹாரமாக. உகிர் - நகம். இரை - லக்ஷ்யம். அநாயாஸேந வென்றது - 'கீண்ட' என்றத்தைப் பற்ற. என்முன்னைக்கோளரியே-என்னுடைய விரோதிநிவ்ருத்திக்கு நிதர்ஶநபூதனுய், ஆஶ்ரிதனுன ப்ரஹ்லாதன் நினைவுக்கு முற்கோலினவனுய், நிரதிஶயதேஜோபலங்களையுடைய நரஸிம்ஹமானவனே! இதி ஸப்தார்த்த:. 'என்' என்றதுக்கு ஸாவம் - நரஸிம்ஹமாய் இத்யாதி. கோள் - மிடுக்கும், தேஜஸ்ஸும். "மஹாவிஷ்ணும்" என்கிறவிடத்தில், மிடுக்காவது - ஸர்வலோக வ்யாபநஶக்தி. மிடுக்கையும் தேஜஸ்ஸையும் மந்த்ரலிங்கத்திலே காட்டுகிருர் - மஹாவிஷ்ணும் இத்யாதி. இவ்வவதாரம் தமக்காகவென்றிருக்கைக்குஅடியேது? என்ன-ஆஶ்ரிதரிலே இத்யாதி. 'கோளரியே, முடியாததென் எனக்கு" என்கிற ஸமபிவ்யாஹாரதாத்பர்யம் - நீப்ரதிஜ்ஞ இத்யாதி. முடியாததென் - தலைக்கட்டாதது எதுதான்? உதாநீம் - க்ஷபிதம் வரம்ஸாயுஜ்யம்கிஞ்சிதுக்ஷிகம், ஸவ-க்ஷுதிதிஹாவ:. உன்னைச்சிந்தைசெய்துசெய்து இத்யாரப்ய, என்முன்னைக்கோளரியே - எனக்கு - முடியாததென்? இத்யந்வய:. (௬)

ஓ—ஏழாம்பாட்டில், நீர் எல்லாம்பெற்றுச் சமைந்தீரோவென்ன; என்பக்கல் எம்பெருமான் பண்ணின பக்ஷபாதராஜகுலத்தாலே என்னோடு ஸம்பந்திஸம்பந்திகளானாருங்கூட ஸம்ஸாராதுத்தீர்ணரானார்கள்; ஆனபின்பு நான் பெறாததுண்டோவென்கிறார்.

[முடியாததென்னெனக்கேலினி]-எனக்கு அப்ராப்தவ்யமாயிருப்பதுவொன்றுண்டோ. [முழுவேழுலகுமென்றுதொடங்கி] - ப்ரளயகாலத்தில் இஜ்ஜகத்தையடையத் தன்திருவயிற்றிலே வைத்துக்கொண்டவன் ஜகத்துக்குத் தன்னையொழியச் செல்லாதாப்போலே என்னையொழியத் தனக்குச் செல்லாமையாலே அத்யபிநிவிஷ்டனாய் என்னுள்ளே புகுந்தான், இனிஒருகாலமும் விஶ்லேஷிப்பதுஞ் செய்யான். [செடியாரென்றுதொடங்கி]-ஸாம்ஸாரிக து꞉கங்களெல்லாம் போக்கிக் கீழும்மேலும் ஏழுபடிகாலான அஸ்மதீயர் ஸம்ஸாரத்திலே என்றும் கிடக்கக்கடவதான தன்மையைத் தவிர்ந்தார்கள்.

ப.—அநந்தரம், என்பக்கல்பண்ணின உபகாரம் என்குலத்தில் ஸம்பந்தித்தாரெல்லாரும் உஜ்ஜீவிக்கும்படியாயிற்று என்கிறார்.

முழுவேழுலகும் - ஸமஸ்தலோகமும், உண்டான் - (தன்செல்லாமையாலே தனக்குள்ளேயாம்படி அவற்றை) அமுதுசெய்தவன், உகந்து - (அச்செல்லாமைதனக்கு என்பக்கலிலேயுண்டாய்அதுக்குமேலே) ஆதராதிசயத்தை யுடையனாய்க்கொண்டு, அடியேன் - என்னுடைய ஶேஷத்வஸம்பந்தமே பற்றாசாக, உள் - உள்ளே, வந்து - வந்து, புகுந்தான் - புகுந்தான்; இனி - இனி, (அந்தலோகங்கள்போலே), அகல்வானும், புறம்புபோமவனும், அல்லன் - அல்லன்; (இதடியாக), கீழ் - கீழும், மேல் - மேலும்-ஏழுபிறப்பும் - ஏழுபிறப்பிலும், எமர் - என்னோடுஸம்பந்தமுடையார், செடி - செடிபோலே, ஆர் - செறிந்த, நோய்களெல்லாம் - (அவித்யாகர்மவாஸநாதிகளான) ஸமஸ்தவ்யாதிகளையும், துரந்து - கடக்கவோட்டி, விடியா - ஒருகால்முடிந்து வெளிச்சிறப்பதன்றியே, வெம் - நிரதிஶயதாபகரமான, நரகத்து-ஸம்ஸாரமாகிற நிரயத்திலே, என்றும்-யாவதாத்மபாவி, சேர்தல் - கிட்டுகை, மாறினர் — தவிர்ந்தார்கள்: இனி - இப்படிகுலஸம்பந்திபர்யந்தமாக என்னைப் பக்ஷபதித்தபின்பு, எனக்கேல் - எனக்காகில், முடியாதது-முடியாதது, என் - உண்டோ? என்னோடுஅநுபந்தித்ததாகில் எல்லாக்காரியமும் தலைக்கட்டுமென்று கருத்து.

இ.—[illegible]ாம்பாட்டில், நீர் எல்லாம்பெற்றீரோவென்ன; என்பக்கல் அவன் பண்ணின பக்ஷபா[illegible]ராஜகுலத்தாலே என்னோடு ஸம்பந்திஸம்பந்திகளானாருங்கூட ஸம்ஸாரோத்தீர்ணரானார்கள். ஆனபின்பு நான்பெறாததுண்டோ வென்கிறார்.

[முடியாததென்னெனக்கேலினி]-எனக்காகில் இனிமுடியாததுண்டோ? இனி அநவாப்தமாயிருப்பதுண்டோ. எங்ஙனேயென்னில்,—[முழுவேழித்யாதி] - ப்ரளயாபத்தில் ஸகலலோகமும் நோவுபடாதபடி திருவயிற்றிலேவைத்து ரக்ஷித்தவன், ஜகத்துக்குத் தன்னையொழியச் செல்லாதாப்போலே என்னையொழியச் செல்லாதானாய் ஸம்பந்தத்தைப் பார்த்து உட்புகுந்தான். ஒரு நீராகக்கலந்தான், தன்பக்கல்ஜகத்துப் புக்காப்போலன்றிக்கே உகந்துபுகுந்தான். இவனுக்கும் ஜகத்துக்குஞ் செல்லாமை யொக்கும், உகப்பேற்றம் இவ்விஷயத்தில் இவனுக்கு. மத்ஸம்பந்திகளளவும் கீழ்மேலோடும்படி புகுந்தான். [அகல்வானுமல்லனினி] - ப்ரளயாநந்தரம் உமிழ்ந்தான், இங்கு அங்

வனேசெய்வானு யிருக்கிறிலன். சேதநரைப்போலே பாபத்தாலேயகன்று ஒருஸுக்ருதத்தாலே கிட்டுதலில்லையே யிவனுக்கு. பணைநிழல்போலேயும் மைநோக்கிவிடவமையுமோ, உம்மோடு ஸம்பந்தித்திருப்பார் செய்வதென்? என்ன;—அவர்களும்பெற்றார்கள். [செடியாரித்யாதி] - தூறமண்டின நோய்களெல்லாந் துரந்து. விஷயப்ராவண்யத்தாலே வந்தநோய், ஹநவதலாபத்தாலேவந்தநோய், இவற்றையெல்லாம் வாஸநையோடேபோட்டி. [எமர்] - வேறொன்றாலன்றியே என்னோட்டை ஸம்பந்தமே ஹேதுவாக, எவ்வளவென்னில், - [கீழ்மேலெழுபிறப்பும்] - கீழேழுபடியும் மேலேழுபடியும். [விடியாவெந்நரகத்து] - ஒருநாளிலே முடிவுண்டானதண்டல் யமனது, விடியாதநரகம் ஸம்ஸாரம். [வெந்நரகம்] - "நரகம்" என்று புத்திபிறக்கு மதில், தண்மை தோற்றாத நரக மிது. [என்றுஞ்சேர்தல் மாறினரே] - என்றுங் கிட்டக்கடவதான தண்மையுந் தவிர்ந்தார்கள். நானும் ப்ரார்த்திக்கவேண்டிற்றில்லை, அவனும்நினைப்பிடவேண்டிற்றில்லை. என்பக்கல் அவன்பண்ணின பக்ஷபாதராஜகுலத்தாலே மாறிக்கொண்டு நின்றார்கள்.

ஈடு.—ஏழாம்பாட்டு. என்னளவில் விஷயீகாரம் என்னுடைய ஸம்பந்தி ஸம்பந்திகளளவும் சென்றதுகிடீர் என்கிறார்.

[முடியாததேன்னேக்கேலினி] - எனக்காகில் இனி முடியாதது உண்டோ? எனக்கு இனி முடியாததுண்டோ? எனக்கினி அநவாப்தமா யிருப்பதோன்றுஉண்டோ? நீர்இதுஎன்கொண்டு சொல்லுகிறீர்? என்ன, - [முழுஇத்யாதி] – ப்ரளயபத்திலே அகப்பட்ட பூமி, தன்வயிற்றிலே புகாதபோது படும்பாடடங்க; தான்என்பக்கல் புகுராதபோது படுவானாய் வந்துபுகுந்தான்; எனக்கு இனி முடியாதது உண்டோ? [அடியேனுட்புகுந்தான்] - ஸம்பந்தத்தைப்பார்த்துப் புகுந்தான். [உட்புகுந்தான்] - ஒருநீராகக் கலந்தான். தன்பக்கல் ஜகத்துப் புக்காற்போலன்றியே, உகந்து புகுந்தான். இவனுக்கும் ஜகத்துக்கும் செல்லாமை யொக்கும், உகப்பே இவ்விஷயத்தில் தன்ஏற்றம். [அகல்வானுமல்லனினி] - அந்தபூமிக்கு, ப்ரளயங்கழிந்தவாறே அகலவேணும்; இவனுக்குஅதுவுமில்லை. முதலிலே பிரிவை ப்ரஸங்கிக்கவோட்டேகிறிலன். சேதநரைப்போலே பாபத்தாலேஅகன்று ஒருஸுக்ருதத்தாலே கிட்டுமேதில்லையே இவனுக்கு. உம்மை அவன் இப்படி விரும்பினு

ஏழாம்பாட்டு - முடியாததேன் இத்யாதி. 'எமர்கீழ்மேல்' இத்யாதியைக் கடாக்ஷித்து அவதாரிகை - என்னளவில் இத்யாதி.

எனக்கேல் - எனக்காகில். 'ஏல்' என்றது – சேத் என்றதின் அர்த்தம். முடியாததேன் - ஸாத்யமாகாததுஎது? ஸாத்யமாகாததுண்டோ? என்றபடி. விவரணம் - எனக்கு இத்யாதி. நீர் இதுஎன்கொண்டு என்கிற ஶங்கைக்கு - அவன்என்பக்கல் பண்ணின வ்யாமோஹங்கொண்டு சொல்லுகிறேனென்று உத்தரம். 'முழுவேழுலகுமுண்டான்' என்கிறஇது - த்ருஷ்டாந்தார்த்தமித்யபிப்ராயேணஹ - ப்ரளயபத்திலே இத்யாதி. 'அடியேன்' இதி பதம் - ஹேதுகர்ப்பமித்யபிப்ராயேணஹ - ஸம்பந்தத்தை இத்யாதி. 'உகந்து, வந்து, உள்' இதி பதத்ரயம் த்ருஷ்டாந்தாத் தார்ஷ்டாந்திகஸ்யாதிக்யபர மித்யபிப்ராயேணஹ - ஒருநீராக இத்யாதி. உகப்பே இவ்விஷயத்தில் தன்னேற்றம் - ஆழ்வார்விஷயத்தில் இவனுக்குண்டானஉகப்பே இவன்தனக்கு ஏற்றம். யத்வா, இவ்விஷயமென்றது - ஈஶ்வரனையாதல். உக்தஸமுச்சயபராஶஸப்த இத்யபிப்ராயேணஹாவம் - அந்தபூமிக்கு இத்யாதி. அகலாமையின் சரமாவதிமாஹ - முதலிலே இத்யாதி. அகல

ஞகில்; பனைநிழல்போலே உம்மைநோக்கிக்கொண்டு விடஅமையுமோ? என்ன,-[செடியார்இத்யாதி] - செடி - பாபம். பாபத்தாலே பூர்ணமான துக்கங்கள். தூறுமண்டின நோய்களெல்லாம் துரந்து. விஷயப்ராவண்யத்தாலே வந்த நோய், அயோக்யதாநுஸந்தாநத்தாலே வந்த நோய், பகவதநுபவவிஶ்லேஷத்தாலே வந்த நோய், இவற்றையெல்லாம் வாஸநையோடேஓட்டி. "உள்ளநோய்களெல்லாம் துரந்து" என்கிறவிடத்திலும் சொல்விற்றில்லையோ இது என்னில்;-அங்குச்சொல்லிற்று - தம்மளவு; இங்கு - தம்ஸம்பந்திஸம்பந்திகள் விஷயமாயிற்று. இப்படி இவர்களோட்டிற்று எத்தாலே யென்னில்; [எமர்] - வேறொன்றாலன்று: என்னோட்டை ஸம்பந்தமே ஹேதுவாக. ஸம்பந்தம் எவ்வளவென்னில் - [கீழ்மேலெழுபிறப்பும்] - கீழேழுபடிகாலும் மேலேழுபடிகாலும் தம்மோடே ஏழுபடிகாலுமாக இருபத்தோருபடிகால். [விடியாவெந்நரகத்து] - ஒருநாள்வரையிலே கர்மக்ஷயம்பிறந்தவாறே விடியுமதிறே யமன்தண்டல். இது விடியாவெந்நரகமிறே. "நரகம்" என்றுபுத்திபிறக்கும்அதில், தண்மை தோற்றாத நரகம்இது. [என்றும்சேர்தல்மாறினரே]- என்றும் கிட்டக்கடவதான தண்மை தவிர்ந்தார்கள். நானும் ப்ரார்த்திக்கவேண்டிற்றில்லை, அவனும் நினைப்பிடவேண்டிற்றில்லை. எத்தாலேயென்னில்; — என்பக்கல் அவன்பண்ணின பக்ஷபாதராஜகுலத்தாலே மாறிக்கொண்டு நின்றார்கள். முடியாதது என்னெனக்கேல் இனி? என்று அந்வயம். (எ)

வொண்ணுமைக்குஹேதுவேதுஎன்ன-சேதநரை இத்யாதி. பனைநிழல்போலே-பனைமரத்தின்நிழல் பனையைமாத்ரம் காக்குமாபோலே. செடி - பாபமும், தூறும். முந்தினது-பாபத்தாலே இத்யாதி. த்விதீயம் - தூறுமண்டின இத்யாதி. செடிபோலே செறிந்த நோய்களென்றபடி. 'நோய்கள்' என்கிற பஹுவசநத்துக்கும், 'எல்லாம்' என்கிறதுக்கும் பாவம் - விஷயப்ராவண்ய இத்யாதி. 'துரந்து' இதி பதஸாமர்த்யாதாஹ - வாஸநையோடேயோட்டி இதி. தடஸ்தஶங்கையை அநுவதித்துப் பரிஹரிக்கிறார் - உள்ளநோய்கள் இத்யாதி. 'எமர்' என்கிறவிடத்திலே-"ஸப்த பூர்வாந் ஸப்த பராந் ஹரணவஶமோயாதிஸம்ஶமைபக்ஷக" இத்யாத்யநுஸந்தேயம். 'கீழ்மேலெழுபிறப்பும்' என்றது-நடுவேழுபிறப்புக்கும் உபலக்ஷணமித்யாஹ-கீழேழுபடிகாலும் இத்யாதி. தம்மோடே ஏழுபடிகாலு மென்றது - தமக்குமுன்னே மூன்றுபேரும், பின்னே மூன்றுபேரும், தாமுமாக ஏழுபடிகாலென்றபடி. இருபத்தோருபடிகால் - இருபத்தொரு தலைமுறை. 'விடியா' என்றதுக்கு பாவம் - ஒருநாள்வரையிலே இத்யாதி. யமன்தண்டல் - யமதண்டம். இது - ஸம்ஸாரம். வெம்மைக்கு அர்த்தம் - நரகமென்று இத்யாதி. ஒருநாளும் முடிந்து வெளிச்சிறப்பதன்றியே, நிரதிஶய தாபகரமான ஸம்ஸாரமாகிற நிரயத்தில். என்றும்சேர்தல்மாறினரே - யாவதாத்மபாவி கிட்டுகை தவிர்ந்தார்களிதி ஶப்தார்த்தः. 'மாறினர்' என்று - தத்கர்த்ருகமாகச் சொன்னதுக்கு பாவம்- நானும் - இத்யாதி. எத்தாலேயென்னி லிதி - உம்முடையார்க்கு உம்முடைய ஸம்பந்தத்தாலே ஸம்ஸாரவிச்சேதத்தில் ஹேதுவேது? என்று சங்கிதுர்ப்பாவः. பூர்வார்த்தம் ஶ்ருதிநிதாயோத்தராஹ - என்பக்கல் இத்யாதி. 'என்றும் சேர்தல்மாறினர்' இத்யஸ்யாந்வயந்தர்ஶயதி - முடியாதது இத்யாதி. முழுவேழுலகுமுண்டான் உகந்து வந்து அடியேனுட் புகுந்தான், இனி அகல்வானுமல்லன்; கீழ்மேலெழு பிறப்பிலு முண்டான - எமர் - செடியார்நோய்களெல்லாம் துரந்து - விடியாவெந்நரகத்து என்றும் சேர்தல்மாறினர்; எனக்கேல்இனி முடியாததென்? இத்யந்வயः. (எ)

எட்டாம் பாட்டு.

மாறிமாறிப்பலபிறப்பும்பிறந்து அடியையடைந்துள்ளந்தேறி
ஈறிலின்பத்திருவெள்ளம் யான்மூழ்கினன்
பாறிப்பாறியசுரர்தம் பல்குழாங்கள்நீறெழப் பாய்பறவையொன்று
ஏறிவீற்றிருந்தாய் உன்னையென்னுள்நீக்கேலெந்தாய்!

ஆ.—(மாறிமாறி.) உன்னோடு ஸம்ச்லேஷிக்கைக்கு விரோதியான ஸம்ஸாரத்தில் வர்த்திக்கிற நான், நிர்ஹேதுகமாக உன் திருவடிகளையே ப்ராப்யமாகப் பெற்று அதிலே உள்ளந்தேறி, முடிவில்லாத அழகிய இன்பவெள்ளத்திலே முழுகினேன்; ஆச்ரிதருடைய அபேக்ஷிதங்களைச் செய்யும் ஸ்வபாவனாயிருந்த நீ இனி என்னைக் கைவிடாதொழியவேணு மென்று அபேக்ஷிக்கிறார்.

ஒ.—எட்டாம்பாட்டில், நிர்ஹேதுகமாக உன்னுடைய ப்ரஸாதத்தாலே பெற்ற இஸ்ஸம்ருத்தி இனி ஒருநாளும் விச்சேதியாதொழியவேணும், இதுவே எனக்கு வேண்டுவது என்று எம்பெருமானை ப்ரார்த்திக்கிறார்.

[மாறிமாறி யென்றுதொடங்கி] - பர்யாயேண சாவதுபிறப்பதாய் ஒருநன்மையின்றியே யிருக்கச்செய்தே ஸாம்ஸாரிக விஷயநிவ்ருத்திபூர்வகமாகத் திருவடிகளைப் பெற்று விஷயவாஸனையாலும் ஸகவதலாபத்தாலு முள்ள அந்தஃகரண காலுஷ்யமெல்லாம் நீங்கி முடிவு இல்லாத ஆநந்த ஸமுத்ரத்திலே நான் முழுகினேன். [பாறிப்பாறி யென்று தொடங்கி]-தன் திருச்சிறகில் வேகத்திலே அஸுரஸமூஹங்களானவை சிதறம் பிதறமாய் தூளியாம்படி ஸஞ்சரிக்கும் ஸ்வபாவனாய் அத்யந்த விலக்ஷணனான பெரிய திருவடிமேலே ஏறி உன்னுடைய ஸர்வைச்வர்யத்தாலே வரும் வீறு தோற்றும்படி இருந்தவனே. இத்தால் - இப்படியே தமக்குண்டான ப்ரதிபந்தக நிரஸநம்பண்ணி, அத்தாலே மேனாணித்திருந்த இருப்பைச்சொல்லுகிறது. ஆச்ரிதருடைய வபேக்ஷிதஞ் செய்யும் ஸ்வபாவனென்றுமாம். [உன்னையென்றுதொடங்கி]-என்னோடே இப்படி வந்து கலந்த நீ ஒருநாளும் பிரியாதொழியவேணும், இப்படியுள்ள கலவியாலே என்னை யடிமை கொண்டவனே.

ப.—அநந்தரம். இப்பேறுஎனக்கு விச்சேதியாதொழியவேணு மென்கிறார்.

பலபிறப்பும்-(தேவதிர்யங்மநுஷ்யஸ்தாவராதிகளான) நாநாஜந்மங்களிலும், மாறிமாறிப்பிறந்து - ஒருகால் பிறந்து அதிலே மீண்டுமீண்டும் பிறந்து போரச்செய்தே, அடியை - உன் திருவடிகளை, அடைந்து - கிட்டி, (மோக்ஷத்வஜ்ஞாநத்தையுடையேனாய்), உள்ளம்தேறி - ("நீயே உபாயபூதன்" என்கிற) நெஞ்சில் தோற்றத்தையுடையேனாய், (உன்னுடைய அநுபவத்தாலே ஜநிதமான), ஈறு-முடிவு, இல் - இல்லாத, இன்பம் - ஆநந்தமாகிற, இரு-பெரிய, வெள்ளம்-வெள்ளத்திலே, யான் - (அஸமர்த்தபூதனான) நான், மூழ்கினன் - அவகாஹித்தேன்; அசுரர்தம - அஸுரர்களுடைய, பல் - பலவகைப்பட்ட, குழாங்கள் - குழாங்களானவை, பாறிப்பாறி - பஹுமுகமாக சிதிலமாய், நீறு - தூளியாய், எழ - கிளரும்படி, பாய் - (அவர்களுடைய ஸேநாமத்யத்திலே) பாயக்கடவனான, ஒன்று - அத்விதீயனாயுள்ள, பறவை - பெரியதிருவடியின்மேலே, ஏறி - ஏறி, வீறு-உன்

மேன்மைதோன்றும்படி, இருந்தாய் - இருந்த, எந்தாய் - என்னுதனே! உன்னை-(ப்ராப்தனுமாய் ஶரண்யனுமாய் போக்யனுமாய் விரோதிநிவர்த்தகனுமான) உன்னை, என்னுள்- உனக்கு ஸர்வப்ரகாரபாரதந்த்ரனை என்னுள்ளினின்றும், நீக்கேல் - அகற்றுதொழிய வேணும்.

இ.—எட்டாம்பாட்டில், நிர்ஹேதுகமாகப்பெற்ற இஸ்ஸம்ருத்தி ஒருநாளும் விச்சேதியாதொழியவேணு மென்று இரக்கிறார்.

[மாறிமாறியித்யாதி] - ஸபரிகரமாக உம்மைவிஷயீகரிக்கைக்கு நீர் செய்ததென்? என்ன; - அநாதியாகச் சாவது பிறப்பதாய்ப் போந்தேன், அநுபவித்து மீளுதல், ப்ராயஶ்சித்தம்பண்ணுதல் செய்யக்காலமில்லையாயிற்று; இப்படி ஜந்மபரம்பரையாய்ப் போராநிற்க, உன்திருவடிகளைவந்து கிட்டிக்கொண்டு நின்றேன். அதாகிறது- 'இந்தவஸ்த்துக்கு இத்தலையில் ஒருமுதலுண்டு' என்று தோற்றுதபடியாலே சொல்லுகிறது. [உள்ளந்தேறி] - நெடுநாள் விஷயவாஸநையாலும் ஸகவதலாபத்தாலுமுள்ள அந்தஃகரணகாலுஷ்யம்போய்ஹ்ருதயந்தெளிந்து. "ஸா தம்ஸஜாவஸா தூவிஶுத்தஸத்வா". ஹ்ருதயந்தெளிந்த மாத்ரமே யன்றிக்கே, [ஈறிலின்பமித்யாதி] - முடிவில்லாத ஆநந்த ஸமுத்ரத்திலே நான் அவகாஹித்தேன். திருவடி, திருவநந்தாழ்வான், இவர்களும் குமிழிநீருண்கிற விஷயத்திலேயிறே நான் அவகாஹிக்கப்பெற்றது. விரோதிவர்கஞ் செய்ததென்? என்னில், - பெரியதிருவடியுடைய திருச்சிறகைக்கேட்குமித்தனை. [பாறிபித்யாதி] - சிதறம் பிதறமாய் அஸுரவர்கத்தினுடைய பலவகைப்பட்ட குழாங்களானவை நீறும்படி விரோதிவர்க்கத்திலே பாயாநின்றுள்ள அத்விதீயனை பெரியதிருவடி மேலேயேறி ஐஶ்வர்யத்தால் வந்த வீறுபாடுதோற்றும்படி யிருந்தவனே. பெரியதிருவடிக்கு அத்விதீயத்வம் - அவன்கருத்தறிந்து செய்கையில் தலைவனாகை. [உன்னையென்னுள் நீக்கேல்] என்னோடே இப்படி கலந்த உன்னை என்பக்கலினின்றும் நீக்கநினையாதொழியவேணும். தம்முடைய இனிமையாலே இவரும் அவன்பக்கலிலே அதிஶங்கை பண்ணுகிறார். தம்முகப்பு அவனை எதிரிட்டபடி. [எந்தாய்] - விரோதியைப்போக்கிவந்து கலக்கைக்கடியான ப்ராப்தியைச் சொல்லுகிறது.

ஈடு.—எட்டாம்பாட்டு. இப்படி கனத்தபேற்றுக்கு நீர்செய்த ஸுக்ருதமேன்? என்ன,—ஒருஸுக்ருதத்தால் வந்ததல்ல, நான்பிறந்து படைத்ததென்கிறார். அதுவுமோன்றுஉண்டு, அந்தாதியாகப்பிறந்து போந்தே னென்கிறார்.

எட்டாம்பாட்டு - மாறிமாறி இத்யாதி. "பிறந்து" என்றத்தைப்பற்ற அவதாரிகை-இப்படி இத்யாதி. இப்படிகனத்தபேற்றுக்கு - ஸம்பந்திஸம்பந்திபர்யந்த ஸம்ஸாரவிச்சேதரூபபலத்துக்கு. ஒருஸுக்ருதத்தாலே இத்யாதி வாக்யத்வயமும் ஸஶ்லோக்தி. பிறந்துபடைத்தது - ஜந்மஸித்தமென்று த்வநி. ஸ்வபாவார்த்தஸ்து - பிறவாநிற்கச்செய்தே பெற்றது. அதாவது - துர்கதியே பற்றாசாக அங்கீகரித்தா னென்றபடி. 'மாறிமாறி' என்றதுக்கு ஸாவம் - அதுவும் இத்யாதி. நிர்ஹேதுக மென்றபடி. அதுவுமோன்றுண்டு-"ஸுக்ருதமில்லை" என்னப்போகாதே, அப்படியே ஒரு ஸுக்ருதமு முண்டென்றபடி. அந்தாதியாகப்பிறக்கை ஸுக்ருதமென்றபடி. அந்தாதியாகப்பிறக்கை - பூர்வதேஹத்தினுடைய அந்தம் உத்தரதேஹத்துக்கு ஆதியாம்படியாகப் பிறக்கை.

[மாறிமாறி இத்யாதி] - ஸபரிகரமாக உம்மை விஷயீகரிக்க, நீர்செய்ததேன்? என்ன; - கடலுக்குள்ளே கிடந்ததொரு துரும்பு திரைமேல்திரையாகத் தள்ள வந்து கரையிலே சேருமாபோலே, மாறிமாறிப்பிறந்து வாராநிற்க, திருவடிகளிலே கிட்டிக் கொண்டு நிற்கக் கண்டேனித்தனை. அநுபவித்து மீளுதல், ப்ராயஶ்சித்தம்பண்ணி மீளுதல், செய்யக் காலமில்லையாயிற்று. [அடியையடைந்து உள்ளந்தேறி] - உள்ளந்தேறி அடியையடைந்தவரல்லர், அடியையடைந்தாயிற்று உள்ளந்தேறிற்று. [உள்ளந்தேறி] - நெடுநாள் விஷயவாஸனையாலும் ஶகவதலாபத்தாலுமுள்ள அந்தஃகரணகாலுஷ்யம்போய் ஹ்ருதயந் தெளிந்து, தெளிந்தவளவேயன்றியே [ஈறிலின்பத்திருவெள்ளம் யான்மூழ்கினன்] - முடிவின்றிக்கேயிருக்கிற பெரிய ஆநந்தஸாகரத்திலே அவகாஹித்தேன். திருவடி, திருவநந்தாழ்வான், இவர்கள் குமிழிநீருண்கிற விஷயத்திலேயிறே நான்அவகாஹிக்கப் பெற்றது. ஆனால் உம்முடையவிரோதிகள் செய்ததேன்? என்ன, - அதுக்குக்கடவாரைக் கேளிகோ ளென்கிறார், [பாறிஇத்யாதி] - அஸுரவர்க்கத்தினுடைய பலவகைப்பட்ட குழாங்களானவை, பாறிப்பாறி நீறெழுந்துபோம்படியாக ப்ரதிபக்ஷத்தின்மேலே பாயாநின்றுள்ள அத்விதீயமான பறவையை மேற்கொண்டு உன்னுடைய வ்யாவ்ருத்தி தோற்ற இருந்தவனே! பெரியதிருவடிக்கு அத்விதீயத்வம் - அவன்கருத்தறிந்து நடக்கையில் தலைவனாகை. அவன் ப்ரதிபக்ஷநிரஸநத்துக்குப்பண்ணின வ்யாபாரம் பெரியதிருவடிதிருத்தோளிலே பேராதே யிருந்தவித்தனை. [உன்னையித்யாதி] - ஸ்வாமியான நீ இனியொரு காலமும் உன்னை என்பக்கல்நின்றும் பிரித்துக்கொண்டுபோகாதொழியவேணும் [உன்னையென்னுள்நீக்கேல்] - என்னோடே இப்படிகலந்த உன்னை, உன்னுடையகலவியால் வந்த

'இப்படிகனத்தபேறு' என்றத்தை 'இன்னது' என்று விவரியாநின்றுகொண்டு, துர்க்கதியே பற்றாசாக அங்கீகரித்தானென்று வாஸ்தவமான அர்த்தத்தை அருளிச்செய்கிறார்-ஸபரிகரமாக இத்யாதியாலே. 'மாறிமாறி' என்ற வீப்ஸைக்கு ஶாவம் - அநுபவித்து இத்யாதி. அடியையடைந்துள்ளந்தேறினமைக்கு - "ஸா தம் ஸம்ரோஸாஷ்ய விஶுத்தஸத்வா" என்றத்தை அருளிச்செய்வர். "அடியையடைந்துள்ளந்தேறி" என்றத்தால் - மநஃப்ரஸாதமுண்டானபின்பு அடிகளைக் கிட்டும்உபாஸகவ்யாவ்ருத்தி. உள்ளந்தேறி இத்யாதி - மாறிமாறி இத்யாதிக்கு தேவதிர்யகாதிகளான நாநாஜந்மங்களில் ஒருகாற்பிறந்ததிலே மீண்டுமீண்டு பலபிறப்பும்பிறந்து போரச்செய்தே உன்திருவடிகளைக் கிட்டி ஹ்ருதயம்தெளிந்துளென்று சப்தார்த்தம். தாத்பர்யம் - நெடுநாள் இத்யாதி. "இன்பத்திருவெள்ளம்" இத்யத்ர, அத்துகாரஃ - பாதபூரணார்த்தோவ்யயஃ. ஈறிலின்ப இருவெள்ள மென்றபடி. இருமை - பெருமை. "ஈறிலின்பம்" என்று - நஶ்வரமான ஐஶ்வர்ய வ்யாவ்ருத்தி. "இரு" என்று - அல்பஸுகமான கைவல்யவ்யாவ்ருத்தி. இந்தநிரதிஶயாநந்தத்துக்கு அடியேது? என்கிற சங்கையிலே "பறவையொன்றேறி வீற்றிருந்தாய்" இத்யேதத்பராம்ருஶந்நாஹ - திருவடிஇத்யாதி. விஷயஸ்வஶாவமே ஹேதுவென்றபடி. குமிழிநீருண்கிற - நிமக்நராகிற. மேலுக்குஅவதாரிகை - ஆனால் இத்யாதி. அதுக்குக்கடவாரென்றது - "பறவை" என்றத்தைப்பற்ற. சப்தார்த்தம் - அஸுரவர்க்கத்தினுடையஇத்யாதி. பாறிப்பாறி - சிதறிச்சிதறி. நீறெழ - தூளியாய்க் கிளம்பும்படி. "பாய் - ஒருபறவையேறி" இத்யந்வயஃ. தலைவன் - ப்ரதானன். "பாறிப்பாறி" இத்யாதி - ஈஶ்வரவிசேஷணமாக்கி அர்த்தாந்தரம் - அவன்ப்ரதிபக்ஷஇத்யாதி. பேராதே - சலியாதே. "இனியொருகாலமும்" என்கையாலே - இவ்வளவும் ஸம்ஸாரத்தில் வைத்ததும் அதிஶங்காநிமித்தமிதி ஸ்ப்புரதி. "ஈறிலின்பத்திருவெள்ளம் யான் மூழ்கினன்" என்கையாலே - "இந்தபோகம் தமக்குத் தொங்கப் புகுகிறதோ?" என்று ஶோக்யதாதிசயாததிசங்கத இத்யபிப்ராயேண ஶாவாந்தரமாஹ-என்னோடே இத்யாதி. த்விவாரம் ப்ரதீகோபா

ரஸமறிந்த என்பக்கல்நின்றும் நீக்க நினையாதொழியவேணும். தம்முடைய இனிமையாலே அதிஶங்கைபண்ணுகிறார். தம்முகப்பு அவனை எதிரிட்டபடி. [எந்தாய்] - விரோதியைப்போக்கிக் கலக்கைக்கு அடியான ப்ராப்தியைச் சோல்லுகிறது. (அ)

ஒன்பதாம் பாட்டு.

எந்தாய்தண் திருவேங்கடத்துள்நின்றாய் இலங்கைசெற்றாய் மராமரம்
பைந்தாளேழுருவ ஒருவாளிகோத்தவில்லா ! [ம்
கொந்தார்தண்ணந்துழாயினாயமுதே உன்னையென்னுள்ளேகுழைத்தவெ
மைந்தா ! வானேறே ! இனியெங்குப்போகின்றதே?

ஆ—(எந்தாய்.) திருமலையிலே புகுந்து நின்றருளினபடியையும், உன்னுடைய திருவவதாரங்களையும், உன்னுடைய திவ்யசேஷ்டிதங்களையும், உன்னுடைய அழகையும், ஸ்ரீவைகுண்டநாதனாயிருந்தருளும்படியையும், மற்றுமுள்ள படிகளை யடங்க எனக்கு போக்யமாகக் காட்டியருளி, உன்னை என்னுள்ளே ஒன்றாகக் குழைத்தருளின நீ இனிஎங்கேபோவது ? போவேனென்றால்தான் போகமுடியுமோ ? என்கிறார்.

ஒ—ஒன்பதாம்பாட்டில், உன்னுடைய குணசேஷ்டிதங்களைக் காட்டி என்னை வஶீகரித்து, விஶ்லேஷிக்க முடியாதபடி என்னோடே கலந்திருந்துள்ள உனக்கு இனி போகவுபாயமில்லை யென்கிறார்.

[எந்தாயென்று தொடங்கி] - என்னை அடிமைகொண்டருளுகைக்காக நிரதிஶயபோக்யமான திருமலையிலே நின்றருளினவனே. [மராமரமென்று தொடங்கி]-பரந்த அடியையுடைய மராமரம் ஏழும் உருவ அநாயாஸேந எய்தவனே. [கொந்தார்]-தழைத் திருக்கை. [உன்னையென்னுள்ளே குழைத்த வெம்மைந்தா] - விஶ்லேஷாநர்ஹமாம்படி என்னோடே ஸம்ஶ்லேஷித்து அக்கலவியாலே நவீக்ருதமான யௌவநத்தை யுடையவனே. [வானேறே] - தம்மோடே கலந்தபடிக்கு த்ருஷ்டாந்தம்.

ப.—அநந்தரம், நீயே க்ருஷிபண்ணிக் கலந்து இனி எங்கேறப்போவது ? என்கிறார்.

எந்தாய் - எனக்கு நிருபாதிகஸ்வாமியாய், தண் - ஶ்ரமஹரமான, திருவேங்கடத்துள் - திருமலையிலே, நின்றாய் - எழுந்தருளிநின்று ஸுலபனாய், இலங்கை - (ஆஶ்ரிதவிரோதிகளுக்கு வாஸஸ்த்தாநமான) லங்கையை, செற்றாய் - அழித்தவனாய், மரா

தாநம் - பாவத்வயத்வஸூசகம். விவக்ஷிதம் அதிசங்காஹேதும் ஸ்பஷ்டயதி-தம்முடையஇத்யாதி. இனிமையாலே - ப்ரீதியாலே. கீழ்மேலும் - ஈஶ்வரனுடைய அதிசங்கையாயிருக்க, இங்கே தாம் எப்படி அதிசங்கைபண்ணுகிறா ரென்ன, தம்முகப்புஇத்யாதி. இததால் - பரஸ்பராநுராகத்தைத் யோதிப்பித்தாராயிற்று. “பாறிப்பாறி” இத்யாதிகஞ்ச பராம்ருஶ்ராஹ - விரோதியைஇத்யாதி. மாறிமாறி தொடங்கி, மூழ்கினன் - அசுரர்தம்பல் குழாங்கள் - பாறிப்பாறி நீறெழப்பாய்கின்ற ஒன்றான பறவையேறி வீற்றிருந்தாயான - எந்தாய் - உன்னை என்னுள்நீக்கேல் இத்யந்வய: (அ)

மரம் - மராமரங்களினுடைய, பைந்தாள்-பருத்த அடி, ஏழு - ஏழும், உருவ - உருவும்படி, ஒருவாளி - ஒருவாளியை, கோத்த - (அநாயாஸேந) கோத்த, வில்லா - வில்லையுடையனாய், கொந்து - கொத்தாய், ஆர் - செறிந்து, தண் - குளிர்ந்த, அம்துழாயினாய் - திருத்துழாயாலே அலங்க்ருதனாய், எம்அமுதே - நித்யபோக்யனாய்க்கொண்டு, உன்னை - ஏவம்விதனான உன்னை, என்னுள்ளே - என்னுள்ளே, குழைத்த - (ஏகத்ரவ்யமாம்படி) கலசின, மைந்தா - நித்யயௌவநஸ்வபாவனாய், (இந்நிலையாலே), வான் ஏறே - ஸூரிகளுக்கும் செருக்கனாம்படி நின்றவனே! (அஸாதாரண ஸம்பந்தத்தையும், ஸௌலப்யத்தையும், விரோதிநிவர்த்தகத்வத்தையுங் காட்டி, மஹாராஜரைப்போலே என்னையும் விஶ்வஸிப்பித்து, ஒப்பனையழகைக்காட்டி எனக்கு நித்யபோக்யனாய்ப் பிரிக்கவொண்ணாதபடி கலந்து அத்தாலே இளகிப்பதித்து இத்தாலே நித்யவிபூதிக்கும் மேலான மேன்மையை யுடையநீ), இனி - இனி, (இந்தஸம்ஶ்லேஷத்தைவிட்டு), எங்கு - எங்கே, போகின்றது - போகிறது? இனிப்போகாதே யென்று கருத்து.

இ.—ஒன்பதாம்பாட்டில், விஶ்லேஷிக்க முடியாதபடி என்னோடே கலந்து வைத்து, ஒன்றுஞ்செய்யாதாரைப்போலே 'பரகு பரகு' என்கிறதென்? என்கிறார். 'இவர் நினைவறியவேணும்' என்று அவன் கால்வாங்கப்புக, 'இனியெங்குப் போகின்றது' என்கிறார் என்னவுமாம்.

[எந்தாய்] - 'வகுத்தஸ்வாமி' என்னும் முறைமை யறிவித்தவனே. [தண்திருவேங்கிடத்துள்நின்றாய்] - பரமபோக்யமான திருமலையிலே நின்றாயிற்று ஸம்பந்தத்தை யறிவித்தது. [இலங்கைசெற்றாய்] - ஸம்பந்தஜ்ஞாந விரோதிவர்க்கம் லங்கை பட்டது பட்டது. [மராமரமித்யாதி] - மஹாராஜரை இசைவித்தாப்போலேயாயிற்று இவரை யிசைவித்தது. [பைந்தாள்] - பரந்தஅடியை யுடைத்தாகை. [வாளிகோத்த] - துளையுள்ளதொன்றிலே அம்பை யோட்டினாப்போலேயாயிற்று அநாயாஸமிருந்தபடி. [கொந்தாரித்யாதி] - வைத்தவளையத்தைக் காட்டியாயிற்றுஇவரை யிசைவித்தது. கொந்தார்—தழைத்திருக்கை. [அமுதே] - அந்தவொப்பனையாலே எனக்கு நிரதிஶயபோக்யனானவனே. [உன்னையித்யாதி] - கலக்கிறவிடத்தில் "ஸஹ கூ தத்" என்னலாம்படியாயிற்று கலந்தது. [எம்மைந்தா] - என்னோடே கலக்கப்பெற்ற இத்தாலே நவீக்ருதயௌவந ஸ்வபாவனானவனே. [வானேறே]- அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரை அநுபவித்தாப்போலேயாயிற்று இவரை யநுபவிப்பித்தது. [இனியெங்குப்போகின்றதே]-நித்யஸூரிகளை விடிலன்றோ என்னை விடலாவது. போகிலும், கூடப்போகவேண்டும்படியன்றோ கலந்தது.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. முதலிலே உன்னை யறியாதிருக்கிற என்னை, உன்னையும் உன் போக்யதையையும் அறிவித்து உன்னாலல்லது செல்லாதபடியாக்கின நீ இனி என்னை விட்டுப் போகாதொழிய வேணு மென்கிறார்.

ஒன்பதாம்பாட்டு - எந்தாய் இத்யாதி. "அமுதே உன்னை யென்னுள்ளே குழைத்த எம்மைந்தா, இனியெங்குப்போகின்றதே?" என்ற பதங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை - முதலிலே இத்யாதி. "'உன்னை யென்னுள் நீக்கேல்' என்கிற இது உக்திமாத்ரமோ? ஹ்ருதயத்திலுமுண்டோ? என்று அறியவேணும்" என்று ஈஶ்வரன் ஓடிபோ, சொல்லுகிறார் - எந்தாய் இத்யாதி என்று வாக்யஸங்கதி. இந்தவாக்யஸங்கதி - ஏதத்தப்ரகார்த்தநிகமநாவஸரே ஸ்பஷ்டம் "திருவேங்கடத்துள்நின்றாய் - எந்தாய்" என்கையாலே, உன்னையும் என்றது.

[எந்தாய்] - ப்ரமஹரமான திருமலையிலே வந்துநின்று உன்ஸ்வாமித்வத்தைக் காட்டி என்னை ஶேஷத்வத்திலே நிறுத்தினவனே! [இலங்கைசெற்றாய்] - பிராட்டியோட்டை ஸம்ஶ்லேஷவிரோதியைப் போக்கினாற்போலே, என்னுடைய ஶேஷத்வ விரோதியைப் போக்கினவனே! [மராமரம்இத்யாதி] – ஆஶ்ரித விஷயத்தில் மழுவேந்திக்கோடேத்துக் கார்யம் செய்யும்படி. பரந்தவடிவை யுடைத்தான மராமரங்க ளேழும் மறுபாடுருவும்படியாக, பண்டே தோளையுள்ள தோன்றிலே ஓட்டினாற்போலே அம்பைக் கோத்த வில்வலியையுடையவனே! [கொந்தார்தண்ணந்துழாயினாய்] - வைத்தவளையத்தோடே நின்றாயிற்று மராமரமெய்தது. அவதாரத்துக்குச்சேர ஏதேனு மொன்றாலே வளையம்வைக்கிலும், திருத்துழாயல்லது தோற்றாது இவருக்கு. கொந்தார் - தழைத்திருக்கை [அமுதே]-மராமரமெய்கிறபோது இலக்குக்குறித்து நின்ற நிலை இவர்க்கு போக்யமாயிருந்தபடி. [உன்னைஇத்யாதி] - கலக்கிறவிடத்தில் "ஏகதத்த்வம்" (ஏகதத்த்வம்) என்னலாம்படி கலந்து, இனி 'போவேன்' என்றால், போகப்போமோ? போகிலும், கூடப்போமித்தனை. [மைந்தா] - என்னோடேகலந்த இத்தாலே நவீக்ருதமான யௌவநத்தை யுடையவனே! [வானேறே] - தன்போக்யதையை நித்யஸூரிகளை அநுபவிப்பித்து, அத்தாலேவந்த மேன்மை தோற்ற இருக்குமாபோலேயாயிற்று இவரை அநுபவிப்பித்து மேன்மைதோற்ற இருந்தபடி. [இனியெங்குப்போகின்றதே] - உன்னாலல்லது செல்லாதபடியான என்னைவிட்டு உன்னையொழியக் காலக்ஷேபம்பண்ணவல்லார் பக்கல் போகவோ? நித்யஸூரிகளை விடிலன்றோ என்னைவிடலாவது. 'இவர்நம்மை விடிற் செய்வதேன்?' என்று அவனுக்கு உண்டான அதிஶங்கையைப் பரிஹரியாநிற்க, "நீஎன்னைவிட்டுப் போகாதேகொள்" என்கிற இதுக்குக் கருத்தேன்? என்னில்;—விலக்ஷணவிஷயம், தானும் காற்கட்டி எதிர்த்தலையையும் காற்கட்டப்பண்ணுமாயிற்று.

"திருவேங்கடத்துள் நின்றாய் - எந்தாய்" என்று அந்வயமுகேநாஹ - ப்ரமஹரமான இத்யாதி. உன்ஸ்வாமித்வத்தைக் காட்டி - ஸ்வாமியாகையாலேயிறே புனங்காப்பாரைப்போலே திருமலையிலே வந்து நோக்குகிற தென்று கருத்து. தாத்பர்யம் - பிராட்டி இத்யாதி. சேஷத்வ விரோதியைப் போக்கினவனே யென்றது - 'மயர்வறமதிநலமருளினன்' என்றத்தைப் பற்ற. மழு- தப்தமான அயஃபிண்டம். பைந்தாள் - மராமரம் - எழுருவ என்று அந்வயித்து அருளிச்செய்கிறார் - பரந்த இத்யாதி. மராமரங்களினுடைய பருத்த அடியேழும் உருவும்படி யென்றும் அர்த்தமுண்டு. மறுபாடுருவும்படி - பின்னே உருவிப்போம்படி. "கோத்த" என்ற பதத்துக்கு அர்த்தம் - பண்டேதோளையுள்ளது இத்யாதி. ஸமபிவ்யாஹாரத்துக்கு பாவம் - வைத்தவளையத்தோடே இத்யாதி. மராமரம் - ஸாலவ்ருக்ஷம். பெருமாளுக்குத் திருத்துழாயுண்டோ என்ன, அவதாரத்துக்கு இத்யாதி. கொந்தார் - கொந்தாற்செறிந்து. கொந்து - கொத்து; தழை யென்றபடி. "வாளிகோத்தவில்லா" என்ற அநந்தரம், "அமுதே" என்றதுக்கு பாவம் - மராமரம் இத்யாதி. இலக்குக்குறித்து - லக்ஷ்யம்பார்த்து. "உன்னையென்னுள்ளேகுழைத்த" என்றத்தை- "இனியெங்குப்போகின்றதே" என்றத்தோடே கூட்டித் தாத்பர்யம் - கலக்கிற இத்யாதி. குழைக்கை - ஏகத்ரவ்ய மென்னலாம்படி கலக்கை. "குழைத்த - எம்மைந்தா" இதி பதஸமபிவ்யாஹார தாத்பர்யம் - என்னோடே இத்யாதி. "குழைத்த - வானேறே" என்று கூட்டி பாவம் - தன் போக்யதையை இத்யாதி. "உன்னை யென்னுள்ளே குழைத்த வெம்மைந்தா - இனியெங்குப் போகின்றதே" இதிபதஸங்கதிம் ஹ்ருதிநிதாய பாவம் - உன்னாலல்லது இத்யாதி. "வானேறே இனியெங்குப்போகின்றது" என்றுகூட்டி பாவம் - நித்யஸூரிகளைஇத்யாதி. தடஸ்த்தஶங்கையை அநுவதித்துப் பரிஹரிக்கிறார்-இவர்நம்மைஇத்யாதி. தானும் காற்காட்டித்தன்னுடைய ஸ்நேஹத்தாலே எதிர்த்தலையையும் போகாதபடி காற்காட்டப்பண்ணு மென்றபடி. காற்கட்டுகை -

[எந்தாய்] - நீ ஶேஷியல்லாமற்போகவோ? [தண்திருவேங்கடத்துள்நின்றாய்] - தூரஸ்தனாய்ப்போகவோ? [இலங்கைசெற்றாய்] - விரோதி நிரஸந ஶீலனல்லாமற் போகவோ? [மராமரம்இத்யாதி] - ஆஶ்ரிதவிஷயத்திலே மழுவேந்திக்கொடுத்துக் கார்யஞ்செய்யுமவனல்லாமற்போகவோ? [கொந்தார்தண்ணந்துழாயினாய்] - ஆஶ்ரிதரக்ஷணத்துக்கு மாலையிட்டிலையாய்ப்போகவோ ? [அமுதே] - ஹோக்யபூதனல்லாமற்போகவோ? [உன்னை என்னுள்ளேகுழைத்த] - ஒருநீராகக் கலந்திலையாய்ப்போகவோ ? [எம்மைந்தா] - நவீக்ருத ஸ்பாவனல்லாமற்போகவோ? [வானேறே]-மேன்மையனல்லாமற்போகவோ?[இனி எங்குப்போகின்றதே] - போகிலும் கூடப்போமித்தனை யொழிய, "ஏகதத்த்வம்" (ஏகதத்த்வம்) என்னலாம்படி கலந்து தனித்துப்போகலாமோ ? (௯)

பத்தாம் பாட்டு.

போகின்றகாலங்கள்போயகாலங்கள்போகுகாலங்கள் தாய்தந்தையுயிராகின்றாய்உன்னைநானடைந்தேன்விடுவேனோ?
பாகின்றதொல்புகழ்மூவுலகுக்குநாதனே! பரமா! தண்வேங்கடமேகின்றாய்! தண்டுழாய்விரைநாறுகண்ணியனே!

ஆ.—(போகின்ற.) ஸர்வாத்மாக்களுக்கும் மாதா செய்யும் நன்மையும் பிதா செய்யும் நன்மையும் தான் தனக்குச்செய்யும் நன்மையும், ஸர்வகாலமும் எனக்குச்செய் தருளும் ஸ்வபாவனாய், நிரவதிகநித்யஸித்த கல்யாணகுணவிஶிஷ்டனாய், ஸர்வலோகேஶ்வரனாய், நிரஸ்தஸமாப்யதிகனாய், திருமலையிலே புகுந்தருளி எனக்குங்கூட பரமஸுலபனாய், பரமபோக்யனாயிருந்த உன்னை நான் அடைந்தேன்; இனி விடுவேனோஎன்று கொண்டு தாம்எம்பெருமானோடு கலந்த கலவிக்குத் தம்மாலும்அவனாலும் ஹேத்வந்தரத்தாலும் ஒழிவில்லை யென்கிறார்.

ஒ.—பத்தாம்பாட்டில், காலத்ரயத்திலும் உன் க்ருபையாலே எல்லாப்படியாலும் எனக்கு உபகாரகனான உன்னை ஸாக்ஷாத்கரித்து வைத்து, இனிவிட ஸம்பாவனை யுண்டோவென்கிறார்.

[போகின்றவென்றுதொடங்கி] - காலத்ரயத்திலும் தாயுந்தமப்பனுஞ் செய்யும் நன்மைகளையும் என்னாத்மா தான் தனக்குப் பார்த்துக்கொள்ளும் நன்மைகளையும் செய்யும் ஸ்வபாவனானவனே! இப்படியுபகாரகனாய்நின்றுள்ள உன்னைக்காணவல்லேனோ வென்றிருக்கிற நான் காணப்பெற்று வைத்து இனிவிட வுபாயமுண்டோ. [பாகின்றவென்று மேலுக்கு] - உன்னுடைய ஐஶ்வர்யாதிகளுக்கு ஒத்தாரும் மிக்காருமில்லாதபடி யிருந்து

அதிஶங்கைபண்ணுகை. கீழில்விஶேஷணங்களையெல்லாம் போகாமைக்கு உறுப்பாக்குகிறார் - எந்தாய் இத்யாதி. யத்வா, 'எங்கு' என்ற பதத்தை-முன்னே, தேசபரமாக வ்யாக்யாநம்பண்ணி, ஹேதுபரமாக வ்யாக்யாநம்பண்ணுகிறார் - எந்தாய் இத்யாதி. எங்கு - எத்தாலே. ஆஶ்ரிதரக்ஷணத்துக்குஇத்யாதி வாக்யம் - "ஒருவாளிகோத்தவில்லா, கொந்தார் தண்ணந்துழாயினாய்," என்ற ஸமபி வ்யாஹார தாத்பர்யம். க்ரமேண அந்வயஃ (௯)

வைத்து என்னோட்டை ஸம்ஶ்லேஷத்துக்காக நிரதிஶயபோக்யமான திருமலையை விடாதே யெழுந்தருளி நிற்பதுஞ்செய்து என்னோட்டைக் கலவியாலே பருவம் செய்து அதிபரிமளமான திருத்துழாய்மாலையாலே அலங்க்ருதனானவனே.

ப.—அநந்தரம், உன்னுபகாரங்களைக் கண்ட நான் உன்னைப்பெற்றுவைத்து விடக்கூடுமனோ? என்கிறார்.

போகின்றகாலங்கள் போயகாலங்கள் போருகாலங்கள் - வர்த்தமானமாயும் பூதமாயும் ஆகாமியாயுமுள்ள காலத்திலும், தாய்தந்தை உயிராகின்றாய் - தாயும் தந்தையும் தன்ஆத்மாவும் தனக்குப்பண்ணும் பரிவைப்பண்ணாநிற்பானாய், பாகின்ற - இப்படி ஸர்வதோமுகமான ரக்ஷணத்தாலே பரக்கிற, தொல் - அநாதிஸித்தமான, புகழ் - குண ப்ரதையையுடையனாய்க்கொண்டு, மூவுலகுக்கும் - த்ரிவிதசேதநாசேதநங்களுக்கும், நாதனே - நாதனாய், பரமா - இப்பெருமைக்குத் தனக்குமேலில்லாதவனாய், (இம்மேன்மையன்றியே), தண் - ஶ்ரமஹரமான, வேங்கடம் - திருமலையிலே, மேகின்றாய் - மேவி நிற்கிற ஸௌலப்யத்தையுடையனாய்,(இப்பரத்வஸௌலப்யங்களுக்கும் போக்யதைக்கும் ஸூசகமாய்), தண் - குளிர்ந்த, துழாய் - திருத்துழாயையுடைத்தாய், விரைநாறு - பரிமளம் ப்ரவஹிக்கிற, கண்ணியனே - மாலையையுடையவனே! உன்னை - (ஏவம்விதனான) உன்னை, அடைந்தேன் - ஸம்ஶ்லேஷிக்கப்பெற்ற, நான் - நான், விடுவேனோ — விடக்கூடுமனோ?

இ.—பத்தாம்பாட்டில், நாம் போகாதொழிகிறோம், நீர் விடாதொழிய வேணுமே யென்ன;—நீ பண்ணின உபகாரங்களைக் கண்டுவைத்து விட ஸம்பாவனை யுண்டோ வென்கிறார்.

[போகின்றவித்யாதி] - காலத்ரயத்திலும் தாயும் தமப்பனும் செய்யும் நன்மைகளையும். [உயிராகின்றாய்] - "ஸஶித்ராவபரித்யக:" என்று அவர்கள் விடுமளவிலும் தான் தனக்குப்பார்க்கும் நன்மைகளையும் செய்யுமவனே. இச்சேதநர் அநாதிகாலம் தன் விநாஶத்தையே சூழ்ந்துகொள்ள, முகந்தோற்றாதபடி நின்று ஸத்தையை நோக்கிப் போந்தவனல்லையோ. [உன்னை] - இப்படி உபகாரகனானவுன்னை. [நான்] - உபகார ஸ்ம்ருதியுடையேனான நான் கிட்டப்பெற்றவினி விடுவேனோ. [பாகின்றதொல்புகழ்] - "விஷ்வஹ்யஶோ-ஜஸ:" என்கிறபடியே ஸர்வத்ர பரம்பியிருப்பதாய் ஸ்வாபாவிகமான கல்யாண குணங்களை யுடையவனே. [மூவுலகுக்கும் நாதனே] - குணஹீனனானாலும் விடவொண்ணாத ஸம்பந்தஞ் சொல்லுகிறது. [பரமா] - ஸம்பந்தமாத்ரமேயாய், மேன்மை யளவுபட்டிருக்குமோவென்னில்; - ஸர்வாதிகனாயிருக்கும். மேன்மையாலே கிட்டவொண்ணாதா யிருக்குமோவென்ன, - [தண்வேங்கடமேகின்றாய்] - ஶ்ரமஹரமான திருமலையிலே வந்து ஸுலபனானவனே. [தண்துழாயித்யாதி] - என்னோட்டைக் கலவியாலே குளிர்ந்து அதிபரிமளிதமான திருத்துழாய்மாலையாலே யலங்க்ருதனாய், செய்ந்நன்றியாய்த்தச் செல்வனாய், பிடித்துமோந்த இலைத்தொடையும் தானுமாயிருக்கிறபடி.

ஈடு.—பத்தாம்பாட்டு. நாம் போகாதொழிகிறோம்; நீர் நம்மைவிடாதொழிய வேணுமேயென்ன, - நீபண்ணின உபகாரங்களைக் கண்டுவைத்து விட ஸம்பாவனையுண்டோ? என்கிறார் காலத்ரயத்திலும் ஸர்வவிதபந்துவுமான உன்னை விட ஸம்பாவனையில்லை யென்கிறார்.

[போகின்றஇத்யாதி] - காலத்ரயத்திலும், பரிவுடைய தாய் செய்வதுஞ்செய்து, ஹிதகாமனான தமப்பன் செய்வதுஞ்செய்து, "ஸபித்ராஸபரித்யக்த:" (ஸபித்ராசபரித்யக்த:) என்று - அவர்கள் விடுமளவிலும், தான் தனக்குப்பார்க்கும் ஹிதமும் பார்க்கும்படி ஸர்வப்ரகாரத்தாலும் ப்ராப்தனுமாய், உபகாரகனுமானஉன்னை, உபகாரஸ்ம்ருதியையுடைய நான் கிட்டப்பெற்றுவைத்து, விடஸம்பாவனையுண்டோ? [பாகின்றஇத்யாதி] - "விதித:" (விதித:) என்கிறபடியே சத்ருகோஷ்டியிலும் ப்ரஸித்தமாம்படி பரம்பியிருப்பதாய் ஸ்வாபாவிகமான கல்யாணகுணங்களை யுடையையாய், த்ரைலோக்யத்துக்கும் நிர்வாஹகனானவனே! [பரமா] - குணங்களுக்கும் ரக்ஷணத்துக்கும் உன்னையெண்ணினால்

ப்ர.—(போகின்றவித்யாதி) (உயிராகின்றாய்) - ஸுந்தரகாண்டே அஷ்டத்ரிம்சே. "ஸபித்ராஸபரித்யக்தஸ்ஸுரைஸ்ச ஸமஹர்ஷிபி:| த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ சரணம் கத: || ௩௩ || ஸ தம் நிபதிதம் பூமௌ சரண்ய: சரணாகதம் | வதார்ஹமபி காகுத்ஸ்த: க்ருபயா பர்யபாலயத் ||௩௪||"

தத்ரைகவிம்சே ராவணம் ப்ரதி ஸீதா, "விதித: ஸ ஹி தர்மஜ்ஞ: சரணாகதவத்ஸல:|| தேந மைத்ரீ பவது தே யதி ஜீவிதுமிச்சஸி" | உo||.

பத்தாம்பாட்டு - போகின்ற இத்யாதி. 'போகின்றகாலங்கள்' தொடங்கி, 'விடுவேனோ' என்னுமளவுங் கடாக்ஷித்து அவதாரிகை - நாம் - இத்யாதி. 'தாய்தந்தை' என்கிறவிடத்திலே - உபகாரகத்வமும், பந்துத்வமுந் தோன்றுகிறது; ததுபயாநுகுணமாக அவதாரிகாத்வயமாஹ - நீ பண்ணின உபகாரங்களை இத்யாதிவாக்யத்வயேந.

போகின்ற - வர்த்தமாநமாயும், போய-பூதமாயும், போது - ஆகாமியாயுமுள்ள காலங்களென்றபடி. சகாரம்-அநுக்தஸமுச்சயமாய், மாத்ராபித்யக்த: என்றபடியாக்கி-அவர்கள்விடுமளவிலும்என்றது. தாய்தந்தையர்களுக்கு ப்ராப்தியும் உபகாரகத்வமு முண்டாகையாலே-ப்ராப்தனுமாயுபகாரகனுமான உன்னை என்கிறது. 'போகின்ற' இத்யாதிக்கு - வர்த்தமாநபூதாகாமியான காலத்ரயத்திலும் தாயுந்தந்தையும் தன்னுத்மாவு மாகாநிற்கிறவனேயென்று சப்தார்த்தம். ஸபித்ராவ இதி - ஸுந்தரகாண்டே அஷ்டத்ரிம்சே, "ஸபித்ராஸபரித்யக்தஸ்ஸுரைஸ்ச ஸமஹர்ஷிபி: | த்ரீந்லோகாந்ஸம்பரிக்ரம்ய தமேவ சரணம் கத:". தத்ரைகவிம்சே ராவணம் ப்ரதி ஸீதா, "விதித: ஸ ஹி தர்மஜ்ஞ: சரணாகதவத்ஸல: | தேந மைத்ரீ பவது தே யதி ஜீவிதுமிச்சஸி". பாகின்ற - பரம்பாநிற்கிற. தொன்மை - பழமையாய், அத்தால் பலிதம் - ஸ்வாபாவிகமான என்று. பரமா - பரோமாஅஸ்மாதிதி - பரம:. 'பாகின்ற தொல்புகழ் மூவுலகுக்கும் நாதனே பரமா' என்றுகூட்டி ஸாவம் - குணங்களுக்கு இத்யாதி. போகின்றகாலங்கள்

பின்னையெண்ணலாவாரில்லாதபடி ஸர்வாதிகனாயிருக்குமவனே! இப்படி ஸர்வாதிகனாயிருந்துவைத்து; என்னையடிமைகொள்ளுகைக்காக, ஶ்ரமஹரமான திருமலையிலே வந்து ஸந்நிஹிதனானவனே! உன்னை நான்அடைந்தேன் விடுவேனோ? என்று அந்வயம். [தண்டுழாய்விரைநாறுகண்ணியனே] - இவருடைய ஆர்த்தியெல்லாந் தீரும்படியாக வந்து விஷயீகரித்துத் தன்னை அநுபவிப்பித்து, 'இவர்தன்னைவிடிற் செய்வதென்' என்கிற அதிஶங்கையுந் தீர்ந்து, தோளிலிட்டமாலையும் பரிமளிதமாய், பிடித்துமோந்த இலைத்தொடைமாலையுந் தானுமாய் நின்றபடி. (௧௦)

பதினோராம்பாட்டு.

கண்ணித்தண்ணந்துழாய்முடிக் கமலத்தடம்பெருங்
கண்ணனைப் புகழ்நண்ணித்தென்குருகூர்ச் சடகோபன்மாறன்சொன்ன
எண்ணிற்சோர்விலந்தாதியாயிரத்துள் இவையுமோர்பத்திசையொடும்
பண்ணிற்பாடவல்லாரவர் கேசவன்தமரே.

ஆ.—(கண்ணி.) எம்பெருமானுடைய ஸ்வரூபரூபகுண விபூதிகளை உள்ளபடியே அநுபவித்து, அநுபவித்தபடியே சொன்ன இத்திருவாய்மொழியை இசையோடும் பண்ணிலே பாடவல்லார்க்கு, "கேசவன்தமர்" என்னும் இவ்வாகாரமல்லாத ஆகாராந்தரமில்லையென்கிறார்.

ஒ.—நிகமத்தில், இப்பத்தை இனிதாய் அநுஸந்திக்குமவர்கள் பகவத்பரிக்ரஹமாவர் என்கிறார்.

[கண்ணித் தண்ணந்துழாய்முடிக் கமலத்தடம் பெருங்கண்ணனை] - தம்மோடே கலக்கையால் அவனுக்குப்பிறந்த செவ்வியைச் சொல்லிற்று. [புகழ்நண்ணி] - அவன் தம்பக்கல் பண்ணின அபிநிவேஶகுணத்தாலே மிகவும் அவகாஹித்து. [தென்குருகூரென்றுதொடங்கி] - ஆயிரந்திருவாய்மொழியிலும் எம்பெருமான் தம்பக்கல் பண்ணின வ்யாமோஹத்தில் ஒன்றுங்குறையாமே ஆழ்வாரருளிச்செய்த இப்பத்தை இசையோடும் பண்ணோடும் பாடவல்லார்களுக்கு 'கேசவன்தமர்' என்னும் ஆகாரம்போக்கி ஆகாராந்தரமில்லை.

தொடங்கி உயிராகின்றாய் - பாகின்ற தொடங்கி வேங்கடமேகின்றாய் - உன்னைநான் அடைந்தேன் விடுவேனோவென்று அருளிச்செய்தார்; அநந்தரம் ஈஶ்வரன் பரிபூர்ணமநோரதனாய், தோளில் மாலையும் பரிமளிதமாய், இலைத்தொடைமாலையும் மோந்துகொண்டிருக்கும் இருப்பை அநுபவிக்கிறார் - 'தண்டுழாய்விரைநாறுகண்ணியனேயென்று' என்று வாக்யயோஜனை. 'விரைநாறு' என்றதுக்கு ஸாவம் - இவருடைய இத்யாதி. தண்டுழாய் - கண்ணி, விரைநாறு - கண்ணியனே யித்யந்வய:. பிடித்துமோந்த - பரிமளாதிக்யத்தாலே மோந்த. இலைத்தொடை - பூப்பந்து. விரைநாறு கண்ணி - பரிமளம் ப்ரவஹிக்கிற மாலை. பாகின்ற தொடங்கி, கண்ணியனே - போகின்றகாலங்கள் தொடங்கி, உன்னை நான் அடைந்தேன் விடுவேனோ வித்யந்வயோவா. வேங்கடமேகின்றாய் - திருமலையிலே மேவிநிற்கிறவனே. மேவுகை - பொருந்தி வர்த்திக்கையும், ப்ரகாஶிக்கையும். (௧௦)

ப.—அநந்தரம்,இத்திருவாய்மொழிக்கு ஃபலமாக ஃபகவச்சேஷத்வஃஸித்தியை அருளிச்செய்கிறார்.

கண்ணி - மாலாகாரமாய், தண் - குளிர்ந்த, அம்துழாய் - திருத்துழாயாலே அலங்க்ருதமான, முடி - திருமுடியையும், கமலம் - கமலம்போலே தர்ஶநீயமாய், தடம்-விசாலமாய், பெரு - நீண்ட, கண்ணனை - திருக்கண்களையுடையவனை, புகழ் - (அவனுடைய ஆஶ்ரிதஸம்ஶ்லேஷகாரிதமான) குணப்ரதையை, நண்ணி - கிட்டி, தென்குருகூர்-அழகியதிருநகரிக்கு நிர்வாஹகராய், மாறன்-"மாறன்" என்கிற குடிப்பேரையுடைய, சடகோபன் - ஆழ்வார், சொன்ன - அருளிச்செய்த, எண் இல் - பகவதபிப்ராயத்தை, சோர்வில் - தப்பாத, அந்தாதி - அந்தாதியாய் அடைவுகுலைக்கவொண்ணாத, ஆயிரத்துள் - ஆயிரத்துள், ஓர் - அத்விதீயமான, இவைபத்தும் — இவைபத்தையும், இசையொடும் - இசையோடேகூட, பண்ணில் - பண்ணிலே, பாடவல்லாரவர் - பாடவல்லாரானவர்கள், கேசவன்தமர் - ஸர்வாதிகனான ஸர்வேஶ்வரனோடு அவ்யவஹிதஸம்பந்த யுக்தராவர்கள். எண்ணென்று - ஜ்ஞாநமாய், தத்வஜ்ஞாநத்தைத் தப்பாத ஆயிர மென்றுமாம். 'பண்ணென்று - ஸ்வரம். இசையென்று — கீதப்ரகாரம். இது - முதலடியும் மூன்றாமடியும் அறுசீராய், அயலடியும் ஈற்றடியும் நாற்சீரான ஆசிரியத்துறை.

இ.—நிகமத்தில், இப்பத்தையும் இனிதாக அநுஸந்திக்குமவர்கள் ஃபகவத்பரிக்ரஹமாவ ரென்கிறார்.

[கண்ணியித்யாதி] - 'இவர் நம்மைவிடிற்.செய்வதென்'? என்று அவனுக்கு ஓடின அதிஶங்கை தீருகையாலே பிறந்த செவ்வியைச் சொல்லுகிறது. வைத்தவளையமும் செவ்விபெற்றிருக்கக் கண்களும் விகஸிதமாயிற்று. [புகழ்நண்ணி] - அவன் தம்பக்கலிலே பண்ணின அபிநிவேஶகுணத்திலே அவகாஹித்து. [எண்ணிற் சோர்விலந்தாதி]-அவன் மநோரதத்தில் ஒன்றுங் குறையாதபடி அருளிச்செய்த. [இசையொடும் பண்ணிற் பாடவல்லார்]-இதில் அபிநிவேஶத்தாலே இசையோடும் பண்ணோடும் பாடவல்லார்கள். பண்ணாகிறது ராகம். இசையாகிறது - குருத்வலகுத்வாதிகள் தன்னிலே நெகிழ்ந்து பொருந்துகை. த்வநியிலே - நிறத்திலே யென்றபடி. [கேசவன்தமரே] - குலசரணகோத்ராதிகள் வேறின்றிக்கே 'விண்ணப்பஞ்செய்வார்கள்' என்னுமாபோலே இதுவே ப்ரகாரமாயிருக்கை.

ஈடு.—நிகமத்தில், இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லார் ஆரேனுமாகவுமாம், அவர்களுக்குக் குலசரணகோத்ராதிகள் அப்ரயோஜகம், இவ்வாகாரத்தாலே அவர்கள் ஃபகவதீய ரென்கிறார்.

நிகமம் - கண்ணி இத்யாதி. 'பண்ணிற்பாடவல்லாரவர்கேசவன்தமர்' என்றதைத்தக்கடாக்ஷித்து அவதாரிகை - நிகமத்தில் இத்யாதி. சரணஶப்தம் - ஶாகாவாசி. இவ்வாகாரத்தாலே - இத்தை அப்யஸிக்கிற ஆகாரத்தாலே.

[கண்ணிஇத்யாதி] - இப்போதாயிற்று வளையம் செவ்விபெற்றதும், முடிநற்றரித்ததும், திருக்கண்கள் விகஸிதமாயிற்றதும். [புகழ்நண்ணி] - அவன் தம்பக்கல் பண்ணின வ்யாமோஹகுணத்திலே அவகாஹித்து. [தென்குருகூர்ச்சடகோபன்மாறன்]- ஒன்று திருநாமம், ஒன்று சத்ருவர்க்கத்துக்கு ம்ருத்யுவாயுள்ளவ ரென்கிறது. [எண்ணில் சோர்விலந்தாதி] - அவன் தம்பக்கல்பண்ணின வ்யாமோஹாதிஶயத்தை அநுஸந்தித்து, அவற்றில் ஒன்றும்குறையாமே அருளிச்செய்த ஆயிரத்தில்இப்பத்து [இசையோடும்பண்ணிற்பாடவல்லார்] - இதில் அபிநிவேஶத்தாலே இசையோடும் பண்ணோடும் பாடவல்லவர்கள். பண்ணுகிறது - ராகம். இசையாகிறது - குருத்வலகுத்வாதிகள் தன்னிலே நெகிழ்ந்து பொருந்துகை. த்வநியிலே - நிறத்திலே யென்றபடி. [அவர்கேசவன்தமரே]- அவர்கள் ஆரேனுமாகவுமாம், குலசரணகோத்ராதிகள் அப்ரயோஜகம் ; "விண்ணப்பஞ் செய்வார்கள்" என்னுமாபோலே, இவ்வாகாரத்தாலே அவர்கள் பகவதீயர்.

முதற்பாட்டில்-எம்பெருமான் 'இவர் நம்மைவிடிற் செய்வதென்' என்கிற அதிஶங்கையைப் போக்கினார் ; இரண்டாம்பாட்டில் - அதுபோனபின்பு அவனுக்குப்பிறந்த புதுக்கணிப்பைச் சொன்னார் ; மூன்றாம்பாட்டில் - தமக்கு அவன் பண்ணின ஔதார்யத்தையநுஸந்தித்து வித்தரானார்; நாலாம்பாட்டில்-அவன்உமக்குப்பண்ணின ஔதார்யமேதுஎன்ன, இதரவிஷய வைராக்யமென்றார்;அஞ்சாம்பாட்டில்-இதரவிஷய வைராக்ய பூர்வகமாக ஆத்மாந்ததாஸ்யத்திலே அதிகரித்த நான் இனி ஒருநாளும் விடேனென்றார்;

கண்ணி இத்யாதி - மாலாரூபமாய்க் குளிர்ந்து அழகிய திருத்துழாயாலே அலங்க்ருதமான திருமுடியையும், கமலம்போலே தர்ஶநீயமாய் விசாலமாய் நீண்டதிருக்கண்களையு முடையவனை. "உன்னை நான் அடைந்தேன் விடுவேனோ" என்ற அநந்தரம், "கண்ணித்தண்ணந்துழாய் முடி" என்றதுக்கு ஹாவம்-இப்போதாயிற்று இத்யாதி. இப்போது-இருவரதிஶங்கையும் தீர்ந்த அநந்தரம். வளையம் - மாலை. நற்றரித்ததும் - நன்றாகவின்றதும். புகழாவதென்? என்ன- அவன் தம்பக்கல் இத்யாதி. நண்ணுகை - கிட்டுகையாய், அவகாஹித் தென்றபடி. தென்குருகூர் - அழகியதிருநகரிக்கு நிர்வாஹகரான. "சடகோபன், மாறன்[1]" என்னவேணுமோ? ஒன்று சொன்னால் அமையாதோ? என்ன - ஒன்றுதிருநாமம் இத்யாதி. "சடகோபன்" என்றது - ரூடி. "மாறன்" என்றது - யோகம். எண்ணிற்சோர்வில் - எண்ணுகை - அநுஸந்திக்கை. அநுஸந்தாநத்தில் ஒன்றுங்குறையாமே. "சடகோபன் மாறன் - எண்ணிற்சோர்விற்சொன்ன - அந்தாதியாயிரத்துள்" என்று அந்வயித்து அர்த்தம் - அவன்தம்பக்கல் இத்யாதி. அவற்றில் - வ்யாமோஹாதிஶயங்களில். அந்தாதியான 'ஆயிரத்தில்' என்று கூட்டுவது. இவையுமோர்பத்து-அத்விதீயமான இவைபத்தையும். வைதத்வம் வ்யாவர்த்தயதி - இதில் அபிநிவேசத்தாலே இத்யாதி. பண்ணிசைகள்தானேது? என்ன-பண்ணுகிறது இத்யாதி. காநம் - த்வந்யாத்மகம். குருத்வலகுத்வாதிகள்- குருத்வ லகுத்வங்களும், ஆதிசப்தத்தாலே - ஸம்யுக்தங்களும். இவைகள் தத்தத்ராகாநுகுண்யத்துக்காக, தன்னிலேநெகிழ்ந்துபொருந்துகை. சேருகை - இசையாகிற தென்றபடி. இதுக்கு நிறமென்றும் பேர். உக்தவிவரணம் - த்வநியிலே இத்யாதி. த்வநியென்றது - பண். நிறமென்றது- இசை. "இவ்வாக்யம் - ஸந்திக்தம்" என்று அருளிச்செய்வர். "அவர்" இதி ஸாமாந்ய நிர்த்தேஶஸ்ய ஹாவம் - அவர்களாரேனும் இத்யாதி. விண்ணப்பஞ்செய்வாரிதி - "இசையோடும்பண்ணிற்பாடவல்லார்" என்று - காநஸஹிதமாக இப்பத்தின் அநுஸந்தாநமே, அவர்கள் பகவதீயராகைக்கும், தந்முகேந உத்தேஶ்யராகைக்கும் ப்ரயோஜக மென்றபடி. விண்ணப்பஞ்செய்வார் - அரையர். இவ்வாகாரத்தாலே - பாடவல்லா ரென்கிற ஆகாரத்தாலே. இதில் அந்வயமுண்டான ஆகாரத்தாலே யென்னுதல். புதுக்கணிப்பு - நவீநகாந்தி. ஆத்மாந்ததாஸ்யம் - நித்யதாஸ்யம்.

ஆரும்பாட்டில்-ஆஶ்ரிதர்க்குஉதவுவாயானபின்பு எனக்கு ஒருகுறையுண்டோ? என்றார்; ஏழாம்பாட்டில் - என்னுடைய ஸம்பந்தி ஸம்பந்திகளுக்கும் ஒருகுறையில்லையென்றார்; எட்டாம்பாட்டில் - இதுக்குத் தாம்அநுஷ்டித்த உபாயம் இன்ன தென்றார்; ஒன்பதாம் பாட்டில் - "இவர்அகவாயறியவேணும்" என்று ஓரடி பேரநிற்க,இனிப் போகவொண்ணா தென்றார்; பத்தாம்பாட்டில் - நாம் போகாதொழிகிறோம், நீர்தாம் போகாதொழிய வேணுமே யென்ன, காலத்ரயத்திலும் ஸர்வவிதபந்துவுமான உன்னை விட ஸம்பாவனை யில்லை யென்றார்; இது கற்றார்க்குப் பலஞ்சொல்லித் தலைக்கட்டினார். (கக)

இன்னது - *மாறிமாறிப் பலபிறப்பும் பிறக்கை.* இவர் *அகவா யறியவேணுமென்று* ஓரடி பேரநிற்க வென்கிறஇது - இவ்விடத்திலே விஶேஷ மென்று பூர்வமேவோக்தம். பேரநிற்க - *பின்வாங்கிநிற்க.* க்ரமேண அந்வயஃ (கக)

த்ரவிடோபநிஷத்ஸங்கதி:— [illegible] ।

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி:— [illegible] ।

திருவாய்மொழி நூற்றந்தாதி.	*வைகுந்தன்வந்துகலந்ததற்பின்வாழ்மாறன்* *செய்கின்றநைச்சியத்தைச்சிந்தித்து — நைகின்ற* *தன்மைதனைக்கண்டுன்னைத்தான்விடேனென்றுரைக்க* *வன்மையடைந்தான்கேசவன்.*

ஆழ்வார்திருவடிகளே ஶரணம். எம்பெருமானார்திருவடிகளே ஶரணம். ஜீயர்திருவடிகளேஶரணம்.

ஏழாந்திருவாய்மொழி—கேசவன்தமர்: ப்ரவேசம்.

ஆ.—(கேசவன்தமர்.) என்பக்கலுள்ள அபிநிவேசத்தாலே என்னோடு ஸம்பந்தித்தாரையுங்கூட விஷயீகரித்தருளினு னென்று ப்ரஸ்துதமான பொருளை விஸ்தரிக்கிறது.

ஒ.—ஏழாந்திருவாய்மொழியில், எம்பெருமான் பண்ணின அபிநிவேசாதிசயம் ஆழ்வார் தம்பக்கல் அடங்காதே தம்மோடு பரம்பரயா ஸம்பந்தரானார்பக்கலிலுங்கூட வெள்ளமிட்டபடியைக்கண்டு, "இது என்பக்கலுண்டான விஷயீகாராதிசயமிறே" என்றுகொண்டு ப்ரீதராய்த் தம்மை இப்படி விஷயீகரிக்கைக்கீடான குணசேஷ்டிதாதிகளை யநுஸந்தித்துத் தத்ப்ரதிபாதகமான திருநாமங்களாலே பேசி யநுபவிக்கிறார்.

ப.—ஏழாந்திருவாய்மொழியில், ஸ்வஸம்பந்தி பரம்பராபர்யந்தமாக ஈச்வரன் பண்ணின பக்ஷபாதத்தாலே தம்மளவில் அவனுடைய அபிநிவேசாதிசயத்தைக் கண்டு உகந்து, ஸ்வஸாந்தாநிக விஷயத்தில் அவனுடைய ப்ரஸாதவிசேஷத்தையும், அதுக்கடியான தம்மளவில் பக்ஷபாதத்தையும், தத்கார்யமான உபகாரத்தையும், அவ்வுபகாரம் தம்குலத்திலுள்ளார்க்கும் ப்ராப்திபர்யந்தமான படியையும், இதடியாக ஈச்வரனுக்குப்பிறந்த ஔஜ்வல்யத்தையும், இதுக்கடைய ஹேதுவான க்ருபாபாரவச்யத்தையும், அதுபலிக்கைக்குஉறுப்பாக ஸத்வோத்தரமான சித்தப்ரஸாதத்தையும், பொல்லா நெஞ்சைப் போக்கின படியையும், ப்ரேமயுக்தமான நல்லநெஞ்சிலே புகுந்தபடியையும், அந்த நெஞ்சு அவனை விடாதொழிய வேணுமென்கிற அபேக்ஷையையும், இன்னின்ன படியாக அவன் தன்னை முழுக்கக்கொடுத்த ஔதார்யத்தையும், இவ்வௌதார்யாதிசயம் அதிசயிதஜ்ஞானர்க்கும் அபரிச்சேத்யமென்னுமிடத்தையும் அருளிச்செய்து, ஸ்வவிஷயத்தில் ஆதரம் ஈச்வரனுக்கு ஸம்பந்தித்ரயஸந்தாநஸம்ரக்ஷணபர்யந்தமானபடியை அவனுடைய ஆச்ரிதரக்ஷணார்த்த குணசேஷ்டிதப்ரகாசகங்களான திருத்வாதச நாமங்களோடேகூட அருளிச்செய்கிறார்.

இ.— ஏழாந்திருவாய்மொழியில், எம்பெருமான்பண்ணின அபிநிவேசாதிசயம் ஆழ்வார்தம்மளவில்பர்யவஸியாதே பரம்பரயா ஸம்பந்தரானார்பக்கலிலுங்கூட வெள்ள மிட்டபடியைக்கண்டு, இது என்பக்கல்பண்ணின விஷயீகாராதிசயமிறே என்று ப்ரீதராய், தம்மை இப்படி விஷயீகரிக்கைக்கீடான குணசேஷ்டிதாதிகளை யநுஸந்தித்து, தத்ப்ரதிபாதகமான திருத்வாதசநாமங்களாலே பேசி யநுபவிக்கிறார். திருநாமமாகிறது வைஷ்ணவசிஹ்நமாகையாலே "நான் வைஷ்ணவனானே னென்கிறார்" என்பர் எம்பார், "ஶ்ரவணாஜ்ஞாநிவெஶாணி நிவேந்த்ரஞ்ச ஸ்வயோஜநம் | க்ரியதாமேவஸ்வஸம்ஸ்காரா ஜாவெஷ்யயாதவ", "யஜேத்ஶந்ஸ்வதேதஷு", ஸ்ரீவிஷ்ணுசித்தர் ... என்று ... ஸ்ரீவிபீஷணாழ்வான், மஹாராஜர், ஸ்ரீ கண்டாகர்ணன் இவர்கள் நிதர்சநம்.

ஈ௬.—ஆடியாடியில் "வாடிவாடும்" என்கையாலே - ஒருநீர்ச்சாவியாய் வாடினபடி சொல்லிற்று; அந்த ஒருநீர்ச்சாவியானது தீரக் காரார்கருமுகில் கலந்து வர்ஷித்தபடி சொல்லிற்று - அந்தாமத்தன்பில்; அப்படி வர்ஷித்தபடியாலே "ஏழிலின்பத் திருவெள்ளம்யான்மூழ்கினன்" என்று வெள்ளமிட்டுப் பெருகினபடி சொல்லிற்று - வைகுந்தா மணிவண்ணனில்; "எமர்கீழ்மேலெழுபிறப்பும் மாசதிரிது பெற்று" என்கையாலே அவ்வெள்ளம் இருகரையும் புரண்டபடி சொல்லுகிறது - கேசவன்தமரில்.

இவர் ஆடியாடியில் பட்ட ஆர்த்திதீர வந்து கலந்தபடி சொல்லிற்று – அந்தாமத்தன்பு; அக்கலவியால் பிறந்த ப்ரீதி அவனதானபடி சொல்லிற்று - வைகுந்தாமணிவண்ணன்; அந்தப்ரீதிதான் ஆழ்வாரொருவரளவிலுமன்றிக்கே, தம்மோடு பரம்பரயா ஸம்பந்தமுடையாரளவும் வெள்ளமிட்டுப் பெருகினபடியைச் சொல்லுகிறது-இத்திருவாய்மொழியில். ஸர்வேஶ்வரன் ஆழ்வாரோடேவந்து ஸம்ஶ்லேஷித்து அத்தால்பிறந்த ப்ரீதி தம்மொருவரளவிலுமன்றிக்கே தம்மோடு பரம்பரயா ஸம்பந்தமுடையாரளவும் பெருகினபடியைக் கண்டு, "இது இவன் என்பக்கல் பண்ணின பக்ஷபாதாதிஶயமிறே" என்று இனியராய், தம்மை விஷயீகரிக்கைக்கு ஈடான குணசேஷ்டிதாதிகளை அநுஸந்தித்து அவற்றுக்கு வாசகமான திருத்வாதஶ நாமத்தாலே அவனைப்பேசி அநுபவிக்கிறார். ஸர்வேஶ்வரன் ஒருவனை விஷயீகரித்தால், அது பின்னை அவனளவிலே நில்லாதிறே. "மரணாந்தாநி வைராணி" (மரணாந்தாநிவைராணி) - ருஷிகள் குடியிருப்பை

ப்ர.— [illegible]

கேசவன்தமர் ப்ரவேஶ. ரூபகமாக ஸங்கதி-ஆடியாடியில் இதயாதி ஒருநீர்ச்சாவி-ஒருநீரில்லாத பயிர். காரார்கருமுகில் கலந்துவர்ஷித்தபடி யென்றது - "அல்லாவியுள் கலந்த காரார் கருமுகில்போல்" என்றத்தைப்பற்ற .இருகரையும் - கீழேழுபிறப்பும், ஒருகரை; மேலேழுபிறப்பும், ஒருகரை.

முக்யஸங்கதிமாஹ-இவராடியாடியில் இத்யாதி. உத்தரார்த்தவிவரணம்-ஸர்வேஶ்வரன் இத்யாதி. "எமர்கீழ்மே லெழுபிறப்பும்" என்றத்தைப் பற்ற - ஸம்பந்தமுடையாரளவும் என்றது. இனியராய் - ப்ரீதராய். ஆழ்வாரை விஷயீகரித்தால் ஸம்பந்திஸம்பந்திபர்யந்தம் விஷயீகரிப்பானென்? என்ன - ஸர்வேஶ்வரனொருவனை இத்யாதி. பகவத்விஷயீகாரம் ஸம்பந்திஸம்பந்திகளளவுஞ் செல்லுமென்கைக்கு நாலுஉதாஹரணங் காட்டுகிறார்-மரணாந்தாநி இத்யாதி-யுத்தகாண்டே சதுர்த்தஶஸர்கத்தமேவிபீஷணம்ப்ரதி ராம:,"மரணாந்தாநி வைராணி நிவ்ருத்தம் ந: ப்ரயோஜநம் | க்ரியதாமஸ்ய ஸம்ஸ்காரோ மமாப்யேஷ யதா தவ". ராவணவிஷயத்தில் நம்முடைய வைரங்கள் ராவணன் மரணாந்தங்களென்று அர்த்தமன்று; கிந்து, நம்முடைய விஷயத்தில் ராவணன்பண்ணின வைரங்கள் ராவணன் மரணாந்தங்களென்று வ்யாக்யாநம்பண்ணுகிறார் - ருஷிகள்

யழித்து, மைதிலியைப் பிரித்து, நம்உயிர்நிலையிலே நலிந்தாற்போலே ஸ்ரீ ஜடாயுமஹாராஜரை நலிந்து, இவையெல்லாம் செய்யமாட்டானே இவன் இனி. "நிர்வ்ருத்தம்ந:ப்ரயோஜநம்" (நிர்வ்ருத்தம்ந:ப்ரயோஜநம்) - இவன் ஜீவிக்கிறநாளிலே "நாம்செய்யும் நன்மை இவன் விலக்காதொழிவதுகாண்" என்றிருந்தோம்; அது அந்நாளில் பெற்றிலோம்; நாம்தேடியிருந்ததுமுந்துறமுன்னம்ஸித்திக்கப்பெற்றோமிறே. "க்ரியதாமஸ்யஸம்ஸ்கார:" (க்ரியதாமஸ்யஸம்ஸ்கார:)-இவன் நாம்செய்யும் நன்மை விலக்காதானுனவளவுபிறந்த இன்றும் இழக்கவேணுமோ? வேண்டுவன செய்யப்பாரும். "மமாப்யேஷயதாதவ" (மமாப்யேஷயதாதவ) - நீர் இரய்த்திருந்தீராகில் கூடற்றோடக்குடையாரிலே ஒருவன் செய்யுமித்தனையன்றோ? நாம் இவனுக்கு வேண்டுவனசெய்ய, நீர் பின்னைக் கடக்க நில்லீ ரென்றாரிறே. ஸ்ரீவிபீஷணாழ்வான்பக்கல் ஓரம் ராவணனளவுஞ் சென்றதிறே. 'மஹாராஜர்க்கு சத்ரு' என்று வாலியை நிரஸித்துவைத்து, மஹாராஜர் கண்ணநீர்

ந்ருஶம்ஸஜதிரோம் ராவேக்ஷ்ய த்ரிநேஜாஹவி ॥ ௯௬ ॥ ஶ்ருத்வா தஸ்யாஶுணாநு ஸ
பேவக்ஷ்ய த்ரிஸத்யதம் வசந: । தத்ஸ்வாவர்பஸ்ரேதா ராமோயமேஷ்யதாம்
வர: ॥ ௯௭ ॥ விபீஷணவசோ வசநம் வாக்யஜ்ஞோ வாக்யகோவிதம் । தவாபிஸேஸ்ரயம்
காயம் ஸுத்ஹாவாஜ்ஞ்ஜேயம் ॥ ௯௮ ॥ ஸவஶ்யஜ்ஞக்ஷம் வாசேத்யா யோகஸ்ம ராக்ஷஸே
ஶ்வர । ஸயதிநா த்ரஸம்யக்த: காமம் கேஷதிஶாவர: ॥ ௯௯ ॥ தேஜஸ்வீபலவா
ஞ்சூரஸ்ஸஜ்ஞோஜேஷ்வநித்யஶ: । ஶதக்ரதுர்மஹேந்த்ரேவேஶ்ருயதே நவ
ராஜித: ॥ ௧௦௦ ॥ மஹாத்மாபலஸம்பந்நோ ராவணோ லோகராவண: । மரணாந்தா
நிவைராணி நிவ்ருத்தம் ந: ப்ரயோஜநம் ॥ ௧௦௧ ॥ க்ரியதாமஸ்ய ஸம்ஸ்காரோ மமாப்யே
ஷயதாதவ । த்வத்ஸகாஶாந்மஹாபாஹோ ஸம்ஸ்காரம் விதிபூர்வகம் ॥ ௧௦௨ ॥ க்ஷிப்ர
மர்ஹதி யஜ்ஞ்ஜகம் யஶோபாக்விஷ்யஸி । ராகவஸ்யவச: ஶ்ருத்வா த்வராமாணோவிபீ
ஷண: । ॥ ௧௦௩ ॥ ஸம்ஸ்காரேணாநுரூபேண யோஜயாமாஸராவணம் ॥ ௧௦௩ ॥"

கிஷ்கிந்தாகாண்டே சதுர்விம்ஶே ஸர்கே, "ஜநேத்ரவீர
தஸ்யாவபத்ரீரஸ்ருத்வாவசோவாலிஜவந்த்யஜஸ்ய । ஸஞ்ஜாதபாஷ்ப: பரவீர
ஹந்தா ராமோமுஹூர்த்தம் விமநாபபூவ ॥ ௨௪ ॥

இத்யாதி. நாட்டார் சொல்லுகிறபடி யன்றிக்கே, இப்படி வைரங்களை ராவணனிஷ்டமாக வ்யாக்யாநம்பண்ணுகிறார் - "ஸஞ்ஜாதபாஷ்ப:" என்னும்படியான குணதிக்யத்தைப்பற்ற. உயிர்நிலை-மர்மஸ்தாநம். இவையெல்லாம் என்று பலவாகச்சொன்னது - "வைராணி" என்கிற பஹுவசநத்தைப்பற்ற. நிவ்ருத்தம் ந:ப்ரயோஜநம் - ஸீதாவாப்திரூபம் ந:ப்ரயோஜநம் நிவ்ருத்தம் என்று சொல்லுவர்கள்; தந்நேத்யர்த்தவிசேஷமாஹ - இவன்ஜீவிக்கிற இத்யாதி-இப்படிவ்யாக்யாநம்பண்ணிற்று - "யதிவா ராவணஸ்ஸ்வயம்" இத்யாதியைக் கடாக்ஷித்து. நாம்தேடியிருந்தது - அப்ரதிஷேதம். விலக்காதொழிவதுகாண் - விலக்காதொழிவதொன்றே. விலக்காதான்-ப்ரதிஷேதியாதான். ஏஷ:-ராவணஸ்தவயதா, மமாபிதயாபூத: என்றபடி. தூடல்தோடக்குடையாரிலேயிதி-"ராக்ஷஸாநாம்பலாபலம்" என்று - இவனை ப்ராதாவாகச்சொல்லுகையாலே, இவனுடைய ப்ராதாவானபோதே தமக்கும் ப்ராதா ராவணனென்கை ஸித்தமிறே; அத்தைப்பற்றச் சொல்லுகிறதென்று கருத்து. இஶ்ஶ்லோகத்தால் பலிதமர்த்தமாஹ-ஸ்ரீவிபீஷணாழ்வான் இத்யாதி. ஓரம்-பக்ஷபாதம். இந்த வாக்கியத்தினடியிலே இப்படி என்று அத்யாஹார்யம். உதாஹரணாந்தரம் -மஹாராஜர்க்கு இத்யாதி. கிஷ்கிந்தாகாண்டே, சதுர்விம்ஶே,

பொறுக்கமாட்டாதே "ஸஞ்ஜாதபாஷ்ப:" (ஸஞ்ஜாதபாஷ்ப:) என்று தாமும் கண்ணநீர் விழவிட்டாரிறே. "தர்மே மநஶ்ச தே பத்ர" (தர்மேமநஶ்சதேபத்ர) - ஸ்ரீமாலாகாரர்பக்கல் விஷயீகாரம் அவர் ஸந்தாநத்தளவும் சென்றதிறே. ஸ்ரீகண்டாகர்ணன்பக்கல் பண்ணின விஷயீகாரம் அவன் தம்பியளவுஞ் சென்று, "நீ அவனுக்கு நல்லையாகில் அவன் முன்னாகப்போ" என்று அருளிச்செய்தானிறே. எம்பார் இத்திருவாய்மொழி அருளிச்

ப்ர.—(அவர் ஸந்தாநத்தளவுஞ்சென்றதிறே) - விஷ்ணுபுராணே பஞ்சமாம்ஶே, "ஸங்க்ருஷ்டவதநாவேதௌ ஸ்நேஹாத் ஸஞ்ஜாதபாஷ்பௌ | தாநந்தரம் ப்ராப்ய ததோஹமிதி ப்ராஹ ॥ உகூ ॥ தர்மே மநஶ்ச தே பத்ர ஸர்வகாலம் பவிஷ்யதி | யுஷ்மத்ஸந்ததிஜாதாநாம் தீர்கமாயுர்பவிஷ்யதி ॥ உஎ ॥ நோபஸர்காதிகம் தோஷம் யுஷ்மத்ஸந்ததி ஸம்பவ: | ப்ராப்ஸ்யதி ஸுமஹாபாக யாவத்ஸூர்யோ தரிஷ்யதி ॥ உஅ ॥"

(அவன் தம்பியளவுஞ் சென்று) - ஸ்ரீஹரிவம்ஶே ஷட்பஞ்சாஶத்தமே கண்டாகர்ணம்ப்ரதி க்ருஷ்ண:, "தத: ப்ரீதமநா தேவ ப்ராதரம் தே விமோசயே ॥ உகூ ॥ ஸக்ஷ்யேயம் ஸஹ பாவேந ஸாயுஜ்யம் ப்ராப்ஸ்யதி | தாவத்ஸம்ஸாரஸாகரம் பாரம் யாஸ்யாமி ॥ உசு ॥ நமே ஶக்ய: தவ ஸம்பூர்ணம் தாதும் ஜந்மாந்தரம் | யோயம் ப்ராதா தவாஸ்ய ப்ராப்தோ ஸ்தோ ஹரே ॥ உரு ॥ ஸர்வம் ததஸ்ய ஸம்பத்ஸ்யதே ஸாந்நித்யம் தே | ஊர்த்தவம் ஸ்வர்க்கம் ஸமீபம் ஸர்வகாமாந் வாரணா ॥ உகூ ॥"

"ஸங்க்ருஷ்டவதநாவேதௌ வீரஸ்யாஸ்ய ஜநார்தந | ஸஞ்ஜாதபாஷ்ப: ப்ரஸாதாபிமுகோ ஹரி:". தர்மஇதி-பஞ்சமேம்ஶே ஏகோநவிம்ஶே, "தர்மே மநஶ்ச தே பத்ர ஸர்வகாலம் பவிஷ்யதி | யுஷ்மத்ஸந்ததிஜாதாநாம் தீர்கமாயுர்பவிஷ்யதி". ஸ்ரீமாலாகாரர் இத்யாதி-"யுஷ்மத்ஸந்ததிஜாதாநாம்" இத்யாத்யுத்தரார்த்தத்தை உதாஹரிக்கவேண்டியிருக்க, "தர்மே மநஶ்ச தே" என்று உதாஹரித்தது-பூர்வார்த்த ஸமபிவ்யாஹாரதாத்பர்யத்தாலே உத்தரார்த்தத்தில் ஆயுஶ்ஶப்தம்-"யாவந்நாஸிகாணாந்த ஹரிஸ்மரணே தத்ஸம்ஸாரம் | தாவந்நாஸி-மணநங்கார்யம்" என்றுஶோகோக்தமான வாயு: பரமென்று வ்யஞ்ஜிப்பிக்கைக்காக. ஸ்ரீகண்டாகர்ணன் இத்யாதி - "யோயம் ப்ராதா தவாஸ்ய ப்ராப்தோ ஸ்தோ ஹரே" என்றத்தைப்பற்ற. அவன்முன்னாகப்போஎன்று - ஹரிவம்ஶே ஷட்பஞ்சாஶத்தமே கண்டாகர்ணம்ப்ரதி க்ருஷ்ண:, "ஸக்ஷ்யேயம் ஸஹபாவேந ஸாயுஜ்யம் ப்ராப்ஸ்யதி | தாவத்ஸம்ஸாரஸாகரம் பாரம் யாஸ்யாமி | நமே ஶக்ய: தவ ஸம்பூர்ணம் தாதும் ஜந்மாந்தரம்" என்கின்ற பூர்வஶ்லோகங்களும் விவக்ஷிதம். அவன்முன்னாகப்போவிதி-பரமபதஸ்ய இதிஶேஷ:. அவனைமுன்னிட்டுக்கொண்டு போவென்றபடி. குணசேஷ்டிதவாசக நாமாந்தரங்களிருக்க, திருத்வாதஶநாமத்தாலே அநுபவிக்கிறதுக்கு ஹேதும்-எம்பார்இத்யாதி. இத்தால் - உபகாரஸ்ம்ருதியாலே திருத்வாதஶநாமத்தைச்சொல்லி யநுபவிக்கையே ப்ரதாநஹேதுவாய், இதுவும் ஒருநாக்ஷத்ரீயக ப்ரயோஜநமென்று கண்டுகொள்வது.

செய்யப்புக்கால், "ஸ்ரீவைஷ்ணவனனே னென்கிறார்" என்பராம்; வைஷ்ணவத்வசிஹ்நமிறே திருத்வாதஸநாமம். ஆழ்வாருடைய நெடுமாற்கடிமையும், எம்பெருமானுடைய நெடுமாற்கடிமையும் இரண்டாயிற்று நெடுமாற்கடிமை; அதில் எம்பெருமானுடைய நெடுமாற்கடிமை இத்திருவாய்மொழி.

முதற்பாட்டு.

கேசவன்தமர் கீழ்மேலெமரேழேழுபிறப்பும்
மாசதிர்துபெற்று நம்முடைவாழ்வுவாய்க்கின்றவா!
ஈசனென்கருமாணிக்கம் என்செங்கோலக்கண்ணன்விண்ணோர்
நாயகன்எம்பிரான்எம்மான் நாராயணனாலே.

ஆ.—ஸர்வேஶ்வரனாய், நிரதிஶய ஸௌந்தர்யாதி கல்யாண குணகனாய், அயர்வறுமமரர்களதிபதியாய், எனக்கு ஸ்வாமியாயிருந்த நாராயணனாலே, ஏநகேநாபிப்ரகாரேணை ஸாக்ஷாத்வாபரம்பரயாவா என்னோடு ஸம்பந்தமுடையா ரெல்லாரும் ஸமவஷேகஹோமராானர்கள்; தத்ஸம்பத்தினாலேஹகவஷேகஹோமத்வலக்ஷணமான ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீ நமக்கு விளையும்படியே இது வென்கிறார்.

ஒ.—முதற்பாட்டில், ஸ்வஸம்பந்திகள்பக்கலிலும் எம்பெருமான் அபிநிவிஷ்டனானபடியைக் கண்டு, இதெல்லாம் என்பக்கலுண்டான விஷயீகாராதிஶயமிறே யென்று ஹ்ருஷ்டராகிறார்.

[கேசவன் தமர் கீழ்மேலெமரேழெழு பிறப்பும்]-கீழேழுபடிகாலும் மேலேழுபடிகாலும் என்னோடுஸம்பந்திகளா யிருப்பாரெல்லாம் ஹகவத்பரிக்ரஹமானார்கள்.[மாசதிர்துபெற்று] - கேசவன்தமராகிற.இப்பெருஞ்சதிரைப் பெற்று, ஆகஸ்மிக ஹகவத்ப்ரஸாதத்தைப் பெற்றெனவுமாம்.[நம்முடைவாழ்வுவாய்க்கின்றவா]-நம்முடைய இஸ்ஸம்பத்து மிகுகிறபடியென்? அவ்வழியே அயர்வறுமமரர்களைப்போலே என்னை அடிமை கொண்ட ஆஶ்ரிதவத்ஸலனான நாராயணனாலே.

ப.—முதற்பாட்டில், தம்முடைய குலத்திலுள்ளார் ஹகவதபிமாநாந்தர்க்கதரானபடியை அருளிச்செய்கிறார்.

ஈசன் -(ஸர்வஸாதாரணமான) ஸ்வாமித்வத்தை யுடையனாய், என்கருமாணிக்கம் - (அப்படியே பொதுவன்றியே) நீலரத்நம்போன்ற வடிவை எனக்குக்காட்டி; என்

"ஸ்ரீவைஷ்ணவனனே னென்கிறார்" இதி வக்துர்ஹ்ருதயம்தர்ஶயதி-வைஷ்ணவத்வசிஹ்நம் இத்யாதி. வைஷ்ணவத்வசிஹ்நமாகையாலே அவற்றையே அநுஸந்திக்கிறா ரென்றபடி. ஸம்பந்தி ஸம்பந்திகளளவும் விஷயீகரிக்கைக்கு ரஸோக்தி - ஆழ்வாருடைய இத்யாதி. நெடுமாற்கடிமை என்கிறது - ததீயபர்யந்த ப்ரேமத்தை. இந்தத் ததீயப்ரேமம் ஆழ்வார்க்கு ஸ்வரூபப்ரயுக்தம்; எம்பெருமானுக்கு வ்யாமோஹப்ரயுக்தம். இவருடைய ஸம்பந்தி ஸம்பந்திபர்யந்தமான பகவத்வ்யாமோஹம் - "செடியார்நோய்களெல்லாம்" இத்யாதியாலே கீழேசொல்லிற்றே யாகிலும், கீழ்த்திருவாய்மொழி - அதிஶங்காநிவர்த்தகபரம்: இத்திருவாய்மொழி - ஆழ்வாருடைய ஸம்பந்திஸம்பந்திபர்யந்தமான பகவத்வ்யாமோஹ ப்ரதிபாதகபரமென்று கண்டுகொள்வது.

செங்கோலக் கண்ணன் - (அவ்வடிவுக்குப் பரபாகமாம்படி) சிவந்த அழகிய திருக்கண்களாலே என்னை அநுக்ரஹித்து, விண்ணோர்நாயகன் - பரமபதவாஸிகளோபாதி அங்கீகரித்து, எம்பிரான் - என்னை அநுபவிப்பித்து, எம்மான் - எனக்கு நாதபூதனான உறவடியாக, நாராயணனாலே - (நிரதிசயவாத்ஸல்ய யுக்தனான) நாராயணனாலே, கீழ்மேலேழுபிறப்பும் - கீழ்மேலேழுபிறப்பும், கேசவன் தமர் - (ஸர்வாதிகனான) கேசவன் தமரான, எமர் - எமரானவர்கள், இது - (நிர்ஹேதுகபகவதங்கீகாரமாகிற) இந்த, மா - பெரிய, சதிர் - சதிரை, பெற்று - பெற்று, (அத்தாலே), நம்முடை - நம்முடைய, வாழ்வு - ஸ்ரீவைஷ்ணவத்வ ஸ்ரீயானது, வாய்க்கின்றவா - வளருகிறபடியே!

இ.—முதற்பாட்டில், ஸ்வஸம்பந்திஸம்பந்திகள் பக்கலிலும் அவன் அபிநிவிஷ்டனானபடியைக்கண்டு, இதெல்லாம் என்பக்கலுண்டான விஷயீகாராதிசயத்தாலேயென்று ப்ரீதராகிறார்.

[கேசவன் தமர்] - அவனுடைய அவயவஸௌந்தர்யத்திலே தோற்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள். [எமர்கீழ்மேலேழுபிறப்பும்] - கீழேழுபடிகாலும் மேலேழுபடிகாலும் என்னோட்டை ஸம்பந்தமே ஹேதுவாகக் கேசவன்தமரானார்கள். "ஆழ்வார்பரிகரம்" என்றுயிற்று - அவன் விரும்புகிறது. "கேசவன்தமர்" என்றுயிற்று - இவர் விரும்புகிறது. [மாசதிர்இதுபெற்று] - கேசவன்தமராகிற பெருஞ்சதிரைப் பெற்றென்னுதல், "மாதவனென்றதேகொண்டு" என்றத்தைச்சொல்லுதல், "விதிசூழ்ந்ததால்" என்கிற ஆகஸ்மிக பகவத்க்ருபையைச்சொல்லுதல். [மாசதிர்] - தந்தலையாலே வந்ததாகில்றே ஸாவதியாயிருப்பது. [இதுபெற்று] - காணக்காண அவன்தலையாலே சுமக்கிறபடி. [நம்முடைவாழ்வு] - வைஷ்ணவஸம்பத்து. [வாய்க்கின்றவா] - ஊற்றுமாறாதே மேன்மேலெனப் பெருகிவருகிறபடியென்? ஆக "ஏழுபடிகால்" என்று ஓரளவில்லை, நம் மளவும் வரச்செல்லுகிறதிறே. [ஈசன்] - ஸர்வஸ்யந்தாவானவன். [என்கருமாணிக்கமென் செங்கோலக்கண்ணன்] - அநத ஸாமாந்யலக்ஷணமன்றிக்கே, தன்வடிவழகை எனக்கு முற்றூட்டாக்கித் திருக்கண்களாலே என்னை அநுக்ரஹித்தவன். ஆரைப்போலே என்னில், - [விண்ணோர் நாயகனெம்பிரான்] - நித்யஸூரிகளை அநுபவிப்பிக்குமாபோலே என்னை அநுபவிப்பித்தவன். [எம்மான்] - அவர்களைப்போலே என்னை அநுக்ரஹித்தவன். [நாராயணனாலே] - தன்மேன்மைபாராதே ஸர்வாந்தர்யாமியாய்க்கொண்டு இவற்றின் ஸத்தையை நோக்கிநிற்கும் வத்ஸலனானவனாலே நாராயணனாலே- எமர் - கீழ்மேலேழுபிறப்பும் - கேசவன் தமரானார்கள்; மாசதிரிதுபெற்று நம்முடைவாழ்வுவாய்க்கின்றவா. நாராயணனாலேயென்கிறவிடம் - மாசதிரினுடைய உபபாதகம்.

ஈடு.—முதற்பாட்டு ஸம்பந்தி ஸம்பந்திகள் பக்கலிலும் ஸ்ர்வேஸ்வரன் அபிநிவிஷ்டனானபடியைக் கண்டு, இதெல்லாம் என்பக்கலுண்டான விஷயீகாராதிசயமிறே என்று ஹ்ருஷ்டராகிறார்.

முதற்பாட்டு - கேசவன்தமர் இத்யாதி. "ஸம்பந்தி ஸம்பந்தி ..." இத்யாதிப்படியே ப்ரஸம்ஸாயாம்மதுப்ப்ரத்யய: ; "கேசவ ..." இதி கேசாத்பரம்மதுபோ விகல்பேந வகாராதேசம்வந்து, கேசவ: என்று கிடக்கிறதென்று ஹ்ருதிநிதாயாஹ - ப்ரஸஸ்தகேசனான இத்யாதி. "...." இதி] பஞ்சமேட்பே ஷோடஸே நாரதநிர்வசநம்

[கேசவன்தமர்]-ப்ரஶஸ்தகேஶனான நிலையிலே தோற்றிருக்குமவர்க ளென்னுதல்; விரோதி நிரஸநஶீலதையிலே தோற்றிருக்கு மவர்க ளென்னுதல்; "தஸ்மாத்கேஶவநாமவாந்" (தஸ்மாத்கேஶவநாமவான்) என்கிறபடியே, ஸர்வநிர்வாஹகனான நிலையிலே தோற்றிருக்குமவர்க ளென்னுதல் "ஸர்வேஶ்வரனுடையார்" என்றுமாயிற்று - ஆழ்வார் இவர்களை விரும்புகிறது எமர் என்கிற ஆழ்வாருடைய ஸம்பந்தங் கொண்டாயிற்று - அவன் இவர்களை விரும்புகிறது இத்தால்-ஒரு வைஷ்ணவாபிமாநமே வேண்டுவது அவன்விஷயீகரிக்கைக் கென்றபடி. [கேசவன்தமர்]-அவனுடைய அவயவ ஸௌந்தர்யத்திலே தோற்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள். [கீழ்மேல் இத்யாதி] - எமர் கீழ்மேலேழேழுபிறப்பும் கேசவன்தமராணர்கள். "ஏகாஹமபி கௌந்தேய பூமிஸ்த்தமுதகம்குரு । குலம்தாரயதே தாத ஸப்தஸப்தச ஸப்தச" (ஏகாஹமபிகௌந்தேய பூமிஸ்த்தமுதகம்குரு । குலம்தாரயதேதாத ஸப்தஸப்தசஸப்தச) என்கிறபடியே, "தஶபூர்வாந் தஶாபராநாத்மாநஞ்ச" (தஶபூர்வாந்தஶாபராநாத்மாநஞ்ச). [மாசதி

ப்ர —(கேசவன்) ஸ்வஸம்பந்தேந கேஶிவதாநந்தரோநாரத:, "யஸ்மாத்த்வயைவ துஷ்டாத்மா ஹத: கேஶீ ஜநார்த்தந । தஸ்மாத்கேஶவநாம்நா த்வம் லோகே ஜ்ஞேயோ பவிஷ்யஸி ॥உ௬॥ இதிவா (கேசவன) ஶ்ரீஹரிவம்ஶே கைலாஸயாத்ராயாம் கைலாஸஶிகரே தபஶ்சரந்தம் ஶ்ரீக்ருஷ்ணம் ப்ரதி ருத்ரஸ்தோத்ரே, "க இதி ப்ரஹ்மணோ நாம ஈஶோஹம் ஸர்வதேஹிநாம் । ஆவாம் தவாங்கஸம்பூதௌ தஸ்மாத்கேஶவநாமவாந் ॥ சஎ ॥"

ப்ர.—மோக்ஷாய நயதே, "ப்ராஹ்மணாந் ஸமப்யர்ச்ய ஶிரஸாவந்த்ய பாதயோ: ப்ரதக்ஷிணம் க்ருத்வா தஶபூர்வாந் தஶாபராநாத்மாநம் ச ஏகவிம்ஶதிம் வம்ஶம் பாவயதி நவம் ப்ராப்ய நரகாத்…" [illegible]

ஸ்ருதிஸித்தமாஹ - விரோதி இத்யாதி. இவ்விடத்திலே, கேசவஶப்தார்த்தமாக, "ஹத்வா து ஸமரே கேஶிநம் ஶ்ருத்வா…" இதிவத், "…" என்கிற டீகாஸர்வஸ்வ வாக்யத்தை ஸ்மரிப்பது. தஸ்மாத் கேசவநாமவாநிதி-ஹரிவம்ஶே கைலாஸயாத்ராயா மேகஷஷ்டி தமே க்ருஷ்ணம்ப்ரதி ருத்ரஸ்தோத்ரே, "க இதி ப்ரஹ்மணோ நாம ஈஶோஹம் ஸர்வதேஹிநாம் । ஆவாம் தவாங்கஸம்பூதௌ தஸ்மாத்கேஶவநாமவாந்". "கேசவன்தமர்கீழ்மேலெமர்" இதி பாடக்ரமம், 'எமர் கேசவன்தமராணர்கள்" இத்யந்வயக்ரமஞ்ச ஸ்ருதிஸித்தமாஹ - ஸர்வேஶ்வரனுடையார் இத்யாதி. "கீழில்திருவாய்மொழியிலே, 'எமர்கீழ்மேலெழுபிறப்பும்' என்று - இவர்ஸம்பந்தங் கொண்டு ஈஶ்வரன் விரும்புகையாலே, அந்யோந்யாஶ்ரயமில்லை" என்று அருளிச்செய்வர். பலிதம் - இத்தால்இத்யாதி. மூன்றாம் அர்த்தவிவரணம் - அவனுடைய இத்யாதி. "கீழ்மேலேழேழு பிறப்பும்" என்றது - நடுவேழுபிறப்புகளும் உபலக்ஷணம் இதி ஸ்ருதிஸித்த ப்ரமாணத்வயமாஹ-ஏகாஹமபி இத்யாதி. யத்வா, ஒருவன் அபிமாநங்கொண்டு எல்லாரும் உஜ்ஜீவிக்கக்கூடுமோ? என்ன-ஏகாஹமபி இத்யாதி யோஜநா. இத்தால்-ஸாமாந்யதர்மத்துக்கு இப்படி கண்டால், வைஷ்ணவாபிமாநத்துக்குச் சொல்லவேண்டாவென்றபடி. மஹாபாரதே தர்மஸம்வாதம் ப்ரதி பீஷ்மோக்தம்-'ஏகாஹமபி' இத்யாதி. "தஶபூர்வாந் தஶாபராநாத்மாநம் ச ஏகவிம்ஶதிம்…

ரிதுபெற்று] - "விதிசூழ்ந்ததால்" என்கிற ஆகஸ்மிகஸுக்ருதத்தாலேயாதல், "மாதவனேன் றதேகொண்டு" என்கிற உக்திமாத்ரத்தையாதல், தாம்பெற்றபேற்றைத் தம்மோடு ஸம்பந்தமுடையாரும் பெறும்படியான பேற்றைப் பெற்றேனென்னுதல். [மாசதிரிதுபெற்று] - பெருஞ்சதிரைப்பெற்று. தடக்கைச்சதுரனைப்பெற்று என்றபடி. தந்தலையாலே வந்ததாகிலிறே ஸாவதியாயிருப்பது. [இதுபெற்று] - காணக்காண அவன் ப்ரஸாவஹிக்கிறபடி. [நம்முடைவாழ்வு வாய்க்கின்றவா] - நம்மோடு ஸம்பந்தமுடையாரையும் அவன் இப்படி விஷயீகரிக்கிறது நம்முடைய ஸம்பத்திறே. [நம்முடைவாழ்வு]-ஸ்ரீவைஷ்ணவ ஸம்பத்து. [வாய்க்கின்றவா] - ஊற்றுமாறுதே மேன்மேலெனப்பெருகி வருகிறபடி. ஏழ்படிகா லென்றதுதான் ஓரளவில்லை, இன்று நம்மளவும் வரச்செல்லுகிறதிறே இப்படி விஷயீகரிக்கைக்கு ஹேதுவேன்? என்னில்,-[ஈசன்] - வகுத்த ஸ்வாமியாகையாலே. [என்கருமாணிக்க மேன்செங்கோலக்கண்ணன்] - கண்ணழகாலே என்னை அநந்யார்ஹனாக்கி, தன்வடிவழகை என்னை அநுபவிப்பித்தவன் [விண்ணோர்நாயகனெம்பிரானெம்மான்] – நித்யஸூரிகளைத் தோற்பிக்குமாபோலே என்னை வடிவழகைக் காட்டித் தோற்பித்து, என்னை அவ்வடிவழகையநுபவிப்பித்த உபகாரகன் [நாராயணனாலே] – தன்மேன்மையைப் பாராதே உகவாதாரையும் விடமாட்டாதபடி வத்ஸலனுயுள்ளவனாலே. ஸமிதைபாதி ஸாவித்ரிப்ராதியாக வன்றிக்கே, அவனுடைய நிர்ஹேதுக

வ்ஃவ-த்ராயஜெ்யொகோவிமயாஂவ்ரஜெஜஃ | ஶஸீஂவாவஶயெக்ஷந்ராஂநீமஂவாவ்ரஷ ஃ-த்ரஜெஃ | மஹாஷிதாயஷ்-வணெ-்ந வெஶ்-தமாஜ்-ிமமக்ஷணஃ | கக-ஃவெஶ தக வ-வொரஃவ்ரணஷவெ நீமஜ த்ராஹஹமவாதெ்னாயாயநஃ". சு.

ஜீகுவ-நாதி" இதி போதாயநதர்மே. இவ்விடத்தில் - "சூஷோடியஷிவிதாஃவ்ரண்ய த்யஷிவிதர்ஷோஃ | வெஷ்வெ நஃக-மெஜாதஷநஷஷாயிஷ்ர்து" என்கிற ஶ்லோகம் அநுஸந்தேயம். இது - "மாசதிர்பெற்று" இத்யர்வயஃ. "இது" என்று - வக்ஷ்யமாண கருபாதிபராமர்ஶியாதல், கீழுக்தமான "எமர்கீழ்மேலேழெழுபிறப்பும் - கேசவன்தமரானர்கள்" என்றத்தைப் பராமர்ஶிக்கிறதாதல். விதிசூழ்ந்ததால் இத்யாதியிற் சொல்லப்படுகிற அர்த்தத்ரயத்தில், முந்தின அர்த்தத்வயம்-உபாயபரம்; த்ருதீயார்த்தம் - பலபரம். உபாயபரமான முந்தின அர்த்தத்வயத்தில் 'மா' என்றதுக்கு அர்த்தம்-பெருஞ்சதிரை இத்யாதி. இது - நாலாமர்த்தமாதல். இப்போது, அநந்தரார்த்தத்வயமும்-பலபரம். இந்தப் பெரிய சதிரைப்பெற்று இதி சப்தார்த்தஃ பலபரமான த்ருதீயார்த்தத்தில் "மா" என்றதுக்கு அர்த்தம் - தந்தலையாலே இத்யாதி. இந்தத்ருதீயார்த்தத்தில் - "இது" என்றதுக்குஅர்த்தம் - காணக்காண இத்யாதி. இத்தால் - "கேசவன்தமர்" என்றதின் சரமாவதியைக் காட்டினாராயிற்று. இவர்கள் கேசவன்தமரானல் தமக்கு வாழ்வானபடியென்? என்ன, நம்மோடு ஸம்பந்தம் இத்யாதி ஸம்பத்தாகச் சொல்லுகிறது எத்தை? என்ன; அருளிச்செய்கிறார் - ஸ்ரீவைஷ்ணவஸம்பத்து என்று. வாழ்வு - ஸம்பத்து: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ யென்றபடி. "வாய்க்கின்ற" என்கிற வர்த்தமாநார்த்தம் - ஊற்றுமாறுதே இத்யாதி. வாய்க்கின்றவா - வளர்கிறபடியென்? இதி சப்தார்த்தஃ. ஆனால் "கீழ்மேலேழெழுபிறப்பும்" என்றத்தோடு விரோதியாதோ? என்ன, அது உபலக்ஷணமென்கிறார்-ஏழ்படிகால் இத்யாதி. ஓரளவு - ஒருமர்யாதை. "விண்ணோர்நாயகன் எம்மான் - எம்பிரான்" என்று அந்வயித்து, "என்கருமாணிக்கமென்செங்கோலக்கண்ணன் விண்ணோர்நாயகன்" என்றவநந்தரம் "எம்மானெம்பிரான்" என்றதுக்கு பாவம் - நித்யஸூரிகளை இத்யாதி. வத்ஸலனுயுள்ளவனாலே யென்றது - பஹுவ்ரீஹ்யர்த்தம். ஏகாரத்துக்கு பாவம்-ஸமிதை இத்யாதி. ஸமிதை பாதி ஸாவித்ரிபாதியாவது-உபாகர

க்ருபையாலே. நாராயணனாலே - எமர் - கீழ்மேலேழேழுபிறப்பும் - கேசவன் தமரா னார்கள், மாசதிரிதுபெற்று நம்முடைவாழ்வு வாய்க்கின்றவா! நாராயணனாலே என்ற விடம் மாசதிரினுடைய உபபாதநம். (க)

இரண்டாம்பாட்டு.

நாரணன்முழுவேழுலகுக்கும்நாதன் வேதமயன்
காரணம்கிரிசை கருமமிவைமுதல்வனெந்தை
சீரணங்கமரர்பிறர்பலரும் தொழுதேத்தநின்று
வாரணத்தைமருப்போசித்தபிரான் என்மாதவனே.

ஆ.—(நாரணன்.) "ஈசன்" என்று ப்ரஸ்துதமான ஈஶ்வரத்வத்தை உப பாதிக்கிறது.

ஸர்வாந்தராத்மபூதனாய், ஸர்வலோகேஶ்வரனாய், ஸர்வவேதவேத்யனாய், கார ணத்துக்கும் க்ரியைக்கும் கார்யத்துக்கும் நிர்வாஹகனாயிருந்துவைத்து, எனக்குபோக்ய மாகைக்காக, பெரியபிராட்டியாரும் அயர்வறு மமரர்களும் தொழுதேத்த, அதனாலே ஸம்வர்த்திதபலனாய்நின்று வாரணத்தை மருப்பொசித்த பிரான் மாதவனாலே எமரே ழேழுபிறப்பும் கேசவன்தமராயிற்று எனகிறார்.

ஒ.—இரண்டாம்பாட்டில்,ஸர்வலோகங்களுக்கும் ஸ்வாமியாய்க்ரியாஸாதநம் க்ரியை தத்ஸாத்யமானகார்யம் இவற்றுக்கு நிர்வாஹகனுமாய் இப்படி வேதத்திலே மிக வும் ப்ரதிபாதிக்கப்படுகிறவன் க்ருஷ்ணனாய்வந்து திருவவதாரம்பண்ணி, சீர்மையை

மத்தின் மற்றைநாள் ப்ரஹ்மசாரிகளுக்கு ஆயிரம்ஸமிதையிடுதல், இல்லாவிட்டால் ஆயிரம் காயத்ரி ஜபம்பண்ணுதல் செய்யாதே, ஐந்நூறுஸமிதையும் ஐந்நூறுகாயத்ரியுமாகப் பண்ணலாகா தென்ற படி. உபாயோபேயபரநிர்வாஹத்வயத்துக்கும் ஸாதாரணமான யோஜனையை அருளிச்செய்கிறார்- நாராயணனாலே இத்யாதி. நாராயணனாலே யென்கிற இது - தத்விஶேஷணங்களான "ஈசன்" இத்யாதிபதங்களுக்குமுபலக்ஷணம். "மாசதிர்" என்றது - உபாயபரமான பக்ஷத்தில், "நாரா யணனாலே" என்றது புநருக்தமன்றோவென்ன, நாராயணனாலேயென்றவிடம்இத்யாதி. மாசதிரி னுடைய உபபாதநமாவது - நாராயணசப்தத்துக்கு - பஹுவ்ரீஹியாலே, வாத்ஸல்யஞ்சொல்லு கையாலே, "மாசதிர்" என்று - க்ருபாதிகளைச் சொன்ன பக்ஷத்தில், மாசதிருக்கு அது உபபாதகமாயிருக்கு மென்றபடி. இந்தப்பக்ஷத்தில், "நாராயணனாலே" என்கிற த்ருதீயை - ப்ரதமார்த்தகம். நாராயணனாகிற மாசதிரைப்பெற் றென்றபடி. ஆக, "மாசதிரிது" என்ற தின் - உபாயபரமான மூந்தின அர்த்தத்தினுடைய உபபாதநம் - "நாராயணனாலே" என்கிற விடம்; பலபரமான த்விதீயார்த்தத்தினுடைய உபபாதநம் - "எமர்கீழ்மேலேழேழுபிறப்பும் கேச வன்தமரானார்கள்" என்கிறவிடம் கீழ்மேலேழேழுபிறப்பிலுமுண்டான எமரென்றபடி. உபாய பரமான பக்ஷத்தில், "ஈசனித்யாரப்ய, நாராயணனாகிற - மாசதிர்துபெற்று - கீழ்மேலேழேழு பிறப்பிலு முண்டான எமர் - கேசவன்தமரானார்கள்; நம்முடைவாழ்வு வாய்க்கின்றவா" இத்யந் வயః. பலபரமானபக்ஷத்தில், "ஈசன்தொடங்கி, நாராயணனாலே-கீழ்மேலேழேழுபிறப்பிலு முண் டான எமர் கேசவன்தமரானார்கள்; மாசதிரிதுபெற்று நம்முடைவாழ்வு வாய்க்கின்றவா!" இத்யந்வயః.

(க)

யுடையராய் அப்ராக்ருதஸ்வஹாவரான நித்யஸூரிகளும் மற்றும் பலரும் தொழுது ஏத்தும்படி நின்று குவலயாபீடத்தின் கொம்பைப் பறிக்கையாகிற மஹோபகாரத்தைப்பண்ணுவதுஞ்செய்து இப்படிகளாலே "நாராயணன்" என்னுந்திருநாமத்தை யுடையனுமாய் என்பக்கலிலே ப்ரவணனான ஸ்ரியஃபதி என்னை அடிமைகொண்டான். "சீரணங்கென்று- பெரியபிராட்டியார்" என்றுஞ் சொல்லுவர்.

ப.—அநந்தரம், கீழுக்தமான நாராயணஸப்தார்த்தத்தை உபபாதியாநின்றுகொண்டு ஸ்வவிஷயபக்ஷபாதத்தை அருளிச்செய்கிறார்.

நாரணன் - நாராயணஸப்தவாச்யனாய், (அதனுடையஅர்த்தமான), முழுவேழுலகுக்கும் - ஸமஸ்தலோகத்துக்கும், நாதன் - ஸ்வாமியாய், வேதமயன் - அந்தஸப்தத்தையே ப்ரதாநமாக ப்ரதிபாதிக்கிற வேதப்ரதிபாத்யனாய், காரணம் - க்ரியாஹேது, கிரிசை - க்ரியை, கருமம் - க்ரியாபலமான கார்யம், இவை - இவற்றுக்கு, முதல்வன்-காரணபூதனாய், சீர் - குணோத்தரராய், அணங்கு - திவ்யரான, அமரர் - தேவர்களும், பிறர் - ருஷிகளும் மநுஷ்யாதிகளுமான, பலரும் - எல்லாரும், தொழுது ஏத்த - வணங்கி ஸ்தோத்ரம்பண்ணும்படியாக, நின்று - நின்று, வாரணத்தை-குவலயாபீடத்தை, மருப்பு ஒசித்த - கொம்பைமுறித்த, பிரான் - மஹோபகாரகனாய், என் - (இப்படிநாராயணஸப்தார்த்தங்கள் தனக்குவிபூதியானபடியை) எனக்கு ப்ரகாஸிப்பித்த,மாதவன் – ஸ்ரியஃபதியான க்ருஷ்ணன், எந்தை - என்னை அநந்யார்ஹனாக்கின சேஷி. சீரணங்கென்று - லக்ஷ்மியாகவுமாம்.

இ.—இரண்டாம்பாட்டில், ப்ரஸ்துதமான நாராயணஸப்தார்த்தத்தைச் சொல்லுகிறார்.

[நாரணன்] - அர்த்தத்தைச்சொல்லுகைக்காக ஸப்தத்தை உபாதாநம்பண்ணுகிறார். அதுக்குப்பொருளென்னென்னில், - [முழுவேழுலகுக்கும்நாத னித்யாதி] - ஸர்வலோகேஸ்வரன். [காரணம்] - க்ரியாஸாதநம், [கிரிசை] - அதடியாகவரும் க்ரியை, [கருமம்] - தத்ஸாத்யமான கார்யம், இவற்றுக்கு நிர்வாஹகனாயிருக்கை. [வேதமயன்]- இப்படி வேதப்ரதிபாத்யனானவன். [சீரணங்கித்யாதி] - குவலயாபீடத்தை நிரஸித்தாற்போலே என்விரோதியைப்போக்கின மஹோபகாரகன். சீரியராய் அப்ராக்ருதஸ்வஹாவரான நித்யஸூரிகளும், [பிறர் பலரும்] - இவ்வருகுண்டான தேவமநுஷ்யாதிகளெல்லாரும். [தொழுதேத்தநின்று] - "சிறியார் பெரியார்" என்னாதே முறைகேடாற நின்று ஏத்தும்படிநின்று குவலயாபீடத்தின் கொம்பை அநாயாஸேந முறித்த மஹோபகாரகன். [என்மாதவனே] - என்பக்கலிலே ப்ரவணனான ஸ்ரியஃபதி. [எந்தை] - என்னை அநந்யார்ஹனாக்கினான். சீரணங்கென்று - பிராட்டியாகவுஞ்சொல்லுவர். [எந்தை] - மாதவனான நாராயணன் இவர்க்கு ஸ்வாமி. அதவா, காரணம் - உபாதாநம். கிரிசை - வடநிர்மாணக்ரியை. கருமம் - உதகாஹரணாதி யென்றுமாம்

ஈடு.—இரண்டாம்பாட்டு. "நாராயணனாலே" என்று நாராயணஸப்தம் ப்ரஸ்துதமாயிற்றே; அதுக்குஅர்த்தம் அருளிச்செய்வதாக ஸப்தத்தை உபாதாநம் பண்ணுகிறார்.

இரண்டாமபாட்டு - நாரணன் இத்யாதி. கீழ் ப்ரஸ்துதமான நாராயணஸப்தத்துக்கு அர்த்தம் அருளிச்செய்கிறாரென்று பாட்டுக்கு ஸங்கதி கண்டுகொள்வது.

[நாரணன்] - இதுக்கு அர்த்தமேன்? என்னில், -[முழுவேழுலகுக்கும்நாதன்]- ஸர்வஸ்வாமி. இவ்வர்த்தத்தில் ப்ரமாணமேன்? என்னில்,-[வேதமயன்] - "நாராயண பரம்ப்ரஹ்ம" (நாராயண: பரம்ப்ரஹ்ம) இத்யாதிகளாலே "ஸர்வஸ்வாமீ" என்று ஓதப் படுகிறவன். [காரணம்கிரிசைக்கருமமிவை முதல்வன்] - தன்விபூதியில், காரணமாயும், கார்யமாயும், உதகாஹரணமாகிற பலமாயும் வரக்கடவதான இவற்றுக்கு நியந்தாவாயுள்ளான். க்ரியாஸாதநம், அதடியாகவரும் க்ரியை, தத்ஸாத்யமான கார்யம்; இவற்றுக்கு நிர்வாஹகனுயிருக்கு மேன்றுமாம். [எந்தை] - எனக்கு ஜநகனுனவன். [சீரணங்கு] - ஸ்ரீயான அணங்கு அணங்கென்று - தேய்வப்பேண் என்றபடி; பெரியபிராட்டியார். அன்றியே, சீரணங்கமரரேன்று - நித்யஸூரிகளுக்கு விசேஷண மாகவுமாம். சேஷத்வாநுரூபமான ஆத்மகுணங்களை யுரியாநிற்பாராய் அப்ராக்ருத ஸ்வபாவரான நித்யஸூரிகள், இவ்வருகுண்டான ஸம்ஸாரிகள், இப்படி, "சிறியார் பெரியார்" என்று வாசியின்றிக்கே எல்லாரும் எழுத்துவாங்கி ஏத்தும்படியாக நின்று, குவலயாபீடத்தின் கோம்பை அநாயாஸேந முறித்த உபகாரகன். "நமஸ்யந்தி த்வாம் ஸ்ரீ" (நமஸ்யந்தமித்யாஹ")

ஆனுல் அர்த்தமாத்ரத்தைச் சொல்ல அமையாதோ? ஸப்தோபாதாநம் எதுக்கு? என்ன, நாராயணனுலே இத்யாதி. நாரணன் - நாராயணஸப்தவாச்யன். முழுவேழுலகுக்கும் நாதன்-அதனுடைய அர்த்தமான, ஸமஸ்தமான ஏழுலகுக்கும் ஸ்வாமியானவன். காரணமாயுமிதி-காரணம் - ம்ருத்பிண்டாதிகள். கார்யம் - கடாதிகள். உதகாஹரணமாவது - அத்தால்வரும் வ்யவஹாரங்கள். இத்தால் - காரணமான பூதபஞ்சகத்தையும், தத்கார்யமான அண்டாதிகளையும், ததந்தர்வர்த்திகளான ஆத்மாக்களுடைய வ்யவஹாரங்களையுஞ் சொல்லுகிறது. கிரிசை - க்ரியை. க்ரியத இதி க்ரியா என்று - கடாதிகார்யத்தைச் சொல்லுகிறது கருமம் - கர்மம். கார்யவர்க்கத்தினுடைய வ்யாபாரங்களைச் சொல்லுகிறது. க்ரியாஸாதந மித்யாதி - க்ரியாஸாதநமாவது - ப்ரமணரூப க்ரியாஸாதநமான ம்ருத்பிண்டசக்ர சீவராதிகள். க்ரியை - ப்ரமணரூபக்ரியை. தத்ஸாத்யமான கார்யம் - கடாதி கார்யங்கள். "கருமம் என்று - க்ரியத இதி கர்ம என்று, கடாதிகாரியத்தைச் சொல்லுகிறது. இத்தால் - நிமித்தோபாதாந ஸஹகாரிகாரணங்களையும், தத்கார்யமான ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களையும், தத்ஸாத்யமான தேவாதிபதார்த்தங்களையுஞ் சொல்லுகிறது முந்தின அர்த்தத்திலே. சீர் - ஸ்ரீ:. சீரணங்கு - ஸ்ரீயாகிற தெய்வப்பெண். நித்யஸூரிபக்ஷே, சீரென்று-குணவாசி. அணங்கு-அப்ராக்ருதஸ்வபாவர். பிறர்-ஸம்ஸாரிகளான ப்ரஹ்மாதிகள். பலர் - உபயரும். நமஸ்காரமும் தாஸ்யஸூசகமாகையாலே சொல்லிற்று-எழுத்து வாங்கி என்று. எழுத்துவாங்குகை - சேஷிபேரை மார்பிலே எழுதிக்கொள்ளுகை. "வக்ஷஸி ஸ்ரீவத்ஸம் ...... தந்நாமாங்கித ...... பம்". என்னக்கடவதிறே. அகாரவிவரணமான நாராயணசப்தத்திலே-"அவரக்ஷணே" என்கிற ரக்ஷகத்வமும் அர்த்தஸித்தமாகையாலே, "வாரணத்தை மருப்பொசித்தபிரான்" என்று - அநிஷ்டநிவ்ருத்தி சொல்லுகிறது. "ஏத்த" என்றதுக்கு ப்ரமாணம் - நமஸ்யம் இத்யாதி. இந்தஸ்லோகம் க்ருஷ்ணவிஷயமாகக் காணப்படவில்லை, "......" என்று ராமவிஷயமாகக் காணப்படுகிறது.

என்னும்படியாக. [என்மாதவனே] - நான்தோற்ற துறை· மாதவனுன - நாராயணன் - எந்தை. ஸ்ரீமந்நாராயணன் எனக்கு ஸ்வாமி யென்கிறார்· (உ)

மூன்றாம்பாட்டு

மாதவனென்றதேகொண்டு என்னையினியிப்பாற்பட்டது
யாதவங்களுஞ்சேர்கொடேனென்று என்னுட்புகுந்திருந்து
தீதவங்கெடுக்குமமுதம் செந்தாமரைக்கட்குன்றம்
கோதவமிலென்கன்னற்கட்டிஎம்மானென்கோவிந்தனே.

ஆ —(மாதவன்.) இப்படி எம்பெருமான்என்னேடுஸம்பந்தித்தாரையுங்கூட விஷயீகரிக்கும்படி என்னை வைஷ்ணவனுக்குகைகரு ஹேதுவான என்பக்க லுள்ள சதி ராகிறதென்? என்னில், - அது இன்னதென்று சொல்லுகிறது:

யத்ருச்சயா பிராட்டி பரிக்ரஹித்தார் சொல்லுவதொருசொல்லைச் சொல்ல, அச்சொல்மாத்ரத்தையே கொண்டு மெய்யே பிராட்டி பரிக்ரஹமாயிருப்பாரைப் பார்த்தருளும் பார்வையாலே என்னைப் பார்த்தருளி, "இவரையாகாதே தான் நெடுங்காலமெல்லாம் இழந்தது" என்று, இழந்தகாலத்தை அநுஸந்தித்து மோஹித்து, பின்னை நெடும்போதுகூட பரபுத்தனாய், போனகாலத்தை இனிச்செய்யலாவதில்லையிறே; இனி, இப்பாலுள்ள காலமாகிலும் என்னைவிடேன் என்று, நிரதிஶயஸௌந்தர்யத்தை யுடையனாய், நிரதிஶயபோக்யபூதனாய், ஆஶ்ரிதவத்ஸலனாய், பரமகாருணிகனாயிருந்த எம்பெருமான் என்னுள்புகுந்திருந்து, என்பக்கலுள்ள ஸவஸம்ஶ்லேஷவிரோதியான ஸ்வரூபப்ரயுக்ததோஷத்தையும் ஹேதுக்ருதமான தோஷத்தையும் போக்கி, எனக்குப் பரமபோக்யனானனென்கிறார்.

ஒ —மூன்றாம்பாட்டில், மாதவனென்கிற உக்திமாத்ரத்தாலே என்னுடைய ஸகலதோஷங்களையும் போக்கி என்னை விஷயீகரித்தருளினானென்கிறார்.

[மாதவனென்று தொடங்கி] - மாதவனென்னுந் திருநாமத்தினுடைய உக்திமாத்ரத்தையே அநேகவ்யயாயாஸஸாத்ய ஸமாஶ்ரயணமாகக்கொண்டு என்னைப் போன நெடுங்காலமெல்லா மிழந்தோம், இனி,மேலுள்ளகாலமாகிலும் இவர் பக்கல் ஒரு தோஷமும் சேரவொட்டேனென்று என்னுள்ளே வந்துபுகுந்து நிரந்தரவாஸம்பண்ணி எனக்கு நிரதிஶயபோக்யமாய்க்கொண்டே "ஸ்வரூப ப்ரயுக்தம்" என்னலாம்படி அநாதியாய் வருகிற தோஷத்தையும், நாடோறும் ஒருஹேதுவஶத்தாலே வருகிற தோஷத்தையும்

க்ருஷ்ணன் விஷயத்திலேயும் உண்டென்று கண்டுகொள்வது. என்மாதவன் - என்னை எழுதிக்கொண்ட ஸ்ரீயःபதி. அந்வயபூர்வகமாக ஹாவம்-மாதவனுன நாராயணனெந்தையென்று. எந்தை-எனக்கு ஜநக னென்னுதல்,எனக்கு ஸ்வாமி யென்னுதல். மூழுவேழுலகுக்கும் நாதனாய், வேதமயனாய், காரணம் கிரிசை கருமமிவற்றுக்கு முதல்வனாய், சிரணங்கமார்பிறர்பலரும் தொழுதேத்த நின்று வாரணத்தை மருப்பொசித்த பிரானாய், என்மாதவனுன-நாரணன்-எந்தை இத்யந்வயः. (உ)

போக்குவதுஞ்செய்து என்னோட்டை ஸம்ச்லேஷத்தாலே விகஸிதமாய்ச் சிவந்திருந்துள்ள திருக்கண்களையும் வளர்ந்த திருமேனியையுமுடையான். "தீது, அவம்" என்றது - நிஷ்க்ருதியில்லாத பாபமும், நிஷ்க்ருதியுண்டான பாபமுமென்றுமாம். [கோதவமென்று தொடங்கி] - பாகுதப்பாதல் மற்றொன்றினுடைய ஸம்ஸர்க்கத்தாலே வரும் தோஷமாதல், ஒன்றுமின்றிக்கே யிருந்துள்ள கன்னற்கட்டிபோலே நிரதிசயபோக்யமாய்த் தன்னுடைய போக்யதையைக்காட்டி என்னை அடிமைகொண்டவன். [என்கோவிந்தன்] - என்னை விஷயீகரிக்கைக்காக கோவிந்தனானவன்.

ப.—அநந்தரம், இப்பக்ஷபாதமடியாக ஸ்வவிஷயத்தில் உக்திமாத்ரத்தையே பற்றாசாகக்கொண்டு பண்ணின உபகாரத்தை அருளிச்செய்கிறார்.

என் - எனக்காக, கோவிந்தன் - க்ருஷ்ணனாய்வந்தவதரித்த, எம்மான் - என்னுடைய ஸ்வாமியானவன், மாதவன் - ஸ்ரீமான், என்றதே - என்று நான்சொன்ன இந்த அஹ்ருதயோக்தியையே, கொண்டு-பற்றாசாகக்கொண்டு,என்னை-(உக்தியில்வாசியறியாத) என்னை, இனி - உக்த்யநந்தரமாக, இப்பாற்பட்டது - மேலுள்ள காலமெல்லாம், அவங்கள் - அவித்யாதிகளான குறைகள், யாதும் - ஏதேனுமொன்றையும், சேர்கொடேன் - சேர்கொடேன், என்று - என்று ஸங்கல்பித்து: (அதுக்கீடாக):என்னுள் - என்னெஞ்சுக்குள்ளே, புகுந்து - புகுந்து, இருந்து - அநந்யபரனாயிருந்து, தீது - (புத்திபூர்வகமான) தீமையையும், அவம் - (ப்ராமாதிகமான) அவத்தையும், கெடுக்கும் - கெடுக்கும்படியான, அமுதம் - நித்யபோக்யபூதனாய், (இஸ்ஸம்ச்லேஷத்தாலே), செம்தாமரை-சிவந்த தாமரைபோலேயிருக்கிற, கண் - திருக்கண்களையும், குன்றம் - ஸமஸ்த்திரமாய்வளர்ந்த வடிவையும் அநுபவிப்பித்து, கோது - கோதும், அவம்-அவமும், இல் - இல்லாத, என் கன்னற்கட்டி – கன்னற்கட்டிபோலே எனக்கு இனியனானவன். கன்னற்கட்டி - கருப்புக்கட்டி. அதுக்கு,கோதும், அவமும் - நீரஸமான வஸ்த்வந்தரஸம்ஸர்க்கமும், பாகதோஷமும்; ஈச்வரனுக்கு, கோதும், அவமுமாவது-உபகாரத்தினுடைய ஹேதுஸாபேக்ஷத்வமும், ஸ்வப்ரயோஜநார்த்தத்வமும்.

இ.—மூன்றாம்பாட்டில், "மாதவன்" என்ற உக்திமாத்ரத்தாலே என்னை விஷயீகரித்து, என்னுடைய தோஷங்களையும் போக்கினானென்கிறார்.

[மாதவனென்றதேகொண்டு]-மாதவனென்கிற உக்திமாத்ரத்தையேகொண்டு. என்பக்கல் அஹ்ருதயமான உக்திமாத்ரமே உள்ளது, அத்தை, அந்தப்புரத்திலுள்ளார் வார்த்தையாகையாலே ஸஹ்ருதயமாகவும் அநேகாயாஸ ஸாத்யமான ஆச்ரயணமாகவுங் கொண்டு. [என்னை] - கேவல நாராயண சப்தத்துக்கும் இதுக்கும் வாசியறியாத என்னை. [இனி] - "போனகாலமே போரும், இனி விடேன்" என்னாநின்றான். "பழுதே பலபகலும் போயின" என்று ஈச்வரனைக்கிட்டின சேதநனிருக்கு மிருப்பைத்தான் இராநின்றான். [இப்பாற்பட்டது] - அணைக்குக்கிழக்குப்பட்ட நீரோபாதியிறே போனகாலம்; இனிமேலுள்ள காலமாகிலும் ஒருபொல்லாங்கும் சேரவிட்டுக்கொடேனென்று. [யாதவங்களும்] - அவித்யாதிகளான நரகஹேதுக்கள், விரஹம், "அபோக்யன்" என்று அகலுகை. [என்னுட்புகுந்து]-அது உக்திமாத்ரமன்றிக்கே என்பக்கலிலே வந்து புகுந்து. [இருந்து] - ராஜாக்கள் ஆஸநபற்றாலே ஜயிக்குமாபோலே ஸ்த்தாவர

ப்ரதிஷ்டையாக இருந்து. இவரை வரநிறுத்தவொண்ணாதே. புகுந்திருந்து செய்கிறதென்? என்னில், - [தீதவங்கெடுக்கும்] - தீதாகிறது - மயர்வறமதிநல மருளப்பெறுவதற்குமுன்பு புத்திபூர்வகமாகப்பண்ணின கர்மங்கள் அவமாகிறது - பின்பு ப்ராமாதிகமானவை. நிஷ்க்ருதியில்லாத கர்மங்களும், நிஷ்க்ருதியுள்ளவையு மென்றுமாம். [அமுதம்]- போக்குவது தன்போக்யதையைக்காட்டி.[செந்தாமரை இத்யாதி]-என்னோட்டைக் கலவியாலே சிவந்த திருக்கண்களையும் வளர்ந்த திருமேனியையு முடையனானன். ஸதைகரூபமான வடிவு விகஸித மாயிற்று.[கோது இத்யாதி]-கோதும் அவமு மில்லாத கன்னற்கட்டிபோலே எனக்கு நிரதிஶயபோக்யனானவன். கோதாவது - த்ரவ்யாந்தர ஸம்பந்தத்தால் வரும் குற்றம். அவமாவது - பாகுதப்பால் வரும் குற்றம். [எம்மான்] -அந்த போக்யதையைக்காட்டி என்னை அநந்யார்ஹனாக்கினான். [என் கோவிந்தனே] -அவதரித்ததும் தம்மை விஷயீகரிக்கைக்காக, பூபார நிர்ஹரணாதிகளுக்கன்று என்றிருக்கிறார்.

ஈடு.—மூன்றாம்பாட்டு. கீழே "மாசதிரிதுபெற்று" என்றார்; இந்நன்மைக்கு அடியென்? என்ன; - நினைவின்றிக்கேயிருக்க அந்தஃபுரவாஸிகள் சொல்லும் வார்த்தையைச் சொன்னேனென்கிறார்; "ஜாமாதா தயிதஸ்தவேதி பவதீஸம்பந்தத்ருஷ்ட்யா ஹரிம்பஶ்யேம" (ஜாமாதாதயிதஸ்தவேதி பவதீஸம்பந்தத்ருஷ்ட்யாஹரிம்பஶ்யேம) என்றாரிறே பட்டர்.

[மாதவனென்றதேகொண்டு] - நான் "மாதவன்" என்ற உக்திமாத்ரத்தைக்கொண்டு. இத்தையே திருவுள்ளத்திலே குவாலாகக்கொண்டு. "அல்லாததிருநாமங்களுக்கும் இதுக்கும் வாசியறிவதே" என்று இத்தையே குவாலாகக்கொண்டு. [என்னை] - அல்லாத திருநாமங்களுக்கும் இதுக்கும் வாசியறியாத என்னை [இனி] - முன்பு கழிந்த

ப்ர.—(மாதவனென்றதேகொண்டு) - ஸ்ரீகுணரத்நகோஶே, "மாத: ப்ரியமேவ மைதிலஜநஸ் தேநாத்ய நாதே வயம் ஸுதாஸ்ரஸ்யகராஸஹிதாநஸாஹஸேஹாஸேவிஹாரோத்ஸவ। ஜாமாதா தயிதஸ்தவேதி பவதீஸம்பந்தத்ருஷ்ட்யா ஹரிம் பஶ்யேம க்ரதுயாஜ்யஶ்ரீவர நாதஸ்ய ஶேஷாந்வித। ௫௨ ॥"

ஸவிலாஸ: | விஶாரிவப்ரேரிதமவேத்யோவந:", "மையகண்ணாள்" என்றிறே அவளை யநுபவிக்கிறவன் கண்ணிருப்பது. [என்றென்றித்யாதி] - பக்திபாரவஶ்யதாலே இவர் தேஹயாத்ரை யிருக்குமபடியிறே யிது" என்று பூர்வர்கள் நிர்வாஹம்; "அடியாடியிலோடின ஆர்த்தி சொல்லுகிறது - இன்பம் வளர, என்கிறதுக்கு முன்பு" என்பர் பட்டர். [இராப்பகல் வாய்வெரீஇ] - "இவளிராப்பகல் வாய்வெரீஇ" என்கிற விடம். வாய்வெருவி. [அலமந்து]-"எங்கும்நாடி நாடி" என்கிறத்தைச் சொல்லுகிறது. [கண்கள் நீர்மல்கி]-"தனகுவளையொண் கண்ணநீர்கொண்டாள்" என்கிறத்தைச் சொல்லுகிறது. [வெவ்வுயிர்த்துயிர்த்து] - "உள்ளம் மலங்க வெவ்வுயிர்க்கும்" என்கிறவிடம். [மரீஇய தீவினை மாள]-பொருந்தின துக்கம் ஸவாஸநமாகப் போம்படி. மரீஇய - மருவிய. ஆயிரமாண்டு முதலையின் கையிலே யானை இடர்பட்டாற்போலே அடியாடியில் இவராற்றாமை. [இன்பம்வளர]-அந்தாமத்தன்பு தொடங்கி இவ்வளவும் வர விளைந்த ப்ரீதியைச் சொல்லுகிறது. [வைகல்வைகல்] - நாள்தோறும் நாள்தோறும். [உன்னை யென்னுள்ளீரீஇவைத்தனை] - இருத்திவைத்தாய். துக்க நிவ்ருத்திக்கும் ஸுகஸித்திக்குமாகப் பண்ணின க்ருஷி என்னுடைய ஹ்ருதயஸந்நிதியேயா யிற்று. [என்னிருடிகேசனே]-என்னுடைய இந்த்ரியங்களும் எனக்குப் பரிகரமாய விரோதிக்கை தவிர்ந்து, இன்பம் வளருகைக்கு உனக்குக் கையாளாயின.

௯.—ஒன்பதாம்பாட்டு. அடியாடியிற்பிறந்த வ்யஸநமெல்லாம் நான் மறந்து மிகவும் ப்ரீதனும்படி பண்ணி, இந்த்ரியங்களைத் தானிட்ட வழக்காக்கினானென்கிறார். பக்திபூர்வகமாக உன்னைஅநுபவியாநிற்கச்செய்தே, ப்ரதிபந்தகங்களும் நீங்கி நிரதிஶய ஹர்ஷமும் பிறக்கும்படி உன்னை என்னுள்ளே வைத்தாயென்று ப்ரீதராகிறு ராகவுமாம்.

[சிரீஇதரன்] - பெரியபிராட்டியாரைத் திருமார்விலே யுடையவன். [செய்ய தாமரைக்கண்ணன்] - நீர்பாய்ந்த பயிர் செவ்விபெற்றிருக்குமாபோலே, அவள் திருமார்விலே யிருக்கையாலே குளிர்ந்த கண்ணழகை யுடையவன். "வக்ஷஸ்தலஸ்தஶ்ரிய:

ப்ர.— (சிரீ இதரன் செய்யதாமரைக் கண்ணன்) ஶ்ரீ விஷ்ணுபுராணே ப்ரத்யக்ஷம், "ததஸ்ஸஹஸ்ரா ஶுபம் ஶ்ரீவிஸ்தாரம் கமலனாயிதம் ஹ்ருதயே தமஸ்: | ஸௌவர்ணசக்ரஸ்விஷ்டாஸ்த்ரநேத்ரா தமாஸாத்ய விவ்யஞ்ஜயேஹஸி: || ஹரி ரேகாவஸ்துதிஷ்ட்ரா வ்ருத்த்யேம்ப்ரதவிதாவாஸி சர்வப்ரமாண்யா: யோஜநகாலேண ஸம்ஸ்யோத்பாதநாவஸ்தாமாஸ்தவிவ்யஞ்ஜயேஹஸி: || தயாஸ்யவாலேஷு விகாஸிவேக்ஷணம் வக்ஷஸ்தலஸ்தஶ்ரிய: யநோரஹஸ: | விஶாரிவப்ரேரிதமவேத்யோவநோநாதாமாஸ்தவிவ்யஞ்ஜயேஹஸி: ||

ஒன்பதாம்பாட்டு.—சிரீஇதரன் இத்யாதி. அடியாடியில் இத்யாதி. அவதாரிகாத்வயமும் - பட்டர்நிர்வாஹத்தையும், பூர்வர்கள் நிர்வாஹத்தையும் பற்ற. க்ரமேண, "மரீஇயதீவினை மாள" என்றதிலே நோக்காக, அடியாடியில் இத்யாதி. "இன்பம்வளர" என்றதிலே நோக்காக-ப்ரீதனும்படிபண்ணி என்றது. 'இருடீகேசன்' என்றத்தைப்பற்ற, இந்த்ரியங்களை இத்யாதி. இட்ட வழக்கு - ததீநம். "இராப்பகல்" இத்யாதியைக் கடாக்ஷித்து, பக்திபாவசராயிருக்கிற இவருடைய தேஹ யாத்ரையிருக்கும்படியைச சொல்லுகிறதென்று பூர்வர்கள் நிர்வாஹம்-பக்தி இத்யாதி.

ஸம்பிவ்யாஹாரதாத்பர்யம்-நீர்பாய்ந்த இத்யாதி. உக்தார்த்தத்துக்கு ஸம்வாதம்-வக்ஷஸ

ஹ்ருஷ்டிஹ்ருஷ்டாஃ। விஸ்தாரிவஜ்ஜாத்வவத்ருஜ்வாலநஃ" என்கிறபடியே. [என்றுஎன்று]- இப்படி மாறுதேசோல்லி. [இராப்பகல்இத்யாதி]-"இவர் ஷக்திபரவஶராகையாலே இவருடைய தேஹயாத்ரை யிருக்கும்படி" என்று முன்புள்ள முதலிகள் நிர்வஹிக்கும்படி. அன்றிக்கே,-பட்டர் "மரீஇயதீவினைமாள என்கிற விடத்தளவும் - ஆடியாடியில்இவர்க்கு ஓடின தசையாய், இன்பம்வளர என்கிற இது - அந்தாமத்தன்பு தோடங்கி, கேசவன் தமரளவும் வர வுண்டான ப்ரீதியைச் சோல்லுகிறது" என்று. 'இராப்பகல் வாய்வெரீஇ' என்கிறது - "இவளிராப்பகல் வாய்வெரீஇ" என்றத்தை. 'அலமந்து' என்கிறது - "எங்கும் நாடிநாடி" என்றத்தை. 'கண்கள்நீர்மல்கி' என்கிறது—"தனகுவளையோண் கண்ண நீர்கோண்டாள்" என்றத்தை. 'வெவ்வுயிர்த்துயிர்த்து' என்கிறது - "உள்ளம்மலங்கவெவ் வுயிர்க்கும்" என்றத்தை. [மரீஇயதீவினைமாள] - ஆயிரமாண்டு முதலையின்கையிலே ஆனை இடர்பட்டாற்போலே, ஆடியாடியி லாற்றாமை. இவர்க்கு இப்படி போருந்தின விஶ்லேஷவ்யஸநம் ஆறும்படியாக. [இன்பம்வளர] - அந்தாமத்தன்பு தோடங்கிப் பிறந்த ப்ரீதி. [வைகல்வைகல்] - கழிகிற காலந்தோறும். [உன்னை யென்னுள் இரீஇ வைத்தனை] - உன்னைஎன்னுள்ளே யிருத்திவைத்தனை. [என் இருடீகேசனே] - எனக்குப் பரிகரமாய் விரோதித்த இந்த்ரியங்களும் உன்பக்கலிலே படையற்றன. பரமஶேஷியைக் கண்டார் த்வாரஶேஷிகளளவில் நில்லார்களிறே. (௯)

ஜ்வலந இத்யாதி. ஸ்ரீவிஷ்ணுதர்மே மங்களஸ்தவே, "தயாவராஹஸ்வரூபவிகாஸிவக்த்ராம் வக்ஷஸ்ஸ்ஜ்வலநஸ்ரீயஸ்ஸ்வஹ்ருஷ்டிஹ்ருஷ்டாஃ। விஸ்தாரிவஜ்ஜாத்வவத்ருஜ்வாலநநாநாஸ்தஜ்ஜ ஜ்வாவிஷ்டயேஹ்ருஷிஃ". பத்மோதபலஸப்தங்களுக்கு பேதங் கண்டுகோள்வது. அவதாரிகையிற் சொன்ன அர்த்தத்வயத்தையும் வ்யுத்க்ரமமாக ஆப்த ஸம்வாதத்தாலே தர்ஶிப்பிக்கிறார்-இவர்பக்தி இத்யாதிவாக்யத்வயேந. தேஹயாத்ரை-தேஹதாரணம். அநுபவப்ரகார இதி யாவத்.பட்டர் நிர்வாஹோபபாதநம்-இராப்பகல்வாய்வெரீஇ இத்யாதி. "மரீஇயதீவினை" என்னுமத்தை த்ருஷ்டாந்தமுகேந விஶதயந்நர்த்தமாஹ-ஆயிரம் இத்யாதி. மரீஇய - போருந்தின. வைகல்-கழிகிற. வைகல் - காலமெல்லாம். முந்தின வைகல் - கழிகையைச் சொல்லுகிறது. இரண்டாவது-காலபரம்; ஸர்வகாலமு மென்றபடி. எனக்கு விரோதித்த என்றது-அப்ராப்த விஷயப்ரவணமாய்க் கொண்டு அவ்வழியாலே விரோதித்த வென்றபடி. "என்" என்றதின் அர்த்தம் - எனக்குப் பரிகரமாய் என்றது. "ஈசன்" என்றதுக்கு அர்த்தம்-உன்பக்கல் இத்யாதி. படையற்றன- கிட்டின. படையறுகை-ஆயுதத்தைப் போகடுகை: தகதீந மென்றபடி. சேதநசேஷமான இந்த்ரியங்கள் அவனுக்குப் பாரதந்த்ரமாகக்கூடுமோ? என்ன, பரமஶேஷியை இத்யாதி. இவ்விடத்திலே. "ஹ்ருஷீகாணீந்த்ரியாண்யாஹுஸ்தேஷாமீஶோயதோபவாந்। ஹ்ருஷீகேஶஸ்ததோ விஷ்ணோ க்யாதஃ" என்று கைலாஸயாத்ரையில் நாமநிர்வசநாத்யாயத்தில் ருத்ரோக்தியான நிருக்தி ரநுஸந்தேயா. பரமசேஷி-ஈஶ்வரன். நிர்வசநப்ரகாரத்திலே - இந்த்ரியங்களுக்கு ஸாக்ஷாத் சேஷி ஈஶ்வரனாகையாலே, பரமஶேஷி என்கிறது. த்வாரஶேஷி - சேதநஃ. "ஜ்வலநாத்" என்றது-விஶ்லேஷப்ரயுக்தமேயாகிலும், ஆடியாடியில் விஶ்லேஷவ்யஸநமாத்ரம்-பட்டர் நிர்வாஹத்துக்கு விசேஷம். என் இருடீகேசனே-சிரீஇதர னித்யாரப்ய, வைகல்வைகல் - உன்னை என்னுள்-இரீஇ-வைத்தனை யித்யந்வயஃ. (௯)

பத்தாம் பாட்டு.

இருடீகேசனெம்பிரான் இலங்கையரக்கர்குலம்
முருடுதீர்த்தபிரானெம்மான் அமரர்பெம்மானென்றென்று
தெருடியாகில்நெஞ்சேவணங்கு திண்ணமறியறிந்து
மருடியேலும்விடேல்கண்டாய் நம்பிபற்பநாபனையே.

ஆ.—(இருடீகேசன.) தன்னழகாலும் செயலாலும் என்னை அடிமைகொண்டவன், அயர்வறுமமரர்களதிபதி யென்றென்று அவனை ஏத்தி நினைந்துவணங்கு; இத்தை அழகியதாகக் கைக்கொள்ளக்கொண்டு, மறந்தும் நம்பிபற்பநாபனை விடாதேகிடாய் நெஞ்சே! என்றுகொண்டு தம்முடைய நெஞ்சைக் குறைகொள்ளுகிறார்.

ஒ.—பத்தாம்பாட்டில், நமக்கு மிகவும் உபகாரகனானவனை யொருகாலும் விடாதே கிடாயென்று திருவுள்ளத்தைக் குறித்து அநுஸாவிக்கிறார்.

[இருடீகேசனென்றுதொடங்கி] - லங்கையில் ராக்ஷஸஸந்தாநத்தில் முருடனான ராவணனை முடித்து உபகரித்தாற்போலே தன்னழகாலே என் இந்த்ரியங்களை அநந்யபரமாக்குகையாகிற மஹோபகாரத்தைப் பண்ணினவன். [எம்மானென்றுதொடங்கி] - அயர்வறுமமரர்க ளதிபதியாய்வைத்து என்னை யடிமை கொண்டான் என்றுகொண்டு மிகவும் அநுஸந்தித்து நெஞ்சே அறிவுடையையாகில் அவனை யநுபவி, இத்தை த்ருடதரமாகக்கொள். [அறிந்தென்று தொடங்கி] - 'அவனை விட அடாது' என்றறிந்து ஸர்வகுண ஸம்பந்நனாய் நிரதிஶய ஸௌந்தரனானவனை நம்முடைய அயோக்யதாநுஸந்தாநத்தாலே 'விடுவோம்' என்று தோற்றினாலும் விடாதேகிடாய்.

ப.—அநந்தரம், இப்படி ஸர்வப்ரகாரோபகாரகனை விடாமையிலுண்டான அபேக்ஷையை அருளிச்செய்கிறார்.

இருடீகேசன் - (தசேந்த்ரியாநநமான என்னுடைய) மாநஸேந்த்ரியத்தை நியமித்து, எம்பிரான் - எனக்குஉபகாரகனாய், (அதுக்குஉதாஹரணமென்னலாம்படி), இலங்கை - லங்கையில், அரக்கர்குலம் - ராக்ஷஸகுலத்துக்கு, முருடு - முருடான ராவணனை, தீர்த்த - அழித்து பிரான் - நாட்டுக்குஉபகரித்தவன், அமரர்பெம்மான் - நித்யஸூரிகளோபாதி, எம்மான் - என்னையநுபவிப்பித்த ஸ்வாமியானவன், என்றென்று - என்று பலபடியும்அநுஸந்தித்து, நெஞ்சே - நெஞ்சே! தெருடியாகில் - அறிவுடையையாகில், வணங்கு - (அவனை) வணங்கும்படி பார்; (இத்தை), திண்ணம் - சிக்கென, அறி-புத்தி பண்ணு; அறிந்து - இவ்வறிவுக்குமேல், மருடியேலும் - அயோக்யதையடியான கலக்கம் வந்ததேயாகிலும், நம்பி - குணபரிபூர்ணனாய், பற்பநாபனை - காரணபூதமான திருநாபி கமலத்தையுடைய இம்மஹோபகாரகனை, விடேல்கண்டாய் - விடாதேகிடாய். என்று நெஞ்சை அபேக்ஷிக்கிறார்.

இ.—பத்தாம்பாட்டில், எனக்கு உபகாரகனானவனை ஒருகாலும் விடாதே கிடாயென்று, திருவுள்ளத்தைக்குறித்து அநுஸாவிக்கிறார்.

[இருடீகேசனெம்பிரான்] - இந்த்ரியங்களைக்கொண்டு விஷய ப்ரவணனாய் நசியாதபடி, தன்னழகாலே அவற்றைத் தன்பக்கலிலே ப்ரவணமாக்கின மஹோபகார

கன். [இலங்கைஇத்யாதி] - இலங்கையில் ராக்ஷஸஸந்தாநத்திலே விபீஷணாதிகளை யொழிய முருடான ராவணாதிகளை நிரஸித்தாற்போலேயாயிற்று என்னுடைய இந்த்ரிய வச்யதையைத் தவிர்த்தபடி. [எம்மானித்யாதி] - விஷயாந்தர ப்ராவண்யத்தைத் தவிர்த்தமாத்ரமே யன்றிக்கே, நித்யஸூரிகளை அநுபவிக்குமாபோலே என்னை அநுபவிப்பித்தவன். [என்றென்று] - இப்படிநினையா நின்றுகொண்டு. [தெருடியாகில்] - தெருளுதியாகில். அறிவுடையையாகில். ஜ்ஞாநேந்த்ரியங்களுக்கும் அறிவுக்கும் வாய்த்தலையான ஏற்றமுண்டாகில், [நெஞ்சேவணங்கு] - உபகாரகனை அவன் திருவடிகளிலே விழப்பார். [திண்ணமறி] - இத்தை "ஓலக்க வார்த்தை" என்றிராதே, த்ருடமாக புத்திபண்ணு. [அறிந்து] - "அவன் விடஅடான்" என்று அறிந்து. [மருடியேலும் விடேல்கண்டாய்]- உனக்கு ஒருபோதாக அயோக்யதாநுஸந்தாநத்தாலே அகல நினைப்பதொரு அறிவு கேடுண்டு, அவ்வளவிலும் விடாதேகிடாய். [நம்பிபற்பநாபனையே] - அவன் குணபூர்த்தி யிருந்தபடிகண்டாயே, வடிவழகிருந்தபடி கண்டாயே, முன்பு உபகரித்து நின்றபடி கண்டாயே. இவ்விஷயத்தைவிட்டால் ஏத்தைக்கொண்டு உஜ்ஜீவிக்க.

ஈடு.—பத்தாம்பாட்டு. நமக்கு மிகவும் உபகாரகனானவனை நீ ஒருகாலும் விடாதேகிடாயென்று திருவுள்ளத்தைக்குறித்து அருளிச்செய்கிறு ரிப்பாட்டில்.

[இருடீகேசனெம்பிரான்] - தன்னையறிகைக்குப் பரிகாரமாகத் தந்த இந்த்ரியங்களைக்கொண்டு ஶப்தாதிவிஷயங்களை விரும்பி நான்அநர்த்தப்படாமே,தன்னையே யறிகைக்குப் பரிகரமாம்படி பண்ணி யுபகரித்த மஹோபகாரகன். [இலங்கைஇத்யாதி] - இவருடைய இந்த்ரியவஶ்யதையைத் தவிர்த்தபடி, லங்கையில் ராக்ஷஸஜாதியில் விபீஷணாதிகளை வைத்து, மூருடான ராவணாதிகளை நிரஸித்தாற்போலேயாயிற்று. [எம்மான் அமரர்பெம்மான்] - இந்த்ரியங்களினுடைய இதரவிஷய ப்ராவண்யத்தைத் தவிர்த்த.

ப்ர.—(இருடீகேசனெம்பிரான்இலங்கை யரக்கர் குலம்முருடுதீர்த்தபிரான்) "ஹ்ருஷீகேஶ..." [illegible]

பத்தாம்பாட்டு - இருடீகேசன் இத்யாதி. "இருடீகேசனெம்பிரான்" என்றதைப் பற்ற - நமக்குமிகவு முபகாரகனானவனை என்றது.

இந்த்ரியங்களுக்கு நியாமகனாய் உமக்கு உபகரித்த உபகாரமேதென்ன, தன்னையறிகைக்கு இத்யாதி. பதயோகத்துக்குஹாவம் - இவருடையஇத்யாதி. அரக்கர்குலத்தில் முருட்டைத் தீர்த்த உபகாரக னென்றபடி. முருடரான - கடினரான. முருடு - காடிந்யம். இவ்விடத்திலே- "... [illegible]" என்றது அநுஸந்தேயம். இது த்ருஷ்டாந்தார்த்த மென்கிறார் - லங்கையில் இத்யாதி. "முருடு" என்று விசேஷித்ததுக்கு ஹாவம் - விபீஷணாதிகளைவைத்து என்றது. நிரஸித்தாற்போலேயாயிற்று - இவருடைய இந்த்ரியம் வஶ்யமாயிருக்கச்செய்தே, இதினுடைய விபரீதாசரணத்தையைப் போக்கினபடி யென்றபடி. பூர்வோத்தரபத ஸமபிவ்யாஹாரலப்ததாத்பர்யம்-இந்த்ரி

மாத்ரமன்றிக்கே, நித்யஸூரிகளுக்குத் தன்னை அநுபவிக்கக் கொடுக்குமாபோலே எனக்குத் தன்னை அநுபவிக்கத் தந்தவன். இப்படி சொல்லாநின்றுகொண்டு [தெருடியாகில்]- தெருளுதியாகில். ஜ்ஞாநப்ரஸரத்வாரமாகில். [நெஞ்சே வணங்கு] - ஜ்ஞாநேந்த்ரியங்களுக்கும்அறிவுக்கும் வாய்த்தலையான ஏற்றம்உனக்குண்டாகில், உபகாரகனானவன் திருவடிகளிலே விழப்பார். [திண்ணமறி]-இத்தை "ஓலக்கவார்த்தை" என்றிராதே த்ருடமாகப் புத்திபண்ணு. [அறிந்து] - அறிகைதானே போரும் ப்ரயோஜநம். அதுக்குமேலே [மருடியேலும் விடேல்கண்டாய்] - உனக்கு ஒருபிச்சுண்டிறே அவன்வைலக்ஷண்யத்தைப் பாராவருவது - 'நாம்இவ்விஷயத்தை தூஷிக்கையாவதேன்?' என்று அயோக்யதாநுஸந்தாநத்தாலே அகலப்பார்ப்பதொன்றுண்டு; அத்தைத் தவிரப்பார்கிடாய். [நம்பி பற்பநாபனையே] - கெடுவாய், இவ்விஷயத்தை விட்டுப் புறம்பேபோய் மண்ணை முக்கவோ? அவன்குணபூர்த்தியிருந்தபடி கண்டாயே, வடிவழகுஇருந்தபடி கண்டாயே, முன்பு நமக்கு உபகரித்தபடி கண்டாயே. (௧௦)

ப தி ற் று ப் பா ட் டு.

பற்பநாபனுயர்வறவுயரும் பெருந்திறலோன்
எற்பரனென்னையாக்கிக்கொண்டு எனக்கேதன்னைத்தந்த
கற்பகம் என்னமுதம்கார்முகில்போலும் வேங்கடநல்
வெற்பன் விசும்போர்பிரான் எந்தைதாமோதரனே.

யங்களினுடைய இத்யாதி. தெருளுதியாகில் - அறிவுடையையாகில். தெருள் - அறிவு. இது பின்னை ஜ்ஞாநத்தையுடைத்தோ? என்ன, ஜ்ஞாநப்ரஸரத்வாரமான ஆகாரத்தைப்பற்றச் சொல்லுகிறதென்று விவக்ஷித்து, ஜ்ஞாநப்ரஸரத்வாரமாகில் என்கிறார். ஜ்ஞாநேந்த்ரியங்களுக்குமித்-மநஸ்ஸஹகாரர்ஹாவே பாஹ்யஜ்ஞாநேந்த்ரியங்களுக்கு விஷயப்ரகாஸகத்வ மில்லாமையாலே ஜ்ஞாநேந்த்ரியாபேக்ஷயா மநஸ:ப்ராதாந்யம் அவலம்ப்யோக்தம்-ஜ்ஞாநேந்த்ரியங்களுக்தும் வாய்த்தலையான என்று. "[illegible]"-அறிவுக்தும் வாய்த்தலையான என்றுசொல்லப்பட்டது. ஜ்ஞாநேந்த்ரியங்களாலே உண்டாகக்கடவ அறிவுக்கும் வாய்த்தலையானவென்றபடி. வாய்த்தலையான - மூலமான. இல்லையாகில் பேதந் தோற்றுகை; இந்த்ரியங்களுக்கு வாய்த்தலையென்ற போதே - இந்த்ரியஜந்யஜ்ஞாநத்துக்கும் வாய்த்தலையென்றது ஸித்தமாகையாலேயென்று கண்டுகொள்வது. அநுவாதத்துக்கு ஹாவம் - அறிகைதானே இத்யாதி. ஜ்ஞாநஸ்யைவபலத்வஸூசநார்த்தோ நுவாத இதி பாவ:. மருடியேலும் - மருளுதியேலும்; ப்ரமத்தையுடையையாகிலும். மருள் - அஜ்ஞாநம். இங்கு - ப்ரமம். பாரா - பார்த்தமாத்ரத்திலே. பிச்சுத்தானேது? என்ன-நாம்இவ்விஷயத்தை இத்யாதி. அத்தை - அயோக்யதாநுஸந்தாநத்தை. "நம்பிபற்பநாபனை - மருடியேலும்விடேல் கண்டாய்" என்றதுக்கு ஹாவம்-கெடுவாய் இத்யாதி. முக்கவோ - தின்னவோ. "இவ்விஷயத்தை" என்றத்தை விவரிக்கிறார்-அவன்குணபூர்த்தி இத்யாதி. "நம்பிபற்பநாபன்-இருடீகேசனெம்பிரான்" இத்யாதியைப்பற்ற ஹாவம்-அவன்குணபூர்த்தி இத்யாதி ஆதல். நெஞ்சே, தெருடியாகில் - நம்பிபற்பநாபனை - இருடீகேசனித்யாரப்ய, என்றென்று - வணங்கு; திண்ணமறி; அறிந்து மருடியேலும் விடேல் கண்டாய் இத்யந்வய:. (௧௦)

ஆ.—(பற்பநாபன்.) அவன் நம்மைவிடிற் செய்வதென்? என்னில்; அளவிறந்த அழகையுடையனும், நிரவதிகதேஜஃப்ரப்ருதிகல்யாணகுணங்களையுடையனும், என்னை ஸ்வேதரஸர்வவிஷயவைராக்யபூர்வக ஸ்வாநுபவைகபோகனாக்கிக்கொண்டு எனக்கே தன்னைத்தந்த பரமோதாரனும், என்னுடைய போக்யமாய், நிரதிஶயஸௌந்தர்ய பரிபூர்ணமான திருமலையோடு உள்ள ஸம்பந்தத்தாலே லப்தமான இந்த ஔதார்யத்தையுடையனும் திருநாட்டில் திவ்யபுருஷர்களுக்கு நாதனும், எனக்கு ஸ்வாமியாய் ஆஶ்ரிதபராதீநனான எம்பெருமான் என்னையல்லது அறியான்; ஆதலால், அவன் என்னை விடானென்கிறார்.

ஒ.—பதினோராம்பாட்டில், அத்யந்த விலக்ஷணனாயிருந்துவைத்து, அத்யந்த ஸுலபனாய் என்னை அடிமைகொண்டவன் என்னையல்லது அறியானென்கிறார்.

[பற்பநாபனென்றுதொடங்கி] - ஜகதுத்பத்தி காரணமான திருநாபிகமலத்தையுடையனாய் அபரிச்சேத்யமானவன், ஸமஸ்த கல்யாணகுணகனானவன் மதேகஸித்தன். [என்னையென்றுதொடங்கி] - என்னை தனக்கு அர்ஹனாக்கி பரிக்ரஹித்து எனக்குத் தன்னை அஸாதாரணமாகத் தந்த விலக்ஷண கல்பகமுமாய் நிரதிஶயபோக்யமானவன். [கார்முகில் போலும் வேங்கட நல்வெற்பன்] - இவனுக்கு இவ்வௌதார்ய முண்டாயிற்றது திருமலையின் மிதியாலே. [விசும்போர் பிரான்] - அபர்வநுமமரர்களதிபதி.

ப.—அநந்தரம், இப்படி அறிவுபிறந்த நெஞ்சையுடைய எனக்கு அவன் ஸர்வப்ரகாரோபகாரகனானா னென்கிறார்.

பற்பநாபன் - (ஜகதுத்பத்திஹேதுவான) திருநாபிகமலத்தையுடையனும், (உதபந்நஜகத்ரக்ஷணார்த்தமாக), உயர்வற உயரும் - மிகவும்உயராநின்ற, பெருந்திறலோன் - அபரிச்சிந்நையான ஶக்தியையுடையனும், எற்பரன் - (இம்மேன்மையோடே) என்பக்கலிலே தத்பரனும், (அதடியாக), என்னை - என்னை, ஆக்கி - உண்டாக்கி, கொண்டு - அங்கீகரித்து, எனக்கே - எனக்கேஅஸாதாரணமாம்படி, தன்னை - தன்னை, தந்த-தந்த, கற்பகம் - கல்பகமாய், என் - எனக்கு, அமுதம் - போக்யமாய், கார்முகில்போலும் - (தாம்பாராமல்உபகரிக்கும்) காளமேக ஸத்ருஶனும், (அதுக்குயோக்யஸ்தலமான), வேங்கடம் - திருவேங்கடமென்று பேராய், நல் - விலக்ஷணமான, வெற்பன் - திருமலையில் நிலையையுடையனும், (இந்நிலையிலே), விசும்போர் - நித்யஸூரிகளை, பிரான் - அநுபவிக்கிற ஆஶ்ரிதபவ்யதையை யுடையனான, தாமோதரன் - தாமோதரன், எந்தை - என்னை அடிமைகொண்டான். கல்பகத்திற்காட்டில் இவனுக்கு வாசி - அர்த்தியையுண்டாக்குகையும், அவனைத் தானே ஸ்வீகரிக்கையும், அவன் அபேக்ஷித்ததைக் கொடுக்கையன்றியே தன்னைக்கொடுக்கையும், தானே போகயமாகையும்.

இ.—பதினோராம்பாட்டில், அத்யந்த விலக்ஷணனாய் வைத்து அத்யந்த ஸுலபனாய் என்னை அடிமைகொண்டவன் என்னையல்லது அறியானென்கிறார்.

[பற்பநாபன்] - ஜகதுத்பத்தி காரணமான திருநாபிகமலத்தையுடையவன். [உயர்வறவித்யாதி] - அபரிச்சேத்யமான ஶௌர்யவீர்யாதிகுணப்ரதையை யுடையவன்.

திறல் - பராபிபவந ஸாமர்த்த்யம். அது - அல்லாத குணங்களுக்கு உபலக்ஷணம். [எம்பரன்] - அம்மேன்மை யுடையவன் மதேகசித்தன். [என்னையாக்கி] - என்னைத் தனக்கு அர்ஹனாக்கி. [கொண்டு] - பரிக்ரஹித்து. [எனக்கே]-அஸாதாரணமாக. [தன்னைத்தந்த கற்பகம்]-ஔதார்யத்தில் ப்ரஸித்தமான கல்பகதருவிற்காட்டில் இவனுக்கு வ்யாவ்ருத்தி சொல்லுகிறது - அர்த்தியையுண்டாக்கிக் கொடுக்கமாட்டாது, ஸாதநாநுஷ்டாநம் பண்ணுதார்பக்கல் தான் மேல்விழுமதில்லை, ஒருவனுக்கே குறைவறக் கொடுக்கமாட்டாது, பலங்களைக்கொடுக்கு மித்தனைபோக்கி தன்னைக்கொடுக்குமதில்லை. [என்னமுதம்] - எனக்கு நிரதிஶயபோக்யமானவன். தானே போக்யமாயிருக்குமதில்லையே அதுக்கு. [கார்முகில் இத்யாதி]-இந்த ஔதார்யத்துக்கடி திருமலையில் ஸம்பந்தமாயிற்று. “கொடுத்தோம்” என்று நினையாதே கொடுக்கும் மேகஸ்வபாவமான திருமலை. [விசும்போர்பிரான்] - நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனாய் வைத்து ஆஶ்ரிதைகளான இடைச்சிகளுக்குக் கட்டவும் அடிக்கவுமாம்படி யிருக்கிற ஸௌலப்யத்தைக் காட்டி என்னை அடிமைகொண்டவன்.

ஈடு.—பதினோராம்பாட்டு. அத்யந்தவிலக்ஷணனாயிருந்துவைத்து, அத்யந்த ஸுலபனாய் என்னை அடிமைகொண்டவன் என்னையல்லது அறியானானானென்கிறார்.

[பற்பநாபன்]-ஸகலஜகதுத்பத்திகாரணமான திருநாபிகமலத்தையுடையவன். [உயர்வற இத்யாதி] - பேசப்புக்கால் பரிச்சேதித்துப்பேசவொண்ணாதபடியான ஶௌர்ய வீர்யாதி குணப்ரதையையுடையவன். திறல் - பராபிபவநஸாமர்த்த்யம். அல்லாதகுணங்களுக்கும் உபலக்ஷணம் இது. காரணத்வப்ரயுக்தமான மேன்மை அது, பராபிபவந ஸாமர்த்த்யந் தொடக்கமான குணங்கள் அவை, இப்படி யிருக்கிறவன் [எற்பரன்] - மதேகசித்தன். [என்னை இத்யாதி] - ஔதார்யத்தில் ப்ரஸித்தமாயிருப்பது கல்பகமிறே, அதில் வ்யாவ்ருத்திசொல்லுகிறது. [என்னையாக்கிக்கொண்டு] - அர்த்திகளை யுண்டாக்கிக் கொடுக்கு மதில்லையிறே அதுக்கு. [எனக்கே] - ஒருவனுக்கே குறைவறக் கொடுக்கு மதில்லையிறே அதுக்கு. [தன்னைத்தந்த] - சிலப்ரயோஜநங்களைக் கொடுக்கு

பதினோராம்பாட்டு - பற்பநாபன் இத்யாதி. ‘பற்பநாபன்’ இத்யாதிகளெல்லாம் கடாக்ஷித்து-அத்யந்தவிலக்ஷணனாய் என்றது.‘தாமோதரன்’ என்றத்தைப்பற்ற, அத்யந்தஸுலபனாய் என்றது. ‘எந்தை’ என்றத்தைப்பற்ற - என்னையடிமைகொண்டவன் என்றது. ‘எற்பரன்’ என்றத்தைப்பற்ற, என்னையல்லதறியான் என்றது.

உயர்வற இத்யாதி - நாட்டாருடைய உயர்வு அல்பமாம்படியாக உயராநின்ற அபரிச்சிந்நஶக்தியையுடையவன் என்று ஶப்தார்த்தம். திறல் - பராபிபவநஸாமர்த்யமானால், ‘ஶௌர்யாதிகுணப்ரதையையுடையவன்’ என்று சொல்லக்கூடுமோ? என்ன, அல்லாத இத்யாதி. ‘பற்பநாபன்’ என்றத்தையுங் கூட்டி அருளிச்செய்கிறார், காரணத்வ இத்யாதி. எற்பரன் - என்னிடத்திலே தத்பரன். அத்தாலே, மதேகசித்தன் என்றது. வாக்யதாத்பர்யம் - ஔதார்யத்தில் இத்யாதி. வ்யாவ்ருத்த்யுபபாதகம் - அர்த்திகளை இத்யாதி. என்னையாக்கி - என்னை உண்டாக்கி. கொண்டு - அங்கீகரித்து. குறைவற-மோக்ஷதஶாபர்யந்தம். எனக்கேதன்னைத்தந்த - எனக்கே

மதல்லது தன்னைக்கொடுக்குமதில்லையிறே அதுக்கு [என் அமுதம்] - தான்போக்யமாயிருக்குமதில்லையிறே அதுக்கு. எனக்கு நிரதிஶயபோக்யமானவன். [கார்முகில்போலும் வேங்கடநல்வெற்பன்] - இந்தஔதார்யத்துக்குஅடி திருமலையின் ஸம்பந்தம்; ஸஹ்யம் பற்றின ஔதார்யமிறே. கொடுத்தத்தை நினையாதே கொடுக்கும் மேகம்போன்ற ஸ்வபாவத்தையுடைய திருமலையைத் தனக்கு வாஸஸ்த்தாநமாக வுடையவன். [விசும்போர் பிரான் இத்யாதி] - நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனாயிருந்துவைத்து, ஆஶ்ரிதரான இடையருக்கும் இடைச்சிகளுக்கும் கட்டவும் அடிக்கவுமாம்படி வந்து அவதரித்து, அச்செயலாலே என்னை அடிமைகொண்டவன். (கக)

பன்னிரண்டாம்பாட்டு.

தாமோதரனைத்தனிமுதல்வனை ஞாலமுண்டவனை
ஆமோதரமறிய ஒருவர்க்கென்றேதொழுமவர்கள்
தாமோதரனுருவாகிய சிவற்குந்திசைமுகற்கும்
ஆமோதரமறிய எம்மானையென்னாழிவண்ணனையே.

ஆ.—(தாமோதரனை.) ஆஶ்ரிதபரதந்த்ரனாய், ஸர்வஜகதேககாரணமாய், ஸர்வஜகத்ரக்ஷகனாயிருந்த எம்பெருமானை, ஒருவர்க்குந்தானறியலாமோ? என்று தொழுகிற பரமபுருஷஶேஷதைகஸ்வபாவரான சிவற்கும் திசைமுகற்கும் எம்மானை என்னாழிவண்ணனைத் தரமறியலாமோ? என்றுகொண்டு, அவனுடைய அபரிச்சேத்யமஹத்வத்தைச் சொல்லி, ஏவம்பூதனானவன்கிடீர் எற்பரனாயிருக்கிறவனென்கிறார்.

அஸாதாரணமாம்படி தன்னைத்தந்தவென்று ஶப்தார்த்தம். ஆக, கல்பகத்திற்காட்டில் இவனுக்கு வ்யாவ்ருத்தி-அர்த்திகளை உண்டாக்குகையும், அவனைத் தானே ஸ்வீகரிக்கையும், அவன் அபேக்ஷிதங்கொடுக்கையன்றிக்கே தன்னைக் கொடுக்கையும், தானே போக்யமாகையும். 'கார்முகில் போலும்' என்றது-வேங்கடத்துக்கு விசேஷணம். கார்முகில்போன்ற 'வேங்கடம்' என்கிற பேரையுடைய விலக்ஷணமான திருமலையை உடையவன் இதி ஶப்தார்த்தः. பதச்சேர்த்தியால் ஸித்தித்த ஹாவம் - இந்த ஔதார்யத்துக்கு இத்யாதி. இந்தஔதார்யத்துக்கு - 'எனக்கேதன்னைத்தந்த' என்று சொன்ன ஔதார்யத்துக்கு. கார்முகில்போலும் வேங்கடமென்று - மேகஸாத்ருஶ்யஞ் சொன்னது - மேகத்தினுடைய ஔதார்யம்போலேயிருக்குமென்னுமத்தைப் பற்ற; ஆகையாலே அத்தைப்பற்ற, இந்த ஔதார்யத்துக்குஅடி திருமலையின் ஸம்பந்தம் என்கிறார். ஔதார்யம் ப்ரவாஹத்வேநஹ்ருதிநிதாயாஹ - ஸஹ்யம்பற்றின ஔதார்யமிறே என்று. அதாவது - ஸஹ்யபர்வதத்தினின்றும் ப்ரவ்ருத்தமான ப்ரவாஹத்துக்கு நாசமில்லாதாப்போலே, திருமலையோட்டை ஸம்பந்தமடியாக உண்டான பகவதௌதார்யத்துக்கும் ஒருகாலும் ஸங்கோசமில்லை என்றபடி. 'கார்முகில்' இத்யாதிக்கு ஶப்தார்த்தம் - கொடுத்தத்தை இத்யாதி. 'விசும்போர்பிரான் - தாமோதரன் - எந்தை' என்று அந்வயித்து ஹாவம் - நித்யஸூரிகளுக்கு இத்யாதி. பற்பநாபன் உயர்வற வுயரும் பெருந்திறலோன் - என்னையாக்கிக்கொண்டு இத்யாரப்ய, விசும்போர்பிரான் - தாமோதரன் - எந்தை - எற்பரன் இத்யந்வயः. இப்பாட்டில் - உபாயோபேயத்வ பாத்வஸௌலப்யங்களும், பராபிபவநஸாமர்த்த்யந் தொடக்கமான குணங்களும் சொல்லுகிறது. (கக)

ஒ.—பன்னிரண்டாம்பாட்டில், பகவத்ஜ்ஞாநத்தில் அபிமாநிகளா யிருந்துள்ள ப்ரஹ்மாதிகளுக்கும் எம்பெருமானை அறியவொண்ணாதென்கிறார்.

[தாமோதரனை யென்று தொடங்கி] - ஜகத்காரணபூதனாய் ஜகத்துக்கு ப்ரளயாபத்ஸகனுமாய் ஆஶ்ரிதபவ்யனானவனை ஒருவர்க்கு அளவிடலாமோ என்று அறிந்தார்களாகக்கொண்டு தொழும் ஸ்வபாவருமாய் எம்பெருமானுக்கு ஶரீரவத் அந்தரங்கரான ருத்ரனுக்கும் ப்ரஹ்மாவுக்கும், தன்னுடைய குணார்ணவத்தை என்பக்கலிலே மடுத்து என்னை அடிமைகொண்டவனைப் பரிச்சேதிக்கலாமோ.

ப.—அநந்தரம், தம்மளவில் அவன் பண்ணின உபகாரம் அதிஶயிதஜ்ஞாநர்க்கும் அளவிடவொண்ணாதென்கிறார்.

தாமோதரனை - ஆஶ்ரிதபாரதந்த்ர்யத்தையும், தனிமுதல்வனை - ஸமஸ்தஜகதேககாரணத்வத்தையும், ஞாலமுண்டவனை - ப்ரளயாபத்ஸகத்வத்தையுமுடையவனை, தரம் - பரிச்சேதித்து, அறிய - அறிய, ஒருவர்க்கு - ஒருவர்க்கும், ஆமோ - போமோ? என்று - என்று, தொழுமவர்கள் - தொழுமவர்களாய், தாமோதரன் - அந்த தாமோதரனுக்கு;உருவாகிய-ப்ரகாரதயா சேஷபூதரான,சிவற்கும்-ருத்ரனுக்கும்,திசைமுகற்கும்-ப்ரஹ்மாவுக்கும், (கடுகிலேகடலைமடுத்தாற்போலே), என் - என்பக்கலிலே, ஆழிவண்ணன் - தன்குணார்ணவத்தைவைத்து, எம்மானை-என்னை அடிமைகொண்ட ஸ்வாமியை, தரம் - அளவிட்டு, அறியவாமோ - அறியப்போமோ? ஸாமாந்யமான உபகாரங்களை அறிந்தாலும், என்பக்கல் பண்ணின விஶேஷோபகாரம் அறிய அரிதென்று கருத்து.

இ.—பன்னிரண்டாம்பாட்டில், "எற்பரன்" என்று என்னளவிற் செய்தாற்போலே தானே காட்டக்காணுமத்தனையல்லது, பகவத்ஜ்ஞாநத்திலே அபிமாநிகளான ப்ரஹ்மாதிகளுக்கும் ஸ்வயத்நத்தால் அவனை அறிய வொண்ணாதென்கிறார்.

[தாமோதரனை இத்யாதி] - ப்ரஹ்மாதிகள் பாசுரமிருக்கிறபடி. ஆஶ்ரிதபாரதந்த்ர்யம் ஒருவர்க்கும் தரைகாணப்போமோ. [தனிமுதல்வனை] - "ஏகமேவ" என்கிறபடியே - ஜகத்துக்கு த்ரிவிதகாரணமும் தானேயா யிருக்கிறபடியைத்தான் அறியப்போமோ. [ஞாலமுண்டவனை] - ஆபத்ஸகத்வத்தைத்தான் அறியப்போமோ. [ஆமோதரமறியவொருவர்க்கு] - எங்களையொழிய ஒருவர்க்குத்தான் அறியப்போமோ என்பர்கள். இப்படி சொல்லிக்கொண்டு தொழும் ஸ்வபாவருமாய், அவனுக்கு ஶரீரவத் அந்தரங்கரான ருத்ரனுக்கும் ப்ரஹ்மாவுக்குந்தான் அறியலாமோ. [என்னாழிவண்ணனை யெம்மானை] - தன் குணார்ணவத்தை என்பக்கலிலே மடுத்து என்னை அடிமைகொண்டவனை. எம்மானை யென்னாழிவண்ணனை - தாமோதரனைத் தனிமுதல்வனை ஞாலமுண்டவனை ஆமோதரமறிய ஒருவர்க்கென்றே தொழுமவர்களாய், தாமோதரனுருவாகிய சிவற்குந் திசைமுகற்கும் - தரமறியவாமோ.

ஈடு.—பன்னிரண்டாம்பாட்டு. "எற்பரன்" என்கிறபடியே - என்னளவில் அவன்செய்தாற்போலே செய்வார்க்கு அவனைக்காணலாமல்லது, 'ஸ்வயத்நத்தாலே அறிவோம்' என்பார்க்கு அறியப்போகா தென்கிறார்.

பன்னிரண்டாம்பாட்டு - தாமோதரனை இத்யாதி. என்னளவில் அவன் செய்தாற்போலே செய்வார்க்கு என்றது - என்னளவில் அநுக்ரஹம் செய்தாற்போலே அநுக்ரஹிக்க நினைத்தார்க்கு என்றபடி.

தாமோதரனைத் தனிமுதல்வனை ஞாலமுண்டவனை ஆமோ தரமறிய ஒருவர்க்கென்றாயிற்று ப்ரஹ்மாதிகள் சோல்லுவது. [தாமோதரனை] - அவன் ஆஶ்ரித பரதந்த்ரனாய் நிற்கிற நிலையை அறியப்போமோ? [தனிமுதல்வனை] - “ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்” என்கிறபடியே - த்ரிவித்காரணமும் தானேயாயிருக்கிற இருப்பை அறியப்போமோ? [ஞாலமுண்டவனை] - உண்டாக்கிவிடுகையன்றிக்கே, ஆபத்ஸகனாய்நிற்கும் நிலையை அறியப்போமோ? ஆமோதரமறிய ஒருவர்க்கு? என்னாநிற்பர்கள். தாங்கள் எல்லாம் அறிந்தார்களாக நினைத்து, ஆமோதரமறிய ஒருவர்க்கு என்றே தொழுமவராய், தாமோதரனுருவாகிய-ஸர்வேஶ்வரனுக்கு ஶரீரவத்விதேயரான சிவற்கும் திசைமுகற்கும் தரமறிய ஆமோ? அல்லாதாரிற்காட்டில் தாங்கள் அறிந்தார்களாக அபிமாநித்திருக்கிறவர்களாலே தான் அறியப்போமோ? ஆரைத்தா னென்னில், [எம்மானை என்னாழிவண்ணனை] - குளப்படியிலே கடலைமடுத்தாற்போலே, தான் குணர்ணவமாயிருக்கிற இருப்பை எனக்கு அறிவித்தவனை. இப்படி அவன்தானே காட்ட, நான்கண்டாற்போலே காண்பார்க்குக் காணலாமித்தனையல்லது, ஸ்வயத்நத்தால் காண்பார்க்கு அறியப்போமோ? எம்மானையென்னாழிவண்ணனை - தாமோதரனைத் தனிமுதல்வனை ஞாலமுண்டவனை ஆமோ தரமறிய ஒருவர்க்கென்றே தொழுமவர்களாய், தாமோதரனுருவாகிய சிவற்கும் திசைமுகற்கும் தரமறியவாமோ? என்று அங்வயம். (௧௨)

ப்ர —(தாமோதரனைத்தனிமுதல்வனை) ஶாரீரகமீமாம்ஸா பாஷ்யே ஸத்வித்யாயாம் [௨], “ஸதேவஸோம்யேதமக்ர ஆஸீதேகமேவாத்விதீயம் - தமேக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி”.

“தாமோதரனை” என்று தொடங்கி, “ஒருவர்க்கு” என்னுமளவும் - ப்ரஹ்மாதிகள் வார்த்தை யென்கைக்காக அருளிச்செய்கிறார் - தாமோதரனை இத்யாதி. இப்பதத்ரயத்துக்கு ஹாவம்-அவன் இத்யாதி. ‘தனிமுதல்வன்’ என்று - நிமித்தோபாதாநங்கள் சொன்னது-ஸஹகாரி காரணத்துக்கும் உபலக்ஷணம். ஸமபிவ்யாஹாரதாத்பர்யம் - உண்டாக்கி இத்யாதி. “யஸ்யாத்மா ஶரீரம் யஸ்ய ப்ருதிவீ ஶரீரம்” இத்யேவமாகாரேண ஹிதேபிவதந்தி, ‘சிவற்கும் திசைமுகற்கும் தரமறியவாமோ’ இதி கதமுச்யத இத்யத்ராஹ - ஆமோதரமறிய இத்யாதி. ஒருவர்க்கும் - தரமறியவாமோ வென்று அங்வயம். தரமறியவாமோ - பரிச்சேதித்தறியவாமோ. தரம் - பரிச்சேதம். ‘சிவற்கும் திசைமுகற்கும்’ என்ற பூஜ்யோக்திக்கு ஹாவம் - அல்லாதாரில் இத்யாதி. ‘ஆழிவண்ணனை-எம்மானை’ என்று அந்வயித்து அருளிச்செய்கிறார் - குளப்படியிலே இத்யாதி. ஆழிபோன்ற ஸ்வபாவத்தை உடையவனென்று பரமார்த்தம். ‘எம்மானை யென்னாழிவண்ணனை’ என்றது - ஆழ்வார்வார்த்தை. ஆனால் ஒருத்தராலும் அறியப்போகாதோ? என்ன; ‘எம்மானை’ என்றத்தால் ஸூசிதம் ஹாவமாஹ - இப்படி இத்யாதி. எம்மானை என்னாழிவண்ணனை - தாமோதரனைத் தனிமுதல்வனை ஞாலமுண்டவனை - ஒருவர்க்கு - தரம் அறியவாமோ - என்று தொழுமவர்களாய்த் தாமோதரனுருவாகிய சிவற்கும் திசைமுகற்கும் - தரமறியஆமோ? இத்யந்வய:. (௧௨)

பதின்மூன்றும்பாட்டு.

வண்ணமாமணிச்சோதியை அமரர்தலைமகனைக்
கண்ணனைநெடுமாலைத் தென்குருகூர்ச்சடகோபன்
பண்ணியதமிழ்மாலையாயிரத்துள் இவைபன்னிரண்டும்
பண்ணிற்பன்னிருநாமப்பாட்டு அண்ணல்தாளணைவிக்குமே.

ஆ.—(வண்ணமாமணி.) இத்திருவாய்மொழி வல்லார் எம்பெருமானைப் பெறுவா ரென்கிறார்.

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழியைக் கற்றவர்களை இத்திருவாய்மொழி தானே எம்பெருமான் திருவடிகளிலே சேர்க்கு மென்கிறார்.

[வண்ணமென்று தொடங்கி] - நிறமுடைத்தாய் மஹார்க்கமான மணியினுடைய ஒளியையுடையனாய் அயர்வறுமமரர்களதிபதியுமாய் அஸ்மதாதிகளுக்கும் ஸுலபனாகைக்காக க்ருஷ்ணனாய் வந்து திருவவதாரம்பண்ணுவதுஞ்செய்து என்பக்கலிலே மிகவும் அபிநிவிஷ்டனானவனை. [பண்ணில்] - பண்ணிலே நடந்த.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப் பலமாக பகவத்ப்ராப்தியை அருளிச்செய்கிறார்.

வண்ணம் - நிறத்தையுடைத்தாய், மா - பெருவிலையனான, மணி - நீலமணியினுடைய, சோதியை - ஒளிபோலேயிருக்கிற தேஜஸ்ஸையுடையனாய், (இவ்வழகு), அமரர் - நித்யஸூரிகளுக்கும், தலைமகனை - பரிச்சேதிக்கவொண்ணாத பெரியவனாய், கண்ணனை - ஆஶ்ரிதரைத்தானே அநுபவிக்குமவனாய், நெடுமாலை - அதுக்கு அடியான நிரதிசயவ்யாமோஹத்தை யுடையனானவனைப்பற்ற, தென் - அழகிய, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் — ஆழ்வார், பண்ணிய — செய்தவையாய், தமிழ்மாலை — ஸர்வாதிகாரமான த்ராவிடஸந்தர்ப்பரூபமான, ஆயிரத்துள் - ஆயிரந்திருவாய்மொழிக்குள்ளும், பண்ணில் - பண்ணிலே வர்த்திப்பதாய், பன்னிருநாமப்பாட்டு - திருத்வாதசநாமத்தைப்பற்றிவருகிற பாட்டான, இவை பன்னிரண்டும் - இவை பன்னிரண்டும், அண்ணல்- ஸர்வேஶ்வரன், தாள் - திருவடிகளை, அணைவிக்கும் — ப்ராபிப்பிக்கும். இது கலித்துறை.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றவர்களை இத்திருவாய்மொழி தானே அவன் திருவடிகளிலே சேர்க்கு மென்கிறார்.

[வண்ணமாமணிச்சோதியை] - அழகிய நிறத்தையுடைத்தாய்ப் பெருவிலையனான நீலமணிபோலேயிருக்கிற வடிவையுடையவனை. [அமரர் தலைமகனை] - இவ்வழகு நித்யஸூரிகளாலும் அநுபவித்து முடிக்கவொண்ணாதபடி அவ்வருகா யிருக்கை. [கண்ணனை] - இவ்வழகு விலக்ஷணாதிகாரமாகையன்றிக்கே, அஸ்மதாதிகளுக்கும் ஸுலபனானவனை. [நெடுமாலை] - என்னளவில் பர்யவஸியாதே, என்னோடு பரம்பரயா ஸம்பந்தித்தவர்களளவும் செல்லும் வ்யாமோஹாதிஶயத்தை யுடையவனை. [பண்ணில்] - வேதம் போலே அடியின்றிக்கே யிருக்கிறதன்று. “அபௌருஷேயம்” என்னுமதிற்காட்டிலும் விலக்ஷணமா யிருக்கிறதாயிற்று வக்த்ருவைலக்ஷண்யத்தாலே. [பண்ணில்] இவைதான் பண்ணிலே

புணர்க்கப்பட்டன. [பன்னிருநாமப்பாட்டு] - ஸ்ரீவைஷ்ணவசிஹ்நமான திருநாமங் களைவைத்துப் பாடினவை. [அண்ணல் தாளணைவிக்குமே] - ஸர்வேஶ்வரன் திருவடி களை அணைவிக்கும் - சேர்க்கும். இப்பத்தோட்டை ஸம்பந்தந்தானே கேசவன் தம ராக்கும்.

ஈடு.—நிகமத்தில் - இத்திருவாய்மொழி கற்றவர்களை, இத்திருவாய்மொழி தானே எம்பெருமான்திருவடிகளைச் சேர்த்துவிடு மென்கிறார்.

[வண்ணம்] - அழகிய நிறத்தை யுடைத்தாய்ப் பெருவிலையனான ரத்நம்போ லேயிருக்கிற விக்ரஹத்தையுடையவனை. [வண்ணமாமணிச்சோதியை] - வண்ணம் - நிறம்.[மாமணி]-மா-கறுப்பு. கறுத்தமணிபோலே. நீலரத்நம்போன்றவடிவில்தேஜஸ்ஸை யுடையவ னென்றுமாம். இவ்வழகைக் கொள்ளைகொள்ளும் ஹோக்தாக்களைச் சொல்லு கிறது. [அமரர்தலைமகனை] - ஒருநாடாக அநுபவியாநின்றாலும் தன்னழகைப்பரிச்சேதிக்க வொண்ணாதிருக்கிறவனை [கண்ணனை] - அவர்களே அநுபவித்துப்போகாமே, இங்குள் ளாரும் அநுபவிக்கும்படி க்ருஷ்ணனாய்வந்து அவதரித்தவனை. [நெடுமாலை] - ஒருவனை விஷயீகரித்தால் அவனளவில் தலைக்கட்டாத வ்யாமோஹத்தையுடையவனை. [தென் குருகூர்ச்சடகோபன்பண்ணிய] - வேதம்போலே பிறப்பிலியன்று. 'அபௌருஷேயம்' (அபௌருஷேயம்) என்னுமதிலும் வீறுண்டாயிருக்கிற தாயிற்று வக்த்ருவிஶேஷத்தாலே. இவை பண்ணிலேயாயிற்று நடந்தது. [பன்னிருநாமப்பாட்டு] - வைஷ்ணவத்வசிஹ்ந மான திருநாமங்களைவைத்துப் பாடினவை. இவை செய்வதேன்? என்னில், [அண்ணல் தாளணைவிக்கும்] - ஸர்வேஶ்வரன் திருவடிகளோடே சேர்த்துவிடும். இத்திருவாய்மொழி யோட்டை ஸம்பந்தந்தானே கேசவன்தமராக்கிவிடும்.

நிகமம் - வண்ணமாமணி இத்யாதி. 'பன்னிருநாமப்பாட்டு அண்ணல்தாளணைவிக்கும்' என்ற பதங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை - இத்திருவாய்மொழி இத்யாதி.

ப்ரதமார்த்தத்தில், வண்ணம் - அழகிய நிறம். மா என்று - மஹத்தை. சோதி என்று விக்ரஹம். த்விதீயார்த்தத்தில், "மாமணி - வண்ணச்சோதி" இத்யந்வயஃ. "மா" என்று - கறுப்பாய், நீலமணி யென்றபடி. "வண்ணம்" என்று - நிறத்துக்கு ஆஶ்ரயமான விக்ரஹத்தை லக்ஷிக்கிறது. "தலைமகனை" என்றதுக்கு ஹாவம் - ஒருநாடாக இத்யாதி. ஸமபிவ்யாஹாரதாத் பர்யம் - அவர்களே இத்யாதி. பிறப்பிலியன்றாகில் வீறுண்டாகக்கூடுமோ? என்ன, அபௌரு ஷேயம் இத்யாதி. வீறு - அதிசயம். வக்த்ருவிசேஷத்தாலே யென்றவிடத்தில் - "வ்யாஹ்ருவா றிடு நாவஹு்தி" "ஸஹாவாவஹாஸவாராஸ" "யபெஹேகிஂவஉநாவஹுதீ ஷஜ" என்றிருக்கையாலே, மயர்வற மதிநலம்பெற்ற இவருடைய ஸ்ரீஸூக்திவைலக்ஷண் யம் ஸம்புகர்ஷயாவிதமிறே யென்றபடி. தென்குருகூர் இத்யாதிக்கு - அழகிய திருநகரிக்கு நிர்வாஹகரான ஆழ்வார் அருளிச்செய்த, த்ராவிடஸர்வஸாரூபமான ஆயிரத்தினுள்ளும், பண்ணி லேவர்த்திப்பதாய்த் திருத்வாதசநாமத்தைப்பற்றி வருகிற பாட்டான இவை பன்னிரண்டுமென்று ஸப்தார்த்தம். "பன்னிருநாமப்பாட்டு" என்றவிடத்திலே விவக்ஷிதம் விஶேஷமாஹ - வைஷ்ண வத்வ இத்யாதி. பூர்வவாக்யத்தை விவரிக்கிறார் - இத்திருவாய்மொழி இத்யாதி.

முதற்பாட்டில் - தம்மோடு ஸம்பந்திஸம்பந்திகளுமெல்லாரும் தம்மைப் போலே விஷயீக்ருதராளுர்க ளென்றூர்; இரண்டாம்பாட்டில்-அதுக்கு அடி நாரா யணனுகையாலே என்றும், அந்நாராயண ஶப்தார்த்தத்தையும் அருளிச்செய்தார்; மூன்றும்பாட்டில் - இப்படி விஷயீகரிக்கைக்கு ஹேது சொன்னூர்; நாலாம்பாட் டில் - ஸர்வகாலமும் தன்னையே அநுபவிக்கும்படி பண்ணினு னென்றூர்; அஞ்சாம் பாட்டில் - இப்படி தம்மை யநுபவிப்பித்ததனுலே அவன்வடிவில்புகரைச் சொன் ஞர்; ஆறும்பாட்டில் - இப்படி என்னை விஷயீகரிக்கைக்கடி நிர்ஹேதுக க்ருபை யென்றூர்; ஏழாம்பாட்டில் - தன்னையே ஸர்வகாலமும் அநுபவிக்கும்படியான நெஞ் சைத் தந்தா னென்றூர்; எட்டாம்பாட்டில் - தந்தவளவன்றிக்கே, விரோதியான நெஞ் சையும் போக்கினு னென்றூர்; ஒன்பதாம்பாட்டில் - தன்னுடைய கல்யாணகுணங்களை யே நான் அநுபவிக்கும்படி என் ஹ்ருதயத்திலே புகுந்தா னென்றூர்; பத்தாம்பாட்டில் - அநுபவவிரோதியான இந்த்ரியங்களையும் தன்வழியாக்கிக்கொண்டா னென்றூர்; பதினொ ராம்பாட்டில் - ஏவம்பூதனுனவன் என்னையல்லது அறியானு னென்றூர்; பன்னிரண் டாம்பாட்டில் - என்னைப்போலே காண்பார்க்குக் காணலாமதொழிய ஸ்வயத்நத்தால் அறியப்போகா தென்றூர்; நிகமத்தில் - பலஞ்சொல்லித் தலைக்கட்டினூர். (கஈ)

ஹேதுசொன்னூரென்றது-'மாதவனென்றதேகொண்டு'என்றத்தைப்பற்ற. இப்படி என்னை விஷயீகரிக்கைக்கடி - உக்திமாத்ரத்தையே வ்யாஜமாக்கி விஷயீகரிக்கைக்கு அடி. (கஈ)

த்ரவிடோபநிஷத்ஸங்கதி:— [Grantha text]

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி:— [Grantha text]

திருவாய்மொழி நூற்றந்தாதி.

கேசவனுலெந்தமர்கள் கீழ்மேலெழுபிறப்பும்
தேசடைந்தாரென்றுசிறந்துரைத்த - வீசுபுகழ்
மாறன்மலரடியேமன்னுயிர்க்கெல்லாமுய்கைக்கு
ஆறென்று நெஞ்சேயணை.

ஆழ்வார்திருவடிகளே ஶரணம், எம்பெருமானார்திருவடிகளே ஶரணம், ஜீயர்திருவடிகளேஶரணம்.

எட்டாந் திருவாய்மொழி—அணைவதரவணை : ப்ரவேஶம்.

ஆ.—(அணைவது.) "தாமோதரனை" என்கிற பாட்டில் ப்ரஸ்துதமான ஸர்வேஶ்வரத்வத்தைத் தம்முடைய ப்ரீத்யதிஶயத்தாலே ஸஹேதுகமாக உபபாதித்து, இப்படி ஸர்வேஶ்வரனான எம்பெருமானை ஆஶ்ரயியுங்கோளென்று பரரை நோக்கி அருளிச்செய்கிறார்.

ஒ.—எட்டாந் திருவாய்மொழியில், தம்முடைய பரிகரத்தையும் தம்மைப்போலேயாக்கி, "இத்தாற் போராது" என்று பார்த்தருளி, தனக்கு அஸாதாரணமாய், பர்யங்கவித்யையிற் சொல்லுகிறபடியே பெரிய பிராட்டியாரையும் தனக்குப் பர்யங்கபூதனான திருவனந்தாழ்வான் தொடக்கமான அயர்வறுமமரர்களையும் பரிகாரமாகவுடைத்தாய், எத்தனையேனும் அளவுடைய ப்ரஹ்மாதிகளுக்கும் ஸ்வபாஹுபலத்தால் துஷ்ப்ராபமாய், ஓரளவுமில்லையேயாகிலும் திருவடிகளையே பற்றினார்க்கு அநாயாஸேந பெறலாய், து:ககந்தாஹிதமாய், அத்யந்த ஸுகரூபமாய், நிரதிஶயமங்களமாய், அநுபவிப்பார்க்கு அதிஸ்புடமாய், அபரிச்சேத்யமாய், உத்தமமுமாயுள்ள முக்தப்ராப்யமான தன்னுடைய ஐஶ்வர்யத்தை, ஸர்வேஶ்வரனாகையாலே அபேக்ஷித ஸம்விதாநக்ஷமனாயுள்ள ஸ்ரிய:பதியான எம்பெருமான், தமக்கும் தம் பரிகரத்துக்கும் தருகையிலேயுபக்ரமித்தருளுகிற விருப்பைக் கண்டு அதிப்ரீதரான ஆழ்வார், "எல்லாரையும் ஈத்ருஶபோகபாகிகளாக்கவேணும்" என்று பார்த்தருளி, அவனுடைய மோக்ஷப்ரதத்வத்தையும், அதுக்கு உறுப்பாக ஐஶ்வர்யத்தையும் உபதேசித்து, நானும் இவர்களைப்போலே யாகாதே ததேகபோகனாய்க்கொண்டு அவனை புஜிக்கப்பெற்றேனென்று த்ருப்தராய் முடிக்கிறார்.

ப.—எட்டாந் திருவாய்மொழியில், "மேவுந்தன்மையமாக்கினான்" என்று - ஸ்வஸம்பந்தி ஜநங்களுக்கும் ப்ராப்திபர்யந்தபலரூப மோக்ஷப்ரதனாய்க் கொண்டு ஈஶ்வரன் நிற்கிற நிலையையும், அதுக்கு அடியான பரத்வத்தையும் அநுஸந்தித்து, 'இத்தை ஸம்ஸாரிகள் இழக்கவொண்ணாது' என்று. உபதேசிப்பாராகக் கோலி; அவனுடைய ஸர்வ நிர்வாஹகத்வத்தையும், ஸம்ஸார நிவ்ருத்திபூர்வகமான மோக்ஷப்ரதத்வத்தையும், அதுக்கு உறுப்பான சேஷ்டித வைலக்ஷண்யத்தையும், இந்தவ்யாபார ப்ரகாஶிதமான ஸௌலப்யாதி குணங்கள் நித்யாநுபாவ்யமென்னுமிடத்தையும், அந்த குணப்ரகாஶகமான அவதாரபாஹுள்யத்தையும், அவதாரதஶையிலும் பரத்வம் அதிப்ரஸித்தமென்னுமிடத்தையும், அவதீர்ணனானவன் ரக்ஷணவ்யாமோஹத்தால் பண்ணும் வ்யாபாரம் அநேகமென்னுமிடத்தையும், அவதீர்ணனுடைய பரத்வோபயுக்தமான அதிஶயிதாகாரங்கள் அறியவல்லாரில்லையென்னுமிடத்தையும், அவனுடைய ஆஶ்ரித ஸௌலப்யம் அபரிச்சிந்நமென்னுமிடத்தையும், ஏவம்விதனைத் தாம் அநுபவிக்கப்பெற்றமையையும் அருளிச்செய்து, உபதேஶாந்நிவ்ருத்தராய் ஸ்வலாபத்தோடே தலைக்கட்டுகிறார். இதிற் சொல்லுகிற பரத்வம், முதல் திருவாய்மொழி போலே-ஸ்வரூபகதமாயுமன்றியே, திண்ணன் வீட்டிற்போலே - மநுஷ்யத்வே பரத்வமுமன்றியே, மோக்ஷப்ரதத்வோபயுக்தமாயிருக்கிறது.

இ.—எட்டாந் திருவாய்மொழியில், தம்முடைய பரிகரத்தையும் தம்மைப்போலேயாக்கி, "இத்தாற் போராது' என்றுபார்த்து, முக்தப்ராப்யமான ஐஶ்வர்யத்தைத் தமக்கும் தம்பரிகரத்துக்கும் தருகையிலேயொருப்பட்டிருக்கிற விருப்பைக் கண்டு அதிப்ரீதராய், ஸம்ஸாரிகள் படுகிற அநர்த்தத்தைக்கண்டு, "எல்லாரும் ஈத்ருஶபோகபாகிகளாகவேணும்" என்று மோக்ஷப்ரதத்வத்தை யுபதேஶிக்க, அது ராவணனுக்குச் சொன்ன ஹிதம்போலே நிஷ்பல

மாகையாலே, "இவர்களைப்போலே யாகாதே நாம்ததேகஹோகராகப் பெற்றோமே" என்று த்ருப்தராய் முடிக்கிறார். "இத்திருவாய்மொழி பரத்வோபதேசம்" என்று பூர்வர்கள் நிர்வஹிப்பர்கள். "பலவிடத்திலும் பரத்வஞ்சொல்லா நின்றது, மோக்ஷப்ரதத்வம் தனியே சொல்ல வேண்டுவதொன்று, அத்தைச் சொல்லுகிறது" என்று பட்டர் அருளிச்செய்வர். இவைதான் ஒன்றை யொன்று ஒழிந்திராது, மோக்ஷப்ரதத்வம் ஸர்வேஶ்வரத்வத்தோடே வ்யாப்தம். ஸர்வேஶ்வரனுகில் மோக்ஷப்ரதனுயிருக்கும். மோக்ஷமாகிறது - தனக்கு அஸாதாரணமாய் முக்தப்ராப்யமான தன்னுடைய ஐஶ்வர்யம். அதாகிறது - பிராட்டி திருவநந்தாழ்வான் முதலான நித்யஸூரிகளைப் பரிகரமாகவுடைத்தாய், அளவுடையார்க்கும் ஸ்வயத்நஸாத்ய மன்றிக்கே தன்னாலே தன்னைப்பெறுவார்க்கு அநாயாஸஸித்தமாய், நிரதிஶய ஸுகரூபமாய், அபரிச்சேத்யமாய், அதிஸ்புடமாய் ஸர்வோத்க்ருஷ்டமான ஐஶ்வர்யம்.

ஈடு.— ஸர்வேஶ்வரன் தம்பக்கல் பண்ணின வ்யாமோஹம் தம்மொருவரளவிலுமன்றிக்கே, தம்மோடு ஸம்பந்தமுடையாரளவிலும் வெள்ளமிட்டபடியைச் சொன்னார் - கீழ்; இத்திருவாய்மொழியில் - "நம்மோட்டை ஸம்பந்தமே ஹேதுவாக அவன் இப்படி விஷயீகரிப்பானுன பின்பு ஸம்ஸாரிகளுக்கும் நம்மோட்டை ஒரு ஸம்பந்தத்தை உண்டாக்கி அவன் க்ருபைக்கு விஷயமாக்குவோம்" என்று, அவர்களுக்கு மோக்ஷப்ரதத்வத்தை அருளிச்செய்கிறார். இத்திருவாய்மொழி தன்னை - 'ஈஶ்வரத்வஞ் சொல்லுகிறது' என்று நிர்வஹிப்பாரு முண்டு; 'மோக்ஷப்ரதத்வஞ் சொல்லுகிறது' என்று பட்டர் அருளிச்செய்யும்படி. இவைதான் ஒன்றையொன்று விட்டிராது, ஈஶ்வரனுயிற்று மோக்ஷப்ரதனுமவன்; மோக்ஷப்ரதனும்போது ஈஶ்வரனுகவேணும். இதுதன்னிற் செய்ததாகிறது என்? என்னில்; - ஆழ்வார்க்கு முதல்தன்னிலே ஸர்வேஶ்வரன் அத்வேஷத்தைப் பிறப்பித்து ஆபிமுக்யத்தைப் பிறப்பித்து, ருசியை யுண்டாக்கி, இவர்விடிலும் தான் விடாதே

அணைவதாவணை ப்ரவேஶ. வ்ருத்தாநுவாதபூர்வகமாக ஸங்கதி - ஸர்வேஶ்வரன் இத்யாதி. இந்த வாக்யம் - "கேசவன்தமர்கீழ்மே லெமரேழெழுபிறப்பும்" இத்யாதியைக் கடாக்ஷித்து. நம்மோட்டை ஒரு ஸம்பந்தத்தை யுண்டாக்கி - நாம் உபதேசித்து சிஷ்யரூபஸம்பந்தத்தை யுண்டாக்கி. நம்மோட்டை ஸம்பந்த மென்கிறவிடத்திலே - "பிள்ளை லோகாசார்யர், 'ஆய்க்குடி' என்கிற க்ராமத்திலே 'பெருமாள் பறிகொடுத்தார்' என்று கேட்டுத் தாமும் பறிகொடுத்தார்; அத்தைக் கேட்டருளிப் பெருமாள் அத்யந்தம் ப்ரீதராய்ப் பிள்ளை லோகாசார்யரைப் பார்த்து, 'உமக்கும் உம்முடைய ஸம்பந்திகளுக்கும் மோக்ஷம் தந்தோம்' என்று திருவுள்ளமாக, அநந்தரம் பிள்ளைலோகாசார்யர் "யம்யம்ஸ்ப்ருஶதி பாணிப்யாம்" இத்யாதிப்படியே தம்முடைய பரமக்ருபையாலே எறும்பு முதலானவற்றை ஸ்பர்ஶிப்பது, ஸ்தாவராதிகளைக் கடாக்ஷிப்பது முதலான க்ருபாகார்யமான செயல்களைச் செய்து எல்லார்க்கும் ஸ்வஸம்பந்தத்தை யுண்டாக்கியருளினுப்போலே" என்று அருளிச்செய்வர். "தீர்த்தனுலகளந்த" இத்யாதியையும், "இருவரவர்முதலுந்தானே" இத்யாதியையும் பற்ற-ஈஶ்வரத்வம் சொல்லுகிறதென்று நிர்வஹிப்பாரு முண்டு என்றது. அது முதல்திருவாய்மொழி, "திண்ணன்வீடு" இத்யாதியாலே ஸித்தமாகையாலே, "பிறவிக்கடல் நீந்துவார்க்கு - புணைவன்" என்றத்தை உபஜீவித்துக்கொண்டு மோக்ஷப்ரதத்வம் சொல்லுகிற தென்று பட்டர் அருளிச்செய்யும்படி யென்றபடி. ஸம்ஸ்ருத்ய ஸாகர ஸமுத்தாரையிதா நாம் ஸர்வாநாம் காமதிரிஷ்ட்ரா - இவைதான் இத்யாதி வாக்யத்ரயேண. மோக்ஷப்ரதனை ஈஶ்வர ப்ரதிபாதகம் இத்திருவாய்மொழி யென்றபடி. இரண்டும் - முதற்பாட்டிலே வ்யக்தம். விஸ்தாரஸங்கதி - இது தன்னில் இத்யாதி. இது தன்னில் - இத்திருவாய்மொழியிலே. அத்வேஷத்தைப் பிறப்பித்து என்றது - "யாதானும்பற்றி நீங்கும்விரதத்தை நல்வீடுசெய்யும்" "இசைவித்தென்னை" "என்னிசைவினை" இத்யாதியைப்பற்ற. ஆபிமுக்யத்தைப் பிறப்பித்து என்றது - மயர்வற மதிநலமருளினமையைப் பற்ற. யத்வா, இரண்டும் - "தீமனங்கெடுத்தாய்" "மருவித்தொழும்மனமேதந்தாய்" என்றத்தைப் பற்றவாதல். ருசியை யுண்டாக்கி என்றது-"அடிமைக்கணன்புசெய்வித்து" "நின்னலாலிலேன்காண்" இத்யாதியைப்பற்ற. "யானொட்டி" இத்யாதியைப்பற்ற - இவர்விடிலும் இத்யாதி. "முடியாததென்னெனக்கேலினி" "கேசவன்

விரும்பி, இதுதான் இவர்தம்மளவிலன்றிக்கே தம்மோடு ஸம்பந்தமுடையாரளவும் இப்படியே பெருகிக் கரைபுரளுகிறபடியை அநுஸந்தித்து, "ஸர்வேஶ்வரன் ஸ்வபாவம் இதுவானபின்பு, நாம் பெற்றபேறு எல்லாரும் பெறும்படி பண்ணுவோம்" என்று, ஸம்ஸாரிகளை யடையப்பார்த்து, அவர்களுக்கு, 'மோக்ஷப்ரதன்' என்னுமிடத்தை அருளிச்செய்கிறார். இவர், தாம்பெற்றதாய்ப் பிறர்க்கு உபதேசிக்கிற பேறுதான்; பிராட்டி, திருவடி, திருவநந்தாழ்வானைப் பரிகரமாகவுடைத்தாய், எத்தனையேனும் அளவுடையார்க்கும் ஸ்வயத்நத்தாலே ப்ராபிக்க அரிதாய், அவனாலே பெறப் பார்ப்பார்க்கு வருத்தம் அறப்பெறலாய், ஸம்ஸாரத்தில் போகங்கள்போலே அஸ்த்திரமாயிருக்கையன்றிக்கே நித்யமாய், அவிஶதமாயிருக்கை யன்றிக்கே, அத்யந்தம் ஸ்புடமாய், து:கமிஶ்ரமா யிருக்கையன்றிக்கே ஸுகைகதாநமாய், மங்களமாய், உத்தமமாய், அபரிச்சிந்நமாய், இப்படியிருக்கிற முக்தப்ராப்ய லோகத்தைத் தமக்கும் தம்பரிகரத்துக்கும் அவன் கொடுப்பானாகப் பாரிக்கிற படியைக் கண்டு, "ஸம்ஸாரிகளையும் ஈத்ருஶலோகிகளாம்படி பண்ணவேணும்" என்று பார்த்து அவர்களைக்குறித்து ஹிதம் அருளிச்செய்ய, அதுகேட்டபின்பும் அவர்கள் பழைய நிலையில்நின்றும் குலையாதே, மால்யவான் தொடக்கமானார் ராவணனுக்குச் சொன்ன ஹிதம்போலே அவர்கள் இத்தை அநாதரித்திருக்க,

---

ப்ர—அர்ணவதரவணே ப்ரவேஶே—(மால்யவான் தொடக்கமானார் ராவணனுக்குச் சொன்னஹிதம்போலே அவர்கள் இதை யநாதரித்திருக்க):—"𑌯𑍁𑌦𑍍𑌧𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 𑌪𑌞𑍍𑌚𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑍇, "𑌤𑌤𑌸𑍍𑌤𑍁 𑌸𑍁𑌮𑌹𑌾𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑍋 𑌮𑌾𑌲𑍍𑌯𑌵𑌾𑌨𑍍𑌨𑌾𑌮 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌃 । 𑌰𑌾𑌵𑌣𑌸𑍍𑌯 𑌵𑌚𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌇𑌤𑌿 𑌮𑌾𑌤𑌾𑌮𑌹𑍋𑌽𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 ॥௬॥ 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌸𑍍𑌵𑌭𑌿𑌵𑌿𑌨𑍀𑌤𑍋 𑌯𑍋 𑌰𑌾𑌜𑌾 𑌰𑌾𑌜𑌨𑍍𑌨𑌯𑌾𑌨𑍁𑌗𑌃 । 𑌸 𑌶𑌾𑌸𑍍𑌤𑌿 𑌚𑌿𑌰𑌮𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌮𑌰𑍀𑌂𑌶𑍍𑌚 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌵𑌶𑍇 ॥௭॥ 𑌸𑌨𑍍𑌦𑌧𑌾𑌨𑍋 𑌹𑌿 𑌕𑌾𑌲𑍇𑌨 𑌵𑌿𑌗𑍃𑌹𑍍𑌣𑌂𑌶𑍍𑌚𑌾𑌰𑌿𑌭𑌿𑌃 𑌸𑌹 । 𑌸𑍍𑌵𑌪𑌕𑍍𑌷𑌵𑌰𑍍𑌧𑌨𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌮𑌹𑌦𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌮𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 ॥௮॥ 𑌹𑍀𑌯𑌮𑌾𑌨𑍇𑌨 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑍋 𑌰𑌾𑌜𑍍𑌞𑌾 𑌸𑌨𑍍𑌧𑌿𑌃 𑌸𑌮𑍇𑌨 𑌚 । 𑌨 𑌶𑌤𑍍𑌰𑍁𑌮𑌵𑌮𑌨𑍍𑌯𑍇𑌤 𑌜𑍍𑌯𑌾𑌯𑌾𑌨𑍍𑌕𑍁𑌰𑍍𑌵𑍀𑌤 𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌮𑍍 ॥௯॥ 𑌤𑌨𑍍𑌮𑌹𑍍𑌯𑌂 𑌰𑍋𑌚𑌤𑍇 𑌸𑌨𑍍𑌧𑌿𑌃 𑌸𑌹 𑌰𑌾𑌮𑍇𑌣 𑌰𑌾𑌵𑌣 । 𑌯𑌦𑌰𑍍𑌥𑌮𑌭𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌸𑍍𑌸𑍍𑌥 𑌸𑍀𑌤𑌾 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌪𑍍𑌰𑌦𑍀𑌯𑌤𑌾𑌮𑍍 ॥" 𑌇𑌤𑌿 𑌮𑌾𑌲𑍍𑌯𑌵𑌤𑍋𑌕𑍍𑌤𑍋𑌽𑌪𑌿 𑌰𑌾𑌵𑌣𑌃 𑌉𑌤𑍍𑌤𑌰𑌸𑌰𑍍𑌗𑍇, '𑌤𑌤𑍍𑌤𑍁 𑌮𑌾𑌲𑍍𑌯𑌵𑌤𑍋 𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌹𑌿𑌤𑌮𑍁𑌕𑍍𑌤𑌂 𑌦𑌶𑌾𑌨𑌨𑌃 । 𑌨 𑌮𑌰𑍍𑌷𑌯𑌤𑌿 𑌦𑍁𑌷𑍍𑌟𑌾𑌤𑍍𑌮𑌾 𑌕𑌾𑌲𑌸𑍍𑌯 𑌵𑌶𑌮𑌾𑌗𑌤𑌃"

𑌆𑌰𑌣𑍍𑌯𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 𑌏𑌕𑍋𑌨𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿𑌂𑌶𑍇 𑌸𑍀𑌤𑌾𑌹𑌰𑌣𑌾𑌯 𑌚 𑌸𑌾𑌹𑌾𑌯𑍍𑌯𑌂 𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌤𑍇 𑌰𑌾𑌵𑌣𑌾𑌯 𑌮𑌾𑌰𑍀𑌚𑌃, "𑌅𑌹𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌜𑍍𑌞𑍋 𑌨 𑌯𑍁𑌦𑍍𑌧𑌂 𑌤𑍇𑌨 𑌤𑍇 𑌕𑍍𑌷𑌮𑌮𑍍 । 𑌬𑌲𑌂

தமர்" "கோவிந்தன்" இத்யாதிகளைப்பற்ற - **இதுதான் இவர் தம்மளவிலன்றிக்கே** இத்யாதி. "அவன் க்ருபைக்கு விஷயமாக்குவோம்" என்றதின் விவரணம்-**நாம் பெற்றபேறு எல்லாரும்** இத்யாதி. பாட்டுக்களிலே யிறங்கி உக்தார்த்தத்தை விவரிக்கிறார் - **இவர் தாம்** இத்யாதி. **பரிகரமாகவுடைத்தாய்** - பரிகரமாகவுடைய ஸர்வேஶ்வரனை விஷயமாகவுடைத்தாய். பிராட்டி திருவடி திருவநந்தாழ்வா னென்றதுக்கு - "அர்ணவதரவணே மேல்" இத்யாதௌ ஹ்ருதயம். **ஸ்வயத்நத்தால் ப்ராபிக்க அரிதா** யென்றது-"ஆர்காண்பாரே" என்றத்தைப் பற்ற. **வருத்தமறப் பெறலாய்** என்றது - "புணைவன்" என்றத்தைப்பற்ற. "நலமந்தமில்லதோர்நாடு" என்றத்தைப்பற்ற - **ஸம்ஸாரத்தில் போகங்கள்** இத்யாதி. மேலெல்லாம் - "𑌪𑌰𑌿𑌪𑍂𑌰𑍍𑌣𑌾𑌨𑌵𑌰𑌤𑌨𑌿𑌤𑍍𑌯𑌵𑌿𑌶𑌦𑌤𑌮" இத்யாதி ஶ்ருத்யவாக்யம் அநுஸந்தேயம். **அபரிச்சிந்நமாய் இருக்குமென்று** கூட்டி நிர்வஹிப்பது. **தமக்கும் தம்பரிகாரத்துக்கும்** என்றது-"கேசவன்தமர்" இத்யாதியைப் பற்ற. **அவன் கொடுப்பானாகப் பாரிக்கிறபடியை** என்றது-"ஆள்வரெம்மாவீடே" என்றதிலே ஸூசிதம். **ஹிதம் அருளிச்செய்ய** என்றது - "நாடு புகுவீர்" என்றத்தைப் பற்ற. **பழையநிலை** - பூர்வஸ்த்திதி. **மால்யவான் தொடக்கமானார்** என்றது-மாரீசன், ஸ்ரீவிபீஷணாழ்வான், இவர்களை. "𑌤𑌨𑍍𑌮𑌹𑍍𑌯𑌂 𑌰𑍋𑌚𑌤𑍇 𑌸𑌨𑍍𑌧𑌿𑌃 𑌸𑌹 𑌰𑌾𑌮𑍇𑌣 𑌰𑌾𑌵𑌣 । 𑌯𑌦𑌰𑍍𑌥𑌮𑌭𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌸𑍍𑌸𑍍𑌥 𑌸𑍀𑌤𑌾 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌪𑍍𑌰𑌦𑍀𑌯𑌤𑌾𑌮𑍍" என்று மால்யவானும், "𑌨 𑌵𑌿𑌰𑍋𑌧𑍋 𑌬𑌲𑌵𑌤𑌾 𑌕𑍍𑌷𑌮𑍋 𑌰𑌾𑌵𑌣 𑌤𑍇𑌨 𑌤𑍇" என்று மாரீசனும், "𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌯𑍇 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌬𑌨𑍍𑌧𑍁𑌭𑌾𑌵𑌾𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌷𑍍𑌵 𑌵𑌚𑌨𑌂 𑌮𑌮 । 𑌇𑌦𑌂 𑌤𑌥𑍍𑌯𑌂 𑌚 𑌪𑌥𑍍𑌯𑌂 𑌚 𑌦𑍀𑌯𑌤𑌾𑌮𑌸𑍍𑌯 𑌮𑍈𑌥𑌿𑌲𑍀" என்று விபீஷணாழ்வானும் சொன்னார்களிறே.

'நாம் நம்முடைய அநுபவத்தைவிட்டு இவர்களோடே துவக்குண்கிற இதுக்கு ப்ரயோஜநமென்?' என்று, வழிபறிக்கும்நிலத்தில் தம்கைப்பொருள்கொண்டு தப்பினார் ஹ்ருஷ்டராமாபோலே, 'நாம் முந்துறமுன்னம் இவர்களைப்போலே யாகாதொழியப் பெற்றோமிறே' என்று ஸ்வலாபத்தை அநுஸந்தித்து இனியராகிறார்.

முதற்பாட்டு.

அணைவதரவணைமேல் பூம்பாவையாகம்
புணர்வதுஇருவரவர்முதலுந் தானே
இணைவனுமெப்பொருட்கும் வீடுமுதலாம்
புணைவன் பிறவிக்கடல்நீந்துவார்க்கே.

ஆ.—*நாகபர்யங்கஶாயி யாகையாலும், ஸ்ரீய:பதியாகையாலும், ப்ரஹ்மருத்ராதிகளுக்கு நிர்வாஹகனாகையாலும், ஸர்வாத்மஸஜாதீயதயா அவதீர்ணனாய்க்கொண்டு ஸர்வஜகத்ரக்ஷகனாகையாலும், முமுக்ஷுக்களுக்கு ப்ரதிபந்தக நிவர்த்தகனாய்க்கொண்டு மோக்ஷப்ரதனாகையாலும், நாராயணனே ஸர்வேஶ்வர னென்கிறார்.*

[illegible]

[illegible]

துவக்குண்கிற - *ஈடுபடுகிற.* ஸ்வலாபத்தை யநுஸந்தித்து *என்றது - "கண்ணனை நான் கண்டேனே" என்றதைப்பற்ற.* இனியராகிறார் - *ப்ரீதராகிறார்.*

ஒ.—முதற்பாட்டில், இத்திருவாய்மொழியில் ப்ரதிபாதிக்கிற அர்த்தத்தை ஸம்க்ஷேபிக்கிறார்.

[அணைவதென்று தொடங்கி] - பெரியபிராட்டியாரும் எம்பெருமானும் திருவநந்தாழ்வான்மேலே யிருக்குமிருப்பைக் காண்கை முக்தப்ராப்யமென்று கருத்து. ஆகம் - உடம்பு. [இருவரவர்] - ப்ரஸித்தரான ப்ரஹ்மருத்ரர்கள். [இணைவனென்று தொடங்கி] - தேவமநுஷ்யாதி ஸமஸ்த ஜந்து ஸஜாதீயனாய் வந்து திருவவதாரம்பண்ணி மோக்ஷப்ரதனும். [புணைவன்] - துஸ்தரமான ஸம்ஸாரத்தை "கடக்கவேணும்" என்றிருக்கும் ஆஸ்ரிதர் பரமெல்லாம் தானே நிர்வஹிப்பானாகை.

ப.—முதற்பாட்டில், இத்திருவாய்மொழியில் அர்த்தத்துக்கு ஸங்க்ரஹரூபமான ஸர்வநிர்வாஹகத்வத்தை அருளிச்செய்கிறார்.

அரவு அணைமேல் - திருவநந்தாழ்வானாகிற அணைமேலே, அணைவது - அபிமதமாகச் சேர்வது, பூ பாவை - பூவிலே பரிமளம் வடிவுகொண்டாற்போலே போக்யபூதையான பிராட்டியின், ஆகம்-திருமேனியை, புணர்வது - (போக்யமாக) ஸம்ஸ்லேஷிப்பது, (இது நித்யவிபூதிநிர்வாஹகத்வம்); (லீலாவிபூதிநிர்வஹணத்தில்), அவர் - காரணேஸ்வரராக ப்ரஸித்தரான, இருவர்-ப்ரஹ்மருத்ரர்கள், (இவருடைய உத்பத்திஸ்தித்யாதிகளுக்கும்), தானே - தானே, முதலும் - ஹேதுவாயிருக்கும், எப்பொருட்கும்-(ரக்ஷ்யமான ஜகத்தில்) ஸமஸ்தபதார்த்தங்களுக்கும், இணைவனும் - (அவதாரமுகத்தாலே) ஸஜாதீயனாயிருக்கும், வீடு - (ரக்ஷணத்துக்கு மேலெல்லையான) மோக்ஷத்துக்கு, முதலாம் - ஹேதுவாயிருக்கும், (இத்தால் ஸர்வமுக்திப்ரஸங்கியாமைக்காக), பிறவி-ஸம்ஸாரமாகிற, கடல்-கடலை, நீந்துவார்க்கு-நீந்திக்கரையேற வேண்டுவார்க்கு, புணைவன் - தெப்பமாமவனா யிருக்கும், புணைவன் - தெப்பமாமவன்.

இ.—முதற்பாட்டு. ஸர்வஸங்க்ரஹமாய், இதிலேயோரொரு பதத்தைப்பற்றி - மேலிற்பாட்டுக்களும், அவை தம்மைப்பற்றி யெழுவனவுமாகிறன மேல்.

[அணைவதரவணைமேல்] - மென்மை, குளிர்த்தி, நாற்றம், இவற்றை ஸ்வபாவமாக வுடைய திருவநந்தாழ்வான்மேலே யணைவது. ஶேஷபூதன் அடிமைசெய்தல்லது தரிக்கமாட்டாதாப்போலே, ஶேஷியும் திருவநந்தாழ்வான்மேலே யணைந்தல்லது தரியானாயிருக்கிறபடி. [பூம்பாவை]- பூமென்று - அழகு. பாவையென்று-ஸ்த்ரீத்வம். நிரவதிகமான போக்யதையையும் ஸ்த்ரீத்வத்தையு முடையளாயிருக்கை. தேஹகுணத்தாலும் ஆத்மகுணத்தாலும் குறைவற்றிருக்கை. [ஆகம் புணர்வது]-இவளுடைய ரூபகுணத்திலே துவக்குண்டு ஆத்மகுணத்தளவும் செல்லமாட்டாதிருக்கை. அணைவது, புணர்வது என்கையாலே - போகம் ஒத்திருக்கிறபடி. "ஶயானௌ ஸுகம்" (?). மாதா பிதாக்கள் கூடவிருக்கும் படுக்கையிலே ஸம்பந்தமே ஹேதுவாக வேறும் புத்ரனைப்போலே, பிராட்டியும் அவனும் திருவநந்தாழ்வான்மேலே யிருக்க "தமேவம் விதாநேநாப்யாரோஹதி" - என்கிறபடியே அதிலேயேற, அவர்கள் இவனை யணைக்கை யிறே முக்தப்ராப்யம். [இருவரவர் முதலுந்தானே] - "நப்ரஹ்மா நேஶாநः" என்று ஶ்ருதி ப்ரஸித்தரான ப்ரஹ்மருத்ரர்களுக்குக் காரணபூதன். "காரணந்து த்யேயः" என்கிறபடியே உபாஸ்யனும் அவனே. ப்ரஹ்மாதிகளுக்குக் காரணத்வமில்லை, ஶ்ரவணாத்ரயாக்விதாகையாலே. [இணைவனாமெப்பொருட்கும்] - தேவாதி ஸகலபதார்த்தங்களோடும் ஸஜாதீயனா யவதரிக்கும். அவதாரப்ரயோஜநம் சொல்லுகிறது [வீடுமுதலாம்] - மோக்ஷஹேதுவாகைக்காக அவதரிக்க

வேண்டுகிறது. பரமபதம், சென்று அபேக்ஷிக்க நிலமல்லாமையாலே, ஸஜாதீயனுய் வந்து அவதரிக்கிறது. உத்க்ருஷ்டனுகில் வெருண்டு அகலுவர்கள், தாழப்பிறக்கில் காற்கடைக்கொள்ளுவர்கள். ஸர்வஸாதாரணன் மோக்ஷப்ரதனுகைக்காக வந்தவதரித்தால், ஸர்வமுக்தி ப்ரஸங்கியாதோவென்னில். [பிறவிக்கடல் நீந்துவார்க்குப் புணைவனும்] - "ஸம்ஸாரமாகிறதொருகடல், அது நம்மாற்கடக்கவரிது, ஒரு ஸர்வஶக்தியைப்பற்றிக் கடக்கவேணும்" என்று நினைப்பார்க்கு ப்ரதிபூவாய்த் தலைக்கட்டிக் கொடுக்கும். ஸர்வபர நிர்வாஹகனிறே - ப்ரதிபூ. "விஷ்ணுபோதம்" என்கையாலே தெப்பமென்னவுமாம்.

ஈடு.—முதற்பாட்டு. முக்தப்ராப்யபோகத்தைச்சொல்லுகிறது. முதற்பாட்டுத்தான் இத்திருவாய்மொழிக்கு ஸங்க்ரஹமாய், மேலுள்ளபாட்டுக்களிலே ஒருபதத்தைப்பற்றிப் போருமவையும்; அதுதன்னைப்பற்றி யெழுமவையுமா யிருக்கிறது

[அணைவது அரவணைமேல்] - முக்தப்ராப்யபோகந்தான் இருக்கிறபடி. பர்யங்கவித்யையிற் சொல்லுகிறபடியே, ஸர்வேஶ்வரனும் பிராட்டிமாருங் கூடத் திருவநந்தாழ்வானுகிற படுக்கையிலே யிருக்கிற இருப்பிலே, இச்சேதநன் முக்தனுய்ச்சென்று கிட்டினுல் "அஹம்ப்ரஹ்மாஸ்மி" (அஹம்ப்ரஹ்மாஸ்மி) நான் ராஜபுத்ரன், ப்ரஹ்மப்ரகாரபூதன் என்னக்கடவன்; 'ஆகில் இங்ஙனே போராய்' என்றுல், அவன் அங்கீகாரம்பெற்று, மாதாபிதாக்களிருந்த படுக்கையிலே ப்ரஜை சென்று ஏறுமாபோலே "தமேவம்வித்பாதேநாத்யாரோஹதி" (தமேவம்வித்பாதேநாத்யாரோஹதி) என்று ஏறக்கடவனுகச் சொல்லுகிற அப்பேற்றைச் சொல்லுகிறது. [அணைவது] - தாபத்ரயங்களாலே நொந்த ஸம்ஸாரிசேதநன், 'ஏஷ ப்ரஹ்மப்ரவிஷ்டோஸ்மி' (ஏஷப்ரஹ்மப்ர

ப்ர:—முதற்பாட்டு (அணைவதரவணைமேல்). (அணைவது)—ஸ்ரீஹாரீதே (சோ-ச) ஹரீதாயாம், "க்ரீஷ்மே ஸீதமிவ ஹ்ரதம் ஶிஶுரம் ஸ்தநந் மாதா ஹரீம் ஸ்நாதரம் । ஏஷ ப்ரஹ்ம ப்ரவிஷ்டோஸ்மி க்ரீஷ்மே ஶீதமிவ ஹ்ரதம் ॥ ௩௦॥"

முதற்பாட்டு - அணைவது இத்யாதி. "அணைவதரவணைமேல் பூம்பாவையாகம்புணர்வது" என்கிற இவ்வளவைப் பராமர்ஶித்து அருளிச்செய்கிருர் - முக்தப்ராப்ய இத்யாதி. "இருவரவர்முதலுந்தானே" இத்யாதியைக் கடாக்ஷித்து அருளிச்செய்கிருர் - முதற்பாட்டுத்தான் இத்யாதி. அதுதன்னைப்பற்றி - அப்பாட்டுத் தன்னைப்பற்றி.

முக்தப்ராப்ய போகந்தான் இருக்கிறபடி யென்கிற விடத்திலே - "ததிதம் ப்ராணீது" என்கிற ஶ்லோகமும், "ஸவ்யம் பாதம்" என்கிற ஶ்லோகமும் அநுஸந்திப்பது. "அணைவதரவணைமேல்" என்றுல்- முக்தப்ராப்யபோகம் எப்படி சொல்லிற்றும்? என்ன - பர்யங்கவித்யையில் இத்யாதி. 'ஸஹஸ்ரஸ்தூணே விமாநே மணிமயே திவ்யே பர்யங்கே' என்ற - திருமாமணி மண்டபத்திலே, திருவநந்தாழ்வான்மேலே தர்மாத்யஷ்டபீடத்தை யுடைத்தான திவ்யஸிம்ஹாஸநத்தின்மேலே, "தஸ்மிந் பத்மே" என்கிற பத்மத்திலே, "விமலோத்கர்ஷிணீ ஜ்ஞாநா க்ரியா யோகா ப்ரஹ்வீ ஸத்யா ததேஶாநாநுக்ரஹா" என்று அந்தப்பத்மத்தின் அஷ்டதளத்திலே, விமலாத்யஷ்ட பரிசாரிகைகளும், அதின் கர்ணிகையிலே யிருக்கிற "அநுக்ரஹே" என்றவளோடேகூடத் திருவெண்சாமரம்பரிமாற, அந்தக்கர்ணிகையிலே திருவநந்தாழ்வான்மேலே பிராட்டிமாரோடேகூட வீற்றிருக்குமது - பர்யங்க வித்யாப்ரகாரம்; கௌஷீதகிப்ராஹ்மணத்திலே சொல்லப்பட்டது என்று அருளிச்செய்வர். விஶிதே - விஶாலே. உக்ரோ - அகபியவநீயே "அஹம்ப்ரஹ்மாஸ்மி" என்ற ஸாமாநாதிகரண்யம் - காரியகாரண பாவத்தாலேயாதல், ஶரீராத்மபாவத்தாலேயாதல். இந்த இரண்டையும் அருளிச்செய்கிருர் - நான் ராஜபுத்ரன் ப்ரஹ்மப்ரகாரபூதன் என்று. ராஜபுத்ரனென்கையாலே - கார்யகாரணபாவம். ப்ரஹ்மப்ரகாரபூத னென்கையாலே - சரீராத்மபாவம். ராஜபுத்ரன் - ப்ரஹ்மபுத்ர னெனறபடி,

விஷ்டோஸ்மி) என்கிறபடியே - அப்பெரியமடுவிலே விழுந்து தன்தாபமெல்லாம் ஆறுமாபோலேயா யிற்று, முதலிலே இவை யில்லாதவன் திருவநந்தாழ்வான்மேலே யணைந்து, இவை உண்டாய்க் கழிந்தாரைப்போலே யிருக்கும்படி. விடாயர் மடுவிலே விழுமாபோலே யாயிற்று அணைவது. [அரவணைமேல்]-நாற்றம், குளிர்த்தி, மென்மைகளை ஸ்வபாவமாகவுடைய திருவநந்தாழ்வானோடே யணைவது; 'புல்குமணையாம்' என்னக்கடவதிறே அவனை. ஶேஷபூதன் அடிமை செய்தல்லது தரியாதாப்போலே, ஶேஷியும் ஶேஷபூதனோடே அணைந்தல்லது தரியாதானா யிருக்கிறபடி. [பூம்பாவையாகம்புணர்வது] - போக்யதைகவேஷையாய் நிருபாதிக ஸ்த்ரீத்வத்தையுடைய பெரியபிராட்டியாரோடே கலந்துவர்த்திப்பது. [ஆகம்புணர்வது]-ஆத்மகுணங்கள் குமரிருந்துபோமித்தனை. 'அணைவது, புணர்வது' என்கிறதிறே - மூவர்க்கும் போகம் ஒத்திருக்கையாலே. **'ரம்யமாவஸதம் க்ருத்வா'** (ரம்யமாவஸதம்க்ருத்வா) - அறுபதினாயிரமாண்டு மலங்கின்ற சக்ரவர்த்தி தன் ஆதரத்துக்குப் போரும்படி சமைத்த மாளிகைகளிலும், திருவுள்ளத்துக்குப்பொருந்தி அழகியதா யிருந்தது காட்டிலே இளையபெருமாள் சமைத்த ஆஶ்ரமமாயிற்று. **'த்ரயோ ரமமாணா:'** (த்ரயோரம

ப்ர:—(போகமொத்திருக்கையாலே) ஸ்ரீராமாயணே, "ரம்யமாவஸதம் க்ருத்வா ரமமாணா வநே த்ரய:। தேவகந்தர்வஸங்காஶாஸ் தத்ர தே ந்யவஸந் ஸுகம்॥"

போராய் - *வாராய்.* ஏவம்வித் - *ஏவம்ப்ரகாரேணோபாஸக:.* தம் - *பாதேநாத்யாரோஹதீத்யந்வய:. அபிமத விஷயத்தை அணைவார் அத்யபிநிவிஷ்டராய் அணையுமாபோலே,* இவனோடே *அணையும்போது அபிநிவேசம் தோற்ற அணையுமாகையாலே அவ்வபிநிவேசத்தை அருளிச்செய்கிறார்*-தாபத்ரய இத்யாதி. *இது* - "அணைவது" *என்ற பத ஸாமர்த்ய ஸித்தமான ஸாவம். ஸ்ரீபாரதே மங்கிகீதாயாம், "த்ருக்ஷாகாராம்ஹயம்ஸ்ராயம்ஶோ ஹம்ஶோஷணஸ்தாஸ் । ஶஷமபஹ்ருதவிஷோஷ்ணிஃ ஶீதீஹ்ருதம்ஸ் ஸுகம்". "ப்ரஹ்மஹ்ரதாக்ஷம்பம் ஹணஸ்நாத்வாஹ்ருதேஹ்ருஹிஷீயதே" என்ற ப்ரஹ்மஶப்தத்தின் நிருக்தியைப்பற்ற*- அப்பெரியமடுவிலே *என்றது.* இவையில்லாதவன் - *தாபங்களில்லாதவன். "ஶீதீஹ்ருதம்ஸ் ஸுகம்" என்றதுக்கு அர்த்தம்*-விடாயர் *இத்யாதி. "அரவணை" என்ற பதத்துக்கு வாஸனை* - நாற்றம் *இத்யாதி.* மென்மை - *ம்ருதுத்வம். "* அணைமேல் *" என்றது* - *அணையோடே யென்று த்ருதீயாவிபக்தியாக்கி* - திருவநந்தாழ்வானோடே *என்கிறது உக்தார்த்தே ப்ரமாணம்* - புல்குமணையாம் என்னக்கடவதிறே அவனை *என்று. முதற்றிருவந்தாதி.* புல்குமணையாம் - *சாய்ந்துகொள்ள யோக்யமான அணையா மென்றபடி. ஸம்ஸாரதப்தனாகையாலே தன்னைப்பற்றி இவன் ஆநந்திக்கிறான், ஸ்வதோநிரதிசயாநந்தியானவன் இவனைப்பெற்று ஆநந்திக்கக் கூடுமோ?* என்ன - சேஷபூதன் *இத்யாதி; ஸங்கத்தாலே யென்றபடி. "*பூம்*" என்று* - *அழகாய், அத்தால், போக்யதையைச் சொல்லுகிறது. ஸ்த்ரீத்வம் அல்லாதார்க்கும் இவளுக்கும் ஒத்திருக்கையாலே லக்ஷ்மியென்ன அமைந்திருக்க, "ஸ்த்ரீ" என்று விசேஷிக்கிறது* - *கர்மோபாதிகமல்லாத ஸ்த்ரீத்வத்தையுடைய ளாகையாலே; அவர்களில் வ்யாவ்ருத்தமான* ஸ்த்ரீத்வமுண்டென்னுமிடம் *தோன்ற,* நிருபாதிக ஸ்த்ரீத்வத்தையுடைய - *என்கிறார். "ஆகம்புணர்வது" என்ற பதப்ரயோகத்துக்கு ஸாவம்* - ஆத்மகுணங்கள் *இத்யாதி.* குமரிருக்கை - *குமரியா யிருக்கை யென்று ஶப்தார்த்தம். அதாவது* - குமரி - *குமாரீ, கந்நிகை. அநுபவயோக்யமன்றிக்கே யிருக்கை யென்றபடி.* ஆத்மகுணங்கள் *இத்யாதி வாக்யத்துக்கு* - *பரமரஸிகனான ஈஶ்வரன் பிராட்டியுடைய விக்ரஹ ஸௌந்தர்யாதிசயாத்ரூபகுணங்களையிட்டு ஆத்மகுணபர்யந்தம் போகமாட்டா னென்று கருத்து.* அணைவது புணர்வதென்கிறதிறே *யென்கிற வாக்யம், வ்யாக்யாதாவின் ஈடுபாடு. இவ்வாக்யத்துக்குக் கருத்து-அக்ர்யப்ராய ந்யாயத்தாலே, பிராட்டியோடேகூட எடுக்கையாலே* - *இவ்விருவருக்கும் பிறக்கும் ரஸம், சேர்த்தியை அநுபவிக்கையாலே* திருவநந்தாழ்வானுக்கும் *பிறக்குமென்று. உக்தத்துக்கு ஸம்வாதம்* - ரம்யமாவஸதம் *இத்யாதி.* ஸ்ரீஸங்க்ஷேபே. *"ரம்யம்" என்றதுக்கு ஸாவம்* - அறுபதினாயிரம் *இத்யாதி.* சமைத்த - *ஆக்கின, கட்டின வென்றபடி. நாயகநாயகிகள் பரஸ்பரஸம்ஶ்லேஷத்தாலே ரமிக்கிறார்கள்,* இளையபெருமாள் *ரமிக்கும்படியென்?*

மாணு:) - நாயகரான பெருமாள் ரஸமல்லவே பிராட்டியது, பிராட்டிக்குப் பிறக்கும் ரஸமன்றே பெருமாளது, அப்படியே, அச்சேர்த்திகண்டு உகக்குமவரிறே இளையபெருமாள். 'வநே' (வநே)- "படைவீடர் காட்டிலே ரமித்தார்கள்" என்று தோற்றுதே, காடர் காட்டிலே வர்த்தித்தாற்போலே பொருந்தியிருந்தபடி. ஆகச் சொல்லிற்றாயிற்று - ஸர்வேஶ்வரனும் பிராட்டிமாருமாகத் திருவநந்தாழ்வானுகிற படுக்கையிலே இருக்கக் கண்டு உகந்து அடிமை செய்கை முக்தப்ராப்ய போகமாகிறது. [இருவரவர்முதலுந்தானே] - ப்ரஹ்மருத்ரர்களுக்குக் காரணபூதனாயிருக்கும். 'ஸப்ரஹ்மா ஸஶிவ:' (ஸப்ரஹ்மாஸஶிவ:) என்கிற ப்ரஸித்தியாலே 'இருவரவர்' என்கிறார். அவ்விபூதியைச் சொல்லுகிற விடத்திலே 'அணைவது, புணர்வது' - என்கையாலே அது போகபூமியாய் நித்யமாயிருக்கு மென்னுமிடமும், இங்கு 'முதல்' என்கையாலே - இவ்விபூதியில் கார்யகாரணபாவத்தால் வந்த ஸம்பந்தமும், இதுதான் ஆவது அழிவதாமென்னு மிடமும் சொல்லுகிறது. இத்தால்-ப்ரஹ்மருத்ரர்கள் ஸம்ஸாரபத்தர்களென்னுமிடமும், ஈஶ்வரனே மோக்ஷப்ரதனாக வல்லானென்னு மிடமும் சொல்லுகிறார். ஆக, ஆஶ்ரயணீயன் அவனே, ப்ரஹ்ம ருத்ரர்கள் ஆஶ்ரயணீயரல்ல ரென்கை; 'ஆப்ரஹ்மஸ்தம்பபர்யந்தா ஜகதந்தர்வ்யவஸ்த்திதா:| ப்ராணிந: கர்மஜநிதஸம்ஸாரவஶவர்த்திந:' (ஆப்ரஹ்மஸ்தம்பபர்யந்தா ஜகதந்தர்வ்யவஸ்த்திதா: ப்ராணிந:கர்மஜநிதஸம்ஸாரவஶவர்த்திந:) என்னாநின்றதிறே. இப்படி ப்ரஹ்மருத்ரர்களுக்கும் காரணபூதனாகையாலே வந்த மேன்மையையுடையவன். [எப்பொருட்குமிணைவனும்] - தேவாதி ஸகல பதார்த்தங்கள்தோறும் ஸஜாதீயனாய் வந்து அவதரிக்கும். ப்ரஹ்மருத்ரர்கள் நடுவே வந்து அவதரிப்பது, உபேந்த்ரனாவது, சக்ரவர்த்தி ஸ்ரீவஸுதேவர்களளவிலே அமைத்துவந்துபிறப்பது, மஹாவராஹமாவது, குப்ஜாம்ரமாவதாகாநிற்கும். இப்படி தாழ

ப்ர:—(இருவர்)—ஶ்ரீ நாராயணாநுவாகே "தஸ்யாஶ்ஶிகாயா மத்யே பரமாத்மா வ்யவஸ்த்தித: ஸப்ரஹ்மா ஸஶிவஸ்ஸேந்த்ர: ஸோக்ஷர: பரம: ஸ்வராட்"

ஶ்ரீ விஷ்ணுதர்மே "ஆப்ரஹ்மஸ்தம்பபர்யந்தா ஜகதந்தர்வ்யவஸ்த்திதா: | ப்ராணிந: கர்மஜநிதஸம்ஸாரவஶவர்த்திந: ||" இதி ஶௌநகவசநம்.

(ரக்ஷணார்த்தமாக), கிடந்து - ("ப்ரதிஶிஶ்யே மஹோததே:" என்று கடற்கரையிலே வழிவேண்டிக்)கிடந்தும், இருந்து - ("உபோபவிஷ்டௌ" என்று திருச்சித்ரகூடத்திலே) இருந்தும், நின்று - (அவஷ்டப்ய ச திஷ்டந்தம்" என்றும் ராவணவதாநந்தரம் தேவதாஸந்நிதியில் வில்லை நடுக்கொத்துப் பிடித்து) நின்றும், (அன்றியே "புளிங்குடிக் கிடந்து, வரகுணமங்கையிருந்து வைகுந்தத்துள் நின்று" என்கிறபடியே அர்ச்சாவதாரஸ்த்தலத்திலே கிடந்துமிருந்தும் நின்றும்), அளந்து - (த்ரிவிக்ரமனுயநங்யார்ஹமாம்படி) அளந்தும், கேழலாய்-வராஹரூபியாய், கீழ் - (ப்ரளயஜலத்துக்குக்)கீழே, புக்கு - புக்கு, இடந்திடும் - (அண்டகடாஹத்தினின்றும்) ஒட்டுவிடுவித்து எடுத்தும், (மஹாப்ரளயத்திலே வடதளசாயியாய்), தன்னுள் - வயிற்றுக்குள்ளே, கரக்கும் - (தெரியாதபடி) கரந்தும், உமிழும் - (வெளிநாடுகாணும்படி) உமிழ்ந்தும், தடம் - இடமுடைத்தான, பெரு - பெரிய, தோள் - திருத்தோள்கள், ஆர - நிரம்பும்படி, தழுவும்-(அஸாதாரணவிக்ரஹத்தோடே) தழுவியும், (இப்படி), பாரென்னும் - பூமியென்றுசொல்லப்படுகிற, மடந்தையை - மடந்தையை, மால் - (ஸர்வாதிகனான) ஈஶ்வரன், செய்கின்ற-பண்ணுகிற, மால் - வ்யாமோஹத்தை, காண்பார் - அறியவல்லார், ஆர் - ஆர்? அதிஶயிதஜ்ஞாநர்க்கும் அறியவொண்ணாதென்று கருத்து.

இ.—ஏழாம்பாட்டில், "ஒருதேவதை இவனை யநுவர்த்தித்தது" என்று ஏற்றஞ்சொல்லவேணுமோ, இவ்விபூதி அவனுக்கு அஸாதாரணமென்னுமிடத்துக்குத் தனித்தனியே பூர்ணமான உபபத்திகள் அநேகமன்றோ வென்கிறார்.

[கிடந்து] - திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளினபடியாதல், "பாஹும் புஜகபோகாபமுபதாயாரிஸூதந:। அஞ்ஜலிம் ப்ராங்முக: க்ருத்வா ப்ரதிஶிஶ்யே மஹோததே:" என்று கடற்கரையிலேகண்வளர்ந்தருளினபடியாதல். [இருந்து] - "உபோபவிஷ்டௌ [illegible]" என்று - சித்ரகூடத்திலிருப்பு. [நின்று] - "அவஷ்டப்ய ச திஷ்டந்தம் ததர்ஶ தநுரூர்ஜிதம்। ராமம் ராமாநுஜம் சைவ பர்த்துஶ்சைவாநுஜம் ஶுபா" என்று ராவணவதம் பண்ணி வீரஶ்ரீயோடே நின்றநிலை. [அளந்து] - மஹாபலி அபஹரித்த பூமியை எல்லை நடந்து மீட்டுக்கொண்டு. [கேழலாய்]-பூமியை ப்ரளயங்கொள்ளத் தன்மேன்மைபாராதே நீருக்குஞ் சேற்றுக்கும் இறாயாதவடிவைக்கொண்டு. [கீழ்புக்கிடந்திடும்] - அண்டபித்தியிலேபுக்கு ஒட்டுவிடுவித்துக்கொண்டேறினபடி. [தன்னுள்கரக்கும்] - ப்ரளயாபத்திலே ப்ரளயந்தனக்குத் தெரியாதபடி திருவயிற்றிலே வைத்துக்காக்கும். [உமிழும்] - "இவையென்பட்டனவோ" என்று உமிழ்ந்து பார்க்கும். [தடம்பெருந்தோளாரத்தழுவும்] - அவளோட்டை ஸ்பர்ஶத்தாலே மிகவும் பெருத்ததோளாலே ஆரத்தழுவும். பெருமைக்குமேலே, தடமென்றும் - பெருமையாய், அறப்பெருத்த தோளென்றபடி. [பாரென்னும் மடந்தையை] - பூமிக்கபிமாநிநியான பிராட்டியை. பூமியை ப்ரகாரமாக வுடையளாகையாலே, தத்வாசிஶப்தத்தாலே - இவளைச்சொல்லுகிறது. [மடந்தையை] - நிருபாதிக ஸ்த்ரீத்வத்தை யுடையவளை. [மால்] - ஸர்வேஶ்வரன். [செய்கின்றமால்] - பண்ணுகிற வ்யாமோஹம். [ஆர்காண்பாரே] - எத்தனையேனும் அளவுடையார்க்கும் காணப்போகாது. ப்ரஹ்மாதிகளுக்கு ப்ராப்தியில்லாமையே யன்றிக்கே, இவனுடைய வ்யாமோஹாதிஶயம் பரிச்சேதிக்கவும் மாட்டார்கள்.

௬௫.—ஏழாம்பாட்டு. ஒருவன் அநுவர்த்தநங்கொண்டு நிஶ்சயிக்கவேணுமோ? அவனுடைய இஷ்டஸர்வசேஷ்டாவிஷயமாயன்றே இஜ்ஜகத்து இருக்கிறது; இதுவே போராதோ பரத்வஹேது? என்கிறார்.

[கிடந்து] - திருப்பாற்கடலிலே கிடந்தபடியாதல்; "ப்ரதிஶிஶ்யே" (ப்ரதிஶிஶ்யே) என்னும்படியாகக் கடற்கரையிலே சாய்ந்தபடி யாதல். "பாஹும் புஜகபோகாபம்" (பாஹும்புஜகபோகாபம்) - திருவநந்தாழ்வான்மேலே சாய்ந்தாற்போலேயாயிற்று திருக்கையை மடித்துச் சாய்ந்தா லிருக்கும்படி. "அரிஸூதநः" (அரிஸூதநः) - கிடந்த கிடையிலே லங்கை குடிவாங்கவேண்டும்படி யிருக்கை. "ப்ரதிஶிஶ்யே மஹோததேः" (ப்ரதிஶிஶ்யேமஹோததேः) - ஒருகடலோடே ஒருகடல் ஸ்பர்த்தித்துச் சாய்ந்தாற்போலே யிருக்கை. [இருந்து] - பரம பதத்திலே யிருந்தபடியாதல்; "உடஜே ராமமாஸீநம்" (உடஜேராமமாஸீநம்) என்று ருஷிகளாஶ்ரமங்களிலே யிருந்து. [நின்று] - திருமலையிலே நின்றபடி யாதல்; ராவணவதஸமநந்தரத்திலே கையும் வில்லுமாய் லங்காத்வாரத்திலே நின்றநிலையாதல்; வாலியைக்கொன்று நின்ற நிலையாதல். "அவஷ்டப்ய ச திஷ்டந்தம் தநுஸ் ஸ்பர்ஶித்வா ... । ... ஸஹ ..." (அவஷ்டப்ய சதிஷ்டந்தம்

ப்ர:—(கிடந்து)—யுத்தகாண்டே, (உக) "தத ஸாகரவேலாயாம் தர்பாநாஸ்தீர்ய ராகவः । அஞ்ஜலிம் ப்ராங்முகः க்ருத்வா ப்ரதிஶிஶ்யே மஹோததேः॥க॥ பாஹும் புஜகபோகாபமுபதாயாரிஸூதநः । ஜாதரூபமயைஶ்சைவ பூஷணைர் பூஷிதம் புரா॥உ॥"

(இருந்து)—அயோத்யாகாண்டே ॥ ௬௯ ॥ சித்ரகூடே, "ததர்ஶ ... ஸ ... பர்ணஶாலாம் ... । உடஜே ராமமாஸீநம் ஜடாமண்டலதாரிணம்॥உ௫॥ க்ருஷ்ணாஜிநதரம் தம் து சீரவல்கலவாஸஸம்॥ ... ராமமாஸீநமபிதः பாவகோபமம்॥உ௬

ஏழாம்பாட்டு—கிடந்து இத்யாதி. ஒருவனநுவர்த்தந மென்றது - க்ருஷ்ணன் திருவடிகளிலே சாத்தின புஷ்பங்களைத் தன்தலையிலே தரித்து ருத்ரன் அநுவர்த்தநமாதல், அர்ஜுநன் அநுவர்த்தநமாதல்.

ப்ரதிஶிஶ்ய இதி - யுத்தகாண்டே, "தத ஸாகரவேலாயாம் தர்பாநாஸ்தீர்ய ராகவः । அஞ்ஜலிம் ப்ராங்முகः க்ருத்வா ப்ரதிஶிஶ்யே மஹோததேः । பாஹும் புஜகபோகாபமுபதாயாரிஸூதநः". ப்ரஸ்துதஶ்லோகார்த்தமாஹ - திருவநந்தாழ்வான் இத்யாதி. மடித்து-உபதாநமாகப் பண்ணி. "அரிஸூதநஸ்து - ப்ரதிஶிஶ்யே" இதி தத்காலவிஶேஷணம் ஶ்ருதிநிதாயாஹ - கிடந்த கிடையிலே இத்யாதி. ராமம்க்ருபாஸமுத்ரத்வேந விவக்ஷந்நாஹ - ஒருகடல் இத்யாதி. ஒருகடல் சாய்ந்தாற்போலே யென்றவிடத்திலே - "இவனும் கருணைக்கடலிறே" என்று அருளிச்செய்வர். அயோத்யாகாண்டே சித்ரகூடே, "ததர்ஶ ... பர்ணஶாலாம் ... । உடஜே ராமமாஸீநம் ஜடாமண்டலதாரிணம்". லங்காத்வாரத்திலே நின்றநிலை யென்றவிடத்திலே - "கோதண்டகோடிவிநிவேஶிதபாஹுதண்டோ ராவணஶாத்ரவதிதசாவஷ்டவஷ்டம் । ஆயோதநக்ஷிதிரஜः ... யுத்தவ்யாப்ருதம் ... ரகுவம்ஶகேதுः" என்றது அநுஸந்தேயம் என்கிற

ததர்ஸதநுரூர்ஜிதம்! ராமம் ராமாநுஜஞ்சைவ பர்துஸ்சைவாநுஜம்ஸபா) என்கிறபடியே. அவர்களுடைய ஸ்த்ரீகள் பக்கலிலே கேட்குமித்தனையிறே இவனுடைய பரத்வம்; "[illegible]" (தமஸஃ பரமோதாதா ஶங்கசக்ரகதாதரஃ) என்னுதல், "[illegible]" (த்வமப்ரமேயஸ்ச) என்னுதல் சொல்லாநிற்பர்களிறே. [அளந்து]-தன்னதானபூமியைமஹா

ப்ர:—(அவர்களுடைய ஸ்த்ரீகள் பக்கலிலே கேட்குமித்தனை)—[illegible]

(அளந்து)—[illegible] ॥ உம ॥ [illegible]

படியே - வாலியைக்கொன்று நின்றநிலையாதல் இத்யந்வயஃ. கிஷ்கிந்தாகாண்டே ஏகோநவிம்ஶே, "[illegible]" இத்யாதி (உடு). பரத்வப்ரதிபாதந ப்ரகரணத்திலே ராமாவதாரவ்ருத்தாந்தஞ் சொன்னது - "ராமனே ஸர்வஸ்மாத்பரன்" என்கைக்காகவன்றோ; அப்படி ராமனே ஸர்வஸ்மாத்பரனென்னுமிடத்தில் ப்ரமாணமுண்டோ? என்ன அருளிச்செய்கிறார் - அவர்களுடைய ஸ்த்ரீகள் இத்யாதி. கேட்கைக்கு அவர்கள் அப்படி சொன்னார்களோ? என்ன - தமஸஃபரம இத்யாதி. இதம் - மண்டோதரீவாக்யம். த்வமப்ரமேயஸ் சேத்யாதி - தாராவாக்யம். "[illegible]". இறுஞ்சிக் கோள்ள - பறித்துக்கொள்ள.

பலிபோல்வார் இருஞ்சிக்கொள்ள, அத்தை எல்லைநடந்துமீட்டுக்கொண்டு. [கேழலாய்க்கீழ்புக்கிடந்திடும்]-நீருக்கும் சேற்றுக்கும் இருயாத வராஹவேஷத்தைப் பரிக்ரஹித்து, ப்ரளயஸலிலத்துக்குள்ளே முழுகி அண்டபித்தியிலே சேர்ந்த பூமியைப் பிரித்தெடுக்கும். [தன்னுள்கரக்கும்] - "ரக்ஷிக்க" என்று ஒருபேரை யிட்டுக்கொண்டு கோம்பிலும் குளம்பிலும் கொள்ளாதே வயிற்றிலேவைத்து ரக்ஷித்தபடி. "மேலொருகாலம் ப்ரளயம்வரும்" என்று ஏலக்கோலி ப்ரளயம் வந்தாலும் 'இங்குண்டோ?' என்று இளைத்துக்காட்டலாம்படி முன்புத்தையதொன்றும் தெரியாதபடி வைக்கும். [உமிழும்] - 'இவை என்பட்டன' என்று பார்க்கைக்காகப் பின்னை வெளிநாடுகாண உமிழும். [தடம்பெருந்தோளாரத்தழுவும்] - மிகப்பணைத்த திருத்தோள்களாலே, ஆரும்படியாகத் தழுவும். [பாரென்னுமடந்தையை] - ஸ்ரீபூமிப்பிராட்டியை. பூமியை ப்ரகாரமாக வுடையளாகையாலே தத்வாசகஶப்தத்தாலே சொல்லுகிறது. தன்விபூதியினுடைய ரக்ஷணம் ஒருதலையானால் அவன் படும் பாட்டை அநுஸந்தித்து ஹ்ருஷ்டையாய் அதுக்கு அபிமாநிநியான ஸ்ரீபூமிப் பிராட்டி அணைக்கும், அத்தாலே தானும் ஹ்ருஷ்டனாய் அணையாநிற்கும். [மால்] - ஸர்வாதிகனான ஸர்வேஶ்வரன். [செய்கின்ற மால்] - அவனேற்றுகிற பிச்சை. [ஆர்காண்பாரே] - ஒருவராலே "இவ்வளவு" என்று பரிச்சேதிக்கலா யிருந்ததோ? (எ)

ப்ர:—(கேழலாய்க்கீழ்புக்கு)— ப்ரதமாம்ஶே சதுர்த்தே, "அகரோத் ஸ தநூமந்யாம் கல்பாதிஷு யதா புரா। மத்ஸ்யகூர்மாதிகாம் தத்வத் வாராஹம் வபுராஸ்தித:॥௮॥ வேதயஜ்ஞமயம் ரூபமஶேஷஜகத: ஸ்திதௌ। ஸ்தித: ஸ்திராத்மா ஸர்வாத்மா பரமாத்மா ப்ரஜாபதி:॥௯॥ ஜநலோககதை: ஸித்தை: ஸநகாத்யைரபிஷ்டுத:। ப்ரவிவேஶ ததா தோயமாத்மாதாரோ தராதர:॥௰॥"

(இடந்திடும்)—(வி-பு-க-௪) — "ததஸ்ஸமுத்க்ஷிப்ய தராம் ஸ்வதம்ஷ்ட்ரயா மஹாவராஹ: ஸ்ஃபுடபத்மலோசந:। ரஸாதலாதுத்பலபத்ரஸந்நிப: ஸமுத்திதோ நீல இவாசலோ மஹாந்॥௨௬॥"

இடந்திடும் - ஒட்டுவிடுவித்தெடுக்கும். "சிலப்பினிடைச் சிறுபரல்போல் பெரியமேரு" இத்யாதிகஞ்ச ஸ்ருதிநிதாய, பூர்வாபதாநா துத்தராபதாநஸ்யாதிக்யம் தர்ஶயதி - ரக்ஷிக்க வென்று இத்யாதி. "நஹி நிந்தா நிந்த்யம் நிந்திதும் ப்ரவர்த்ததே। அபி து நிந்திதாதிதரத் ப்ரஶம்ஸிதும்" இதிந்யாயோத்ர த்ரஷ்டவ்ய:. கரக்கை - தெரியாதபடி ஒளிக்கையாதல், ஏகீகரணமாதல். ஏதத்த்ருதிநிதாயாஹ - மேலொருகாலம் இத்யாதி. ஏலக்கோலி - ஏற்கவே விசாரித்து. இளைத்துக் காட்டலாம் படி - குழைத்துக் காட்டலாம்படி. இவை என்பட்டன வென்று பார்க்கைக்காக என்றவிடத்திலே - "மஹேக்ஷ்மாமேவத்தும் ஜகதுஷ:" இத்யாதி ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் ஶ்லோகம் அநுஸந்தேயம். 'தடம்-பெரும்' என்ற த்விருக்திஸித்தமான அர்த்தம் - மிகப்பணைத்த என்றது. ஆரும்படியாக - பூர்ணமாம்படியாக. பார்தானோ அவளென்ன, பூமியை இத்யாதி. இவையெல்லாவற்றையும் கடாக்ஷித்து, தழுவுகைக்கு ஹேதுவை அருளிச்செய்கிறார் - தன்விபூதி இத்யாதி. மால் - ஸ்வாமியும், வ்யாமோஹமும். மால்செய்கின்ற மால் - ஸர்வேஶ்வரன் பண்ணுகிற வ்யாமோஹத்தை. கிடந்திருந்தித்யாரப்ய, உமிழும்; பாரென்னும் மடந்தையை - தடம்பெரும் தோளாரத்தழுவும்; மால்செய்கின்ற மாலார்காண்பாரே யித்யந்வய: (எ)

எட்டாம் பாட்டு.

காண்பாராரெம்மீசன் கண்ணனையென்காணுமாறு
ஊண்பேசில் எல்லாவுலகுமோர்துற்றாற்றா
சேண்பாலவீடோவுயிரோ மற்றெப்பொருட்கும்
ஏண்பாலுஞ்சோரான் பரந்துளனாமெங்குமே.

ஆ.—(காண்பாரார்.) ஸர்வஜகந்நிகரணநியமநஸமர்த்தனான எம்பெருமானுடைய ஸர்வேஶ்வரத்வம் ஒருவர்க்கு அறிகைக்குப் பூமியோ ? என்கிறார்.

ஒ.—எட்டாம்பாட்டில், அவனுடைய அத்புத கர்மங்கள் தனித்தனியும் எத்தனையேனும் அளவுடையார்க்கும் பரிச்சேதிக்க முடியாதென்கிறார்.

[காண்பாராரென்று தொடங்கி] - ஸர்வேஶ்வரனான க்ருஷ்ணனைக் காண்கைக்கு அளவுடையார் இல்லை. எத்தனையேனும் அளவுடையார்க்கும் காணவொண்ணாதபடி அபரிச்சேத்யமாயிருக்கும் அவன்படி. [ஊணென்று தொடங்கி] - ப்ரளயகாலத்தில் திருவயிற்றிலே ஜகத்தை வைக்கிறபோது ஜகத்தெல்லாம்கூட ஓரவதாநத்துக்கும் போந்ததில்லை - இது அபரிச்சேத்யதைக்கு உதாஹரணம். [சேணென்று தொடங்கி]-உயர்த்தியே ஸ்வபாவமாக வுடைத்தான பரமபதஸ்த்தரான நித்யஸூரிப்ரப்ருதிகளென்ன, முக்தாத்ம ஸ்வரூபமென்ன, பத்தரானதிர்யகாதிகளகப்பட எல்லாப் பதார்த்தங்களுக்கும் ஓரிடமும் விடாதே எங்கும் வ்யாபித்து உளனாம்.

ப.—அநந்தரம், அவன் எனக்கு ப்ரகாசிப்பித்த அதிமாயிதாகாரங்கள் துரவபோதமென்கிறார்.

எம் - எனக்கு, ஈசன் - ஸ்வாமியாய், கண்ணனை - ஸுலபனான க்ருஷ்ணனை, காண்பார் - அறியவல்லார், ஆர் - ஆர் ? (அவன்படி இதுவானால்), காணுமாறு - அறியும்படி, என் - எங்ஙனே, (அவனுக்கு), ஊண் - ஊண், பேசில் - சொல்லப்பார்க்கில், ("அத்தா சராசரக்ரஹணாத்" என்கிறபடியே), எல்லாவுலகும் - (சராசராத்மகமான) ஸகலலோகமும், ஓர்துற்று - ஒரு பிடிக்கும், ஆற்றா - போராது; வீடோ - (அவனுக்கிருப்பிடமான) (வீடானது, சேண்பால - " விஶ்வதஃ ப்ருஷ்டேஷு ஸர்வதஃ ப்ருஷ்டேஷு" என்கிறபடியே ஸர்வலோகத்துக்குமவ்வருகான) பரமபதப்ரதேஶத்திலது, அவனே-அவனே, மற்று - தன்னையொழிந்த, எப்பொருட்கும் - ஸகலபதார்த்தங்களுக்கும், உயிர் - அந்தராத்மா, ஏண்பாலும் - ஒருரேகாமாத்ரமும், சோரான் - சோரவிடாதவனைக்கொண்டு, எங்கும் - எல்லாப்ரதேசத்திலும், பரந்து - பரந்து, உளனாம் - நில்லாநிற்கும். ஸர்வஜகத்க்ராஸஶீலனாய், பரமபத நிலயனாய், ஸர்வபதார்த்தங்களிலும் அந்தர்பஹிஶ்ச வ்யாப்தனானவனை எங்ஙனே பரிச்சேதித்தறிவதென்று கருத்து. ஏண் என்று - வரையாய், ரேகையைக் காட்டுகிறது. ஓ என்கிற அசைகள் - வினாவைக் காட்டுகிறது.

இ.—எட்டாம்பாட்டில், ஸ்வயத்நத்தாலே காண்பார்க்கு அவனுடைய ஓரோவற்புத கர்மங்கள்தான் எவ்வழியாலே பரிச்சேதிக்கப்படுவதென்கிறார்.

[காண்பாராரெம்மீசன் கண்ணனை] - ஸர்வேஶ்வரனாய் வைத்து, க்ருஷ்ணனாய் வந்தவதரித்து எனக்கு ஸுலபனானவனை ஸ்வயத்நத்தாலே காண்பாரார் ? [என் காணுமாறு] - காணும் ப்ரகாரமென் ? "காண்போம்" என்னுமவர்கள்தான் எவ்வழியாலே பரிச்சேதிப்பது ?

[ஊண் பேசில்] - ஊண்படி சொல்லில். [எல்லாவுலகு மோர்துற்றுற்று] - ஸகலலோகங்களும் ஓரவதாநத்துக்குப் போராது. இது அபரிச்சேத்யதைக்கு உதாஹரணம். [சேண்பால வீடோ] - உயர்த்தியே ஸ்வபாவமாக வுடைத்தான பரமபதமென்ன. [உயிரோ] - முக்தாத்மாக்களென்ன. [மற்றெப்பொருட்கும்] - மற்றுமுண்டான தேவதிர்யகாதி ஸகல பதார்த்தங்களுக்கும். [எண் பாலும் சோரான்] - எட்டுத்திக்குக்களிலு முள்ளாரை விடானென்னுதல், எண்ணப்பட்ட இடந் தோறும் விடானென்னுதல். [பரந்துளனுமெங்குமே] - எல்லாப் பதார்த்தங்களிலும் பரிஸமாப் யவ்யாபித்துளனும். வ்யாபித்திருக்கும் ஸர்வ வ்யாபகவஸ்துவை, வ்யாப்யங்களிலே யொன்று பரிச் சேதிக்கவற்றோ வென்கை.

௭டு.—எட்டாம்பாட்டு. அவனுடைய அத்புதகர்மங்களைத் தனித்தனியும் திரளவும் பரிச்சேதிக்கப் போகாது எத்தனையேனும் அளவுடையார்க்கு மென்கிறார்.

[காண்பாராரெம்மீசன்கண்ணனை] - ஸர்வேஸ்வரனு யிருந்துவைத்து க்ருஷ்ணனாய் வந்தவதரித்து எனக்குக் கையாளானவனை, அவன்தானே காட்ட நான்கண்டாற்போலே காண்பார்க் குக் காணலாமித்தனை போக்கி, ஸ்வயத்நத்தாலே சிலர்க்குக்காணப்புக்கால் காணப்போமோ? அது கிடக்க, காண்பார் சிலருண்டாயிற்று. [என்காணுமாறு] - எவ்வளவைத்தான் காண்பது. அள வுடையார் சிலர் காண இழிந்தார்களென்னு, விஷயத்தைப் பரிச்சேதிக்கப்போகாதே. ஏன்தான் பரிச்சேதிக்கப் போகாதொழிகிற தென்னில்; - இதுவன்றோ அவனுடைய அபதாநம் இருக்கிறபடி. அவனுடைய ஊணுகிற ஒரு செயலைச் சொல்லப்பார்க்கில், ஸர்வலோகங்களும் ஓரவதாநத்துக்குப் போராது, இவ்வபதாநத்தை யுடையவனை ஒருவராலே பரிச்சேதிக்கலா யிருக்கிறதோ? 'அவனு டைய செயல் பரிச்சேதிக்கவொண்ணாது' என்கைக்கு, ஸ்வரூபமோதான் பரிச்சேதிக்கலா யிருக்கிற தென்கிறார். [சேண்பாலவீடோ] - உயர்த்தியே ஸ்வபாவமாக வுடைத்தான பரமபதமென்ன, முக்தாத்ம ஸ்வரூபமென்ன, மற்றுமுண்டான தேவாதிகளென்ன, இவற்றை யுடைத்தான [எண்பா லும் சோரான்] - எண்ணப்பட்ட ப்ரதேசங்களென்னுதல், எட்டுத்திக்கும் வ்யாபித்துவிடாதே நிற்கு மென்னுதல். [பரந்துளனுமெங்குமே] - இப்படி வ்யாபிக்குமிடத்தில் ஒருகுறையுண்டாம்படி யிருக்கையன்றிக்கே, குறையற வ்யாபித்திருக்கும். ஆனபின்பு 'வ்யாபகவஸ்துவை வ்யாப்யத் திலே ஒன்று பரிச்சேதித்துக்காண்கை' என்று ஒரு பொருளுண்டோ? (அ)

எட்டாம்பாட்டு.—காண்பாரார் இத்யாதி. "ஊண்பேசி லெல்லாவுலகுமோர்துற்றுற்று" என்கை யாலே - தனித்தனியும் என்றது. "ஆர்" என்றதிலே நோக்காக-எத்தனையேனும் என்றது. இந்த அவதா ரிகார்த்தம் - இத்திருவாய்மொழியின் அர்த்தநிகமநாவஸரத்திலே அருளிச்செய்கிறார், அங்கே கண்டுகொள்வது.

"ஈசன் - எங்கண்ணனை - காண்பாரார்" இத்யந்வயம். இத்தால் பலித்த தாத்பர்யம் - அவன் தானே இத்யாதி. காண்பார் சிலருண்டாயிற்றென்றது - உண்டானாலோ வென்றபடி. என்காணுமாறு - காணும் ப்ரகாரமென்? ஜ்ஞாநாதிகர்க்குக் காணத்தட்டென்? என்ன, அளவுடையார் இத்யாதி. அபதாநம் - வ்யாபாரம். அவதாநம் - பிடி. இத்தால் தாத்பர்யம் - இவ்வபதாநத்தை இத்யாதி. ஸ்வரூபமோதான் என் றது - "எண்பாலும்சோரான்" என்றத்தைப்பற்ற. சேண் - உயர்த்தி. பால் - ஸ்வபாவம். முக்தாத்மஸ்வ ரூபமென்றது - நித்யர்க்கும் உபலக்ஷணம். "எண்பாலும்" என்ற தீர்க்கத்தைக் குறைத்து; "எண்பாலும்" என்று ஹ்ரஸ்வமாக்கி, எட்டுத்திக்கிலுமென்றபடி. "எண்பாலும் சோரான்" என்று வைத்து, "எங்கும் - பரந்து" என்கிறதென்? என்ன, இப்படி இத்யாதி. வ்யாபிக்குமிடத்தில் - பலதூணுக்கோ ருத்திரம்போ லன்றிக்கே, ஜாதி வ்யக்திதோறும் பரிஸமாப்ய வர்த்திக்குமாபோலே வர்த்திக்கையைச் சொல்லுகிறது இங்கு என்றபடி. ஈசன் - எங்கண்ணனை - காண்பாரார்; என்காணுமாறு; ஊண்பேசில் எல்லா வுலகுமோர் துற் றுற்று; சேண்பால வீடென்ன, உயிரென்ன, மற்றுமுண்டான எவ்வகைப்பட்ட பொருளென்ன, அப்பொருள் களையுடைய எண்பாலென்ன, இவையெங்கும் - பரந்து - சோரானாய்க்கொண்டு - உளனுமித்யந்வயம். "எப் பொருட்கும்" என்ற ஷஷ்டி - ப்ரதமார்த்தகம். எப்பொருளு மென்றபடி. (அ)

ஒன்பதாம் பாட்டு.

எங்குமுளன்கண்ணன் என்றமகனைக்காய்ந்து
இங்கில்லையாலென்று இரணியன் தூண்புடைப்ப
அங்கப்பொழுதே அவன்வீயத்தோன்றிய என்
சிங்கப்பிரான்பெருமை ஆராயுஞ்சீர்மைத்தே.

ஆ.—(எங்கும்.) ஆஸ்ரிதார்த்தமாகத் தன்னுடைய ஸர்வாந்தராத்மத்வத்தை ப்ரத்ய க்ஷமாக்கியருளின எம்பெருமானுடைய ஸர்வேஸ்வரத்வமஹிமை ஒருவர்க்கு ஆராயநிலமோ? ஆனபின்பு இங்ஙனே யிருந்த இவனை ஆஸ்ரயியுங்க ளென்கிறார்.

ஒ.—ஒன்பதாம்பாட்டில், எம்பெருமானுடைய ஸர்வ கதத்வத்தை யிசையாதார் இசையவேண்டும்படியாக ஸ்ரீ ப்ரஹ்லாதாழ்வானுக்காக அபேக்ஷாஸமகாலத்திலே தூணிலே வந்து தோற்றியருளின ஸ்ரீ நாரஸிம்ஹத்தினுடைய பெருமை ஒருவரால் ஆராயுமளவல்ல வென் கிறார். வீய - முடிய.

ப—அநந்தரம், அவனுடைய ஆஸ்ரித ஸௌஸீல்யாதிஸயம் அபரிச்சேத்ய மென்கி றார்.

("ஸர்வம் வ்யாப்ய ஸ்திதஃ" என்கிறபடியே), கண்ணன் - (ஸர்வநிர்வாஹகனான) ஸர் வேஸ்வரன், எங்கும் - ஸர்வத்ர, உளன் - ஸந்நிஹிதன், என்ற - என்ற, மகனை - புத்ரனை, காய் ந்து - கோபித்து, இங்கு - இவ்விடத்தில், இல்லை - இல்லை, என்று - என்று, தூண் - (தான் அறுதியிட்ட) தூணை, இரணியன் - ஹிரண்யன், புடைப்ப - தட்ட, அங்கு-அத்தூணிலே, அப் பொழுதே - அக்காலந்தன்னிலே, அவன் - ஹிரண்யன், வீய - நசிக்கும்படி, தோன்றிய - தோற் றின, என் - என்னுடைய, சிங்கம் பிரான் - நாரஸிம்ஹரூபியான மஹோபகாரகனுடைய, பெருமை - ஆஸ்ரிதபக்ஷபாதமாஹாத்ம்யம், ஆராயும் - நெஞ்சால் பரிச்சேதித்தாராயும், சீர் மைத்தே - தன்மைத்தோ?

இ.—ஒன்பதாம்பாட்டில், "ஸகல பதார்த்தங்களிலும் ஒருவனேபரிஸமாப்ய வர்த்திக் கும்" என்றால் இதுகூடுமோவென்ன;-அநுபூதாம்ஸத்திலே ஸம்ஸயத்தைப் பண்ணினால் ஹிரண் யன் பட்டது படுவர்களென்கிறார்.

[எங்குமுளன் கண்ணன்] - ஸர்வேஸ்வரன் ஸர்வகதனென்றான், இதுவாயிற்றுஅவன் சொன்ன தப்பு. "யோ-தத்ஸர்வம் ஜகத்வ்யாப்ய-திஷ்டதி" "ந-த-ஸ்தி-நா-ஸ்தி-ஸர்வம் வ்யாப்ய" என்று அவன்தானே சொன்னத்தை யாயிற்று இவன் சொல்லிற்று. [என்றமகனைக்காய்ந்து] - இவ்வர்த்தத்தை சத்ருக்கள் சொல்லிலும் ஆதரிக்கவேணும், இவன் பருவத்தாலும் ஸம்பந்தத்தாலும் ஏதேனுமொன்றைச் சொல்லிலும் ஆதரிக்கவேணும், இப்படி யிருக்க அதிக்ருத்தனாய் [இங்கில்லையாலென்றிரணியன் தூண்புடைப்ப] - "ஸர்வகதன்" என்று நீ சொன்னவன் இங்குமுண்டோவென்று தானிருந்த தூணைத்தட்ட. அளந்திட்ட தூணிறே. தனக்கேற "இல்லை" என்று ஸம்ப்ரதிபந்நமான தூணிறே. [அங்கப்பொழுதே] - அத்தூணிலே ப்ரதிஞ்ஞாஸம காலத்திலே. [அவன் வீயத்தோன்றிய] - சீற்றத்தோடே வந்துதோற்றிய தோற் றரவிலே பிணமானான். [என் சிங்கப்பிரான்] - ப்ரஹ்லாதனுக்கு உதவினது தமக்கு உதவிற்றா யிருக்கிறபடி. [பெருமை] - பரத்வம். [ஆராயும் சீர்மைத்தே] - சிலரால் அறியுமளவோ?

ஈடு - ஒன்பதாம்பாட்டு. நீர்சொன்னது அநுபபந்நமாயிருந்ததீ!, 'ஒருவஸ்துவே அநேக பதார்த்தங்களிலே குறைவற வ்யாபித்திருக்கும்' என்றால் இது கூடுமோ? என்ன;—கேடுவீகாள், அவன் ஸர்வகதத்வத்தை இசையாத இரணியன்பட்டது படாதேகிடிகோ ளென்கிறார்.

[எங்குமுளன்கண்ணன்] - இதுவாயிற்று அவன் சொன்ன தப்பு, ஸர்வேஶ்வரன் ஸர்வகதனென்றான். "மயா ததமிதம் ஸர்வம்" (மயாததமிதம்ஸர்வம்) "நதத்ஸ்தி விநாயத்ஸ்யாந்மயா" (நததஸ்திவிநாயத்ஸ்யாந்மயா) என்று அவன்தான் சொன்ன வார்த்தையாயிற்று இவன்தான் சொல்லிற்று. [என்றமகனைக்காய்ந்து] - இவ்வர்த்தத்தைச் சத்ருவேசொல்லிலும் கேட்டபோதே காலிலே விழவேண்டும் வார்த்தை சொல்லிற்று; ப்ரமாணவிருத்தமான அர்த்தத்தைச் சொல்லிலும் கொண்டாட வேண்டும்படியாயிற்று ஸம்பந்தம்; பருவத்தாலுங் கொண்டாடவேணும்; * [பள்ளியிலோதிவந்த] - பள்ளியோதும் பருவத்தி லுள்ளவையடையக் கொண்டாட்டமா யிருக்கும். அதுக்கு மேலே, [தன்சிறுவன்] - தன்வயிற்றிற்பிறந்தவன் வார்த்தை மிகவும் ப்ரியமாயிருக்கும். [வாயிலோராயிரநாமம்] - அதுக்குமேலே திருநாமத்தைச் சொல்லிற்று. **[ஒள்ளியவாகிப்போத]** - இவை

ப்ர.—(எங்குமுளன்)—ஸ்ரீபகவத்கீதாஸு நவமே, "மயா ததமிதம் ஸர்வம் ஜகதவ்யக்தமூர்த்திநா । மத்ஸ்தாநி ஸர்வபூதாநி நசாஹம் தேஷ்வவஸ்தித:॥ ச॥ நசமத்ஸ்தாநி பூதாநி பஶ்யமேயோகமைஶ்வரம் । பூதப்ருந்நசபூதஸ்தோ மமாத்மா பூதபாவந:॥ரு॥"

தத்ரைவ தஶமே, "யச்சாபி ஸர்வபூதாநாம் பீஜம் ததஹமர்ஜுந । நததஸ்தி விநாயத்ஸ்யாந்மயா பூதம் சராசரம்॥நக॥"

ஒன்பதாம்பாட்டு - எங்குமுளன் இத்யாதி. வ்யாப்தியைச் சொன்னவநந்தரம், 'ஹிரண்யநிரஸநம் பண்ணின நரஸிம்ஹன் வைபவம் அபரிச்சிந்நம்'என்று சொல்லுகிறவருடையபாவத்தை ஶங்காபரிஹாரமுகேந தர்ஶிப்பிக்கிறார் - நீர்சொன்னது இத்யாதி.

"தப்பு" என்றத்தை விஶதீகரிக்கிறார் - ஸர்வேஶ்வரன் இத்யாதி. கண்ணன் - நிர்வாஹகன். ஸர்வகதனென்றானென்றவிடத்திலே-"ஏவமுக்தஸ்து தைத்யேந்த்ரஸ்தம்பம் ஹஸ்தேநதாடயத் । ஸர்வத்ர ஸுவ்யக்தோ வக்ஷஸா தத்ர விஷ்ணுரஸ்தீதி । ஸர்வத்ர பூதேஷு ஸர்வாவஸ்தோ விஷ்ணுரஸ்தீதி..." இதி ப்ரஹ்லாதோக்த ஶ்லோகோநுஸந்தேய:. "இதுவாயிற்று அவன் சொன்னதப்பு" என்று வ்யங்க்யமாகச் சொல்லாநின்றது; அது தப்பன்றே! என்ன;—ஈஶ்வரன் தான் ஆதரித்துச்சொன்ன ஸர்வகதத்வத்தை இவன் சொன்னது தப்போ? என்கிறார் - மயாததம் இத்யாதி - கீதாஸு நவமே, "மயா ததமிதம் ஸர்வம்ஜகதவ்யக்தமூர்த்திநா । மத்ஸ்தாநிஸர்வபூதாநிநசாஹம்தேஷ்வவஸ்தித:". தத்ரைவ தஶமே, "யச்சாபிஸர்வபூதாநாம் பீஜம்ததஹமர்ஜுந । நததஸ்திவிநாயத்ஸ்யாந்மயா பூதம்சராசரம்". "என்ற" என்றதுக்கு பாவம் - இவ்வர்த்தத்தை இத்யாதி. "மகன்" என்றதுக்கு பாவம் - ப்ரமாண இத்யாதி. "மகன்" என்றது - பருவத்துக்கும் உபலக்ஷணமாக்கி பாவம் - பருவத்தாலும் இத்யாதி. வார்த்தையின் சீர்மையும், ஸம்பந்தமும், பருவமுமொன்றொன்றே கொண்டாடவேண்டியிருக்க, இவன் நிஷ்காரணமாகச் சீறினனென்றதாயிற்று. பருவத்தாற்கொண்டாடவேண்டும்படி அப்படி சிறுபிள்ளையாயிருக்குமோ? என்ன, பள்ளியிலோதி இத்யாதி—பெரிய திருமொழி. இப்பாட்டுக்கு அர்த்தம் - பள்ளியிலோதும் பருவத்தில் இத்யாதி. அப்யபுத்ரத்வேபீதி பாவ:. பள்ளி - வித்யாசாலை. ஒள்ளியவாகிப்போத -

---

* பெரியதிருமொழி, உ, ந, அ.

யொன்று மில்லையாகிலும் சொன்னபோதை இனிமைதான் கொண்டாடவேணும். [ஆங்கதனுக் கொன்றுமோர் பொறுப்பிலனாகி] - அஸஹ்யாபசாரமிறே. [பிள்ளையைச்சீறி] - திருநாமஞ்சொன்ன துவே ஹேதுவாக 'புத்ரனன்று' என்று விட்டான் அவன்; திருநாமஞ் சொன்னவர்களோடே தமக்கு எல்லாவுறவுமுண்டாக நினைத்திருக்கையாலே இவர், [பிள்ளை] - என்கிறார். [மகனைக்காய்ந்து] - வயிற்றிலே பிறந்தவனா யிருக்கச்செய்தேயும் திருநாமஞ்சொல்லப் பொறுக்கமாட்டாமே சீறினானா யிற்று. [இங்கு இத்யாதி] - எங்குமுளனாகில் நீ சொல்லுகிறவன் இங்கில்லையாயிரானோ என்று தூணையடித்துக்காட்டினான். * [அளந்திட்ட தூணையவன் தட்ட]-'முன்பே நரஸிம்ஹத்தை வைத்து நட்டதூண்' என்னவொண்ணாதே; தானே தனக்குப் பொருந்தப்பார்த்து நறுக்கிநட்ட தூணாகை யாலே. [அவன்தட்ட] - வேறேசிலர் தட்டினார்களாகில், 'கையிலே யடக்கிக் கொண்டுவந்து தூணிலேபாய்ச்சினார்கள்' என்னவுமாமிறே; தானேயாயிற்று தட்டினானும். [அங்கு அப்பொழுதே]- அத்தூணிலே, அடித்தவிடத்திலே, அவனுடைய ப்ரதிஜ்ஞாஸமகாலத்திலே. [அவன்வீயத்தோன் றிய] - தன்தோற்றரவிலே அவன்பிணமாம்படி தோற்றின. அதிர்த்துக்கொண்டு புறப்பட்டபோதை அட்டஹாஸமும், நாமடிக்கொண்ட உதடும், நெற்றியது கண்ணும் உச்சியது புருவமுமாய்க்கொண்டு தோற்றினபோது பொசுக்கின பன்றிபோலே உருகினானாயிற்று பொன்னனாகையாலே. [என்சிங்கப் பிரான்பெருமை] - ஆஸ்ரிதவர்க்கத்துக்காக நரஸிம்ஹமாய் உபகரித்தவனுடைய பரத்வம் இன்று சிலரால் ஆராயும்படி யிருந்ததோ? (௯)

பத்தாம்பாட்டு.

சீர்மைகொள்வீடு சுவர்க்கநரகீறு
ஈர்மைகொள்தேவர்நடுவா மற்றெப்பொருட்கும்
வேர்முதலாய்வித்தாய்ப் பரந்துதனிநின்ற
கார்முகில்போல்வண்ணன் என்கண்ணனைநான்கண்டேனே.

ஆ.—(சீர்மை.) ஸ்வர்க்காபவர்க்காத்யமோக்ஷ புருஷார்த்தங்களுக்கும், நரகாத்யபுரு ஷார்த்தங்களுக்கும், இவற்றுக்கு போக்தாக்களான தேவாதிஸ்த்தாவராந்தமான ஸகலாத்ம வர்க் கத்துக்கும் தாரகனாய், காரணபூதனாய், நியந்தாவாய், ஸ்வேதரஸமஸ்தவிஸஜாதீய அப்ராக்ருத

அழகியதாகச் சொல்ல. இத்தனையுமுண்டானால் பொறுமைக்கு அடியென்? என்ன - அஸஹ்யாபசாரம் இத்யாதி. இதும் - வித்தவ்யாக்யாத்ருவாக்யம். அந்யோத்கர்ஷமஸஹ்யமாகிற அபசார மென்றபடி. ஸர்வேஶ்வரனைக் காணவில்லை, கேட்கவில்லை, தனக்குத்தான் ஒரு அநிஷ்டம் செய்யவில்லையாயிருக்கச்செய்தே, பகவத் ப்ரஸ்தாவமானாலும் அஸஹமானனாயிருக்கையாலே அஸஹ்யாபசாரமென்று கருத்து. ப்ரஹ்லாதனை என்னாதே, "பிள்ளை" என்றதுக்குக் கருத்தென்? என்ன—திருநாமம் இத்யாதி. "சீறி" என்கையாலே-அன்றென்றுவிட்டா னென்றது. பிள்ளையென்றது - "மாதாபிதா" இத்யாதிப்படியே ஸர்வவிதபந்துத்வத்துக்கும் உபலக்ஷணம். இவர் - திருமங்கையாழ்வார். "மகனைச்காய்ந்து" என்றதுச்கு ஶப்தார்த்தம் - வயிற்றிலே இத்யாதி. அப்படித் தூணைத் தட்டினானோ? என்ன - அளந்திட்ட இத்யாதி-பெரியாழ்வார் திருமொழி. இதுக்கு அர்த்தம் - முன்பே இத்யாதி. பொருந்த - பொருத்தம் பொருந்தும்படியாக. பாய்ச்சினார்கள் - ப்ரவேஶிப்பித்தார்கள். "வீய" என்றதுக்கு - விநாஶஸ்யாவதாரஸமானகாலீநத்வம் விவக்ஷிதமித்யபிப்ராயேணாஹ-தன்தோற்றரவிலே இத்யாதி. பூர்வவாக்யோக்தமர்த்தம் உபபாதயதி-அதிர்த்துக்கொண்டு இத்யாதி. அதிர்த்துக்கொண்டு-ஶப்தித்துக்கொண்டு. பொன்னனாகையாலே யிதி ரஸோக்தி. "என்" என்றதுக்கு ஹாவம் - ஆஶ்ரிதவர்க்க இத்யாதி: ஆராயும் சீர்மைத்தே - ஆராயும்படியான ஸ்வபாவத்தையுடைத்தோ? சீர்மை - அதிஶயமாதல். (௯)

---

* பெரியாழ்வார் திருமொழி, க, கூ, க.

மஹாவிபூதியையுடையனாய் நின்ற எம்பெருமானை நான் காணப்பெற்றேனென்று கொண்டு ஸ்வலாபத்தைப் பேசி முடிக்கிறார்.

ஒ.—பத்தாம்பாட்டில், அல்லாதார் செய்தபடி செய்கிறார்; உபயவித மஹாவிபூதிகனாயிருந்த எம்பெருமானை நான் அநுபவிக்கப்பெற்றேனென்கிறார்.

[சீர்மையென்று தொடங்கி] - பரமபதம் ஸ்வர்க்கம் நரகம் இவைமுடிவாக ஈரப்பாடுடைத்தான தேவர்கள் நடுவாக மற்றுண்டான ஸகலபதார்த்தங்களுக்கும் த்ரிவிதகாரணமும் தானேயாய்க்கொண்டு ஸர்வகதனாய். [தனிநின்றவென்று தொடங்கி] - ஸம்ஸாரிகளோடு வ்யாவ்ருத்தனாய்த் திருநாட்டிலே வர்ஷுகவலாஹகம்போலே யிருக்கிற திருநிறத்தையுடையனாய் என்னை விஷயீகரித்த க்ருஷ்ணனை.

ப.—அநந்தரம், இப்படி ஸர்வப்ரகாரோபகாரகனாய் மோக்ஷப்ரதனானவனை நான் அநுபவிக்கப்பெற்றேனென்று ஹ்ருஷ்டராகிறார்.

சீர்மைகொள் - (புண்யபாபகாரிதமாகை யன்றிக்கே பகவத் க்ருபைகஸாத்யமான) சீர்மையையுடைய, வீடு - மோக்ஷமும், சுவர்க்கநரகு - (புண்யபாப பலரூபமான) ஸ்வர்க்கநரகங்களும், ஈறு - மேலெல்லையாக, ஈர்மைகொள் - பலப்ரதத்வ நிபந்தநமான ஈரப்பாட்டையுடைய, தேவர் - தேவர்கள், நடுவா - (ஸாதநபலங்களுக்கு) நடுவாகவும், மற்று - ப்ரதமபாவியான, எப்பொருட்கும் - ஸாதநாதி ஸமஸ்த பதார்த்தங்களுக்கும், வேர் - ஸஹகாரியுமாய், முதலாய் - நிமித்தமுமாய், வித்தாய் - உபாதாநமுமாய்க் கொண்டு, பரந்து - ஸர்வத்ரவ்யாப்தனாய்வைத்து, தனி - வ்யாப்யபதார்த்தங்களில் வயாவ்ருத்தனாய், நின்ற - நிற்பானாய், கார் - கார்காலத்திலே, முகில்போல் - மேகம்போன்ற, வண்ணன் - வடிவையுடையனாய்க்கொண்டு, என் - எனக்கு ஸுலபனான, கண்ணனை - க்ருஷ்ணனை, நான் - நான், கண்டேனே - அநுபவிக்கப்பெற்றேனென்றுகொண்டு ஸ்வலாபத்துக்கு ஹ்ருஷ்டராகிறார். ஈர்மைகொள்தேவரென்று - உபயபாவநாநிஷ்டரென்றுமாம்.

இ.—பத்தாம்பாட்டில், வழிபறிக்குமிடத்திலே தம் கைப்பொருள் கொண்டு தப்புவாரைப்போலே, நான் அநுபவிக்கப் பெற்றேனென்று ஹ்ருஷ்டராகிறார்.

[சீர்மைகொள்வீடு] - சீர்மையையுடைத்தான பரமபதம், ஸ்வர்க்கம், நரகம் இவை முடிவாக; ஈரப்பாட்டையுடைய தேவர்கள் நடுவாக மற்றுமுண்டான ஸகலபதார்த்தங்களுக்கும். [வேர்முதலாய் வித்தாய்] - த்ரிவிதகாரணமும் தானேயாய். [பரந்து]-"தத்ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிஶத்" என்கிறபடியே ஸர்வகதனாய். [தனிநின்ற]-"ஸ்வஸ்த்ருஷ்டஸ்வஸ்" என்கிறபடியே ஸர்வஶப்தவாச்யனாய் ஜகதாகாரேண அத்விதீயனாய் நிற்கை. [தனிநின்றகார்முகில்போல் வண்ணனித்யாதி] - பரமபதத்திலே வர்ஷுகவலாஹகம் போலே ஶ்ரமஹரமான வடிவோடே அத்விதீயனாய் எழுந்தருளியிருக்குமவன், க்ருஷ்ணனாய் எனக்கு உபகரிக்கையாலே நான் அநுபவிக்கப் பெற்றேனென்கிறார்.

ஈடு.—பத்தாம்பாட்டு. 'இவர்களைவிடீர், நாம் முந்துறமுன்னம் இவர்களைப்போலே யாகாதே அவனை அநுபவிக்கப்பெற்றோமிறே' என்று ஸ்வலாபாநுஸந்தாநத்தாலே ஹ்ருஷ்டராகிறார்.

பத்தாம்பாட்டு—சீர்மைகொள் இத்யாதி. ஸம்ஸாரிகளுக்கும் உபதேசித்தவிடத்தில் அவர்கள் திருந்தாமையாலே, இவர்களைவிடீர் என்கிறார். "கண்ணனை நான் கண்டேனே" என்றத்தைப்பற்ற - நாம் முந்துற முன்னம் இத்யாதி.

[சீர்மைகோள் இத்யாதி] - ஸர்வப்ரகாரத்தாலும் நன்றான பரமபதம், பரிமிதஸுகமான ஸ்வர்க்கம், நிஷ்க்ருஷ்டதுஃகமேயான நரகம், இவைமுடிவாக, ஈரப்பாடுடையரான தேவர்கள் நடுவாக, மற்றுமுண்டான திர்யகாதிகளுக்கும். [வேர்முதலாய்வித்தாய்] - த்ரிவிதகாரணமுந் தானேயாய். [பரந்து]-'தத்ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிஶத் ததநுப்ரவிஶ்ய ஸச்ச த்யச்சாபவத்' (தத்ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிஶத் ததநுப்ரவிஶ்ய ஸச்சத்யச்சாபவத்) என்கிறபடியே - முந்துற இவற்றையடைய உண்டாக்கி, பின்னை இவற்றினுடைய வஸ்துத்வநாமபாக்த்வங்களுக்காக அநுப்ரவேஶித்து, இப்படி ஜகதாகாரனாய்நின்று, [தனிநின்ற இத்யாதி] - இப்படி ஜகச்சரீரனாய் நின்ற வளவேயன்றிக்கே, தன்னுடைய வ்யாவ்ருத்தி தோற்றும்படி ஸ்ரீ வைகுண்டத்திலே வர்ஷுகவலாஹகம்போலே யிருக்கிற அழகிய திருமேனியையுடையனா யிருந்துவைத்து க்ருஷ்ணனாய் வந்து அவதரித்து எனக்குக் கையாளானவனை நான் முந்துறமுன்னம் கண்டநுபவிக்கப் பெற்றேனென்கிறார். (கo)

பதினோரம்பாட்டு.

கண்டலங்கள்செய்ய கருமேனியம்மானை
வண்டலம்பும்சோலை வழுதிவளநாடன்
பண்டலையிற்சொன்னதமிழ் ஆயிரத்திப்பத்தும்வல்லார்
விண்டலையில்வீற்றிருந்தாள்வர் எம்மாவீடே.

ஆ.—(கண்டலங்கள்.) இத்திருவாய்மொழியை வல்லார் இட்ட வழக்காம் திருநாடு என்கிறார்.

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றவர்கள் இத்திருவாய்மொழியிற் சொன்னபடியே எல்லாப்படியாலும் விலக்ஷணமான முக்தப்ராப்யமான ஐஶ்வர்யத்தைப் பெறுவரென்கிறார்.

ப்ர:—(பரந்து)—தைத்திரீயோபநிஷதி, (கூ - சு) "ஸோகாமயத பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி ஸதபோதப்யத ஸதபஸ்தப்த்வா இதம் ஸர்வமஸ்ருஜத யதிதம்கிஞ்ச தத்ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிஶத் ததநுப்ரவிஶ்ய ஸச்சத்யச்சாபவத்".

"சீர்மை" என்று - அதிசயமாய், இன்னத்தாலென்று விஶேஷியாமையாலே, ஸர்வப்ரகாரத்தாலும் நன்றான என்கிறது. ஈர்மை - ஈரப்பாடு, பலப்ரதத்வநிபந்தநமான மநஃப்ரஸாதம். "ஈறு, நடுவா" என்று - பலங்களையும், பலப்ரதாதாக்களையும், முடிவும், நடுவுமாகச் சொல்லுகையாலே - "மற்றெப்பொருட்கும்" என்ற கர்மகர்த்தாக்கள் ப்ரதமாவதி யென்றபடி. மநுஷ்யாதிகள் ப்ரதமம், கர்மத்தையநுஷ்ட்டிக்க, அநந்தரம் தேவாதிகள் பலப்ரதாநம்பண்ண, அநந்தரம் ததநுபவமாகையாலே - முதல், நடு, ஈறு என்கிறது. வேர் - ஸஹகாரிகாரணம். முதல் - நிமித்தகாரணம். வித்து - உபாதாநகாரணம். பரந்து - வ்யாபித்து. "ததேவாநுப்ராவிஶத், தத்ஸ்ருஷ்ட்வா" என்று அந்வயம்; "ததநுப்ரவிஶ்ய ஸச்ச த்யச்சாபவத்" - ஸத்தும் த்யத்துமான சேதநாசேதநங்களிரண்டும் தானானா னென்றபடி. தனிநின்ற-வ்யாவ்ருத்தி தோற்றும்படிநின்ற. நித்யவிபூதியில் த்ரிவித காரணத்வமாவது - நித்யேச்சாதிவிஶிஷ்டவேஷேண நிமித்தத்வம், ஶுத்தஸத்வவிஶிஷ்டவேஷேண உபாதாநத்வம், ஜ்ஞாநஶக்த்யாதி விஶிஷ்டவேஷேண ஸஹகாரித்வம் என்றபடி. லீலாவிபூதியில் ஸங்கல்பவிசிஷ்டவேஷேணநிமித்தத்வம், ஸூக்ஷ்மசிதசித்விசிஷ்டவேஷேண உபாதாநத்வம், ஜ்ஞாநஶக்த்யாதி விசிஷ்டவேஷேணஸஹகாரித்வ மென்றபடி. க்ரமேண அந்வயஃ. (கo)

[கண்டலமென்று தொடங்கி]-ஆழ்வாரோட்டைக் கலவியாலே விஸ்த்ருதமாய்ச் சிவந்த திருக்கண்களையும் நிறம்பெற்ற திருமேனியையு முடையனுன ஸர்வேச்வரனை பகவத்விஷயீகாரத் தாலே புஷ்டமாகையாலே வண்டுகள் தேனிலே அலையாநின்ற திருச்சோலையையுடைய திருவழுதி வளநாட்டையுடையரான. பண்டலையில் - பண்ணின்மேல். விண்டலையில்-விண்ணின்மேலே.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப் பலமாக ஸ்வாராஜ்ய நிர்வாஹகத்வத்தை அருளிச்செய்கிறுர்.

கண் தலங்கள் - கண்ணில் பரப்பெங்கும், செய்ய - சிவந்து, கரு - (அதுக்குப் பரபாக மாய்) ஶ்யாமளமான, மேனி - திருமேனியையுடைய, அம்மானை - ஸர்வஸ்வாமியை, வண்டு - வண்டுகள், அலம்பும் - (மதுவெள்ளத்திலே) அலைகிற, சோலை - சோலைகளையுடைய, வழுதிவள நாடன் - திருவழுதிவளநாட்டையுடைய ஆழ்வார், பண் தலையில் - பண்தான் தாளமாம்படி அதன் மேலே, சொன்ன - அருளிச்செய்த, தமிழாயிரத்து - ஆயிரந்திருவாய்மொழியில், இப்பத்தும் - இப்பத்தும், வல்லார் - வல்லார், விண்தலையில் - பரமாகாசத்தின்மேலே, வீற்றிருந்து-("ஸஹராஜவதி" என்கிறபடியே) வ்யாவ்ருத்தமாக இருந்து, எ - ஸர்வப்ரகாரவிசிஷ்டமாய், மா - நிரதிசய போக்யமான, வீடு - மோக்ஷாநந்தத்தை, ஆள்வர் - ஸ்வாதீநமாக அநுபவிப்பார்கள். என்னேடு என் அநுபந்திகளோடு வாசியற எங்களுக்குத் தருவதாக இருக்கிற பெரியவீடு என்றுமாம். இது - கலிவிருத்தம்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழியைக் கற்றவர்கள் இதிற் சொன்ன முக்த ப்ராப் யமான ஐஶ்வர்யத்தைப் பெறுவர்க ளென்கிறுர்.

[கண்டலங்கள்செய்ய] - "பூதலம்" என்னுமாபோலே கண்ணிற் பரப்பை நினைக் கிறது. விஸ்த்ருதமாய்ச் சிவந்த திருக்கண்களை யுடையவன். [கருமேனியம்மானை] - இதுக் குப் பரபாகமாய் ஶ்ரமஹரமான வடிவழகையுடைய ஸர்வேச்வரனை. [வண்டலம்புமித்யாதி] - வண்டுகள் தேனிலே யலையாநின்ற சோலையையுடைய திருவழுதிவளநாட்டை யுடையவர். [பண் டலையிற்சொன்ன] - தலையானபண்ணிலே சொன்னதென்னுதல், பண்ணின்மேலே சொன்ன தென்னுதல். [விண்டலையில்]-தலையான விண்ணிலே என்னுதல், விண்ணின்மேலே என்னுதல். [வீற்றிருந்து] - ஸாம்ஸாரிகமான ஸங்கோசமெல்லாந் தீருகையாலே வீறுபட இருந்து. [ஆள்வ ரெம்மாவீடே] - எனக்கும் என் பரிகரத்துக்கும் தருவானுகச் சமைந்திருக்கிற பரமபதத்தை ஆளப்பெறுவர்.

ஈடு.—நிகமத்தில் - இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லார்கள் இத்திருவாய் மொழியிற்சொன்ன முக்தப்ராப்யபோகத்தைப் பெறுவ ரென்கிறுர்.

[கண்டலங்கள்] - "பூதலங்கள்" என்னுமாபோலே திருக்கண்களின் பரப்பைப்பற் றச் சொல்லுகிறது. பரந்து சிவந்திருந்துள்ள திருக்கண்களையும், அவற்றுக்குப் பரபாகமாம்படி

ப்ர:—(கண்டலங்கள் செய்ய கருமேனி இத்யாதி)—தைத்திரீயகே ஶ்ரீ நாராயணே (க) "ஸஹஸ்ர வாரிஜ ... நாகஸ்ய ... " "ததுக்ய

நிகமம் - கண்தலங்கள் இத்யாதி. "விண்டலையில் வீற்றிருந்தாள்வரெம்மாவீடு" என்றத்தைக் கடாக்ஷித்து அவதாரிகை - நிகமத்தில் இத்யாதி.

"கண்" என்றால் போராதோ? "கண்டலம்" என்றது எதுக்காக வென்ன, பூதலவ்யபதேசவத் விஸ்தாரத்தைப்பற்ற வென்கிறுர் - பூதலங்கள் இத்யாதி. பரந்து இத்யாதியாலே - ப்ரதிபாத்யவைலக்ஷண்ய

கறுத்த திருமேனியையுமுடைய ஸர்வேஶ்வரனைக் கவிபாடிற்று. [வண்டுஇத்யாதி] - வெள்ளத்திலே அலைவாரைப் போலே தேன்வெள்ளத்திலே வண்டுகள் அலையாநின்றுள்ள சோலையையுடைய திருவழுதிவளநாட்டையுடைய ஆழ்வார் அருளிச்செய்தது. தலையான பண்ணிலே சொன்ன தமிழாயிற்று இப்ப்ரபந்தந்தான். அன்றியே, பண்ணின்மேலே சொன்ன வென்னுதல். ஆயிரத்திலும் வைத்துக்கொண்டு இப்பத்தையும் அப்யஸிக்கவல்லார்கள் “[illegible]” (நாகஸ்ய ப்ருஷ்ட்டே) என்கிறபடியே, பரமபதத்திலே தங்கள் வ்யாவ்ருத்தி தோற்ற இருந்து, எவ்வகையாலும் விலக்ஷணமான மோக்ஷமானது தங்களுக்கு விதேயமாம்படி பெறுவர். [விண்டலை] - தலையான விண்ணிலே யென்னுதல், விண்ணின்மேலே யென்னுதல். அங்குள்ளார் தங்களாஜ்ஞாநுவர்த்தநம்

[illegible]

மும், வெள்ளத்திலே இத்யாதியாலே - வக்த்ருவைலக்ஷண்யமும், தலையான பண்ணிலேசொன்ன தமிழித்யாதியாலே - ப்ரபந்தவைலக்ஷண்யமும் அருளிச்செய்கிறுரென்று கண்டுகொள்வது. அலம்புகை - அலைகை. தலையான பண்ணிலே-ஶ்லாக்யமான பண்ணிலே. த்விதீயார்த்தத்துக்கு, “தலை” என்று - மேலாய், பண்ணிலேயென்றபடி. இப்பத்தும் வல்லார்-இப்பத்தைஅப்யஸிக்க வல்லார். “ஆள்வர், எம்மாவீடாள்வர், வீற்றிருந்தாள்வர்” இதிபதாநி க்ரமேணபராம்ருஶந் பாதிபதம் ஸாவமாஹ - அங்குள்ளார் இத்யாதி வாக்யத்ரயேண. “எம்மா

பண்ணும்படியாகப் பெறுவர். ஆத்மலாபத்தளவு மன்றிக்கே, பரமபுருஷார்த்த லக்ஷண மோக்ஷத்தை ஆளப்பெறுவர். [வீற்றிருந்து] - ஸாம்ஸாரிகமான ஸங்கோசமெல்லாந் தீரும்படி வீறுபட்டிருந்து. [ஆள்வர் எம்மாவீடே] - " தன்பால் மனம்வைக்கத்திருத்தி வீடுதிருத்துவான் " என்று - எனக்கும் என்பரிகரத்துக்கும் தருவானாகச் சமைத்து நிற்கிற பரமபதத்தை யாளப்பெறுவர்.

முதற்பாட்டில்-இத்திருவாய்மொழியில் பரக்கச்சொல்லுகிற அர்த்தத்தை ஸங்க்ரஹேணஅருளிச்செய்யா நின்றுகொண்டு, "ஸம்ஸாரமாகிற இக்கடலைக் கடக்கவேணும்" என்றிருப்பார்க்குக் கடத்திக்கொடுக்கு மென்றார்; இரண்டாம்பாட்டில் - அவன் வேணுமோ? அவனோட்டை ஸம்பந்தமே கடத்துமென்றார்; மூன்றாம்பாட்டில் - அவனுடைய அதிமாநுஷ சேஷ்டிதங்கள் ப்ரத்யக்ஷிக்கலாமென்றார்; நாலாம்பாட்டில் - "அந்தமில்பேரின்பத்தைப் பெறவேணும்" என்றிருப்பார் அவனை ஆஶ்ரயியுங்கோளென்றார்; அஞ்சாம்பாட்டில் - கீழ் "இணைவனாமெப்பொருட்கும்" என்றத்தை விவரித்தார்; ஆறாம்பாட்டில் - இவ்வுத்கர்ஷமெல்லாம் அவனுக்கு உண்டோ? என்ன,—நாம் ஆராயவேண்டாதபடி அர்ஜுநன் பண்டேதெரிந்து அறுதியிட்டானென்றார்; ஏழாம்பாட்டில் - ஒருவன் அநுவர்த்தநங்கொண்டு அறியவேணுமோ? அவனுக்கு இஷ்ட ஸர்வசேஷ்டாவிஷயமாயன்றோ ஜகத்து இருக்கிறதென்றார்; எட்டாம்பாட்டில் - வ்யாப்திதொடக்கமான அவனுடைய அபதாநங்கள் ஒருவரால் பரிச்சேதிக்க முடியாதென்றார்; ஒன்பதாம்பாட்டில் - அவனுடைய வ்யாப்தியை இசையாதார் ஹிரண்யன்பட்டது படுவரென்றார்; பத்தாம்பாட்டில்-ஏவம்பூதனானவனை நான்கண்டு அநுபவிக்கப் பெற்றேனென்றார்; நிகமத்தில் - இதுகற்றார்க்குப் பலஞ்சொல்லித் தலைக்கட்டினார்.

வீடு" என்றதுக்கு - "எவ்வகையாலும் விலக்ஷணமான மோக்ஷம்" என்றது தவிர, அர்த்தாந்தரம் - தன்பால் இத்யாதி. இந்தப்பக்ஷத்திலே, எம்என்று - எங்களுக்கென்றாய், எனக்கும் என் பரிகரத்துக்கு மென்றபடி. எட்டாம்பாட்டு அர்த்தத்தின் நிகமநத்திலே "வ்யாப்திதொடக்கமான அவனுடைய அபதாநங்கள் ஒருவரால் பரிச்சேதிக்க முடியாதென்றார்" என்றிருக்கிறது; எட்டாம்பாட்டினுடைய அவதாரிகையும், "அவனுடைய அத்புத கர்மங்களைத் தனித்தனியும் திரளவும் பரிச்சேதிக்கப்போகாது எத்தனையேனும் அளவுடையார்க்கு மென்கிறார்" என்றிருக்கிறது; அந்தப்பாட்டின் உத்தரார்த்தாவதாரிகையோ வென்றால், "அவனுடையசெயல் பரிச்சேதிக்க வொண்ணாதென்கைக்கு ஸ்வரூபமோதான் பரிச்சேதிக்கலா யிருக்கிறதென்கிறார்" என்றிருக்கிறது; தன்மாத், ஜகந்நிகாணத்விபுத்வாச்சபரிசசேத்து மஶக்யனென்கிற இவ்வளவுமாத்ரத்திலே பாட்டுக்குத் தாத்பர்ய மென்கிற தன்று; ஸ்ருஷ்டிஸம்ஹாராவதாரணாஶ்ரிதவராயீநக்ஷாஸ்ருஷ்டிஸம்ஹாரணாவிஷ ஜகத்வ்யாபநதத்வஶாஷ்கு வ்யாபாரங்களிலேயும் தாத்பர்யமென்று கண்டுகொள்வது. க்ரமேண அந்வய:. (சக)

த்ரவிடோபநிஷத்ஸங்கதி:- ஸுத்ராநயிஷ்வபி ஹரே: ப்ரியதாஸேவக்ஷ்ய ஸ்வஸ்தாத்ரநஸ்வஜநயந்த்ரநிரஷ்டேந । ஶோகக்ஷ்வஸ்ரகவஸ்வதிஸ்ம்ருதஜாஹிஸ்வவ்யாஸாஹாஸ்த்ஸா ஹஸியிகம் ஸ்வஹாஸ்ந்ருதேஷ்ய ॥

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி.—ஸ்ராவ்யாகாரோவவத்ஸ்ராஜநிவ ரிஹாரணாஸ்ஸ்வஸ்யஷ்ட்யாதிஶக்தேர்நிஸ்ஸீமாநந்தஸ்வஸாமயத உபஜமளாரக்ஷணாயஸ்ராவதாராகை, ஸ்வஸ்வ்யாதாநஸ்ஹாவாஸ்விபவிஹாரணாத்வ்யாப்திவைஶித்ர்யஸ்தாத்ஸைக்ஷஸ்ரா ஸ்ரஸ்ஸ்யஹாவாஜவிஷஷக்யதேஜஸ்தியளவ்யம் ஸக்ஷேந்தி ॥

திருவாய்மொழி நூற்றந்தாதி.

அணைந்தவர்கள் தம்முடனேயாயனருட்காளாம்
குணந்தனையேகொண்டுலகைக்கூட்ட—இணங்கிமிக
மாசிலுபதேசம்செய்மாறன்மலரடியே
வீசுபுகழெம்மாவீடு.

ஆழ்வார்திருவடிகளேஶரணம், எம்பெருமானார்திருவடிகளேஶரணம், ஜீயர்திருவடிகளேஶரணம்.

ஆ.—(எம்மாவீடு.) "நலமந்தமில்லதோர் நாடுபுகுவீர்" என்ற ப்ராப்யப்ரஸங்கத்தாலே, ஸ்வாபிமதமான புருஷார்த்தத்தை நிஷ்கர்ஷித்து அத்தை ப்ரார்த்திக்கிறார்.

ஒ.—ஒன்பதாந்திருவாய்மொழியில், கீழில்திருவாய்மொழியில் ப்ராப்யமாகச்சொன்ன மோக்ஷத்தை இவர்க்கு எம்பெருமான் கொடுப்பானாக உபக்ரமிக்க, இளையபெருமாளையும் ஸ்ரீபரதாழ்வானையும் போலே பகவத் பாரதந்த்ர்யத்தாலல்லது செல்லாதபடியை யுடைய ஆழ்வார், அப்படியன்றிக்கே "தமக்கு" என்றொரு புருஷார்த்தத்தைக் கோலுமது, 'அஹம், மம' என்கிற அபிமாநத்துக்கு விஷயமாகையால் ஐஶ்வர்யாதிகள் ஹேயமானாற்போலே ஹேயம்" என்று பார்த்து அத்தை உபேக்ஷித்து, "பரமபதஸ்தனாய் ஸுகியாகவுமாம், ஸம்ஸாரத்திலே துஃகியாகவுமாம், இவற்றில் நிர்ப்பந்தமில்லை, உனக்கேயாயிருக்கு மிருப்பே எனக்கு வேண்டுவது" என்று ஸ்வப்ராப்யத்தை நிஷ்கர்ஷித்து, அத்தை ஈண்டெனத் தந்தருள வேணுமென்று எம்பெருமானை அபேக்ஷிக்கிறார்.

ப.—ஒன்பதாந்திருவாய்மொழியில், ஈஶ்வரனுடைய மோக்ஷப்ரதத்வத்தை அநுபவித்தவர், அந்த மோக்ஷப்ரகாரங்களெல்லாவற்றுக்கும் தாத்பர்ய பூமியாவது - பகவத்பாரதந்த்ர்யமேயென்று நிஷ்கர்ஷித்து, அவன் திருவடிகளோட்டை ஸம்பந்தமே உத்தேஶ்யமென்னுமிடத்தையும், தத்விஷயஜ்ஞாநத்தில் அபேக்ஷையையும், ஜ்ஞாநாநுரூபமான ஸ்துத்யநுபவத்தில் ஶ்ரத்தையையும், அநுபாவ்யம் ததேகபாரதந்த்ர்ய மென்னுமிடத்தையும், அதனுடைய அவிஸ்மரணம் ஆநந்தஜநகமென்னு மிடத்தையும், அந்த ஸ்ம்ருதிகாரிதமான பாஹ்யாநுபவாபேக்ஷையையும், நிரந்தரமான ஆந்தராநுபவம் அத்ருப்திகரமென்னு மிடத்தையும், அல்பகாலாநுபவத்திலும் அதிசயிதாபிநிவேசத்தையும், அநுபாவ்யவிஷயத்தோடு உண்டான அப்ருதக்ஸித்திஸம்பந்தத்தையும், அந்த ஸம்பந்தத்தைக் குலையாமையிலுண்டான அபேக்ஷையையும் அருளிச்செய்து, மோக்ஷப்ரதனான ஈஶ்வரன் ஸந்நிதியிலே மோக்ஷதாத்பர்யத்தை நிஷ்கர்ஷித்து அபேக்ஷித்தருளுகிறார்.

இ.—ஒன்பதாந் திருவாய்மொழியில், கீழே ஈஶ்வரன் இவர்க்கு மோக்ஷத்தைக் கொடுப்பானாகச் சமைந்து நிற்கிறபடியைக் கண்டு, தமக்கு பகவத்பாரதந்த்ர்யத்தாலல்லது செல்லாதபடியைப் பார்த்து, "எனக்கு என்றொரு புருஷார்த்தத்தைக் கோலுமது மமகாரவிஷயமாகையாலே ஐஶ்வர்யாதிகளோபாதி ஹேயம்" என்று அத்தை உபேக்ஷித்து, 'பரமபதஸ்தனாய் ஸுகியாகவுமாம், ஸம்ஸாரஸ்தனாய் துஃகியாகவுமாம், இவற்றில் நிர்ப்பந்தமில்லை; உனக்கேயாயிருக்குமிருப்பே எனக்கு வேண்டுவது' என்று ஸ்வப்ராப்யத்தை நிஷ்கர்ஷிக்கிறார். இதுதான் ஸ்வரூபமன்றோ, அபேக்ஷிக்கவேணுமோ வென்னில்,—புருஷார்த்தாந்தரங்களுக்கும் ஸாதாரணமான ப்ரக்ருதிஸம்பந்தத்தோடே இருக்கையாலே அபேக்ஷிக்கை ப்ராப்தம். அவனுக்கு உபாயபாவம் ஸ்வரூபமாயிருக்கச்செய்தே உபாயாந்தர நிவ்ருத்தி பூர்வகமாக ஸ்வீகாரம் வேண்டுகிறாப்போலே, உபேயாந்தர நிவ்ருத்தி பூர்வகமாக ஸ்வரூபாநுகூலமான புருஷார்த்தத்தை அபேக்ஷிக்கை ப்ராப்தம். இவருடைய இந்தஸ்வரூபஜ்ஞாநம் ராமாயணபுருஷர்கள் பக்கலிலே காணலாம். "[illegible]" என்று ஸ்ரீபரதாழ்வான். "[illegible]" இத்யாதி, "[illegible]" என்று இளையபெருமாள்.

ஈடு.—கீழில்திருவாய்மொழியிலே "நலமந்தமில்லதோர் நாடு புகுவீர்" என்று இவர் தாமும் அருளிச்செய்து, ஸர்வேஶ்வரனும் இவர்க்கும் இவர்பரிகரத்துக்கும் மோக்ஷங்கொடுப்பானாகப் பாரிக்க, அத்தைக்கண்டு; தேவரீர் எனக்கு மோக்ஷம் தந்தருளப் பார்த்ததாகில் இங்ஙனே தரப்பார்ப்பது; அதாகிறது "உனக்கு மோக்ஷங்கோள்" என்று எனக்காகத் தருகையன்றிக்கே, 'நமக்காகக்கோள்' என்று தேவர்க்கே யாம்படியாகத் தரவேணுமென்று தாம் நினைத்திருந்தபடியை அவன்திருமுன்பே ப்ரார்த்திக்கிறார். ஆனால் இதுதான் பின்னை இத்தனைநாள் நிஷ்கர்ஷியாதொழிவா னேன்? என்னில்;—அவன் மேன்மேலென குணாநுபவத்தைப் பண்ணுவிக்கையாலே அதுக்குக் காலம்போந்ததித்தனையல்லது, இது நிஷ்கர்ஷிக்க அவஸரம்பெற்றிலர். ஆனாலும் இப்போதும் குணாநுபவமேயன்றோ பண்ணுகிறதென்னில்;—அது அப்படியே; அவன் தம் பக்கலிலே மேன்மேலெனப்பண்ணுகிற விருப்பத்தைக்கண்டு, "இவனுக்கு இந்தவ்யாமோஹம் முடிய அநுவர்த்திப்ப தோன்றாயிருந்தது; நாம் இவனைமீட்டாகிலும் நம்முடைய ப்ராப்யத்தை நிஷ்கர்ஷிப்போம்" என்று பார்த்து, "நீ இங்ஙனே நில்" என்று அவனைநிறுத்திவைத்து ப்ராப்யநிஷ்கர்ஷம் பண்ணுகிறார்.

எம்மாவீடு ப்ரவேஶ. கீழே - அடியார்கள் குழாங்களை - உடன்கூடுவ தென்றுகொலோ" என்று இவர்தாமும்அபேக்ஷித்து, கீழில்திருவாய்மொழியிலே 'நலமந்தமில்லதோர்நாடு புகுவீ ரென்று பிறர்க்கும் அருளிச்செய்து அத்தாலே 'இவர்க்கு மோக்ஷத்திலே அபேக்ஷையாயிருந்தது" என்று பார்த்து என்று சிலகூட்டி ஸர்வேஶ்வரனும் என்று தொடங்கி உபந்யஸித்தருளுவர். "எம்மாவீட்டுத்திறமும்செப்பம்" என்று மோக்ஷ ப்ரதிஷேதாத் ஞ்ஸகஸ்யஹிஞ்திஷெய: இதிந்யாயேந ப்ரஸங்கம் ஸம்பாதயந் ஸங்க்ரஹஸங்கதி மாஹ - கீழில்திருவாய்மொழியிலே யித்யாரப்ய, திருமுன்பே ப்ரார்த்திக்கிறார்இத்யந்தேந. மோக்ஷம்கொடுப்பானாகப் பாரிக்கவென்றது - "செப்பம்" என்று நிஷேதிக்கையாலே - பாரித்தமையும் அர்த்தஸித்தமென்று விவக்ஷித்து இவர்க்கும் இவர் பரிகரத்துக்கும் என்று இங்கே அருளிச்செய்கையாலே - "எம்மாவீடு" என்றவிடத்திலே, "எம்" என்று, அதுக்கு வ்யாக்யாநத்தில் வக்ஷ்யமாணார்த்தம் தவிர, இதுவும் ஓரர்த்தமென்று கண்டுகொள்வது. அதாகிறது இத்யாதிக்கு - "தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே" இத்யத்ர ஹ்ருதயம். தாம் நினைத்திருந்தது - "தொழுதெழு" என்கிறவிடத்திலே. திருமுன்பே ப்ரார்த்திக்கிறாரென்றது - "அம்மாவடியேன் வேண்டுவதீதே" என்றத்தைப்பற்ற கீழ் ஸங்க்ரஹேண ஸங்கதி அருளிச்செய்து, உக்தத்தை விஸ்தரிக்கிறார் - ஆனால் இதுதான் இத்யாதி ; யத்வா, ஸங்கத்யந்தரமாதல். அதாவது - ஸர்வேஶ்வரன் இவர் பக்கல் வ்யாமோஹத்தாலே இவர்க்கும் இவர் பரிகரத்துக்கும் மோக்ஷம்கொடுக்கப்பாரிக்க, "நீ தரப்பார்த்தால் இங்ஙனே தரவேணும்" என்று ப்ராப்யத்தை நிஷ்கர்ஷிக்கிறாரென்று முந்தினஸங்கதி; ஸர்வேஶ்வரன் தன்வ்யாமோஹத்தாலே மேன்மேலென குணாநுபவம்பண்ணுவியாநிற்க, "நீ இங்ஙனே நில்" என்று அவனைநிறுத்தித் தாமே ப்ராப்யநிஷ்கர்ஷம் பண்ணுகிறாரென்று த்விதீயஸங்கதி. இந்த த்விதீயஸங்கதியை விவக்ஷித்து, அதிலே ஆக்ஷேபஸமாதாநங்களைப் பண்ணுகிறார் - ஆனால் இதுதான் இத்யாதி. அவன் மோக்ஷம்கொடுக்கவர, நிஷ்கர்ஷிக்கிறார் என்று முந்தினஸங்கதி; தாமே நிஷ்கர்ஷிக்கிறாரென்று இரண்டாம்ஸங்கதி. இந்தவாக்யம் ஸங்கத்யந்தரமென்று கொள்ளாதபோது, "அவன் மோக்ஷம் தரப்பார்க்கத் தாம் ப்ராப்யத்தை நிஷ்கர்ஷித்து ப்ரார்த்திக்கிறார்" என்றதின்மேலே, ஆனால் இத்யாதி ஶங்காவாக்யத்துக்கு உதயமில்லையிறே. ஏகஸங்கதியான பக்ஷத்திலே அருளிச்செய்யும்படி - அவனைநிறுத்தி. அதாவது - குணாநுபவத்தை ஸாத்மிப்பித்து ப்ராப்யநிஷ்கர்ஷம்பண்ண ஒருப்பட்டவளவிலே அவனும் பாரிக்கையாகிற அவகாசம்பெற்று, தாம் நினைத்திருந்த ப்ராப்யத்தை நிஷ்கர்ஷிக்கிறாரென்று கண்டுகொள்வது. ப்ரதமஸங்கதிக்கு நோக்கு - முதற்பாட்டிலே. த்விதீயஸங்கதிக்கு நோக்கு - "எனக்கே யாட்செய்" என்கிற பாட்டிலே. ஆனால் - முன்பும் இப்படிப்பட்ட விசாரமுண்டானால். எம்மாவீடு பர்யந்தம் நிஷ்கர்ஷியாமைக்கு அடியேதென்று சங்கைக்கு அர்த்தம். இப்போதும் - இத்திருவாய்மொழியிலும். இதாநீமபீதிவா. குணாநுபவமேயன்றே பண்ணுகிறதென்னிலிதி - "ஈஶ்வரன் இப்போது ஸ்வகுணங்களை அநுபவிப்பிக்கவில்லை, அத்தாலே இவரும் அவன் குணங்களை அநுபவிக்கவில்லை" என்னில், கீழில் திருவாய்மொழிகளோடே விரோதிக்குமென்று கருத்து. நீ இங்ஙனே நில்லென்று அவனை நிறுத்திவைத்து - தன்குணங்களை யநுபவிப்பிக்கிற ஈஶ்வரனை நிஷேதித்து, தாமும் பகவத்குணாநுபவத்தினின்றும் நிவ்ருத்தரா யென்றபடி.

எம்பார் இத்திருவாய்மொழி யருளிச்செய்யப்புக்கால், இருந்தவர்களை "யார்" என்றுகேட்டுக் கதவுகளையும்அடைப்பித்து, குஹ்யமாகவாம் அருளிச்செய்வது. ப்ராப்யமாகில் இப்படியன்றோ இருப்பது, இவர் நிஷ்கர்ஷிக்க வேண்டுகிறதேன்? என்னில்;— ஸர்வேஶ்வரன் இவ்வாத்மாவுக்கு ஶேஷியாய் இவனும் ஶேஷபூதனாய், அவனுடைய உபாயபாவமும் நித்யமாயிருக்கச்செய்தேயன்றோ இவனுக்கு இன்று ஸ்வீகாரம் வேண்டுகிறது; அப்படியே, அவன் ஸ்வதந்த்ரனாகையாலே நினைத்தபோது நினைத்தபடி கொள்வா னொருவனாகையாலே, ப்ராப்திஸமயத்தில் அநுபவம் இருக்கும்படியையும் நிஷ்கர்ஷித்துப் பெறவேணுமிறே. உத்தரார்த்தத்திலும் இவ்வர்த்தத்தைச் சொல்லாநின்றதிறே. த்வயந்தன்னில் நிஷ்கர்ஷிக்க வேண்டுகிறதேன்? என்னில்;—பூர்வார்த்தத்தாற் சொன்ன ஸாதநம் ஸர்வபலப்ரதமாகையாலே, ப்ரயோஜநாந்தரபரராய் ஶரணம்புகுவார்க்கும் அவற்றைக்கொடுத்து விடுவானொருவனிறே ஸர்வேஶ்வரன். இதுதன்னி லோடுகிறதேன்? என்னில்;-"முக்தனாய் நிரதிஶய ஸுகாநுபவத்தைப் பண்ணவுமாம், ஆத்மப்ராப்தியைப் பெறவுமாம்; ஆத்மவிநாஶமேயாகவுமாம், நரகாநுபவம்பண்ணவுமாம், இவற்றில் எனக்கு ஒரு நிர்ப்பந்தமில்லை; உனக்காய் வருமன்று இவையித்தனையும் வரவுமாம், எனக்காய்வருமன்று இவையித்தனையும் வேண்டா; ஆனபின்பு, தேவருக்கு உறுப்பாமிதுவே எனக்கு வடிவாம்படி பண்ணியருளவேணும்" என்று ஸ்வப்ராப்யத்தை நிஷ்கர்ஷிக்கிறார். இப்படிப்பட்ட பரிமாற்றந்தான் லோகத்தில் பரிமாறுவதொன்றல்ல; இவ்வாழ்வார்பக்கலிலே காணுதல்; ராமாயண புருஷர்களில் ஸ்ரீபரதாழ்வான், இளையபெருமாள், இவர்கள் பக்கலிலே காணுதல் செய்யுமித்தனை. கைகேயி "ராஜந்" என்ற சொல் பொறுக்க

நில் என்று அவனை நிறுத்தியென்றது - "தனக்கேயாக" என்று முகம்மாறவைத்தத்தைப்பற்ற. இது குஹ்யதமமென்கைக்கு ஸம்வாதம் - எம்பார் இத்யாதி. ப்ராப்யமாகில் இத்யாதிக்குத் தாத்பர்யம் - ஈஶ்வரஸ்யாத்யந்த பாரதந்த்ர்யாநுகுணமாகச் சந்தநகுஸுமாதிகளைப்போலே அவனே தன்பேறாக விநியோகம் கொள்வதாயன்றோ இருப்பது, இப்போது இவர் நிஷ்கர்ஷிக்கவேண்டின அம்ஶமேது? என்று. ஶேஷியாய் - நிருபாதிகசேஷியாய். சேஷபூதனாய் - ஸஹஜதாஸபூதனாய். உபாயபாவமும் நித்யமாயென்றது - "உபாயோபேயபாவஸ்தத்வஜ்ஞாநஸம்ஸ்தவ தத்த்வதோ ... ணம்" என்றத்தைப்பற்ற. ஸ்வீகாரம் வேண்டுகிறது - ஸர்வமுக்திப்ரஸங்கபரிஹாரார்த்தமாக ஸ்வீகாரம் வேண்டுகிற தென்றபடி. நினைத்தபடி கொள்வா னென்றது-ஐஶ்வர்யாதிகளையாதல், ஸ்வார்த்த கைங்கர்யத்தையாதல் கொடுத்து விநியோகம் கொள்வானொருவனாகையாலே யென்றபடி. "ஏற்கவே நிஷ்கர்ஷித்துப் பெறவேணும்" என்றால், மேலே முக்தனாய் இத்யாதியிற் சொல்லுகிறத்தோடு விரோதியாதோ? என்று கேட்க, "அவைகளெல்லாம் - அதிஶயோக்தி, ப்ராப்யத்திலே நோக்கு" என்று அருளிச்செய்வர். ப்ராப்யமீத்ருஶமென்னுமதில் ப்ரமாணமேது? என்ன - உத்தரார்த்தத்தில் இத்யாதி. "நமஸ்ஸாலே உனக்கே நாமாட்செய்வோ மென்னும்படி யாகவேணும்" என்று ப்ராப்யநிஷ்கர்ஷம் பண்ணுகின்றதிறே யென்கை. த்வயந்தன்னில் - முமுக்ஷுவினுடைய ஸாதநவிஶேஷத்தைச் சொல்லுகிற த்வயத்தி லென்றபடி. "கீழில் திருவாய்மொழியில்" இத்யாதி வாக்யத்தால் சொன்ன அர்த்தத்தை விவரிக்கிறார் - இதுதன்னில் இத்யாதி. இத்திருவாய்மொழியில் நிஷ்கர்ஷிக்கிற ப்ராப்யமேது என்னி லென்றபடி. "சிறப்பில்வீடு" என்கிற பாட்டைப்பற்ற - முக்தனாய் இத்யாதி. "சிறப்பில்வீடு" என்று விசேஷிக்கையாலே - கேவலம் வீடுமுண்டென்று விவக்ஷித்து, ஆத்மப்ராப்தியைப்பெறவுமாம் என்றது. "எய்தற்க" என்றதுக்குப் பலிதார்த்தத்தைக் கடாக்ஷித்து, ஆத்மவிநாசமேயாகவுமாம் என்றது. ஆத்மவிநாஶம் - ஸம்ஸாரம். ஏவம் அநுஷ்டிதவத்தஸ்ஸந்நிகிமித்யத்ராஹ - இப்படிப்பட்ட இத்யாதி. பகவதத்யந்தபாரதந்த்ர்யாநுகுணமான கைங்கர்யகாண மென்றபடி. லோகத்தில் பரிமாறுவதொன்றல்ல வென்றவிடத்திலே - "நிரஸ்தாதிஶயாஹ்லாதஸுகபாவைகலக்ஷணா । பேஷஜம் பகவத்ப்ராப்திரேகாந்தாத்யந்திகீ மதா" என்று அஹமர்த்தாத்மத்வஸமர்த்தந பாஷ்யத்தில் வசநம் அநுஸந்தேயம். இப்பாரதந்த்ர்யத்துக்கு அநுஷ்டாநம் காட்டுகிறார் - கைகேயி இத்யாதி. அயோத்யாகாண்டே பரதம்ப்ரதி கைகேயீ, "உத்திஷ்டோத்திஷ்ட கிம் ஶேஷே ராஜபுத்ர மஹாயஶ:"

மாட்டாமே திரளிலேவந்து கூப்பிட்டானிறே. "விலலாபஸபாமத்யே" (விலலாபஸபாமத்யே)- ஒருதிரளாகவிருந்து என்னுடைய ஶேஷத்வத்தை அபஹரிப்பதே! "தஸ்யுபிர்முஷிதேநேவ யுக்தமாக்ரந்திதும்ப்ருஶம்" (தஸ்யுபிர்முஷிதேநேவ யுக்தமாக்ரந்திதும்ப்ருஶம்) என்னும் படி இழந்தவஸ்துவுக்குத் தக்கபடியா யிருக்குமிறே கூப்பீடும். "ஜகர்ஹேச" (ஜகர்ஹேச)- ஸந்த்யாவந்தநத்துக்குப் பிற்பாடரை ஶிஷ்டகர்ஹை பண்ணுவாரைப்போலே கர்ஹித்தான். 'புரோஹிதம்' (புரோஹிதம்) - அழகியதாக இக்குடிக்கு முன்னேடி ஹிதம்பார்த்தாய். "ஸபாமத்யே புரோஹிதம் ஜகர்ஹே" (ஸபாமத்யேபுரோஹிதம்ஜகர்ஹே)-'நியமாதிக்ரமம் ரஹஸி போதயேத்' (நியமாதிக்ரமம்ரஹஸிபோதயேத்) என்கிற நிலையும் பார்த்திலன், "ராஜ்யஞ்சாஹஞ்சராமஸ்ய" (ராஜ்யஞ்சாஹஞ்சராமஸ்ய) - ஒருவனுக்கு இரண்டுவஸ்து

ப்ர:—(எம்மாவீடு ப்ரவேஶே).—[illegible]

"[illegible]"

[illegible]

இத்யாதி பூர்வமேவ லிகிதம். மூன்றும் ஶ்ரியப்பதியிலே. இதுக்கு ப்ரமாணம் - விலலாப இத்யாதி. இந்த ஶ்லோகம் – சக்ரவர்த்தியின் ஶாஸ்த்ரார்த்தஸமநந்தரத்திலே "பரதாழ்வான் ராஜாவாகவேணும்" என்று மணமுரசு அறைய, அது அஸஹ்யமாய்ச் சொன்னதாயிருக்க, கைகேயி சொற்பொறுக்கமாட்டாமே கூப்பிட்டானென்றது - அவள் சொன்ன வார்த்தையும் நெஞ்சிலேபட்டுக் கிடக்கையாலே யென்று கண்டுகொள்வது "ஸபாமத்யே-விலலாப, ஸபாமத்யே-புரோஹிதம்ஜகர்ஹே" என்று இரண்டிடத்திலும் கூட்டுவது. ஸபாமத்யே விலபிதா்ஹ்ருதயமாஹ - ஒருதிரளாக இத்யாதி. விஶேஷேணலலாப இத்யுபஸர்க்கார்த்தம் ஶ்ருதிநிதாயதத்ரோபபத்திமப்யாஹ-தஸ்யுபி: இத்யாதி. "ப்ருஶம்" என்றது-இங்குவேண்டுவது. "[illegible]" இதி பூர்வார்த்தம் இழந்தவஸ்து என்றது-பெருமாளையாதல், பாரதந்த்ர்யத்தையாதல். ஶிஷ்டகர்ஹை - "ஶிஷ்டர்க்கு இதுதகாதுகாண்" என்ற கர்ஹை. "ஶிஷ்டர் இப்படியைக் கண்டாலும் கேட்டாலும் ஸஹியாகள்காண்" என்ற கர்ஹை யென்றுமாம். புர:ஹிதம்பஶ்யதீதி - புரோஹித:இதி வ்யுத்பத்திம்ஹ்ருதிநிதாயாஹ-அழகியதாக இத்யாதி என்கிற நிலையும் பார்த்திலன்-புர:ஹிதம் பஶ்யதீத்யேவம் ரூபமான குருத்வஹேது ,கழிகைபாலேயென்று கருத்து. இவ்விடத்திலே - "[illegible]" என்ற ப்ரஹ்லாதவசநம் கண்டுகொள்வது. ஆபஸ்தம்பதர்மே, "[illegible] நியமாதிக்ரமம் ரஹஸி போதயேத்". "என்னை யித்தனை கர்ஹிக்கைக்கு ஹேதுவென்?" என்று அவனுக்குக் கருத்தாகச் சொல்லுகிறர் - ராஜ்யஞ்ச இத்யாதி. அயோத்யாகாண்டே!புரோஹிதம் ப்ரதி பரத:.

ஶேஷமானுல் ஒன்றையொன்று நிர்வஹிக்குமோ? ஆனுல், ராஜ்யந்தான் என்னையாண்டாலோ? "धर्मं वक्तुमिहार्हसि" (தர்மம்வக்துமிஹார்ஹஸி)-"பெருமாள் காடேறப்போனுர், சக்ர வர்த்தி துஞ்சினுன்; நாடு அராஜகமாய்க் கிடக்கவொண்ணுது; நின்ருரில் ப்ரதாநர்தலையிலே முடியை வைக்கவேணும்" என்றுபார்த்தாயித்தனைபோக்கி இதுக்கு விஷயபூதனுன என்னைப் பார்த்து வார்த்தைசொல்லிற்றில்லை. "कथं दशरथाज्जातो भवेद्राज्यापहारकः" (கதம் தஶரதாஜ்ஜாதோபவேத்ராஜ்யாபஹாரக:)-அவர் போகட்டுப்போன ராஜ்யத்தை அபஹரித்து, அவரைப்பிரிந்த அநந்தரத்திலே முடிந்தவன் வயிற்றிலே பிறந்தேனும்படி எங்ஙனே நான்? இளையபெருமாள், "நில்" என்ன, "कुरुष्व" (குருஷ்வ) - என்ருரிறே - அந்வயத்தாலே ஶரிக்கக்கடவ வஸ்துவை வ்யதிரேகித்து நிற்கச்சொல்லுகையாவது அழிக்கையிறே. குரு என்னுதே, "कुरुष्व" (குருஷ்வ) என்ருரிறே - ஆருடைய ப்ரயோஜநத்துக்கு ஆர்தா னிருக்கிருர்? உம்முடைய இழவுக்கு நீர் பதருதிருக்கிறதேன்? "अनुचरम्" (அநுசரம்) - பண்ணும் ப்ரகாரத்தை விதிக்கிருர். நீர்தாம் "நில்" என்று அருளிச்செய்தது, நான், நிற்கச்சொல்லுகைக்கு யோக்யனும்படி யிருக்கையிறே; உம்முடைய சாயையை "நில்" என்றுசொல்லிற்றிலீரே, சாயையோபாதி உம்மைப் பின் செல்வேனுகவேணும். "நீரும்நிழலும் வாய்த்திருப்பதோரு ப்ரதேசத்தைப் பார்த்துப் பர்ணசாலையைச்

"सबाष्पकलया वाचा कलहंसस्वरो युवा । [illegible] रोहितम्" இத்யாதி. "राज्यं चाहं च रामस्य धर्मं वक्तुमिहार्हसि । कथं दशरथाज्जातो भवेद्राज्यापहारकः". "रामस्य" என்ற ஷஷ்டியை - ஸ்வஸ்வாமிபாவஸம்பந்தத்திலேயாக்கி அர்த்தம் - ஒருவனுக்கு இத்யாதி. ஆனுல் - நிர்வஹிக்குமாகில். வைபரீத்யம் சிங்கஸ்யாதித்யாஹ - ராஜ்யந்தான் என்னை இத்யாதி. "இஹ" என்றதுக்கு பாவம - பெருமாள் இத்யாதி. இஹ - அஸ்மத்விஷயே. கீழ் - ஸ்வரூபத்தோடு சேராதென்ருர், இனி - குடிப்பிறப்புக்கும் சேராதென்கிருர் - கதம் தஶரதாத் இத்யாதி. "राज्यापहारकश्चेत् - कथं दशरथाज्जातो भवेत्" இத்யந்வயமுகே - அவர்போகட்டுப்போன இத்யாதி. இப்பரிமாற்றம் இளையபெருமாள்பக்கலிலும் காணலாமென்கிருர் - இளையபெருமாள் இத்யாதி. நில்லென்ன - இளையபெருமாள் - குருஷ்வ என்ருரிறே யென்று அந்வயிப்பது. பெருமாள் "நீர்நில்லும்" என்று சொன்னவளவிலே, இளையபெருமாள் "कुरुष्व मामनुचरम्" என்று சொன்னுரிறே யென்றபடி. அயோத்யாகாண்டே ராமம்ப்ரதி லக்ஷ்மண:, "कुरुष्व मामनुचरं वैधर्म्यं नेह विद्यते । कृतार्थोऽहं भविष्यामि तव चार्थः प्रकल्पते". 'நில்'என்கை-அழிக்கப்பார்க்கையென்று விவக்ஷித்து, "நில்" என்ருல் - அழிக்கையாமோ வென்ன, அந்வயத்தாலே இத்யாதி. "जनान्तस्थाविव" என்றதிலே நோக்கு. அன்றிக்கே, "वैधर्म्यं नेह विद्यते" என்றத்தைக் கடாக்ஷித்துபாவமாதல், "वैधर्म्यं" இதி வாக்யம் - "तिष्ठ" இத்யுக்தே "कुरुष्व" இதி வக்துர்ஹேதுபரம். அஸ்மிந்ஸ்லோகே ஸ்வார்த்ததாராஹித்யம் குத்ரஸூச்யதே இத்யத்ராஹ-குருவென்னுதே இத்யாதி. "स्वरितञितः कर्त्रभिप्राये क्रियाफले"- ஸ்வரிதேதோஞிதஶ்சயேதாதவ:தேப்ய: பரஸ்யலகாரஸ்யஸ்தாநேஆத்மநேபதம்பவதிகர்த்தாரஞ்சேத்க்ரியாபலமபிப்ரைதீதிஶப்தஸூத்ரப்ரக்ரியயா, இங்கு "डुकृञ् करणे" என்று ஞகாரேத்தானதாதுவாய், அதின்மேலே ஆத்மநேபதம் வருகையாலே - இவரால் வரும்பேறு பெருமாளதென்று சொல்லுகிற தென்றபடி. என்ருலேதென்ன - ஆருடைய இத்யாதி. தாத்பர்யம்-உம்முடைய இத்யாதி. பதறுது - த்வரியாது. "अनुचरम्" என்றதுக்கு பாவம் - நீர்தாம் இத்யாதி. "மாம்"என்றதுக்கு பாவமாதல். நிற்கச்சொல்லுகைக்கு யோக்யராகாமையை த்ருஷ்டாந்தமுகத்தாலே காட்டுகிருர் - உம்முடைய சாயையை இத்யாதி. இந்தப் பாரதந்த்ர்யத்தை ஸ்த்தலாந்தரத்திலும் காட்டுகிருர்-நீரும் நிழலுமித்யாதி. என்

சமையும்'' என்ன, ''நந்தலையிலே ஸ்வாதந்த்ர்யத்தை வைத்தபோதே பெருமாள் நம்மைக் கைவிட்டார்'' என்று வேறுபட்டார். ''ஏவமுக்தஸ்துராமேண'' (ஏவமுக்தஸ்துராமேண)- ''இதுக்கு முன்பெல்லாம் நம்குறையாலே யிழந்தோம்'' என்றிருந்தோம்; இவர்தமே நம்ஸ்வரூப மழியக் காரியம்பார்த்தார், இனி, 'நம்ஸ்வரூபம்' என்றேன்றுண்டோ?'' என்று வேறுபட்டார். லக்ஷ்மணஃ'' (லக்ஷ்மணஃ) - பாரதந்த்ர்யத்தை நிரூபகமாகவுடையவர். ''ஸம்யதாஞ்ஜலிஃ'' (ஸம்யதாஞ்ஜலிஃ)-நாம் நம் ஸ்வரூபத்தை யழித்துக்கொண்டவன்று நோக்குகையன்றிக்கே, ஶேஷி தானே யழித்தவன்றும் ஸ்வரூபத்தைத் தரவற்றாயிற்று அஞ்ஜலி. ஸர்வாபிமத ஸாதநமாயிற்று. ''ஸீதாஸமக்ஷம்'' (ஸீதாஸமக்ஷம்)-பண்ணின அஞ்ஜலிக்கு அங்யபரதைஶாவிக்க வொண்ணுதவள் ஸந்நிதியிலே. ''காகுத்ஸ்தம்'' (காகுத்ஸ்தம்)-பிராட்டிஸந்நிதியும் மிகையாம்படியான குடியிற் பிறப்பை யுடையவரை. ''இதம்வசநமப்ரவீத்'' (இதம்வசநமப்ரவீத்) - ''இவ்வார்த்தையைச் சொல்லுவானே'' ''என்றுகொண்டாடுகிறான் ருஷி. ''பரவாநஸ்மி''(பரவாநஸ்மி)-உம்முடையஅஸ்மிதைபோலல்லகாணும் என்னுடைய அஸ்மிதை. இப்படிக்கோத்த பாரதந்த்ர்யத்தை யாயிற்று இவர் ஆசைப் படுகிறது. ''இதுதான் ஒருவர் அபேக்ஷிக்கு மதுவுமல்ல, அபேக்ஷிப்பாரில்லாமையாலே

ஶ்ரீராமாயணே அயோத்யாகாண்டே, ''ஏவமுக்தஸ்து ராமேண லக்ஷ்மணஸ்ஸம்யதாஞ்ஜலிஃ । ஸீதாஸமக்ஷம் காகுத்ஸ்தம் இதம்வசநமப்ரவீத் ॥ ௬ ॥ பரவாநஸ்மி காகுத்ஸ்த த்வயிவர்ஷஶதம்ஸ்திதே । ஸ்வயம் து ருசிரே தேஶே க்ரியதாமிதி மாம் வத ॥ ௭ ॥ ஸுவ்ருத்தஸ்ஸுஸமாஸீநம் லக்ஷ்மணஸ்ய மஹாத்மநஃ । வீர்யவாந் ராகவோ வாக்யம் ஶுபம் வசநமப்ரவீத் ॥''

னுடைய வஸ்மிதை யென்னுமளவாக நீரும் நிழலு மித்யாதி வாக்யம் - ''ஏவமுக்தஸ்துராமேண'' இத்யாதி ஶ்லோகத்துக்கு அவதாரிகை. இதுக்கு - ''ஜநஸ்தாநே ஶுபம் ருஷ்யமுகே ஸீதாநு ஶாலா ஸ்திதா । ரக்ஷோக்நாநி ஸ்வஜநப்ரியாணி ஜநஸ்தாநே ஸ்திதாஃ'' என்றதிலே நோக்கு. ஏவமுக்தஸ்துராமேணேத்யாதிஃ - பஞ்சவடீப்ரவேஶாநந்தரஶ்லோகஃ; ''ஜநஸ்தாநே'' இத்யாதி ஶ்லோகத்துக்கு மேலில் ஶ்லோகம் இது. ''ஏவமுக்தஸ்துராமேண லக்ஷ்மணஸ்ஸம்யதாஞ்ஜலிஃ । ஸீதாஸமக்ஷம் காகுத்ஸ்தம் இதம்வசநமப்ரவீத் । பரவாநஸ்மி காகுத்ஸ்த த்வயிவர்ஷஶதம்ஸ்திதே । ஸ்வயந்து ருசிரே தேஶே க்ரியதாமிதி மாம் வத''. துஸப்தார்த்தம் - இதுக்குமுன்பு இத்யாதி. கைங்கர்யாலாபதஶாஃகாஶ்சஸந்தி சேத்தாஶ்ச, ''குரு ஸ்வாத்மா ஶுபம்'' இதிஸ்வயம்விதாது மநுகுணஸ்த்திதிஶ்சாத்ரவிவக்ஷிதா. ''ஸிந்து லக்ஷ்மலக்ஷணம்'' இதி, மதுப்ப்ரத்யயாந்தத்வஞ்சஹ்ருதிநிதாயாஹ - பாரதந்த்ர்யத்தை இத்யாதி. வேறுபட்ட பின்பு அஞ்சலி பண்ணுவானென்னென்ன, நாம் நம்ஸ்வரூபத்தை இத்யாதி. பலிதம் - ஸர்வாபிமத இத்யாதி. நாம் அழித்ததோடு, அவன் அழித்ததோடு வாசியற எல்லாவபிமதங்களு மென்றபடி. புருஷகாரத்வம் ஹ்ருதி நிதாயாஹ - பண்ணின அஞ்ஜலிக்கு இத்யாதி. ''நஹ்யஞ்ஜலிஃ ப்ரஸாதஸ்ய காரணம் தேவதாஃ ககுத்ஸ்தவம்ஶே விஶேஷாஃ ப்ரயாதி'' இத்யாதிகம் ஹ்ருதிநிதாயாஹ - பிராட்டிஸந்நிதியும் இத்யாதி. ''இதம்'' என்றதிலே நோக்காக பாவம்-இவ்வார்த்தையை இத்யாதி. உம்முடையவஸ்மிதைபோலல்லகாணுமிதி-உம்முடைய வஸ்மிதை ''ஸதஸ்ஸத் ஸ்மி'' என்றிறே யிருப்ப தென்றபடி. அலம்ப்ரஸக்தாநுப்ரஸக்த்யேதி ப்ரக்ருதம் அநுஸரதி - இப்படிக்கோத்த இத்யாதி. ''ஒல்லை'' ''ஒல்லை'' ''ஈதே'' ''ஈதே'' இத்யாத்யஸக்ருதபிதாநம், ''விடலில்சக்கரத்தண்ணலைமேவல்விடலில் வண்குருகூர்ச்சடகோபன்சொல்'' இத்யாதிகஞ்ச பராம்ருஶ்ய. ப்ர